கடவுள் துணை.

# மநுதருமசாஸ்த்திரம்.

இஃது
வடமொழியிலிருப்பதால்-ஸம்ஸ்கிரதபாஷையில்
வல்லவர்களாகிய சிலர்க்கேயன்றி-மற்றையோர்க்கு
உபயோகப்படாமையால்
யாவருக்குமுபயோகமாகும்பொருட்டு
திருவைந்திரபுரம்-கோமாண்டூர்-இளையவில்லி

## இராமாநுஜாசாரியரால்

புதுவை.

## நா-முத்துரங்கசெட்டியார்

கேட்டுக்கொண்டபடி
அவர்தமிழில்மொழிபெயர்த்து வசநரூபமாகச்செய்த தருமநூலை
ஷை யார்சகோதரராகிய

## முத்துக்கோவிந்தசெட்டியார்

## பு-க-சுப்பராயமுதலியாரால்

பிழையறத்திருத்திச் சுத்தபாடமாக

**பு-ம-சபாபதிமுதலியாரது**

கல்விவிளக்க அச்சுக்கூடத்தில் பதிப்பித்தனர்.

N. GOVINDA CHETTY
MADRAS

சாலிவாகநசகம்-௧௭௮௮-ல்
குரோதந வரு கார்த்திகைமீ-௩0௨
௧௮௬௬ வரு-டிசம்பர்-௧௩௨.

Registered
Copy Right

# அட்டவணை.



| பொருள்விளக்கம். | பக்கம். | சுலோகம். |
|---|---|---|
| இந்தச்சாஸ்திரத்தைவெளியிட்டதற்குக்காரணம் | ௧ | ௧ |
| மநுபிரஜாபதியின்சிறப்பு | ” | ௨ |
| வேதத்தின்சிறப்பு | ” | ௩ |
| பிரளயகாலஸ்திதி | ௨ | ௫ |
| பிரபஞ்சசிருஷ்டி | ” | ௬ |
| நாராயணசப்தத்தின்பொருள் | ௩ | ௧௦ |
| பிரமனுற்பத்தி | ” | ௧௧ |
| மகத்தத்துவமுதலானசிருஷ்டி | ௪ | ௧௪ |
| தேவர்முதலானோரின் உற்பத்தி | ௫ | ௨௨ |
| பிராணிகளின்தொழில் | ௬ | ௨௯ |
| விராட்புருஷனுற்பத்தி | ௭ | ௩௨ |
| மநுப்பிரஜாபதியின் உற்பத்தி | ” | ௩௩ |
| மரீசிமுதலானோரின் உற்பத்தி | ” | ௩௪ |
| சராசரங்களின் உற்பத்திக்கிரமம் | ௮ | ௪௩ |
| திநப்பிரளயம் | ௯ | ௫௧ |
| மகாப்பிரளயம் | ” | ௫௪ |
| ஜீவோத்கிரமணம் | ௧௦ | ௫௫ |
| ஜீவனுடையதேகாந்திரப்பிராப்தி | ” | ௫௬ |
| இந்த ஸ்மிருதியினுற்பத்தியும் அதுவந்தவழியும் | ” | ௫௮ |
| இந்தச்சாஸ்திரத்தைபிருகு சொன்னதற்குகாரணம் | ” | ௫௯ |
| காலக்கணக்கு | ௧௧ | ௬௪ |
| யுகக்கணக்கு | ௧௨ | ௬௯ |
| பிரமனிராப்பகல் | ௧௨ | ௭௨ |
| மநுவந்திரத்தின்கணக்கு | ௧௩ | ௭௯ |
| யுகதருமம் | ” | ௮௧ |
| வருணதருமம் | ௧௪ | ௮௭ |

| பொருள்விளக்கம் | பக்கம் | சுலோகம். |
|---|---|---|
| பிராமணன்சிறப்பு | கரு | கூஉ |
| இந்தச்சாஸ்திரத்தின்சிறப்பு | கஎ | க0௩ |
| இந்தச்சாஸ்திரத்திற்சொல்லும்விஷயங்கள் | கஅ | கசக |
| **இரண்டாவது.** | | |
| தருமலக்ஷணம் | ககூ | க |
| தருமத்தின்மூலங்கள் | உ0 | சா |
| இந்தச்சாஸ்திரத்தை ஓதத்தக்க அதிகாரி | உஉ | கசா |
| புண்ணியக்ஷேத்திரங்கள் | ,, | கஎ |
| ஜாதகர்மமுதலியவை | உச | உகூ |
| உபநயநகாலம் | உரு | ௩சா |
| உபநயநமில்லாவிடில் துவிஜாதிகள்விராத்தியாளாகிறுரென்பது - - - - - - - - | ,, | ௩கூ |
| துவிஜாதிபிரமசாரிகளின்தருமம் | ,, | சக |
| அவர்களின்தண்டமுதலானவை | உசா | சரு |
| பிக்ஷாவிதி | உஎ | சகூ |
| போஜநம்புசிக்குந்திக்கு | ,, | ருஉ |
| போஜநநியமம் | ,, | ருச |
| தீர்த்தஸ்தாநங்கள் | உஅ | ருகூ |
| ஆசமநவிதி | ,, | சா0 |
| உபவீதமுதலியவை | உகூ | சா௩ |
| மாதர்களின்ஜாதகர்மாதிகள் | ,, | சாசா |
| வேதமோதலின்கிரமம் | ௩0 | எ0 |
| ஜபமகிமை | ௩க | எகூ |
| இந்திரியவிவரணம் | ௩௩ | கூ0 |
| விஷயதோஷம் | ௩ச | கூச |
| காலைசந்தியிலும்-மாலைசந்தியிலும்-ஜெபஞ்செய்யவேண்டியமுறை - - - - - - - | ௩ரு | க0உ |
| நித்தியகருமங்களுக்கு அத்தியயநமில்லையென்பது | ,, | க0ரு |
| ஓதிவைக்கத்தக்கவர்கள் | ௩சா | க0கூ |

| பொருள்விளக்கம். | பக்கம். | சுலோகம். |
| --- | --- | --- |
| ஓதிவைக்கத்தகாதவர்கள் | ௩௬ | ௧௧0 |
| தகாதவனுக்குஓதிவைத்தால்வரும்தோஷங்கள் | ,, | ௧௧௧ |
| குருவுக்குத்தெரியாமல்ஓதுகிறவனுக்குவரும் தோஷங்கள் | ௩௭ | ௧௧௭ |
| குருபணிவிடை | ,, | ௧௧௯ |
| அபிவாதநவிதி | ௩௮ | ௧௨௨ |
| பிரதிஅபிவாதநவிதி | ,, | ௧௨௫ |
| யாகதீக்ஷிதன்சிறப்பு | ௩௯ | ௧௨௮ |
| அபிவாதநம்செய்யத்தக்கவர்களுந்தகாதவர்களும் | ௩௮ | ௧௨௬ |
| பூஜிப்பதற்குக்காரணம் | ௪0 | ௧௩௬ |
| வழிவிடத்தக்கவர்கள் | ,, | ௧௩௮ |
| ஆசாரியன்முதலானோரின்பிரிவு | ௪௧ | ௧௪0 |
| ஞாநத்தின்புகழ் | ௪௨ | ௧௫0 |
| ஆசாரியன்செய்கை | ௪௩ | ௧௫௯ |
| யாருக்குங்கேடுநினைக்கலாகாதென்பது | ௪௪ | ௧௬௧ |
| பிராமணன்மரியாதையைவிரும்பலாகாதென்பது | ,, | ௧௬௨ |
| வேதத்தைவிட்டுமற்றசாஸ்திரத்தைஓதக்கூடாதென்பது | ,, | ௧௬௮ |
| உபநயநத்தின்சிறப்பு | ௪௫ | ௧௭0 |
| பிரமசாரிவிரதம் | ,, | ௧௭௫ |
| குருபணிவிடைசெய்யவேண்டியவிதி | ௪௮ | ௧௮௧ |
| குருத்துரோகிக்குஉண்டாகுந்தோஷம் | ௪௯ | ௨0௧ |
| குருவோடுசேஷின்சரியாயிருக்குமிடங்கள் | ௫0 | ௨0௪ |
| பிராசாரியசிசுருஷை | ,, | ௨0௫ |
| குருவின்புத்திரனுக்கும் மனைவிக்கும்செய்யவேண்டியமரியாதை | ,, | ௨0௭ |
| பிரமசாரிக்ஷவரவிதி | ௫௨ | ௨௧௯ |
| உதயாஸ்தமநகாலத்தில்தூங்கக்கூடாதென்பது | ,, | ௨௨0 |
| குரு தாய்தந்தைகளின்சிறப்பு | ௫௩ | ௨௨௭ |

| பொருள்விளக்கம். | பக்கம். | சுலோகம். |
|---|---|---|
| கல்விமுதலியவற்றையாரிடத்திலும் ஓதலாமென்பது - - - - - - - - - - - | ௫௫ | ௨௩௮ |
| ஆபத்காலத்தில்ஓதவேண்டியது | ,, | ௨௪௧ |
| நைஷ்டிகப்பிரமசாரியின்விரதம் | ௫௬ | ௨௪௩ |
| குருதக்ஷிணை | ,, | ௨௪௫ |


மூன்றுவது.


| | | |
|---|---|---|
| கிரகஸ்ததருமம் | ௫௭ | முதல் |
| விவாகதருமம் | ,, | ௪ |
| விவாகபேதம் | ௬0 | ௨௧ |
| மைந்தர்களின்உயர்வுந்தாழ்வும் | ௬௨ | ௩௭ |
| விவாகமுறைமை | ௬௩ | ௪௩ |
| ருதுகாலக்கிரமம் | ௬௪ | ௪௫ |
| கந்நியாசுல்க்கம்வாங்கக்கூடாதென்பது | ௬௫ | ௫௧ |
| பெண்களையுபசரிக்கவேணுமென்பது | ,, | ௫௪ |
| உடன்பிறந்தாளை உபசரியாவிடில் குல நசிக்கும் என்பது - - - - - - - - - - | ,, | ௫௬ |
| கணவனும்மனைவியும் ஒத்திருந்தால்குலம்விளங்குமென்பது- - - - - - - - - | ௬௬ | ௬0 |
| நகாதசம்பந்தம்முதலானதால் குலந்தாழுமென்பது- - - - - - - - - - - | ௬௭ | ௬௩ |
| பஞ்சமஹாயக்கியவிதி | ,, | ௬௮ |
| பிராமணனிருக்குந்தேசம் விருத்தியடையுமென்பது - - - - - - - - - - - | ௬௯ | ௭௬ |
| கிரஹஸ்தாசிரமச்சிறப்பு | ,, | ௭௭ |
| வைசுவதேவஹோமவிதி | ௭0 | ௮௫ |
| பிக்ஷைபோடுவதாலுண்டானபுண்ணியம் | ௭௨ | ௯௫ |
| அதிதிபூஜையும் அதன்சிறப்பும் அதுசெய்யாதவர்க்குவருந்தோஷமும் - - - - - - - | ,, | ௯௯ |
| மதுபர்க்கபூஜைக்குத்தக்கவர்கள் | ௭௫ | ௧௧௯ |
| அமாவாசிசிரார்த்தமுதலானவை | ௭௬ | ௧௨௨ |

| பொருள்விளக்கம். | பக்கம். | சுலோகம். |
|---|---|---|
| சிராத்தபிராமணகுணதோஷம் | ௭௭ | ௧௨௯ |
| பாத்திரத்தின்சிறப்பு | ௭௮ | ௧௩௨ |
| சிராத்தத்தில் நீக்கத்தக்கவந்தணர்கள் | ௮0 | ௧௫௧ |
| அதில்வரிக்கத்தக்கவர்கள் | ௮௫ | ௧௮௪ |
| சிராத்தபிராமணவிரதம் | ௮௬ | ௧௮௮ |
| பிதுர்க்களின் உற்பத்தியும்பெயரும் | ௮௭ | ௧௯௩ |
| பார்வணசிராத்தநியமம் | ௮௮ | ௨0௨ |
| விசுதேவர்களைவரிக்கவேணுமென்பது | ,, | ௨0௪ |
| சிராத்தத்தின் தேசகாலமும் அதுசெய்யவேண்டியவிதியும் - - - - - - - - - - | ௮௯ | ௨0௭ |
| பார்வணஹோமம்பிண்டப்பிரதாநம் இவற்றின் விதி - - - - - - - - - - | ௯0 | ௨௧௪ |
| சிராத்தபோஜநவிதி | ௯௨ | ௨௨௩ |
| சிராத்தம்செய்வதைப்பார்க்கத்தகாதவர்கள் | ௯௪ | ௨௩௯ |
| சிராத்தகாலத்தில்வந்த அதிதிவிஷயம் | ௯௫ | ௨௪௩ |
| விகரம் | ,, | ௨௪௪ |
| ஏகொஹாதிசிராத்தவிதி | ,, | ௨௪௭ |
| சிராத்தபிராமணன் அன்றுபுணரக்கூடாதென்பது | ௯௬ | ௨௫0 |
| மற்றும்சில்சிராத்தபிரகரணம் | ,, | ௨௫௧ |
| கர்த்தாசெய்யவேண்டியபிராமணபிரார்த்தனை | ௯௭ | ௨௫௯ |
| பிண்டங்களை உபயோகப்படுத்தவேண்டியவிதி | ,, | ௨௬0 |
| சிராத்தபிராமணரின் உச்சிஷ்டத்தைச்சுத்திசெய்யவேண்டியகாலம் - - - - - - - | ௯௮ | ௨௬௫ |
| சிராத்தத்தின் பக்ஷியாபக்ஷியங்கள் | ,, | ௨௬௭ |
| மஹாளயம் | ௧00 | ௨௭௩ |
| பிதுர்க்களின்சுவரூபம் | ௧0௧ | ௨௮௪ |


நான்காவது.


| | | |
|---|---|---|
| பிராமணன்முதலானோர்ஜீவநகிருத்தியங்கள் | ௧0௨ | முதல் |
| கிரகஸ்தர்களின்கிருத்தியாகிருத்தியங்கள் | ௧0௪ | ௧௧ |

| பொருள்விளக்கம். | பக்கம். | சுலோகம் |
|---|---|---|
| ஆஹ்'தாக்கிநிவிஷயம் | ௧௦௭ | ௨௭ |
| ஸநாதகதருமம் | ” | ௨௯ |
| வாஹநவிஷயம் | ௧௧௫ | ௬௭ |
| கிரகஸ்தனுக்குநீக்கத்தக்கினவை | ” | ௬௯ |
| தாநப்வாங்கத்தகாதவர் | ௧௧௫ | ௮௪ |
| சிராவணவிதி | ௧௧௭ | ௯௫ |
| அநத்தியயநம் | ௧௧௮ | ௯௯ |
| பொதுவிதி | ௧௨௧ | ௧௨௮ |
| துன்பம்நேரிட்டாலும் தருமத்தையே செய்யவேண்டுமென்பது - - - - | ௧௨௭ | ௧௭௧ |
| தன்சுற்றத்தாருடன் சண்டைசெய்யக்கூடாதென்பது - - - - - - | ௧௨௯ | ௧௭௯ |
| கல்வியில்லாதவன்தாநம்வாங்கக்கூடாதென்பது | ௧௩௧ | ௧௮௮ |
| தாநம்கொடுக்கத்தக்கவர்கள் | ” | ௧௯௨ |
| ஒருவன்வெட்டின குளமுதலியவற்றில் ஸ்நாநம்செய்யக்கூடாதென்பது - - - | ௧௫௫ | ௨௦௧ |
| யமநியமங்கள் | ” | ௨௦௪ |
| சாப்பிடத்தகாதவந்நங்கள் | ” | ௨௦௫ |
| தாநப்பிரசம்ஸை | ௧௫௭ | ௨௨௯ |
| கர்வம்முதலியவற்றால்வரும்தோஷங்கள் | ௧௫௮ | ௨௫௬ |
| பிராணிகளுக்குதருமமேதுணையென்பது | ” | ௨௫௯ |
| உயர்ந்தவர்களோடு சம்பந்தஞ்செய்யவேண்டுமென்பது. - - - - | ௧௫௯ | ௨௪௪ |
| வலுவில்வந்ததாநத்தைநீக்கக்கூடாதென்பது | ௧௬௦ | ௨௪௭ |
| தகாதகாரியஞ்செய்தாவது தாய்தந்தைகுருஇவர்களைக்காப்பாற்றவேண்டுமென்பது- - | ” | ௨௫௧ |
| கிரகஸ்தன்பற்றில்லாமலிருந்து பிரமத்தியாநம்செய்யுங்காலம் - - - - | ௧௬௧ | ௨௫௭ |

| பொருள்விளக்கம். | பக்கம். | சுலோகம். |
|---|---|---|
| ஐந்தாவது. | | |
| சாப்பிடத்தகாதவை | ௧௪௩ | ௫ |
| மாம்ஸத்தின்விதிவிலக்குகளும்அவற்றால்வரும்பாபபுண்ணியமும் | ௧௪௬ | ௨௭ |
| இறப்புப்பிறப்புகளின்தீட்டு | ௧௫௦ | ௫௮ |
| பஞ்சலோகசுத்தி | ௧௫௮ | ௧௧௦ |
| நெய்எண்ணெய்முதலிய திரவியசுத்தியும்ஆடையாபரணசுத்தியும் | ௧௫௯ | ௧௧௫ |
| வீடுமுதலியமற்றும்சிலசுத்தியும் | ௧௬௦ | ௧௨௪ |
| மாதர்முகம்முதலியத்துக்கு சுபாவத்திலேயேசுத்தியுண்டென்பது | ௧௬௧ | ௧௩௦ |
| சௌசவிதி | ௧௬௨ | ௧௩௬ |
| ஸத்சூத்திரனுக்குவைசியனைப்போலாசௌசமிருக்கவேண்டியதென்பது | ௧௬௩ | ௧௪௦ |
| வாந்திசெய்ததற்குசுத்தி | ” | ௧௪௪ |
| மாதரொழுக்கம் | ௧௬௪ | ௧௪௭ |
| ஆறாவது. | | |
| வாநப்பிரஸ்தாசிரமதருமம் | ௧௬௮ | ௧ |
| ஸந்நியாசதருமம் | ௧௭௩ | ௧௩௪ |
| ஏழாவது. | | |
| இராஜதருமம் | ௧௮௩ | ௧ |
| அரசன்சிறப்பு | ௧௮௪ | ௩ |
| தண்டப்பிரசம்ஸை | ௧௮௫ | ௧௪ |
| அரசன்செய்கை | ௧௮௯ | ௩௭ |
| அரண்முதலியவற்றின்விதி | ௧௯௪ | ௭௦ |
| யுத்ததருமம் | ௧௯௮ | ௮௯ |
| உபாயவிதி | ௨௦௦ | ௧௦௭ |
| உலகபரிபாலநதருமம் | ௨௦௧ | ௧௧௦ |

| பொருள்விளக்கம். | பக்கம். | சுலோகம். |
|---|---|---|
| உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்தவேண்டியவிதி | ௨0௧ | ௧௧௪ |
| சம்பளவேற்பாடு | ௨0௨ | ௧௧௮ |
| தீர்வைவிதி | ௨0௪ | ௧௨௭ |
| மந்திராலோசனைவிதி | ௨0௭ | ௧௪௭ |
| ஸந்திமுதலியவைகள் | ௨0௯ | ௧௬0 |
| போர்செய்யத்தக்ககாலமும் அதற்குப்போகவேண்டியவிதியும் - - - - - | ௨௧௨ | ௧௮௨ |
| அரசன்போஜநவிதி | ௨௧௯ | ௨௧௬ |


—*—

எட்டாவது.


| பொருள்விளக்கம். | பக்கம். | சுலோகம். |
|---|---|---|
| வியவஹாரபரிபாஷை | ௨௨௧ | ௧ |
| சிறுவன்முதலியவர்களின்பொருளை அரசன்காப்பாற்றவேண்டுமென்பது - - - | ௨௨௫ | ௨௭ |
| கைதப்பியகப்பட்டபொருள்விஷயம் | ,, | ௫0 |
| புதையல்விஷயம் | ௨௨௬ | ௫௫ |
| கடன்கோடல் | ௨௨௮ | ௪௭ |
| ஸாக்ஷிப்பிரகரணம் | ௨௩௧ | ௬௨ |
| வாதிபிரதிவாதிகள்பிரமாணம்செய்யவேண்டியவிதி | ௨௫௮ | ௧௧௫ |
| மறுவிசாரணை | ௨௩௯ | ௧௧௭ |
| பொய்சாக்ஷிசொல்லுகிறதற்குண்டாகிய காரணமும் அதற்குத்தண்டமும் - - | ௨௫௯ | ௧௧௮ |
| பொருளின்தொகை | ௨௪௧ | ௧௫௧ |
| வட்டிவாங்குதல் | ௨௪௫ | ௧௬0 |
| போக்கியஅடைமானவட்டி | ,, | ௧௬௫ |
| கூட்டையநுபவித்தல் | ,, | ௧௬௬ |
| கூட்டையநுபவித்தால்சொந்தமாகாதென்பது | ,, | ௧௬௯ |
| அநுபவபாத்தியம் | ௨௪௪ | ௧௬௭ |
| வட்டியளவு | ,, | ௧௫௧ |
| ஒப்பிப்பணிசெய்யாமை | ௨௪௫ | ௧௫௬ |
| பிணையினிலக்கணம் | ௨௪௬ | ௧௫௮ |

| பொருள்விளக்கம் | பக்கம் | சுலோகம் |
|---|---|---|
| குடியன்முதலானோர்க்குக்கடன்கொடுத்தால்வழக்கிடக்கூடாதென்பது - - - | ௨௪௭ | ௧௬௫ |
| சீட்டில் எழுதியிருந்ததும் மாறுமென்பது | ” | ௧௬௪ |
| குடும்பத்தலைவன்பட்டகடனைமற்றவர்கள்தீர்க்கவேண்டுமென்பது. - - - | ” | ௧௬௬ |
| வேலையாளர்பட்டகடனை யஜமானன் ஒப்புக்கொள்ளவேண்டுமென்பது. - - - - | ” | ௧௬௭ |
| வலிமையால்செய்யப்பட்டவெல்லாம் மாறிப்போமென்பது - - - - | ௨௪௭ | ௧௬௮ |
| அர்சன் அதிகதீர்வைவாங்கவும் வாங்கவேண்டியதீர்வையைநீக்கவுங்கூடாதென்பது - - | ௨௪௮ | ௧௭0 |
| அர்சன்பக்ஷபாதமில்லாமல் உலகாளவேண்டுமென்பது - - - - - | ” | ௧௭௫ |
| கடன்காரனைத்தநிகன்துன்பப்படுத்தினால் அதற்குசிக்ஷை - - - - - | ” | ௧௭௬ |
| கடன்காரன்தொழில்செய்தாவது கடனைத்தீர்க்கவேண்டுமென்பது - - - - - | ௨௪௯ | ௧௭௭ |
| நிக்ஷேபவிஷயம் | ” | ௧௭௯ |
| நிக்ஷேபத்தைவைத்தவனிடத்திலேயே கொடுக்கவேண்டுமென்பது - - - - - | ௨௫0 | ௧௮௫ |
| உடையவனல்லான்விற்றல்செல்லாதென்பது | ௨௫௨ | ௧௯௭ |
| சாக்ஷிமுன்பாகவிற்றிருந்தால் | ௨௫௩ | ௨0௨ |
| கலியாணகாலத்தில் பெண்ணைமாறுபாடுசெய்தால் | ” | ௨0௪ |
| தோஷமுள்ளபெண்ணைக்கொடுத்தால் | ” | ௨0௫ |
| கூடிமேம்படல் | ” | ௨0௬ |
| தக்ஷிணைவாங்கினபின் ரித்துவிக்கு நோயினால்படுத்துக்கொண்டால் - - - - - | ௨௫௪ | ௨0௭ |
| தக்ஷிணைப்பிரிவு | ” | ௨௧0 |
| நல்கிநல்காமை | ௨௫௫ | ௨௧௨ |
| கூலிகொடாமை | ” | ௨௧௫ |
| வேலையாளன்ஏற்றுகொண்டவேலையை முடிக்காவிடில் - - - - | ௨௫௬ | ௨௧௭ |

| பொருள்விளக்கம். | பக்கம். | சுலோகம். |
|---|---|---|
| கட்டுப்பாட்டைமீறுதல் | ௨௫௬ | ௨௧௯ |
| விற்றுக்கொண்டுள்ளமோப்பாமை | ,, | ௨௨௨ |
| வியபிசாரதோஷத்தைச் சொல்லாமல் பெண்ணைக் கொடுத்தால்- - - - | ௨௫௭ | ௨௨௪ |
| வியபிசாரதோஷத்தைச்சொல்லி அதைநிரூபியாவிடில் - - - - - - - | ,, | ௨௨௫ |
| கந்நியாப்பெண்ணே விவாஹத்துக்குத்தக்கவளென்பதும் வியபிசாரிபாணிக்கிரஹணத்துக்குத்தகாதவளென்பதும்- - - | ,, | ௨௨௬ |
| பாணிக்கிரஹணஞ்செய்தாற்றான் தருமபத்திநியாவாளென்பது - - - | ,, | ௨௨௭ |
| சாமிபாலவிவாதம் | ,, | ௨௨௯ |
| மேய்ப்பவன்குற்றம் | ௨௫௮ | ௨௩௦ |
| பாத்கூலி | ,, | ௨௩௧ |
| மந்தையில் பசுக்களுக்குத்திங்குவந்தால் | ,, | ௨௩௨ |
| அதுகாட்டில்நேரிட்டால் | ,, | ௨௩௪ |
| மந்தைவெளி ஏற்படுத்தவேண்டியவிதி | ௨௫௯ | ௨௩௭ |
| மந்தைவெளிப்பயிர்விஷயம் | ,, | ௨௩௮ |
| மற்றபயிர்விஷயம் | ,, | ௨௪௦ |
| பயிரிட்டவனேபயிரை அழித்தால் | ௨௬௦ | ௨.௪௩ |
| எல்லைவழக்கு | ,, | ௨௪௫ |
| எல்லை அடையாளம் | ,, | ௨௪௬ |
| எல்லைவிஷயத்தில் சாக்ஷிசொல்லவேண்டியவிதி | ௨௬௧ | ௨௫௩ |
| அந்தச்சாக்ஷிக்காரன்பொய்சொன்னால் | ௨௬௩ | ௨௬௩ |
| ஒருவனுடையவீடுகழனிமுதலியவை யபகரித்தால் | ,, | ௨௬௪ |
| சொற்கொடுமை | ,, | ௨௬௭ |
| ஒருவன்தோஷத்தைச்சொன்னால் | ௨௬௪ | ௨௭௪ |
| தண்டக்கொடுமை | ௨௬௫ | ௨௭௯ |
| வண்டிக்காரன்யசமாநன்வண்டியிலிருப்பவர் இவர்களின்குற்றங்களும் அதற்குத்தண்டமும் - - | ௧௬௭ | ௨௯௦ |
| திருட்டு | ௧௬௮ | ௩௦௨ |

| பொருள்விளக்கம். | பக்கம். | சுலோகம். |
| --- | --- | --- |
| அரசன் உலகத்தைக்காப்பாற்றாமல் தீர்வைவாங்கக் கூடாதென்பது | க௬௯ | ௩௦௭ |
| வழக்கில்தோற்றவன் திட்டை அரசன்பொறுக்கவேண்டுமென்பது | ௨௭௦ | ௩௧௨ |
| பிராமணன்பொன்னைத்திருடினால் | ,, | ௩௧௪ |
| தாம்புக்கயிறுமுதலானதிருட்டு | ௨௭௧ | ௩௧௯ |
| தானியத்திருட்டு | ,, | ௩௨௦ |
| பொன்வெள்ளித்திருட்டு | ,, | ௩௨௧ |
| பசுக்களைத் திருடினதற்கும் அவைகளுக்கு மூக்குக் குத்தினதற்கும் | ௨௭௨ | ௩௨௬ |
| பட்டுமுதலியதிருட்டுக்கு | ,, | ௩௩௦ |
| வன்திருட்டு | ௨௭௩ | ௩௩௨ |
| அரசன்மைந்தன்முதலானோர் திருடினால் | ,, | ௩௩௫ |
| அரசன்குற்றஞ்செய்தால் | ,, | ௩௩௬ |
| தண்டிக்கக்கூடாதவிஷயம் | ௨௭௪ | ௩௩௯ |
| வன்செய்கை | ௨௭௫ | ௩௪௪ |
| ஸ்திரீஸங்கிரஹணம் | ௨௭௬ | ௩௫௨ |
| முன்சந்தேகப்பட்டவன் | ,, | ௩௫௪ |
| குளமுதலியவிடத்திற்பேசினால் | ,, | ௩௫௬ |
| பிறன்மனைவிக்குச் சந்தநமனுப்பினால் | ௨௭௭ | ௩௫௭ |
| கூட்டிக்கொடுக்கிறவன்விஷயம் | ,, | ௩௬௨ |
| கந்நியாஸ்திரீவிஷயம் | ௨௭௮ | ௩௬௪ |
| கணவனைநீக்கிமற்றொருவனைச்சேர்ந்தால் | ௨௭௯ | ௩௭௧ |
| கற்புடையமாதர்விஷயம் | ௨௮௦ | ௩௭௫ |
| கற்பில்லாதமாதர்விஷயம் | ௨௮௧ | ௩௮௪ |
| வருணாசிரமவழக்குவந்தால் | ௨௮௨ | ௩௯௦ |
| சுபகாரியத்தில் அண்டைவிட்டுக்காரனை அழைக்காவிடில் | ௨௮௨ | ௩௯௨ |
| குருடன்முதலானவாளிடத்தில் தீர்வைவாங்கக்கூடாதென்பது | ,, | ௩௯௪ |
| வண்ணான்குற்றம் | ௨௮௩ | ௩௯௬ |

| பொருள்விளக்கம். | பக்கம் | சுலோகம். |
|---|---|---|
| சேடன்குற்றம் | ,, | ௩௯௭ |
| ஆபத்தீர்வை ஏற்பாடு | ,, | ௩௯௮ |
| பறிமுதல்விஷயம் | ,, | ௩௯௯ |
| திருட்டுவழிபோனால் | ,, | ௪00 |
| விலைஏற்பாடு | ௨௮௪ | ௪0௨ |
| தோணிக்கூலி | ,, | ௪0௪ |
| தோணிக்காரனால் பிசகுநேரிட்டால் | ௨௮௫ | ௪0௮ |
| க்ஷத்திரியவைசியாளிடத்தில் வேலைவாங்கக்கூடாதென்பது - - - - | ,, | ௪௧௧ |
| பிராமணன் சூத்திரனிடத்தில் வேலைவாங்கலாமென்பது - - - - - - | ,, | ௪௧௩ |
| வேலையாளர்பிரிவு | ௨௮௬ | ௪௧௫ |
| மனையாள் சிஷ்ன் வேலையாளன் இவர்களுக்கு தன் பொருளிலுமதிகாரமில்லையென்பது - - | ,, | ௪௧௬ |
| ஒன்பதாவது. | | |
| மாதராடவர்தருமம் | ௨௮௭ | ௧ |
| மாதர்களுக்குச் சுவாதீநங் கொடுக்கக்கூடாதென்பதும் அவர்களின்பரிபாலநமும்அதனால்வரும் லாபநஷ்டமும்- - - - - - | ,, | ௨ |
| மாதர்களின்தகாதசெய்கை | ௨௮௯ | ௧௩ |
| மாநவவியபிசாரவிஷயம் | ௨௯0 | ௧௯ |
| புத்திரவிஷயம் | ௨௯௧ | ௨௬ |
| மாதர்களின் ஆபத்தருமம் | ௨௯௬ | ௫௭ |
| நிச்சிதார்த்தமானபின்வரனிறந்தால் | ௨௯௯ | ௬௯ |
| கணவனுமனையாளும் பிரிந்திருக்கும்போது | ௩00 | ௭௪ |
| கணவனைமனைவிபகைத்தால் | ,, | ௭௭ |
| இரண்டாவதுவிவாஹவிஷயம் | ௩0௧ | ௮௧ |
| தன்ஜாதிமனைவியே சிசுருஷைசெய்யவேண்டுமென்பது - - - - - - | ௩0௨ | ௮௬ |
| பெண்ணானவள் தானேகணவனைத் தேடிக்கொள்ளலாமென்பது - - - | ௩0௩ | ௯0 |

| பொருள்விளக்கம். | பக்கம். | சுலோகம். |
|---|---|---|
| கந்நியாசுல்க்கங்கொடுத்தபின் அந்த வரனிறந்தால் | ரு0ச | கூஎ |
| சுல்க்கம்வாங்கக்கூடாதென்பது | ” | க00 |
| தாயபாகம் | ரு0ரு | க0ச |
| எடுகூறு | ரு0சு | ககஉ |
| மூத்ததன்மை | ரு0அ | கஉரு |
| புத்திரிகாபுத்திரவிதி | ரு0கூ | கஉஎ |
| புத்திரசந்ததியின்பெருமை | ருகக | கஙஎ |
| புத்திரனுக்கும் தௌஹித்திரனுக்கும் பேதமில்லையென்பது | ” | கஙகூ |
| தத்தன் ஜநகப்பிதாவுக்கு சிரார்த்தஞ்செய்யவேண்டியதில்லையென்பது | ருகஉ | கசஉ |
| புத்திரபேதங்களும் அதுகளின்கிருத்தியங்களும் | ருகரு | கருகூ |
| ஔரஸனிருந்தால் | ருககூ | கஅக |
| ஔரசனில்லாதபோது | ருஉ0 | கஅரு |
| புத்திரசந்ததியில்லாதபோது | ருஉக | கஅஎ |
| ஸ்ரீதநம் | ருஉஉ | ககூஉ |
| பங்குக்குரியவரல்லாதவர் | ருஉச | உ0க |
| பகுக்கத்தகாதபொருள் | ” | உ0எ |
| பிதாவிருக்கையிற்பாகிக்கும்வகை | ருஉசு | உகரு |
| சூது | ருஉஎ | உஉச |
| சூதாடுகிறவன்முதலியவர்களைப் பட்டணத்தைவிட்டுத்துரத்தவேண்டுமென்பது | ” | உஉரு |
| பொதுவானசிலதண்டங்கள் | ருஉஅ | உஙக |
| தப்புப்பத்திரஞ்சிருஷ்டித்தால் | ” | உஙஉ |
| நீதிக்காரன்செய்ததீர்ப்பை அரசன் மாற்றக்கூடாதென்பது | ருஉகூ | உஙங |
| மஹாபாதகர்சிக்ஷை | ” | உஙஎ |
| ஒழிவு | ருஙஉ | உருக |
| பரிதாநம்வாங்கினால் | ருஙங | உருஅ |
| வெளிப்பட்டதிருடர்தண்டம் | ” | உருகூ |
| திருடர்வஸிக்குமிடம் | ருஙச | உஎச |

| பொருள்விளக்கம். | பக்கம். | சுலோகம். |
|---|---|---|
| திருடருக்கு ஒத்தாசைசெய்தால் | ௬௬௫ | ௨௭௧ |
| பொக்கிஷத்தைத்திருடினால் | ௬௬௬ | ௨௭௫ |
| இரவில்பூட்டை உடைத்தால் | ,, | ௨௭௬ |
| முடிச்சவிழ்த்தால் | ,, | ௨௭௭ |
| ஏரிகுளத்தை உடைத்தால் | ,, | ௨௭௯ |
| கோவில்முதலானதையிடித்தால் | ,, | ௨௮௦ |
| குளத்துநீரைக்கழினிக்குப்பாச்சினால் | ௬௬௭ | ௨௮௧ |
| தெருவில்மலபாதைசெய்தால் | ,, | ௨௮௨ |
| பாலத்தையிடித்தால் | ,, | ௨௮௫ |
| சரக்கைமாறுபாடாய்விற்றால் | ,, | ௨௮௬ |
| சூதியம்வைத்தால் | ௬௬௮ | ௨௯0 |
| விரையில் தாநியத்தைக்கலந்தால் | ,, | ௨௯௧ |
| இராஜாங்கம் | ௬௬௯ | ௨௯௪ |
| அரசனாலேயே யுகதருமமுண்டாகுமென்பது | ௬௪0 | ௩0௧ |
| பிராமணன்பெருமை | ௬௪௨ | ௩௧௩ |
| வைசியதருமம் | ௬௪௪ | ௩௨௬ |
| சூத்திரதருமம் | ௬௪௬ | ௩௩௪ |
| பத்தாவது. | | |
| சங்கரஜாதியினுற்பத்தி | ௬௪௬ | ௧ |
| அநுலோமஜாதி | ௬௪௭ | ௬ |
| பிரதிலோமஜாதி | ௬௪௮ | ௧௧ |
| அந்தராளஜாதி | ௬௪௯ | ௧௫ |
| விராத்தியஜாதி | ௬௫0 | ௨0 |
| பாகியஜாதி | ௬௫௧ | ௨௬ |
| சங்கரஜாதித்தொழில் | ௬௫௪ | ௪௭ |
| ஹீநஜாதியரைத்தொழிலாலறியவேண்டுமென்பது | ௬௫௬ | ௫௭ |
| பிராமணனுக்குப்பிறந்தசூத்திரன் பிராமணனாவானென்பதுஞ்சூத்திரனாவானென்பதும் | ௬௫௭ | ௬௪ |
| பிராமணன்தொழில் | ௬௫௯ | ௭௪ |
| க்ஷத்திரியன்தொழில் | ,, | ௭௭ |
| வைசியன்தொழில் | ,, | ௭௮ |
| மூவருக்குஞ்சிறந்ததொழில் | ௬௬0 | ௮0 |
| அந்தணனாபத்தருமம் | ,, | ௮௧ |

| பொருள்விளக்கம். | பக்கம். | ஸ்லோகம். |
|---|---|---|
| க்ஷத்திரியனுபத்தருமம் | ௫௬௨ | ௯௫ |
| வைசியனுபத்தருமம் | ௫௬௨ | ௯௮ |
| சூத்திரனுபத்தருமம் | ௫௬௫ | ௯௯ |
| பிராமணனுபத்தொழில் | ,, | ௧0௧ |
| க்ஷத்திரியன்முதலானவரினுபத்தொழில் | ௫௬௬ | ௧௧௮ |
| பதினோராவது. | | |
| தாநாதிகாரிகள் | ௫௬௯ | முதல் |
| தாய்தந்தையைக்காப்பாற்றுமல் வேறுதருமஞ்செய்யக்கூடாதென்பது - - | ௫௭0 | ௯ |
| யாகத்துக்குக்குறைவுவந்தால் | ௫௭௧ | ௧௧ |
| சக்தியுள்ளபோது ஆபத்தருமத்தை அநுஷ்டிக்கக்கூடாதென்பது - - - | ௫௭௪ | ௨௮ |
| பிராமணன் தனக்கபகாரஞ்செய்கிறவனை சபிக்கலாமென்பது - - - | ௫௭௫ | ௫௧ |
| அக்கிநிஹோத்திரிவிஷயம் | ௫௭௬ | ௫௬ |
| சொற்பப்பொருளுள்ளவன் யாகஞ்செய்யக்கூடாதென்பது -- - - - | ,, | ௫௮ |
| பாபச்சுவரூபம் | ௫௭௮ | ௪௯ |
| பஞ்சமஹாபாதகங்கள் | ௫௭௯ | ௫௪ |
| உபபாதகம் | ௫௮0 | ௫௯ |
| ஜாதிப்பிரம்சகரம் | ௫௮௧ | ௬௭ |
| ஸங்கரீகரணம் | ௫௮௧ | ௬௮ |
| அபாத்திரீகரணம் | ,, | ௬௯ |
| மலிநீகரணம் | ,, | ௭0 |
| பிரமஹத்திப்பிராயச்சித்தம் | ௫௮௨ | ௭௨ |
| ஸுராபாநப்பிராயச்சித்தம் | ௫௮௫ | ௯0 |
| பொன்திருட்டுக்குப்பிராயச்சித்தம் | ௫௮௭ | ௯௯ |
| குருமனையாளைப்புணர்ந்ததற்கு | ௫௮௮ | ௧0௫ |
| உபபாதகத்திற்கு | ௫௮௯ | ௧0௮ |
| அவகீரணிப்பிராயச்சித்தம் | ௫௯0 | ௧௧௮ |
| ஜாதிப்பிரம்சகரமுதலியவற்றிற்கு | ௫௯௧ | ௧௨௪ |
| க்ஷத்திரியன்முதலானோைக்கொன்றால் | ௫௯௨ | ௧௨௬ |
| பூனைமுதலியஜந்துவைக்கொன்றால் | ,, | ௧௫௧ |
| அபக்ஷியபக்ஷணப்பிராயச்சித்தம் | ௫௯௫ | ௧௪௬ |
| புநருபநயநவிதி | ௫௯௬ | ௧௫௧ |

| பொருள்விளக்கம். | பக்கம். | சுலோகம். |
|---|---|---|
| பலவிதத்திருட்டுக்கு | ௩௯௮ | ௧௬௨ |
| அகம்மியாகமநபிராயச்சித்தம் | ௩௯௯ | ௧௭௦ |
| ஸம்ஸர்க்கிப்பிராயச்சித்தம் | ௪௦௦ | ௧௮௦ |
| கடப்பிரஹாரவிதி | ,, | ௧௮௨ |
| தகாததாநம்வாங்கினல் | ௪௦௩ | ௧௯௪ |
| விராத்தியனுக்குப்புரோகிதஞ்செய்தால் | ௪௦௪ | ௧௯௭ |
| பந்திதூஷிகனுக்கு | ,, | ௨௦௦ |
| பிராமணனைமிரட்டுதல்முதலானதற்கு | ௪௦௫ | ௨௦௪ |
| கிருச்சிரசுவரூபங்கள் | ௪௦௬ | ௨௧௧ |
| பாபஞ்செய்தவன்கிருத்தியம் | ௪௧௦ | ௨௨௭ |
| தவத்தின்பெருமை | ௪௧௧ | ௨௩௪ |
| ரஹஸியவிஷயபிராயச்சித்தம் | ௪௧௩ | ௨௪௮ |
| பன்னிரண்டாவது. | | |
| கருமலக்ஷணம் | ௪௧௭ | ௫ |
| கருமபலன் | ௪௧௮ | ௯ |
| பாபபுண்ணியபலன் | ௪௧௯ | ௧௬ |
| முக்குணலக்ஷணம் | ௪௨௧ | ௨௪ |
| முக்குணச்செய்கை | ௪௨௨ | ௩௦ |
| முக்குணப்பயன் | ௪௨௩ | ௪௦ |
| தமோகுணஜநநம் | ௪௨௪ | ௪௨ |
| ரஜோகுணஜநநம் | ,, | ௪௫ |
| ஸத்துவகுணஜநநம் | ௪௨௫ | ௪௮ |
| அகிர்த்தியகரணபலன் | ௪௨௬ | ௫௩ |
| கிர்த்தியாகரணபலன் | ௪௨௮ | ௭௦ |
| மோக்ஷோபாயம் | ௪௩௧ | ௮௩ |
| கருமவிபாகம் | ,, | ௮௮ |
| வேதப்பிரசம்ஸை | ௪௩௩ | ௯௪ |
| சாஸ்திரரஹஸியம் | ௪௩௬ | ௧௦௮ |
| பிருகுவாக்கியம் தத்துவம் | ௪௩௮ | ௧௧௮ |
| அத்தியாத்மதியாநயோகம் | ,, | ௧௨௦ |

ஸ்ரீராமஜயம்.

## மநுதர்ம்மசாத்திரத்தில்

# பிருகுசங்கிதையில்

## முதலத்தியாயம்.

நூலாரம்பம்.

பஞ்சவிடயங்களிற் செல்லாநின்ற மநதைப் பிரம்மநிஷ்டையிற் செல்லும்படி செலுத்திய சுவாயம்பு மநுவை ருஷீஸ்வரர்கள்வந்தடைந்து விதிப்படிப்பூசித்து மேற்சொல்லப்போகிற விஷயங்களைக்கேழ்க்கிறார்கள்.

௨—பரிபூரணமான ஞாநம் பலம் ஐஸ்வரியம் வீரியம் சக்தி தேஜசு இவைகளை யியல்பாகவுடைய ஓ சுவாமீ பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்கிற நான்கு வருணத்தாருடையவும் அநுலோமன் பிரதிலோமன் அந்தராளன் விராத்தியன் முதலான சங்கரசாதிகளுடையவும் சாதகர்ம்மமுதலிய தருமங்களை கிரமமாகச் சரியாய் முழுமையும் எங்களுக்குச் சொல்லவேண்டும்.

௩—அக்கினிஷ்டோம முதலிய யாகாதிகர்மங்களை விதிக்கிறதாயும் ஒருவராலே சிருஷ்டிக்கப்படாததாயும் இவ்வளவென்று அளவிடக் கூடாததாயும் மீமாம்சா சாஸ்த்திரமறியாதவர்களாலே அறியப்படாத பொருளையுடையதாயும் இருக்கிற இந்தச்சகலவேதத்தினுண்மையை அறிந்தமஹான் நீரொருவரோ யல்லவா.

௪—மஹாநுபாவாளான மஹருஷிகளுக்கும் சந்தேகந்தெளிவிக்கத்தக்க ஞாநதேஜஸையுடைத்தான அந்த மநுப்பிரஜாபதி

யானவர் இவ்வண்ணமாக அந்தருஷிகளாலே கேழ்க்கப்பட்டு அவர்களைப்பூசித்து கேழ்ப்பீராகவென்று சொல்லத்தொடங்கினூர்.

ரு—வருணுசிரமதருமத்தைக்கேட்ட ருஷிகளுக்கு பிரளயகால முதல் வருணுசிரமமுண்டானதால் முதல்பிரளயகாலத்தைச்சொல்லத்தொடங்கினூர். இந்தவுலகமானது பிரளயகாலத்தில் மூலப்பிரகிரதியில் ஐக்கியமாய் இருளில் மறைந்த பதார்த்தம்போல் கண்ணுக்குத்தோற்ருததாயும் அடையாளமில்லாததாயும் சப்த்தத்தால நியப்படாததாயும் தர்க்கசாஸ்திரயுக்த்தியைக்கொண்டு நிச்சயிக்கத்தகாததாயும் யாவும் உறங்கினதுபோலும் இருந்தது.

சா—இவ்வாறு பிரளயகாலமுடிந்தபின்பு ஜீவாத்மாக்களைப்போல்கர்மத்தினூலேதேகமெடுக்காமல்தன்னிச்சையினூலே தேகமெடுக்கத்தக்க சுயம்புவானபகவானுனவர் கண்முதலான புறவிந்திரியங்களாலே கிரகிக்கப்படாதவராயும் ஒருவராலுந் தடுக்கப்படாத சிருஷ்டிமுதலிய முத்தொழிலை யுடையவராயும் ஆகாயமுதலிய பஞ்சமஹாபூதங்களைப் பிரகாசப்படுத்துகிறவராயும் பிரகிரதிப்பிரேரகராயும் பிரகாசித்தார்.

எ—சகலவேதபுராணங்களினூலேபிரசித்தராயும் மநதினூலேமாத்திரம் அறியத்தக்கவராயும் பிறவிந்திரியங்களாலே அறியத்தகாதவராயும் உருவமில்லாதவராயும் சர்வாந்திரியாமியாயும் இவ்வளவென்று சிந்திக்கத்தகாத மகிமையை யுடையவராயும் பிறப்பிறப்பில்லாதவராயும் இருக்கப்பட்ட யாதொரு சுவாமியுண்டோ அவரே இந்த ஆகாயமுதலிய பூதங்களாகப் பிரகாசித்தார்.

அ—அந்தப்பரமாத்மாவானவர் சகலவுயிர்களுக்கும் இருப்பிடமானதன்சரீரத்தினின்றும் நானுவிதமான பிரசைகளைச் சிருஷ்டிக்கநினைத்து பிரம்மாண்ட சிருஷ்டிக்குமுன்னம் சலத்தையுண்டுபண்ணி அதில் தன்சக்த்திரூபமான ஒருவிதையைவிதைத்தார்.

௯—அந்தவித்தானது சர்வேஸ்வரருடைய இச்சையின்லே தங்கதிரமான ஒரு அண்டமாயிற்று அவ்வண்டத்தில் முன்ஜநநத்தில் பிரமப்பட்டத்துக்குத்தக்க தவசுபண்ணின ஒருஜீவனை பிரம்மாவாகச்சிருஷ்டித்து அவருக்கு அந்தரீயாமியாய்ப் பிரவேசித்தார். அந்தப்பிரமனுக்கு சர்வலோகபிதாமகனென்றுபெயர்.

௧0—ஜலமானது *நரன்என்கிறபெயரையுடைய பரமாத்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டதால் நாரமென்கிற பெயரையடைந்தது. அந்தநாரமென்கிற பெயரையுடைய ஜலத்தில் வசித்தலினால் அந்தப்பரமாத்மாவுக்கு நாராயணனென்றுபெயர்.

௧௧—பிரபஞ்சத்துக்குக் காரணமாயும் சரீர மில்லாதவராயும் அழிவில்லாதவராயும் வேதாந்தத்தினு லறியப்படுதலினாலே சத்தென்றும் கண்முதலிய புறவிந்திரியங்களினு லறியப்படாமையினால் அசத்தென்றும் சொல்லப்பட்ட சுபாவத்தையுடையவராயு மிருக்கிற அந்தப்பரமாத்துமாவினால் முன்னர் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு ஜீவனுக்குப் பிரம்மாவென்று பெயர்சொல்லப்படுகிறது.

௧௨—முன்சொன்ன அந்தவண்டத்தில் அந்தப்பிரம்மாவானவர் மேற்சொல்லும் கணக்கையுடைய ஒரு பிரம்மவருஷம் வசித்துத் தன்மநதினலேயே இந்தவண்டம் இரண்டாகப்போகும்படி நினைத்து அதை இரண்டுகண்டமாக்கினர்.

௧௩—அவ்விரண்டுகண்டத்தினுள் மேற்கண்டத்தினாலே சுவர்க்கத்தையும் கீழ்க்கண்டத்தினாலே பூமியையும் நடுவில் ஆகாசத்தையும் எட்டுத்திக்குகளையும்சமுத்திரத்தையும் சிருஷ்டித்தார்.

---

* நரன் என்பது கேடில்லாதவன்.

# மகத்தத்துவமுதலியசிருஷ்டி.

கச—அந்தப்பிரம்மாவானவர் பரமாத்ம சுவரூபரான தன்னிடத்தில்நின்றும் வேதத்திற்சொல்லியிருப்பதினாலும் ஞானத்தையுண்டுபண்ணுகிறத்தினாலும் சத்தென்றும் கண்ணுக்குத்தெரியாமையினால் அசத்தென்றுஞ் சொல்லப்பட்டமநதையுண்டுபண்ணினார். அதற்குமுன்னம் நானென்னும் அபிமானத்துக்கு இருப்பிடமாயும் தன்காரியஞ்செய்ய வல்லமையுடையதாயும் இருக்கிற அகங்காரத்தையுண்டுபண்ணினார்.

கரு—இந்த அகங்காரசிருஷ்டிக்குமுன்னமே மேற்சொன்னபரமாத்துமாவிடத்தினின்றும் மகத்தத்துவத்தையும் சத்துவமுதலிய முக்குணங்களையும் சப்த்தமுதலிய பஞ்சவிடயங்களைக் கிரிகிக்கதித்க்க பஞ்ச ஞானேந்திரியங்களையும் வேதத்திற்சொல்லியபடி கிரமமாகவுண்டுபண்ணினார்.

கசு—முன்சொல்லிய ஆகாசாதி பஞ்சபூதங்களுடைய தன்மாத்திரைகளையும் அகங்காரத்தையும் சூட்சுமமாய் அதனதனிலேகளிலடக்கி மானுட விலங்கு பக்ஷிமுதலிய சாதிகளைச் சிருட்டித்தார்.

கஎ—யாதொருகாரணத்தினாலே பிரம்மாவினாலே யுண்டுபண்ணப்பட்ட பஞ்சமஹாபூதமும் அகங்காரமும் இந்தத்தேகத்தைச் சூட்சுமரூபமாயடைகிறதோ அதனாலே இந்தத்தேகத்துக்குச்சரீரமென்று பெயராயிற்று.

கஅ—அந்தத்தேகத்தை ஆகாசாதிமஹாபூதங்களும் சூட்சுமரூபமாகத்தன்தன் காரியத்தோடு அடைகிறது ஆகாசாதிபூதங்களின் காரியம் மேலேசொல்லப்படுகின்றது மநதின்காரியமாவது சுபா

---

ஂ ஷிண்ணுடிாகரம் சீரம்.

சுபத்லதநினைப்பதினுமேல சுகதுக்கங்களையுண்டுபண்ணி கன்னுக் குத்தோன்றுமல் அழிவற்றிருக்குகை.

கக—பஞ்சதன்மாத்திரா மகத்தத்துவம் அகங்காரம் இவ்வேழி னுடைய சிருஷ்டிக்கிற வல்லமையாகிற தேஜசையுடைய சூட்சுமரூபங்களினுலே பிறப்பிறப்பற்ற சுவாமியாகிறகாரணத்தினின்று ம் அழிவுள்ள இந்தலோகமாகிற காரியமுண்டாகின்றது.

உ0—இந்தப்பஞ்சமஹாபூதங்களில் முதலானஆகாசத்தின்குண மானசப்த்தத்தை இரண்டாவதானவாயுவும் அதனது சப்த்தபரிசத் தைமூன்றுவதானதேயுவும் அதனதுசப்த்த பரிச ரூபங்களை நான் காவதான அப்புவும் அதனது சப்த்த பரிச ரூப ரசங்களை ஐந்தாவ தானபிரிதிவியும் அடைகின்றது·

உக—அந்தப்பிரம்மாவானவர் முன்சிருஷ்டிக்கப்பட்ட மானு டர்முதலிய சகலசாதிகளுக்கும் வேதத்தில்நின்றும் இந்த அடை யாளமுள்ளவன் மனிதனென்றும் இந்தஅடையாளமுள்ளது பசு வென்றும் இந்தஅடையாளமுள்ளது அசுவமென்றும் இவ்வித மாகப்பெயர்களையும்அந்தந்தச்சாதிகளின் ரொழில்களையுப் சிருஷ்டித்தார்.

உஉ—கர்மத்தைச்சுபாவமாகவுடைய இந்திராதிதேவர்களையும் சூட்சுமரூபமுள்ளசாத்தியதேவர்களையும் அழிவற்றதான யாகங்களையும் சராசரங்களையும் அந்தப்பிரபுவானவர் சிருஷ்ட்டித்தார்.

உரு—யாகங்கள்நிறைவேறும்பொருட்டு இருக்கு எஜுஸ் சாமம் என்னும்பெயராயுடைய அநாதியானவேதத்தை அக்கினி வாயு சூரியன் இவர்கள்மூவரிடத்தினின்றும் வெளிப்படுத்தினுர்.

உச—பின்பு காலத்தையும் காலத்திற்கு மாசாதிபிரிவையும் கிருத்திகையாதி நட்சத்திரங்களையும் சூரியாதி நவக்கிரகங்களையும் நதிக

ளேயும் சமுத்திரங்களேயும் பர்வதங்களேயும் மேடு பள்ளவிடங்களே யும் உண்டுபண்ணினர்.

உடு—பிராஜாபத்திய முதலிய தபசையும் வாக்கையும்கிரீடை யையும் சந்தோஷித்தையும் காமக் குரோதத்தையும் மேற்சொல் லப்போகிற சிருஷ்ட்டியைச்செய்ய மநதுள்ளவராய் இந்தப்பிர சைகளின் விருத்தியின்பொருட்டு உண்டுபண்ணினர்.

உசா—கருமத்தையறிவதற்காக தர்ம்மாதர்ம்மங்களேயும் அவற் றைச் செய்கிறவர்களுக்குப் பலனாக சுகதுக்கங்களேயும் உண்டுப ண்ணினர்.

உஎ—முன்சொன்ன பஞ்சமஹாபூதங்களுடைய சூட்சுமரூப மான தன்மாத்திரைகளாலே தூலமாயும் சூட்சுமமாயுமிருக்கிற இ வ்வுலகம் கிரமமாய்விர்த்தியடைகின்றது.

உஅ—அந்தப்பிரபுவானவர் எந்தப்பிராணியை எந்தச்செய்கையி ல்முன்னம் நியமித்தாரோ மறுபடியும் உண்டாகிற அவ்விதப்பிரா ணிகள் அவ்விதச்செய்கையையே அடைகிறது.

உகூ—கொலையை சிம்மாதி மிருகங்களுக்கும் கொலையின்மை யைமான்முதலிய மிருகங்களுக்கும் தயையை பிராமணருக்குக் கொடுமையை க்ஷத்திரியாளுக்கும் குருபணிவிடைமுதலிய தரு மத்தை பிரமச்சாரிகளுக்கும்அவர்களுக்கேமதுமாம்ச பக்ஷணமா கிய அதர்மத்தையும் சத்தியத்தைப் பெரும்பாலும் தேவர்களுக் கும் அசத்தியத்தை மனிதர்களுக்குப் உண்டுபண்ணினர்.

௩0—வசந்தாதிருதுக்கள் தன்றன்காலங்களில் தன்றன் அடையா ளங்களே யெப்படித்தானே யடைகின்றனவோ அதுபோல பிரா ணிகளும் தன்றன்கர்மத்துக்குத்தக்க செய்கைகளேத்தானே யடை கிறர்கள்.

௩௧—உலகவிருத்தியின்பொருட்டு தன்னுடைய முகம் புஜம் தொடை கால் இவைகளினின்றும் பிராமணன் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரன் இவர்களைக்கிரமமாக வுண்டுபண்ணினார்.

௩௨—அந்தப்பிரம்மாவானவர்தன்னுடையதேகத்தைஇரண்டுகண்டமாக்கி ஒன்று ஸ்த்திரியாகவும் ஒன்றுபுருஷனாகவும் ஆகிஅந்த ஸ்த்திரியினிடத்தில் அந்தப்புருஷனாகியதானே புணர்ந்து விராட்புருஷனையுண்டுபண்ணினார்.

௩௩—அந்தவிராட்புருஷனும் தவஞ்செய்து இந்தவுலகத்தைவிசேஷமா சிருஷ்டிக்கும்பொருட்டு யாதொருவனை யுண்டுபண்ணினாரோ அவன் நானென்றறியுங்கள்.

௩௪—நானும் அநேகபிராணிகளைச்சிருட்டிக்க மநமுள்ளவனாய் யாவருஞ்செய்தற்கரிய தவத்தைச்செய்து பிராணிகளைச் சிருஷ்டிக்கவல்லமையுள்ள மேற்சொல்லப்போகிற பிரஜாபதிகளானபத்துமகரிஷிகளைச்சிருஷ்டித்தேன்.

௩௫—அவர்கள் மரீசி அத்திரி அங்கிரசு புலத்தியன் புலகன் கிரது பிரசேதசு வசிஷ்டன் பிருகு நாரதன் ஆகப்பதின்மர்கள்.

௩௬—மிகுந்தகாந்தியுள்ள இந்தப்பிரஜாபதிகள்வேறான ஏழுமநுக்களையும் தேவர்களையும் சுவர்க்காதிலோகங்களையும் காந்தருவர்களையும் தபசிகளான மஹாமுநிவர்களையும் உண்டுபண்ணினார்.

௩௭—இந்தப்பிரஜாபதிகள் யக்ஷாள் வாசுகிமுதலிய நாகர்கள் அலகர்த்தன்முதலியசர்ப்பங்கள் கருடன்முதலிய இராக்கதர் பைசாசர் அப்ஸராள் அசுரர்கள் பக்ஷிகள் பிதுர்க்களின்பலவிதகூட்டங்கள்.

௩௮—மின்னல் இடி மேகம் இந்திரதநுசு தூமகேது புகைப்ப முதலிய உற்பாதங்கள்.

௩௯—கின்னரர் வானரர்கள் மீன்கள் பலபலசாதியான பக்ஷிகள் பசுக்கள் மிருகங்கள் மனிதர்கள் இரண்டுபக்கத்திலும் பற்களுள்ள புலிமுதலியவைகள்.

௪0—புழு உலண்டுபூச்சி விளக்கிணைப்பூச்சி எட்டுக்காற்பூச்சி ஈ முகடு வால்கொசு நானுபேத விருக்ஷங்கள்.

௪௧—இந்தப்படி மேற்சொல்லிய பிரசாபதிகள் என்னுடைய ஆக்கினையால் தபஞ்செய்து பிராணிகளின் கருமத்துக்குத்தக்கபடி தாபரசங்கம ஜநநத்தைச் சிருஷ்டித்தார்கள்.

௪௨—இந்தப்பிராணிகளுடைய உற்பத்திக்கிரமத்தையும் அவற்றின்செய்கையையும் உமக்குநான்சொல்லுகிறேன்.

## உர்ப்பத்திக்கிரமம்.

௪௩—பசுக்கள் மிருகங்கள் இருபுறம்பல்லுள்ள புலிமுதலியவைகள் இராக்கதர் பைசாசர் மனிதர் இவைகள் சராயுவென்னும் கருப்பப்பையில் ஜனித்து அதனோடுபிறக்கிறதுகள்.

௪௪—பலவிதபட்சிகளும் தண்ணீரிலுண்டாகிறமுதலைகள் ஆமைகள் மச்சங்கள் இவைமுதலான செந்துக்களும் கரையிலுண்டாகிற ஓணன்முதலியவைகளும் முட்டையாலுண்டாகின்றன.

௪௫—வால்கொசு எட்டுக்காற்பூச்சி ஈ மோட்டுப்பூச்சி இவைகள் புழுக்கத்தாலுண்டாகின்றன இதற்கொத்த புழு எறும்பு முதலியவைகள் உஷ்ணத்தாலுண்டாகின்றன.

௪௬—விருட்சங்கள் வித்தினாலும் கிளைகளாலும் பூமியைப்பிளந்துஉளர்த்தமுகமாகவுண்டாகின்றன இந்தவிருட்சங்களின்பேதமான புடல முதலியசில கொடிகளும் பலநெல்லுமுதலிய பயிர்களும் பலன்கொடுத்தபின்பு அழிந்துபோகின்றன.

௪எ—பூவாமற்காய்க்கிற அத்திமுதலிய சிலவிருட்சங்களுக்கு வனஸ்பதியென்றுபெயர் பூவையுடைத்தானதுகளாகவும் பூவும்பலத்தையுமுடைத்தானதுகளாகவும் விருட்சங்கள் இரண்டுவிதமாக விருக்கின்றன.

௪அ—சிலசெடிகள் கொத்துக்கொத்தாயுண்டாகின்றன சிலசெடிகள் தூருக வுண்டாகின்றன புற்கள் கோரைகள் கொடிகள் இலைகள் வித்திறுலும் கொடிகளாலு முண்டாகின்றன.

௪௯—பாபகர்மத்துக்குக் காரணமாகிய அநேகரூபமுள்ள தமோகுணத்தினலே சூழப்பட்ட இந்தத்தாவரசாதிகள் உள்ளறிவுள்ளதாய் சுகதுக்கங்களுடன் கூடியிருக்கின்றன.

௫0—பிரமவுற்பத்திமுதல் விருக்ஷவுற்பத்திவரையில் கோரமான சம்சாரசக்கிரத்தின் உற்பத்திசொல்லப்பட்டன.

## தினப்பிரளயகாலமுணர்த்தல்.

௫க—அந்தப்பிரம்மாவானவர் இந்தப்பிரகாரம் இவ்வுலகமெல்லாவற்றையும் என்னையுஞ் சிருஷ்டித்து தனதுபகல் முடிந்தவுடன் இந்தவுலகத்தைப் பிரளயத்தோடு கூட்டித் தானும் அந்தரத்தானத்தையடைகிறுர்.

௫உ—அந்தப்பிரம்மாவானவர் எப்போதுபின்னும் இவ்வுலகத்தைச்சிருஷ்டிக்க மநமுள்ளவராகிறுரோ அப்போது இந்தவுலகமுண்டாகின்றது எப்போதுஅதனையழிக்க மநமுள்ளவராகிக் கண்ணுறங்குகிறுரோ அப்போதுஅழிகின்றது.

௫௩—அவர் கண்ணுறங்கும்போது கர்மத்தினலே தேகமெடுத்திருக்கிற பிராணிகள் அந்தக்கர்மத்தினின்றும்விலகி ஸ்தூலதேகமில்லாதிருக்கிறுர்கள். மநதும் காரியமில்லாமலிருக்கின்றது.

## மகாப்பிரளயமுணர்த்தல்.

௫௪—இந்தப்படிபிரம்மாவின் வயதுமுடிந்தவுடன் சர்வாந்தி

ரியாமியான பரமாத்துமாவினிடத்தில் பிரம்மாமுதலிய சகலபிராணிகளும் ஆகாசாதிபூதங்களும் எப்போது லயத்தை அடைகின்றனவோ அப்போது அந்தப்பரமாத்துமாவானவர் சகலபிராணிகளையும் சுகமாக உதரத்தில்வைத்துக்கொண்டு கண்ணுறங்குகிறவர்போல சுகத்தையடைந்திருக்கிறார்.

## ஜீவோத்கிரமணம்.

ருரு—ஒருஜீவன் தமோகுணத்தினால் சூழப்பட்டவனாய் பஞ்சேந்திரியத்தோடுகூடிய ஒருசரீரமெடுத்து நெடுங்காலமிருந்து எப்போது சுவாசப்பிரசுவாசமுதலிய காரியங்களைச்செய்ய சக்தனாகவில்லையோ அப்போது ஸ்தூலதேகத்தைவிட்டு சூட்சுமரூபத்தோடுவெளிப்படுகிறான்.

## தேகாந்தரப்பிராப்தி.

ருசு—எப்போது அந்தச்சீவன்* புரியஷ்டகத்தோடுகூடினவனாய் தாவரசங்கமபீஜத்தை அடைகிறானோ அப்போது அவனுக்குத் தூலசரீரமுண்டாகின்றது.

ருஎ—அந்தப்பிரம்மாவானவர்இந்தப்படி தன்விழித்தலினாலே இந்தத்தாவரசங்கமத்தை யுண்டுபண்ணியும் உறங்குதலினாலே அழித்தும் தானழிவில்லாமலேயிருக்கிறார்.

ருஅ—அந்தப்பிரம்மாவானவர் இந்தச்சாஸ்திரத்தை உண்டுபண்ணி விதிப்படி எனக்குமுன்னம் ஓதுவித்தார் யானும் மரீசிமுதலான ரிஷிகளுக்கு ஓதுவித்தேன்.

ருகூ—இந்தச்சாஸ்திரத்தை என்னிடத்தினின்று நன்றாயோதியு

---

* புரியஷ்டகமாவது—பஞ்சமகாபூதம்-பஞ்சவிந்திரியம்-மனது-புத்தி-ஐந்மாந்தரவாசனை -கர்மம் - பிராணவாயு - அவித்தை- ஆக-அ.

ணர்ந்த இந்தப்பிருகுமஹரிஷியுங்களுக்குமுழுதுஞ்சொல்லுவார்

௬0—அதன்பின்பு மநுப்பிரஜாபதியினால் அந்தப்படி நியமிக்கப்பட்ட பிருகுமஹாமுநியானவர் அந்தரிஷிகளைப்பார்த்து கேளுங்களென்று சந்தோஷித்துடன் சொல்லத்தொடங்கினார்.

௬௧—பிரம்மவம்சத்திற்பிறந்த இந்தமநுப்பிரசாபதியின் வம்சத்திற்பிறந்த மேற்சொல்லப்போகிற ஆறுமநுக்களும் தன்தன் அதிகாரகாலத்தில் மிகுந்த காந்தியுள்ளவர்களாய் பிராணிகளைச்சிருஷ்டிக்கிறார்கள்.

௬௨—அந்தமநுக்களாவார் சுவாரோசிஷன் உத்தமன் தாமசன் ரைவதன் சாக்ஷூஷன் மிகுந்தகாந்தியுள்ள வைவஸ்வதன் ஆகிய இவர்களாறுவர்.

௬௩—இந்தஆறுவரும் சுவாயம்புமநுவும் தன்தன் அதிகாரகாலத்தில் பிரசைகளையுண்டுபண்ணிக் காத்துவருகிறார்கள்.

## காலத்தின்கணக்கையுணர்த்துதல்.

௬௪—இமை பதினெட்டுகொண்டது காஷ்டை காஷ்டை முப்பதுகொண்டது கலை கலைமுப்பதுகொண்டது முகூர்த்தம் முகூர்த்தமுப்பதுகொண்டது ஓரிராப்பகல்.

௬௫—மனிதர்களுக்கும் தேவர்களுக்கும் சூரியன் இராப்பகல்களை பகுக்கிறான் அதில்இரவு உறங்குகிறதற்கும் பகல் தொழில்செய்கிறதற்கும் பகுத்திருக்கின்றது.

௬௬—இராப்பகல் முப்பதுகொண்டதுமனிதர்களுக்கொருமாதம் அதில் பதினைந்துநாள் கிருஷ்ணபக்ஷம் பதினைந்துநாள் சுக்கிலபக்ஷம் இந்த இரண்டுபக்ஷமுங்கூடிய ஒருமாதம் பிதுர்க்களுக்கு ஓரிராப்பகல் அதில்கிருஷ்ணபக்ஷம்பகல் சுக்கிலபக்ஷம்இரவு.

௬௭—மனிதர்களின்பனிரண்டுமாதஞ்கூடிய ஒருவருஷம் தேவ

ர்களுக்கு ஓரிராப்பகல் அதில் தைமாதம்முதல் ஆனிமாதம்வரையி
ல் உத்தராயணமாகிய இவ்வாறுமாதங்களும் பகல் ஆடிமாதம்முத
ல் மார்கழிமாதவரையில் தக்ஷிணாயனமாகிய இவ்வாறுமாதங்களு
ம்இரவு இந்த இராப்பகல் முப்பதுகொண்டது ஒருமாதம் இதுப
ன்னிரண்டுகொண்டது ஒருவருஷம்.

௬அ—பிரமனது இராப்பகலின்கணக்கை யறியும்பொருட்டு
யுகங்களின்கணக்கைக் கிரமமாகச்சொல்லுகிறேன் கேளுங்கள்.

௬௯—தேவவருஷம் நாலாயிரங்கொண்டது கிரதயுகம்அதற்கு
முன் வருஷம் நானூறுகொண்டது சந்தியென்றுசொல்லப்பட்டவி
டியற்காலம் அப்படியே நானூறுகொண்டது சந்தியாம்சமென்
றுசொல்லப்பட்ட அஸ்த்தமனகாலம் ஆக நாலாயிரத்தெண்ணூ
றுதேவவருஷம்.

எ0—மற்றமூன்றுயுகங்களில் விடியற்காலவருஷத்தி லொருநூ
றும் அஸ்த்தமனகாலவருஷத்தில் ஒருநூறும் யுகவருஷத்தில் ஆயி
ரமும் குறைந்துவருகின்றன அவையாவன திரேதாயுகவருஷம்மூ
வாயிரத்தறுநூறு துவாபரயுகவருஷம் இரண்டாயிரத்து நானூறு
கலியுகவருஷம் ஆயிரத்திருநூறு.

எக—தேவவருஷத்தால் பன்னீராயிரவருஷகணக்குள்ள இந்த
நாலுயுகமும் ஒருதரந்திரும்பினால் தேவர்களுக்குஒருயுகம்.

எஉ—தேவர்களின்யுகம் ஆயிரமானால் பிரமனுக்கு ஒருபகல் இ
ரவும் அவ்வளவினையுடையதுதான்.

எ௩—ஆயிரந்தேவயுகக்கணக்குள்ள அந்தப்பிரமனுக்கு அந்தப்
பகலை புண்ணிய ஹேதுவாகவும் அந்தக்கணக்குள்ள இரவைச்சொ
ப்பனகாலமாகவும் இராப்பகல் கணக்கறிந்தவர்கள் சொல்லுகி
றார்கள்.

எ௪—அந்தப்பிரம்மாவானவர் அந்தஇரவின்முடிவில் விழித்து

க்கொண்டு சத்தாயும் அசத்தாயுமிருக்கிறமநலத பூலோக புவர்லோக சுவர்லோகமாகிய இந்தவுலகத்தைச்சிருஷ்டிக்கவேண்டுமென்னு மிச்சையுடன் கூட்டுகிருர். தினப்பிரளயத்தில் இந்த மூன்றுலகமாத்திரம் அழிகின்றதல்லவா.

எரு—அந்தமநதானது பிரமன் இச்சையினுலே ஏவப்பட்டதாகக்கொண்டு தன்னிடத்தில்நின்றும் மஹா ஆகாசத்தை யுண்டுபண்ணுகின்றது. அந்த ஆகாசத்துக்கு சப்த்தம் குணமென்றுசொல்லுகிருர்கள்.

எசு—அந்த ஆகாசத்தினின்றும் சகலவாசனையுமுள்ளதாயும் பரிசுத்தமாயும் பலமுள்ளதாயும் இருக்கிற வாயுவுண்டாகின்றது. அதன்குணம் பரிசமென்று அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது.

எஎ—அந்தவாயுவினின்றும் ஒளியுள்ளதாயும் இருளைப்போக்குகின்றதாயும் இருக்கிற தேயுவுண்டாகின்றது. அதன்குணம் உருவம் என்றுசொல்லப்படுகின்றது.

எஅ—அந்தத்தேயுவினின்றும் அப்பு உண்டாகின்றது. அதன் குணம் இரதம். அந்தச்சலத்தினின்றும் பிரிதிவி யுண்டாகின்றது. அதன்குணம் கந்தம் இதுதான் தினப்பிரளயத்தில்ஆதிசிருஷ்டி.

எகூ—பன்னீராயிர தேவவருஷக்கணக்குள்ள தேவயுகம் முன்சொல்லப்பட்டதல்லவா. அது எழுபத்தொருதரந் திரும்பினுல் ஒருமநுவுக்கு சிருஷ்டிக்கும் அதிகாரகாலமுடிகிறதான மன்வந்தரம்என்று சாஸ்திரத்தில் சொல்லப்படுகின்றது.

அ0—இந்தப்படி மநுக்களின் அதிகாரகாலங்களான மநுவந்தரங்களையும்சிருஷ்டியையும் சம்ஹாரத்தையும் அளவற்றதாக பிரமனுனவர் விளையாடுகிறவர்போல் அடிக்கடிசெய்கிருர்.

அக—கிரதயுகத்தில் தருமமுஞ் சத்தியமும் நாலுகுபாதமாக

விருத்தி அதில் மானுடர்களை அதர்மத்தினுலுண்டாகிற துன்பம் பீடிக்கிறதில்லை.

அஉ—மற்றயுகங்களிலே களவு பொய் வஞ்சகம் இவைகளினுல்அதர்மமாகச்சம்பாதித்த பொருள் கல்வி இவைமுதலானவையால் தருமமும் சத்தியமும் ஒவ்வொருபாதமாகக் குறைகின்றன.

அங—கிரதயுகத்தில் மனிதர்கள் அதர்ம்மமில்லாமையால் நோயற்றவர்களாயும் இஷ்டசித்தி யடைகிறவர்களாயும் சுபாவமாய் நானூறுவருஷம் ஜீவிக்கிறவர்களாயும் இருக்கிருர்கள். தவமுதலானவையால் இதற்கு மேற்பட்டவயதுள்ளவர்களாயு மிருப்பார்கள். மற்றயுகங்களில் அந்த சுபாவமான நானூறுவயதில் ஒவ்வொரு நூறுவரிசையாய்க் குறைந்துபோகின்றது.

அச—மனிதர்களுக்கு வேதத்திற் சொல்லப்பட்ட ஆயுளும் இஷ்டசித்தியும் பிராமணருடைய சாபாநுக்கிரகங்களும் தருமத்துக்குத்தக்கபடி யுகந்தோறும் பலிக்கின்றன.

அரு—கிரதயுகத்தில் தருமம் வேறுகவும் திரேதாயுகத்தின் தருமம் வேறுகவும் துவாபரயுகத்தின்தருமம் வேறுகவும் கலியுகத்தின் தருமம் வேறுகவும் யுகத்தின்குறைவுக்குத்தக்கபடி மனிதர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன.

அசா—அதாவது கிரதயுகத்தில் தவமும் திரேதாயுகத்தில் ஆத்துமகியானமும் துவாபரயுகத்தில் எக்கியமும் கலியுகத்தில் தானமும் பெருப்பாலுமுக்கியதருமமாகவிதிக்கப்பட்டிருக்கின்றன.

அஎ—அந்தப்பிரம்மாவானவர் இந்தவுலகத்தைக் காப்பாற்றுதற்காக தன்முகம் தோள் துடை பாதம் இவைகளினின்று முண்டான பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரவருணத்தாருக்கு இம்மைக்கு மறுமைக்கு முபயோகமான கருமங்களைத் தனித்தனியாகப் பகுத்தார்.

அஅ—பிராமணனுக்கு ஓதுவித்தல் ஓதல் எக்கியஞ்செய்தல் எக்கியஞ்செய்வித்தல் தானங்கொடுத்தல் தானம்வாங்குதல் ஆகிய இவ்வாறுதொழிலையும் ஏற்படுத்தினார்.

அகூ—க்ஷத்திரியனுக்கு பிரஜைகளைத் தருமமாகக்காத்தல் தானங்கொடுத்தல் வேதமோதுதல் பாட்டு கூத்து ஸ்த்திரிமுதலியவிஷயங்களில் மநஞ்செல்லாமை இவைநான்கையும் ஏற்படுத்தினார். எக்கியஞ்செய்தல் முதலான தருமகாரியங்களும் அவனுக்குண்டு.

கூ0—வைசியனுக்கு பசுவைக்காப்பாற்றுதல் தானங்கொடுத்தல் வேதமோதுதல் சலத்திலும்பூமியிலுமுண்டான இரத்தினம்நெல்லுமுதலியவைகளின் வியாபாரஞ்செய்தல் வட்டிவாங்குதல் பயிரிடுதல் இவ்வாறையும் ஏற்படுத்தினார்.

கூக—சூத்திரனுக்கு இந்தமூன்றுவருணத்தாருக்கும் பொறாமையின்றி பணிசெய்வதை முக்கியமானதருமமா ஏற்படுத்தினார். இதனால் அவனுக்கு தானமுதலியவையு முண்டென்று தோன்றுகின்றது.

கூஉ—புருடன்தேகமே பரிசுத்தம் அதில் தொப்புளுக்குமேல் அதிகபரிசுத்தம் ஆகையால் அந்தப்பிரம்மாவின்முகம் மிகவும்பரிசுத்தமாயிருக்கின்றது.

கூங—அந்தப்பிரம்மாவின் முகத்திற்பிறந்ததாலும் வேதத்தைதரிக்கிறதினாலும் க்ஷத்திரியாதிவருணத்தாருக்கு தருமத்தைஉபதேசிக்கிறதினாலும் இந்தவுலகத்தில் பிராமணன் தருமமா உயர்ந்திருக்கிறான்.

கூச—அந்தப்பிராமணனை சுயம்புவான பிரம்மாவானவர்தேவபிதுர்க்களுக்கு எக்கியம் சிராத்தமுதலியவைகளால் திருப்திசெய்யும்பொருட்டும் மற்றவருணத்தாரை தர்ம்மோபதேசஞ் செய்து இரக்ஷிக்கும்பொருட்டும் தன்முகத்தில் நின்றும் தவஞ்செய்து முன்னர் உண்டுபண்ணினாரல்லவா.

கூடு—எந்தப்பிராமணன் வாயினாலேசொல்லப்பட்ட மந்திரப லத்தினாலே தேவர்களும் பிதுர்க்களும் தன்றன் அவிற்பாகங்களை அடைகிறார்களோ அந்தப்பிராமணனைவிட எந்தப்பிராணி யுயர்ந் திருக்கின்றது.

கூசு—சராசரங்களுக்குள் பிராணனுள்ள புழுமுதலியவுயர்ந்த ன அவைகளைப்பார்க்கிலும் அறிவோடுஜீவிக்கிற பசுமுதலியவையு யர்ந்தன அவற்றிலும் மனிதர்கள் உயர்ந்தவர் அவர்களினும் வேத மோதும் அந்தணர்கள் உயர்ந்தவர்.

கூஎ—அவரினும் வேதப்பொருளையறிந்த பண்டிதர்கள் உயர் ந்தவர் அவரினும் விதிவிலக்குகளை நிச்சயமாயறிந்தவர்கள் உயர்ந்த வர் அவரினும் விலக்கியவற்றையொழித்து விதித்தனவற்றைசெய் பவர்கள்உயர்ந்தவர் அவரினும் விருப்புவெறுப்பின்றி பிரமத்தை யறியும் ஞாநிகள்உயர்ந்தவர்.

கூஅ—பிராமணன்பிறப்பானது தருமத்தின் அழிவில்லாத உரு வமாகவிருக்கின்றது தருமம்விளங்கும்பொருட்டு உற்பவித்தஅந்த ப்பிராமணன் ஞானத்தினாலே மோக்ஷத்திற்குரியவனாகிறான்.

கூகூ—பூமியிற்பிறந்திருக்கிற பிராமணன் பெருமைபெற்றவ னாய் சகலவருணத்தாருடைய தருமமென்னும் பொக்கிஷத்தை அரசன்போற் காப்பாற்றுகிறான்.

க00—பிராமணன் முதல்வருணத்தானானதாலும் பிரம்மாவின் முகமாகிய உயர்ந்தவிடத்திற்பிறந்ததினாலும் இந்தவுலகத்தில் உ ண்டாயிருக்கிற சகலவருணத்தாருடையபொருள்களையும் தானம் வாங்க அவனேபிரபுவாகிறான்.

க0க—ஆதலால் பிராமணன் ஒருவரிடத்தில் தானம்வாங்கினா லும் தன்பொருளையே சாப்பிடுகிறான் தன் வஸ்திரத்தையே

உடுத்துகிறான் தன்சொத்தையே தானஞ்செய்கிறான் மற்றவர்கள் அவன்றயையினாலேயே அவற்றையனுபவிக்கிறார்கள்.

க0உ—அந்தப்பிராமணனுடையவும் மற்றவர்களுடையவும் கருமாநுஷ்டானங்களைப் பகுத்தறிவதற்காக இந்தச் சாஸ்திரத்தை யோனியிற்பிறவாத புத்திசாலியான சுவாயம்பு மநுவானவர் பிரசித்தப்படுத்தினார்.

க0ங—இந்தச்சாஸ்திரத்தின் பயனையறிந்த பிராமணனாலே முயற்சியுடன் இந்தச்சாஸ்திரம் ஓதத்தக்கது சிஷ்ர்களுக்கும் நியாயமாய் ஓதுவிக்கத்தக்கது. மற்றவருணத்தான் இதை ஓதுவிக்கக் கூடாது.

க0ச—விரதாநுஷ்டானத்துடன் இந்தச் சாஸ்திரத்தை ஓதுகின்றபிராமணன் மநோவாக்குக் காயங்களினாலுண்டாகும் பாவங்களோடு ஒருபோதும் சேருகிறானில்லை.

க0ரு—இந்தச்சாஸ்திரத்தையோதுகின்ற பிராமணன் ஒருவனாயிருந்தபோதிலும் தன்பந்தியிலிருக்கும் யாவரையும் பரிசுத்தப் படுத்துகிறான். தன்வம்சத்திலுள்ள முன்னேழுபின்னேழு வம்சத்தாரையும் நல்லகதியை யடைவிக்கிறான் அவன் இந்தப்பூமிமுழுதுந்தா னம்வாங்க யோக்கியனாகிறான்.

க0சா—இந்தச்சாஸ்திரம் ஓதுகின்றவர்களுக்கு மங்களத்தையும் புத்தியையும் கீர்த்தியையும் ஆயுளையும் மேலான மோக்ஷத்தையும் உண்டுபண்ணுகின்றது.

க0எ—இந்தச்சாஸ்திரத்தில் எல்லாதருமங்களும் கர்மங்களின்குணதோஷங்களும் நான்குவருணத்தாருக்கும் தொன்றுதொட்டுவந்த ஒழுக்கங்களும் சொல்லியிருக்கின்றது. ௱.

க0அ—வேதத்திலும் ஸ்மிருதியிலும் சொல்லப்பட்ட ஆசார

மே எல்லோருக்கும் முக்கியதர்ம்மமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் தான்சுகப்பட இச்சையுள்ளவன் இந்தச்சாஸ்திரத்தில் முயற்சியுள்ளவனாயிருக்கவேண்டியது.

க0கூ—ஒழுக்கத்தைவிட்ட பிராமணனுக்கு வேதத்திற்சொல்லியபலன் கிடைப்பதில்லை. ஒழுக்கமுடைய பிராமணனுக்கு சகலபலனும் குலறவின்றிக்கிடைக்கும்.

கக0—முநிவர்கள் ஒழுக்கத்தினாலே தருமத்தின் பலனையறிந்து எல்லாதவத்திற்கும் ஒழுக்கத்தையே முதற்காரணமாகச் சொல்லுகிறார்கள்.

## பொருட்டொகை.

கக௧—இந்தச்சாஸ்திரத்தில் உலகத்தின்உற்பத்தியையும்-சாதகர்ம்மமுதலிய சமஸ்க்காரங்களையும்-பிரமசாரிகளின் விரதாநுஷ்டானங்களையும்- குருபணிவிடையையும்-வேதமுற்றுமோதியபின் செய்யவேண்டிய மங்களஸ்நாநத்தின்விதியையும்.

ககஉ—விவாகத்தையும்-விவாகபேதங்களையும்- பஞ்சமஹாஎக்கியத்தின்விதியையும்-சிரார்த்தத்தின் பழமையான விதியையும்.

ககரு—எல்லாருடைய ஜீவநோபாயத்தையும்-கிரகஸ்தன் தர்ம்மவிரதங்களையும்-சாப்பிடத்தக்கதையும்-சாப்பிடத்தகாததையும்-பிறப்பிறப்பினாலுண்டாகும் தீட்டின்சுத்தியையும்- சுவர்ன்னமுதலிய பஞ்சலோகத்தின்சுத்தியையும்.

ககச—ஸ்திரிகளின்தருமத்தையும்-வானப்பிரஸ்தரின்தருமத்தையும்-மோக்ஷத்திற்குக்காரணமான சந்நியாசத்தையும்-அரசர்களின் தருமத்தையும்- கடன்கோடன்முதலிய விவகாரத்தின் தீர்மானத்தையும்.

ககரு—சாட்சிவிசாரணையில்கிரமத்தையும்- மாதராடவர் தரும

த்தையும்-விபாகத்தின்கிரமத்தையும்-சூதாடுவதையும்- திருடர்முத லானவரின் தண்டனையையும்.

ககசு—வைசியசூத்திரர்தருமத்தையும்- அநுலோமர் முதலிய சங்கரசாதியி னுற்பத்திக்கிரமத்தையும்- சகலவருணத்தாருக்கும் ஆ பத்துக்காலத்துக்குரியதருமத்தையும்-பிராயச்சித்தத்தையும்.

ககஎ—வேறுதேகமெடுப்பதற்கேதுவானகருமத்தையும்-உத்தம மத்திம அதமரூபமான சுபாசுபகர்மத்தின்பிரிவையும்-மோக்ஷமா ர்க்கமான ஆத்மகியானத்தையும் - குணதோஷங்களை பகுத்தறிவ தையும்.

ககஅ—பழமையான தேசவொழுக்கத்தையும்-சாதியொழுக்கத் தையும்-குலவொழுக்கத்தையும்- வேதங்களைஒப்புக்கொள்ளாத பா ஷிண்டர்களின் ஒழுக்கத்தையும் -மநுப்பிரசாபதியானவர் இந்தச் சாஸ்திரத்தில் வரிசையாகச்சொல்லியிருக்கிறார்.

கககூ—இந்தமநுப்பிரசாபதியானவர் என்னாலே கேழ்க்கப்பட் டு இந்தச்சாஸ்த்திரத்தை எனக்கெவ்விதமாகச்சொன்னாரோ அவ்வி தமாகவே உங்களுக்கு நான்சரியாகச்சொல்லுகிறேன் கேளுங்கள்.

முதலத்தியாயம்-முற்றிற்று.

இரண்டாவது

# அத்தியாயம்.

முதலாவது—மேலானபரமாத்துமகியானமாகிற தருமத்தைய றியும்பொருட்டு சகத்துக்குக்காரணமாகிய பிரமசுவரூபத்தை மு தலத்தியாயத்தாற்சொல்லி அதற்குறுப்பாகிய சாதகர்மமுதலிய த ருமத்தை சொல்லத்தொடங்கினார். வேதமறிந்தவர்களாயும் தர்ம்ம வான்களாயும் எப்போதுங்காமக்குரோத மில்லாதவர்களாயும் இரு

க்கிற பிராமணர்களாலே யாதொருதருமமானது மநமகிழ்ச்சியோ டு அநுஷ்டிக்கப்பட்டிருக்கிறதோ அந்தத்தருமத்தைச் சொல்லு கிறேன்கேளுங்கள்.

உ—சுவர்க்கமுதலிய ஒருபலத்தைவிரும்பி தவமுதலிய அறத் தைச்செய்தல்யாவருக்குநன்றன்று. ஆனால் அதுவிரும்பாமை இவ் வுலகத்திலரிது. வேதமோதுதலும் எக்கியஞ்செய்தலுங் காமியமா கவேயிருக்கின்றது. ௩.

௩—இந்தச்செய்கையினாலே இந்தப்பயன் அடையப்படுகிறது என்றுசொல்வது சங்கற்பம் அதனாலே இச்சையுண்டாகிறது அத னாலே எக்கியங்களையும் விரதங்களையும் நியமங்களையும் ஒழுக்கங்க ளைப் செய்கிறார்கள்.

௪—இச்சையை நீக்கினவனுக்கு எந்தநூலிலும் உலகத்தில் எப் பொழுதும் எவ்விதசெய்கையும் காணப்படவில்லை. கொஞ்சமாவ து எந்தச்செய்கையைச்செய்கிறானோ அதுமுழுதும் காமத்தின் செய்கைதான்.

௫—எக்கியாதிகருமங்களை பலத்தைவிரும்பாமல் செய்பவன் மோக்ஷத்தையடைகிறான் இம்மையிலும்தானினைத்தபடி சர்வாபீ ஷ்டங்களையும் அடைகிறான்.

௬—இருக்குமுதலிய நான்குவேதங்களும் இந்தவேதமறிந்த இ ருடிகளின் ஸ்மிருதியும் அவர்களின் அநுஷ்டானமும் சாதுக்களின் ஒழுக்கமும் தன்தன்மநதின்சந்தோஷமும் தருமத்துக்குக்காரண மாகவிருக்கின்றன.

எ—மநுப்பிரசாபதியினால் எந்தவருணத்தாருக்கு எந்தத்தரும ம்விதிக்கப்பட்டதோ அதுமுழுதும் வேதத்திற்சொல்லப்பட்டிரு க்கின்றது அவர் எல்லாவேதத்தின் பொருளையும் நன்றாக வறிந்தவ ரல்லவா.

அ—தெரிந்தவன் இந்தச்சாஸ்திரத்தை ஞானக்கண்ணினலறிந்து இதிற்சொல்லியிருக்கிற தருமங்களை வேதத்தினுற்சொல்லப்பட்டதாகவேயெண்ணி தன்தருமத்தை நடத்தக்கடவன்.

கூ—சுருதியிலும் ஸ்மிருதியிலும் சொல்லப்பட்ட தருமத்தை அநுஷ்டிக்கிறவன் இவ்வுலகத்தில் கீர்த்தியடைகிறுன்-இறந்தபின் ஒப்பற்ற சுவர்க்கசுகத்தையுமடைகிறுன்.

க0—வேதத்தை சுருதியென்றும் தருமசாஸ்திரத்தை ஸ்மிருதியென்றும் அறியத்தக்கது- அவ்விரண்டையும் விரோதமான தர்க்கசாஸ்திரயுக்தியைக்கொண்டு ஆக்ஷேபிக்கக்கூடாது அவற்றினுலே தருமம்விளங்குகிறதல்லவா.

கக—எவன் தருமத்திற்குக்காரணமான அவ்விரண்டையும் தர்க்கசாஸ்திரயுக்தியினுல் அவமானஞ்செய்கிருனே அவன் பெரியோர்களால் கர்மாநுஷ்டானத்தினின்றும்நீக்கத்தக்கவன்-வேதத்தைநிந்திப்பதால் தெய்வமில்லையென்று சொல்லுபவனுமாவான்.

கஉ—வேதம் ஸ்மிருதி பெரியோர்களநுட்டானம் தன்மநதின் சந்தோஷம் இந்தநான்கையும் தர்மத்துக்குஅடையாளமாகச்சொல்லுகிருர்கள்.

கரு—பொருள் காமம் இவைகளில் சம்பந்தப்படாதவர்களுக்கு தருமத்தினுபதேசம் விதிக்கப்படுறது- தருமத்தையறிய மநமுள்ளவர்களுக்கு வேதமே முக்கியப்பிரமாணமாகவிருக்கின்றது.

கச—எந்தவிஷயத்தில் வேதம் ஒன்றுக்கொன்று விரோதமாகவிருக்குமோ அந்தவிரண்டும் -தருமமாகவேசொல்லப்படுகின்றது; அந்தவிரண்டு தருமத்தையும் பெரியோர்தெளிவாகச் சொல்லியிருக்கிருர்கள்.

கரு—சூரியனுதயமானபின்பும் உதயமாதற்குமுன்பும் சூரியனும் நட்சத்திரமும் இல்லாதிருக்குங்காலத்தும் எக்கியஞ்செய்ய

வேண்டுமென்று வேதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது-ஆதலால் உதயமானபின்பு எக்கியம் ஓமம் பண்ணவேண்டுமென்று விதிக்கிறவேதத்துக்கும் உதயத்துக்குமுன்பு அவற்றைச் செய்யவேண்டுமென்று விதிக்கிறவேதத்திற்கும் ஒன்றுக்கொன்று விரோதமில்லை-ஏனெனில் அவ்விரண்டுந்தருமமாகவே சொல்லப்பட்டிருக்கின்றவதல்லவா.

௧௬—எவனுக்கு கருப்பாதானமுதல் தேகசமூஸ்க்காரம்வரையில் மந்திரங்களால் அநுஷ்டானம் விதிக்கப்பட்டிருக்கின்றதோ அந்தத்துவிஜனுக்கிந்த சாஸ்திரத்தை ஓதுதற்கதிகாரமுண்டு மற்றவர்களுக்கில்லை.

௧௭—சரஸ்வதியென்னும் திருஷித்துவதி என்னும் தேவநதிகளுடைய மத்தியப்பிரதேசமானது தேவர்களால் ஏற்படுத்தப்பட்ட பிரம்மாவர்த்ததேசமென்று சொல்லப்படும்.

௧௮—அந்தத்தேசத்தில் பெரியோர்கள் எப்போதும்வசிக்கின்றமையால் பிராமணாதிவருணத்தாருக்கும் சங்கரசாதிகளுக்கும்சிஷ்டாசாரமானது அநாதியாயவ்விடத்தினின்றுமுண்டாகிறது.

௧௯—குருக்ஷேத்திரம் மச்சதேசம் பாஞ்சாலதேசம் வடமதுரா இதுகள் பிர்மரிஷிகள்வசிக்கின்ற தேசங்கள்-இவைகள் பிர்மாவர்த்ததேசத்தின் சிறப்பிற்குக்கொஞ்சங்குறைந்திருக்கின்றன.

௨0—இந்தத்தேசங்களில் பிறந்தபிராமணனிடத்தினின்றும் சகலரும் தன்தன்தருமங்களை யறிந்துகொள்ளக்கடவர்கள்.

௨௧—இமோர்ப்புர்வதத்திற்கும் விஞ்சைபர்வதத்திற்கும் நடுவாயும் சரஸ்வதிநதி மறைந்த விசனசதேசத்திற்குக் கிழக்காயும் பிரயாகைக்குமேற்காயும்இருக்கிற இடமானது மத்தியதேசமென்று சொல்லப்படுகின்றது.

௨௨—கிழக்குசமுத்திரந்தொடங்கி மேற்குசமுத்திரம்வரையில்

மூன்சொன்ன மலைகளின் நடுப்பிரதேசமானது சாதுக்கள்வசிக்கிற ஆரியாவர்த்ததேசமென்று சொல்லப்படுகின்றது.

உ௩—கிருஷ்ணசாரமென்னு மானனது எந்தவிடத்தில் சுபாவமாய் சஞ்சரிக்கின்றதோ அந்தவிடந்தான் யாகஞ்செய்தற் குரியது. மற்றவிடம் அசுத்தமான மிலேச்சதேசமென்று சொல்லப்படும்.

உ௪—இப்படிப்பட்ட புண்ணியதேசங்களை த்விஜர்கள் வேறு தேசத்திற்பிறந்தவராயினும் வந்தடையவேண்டியது அல்லது சூத்திரன் ஊழியத்தொழிலைவிட வேறுவிர்த்திலைய எந்தவிடத்தில் லையமாட்டானோ அந்தவிடத்தில் வசிக்கத்தக்கது.

உ௫—இதுவரையில் ஜெகத்தினுற்பத்தியையும்- தருமத்திற்குக் காரணமான வேதசாஸ்திர புண்ணிய க்ஷேத்திரங்களையும்- உங்களுக்குச் சங்கிரகமாகச்சொன்னேன் இனி வர்ணாசிரம தருமத்லைதக் கேளுங்கள்.

உ௬—த்விஜாதிகளுக்கு வேதத்திற் சொல்லப்பட்டிருக்கிற பரிசுத்தமான மந்திரகர்மங்களினாலே கர்ப்பாதானமுதலான இம்மையில் சரீரத்தைப் பரிசுத்தம்பண்ணவும்,மறுமையில் புண்ணியலோகத்தைக் கொடுக்கவும், உரியதான சரீரசுத்தியானது செய்யத்தக்கது.

உ௭—கர்ப்பாதான மந்திரத்தாலும், சீமந்த ஓமத்தாலும், சாதகர்மம்-நாமகரணம்-அன்னப்பிராசனம்-சௌளம் - உபநயனம் இதுகளினாலும், த்விஜர்களுக்குச் சம்போகஞ்செய்யக்கூடாத தினத்தில் செய்ததனாற் றானுற்பத்தியானதோஷமும், மாதாவின் கர்ப்பத்தில்வசித்த தோஷமும், நீக்கப்படுகின்றது.

உ௮—வேதமோதுவதாலும் மதுமாம்சபக்ஷணஞ் செய்யாதிருக்கிற விரதாதிகளாலும்,ஔபாசன ஓமங்களினாலும், தேவ ரிஷி பிதுர் தர்ப்பணத்தினாலும், பஞ்சமஹா எக்கியத்தாலும்,அக்கினி

ஷ்டோமாதிகளினாலும், சரீரமானது மோக்ஷத்திற் குரியதாகச் செய்யப்படுகின்றது.

## சாதகர்ம்மாதிசம்ஸ்க்காரம்.

உகூ—தொப்புள் கொடியறுப்பதற்குமுன்னம் சாதகர்ம்மமென்னுஞ் சம்ஸ்க்காரம் புருஷனுக்குச் செய்யவேண்டியது. அப்போது அந்தக்குழந்தைக்கு-நெய்-தேன்-இவற்றில் சுவர்ன்னத்தை மந்திரத்தோடிழைத்து நாவிற்றடவவேண்டியது,

௩0—இந்தக்குழந்தைக்கு பிறந்த பத்தாவது அல்லது பன்னிரண்டாவதுதினத்தில் புண்ணியதிதியில் நல்லமுகூர்த்தத்தில் நல்லநட்சத்திரத்தில் நாமகரணஞ் செய்யவேண்டியது.

௩க—பிராமணனுக்கு மங்களத்தையும் க்ஷத்திரியனுக்கு பலத்தையும், வைசியனுக்கு பொருளையும் சூத்திரனுக்குத்தாழ்வையும் காட்டுகிறதான பெயரை இடவேண்டியது.

௩உ—பிராமணனுக்குச் சர்ம்மவென்பதையும், க்ஷத்திரியனுக்கு வர்ம்ம என்பதையும், வைசியனுக்கு பூதியென்பதையும், சூத்திரனுக்குத் தாசனென்பதையும்,தொடர்ப்பேராகஇடவேண்டியது

௩௩—ஸ்த்திரிகளுக்கு சுகமாகக் கூப்பிடத்தக்கதாயும், கொடுமையில்லாததாயும்,பிறிவான அர்த்தமுள்ளதாயும், மநோக்கியமாயும், மங்களமாயும், தீர்க்காக்ஷரத்தையுடையதாயும், ஆசீர்வாதத்தைக்கொடுக்கிறதாயுமிருக்கிற பெயரையிடவேண்டும்.

௩ச—குழந்தைபிறந்த நான்காவதுமாதத்தில் அந்தச்சிசுவை பிறந்தவீட்டினின்றும் வெளியிற்கொண்டுவந்து சூரியனுக்குக்காட்டவேண்டியது. ஆறுவதுமாதத்தில் அன்னப்பிராசனஞ் செய்விக்கவேண்டியது. அல்லது தங்கள்குலவழக்கப்படி மூன்றுவதுமாதந்தொடங்கி எப்போதாவது இவ்விரண்டையுஞ்செய்யலாம்.

௩ரு—துஜாதிகளுக்கு பிறந்தவருஷத்திலாவது, மூன்றுவது

வருஷத்திலாவது, வேதத்திற்சொன்னபடிதர்ம்மமாக சௌளகர்ம்மஞ்செய்யவேண்டியது.

௩௬—பிராமணனுக்கு கருப்பமானமுதல் எட்டாவதுவயதிலும், க்ஷத்திரியனுக்கு கருப்பமானதாமுதல் பதிறோராவதுவயதிலும், வைசியனுக்கு மேற்சொன்னபடி பன்னிரண்டாவதுவயதிலும் உபநயநஞ்செய்யவேண்டியது.

௩௭—பிரம்மதேஜஸ்ஸை விரும்புகிற பிராமணனுக்கு ஐந்தாவதுவயதிலும், பலத்தைவிரும்புகிற க்ஷத்திரியனுக்கு ஆறுவதுவயதிலும், பொருளைவிரும்புகிற வைசியனுக்கு எட்டாவதுவயதிலும், உபநயநஞ்செய்யத்தக்கது.

௩௮—பிராமணனுக்குப் பதினாறுவயதுவரையிலும், க்ஷத்திரியனுக்கு இருபத்திரண்டுவயதுவரையிலும், வைசியனுக்கு இருபத்துநாலு வயதுவரையிலும், உபநயநம் இரண்டாம்பக்ஷமாகச் செய்யலாம்.

௩௯—அதன்பின்பு இந்தமூன்றுவருணத்தாரும் மேற்சொல்லியகாலத்தில் உபநயநமுதலிய சமுஸ்க்காரஞ் செய்யப்படாதவர்களானால் காயத்திரிமந்திரத்தினின்றும் நீங்கினவர்களாயும், விராத்தியாளென்னும் பெயருள்ளவர்களாயும்,பெரியோர்களாலே ஸவைதிககாரியத்தினின்று நீக்கப்பட்டவர்களாயும், ஆகிறார்கள்.

௪௦—இப்படி அபரிசுத்தாளான இவர்களுக்கு வேதஞ்சொல்லிவைக்கக்கூடாது. கஷ்டகாலத்திலும் அவர்களிடத்தில் பெண்வாங்கவுங் கொடுக்கவுங்கூடாது.

௪௧—பிராமண-க்ஷத்திரிய-வைசிய-பிரம்மச்சாரிகள்-கறுப்புமான்-புள்ளிமான்-வெள்ளாடு-இவைகளின் தோலுகளை உத்தரியமாகவும் க்ஷணப்பனார் பட்டுநூல் செம்புலியாட்டின்மயிர் இவைகளா

ல் செய்யப்பட்டதை அரையுத்தரியமாகவும் வருணக்கிரமமாதரிக்கவேண்டியது.

சஉ—பிராமணனுக்கு மிஞ்சிப்புல்லினாலும் க்ஷத்திரியனுக்கு வில்லினாணையொத்த முறுவற்புல்லினாலும் வைசியனுக்கு க்ஷணப்பஞரினாலும் மேடுபள்ளமில்லாமல் மெல்லிதாப்பின்னிமூன்றுவடமா மேலனாஞாண்கட்டவேண்டியது.

சந—இந்தமூன்றும் அகப்படாதகாலத்தில் மேற்சொன்ன மூன்றுவருண பிரம்மச்சாரிகளுக்கும் கிரமமாக தருப்பை நாணல் சவட்டைக்கோரை இதுகளினால் மூன்றுவடம் அல்லது தங்கள்குலவழக்கப்படி ஐந்துவடமாவது ஒருமுடிபுடன் கட்டவேண்டியது.

சச—பிராமணனுக்குப் பஞ்சிநூலாலும் க்ஷத்திரியனுக்கு க்ஷணப்பநூலாலும் வைசியனுக்கு வெள்ளாட்டின்மயிராலும் மூன்றுவடமாகத்தோளில் பூணுநூல்தரிக்கவேண்டியது.

சரு—பிராமணனுக்கு வில்வம்-பலாசம் இவ்விரண்டையும் க்ஷத்திரியனுக்கு ஆல்-கருங்காலி- இவ்விரண்டையும், வைசியனுக்கு இரவி - அத்தி - இவ்விரண்டையுந் தண்டமாக விதிக்கப்பட்டிருக்கின்றன ஆனால் இவ்விரண்டில் இஷ்டமானஒன்றைத்தான்தரிக்கவேண்டியது.

சசு—பிராமணன் பூமிமுதல் தன்றலையளவாகவும் க்ஷத்திரியன் நெற்றியளவாகவும்- வைசியன்மூக்களவாகவும்-தண்டத்தைத்தரிக்கவேண்டியது.

சஎ—இந்தத்தண்டங்கள் கோணலில்லாமலும் காயமில்லாமலும் பார்வைக்கு அழகாயும் மனிதர்களுக்குப்பயத்தை யுண்டுபண்ணுததாயும் அதனதன் தோலுகளோடு கூடினதாயும் நெருப்பினால் சுடப்படாததாயும் இருக்கவேண்டியது.

சஅ—அவரவர்களுககு இஷ்டமானவொருதண்டத்தை யெடுத்துக்கொண்டு சூரியனை நமஸ்காரஞ்செய்து அக்கினி வலஞ்செய்து மேற்சொல்லப்போகிறவிதிப்படி பிக்ஷையெடுக்கவேண்டியது

சகூ—பிரம்மச்சாரிகளான மூன்றுவருணத்தாரில் பிராமணன் பவதிபிக்ஷாந்தேகியென்றும், க்ஷத்திரியன்- பிக்ஷாம்பவதிதேகியென்றும்-வைசியன் -தேகிபிக்ஷாம்பவதியென்றும், வசனத்தைச்சொல்லி பிக்ஷைகேழ்க்கவேண்டியது.

ருo—உபநயநமானவுடனே அதன் அங்கபூதமான பிக்ஷையை தாயினிடத்திலாவது,அவள் து-தங்கை-தமக்கை-இவர்களிடத்திலாவது-தன்தமக்கையிடத்திலாவது-அல்லது-இவனிடத்தில் அன்புடையவரிடத்திலாவது முன்னம்வாங்கவேண்டியது.

ருக—இந்தவிதிப்படி மூன்றிடத்திற்குக் குறையாமல் தனக்குப்போதுமானமட்டும் பிக்ஷைவாங்கிக்கொண்டு அதைத்தன்குருவுக்கு நிவேதநஞ்செய்து கிழக்குமுகமாகவிருந்து ஆசமநஞ்செய்து புசிக்கவேண்டியது.

ருஉ—ஆயுளைவிரும்புகிறவன்-கிழக்குமுகமாயும்,கீர்த்தியைவிரும்புகிறவன்-தெற்குமுகமாயும், சம்பத்தைவிரும்புகிறவன்-மேற்குமுகமாயும், சத்தியத்தைவிரும்புகிறவன்-வடக்குமுகமாயும்,இருந்து புசிக்கவேண்டியது.

ருரு—த்விஜன் தினந்தோறும் சாப்பிடும்போது கைகால்சுத்திசெய்துகொண்டு ஆசமநம்செய்து அன்னத்தைப் பூசித்துப் பின்பு பரிஷேசனம்பண்ணி போசனம்பண்ணவேண்டியது-பின்பும் கண்-காது-மூக்கு - இவைகளைத்துடைத்து ஆசமநஞ்செய்யவேண்டியது.

ருச—தினந்தோறுஞ்சாப்பிடுகிற அன்னம்விஷ்ணுசொரூபமா

கையால் அதைநிந்தியாமல் பூசித்துச் சந்தோஷித்துடன் அன்னத்தைநன்றாகப்பார்த்துப்புகழ்ந்து புசிக்கவேண்டியது.

ருரு—அன்னத்தைப்பூசித்துப்புசித்தால் தயிரியம் பலன்இவைகளைக்கொடுக்கிறது நிந்தித்தால் அவ்விரண்டையும்அழித்துப்போடுகின்றது.

ருசு—தான்புசித்துமிகுந்த எச்சில்அன்னத்தை எவனுக்கும் இடக்கூடாது.இரவும்பகலு மிரண்டுவிசையன்றி புசிக்கப்போகாது அதிகமாகவும்புசிக்கலாகாது-புசிக்கும்போது மத்தியிலெழுந்திருந்தால் பின்னும் அந்த அன்னத்தைப்புசிக்கலாகாது. கைசுத்திபண்ணாமல் அசுத்தாளைப்பார்க்கலாகாது.

ருஎ—அதிகமாகப்புசித்தால் நோயையும்,ஆயுட்குறைவையும்,சுவர்க்காதிபோகக்குறைவையும், புண்ணியக்குறைவையும், உலகநிந்தையையும்,உண்டுபண்ணும்,ஆகையால் அதை நீக்கவேண்டியது.

ருஅ—விப்பிரன் பிரம்மதீர்த்தத்தினலாவது, காயதீர்த்தத்தினலாவது,தேவதீர்த்தத்தினலாவது, ஆசமநஞ் செய்யவேண்டியது. பிதுர்தீர்த்தத்தினலொருபோதுஞ் செய்யலாகாது.

ருகூ—பெருவிரலி னடுப்பிரதேசத்தை பிரம்மதீர்த்தமென்றும்,சுண்டிவிரலின் அடிப்பிரதேசத்தை காயதீர்த்தமென்றும், விரல்களினுனியை தேவதீர்த்தமென்றும், பெருவிரலுக்கும் ஆட்காட்டிவிரலுக்கும்,மத்தியை பிதுர்தீர்த்தமென்றும் சொல்லுகிறார்கள்.

சு0—முன்னம்ஜலத்தை மந்திரத்தோடுமூன்றுதரஞ் சாப்பிட்டுப் பின்புஜலத்தினல் வாயையிரண்டுவிசைத்துடைத்து பின்பு-கண் காது-மூக்கு-தோள்-மார்பு-தலை -இவைகளையுந் துடைக்கவேண்டியது-இதுதான் ஆசமநம்.

சுக—தருமந்தெரிந்தவனும் ஆசாரத்தைவிரும்புகிறவனும் மி

ருக்கிறவன்-சூடு-நுரை -இல்லாதஜலத்தினால் இரகசியமாய் கிழக்கு அல்லது வடக்குமுகமாக இருந்து ஆசமநஞ்செய்யவேண்டியது,

௬௨—பிராமணன் மார்புவரையில் போகத்தக்கஜலத்தினாலும் க்ஷத்திரியன்-கழுத்துவரையிற்போகத்தக்கஜலத்தினாலும்,வைசியன் உண்ணாக்குவரையிற் போகத்தக்கஜலத்தினாலும், சூத்திரன்-நாவினுமுதட்டினும் படத்தக்கஜலத்தினாலும்- ஆசமநஞ்செய்தால் பரிசுத்தனாகிறான்.

௬௩—த்விஜர்கள் உத்தரியத்தையாவது,பூணுநூலையாவது,இடது தோளிலும்,வலதுகையின்கீழிலும், போட்டுக்கொண்டால் உபவீதமென்றும்,வலதுதோளினும்,இடதுகையின்கீழும் போட்டுக்கொண்டால் பிராசியினாவீதமென்றும்,கண்டத்துமாலையாகப் போட்டுக்கொண்டால் நிவீதமென்றும்,சொல்லப்படுகின்றது.

௬௪—இந்த மூன்றுவருணப் பிரமச்சாரிகளும், அவரவர்கள் மிஞ்சி உத்தரீயம்-தண்டம்-பூணுநூல்-கமண்டலம் -இவைகள் அபரிசுத்தமானாலும்-பின்னமாகப்போனாலும்- தண்ணியிற்புதைத்துவிட்டுப் புதிதாய் அதனதன்மந்திரங்களால் கிரகித்துக் கொள்ளவேண்டியது.

௬௫—பிராமணன் -க்ஷத்திரியன்- வைசியன்-இவர்களுக்கு கிரமமாப்பதினாறு இருபத்திரண்டு இருபத்தினாலு இந்தவயதுகளில் கேசாந்தம் என்னும்விரதம்செய்யவேண்டியது.

௬௬—ஸ்திரிகளுக்கு இந்தச்சாத கர்மமுதலிய கர்ம்மங்கள்அந்தந்தக்காலத்தில் சரீரசுத்தியின்பொருட்டு வேதமந்திரமில்லாமல் உபநயநநீங்கலாகத்†தந்திரத்தினாலே செய்யவேண்டியது.

௬௭—ஸ்த்திரிகளுக்கு விவாகத்தை உபநயநமாகவும், பர்த்தா

† தந்திரமாவது-மந்திரமின்றிச்செய்யும் கிரியைகள்.

வுக்கு பணிவிடைசெய்வதைக் குருகுலத்தில் வேதமோதுவதாகவும் வீட்டைக்காப்பாற்றுவதை சமிதாதானமாகவும், சொல்லப்படுகிறது.

௬௮—துஜர்களுக்கு உபநயநவிதிசொல்லிமுடிந்தது. இரண்டாவது ஜெநநத்தை பிரகாசப்படுத்துவதாயும், புண்ணியமாயுமிருக்கிறசெய்கையை விவரமாகக்கேளுங்கள்.

௬௯—குரு-அல்லது தகப்பன்-சீடன்-அல்லது-புத்திரனுக்கு உபநயநஞ்செய்வித்து முதல் ஆசாரத்தையும்,சௌசத்தையும், சமிதாதாநத்தையும் - சந்தியாவந்தநத்தையும் - சொல்லிவைக்கவேண்டியது.

௭௦—வேதமோதப்போகிற சீடன்-சாஸ்திரப்படி ஆசமநஞ்செய்து பரிசுத்தமானவஸ்திரமுள்ளவனாய் இந்திரியக்கட்டுப்பாட்டுடன் வடக்கு-அல்லது - கிழக்குமுகமாக கைகளைக்கட்டிக்கொண்டு ஓதவேண்டியது.

௭௧—வேதமோதத் துவக்கும்போதும், முடிக்கும்போதும், சீஷன் குருவின்பாதங்களைத்தொட்டு நமஸ்காரஞ் செய்யவேண்டியது. ஓதும்போது இரண்டுகையுங்கட்டிக்கொள்ளவேண்டியது.அதற்குப் பிரம்மாஞ்சலியென்றுபெயர்.

௭௨—குருவை நமஸ்காரஞ் செய்யும்போது இரண்டுகைகளையும் மாற்றிவைத்துக்கொண்டு தன்வலதுகையினால் குருவின்வலதுகாலையும், இடதுகையினால் குருவின் இடதுகாலையும், தொடவேண்டியது.

௭௩—குருவானவர் வேதமோதவந்த சீஷனை சோம்பலில்லாமல் நாடோறும் துவக்கும்போது துவக்கென்றும்,முடிக்கும்போது நிறுத்தென்றும், சொல்லவேண்டியது.

௭௪—பிராமணன் வேதமோதத்துவக்கும்போதும், முடிக்கும் போதும், பிரணவத்தைச்சொல்லவேண்டியது. அப்படி முன்னர் சொல்லாததினால் ஓதினவேதம் கொஞ்சங்கொஞ்சமாய் மறந்து விடும். பின்சொல்லாவிட்டால் நியர்பகத்தில் தரிக்கப்பட மாட்டாது.

௭௫—கிழக்குமுகமாகத் தருப்பைகளைப்பரப்பி அதன்மேலு ட்கார்ந்து இரண்டுகைகளிலும் பௌத்திரம் போட்டுக்கொண்டு மூன்று பிராணாயாமஞ்செய்து பின்பு பிரணவத்தைச் சொல்லவே ண்டியது.

௭௬—பிரம்மாவானவர் பிரணவத்தினவயவங்களான அகார-உகா ர-மகாரத்தையும், மூன்று * வியாகிருதியையும், மூன்றுவேதத்தினி ன்றும் கிரமமாக உண்டுபண்ணினார்.

௭௭—மேலும் தது-என்னும்-துவக்கத்தையுடைய காயத்திரியி ன் மூன்றடியையும், மூன்றுவேதத்தினின்றுமே யுண்டுபண்ணினார்.

௭௮—இந்த பிரணவத்தையும், மூன்றுவியாகிருதியை முன்னி ட்டிருக்கிற இந்தக்காயத்திரியையும், சந்தியாகாலங்களில் செபிக்கி ற பிராமணன் மூன்றுவேதமோதின புண்ணியத்தை யடைகிறான்.

௭௯—இந்தக்காயத்திரியை ஊருக்குவெளியில் நதிதீரம் - காடு இவைகளில் ஒருமாதம்வரையில் தினந்தோறும் ஆயிரந்தரம்செபி க்கிறபிராமணன் மஹாபாதகத்திலும்நின்று தோலில்நின்றும் பா ம்புநீங்குவதுபோல நீங்குகிறான்.

௮0—இந்தச்செபம்-உபநயநமுதலிய கர்மம் -இவைகள் இல் லாத மூன்றுவருணத்தாரும் பெரியோர்களினால் நிந்திக்கப்படுவா ர்கள்.

---

* வியாகிருதி-என்பது - காயத்திரிக்கு முன்சொல்லப்படும் ஓர்மந்திரவிசேஷம்.

அக—பிரணவத்தையும், மஹாவியாகிரதியையும், முன்னிட்டுக் கொண்டிருக்கிற காயத்திரியை மோக்ஷத்தையடைகிறதற்கு வழியாகச்சொல்லுகிறார்கள்.

அஉ—எவன்-மூன்றுவருஷிவரையில் தினந்தோறுஞ் சோம்பலில்லாமல் இந்த மந்திரங்களைச் செபஞ்செய்கிறானோ அவன் வாயுவைப்போல் ஆகாயத்தில் ‡ காமசாரியாய் பிரமசாயுச்சியத்தையடைகிறான்.

அரு—பிரணவம் பரப்பிரம்மமாகவும், பிராணாயாமம் - சாந்திராயணமுதலியவற்றைக்காட்டினு மேலானதவமாகவும், சொல்லப்படுகின்றன. காயத்திரியைச்செபிக்கிறவனுக்குப் பாவமில்லை - சத்தியமாய் வசனிக்கிறவனுக்கு மௌனவிரதம்வேண்டுவதில்லை.

அசு—வேதத்திற் சொல்லப்பட்டிருக்கிற எக்கிய யாகாதிகாரியங்கள் அழிவுள்ள பலத்தைக்கொடுக்கின்றமையால் அழிவுள்ளதென்றும் பிரணவம் பரமாத்தும சுவரூபத்தைத் தெரிவித்து மோக்ஷத்தைக்கொடுக்கின்றமையால், அழிவற்றதென்றும், பிரமனால் சொல்லப்பட்டிருக்கின்றன.

அஎ—அமாவாசி- பௌர்ணமி- இதில் செய்யவேண்டிய § ஸ்தாலீபாகமுதலிய விதி யெக்கியத்தைக்காட்டினும் செப எக்கியமானது பத்துப்பங்குயர்ந்தது,அது இரகசியத்திற் செயப்பட்டால் நூறுபங்கதிகமாயும்,மனதி லதன்பொருளையறிந்து உதடசையாமற் செபித்தால் ஆயிரம்பங்கதிகமாயும், சொல்லப்படுகின்றது.

---

‡ காமசாரி - என்பது - தன்னிஷ்டப்படி ரூபமெடுத்துச் சஞ்சரிப்பது.

§ ஸ்தாலிபாகம்-என்பது - பஞ்சபாத்திரத்திற் பாகம்பண்ணிய அன்னத்தாற்செய்யும்-ஓமம்.

அசு—விதி யெக்கியத்தோடுகூடின நான்கு * பாகஎக்கியங்களும், காயத்திரிசெபத்தின் பதினாறிலொருபங்கின் மகிமையையடைகிறதற்குத் தகுதியற்றதாக விருக்கின்றன.

அஎ—பிராமணன் காயத்திரிசெபத்தினாலேயே மோக்ஷசித்தியை யடைகிறான். இதிற் சந்தேகமில்லை. வேறான யாகாதிகளைச்செய்தாலுஞ்செய்யலாம், விட்டாலும் விடலாம், யாகத்தைச்செய்யவேவேண்டுமென்னுங் கடைமையில்லை,அதனாலே பிராமணன் எல்லாப்பிராணிகளுக்கும், மித்திரனென்று சொல்லப்படுகிறான்.

அஅ—மநதையபகரிப்பதை சுபாவமாகவுடைய சப்த்தாதிவிஷயங்களிற் செல்லாநின்ற இந்திரியங்களை சுவாதீனப்படுத்துகிற விஷயத்தில்-தேர்ப்பாகன்-குதிரைகளைச் சுவாதீனப்படுத்துகிற விஷயத்திற்போல அறிவுள்ளவன் முயற்சிசெய்யவேண்டியது.

அகூ—பெரியோர்களினால் பதினொன்றாகப்பகுக்கப்பட்ட இந்திரியங்களை கிரமமாகச்சொல்லுகிறேன்.

கூ0—காது-தொக்கு-கண்-நா-மூக்கு-ஆக-ஐந்து ஆசநம்-உபஸ்தம்-கை-கால்-சொல்-ஆக-ஐந்து.

கூக—இவைகளில்-காதுமுதல்-மூக்குவரையில், ஞாநேந்திரியம் ஐந்து ஆசநமுதல்-சொல்வரையில்-கர்மேந்திரியம்-ஐந்து.

கூஉ—தன்செய்கைக்குத் தக்கபடி இவ்விருவகையாகிய பத்து இந்திரியங்களையும் ஏவுகிற மநதை-பதினோராவது-இந்திரியமென்று அறியத்தக்கது அதைச்செயித்தால் மற்றஎல்லா இந்திரியங்களுஞ் செயிக்கப்பட்டவையாகும்.

---

* பாகஎக்கியம்-என்பது - பஞ்சமஹா எக்கியத்தில் பிரம எக்கியநீங்கலாக அன்னத்தினாற்செய்யத்தக்க மற்றநான்கும்.

சுங—இந்திரியங்கள் விஷயத்தில் சஞ்சரிப்பதால் தோஷத்தை யடைகிறான் அதுகளையடக்கினால் மோக்ஷமுதலிய சித்தியைப்பெ றுகிறான் இதிற்சந்தேகமில்லை.

சுச—ஆசையானது அநுபோகத்தினால் ஒருபோதும்அடங்கு கிறதில்லை நெய்யினால் அக்கினிபோல அநுபோகத்தினால் விர்த்தி யையேயடையும்.

சுரு—ஒருவன் சகலபோகங்களையும் அநுபவிக்கிறான் ஒருவன் அப்போகங்களை அற்பமாகவெண்ணி நிவர்த்திசெய்கிறான் இதில் அநுபவிக்கிறவனைவிட நிவர்த்திசெய்கிறவன் உயர்ந்தவன்.

சுசு—விஷயசப்பந்தப்பட்டிருக்கிற இந்திரியங்கள் ஞானத்தி னலடக்கப்படுவதுபோல விஷயசந்நிதானத்தை நீக்குவதால் அட க்கவரிது.

சுஎ—வேதமோதுவது தானங்கொடுப்பது எக்கியங்களைச்செய் வது அநுஷ்டானங்களை நடத்துவது தவஞ்செய்வது இவைகளெ ல்லாம் விஷயசம்பந்தப்பட்ட மநதையுடையவனுக்கு பலனைக் கொடுப்பதில்லை.

சுஅ—எவன் இஷ்டாநிஷ்டங்களை காதினாற்கேட்டும் மெய்யி னாற்றொட்டும் கண்ணாற்பார்த்தும், நாவினாற்புசித்தும், மூக்கினா ன்மோந்தும், சுகத்தையுந்துக்கத்தையு மடையவில்லையோ அவ னே ஜிதேந்திரியன்.

சுகூ—இந்திரியங்களுக்குள் யாதாமொன்று சுவாதீனப்படாம ற்போனால் கியானமானது அதன்வழியாக இல்லிக்குடத்திற் சலம் போல சிறுகச்சிறுகப்போய்விடும்.

௱—ஆகையால் எல்லாவிந்திரியங்களையும் வசப்படுத்தி மந தையும் சுவாதீனப்படுத்தி தன்சரீரத்தைவருத்தாமல் இம்மைக்கு

ம் மறுமைக்கும் உதவியானகர்மங்களைச்சம்பாதிக்கவேண்டியது.

௧0௧—காலைசந்தியில்சூரியோதயமாகிறவரையில் நின்றுகொண்டும் மாலைசந்தியில் நக்ஷத்திரந்தெரிகிறவரையில் உட்கார்ந்துகொண்டும் செபிக்கவேண்டியது.

௧0௨—காலைசந்தியில் நின்றுகொண்டுசெய்தால் இரவிற்செய்த பாவமும்-மாலைசந்தியில் உட்கார்ந்துகொண்டு செய்வதால்பகலிற் செய்தபாவமும்-நீங்கிவிடும்.

௧0௩—எவன் இவ்விருகாலத்திலும் மேற்சொன்னபடி செய்யவில்லையோ அவன்சகலமான பிராமணபூசாகாரியத்தினின்றும்-பஹிஷ்காரஞ்செய்யத் தக்கவன்.

௧0௪—ஜலத்தின்கரையிலாவது ஜநசஞ்சார மில்லாதவிடத்திலாவது உட்கார்ந்து ஒருவழிப்பட்ட மநதுள்ளவனாக திநந்தோறுஞ் செய்யத்தக்க பிரம்ம எக்கியத்தைச்செய்து காயத்திரிமுதலியவையும்-அதன்முடிவில்-ஓதவேண்டியது.

௧0௫—வேதாங்கம்-நித்தியம் செய்யவேண்டியதான காயத்திரி ஜெபம்-பிரம்ம எக்கியம்-ஔபாசநம்-வைசுவதேவம்- இவைகளுக்கு-அநத்தியயநநாளில்லை.

௧0௬—நித்தியஞ்செய்யத்தக்கதான காயத்திரிமுதலிய கர்மங்கள் பரப்பிரம்ம விஷயமானயாகமென்று சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் அவைகள் அநத்தியயநத்திற் செய்யப்பட்டாலும் புண்ணியத்தையேதரும்.

௧0௭—எவன் ஒருவருஷவரையில் பரிசுத்தனாய் பிரம்மஎக்கியத்தைச்செய்கிறானோ அவனுக்கு அந்தப்பிரம்ம எக்கியமானது பால்-தயிர்-நெய் - இவைமுதலியவற்றை யுண்டுபண்ணி அவற்றால் அவன்பிதுர்க்களைச் சந்தோஷிப்படுத்துகின்றது.

கoஅ—அக்கினியில் சமித்தினால் ஓமஞ்செய்வது அந்நபிக்ஷை யெடுப்பது தரையிற்படுப்பது குருபணிவிடைசெய்வது இவைக ளை பிரமசாரியானவன் வேதமுழுதுமோதி திரும்பிவருகிறவனாயி ல் செய்யவேண்டியது.

கoகூ—தன்குருவின்புத்திரன்- பணிவிடைசெய்பவன்-மற்றொ ருகியாநத்தைத் தனக்குச்சொல்லத்தக்கவன்-தருமத்தை யறிந்தவ ன்- ஆசாரமுள்ளவன்- சொல்லிவைத்ததைக் கிரகிக்கச்சக்தியுள்ளவ ன்- கேட்டபொருளைக்கொடுப்பவன்-பந்து-பங்காளி- பொய்சொ ல்லாதவன்- இப்பதின்மரும்-வேதஞ்சொல்லிவைக்கத்தக்கவர்கள்.

கக0—தருமத்தைச் சொல்லவேண்டுமென்று கேளாதவனுக்குச் சொல்லக்கூடாது-அக்கிரமமா கேழ்க்கிறவனுக்குஞ் சொல்லக்கூ டாது.தான் எல்லாத்தருமத்தையு மறிந்திருந்தாலும் ஊமனைப் போலுலகில் சஞ்சரிக்கவேண்டியது.

கைக—எவன் அதர்ம்மமாகச் சொல்லிவைக்கிறனோ எவன் அதர் ம்மமாகக்கேழ்க்கிறனோ அவ்விருவர்களில் ஒருவன் அற்பாயுளை ய டைகிறன்.அல்லது இருவருக்கும் பகையாவதுண்டாகின்றது.

ககஉ—எந்தச்சிஷனிடத்தில்-தர்மம்-பொருள் - பணிவிடை-இ வைகளில்லையோ அவனுக்கு வித்தைசொல்லிவைத்தால் களர்நிலத் தில் நல்லவிதையை விதைக்கிறதுபோலாம்.

ககங—வேதமறிந்தவன் ஒருவனுக்குஞ்சொல்லிவைக்காமல் வி த்தையோடிறந்தாலும் இறக்கலாமேயன்றி மிகுந்த ஆபத்காலத்தி லும் முன்சொன்ன குணமில்லாத சிஷனுக்குச்சொல்லி வைக்கக் கூடாது.

ககச—வித்தியாதேவதையானது ஓதுவிக்கிறபிராமணனிடத்தி ல்வந்து ஓபிராமணா நானுனக்குப்புதையலாக விருக்கிறேன் என்

னைக்காப்பாற்று பொருமையுள்ளவனுக்குச்சொல்லிவையாதே அ ப்படியிருந்தாலுனக்கு மிருந்தபலனைக்கொடுப்பேன்.

௧௧௫—எந்தச்சிஷ்யனை பரிசுத்தனாகவும்,அநுஷ்டானமுள்ளவனாக வும், வித்தியாபொருளைக் காப்பாற்றுகிறவனாகவும், சாக்கிரதையுள் ளவனாகவும்,அறிவாயோ அவனுக்கு என்னைச்சொல்லிவை யென்று சொல்லுகிறது.

௧௧௬—யாதொருவன் குருவுக்குத்தெரியாமல் ஓதுகிறவனிடத் தினின்றும் வித்தையையடைகிறானோ அவன் வேதத்திருட்டோடு கூடினவனாய் நரகத்தையடைகிறான்.

௧௧௭—தர்க்கசாஸ்திரம் - வேதசாஸ்திரம் வேதாந்தசாஸ்திரம் இவைகளில் ஒன்றையாவது எவனிடத்து ஓதுவானோ அவனைமுன் னர் நமஸ்காரஞ்செய்யவேண்டியது.

௧௧௮—பிராமணன் அநுஷ்டான முள்ளவனாய்காயத்திரியைமா த்திர மறிந்தவனாயிருந்தபோதிலும் உயர்ந்தவன்,மூன்றுவேதம்ஓ தினபோதிலும் அநுஷ்ட்டானமில்லாமல்கண்டவிடத்தில் புசிக்கிற வனும் கண்டவனுக்கு ஓதுவிக்கிறவனும் இருந்தால் உயர்ந்த வனல்லன்.

## குருபணிவிடை.

௧௧௯—குருவின் ஆசநத்திலும், படுக்கையிலும், உட்காரவும் படுக்கவுங்கூடாது. தான்படுத்திருக்கும்போதும், உட்கார்ந்திருக் கும்போதுங் குருவந்தால் எழுந்திருந்து வந்தநஞ் செய்யவேண் டியது.

௧௨0—வயதினாலும், கல்வியினாலும், பெரியவர்கள் வரும்போ து, சிறியவனுட்கார்ந்திருந்தால்அவன் பிராணவாயு மேலெழுந்து போக எத்தனப்படுகின்றது. எழுந்திருந்து வந்தநஞ்செய்வதால் அதன் நிலையை யடைகிறது.

கஉக—பெரியோர்களை நாள்தோறும் வந்தநஞ்செய்கிறவனுயும்,அநுசரிக்கிறவனும் இருப்பவனுக்கு ஆயுள்-கல்வி-கீர்த்தி- பலம்-இந்நால்கும் விர்த்தியடைகின்றது.

கஉஉ—பெரியோர்களை வந்தநஞ்செய்யும்போது இன்னான் வந்தநஞ்செய்கிறேனென்று தன் குலகோத்திர நாமதேயத்தைச் சொல்லி * அபிவாதநஞ்செய்யவேண்டியது.

கஉ௩—எவர்கள் பிரத்தியபிவாதநம் என்னும்-ஆசிர்வாதத்தையறியமாட்டார்களோ அவர்களையும், மாதர்களையும், தன்பெயரைமாத்திரஞ்சொல்லி வந்தநஞ்செய்யவேண்டியது.

கஉச—தான்வந்தநஞ்செய்து அபிவாதநஞ் செய்யும்போது தன் நாமதேயத்தின் அந்தத்தில் போவென்னுஞ் சப்தத்தைச்சொல்லவேண்டியது. அந்தச் சப்தமானது பெயர்களின் சுவரூபமென்று ருஷிகளால் சொல்லப்படுகின்றது. அதாவது "சுபசர்ம்மாநாமா-அஹம்-அஸ்மி-போ,, இவைமுதலானவை.

கஉரு—சிறியோர்கள் தன்னைவணங்கும்போது அவன்பெயரையும், அதன்கடைசியில் அகாரத்தை மூன்றுமாத்திரையாகவும்,சொல்லி ஆயுஷ்மான்-ஆகவிருக்கக்கடவாயென்று வாழ்த்தவேண்டியது உதாஹரணம்-ஆயுஷ்மான்-பவ-தேவதத்தா-இவைமுதலியவை.

கஉசு—மேற்சொல்லியபடி எந்தப்பிராமணனுக்கு ஆசிர்வாதஞ்செய்யத் தெரியமாட்டாதோ அவனுக்கு அபிவாதநஞ்செய்யக்கூடாது. அவன்-சூத்திரனுக்குச் சமமானவன்.

கஉஎ—வணங்கினபின்புபிராமணனை குசலமாக விருக்கிறையாவென்றும், க்ஷத்திரியனை நோயற்றிருக்கிறையாவென்றும், வைசிய

---

* அபிவாதநம்-என்பது- தன்குலம்- கோத்திரம், சூத்திரம், சாகை,இவற்றைச்சொல்வது.

னை க்ஷேமமாகவிருக்கிறையாவென்றும், சூத்திரனை- சுகமாகவிருக்கிறையாவென்றும், கேழ்க்கவேண்டியது.

௧௨அ—யாகஞ்செய்வதற்காக தீக்ஷைபெற்றிருப்பவன் சிறியவனாயிருந்தாலும், அவனைப் பெயரைச்சொல்லி தருமமறிந்தவன் அழைக்கக்கூடாது. போ-என்றும், பவான்-என்றும், அழைக்கவேண்டியது. இவ்விரண்டுசொல்லும் மரியாதையைக்காட்டும்.

௧௨௯—அந்நியன் மனைவி தனக்குப்பந்துவல்லாத மாதர்கள் இவர்களை பவதி-சுபகே- பகிநி - என்று அழைக்கவேண்டியது. இந்தச்சொற்கள் அக்கா-அம்மா-அம்மணி என்னும் மரியாதையைக் காட்டுகின்றது.

௧௩0—அம்மான்-சிற்றப்பன்-பெரியப்பன்- மாமனார் - யாகபுரோகிதன் குரு இவர்கள்வந்தால் எழுந்திருந்து வந்தநம் அபிவாதநம் செய்யவேண்டியது.

௧௩௧—சிறியதாய் அம்மான்பெண்சாதி மாமியார் அத்தை இவர்கள் குருபத்திநிக்குச் சமானமானவர்களாதலால் குருபத்திநியைப்போற் பூசிக்கவேண்டியது.

௧௩௨—தன்வருணத்திலே கலியாணஞ்செய்யப்பட்டிருக்கிற அண்ணன்பெண்சாதியை நாள்தோறும் வணங்கவேண்டியது, ஞாதி சம்பந்தி இவர்களின் பத்திநிகளை ஊருக்குப்போய்வந்தபோது மாத்திரம் வணங்கவேண்டியது.

௧௩௩—பெரிய அத்தை,தாயுடன்பிறந்தபெரியதாய், சிறியதாய், இவர்களிடத்தில் தன்தாயைப்போல் மரியாதையாயிருக்கவேண்டியது. ஆனல் தாய் அவர்களைவிட உயர்ந்தவள்.

௧௩௪—ஒருபட்டணம்ஊளர் இதில் வசிக்கிறவர்கள் பத்துவயது மூத்தவனேனும், அதில் கானம்முதலியவித்தை யறிந்திருந்தால்

ஐந்துவயது மூத்தவனோடும், வேதமறிந்தவனானால் மூன்றுவயது மூத்தவனோடும், தன் ஞாதிகளானால் கொஞ்சகாலமூத்தவனோடும் சிநேகஞ்செய்யவேண்டியது.

௧௩௫—பத்துவயதுள்ள பிராமணனையும், நூறுவயதுள்ள க்ஷத்திரியனையும் தகப்பன்பிள்ளையாக வறியவேண்டியது. அதில் பிராமணன் தகப்பன்மரியாதையும், க்ஷத்திரியன் புத்திரமரியாதையும் வகிக்கவேண்டியது.

௧௩௬—நியாயமாத்தேடியபொருள் சிற்றப்பன்முதலிய பந்துக்கள் உயர்ந்தவயது நல்லொழுக்கம் கல்வி இவ்வைந்தும் ஒருவனைப் பூசிப்பதற்குக் காரணமாயிருக்கின்றன. ஆனால் இவைகள் கிரமமாக ஒன்றிலொன்றுயர்ந்தது.

௧௩௭—மூன்றுவருணத்தாரில்எவனிடத்தில் மேற்சொன்ன ஐந்துகுணங்களில் எவன் இரண்டுமூன்றுகுணங்களை யுடைத்தானவனாயிருக்கிறானோ அவனை ஒரேகுணமுடைய வொருவன் பூசிக்கவேண்டியது. தொண்ணூறுவயதுக்குமேற்பட்ட சூத்திரனை எல்லோரும் மரியாதைசெய்யவேண்டியது.

௧௩௮—பண்டிமுதலியவாகநத்தில் வருகிறவன், தொண்ணூறுவயதுக்குமேற்பட்டவன், நோயுள்ளவன், சுமையாளி, மாதர்கள், அநுஷ்டாநமுள்ள பிராமணன், அரசன், கலியாணஞ் செய்யப்போகிறமாப்பிள்ளை, இவர்களுக்கு மற்றவர்கள் வழிவிடவேண்டியது.

௧௩௯—மேற்சொன்ன யாவரும் ஒன்றாகவந்தால் அரசன் அநுஷ்டாநமுள்ள பிராமணன் இவர்களுக்கு வழிவிடவேண்டியது. அவ்விருவரும், கூடிவந்தால் அவனரசனைக்காட்டிலும் அநுஷ்டாநமுள்ள பிராமணனுக்கு வழிவிடவேண்டியது.

கசo—எவன் உபநயநஞ்செய்வித்து யாகமந்திரங்களையும் வேதவேதாந்தங்களையும் ஓதுவிக்கிறானோ அவனை ஆசாரியனென்று சொல்லுகிறார்கள்.

கசக—எவன் வேதத்திலும் [illegible]திரங்களிலும், கொஞ்சம் சம்பளம்வாங்கிக்கொண்டு சொல்லுவிக்கிறானோ அவனை உபாத்தியாயனென்று சொல்லுகிறார்கள்.

கசஉ—எவன் கெர்ப்பாதாநமுதலிய கிரியைகளைச் செய்வித்து ஜீவநோபாயத்தைக் கற்பிக்கிறானோ அவனை குருவென்றுசொல்லுகிறார்கள்.

கசங—எவன் அக்நிசந்தாநம் அக்கிநிஷ்டோமமுதலிய யாகம் இவைகளைச் செய்விக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டவனாய் செய்விக்கிறானோ அவனை ரித்துவிக்கென்றுசொல்லுகிறார்கள்

கசச—எவன் சுரத்தோடுகூடிய வேதத்தின் உச்சரித்தலால் தன்னிரண்டுகாதுகளையும், பரிபூரணஞ்செய்விக்கிறானோஅவன் தாய்தந்தைக்குச்சரியானவன்அவனுக்கொருநாளும் துரோகஞ்செய்யக்கூடாது.

கசரு—உபாத்தியாயனைவிட ஆசாரியன் பத்துப்பங்குயர்ந்தவன் ஆசாரியனைவிட உபநயநாதி சமஸ்காரஞ்செய்வித்த தகப்பன் நூறுபங்குயர்ந்தவன் அத்தகப்பனைவிட தாய் தன்மகிமையால் ஆயிரம்பங்குயர்ந்திருக்கிறாள்.

கசசா—பெற்றதகப்பனைவிட இரண்டாவதான பிராமண ஜநநம் வரத்தக்க பிரம்மவுபதேசஞ்செய்கிற ஆசாரியனுயர்ந்தவன். அந்தவிரண்டாவது பிறப்பானது இம்மையிலும்மறுமையிலும் அழியாதது.

கசஎ—மாதாவும் பிதாவும் காமத்தினாலேபுணர்ந்து யோநிவ

னா

ழியாக எந்தப்பிறப்பை யுண்டுபண்ணுகிறார்களோ அந்தப்பிறப்பானது மிருகசாதியைப்போல அவயவங்களைமாத்திரம் கொடுக்கவல்லமையுள்ளது.

கசஅ—ஆசாரியன் விதிப்படி எந்தவிரண்டாவது ஜநநத்தைப் பிரம்மவுபதேசத்தினுலுண்டுபண்ணுகிறானே அந்தப்பிறப்பானது அழிவற்றதாயும் மூப்பற்றதாயும் புண்ணியலோகங்களைக் கொடுக்கிறதாயும் இருக்கின்றது.

கசகூ—சாஸ்திரவிஷயத்தில் கொஞ்சமாவது நிரம்பவாவது எவன் உபகாரஞ்செய்கிறானோ அவனையும் குருவென்றறியவேண்டியது.

கரு0—இரண்டாவது ஜநநத்தையுண்டுபண்ணுகிறவனையும் தன் சாதிதருமத்தை வேதத்திற்சொல்லியபடி அறிவிக்கிறவனையு மிருப்பவன் தன்னைவிடசிறியவனாயிருப்பினும் சாஸ்திரப்படி தகப்பனுக்குச்சரியாகிறான்.

கருக—உதாகரணம்-குழந்தையாயும்,வித்துவானாயுமிருக்கிற அங்கிரசன் பிள்ளையானவன் தன்பிதுர்க்களுக்கு வேதமோதிவைத்தான்.அப்போது அவர்களை ஞானத்தினால் சிஷ்யர்களாகமதித்து அவர்களை பிள்ளைகாளென்றழைத்தான்.

கருஉ—அந்தப்பிதுர்க்கள் அதனாற்கோபங்கொண்டு அதைதேவர்களிடத்திற் சொல்லிக்கொண்டார்கள் தேவர்களும் சபைகூடி உங்கள்குழந்தை உங்களையப்படி கூப்பிட்டது சரிதான் என்று நியாயஞ்சொல்லத்தொடங்கினார்கள்.

கருங—தெரியாதவன் பிள்ளையாகவும் தெரிந்தவன்தகப்பனாகவுஞ்சொல்லப்படுகிறான் இப்படியேசாஸ்திரத்தாலும் பெரியோர்களாலுஞ்சொல்லப்பட்டிருக்கின்றது.

கருச—வயது-நரை-பொருள்-பாந்தவியம்-இவைகளினுல் ஒருவன்பெரியவனுகமாட்டான் தெரிந்தவனே நமக்குப்பெரியவன் என்று ருஷிகள் தருமத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

கருரு—பிராமணர்களுக்கு ஞானத்தினுலும், க்ஷத்திரியாளுக்கு வீரியத்தினுலும், வைசியனுக்கு தானியம்-பொருள் - இவைகளினுலும்,சூத்திராளுக்கு-வயதினுலும் மேன்மையுண்டாகிறது.

கருசு—நரையினுல்மாத்திரம் விருத்தனுகமாட்டான் சிறுவனுயிருந்தாலும் வேதப்பொருளறிந்தவனே விருத்தன் என்றுதேவர்கள் தீர்மானஞ்சொன்னுர்கள்.

கருஎ—மரத்தினுற்செய்யப்பட்டயானை தோலினுற்செய்யப்பட்டமிருகம் வேதம் ஓதாதபிராமணன் இம்மூவரும் உபயோகமில்லாதது பெயரைமாத்திரம் பரிக்கிறது.

கருஅ—மாதர்களிடத்தில் பேடியும் பசுமாட்டினிடத்தில் பசுமாடும் தெரியாதவனிடத்திற் கொடுத்ததானமும் எப்படி பயனில்லாததோ அப்படியேவேதமோதாதபிராமணன் பயனில்லாதவன்.

கருகூ—தருமமறிந்த ஆசாரியன் ஹிதோபதேசம் செய்விக்கும்போது பிரம்புமுதலியகருவிகளால் சிக்ஷைஅதிகமாக அடியாமல் தருமத்தை உபதேசிக்கவேண்டியது,வாயினுலும் குரூரமில்லாமல் தாய்போல் பிரியமாய் பேசவேண்டியது.

கசு0—எவனுக்கு வாக்கும் மநதும் பொய்சொல்லாமலும் இராகத்துவேஷத்தையடையாமலும்:பரிசுத்தமாயடக்கப்பட்டிருக்கிறதோ அவன் வேதாந்தசாஸ்திரத்திற் சொல்லிய எல்லாப்பயனையுமடைகிறுன்.

கசுக—ஒருவன் தான்துன்பத்தை யடைந்திருந்தாலும் அந்நியனைப்பார்த்துத் துன்பம்வரும்படிபேசக்கூடாது செய்கையினு

லும் மநதினலும் ஒருவனுக்குத்துரோகஞ்செய்யக்கூடாது கொடுமையாக அமங்கலமானவார்த்தைகளைச்சொன்னல் சுவர்க்காதிபுண்ணியலோகங்களையடையமாட்டான்.

கசுஉ—பிராமணன் தனக்குஅயலான்செய்கிறமரியாதையை விஷத்தைப்போலநினைத்து அஞ்சவேண்டும் அவமாநத்தை அமிர்தத்தைப்போல விரும்பவேண்டும்.

கசுரு—அவமாநத்தாற் றுன்பத்தையடையாதவன் சுகமாகத்தூங்கியெழுந்திருக்கிறன் சுகமாக இவ்வுலகத்திலுஞ்சஞ்சரிக்கிறன் அவனை அவமாநஞ்செய்தவன் தானேஅழிந்துபோகிறன்.

கசுச—இப்போது நான்சொல்லிவந்த சாதகர்மமுதல் உபநயநவரையில் சொல்லியசமஸ்காரத்தினல் பரிசுத்தனை துஜன் குருவினிடத்தில் வசித்து அவசரப்படாமல் வேதத்தைக்கிரமமாக வோதவேண்டியது

கசுரு—வேதத்திற்சொல்லப்பட்ட பலபல நியமங்களாலும் அந்நபிக்ஷைமுதலான விரதத்தினலும் பரிசுத்தனை துஜனலே வேதமுழுதும் ஒதத்தக்கது பின்பு வேதாந்தமும் ஒதவேண்டியது.

கசுசு—தவஞ்செய்யவிருப்பமுள்ள துஜனனவன் வேதாத்தியயநஞ்செய்யவேண்டியது அதுவே இவனுக்குமேலானதவமாகச்சொல்லப்படுகின்றது.

கசுஎ—எவன்நாள்தோறுந் தன்சக்திக்குத்தக்கபடி வேதத்தில் நாலுவாக்கியமாவது ஒதுகிறனே அவன் பாதாதிகேசவரையில் தவஞ்செய்கிறவனுகச்சொல்லப்படுகிறன்.

கசுஅ—எந்தத்துஜனனவன் வேதத்தையோதாமல் வேறனஅர்த்தசாஸ்திரத்தில் முயற்சிசெய்கிறனே அவன் ஜீவித்திருக்கும் போதே தன்வம்சத்தாருடன் சூத்திரனுகிறன்.

கசுகூ—திஜனுக்கு முதற்பிறப்புத்தாயாலும் இரண்டாவது உபநயநத்தாலும், மூன்றுவது எக்கியதீக்ஷையாலும், உண்டாகிறதென்று வேதத்திற்சொல்லப்படுகின்றது.

கஎ0—அதில் மிஞ்சி கட்டுவதை அடையாளமாக உடைத்தான இரண்டாவதுபிறப்புக்கு காயத்திரியைத்தாயாகவும், ஆசாரியனைத் தகப்பனுகவுஞ்சொல்லுகிறுர்கள்.

கஎக—வேதத்தை ஓதுவிக்கிறதினுல் ஆசாரியனையும் ஒருதகப்பனுகவே சொல்லுகிறுர்கள்.உபநயநஞ்செய்துகொண்டு வேதமோதாவிட்டால் இவன் ஒருவைதீககாரியத்துக்கும் உதவமாட்டான்.

கஎஉ—உபநயநஞ் செய்துகொள்ளுவதற்கு முன்பு இவன் சூத்திரனுக்கொப்பானவன் ஆனுல் மாதா-பிதுர் கர்மத்தில்மாத்திரம் அதற்குவேண்டிய வேதமந்திரஞ்சொல்லலாம்.

கஎ௩—உபநயநமானபின்பு தான் இவனுக்கு‡சமிதாதாந முதலிய விரதாநுஷ்டாநமும், வேதாத்தியயநமும், கிரமமாக விதிக்கப்பட்டிருக்கின்றது.

கஎச—எந்தவருணத்தானுக்கு எந்தமிருகத்தின் சர்மமும் எவ்விதபூணுநூலும், எவ்விதமிஞ்சியும், எவ்விததண்டமும், எவ்விதவஸ்திரமும், விதிக்கப்பட்டிருக்கிறதோ அவைகளை அவனவன் விரதாநுஷ்டாநகாலங்களிலுந் தரிக்கவேண்டியது.

## பிரமசாரிவிரதம்.

கஎரு—குருவின்குலத்தில் வாசஞ்செய்கிற பிரமசாரி தன்னிந்திரியங்களெல்லாமடக்கிக்கொண்டு மறுமைக்குரிய தவம் விருத்தியடையும்பொருட்டு மேற்சொல்லப்போகிற நியமங்களை யநுஷ்டிக்கவேண்டியது.

---

‡ சமிதாதாநம்-என்பது-சமித்தினுலே அக்கினியிற்செய்யும் ஓமம்.

களசு—நாள்தோறும் விடியற்காலையில் நதிஜலத்தில் ஸ்நாநம்பண்ணி பரிசுத்தனாய்த் தேவர்-ருஷி-பிதுர்-தருப்பணங்களையும் தன்னிஷ்டதேவதையின்பூசையையும், இரண்டுவேளை சமிதாதாநத்தையும் செய்யவேண்டியது.

களள—தேன்-மாம்சம்-கந்தம்-புஷ்பம்-தித்திப்பு - ஸ்திரிகள் தயிர்-பால்-நெய்-மோர்-ஜீவஹிம்சை.

களஅ—அப்பியங்கநம்-அஞ்சநம்-செருப்பு-குடை-காமம் - குரோதம்-லோபம்-கூத்து-பாட்டு.

களகூ—சூதாடல்-வம்பளத்தல்-பழிசொல்லுதல்- பொய்சொல்லுதல்-மாதர்களை ஆசையோடுபார்க்க விரும்புதல் ஒருவருக்குத் துரோகஞ்செய்தல் இவைகளை நீக்கவேண்டியது.

கஅ0—எப்போதும் பிரமசாரி தனியாகவே படுக்கவேண்டியது. காமத்தினாலே இந்திரியத்தை வெளிப்படுத்தக்கூடாது. அப்படிசெய்தால் தன்விரதமழிந்துபோய்விடும்.

கஅக—பிரமசாரிக்குக் காமமில்லாமல் சொப்பநத்தில் இந்திரியம்வெளிப்பட்டால் பிராதக்காலையில் ஸ்நாநஞ்செய்து சூரியனை நமஸ்கரித்து "புநகா" என்னுமந்திரத்தை மூன்றுதரஞ் சொல்லவேண்டியது.

கஅஉ—தண்ணீர்-தேவபூசைக்குரியமலர்கள்- சாணம்-மண் - தருப்பை-இவைகளை-குருவுக்கு வேண்டியமட்டில் கொண்டுவந்து கொடுக்கவேண்டியது. தானும் நாள்தோறும் பிக்ஷையெடுத்துச் சாப்பிடவேண்டியது.

கஅரு—வேதம்-எக்கியம்-இவைகளுள்ளவர்களாயும், சந்தியாவந்தநமுதலிய தன்றன் கர்மங்களைச் சாக்கிரதையாய்ச் செய்பவர்களாயுமிருக்கிற கிரகஸ்தாள்வீட்டில் பிரமசாரி நாள்தோறும் அந்தபிக்ஷையெடுக்கவேண்டியது.

கஅச—குருவின்குலத்திலும், அவர்பங்காளி-பந்து-இவர்கள்வீட்டிலும், பிக்ஷை வாங்கக்கூடாது. வேறேவீடில்லாவிட்டால் குருவின் பந்துக்களின்வீட்டிலாவது, அதுவில்லாவிட்டால் அவர் பங்காளிவீட்டிலாவது, அதுவுமில்லாவிட்டால் குருகுலத்திலாவது வாங்கிக்கொள்ளலாம்.

கஅரு—முன்சொன்னபடியே வேத - எக்கியமுதலிய அநுஷ்டாநமுள்ளவர்களில்லாவிடில் ஊருமுழுதும் மௌனத்துடன் சஞ்சரித்து மஹாபாவிகள்வீடுநீங்கலாக எங்கையாவது பிராமணுள் வீட்டில் பிக்ஷைவாங்கிக்கொள்ளவேண்டியது.

கஅசு—வநத்தில் பரிசுத்தமான விடத்திற்குப்போய் விதிப்படி பலாசமுதலிய சமித்துக்களைக்கொண்டுவந்து கையில்வைத்துக்கொண்டு வெய்யிலிலுலர்த்தவேண்டியது. அதற்குச் சக்தியில்லாவிட்டால் இறப்பிலாவது உலர்த்தவேண்டியது. அந்தச்சமித்துக்களாலே காலையும், மாலையும், அக்கிநியில் ஓமஞ்செய்யவேண்டியது. இதுதான் சமிதாதாநம்.

கஅஎ—பிரமசாரியானவன் தனக்கு நோயில்லாதிருக்கும்போது எழுநாள் பிக்ஷையெடாமலும், சமிதாதாநஞ் செய்யாமலுமிருந்தால் விரதப்பிரஷ்டனுகிறுன். அதற்கு அவகீர்ணிவிரதத்தைச்செய்யவேண்டியது (அவகீரணிவிரதம் பதிஞேராமத்தியாயத்திற்காண்க.)

கஅஅ—பிரமசாரி எப்போதும் பிக்ஷையெடுத்தே புசிக்கவேண்டியதேதவிர ஒருவனந்நத்தைப் புசிக்கக்கூடாது. பிக்ஷையெடுத்துப்புசிப்பதை அவனுக்கு உபவாசத்திற்கொப்பாகச் சொல்லுகிறுர்கள்.

கஅகூ—யாகாதிகாரியத்திலும், சிரார்த்தகாரியத்திலும், தன்னை

யொருவன் தன்வீட்டில் சாப்பிடவேண்டுமென்று மிகவும் பிரார்த்தனைசெய்தால் அப்போது தன்னியமப்படி ருஷிகளைப்போல் மதுமாம்சாதிகணிங்கலாக ஒருவனந்நத்தைச் சாப்பிடலாம். அதனால் இவன்விரதமழியமாட்டாது.

கக௦—இந்தப்படி யொருவனந்நத்தைப்புசிப்பது பிராமண பிரமசாரிக்குமாத்திரமேதவிர மற்றவர்களுக்குக் கூடாதென்று பெரியோர்கள்சொல்லுகிறார்கள்.

ககக—குருவானவர் ஆக்கியாபித்தாலும், இல்லாவிட்டாலும் வேதாத்தியயநத்திலும், குருவின்பணிவிடையிலும், தானேநாடோறும் முயற்சிசெய்யவேண்டியது.

ககஉ—சரீரம்-வாக்கு-புத்தி-பஞ்சேந்திரியம்-மநது- இதுகளை அடக்கிக்கொண்டு கைகளைக்கூப்பிக்கொண்டு குருவுக்குஎதிராக குருவின்முகத்தைப்பார்த்துக்கொண்டு நிற்கவேண்டியது.

ககங—எப்போதும் உத்தரீயத்துக்குவெளியில் தன்வலதுகையை வைத்துக்கொண்டிருக்கவேண்டியது. அதாவது போர்த்துக்கொள்ளாமலிருத்தல்-உட்கார்ந்துகொள்ளென்று குருவுத்தரவுசெய்தால் அவருக்கெதிராக பரிசுத்தனும் மறைக்கவேண்டிய அவயவங்களை வஸ்திரத்தினால் மறைத்துக்கொண்டு உட்காரவேண்டியது.

ககச—குருவினிடத்தில் வாசஞ்செய்யும்போது உயர்ந்த அந்நத்தைப்புசிக்கவும், உயர்ந்த வஸ்திரத்தைத்தரிக்கவுங்கூடாது. உயர்ந்தவேஷத்தோடு இருக்கவுங்கூடாது, விடியற்காலத்தில் குருவெழுந்திருப்பதற்குமுன்னர் தானெழுந்திருக்கவேண்டியது. இரவில் அவர்படுத்து நித்திரைசெய்தபின் தான்படுக்கவேண்டியது.

ககரு—குருவின் ஆக்கினையை சீஷன் படுத்துக்கொண்டும், உட்கார்ந்துகொண்டும் சாப்பிட்டுக்கொண்டும் நடந்துகொண்டும்

பராமுகமாயிருந்துகொண்டும் கேழ்க்கக்கூடாது மறுமொழியுஞ் சொல்லக்கூடாது.

கசுசு—குரு உட்கார்ந்துசொல்லும்போது தானின்றுகொண்டும் அவர்நிற்கும்போது அவர்க்குச்சமீபத்தில் நின்றுகொண்டும் அவர்தனக்கெதிராகவந்து சொல்லும்போது தானெதிர்கொண்டு போயும் அவர்நடக்கும்போது தான்பின்றொடர்ந்து ஓடிக்கொண்டும்.

கசுஎ—அவர்பராமுகமாக விருக்கும்போது அவர்முகத்துக்கெதிராகவந்தும் அவர்தூரத்திலிருக்கும்போது கிட்டவந்தும்-படுத்திருக்கும்போதும்- சமீபத்திலிருக்கும்போதும்- தன்தேகத்தைவணக்கிக்கொண்டும் - அவர் ஆக்கினையைக்கேழ்க்கவும் மறுமொழி சொல்லவும்வேண்டியது.

கசுஅ—குருவினுசநத்திற்கும்-படுக்கைக்கும் - தன்னுசநமும் படுக்கையுந் தாழ்ந்திருக்கவேண்டியது குருபார்க்குமிடத்தில் தான் இஷ்டப்படி ஆசநத்திலுட்காரப்போகாது.

கசுசு—இந்தக்குருவின்பெயரை அவரில்லாதவிடத்திலும் குரு உபாத்தியாயர்-என்கிற மரியாதைச்சொல்லன்றியும் சொல்லக்கூடாது- அவருடைய நடத்தை-நடை-சொல்லு-இவைகளைத் தானநுசரிக்கலாகாது.

உ00—எந்தவிடத்தில் குருவுக்கு அபவாதமும் நிந்தையுஞ்சொல்லப்படுமோ அவ்விடத்தில் தன்காதுகளை மூடிக்கொள்ளவேண்டியது அல்லது வேறிடத்துக்காவதுபோகவேண்டியது.

உ0க—சீஷன்குருவைப் * பழித்தால்கழுதையாகவும் ‡ நிந்தித்

---

* இருக்கின்றதோஷத்தைச்சொல்வது-பழித்தல்.

‡ இல்லாததோஷத்தைச்சொல்வது-நிந்தித்தல்.

தால்-நாயாகவும்-குருவின்பொருளையநுபவித்தால் புழுவாகவும்-அவர்பெருமையைக்கண்டு பொறாமைப்பட்டால் உலண்டுபூச்சியாகவும் பிறக்கிறான்.

உ0உ—தான்றூரத்தி லிருந்துகொண்டு மற்றொருவனை யனுப்பி குருவுக்குப்பணிவிடைசெய்யக்கூடாது தனக்கு கோபம்நேரிட்டிருக்கும்போதும்-குரு மனையாளோடிருக்கும்போதும் தான் போய்ப்பூசிக்கலாகாதுவாகநத்திலும் ஆசநத்திலிலுந்தானிருந்தால் அவைகளினின்றுந் தானிறங்கிப்பூசிக்கவேண்டும்.

உ0௩—எதிர்க்காற்றடிக்கும்போதும்-பின்காற்றடிக்கும்போதும்- குருவுக்கெதிரில் உட்காரக்கூடாது குருகேளாதிருக்கும்போது ஒருசங்கதியும்அவருக்குச்சொல்லக்கூடாது.

உ0௪—மாட்டுபண்டி-குதிரைபண்டி-ஒட்டகம்- உப்பரிகை-படிகள்-கற்பலகை-ஓடம்-இவைகளில்-குருவோடுசீஷன்- சமமாகவிருக்கலாம்.

உ0௫—குருவுக்குக் குருவந்திருக்கும்போது அவருக்கும் குருவைப்போல வந்தனைவழிபாடு செய்யவேண்டியது தான்குருவின் வீட்டி லிருக்கும்போது தன்தாய்தகப்பன் முதலியவர்வந்தால் அவர்களை குருவினுத்தரவு அன்றி வந்தநம்செய்யக்கூடாது.

உ0௬—வித்தைசொல்லி வைத்தகுரு உபாத்தியாயர் தன்சிற்றப்பன் பெரியப்பன்முதலானவர்கள் அதர்மம் செய்யவேண்டாமென்றவர்கள் - தருமத்தையுபதேசித்தவர்கள் இவர்களிடத்திலும் ஆசாரியனைப்போலவே மரியாதைசெய்யவேண்டியது.

உ0௭—கல்வி-தவம்-முதலியவற்றால் உயர்ந்தும்-தன்வருணத்தில் விவாகஞ்செய்யப்பட்ட மாதினிடத்திற்பிறந்தும்-இருக்கிறகுருபுத்திராளிடத்திலும் அவர்பங்காளிகளிடத்திலும் குருவைப்போலவேமரியாதைசெய்யவேண்டியது.

௨௦௮—தனக்குச்சிறியவனுயிருந்தாலும் சரியானவயதுள்ளவனுயிருந்தாலும் முன் தனக்குச்சீஷனுயிருந்தாலும்வேதமுற்றும் ஓதினவனுயாவது குருபுத்திரனுயாவது இருந்து தான் எக்கியஞ் செய்யுஞ்சமயத்தில்வந்தால் அவர்களுக்குக்குருவின் மரியாதையைச்செய்யவேண்டியது.

௨௦௯—குருவின்புத்திரனுக்கு குருவைப்போலமரியாதை செய்வதில் சரீரத்தைத்தேய்ப்பதையும்- எண்ணெய்தேய்ப்பதையும்- எச்சல்சாப்பிடுவதையும்-காலைக்கழுவுவதையும்-செய்யக்கூடாது.

௨௧௦—குருவுக்குத் தன்வருணத்தில் கலியாணஞ்செய்த மாதர்கள் நியமித்தல்முதலிய குருவுக்குச்செய்வதுபோலவே செய்யவேண்டியது வேறுசாதியாயிருந்தால் எழுந்துவந்தநமாத்திரஞ் செய்யவேண்யடிது.

௨௧௧—குருவின்பத்திநிக்கு - எண்ணெய்தேய்த்தல் - ஸ்நாநஞ் செய்வித்தல்-உடம்புதேய்த்தல் - தலையாற்றுவித்தல் - இவைகளைச் செய்யக்கூடாது.

௨௧௨—குருபத்திநி யௌவநமாயிருந்தால் அவளை நமஸ்காரஞ்செய்யும்போது இருபதுவயதுள்ளவனுயுங்குணதோஷங்களைப்பகுத்தறியும் விவேகியுமாயிருக்கிறசீஷன் கால்களைத்தொடக்கூடாது.

௨௧௩—மாதர்களின்சுபாவமே மனிதர்களுக்கு சிறிங்காரசேஷ்ட்டைகளினுல் தோஷத்தையுண்டுபண்ணும் ஆதலால். தெரிந்தவர்கள் அவர்களிடத்தில் அசாக்கிரதையாயிரார்கள்.

௨௧௪—ஜிதேந்திரியனுயிருந்தாலும் மூடனுயிருந்தாலும் அவனைமாதர்கள் தன்சம்பந்தத்தினுல் காமக்குரோதத்துக்குஉட்பட்டவனுகச் செய்கிறுர்கள்.

உசரு—தாய்-தங்கை-பெண்-இவர்களுடனும் தனியாய் ஒன்று கவுளுக்காரக்கூடாது இந்திரியங்களின்கூட்டமானது மிகவும்பல முள்ளது அது-தெரிந்தவனையும் மயக்கிவிடும்.

உசசு—குருவின் பத்நிகள் யௌவநமாகவும் தானும் யௌ வநனுயிருந்தால் காலுகளைத்தொடாமல் அபிவாதநஞ்செய்யவே ண்டியது.

உசஎ—சிஷ்ன்-தானூருக்குப்போய்வந்தபோதும், ஊரிலிருக் கும்போதும், நித்தியமும் விருத்தாளான குருபத்நிகளின்காலைத் தொட்டு வந்தநஞ்செய்யவேண்டியது. இது பெரியோர்களின்த ருமம்.

உசஅ—ஒருமனிதன் பூமியை மண்வெட்டியால் வெட்டுகிறத்தி னுலே ஜலத்தை யெப்படியடைகிருனே அப்படியே சிஷ்ன் பணி விடைசெய்வதால் குருவினிடத்திலேயுள்ளவித்தையையடைகிருன்

உசகூ—பிரமசாரி தலையை முழுதுமொட்டையடித்துக்கொண் டிருந்தாலுமிருக்கலாம், அல்லது தலைமுழுதுஞ் சடைதரித்துக் கொண்டாலும் கொள்ளலாம். அல்லது குடிமிமட்டுஞ் சடைதரி த்துக்கொண்டு மற்றதை க்ஷவரஞ்செய்துகொண்டாலும் கொள்ள லாம் இவ்வித பிரமசாரிகள் ஒருபோதும சூரிய னுதயாஸ்தமந காலங்களில் நித்திரைசெய்யக்கூடாது.

உஉ0—தூக்கத்தில் ஆசையினுலாவது, அறியாமையினுலாவது, அவர்கள் உதயத்திற்றூங்கினுல் அன்றுமத்தியாநமும், அஸ்தமநத் திற்றூங்கினுல் அன்றிரவும் காயத்திரி செபஞ்செய்துகொண்டு உப வாசமாயிருக்கவேண்டியது.

உஉக—அப்படி தூங்கினதற்காகப் பிராயச்சித்தஞ்செய்துகொ ள்ளாவிட்டால் மஹாபாவத்தோடு கூடினவர்களா நரகத்தையடைவர்.

௨௨௨—ஆகையால் அவ்விரண்டுசந்தியிலும், தூங்காமல் சாக்கிரதையாய் ஆசமநஞ்செய்து ஆசாரத்துடன் சந்தியாவந்தநஞ்செய்து பரிசுத்தமானவிடத்திலிருந்து செபஞ்செய்து † உபஸ்தாநமும் விதிப்படிசெய்யவேண்டியது.

௨௨௩—மாதர்களேனும், சூத்திரனேனும்,ஒருநல்லகாரியத்தைச்செய்தால் அதையும், தன்மநதுக்கிஷ்டமானகாரியத்தையுஞ் சாஸ்த்திரத்துக்கு விரோதமின்றிச் செய்யலாம்.

௨௨௪—சிலபெரியோர்கள் தர்ம்மார்த்தங்களைக் காமத்துக்குக் காரணமாயிருப்பதால் உயர்ந்ததென்றும் சிலர் அர்த்தகாமங்களை சுகத்துக்குக்காரணமாயிருப்பதால் உயர்ந்ததென்றும், சிலர் தர்மத்தை அர்த்தகாமங்களுக்குக் காரணமாயிருப்பதால் உயர்ந்ததென்றும் சிலர் அர்த்தத்தை தர்ம்மகாமங்களுக்குக் காரணமாயிருப்பதால் உயர்ந்ததென்றும் சொல்லுகிறார்கள். இந்தத் தர்ம்மார்த்தகாமங்கள் ஒன்றுக்கொன்று விரோதமின்றியிருந்தால்மூன்றுமுயர்ந்ததென்பது என்னுடைய அபிப்பிராயம்.

௨௨௫—ஞாநத்தைக் கற்பிக்கிறதினால் ஆசாரியன் பரமாத்துமாவின் உருவமாகவும், உண்டுபண்ணுவதால் தகப்பன் பிரமனுருவமாகவும், தன்னைத்தரித்திருந்ததால் மாதா பூமியினுருவமாகவும்,சகோதரன் தன்னோடுகூடப்பிறந்தமையால் ஆத்மாவினுருவமாகவும், எண்ணத்தக்கவர்கள்.

௨௨௬—ஆசாரியன்-பிதா-மாதா-ஜேஷ்டபிராதா-இவர்களை தனக்குக் கஷ்டம்வந்திருந்தபோதிலும், அவமாநஞ் செய்யக்கூடாது அதிலும், பிராமணன் ஒருக்காலும் செய்யப்போகாது.

௨௨௭—மாதாபிதாக்கள் பிள்ளையைப்பெறுகிறவிஷயத்தில்பிரச

† உபஸ்தாநம்-என்பது-சூரியநமஸ்காரம்.

வயேதனைதொடங்கி, வித்தையைக்கற்பிக்கிறவனாயில் எவ்வளவுகஷ்டப்படுகிறார்களோ அதற்குப்பிரத்தியுபகாரம் எத்தனை ஜநநமெடுத்தபோதிலும் செய்யவரிது.

உஉஅ—தாய்-தந்தை-ஆசாரியன்-இவர்களின் இஷ்டத்தைத் தினந்தோறுஞ் செய்யவேண்டியது. அவர்கள் சந்தோஷிப்பட்டிருந்தால் எல்லாதவப்பலன்களும் உண்டாகும்.

உஉகூ—அம்மூவர்களுக்கும் பணிவிடைசெய்வதையே உயர்ந்ததவமாகச் சொல்லுகிறார்கள். ஆகையால் அவர்களினுத்தரவன்றிச் சுயமா ஒரு வேறுதருமத்தைச்செய்யலாகாது.

உ௩0—அந்தமூவருமே மூவுலகமாகவும் மூன்றாசிரமங்களாகவும் மூன்றுவேதங்களாகவும், மூன்றக்கினிகளாகவும் சொல்லப்படுகிறார்கள்.

உ௩க—அதில் தகப்பன்-காருகபத்தியாக்கினியாகவும், மாதா தக்ஷிணாக்கினியாகவும் ஆசாரியன்-ஆகவநீய அக்கினியாகவும், சொல்லப்படுகிறார்கள். இந்த மூன்றக்கினிதான் திரேதாக்கினியைவிட உயர்ந்தன.

உ௩உ—இந்த மூன்றுபேர்களிடத்திலும், பத்தியுள்ளவன் மூன்றுலோகங்களையுஞ் செயித்தவனாய் சூரியாதிதேவர்கள்போல் ஒளியுள்ளசரீரத்துடன் சுவர்க்காதிலோகங்களையடைவன்.

உ௩௩—மாதுருபத்தியால் இம்மையிற் சுகத்தையும், பிதுர்பத்தியால் சுவர்க்கசுகத்தையும் ஆசாரியபக்தியால் பிரம்மலோகசுகத்தையும் அடைகிறான்.

உ௩௪—எவனாலேஇம்மூவர்களும் ஆதரிக்கப்பட் டிருக்கிறார்களோ அவனுக்கு சகலதர்ம்மங்களும் பலனைக்கொடுக்கும், எவனாலே ஆதரிக்கப்படவில்லையோ அவனுக்கு சகலதர்ம்மங்களும் பலனற்றதாகிவிடும்.

உருரு—அம்மைவர்களும் எதுவனாயிலுஞ் ஜீவித்திருப்பார்களோ அதுவனாயில்வேறுதர்மத்தில் மநம்லவயாமல் அவர்களின் பணிவிடையை அன்போடுசெய்யவேண்டியது.

உருசு—அவர்களின் பணிவிடைக்கு விரோதமில்லாமல் அவர்களுத்தரவின்பேரில் மநோவாக்கு காயங்களால் பரலோகத்துக் குதவியான யாதாவ தொருதருமத்தைச் செய்யவேண்டியது· செய்தபின்னும் அவர்களுக்கு அறிவிக்கவேண்டியது.

உருஎ—இவர்களிடத்திற் பணிவிடைசெய்வதுதான் மேலானதர்மம் மற்ற எக்யாதிகருமங்கள்· இரண்டாம்பக்ஷமான தருமமாகச் சொல்லப்படுகின்றன்.

உருஅ—அன்புள்ளவன் மேலானவித்தையை சூத்திரனிடத்திலிருந்தாலும், மோக்ஷகருமத்தை சண்டாளனிடத்திலிருந்தாலும், ஸ்திரி ரத்திநத்தை தனக்குத் தாழ்ந்தகுலத்திலிருந்தாலுங் கிரகித்துக்கொள்ளலாம்·

உருகூ—அமிர்தம் விஷத்திலிருந்தாலும் - நல்லவசநம்சிறுவனிடத்திலிருந்தாலும்-நல்லொழுக்கஞ் சத்துருவினிடத்திலிருந்தாலும் - சுவர்நம் அம்மேத்தியத்திலிருந்தாலுங் கிரகித்துக்கொள்ளலாம்.

உசo—மாதர்கள்-இரத்திநங்கள்-கல்வி-தர்மம் -ஆசாரம் - நல்லவசநம்- இன்னும்பலபல சிற்பசாஸ்திரம் இவைகளெந்தவிடத்திலிருந்தாலும் கிரகித்துக்கொள்ளத்தக்கவைகள்.

உசக—பிராமணன் அகப்படாமல் ஆபத்காலம் நேரிட்டால் க்ஷத்திரிய வைசியாளிடத்திலிருந்தாவது வேதத்தையோதவேண்டியது வேதம்-ஓதிமுடிகிறவனாயில் அக்குருவுக்குப் பணிவிடைசெய்யவேண்டியது.

உசஉ—மோக்ஷத்தை விரும்புகிற பிரமசாரியானவன் க்ஷத்திரிய வைசியகுருவினிடத்திலும் அநுஷ்டாநமில்லாத பிராமணகுருவினிடத்திலும் வேதமோதினபின்பு வாசஞ்செய்யக்கூடாது.

உசரு—பிரமசாரிக்கு கலியாணத்தில் விருப்பமில்லாமல் குரு குலவாசத்திலேயே மநமிருந்தால் ஜிதேந்திரியனாய் ஞாநமுள்ள பிராமணகுருவினிடத்தில் பிராணாந்தபரியந்தம் நைஷ்டிகபிரம சாரியாவசிக்கலாம்.

உசச—எவன் இறக்கிறவரையில் இந்தப்படிகுருவுக்குப்பணிவி டைசெய்கிறானோ அவன்சாஸ்வதமானமோக்ஷத்தையடைகிறான்.

உசரு—சீடனானவன் வேதமோதுகிறத்துக்குமுந்தி குருவுக்கு பசு-வஸ்த்திரமுதலிய தக்ஷிணைகொடுக்கக்கூடாது வேதமோதிமுடி ந்தபின்பு தான்விவாகஞ்செய்துகொள்ளக் குருவினிடத்துத்தரவு பெற்றுக்கொள்ளும்போது அவர்விரும்பியபொருளைக் குருதக்ஷி ணையாகக்கொடுக்கவேண்டியது.

உசசு—பூமி-சுவர்ந்நம்-பசு-குதிரை- பாதரக்ஷை-குடை - ஆச நம்- தாநியம்-கறியமுது- வஸ்திரம்-இவைகளைக் கொடுத்தால் குரு வுக்குச் சந்தோஷத்தையுண்டுபண்ணும்.

உசஎ—நைஷ்டிக பிரமசாரியானவன் தன்குரு இறந்துவிட் டால் அவருடைய குணமுள்ளபுத்திரனிடத்திலாவது, பத்திநியினி டத்திலாவது, ஞாதியிடத்திலாவது, தன்தேகமுள்ளவரையில் பணி விடைசெய்துகொண்டு வசிக்கலாம்.

உசஅ—அவர்களுமில்லாவிடில் தன்னாசிரியன் ஓமஞ்செய்தவை தீகாக்கிநிகுண்டத்தின் சமீபத்தில் ஆசநம்போட்டுக்கொண்டு திந ந்தோறும் அவ்வக்கிநியில் சமித்தினாலே ஓமஞ் செய்துகொண்டு தன்காலத்தைக் கழிக்கவேண்டியது.

உசகூ—இதுவரையிற்சொல்லிவந்த விதிப்படி எந்தப்பிரமசா ரியானவன் விரதத்தை யநுஷ்டிக்கிறானோ. அவன் மோக்ஷத்தைய டைகிறான். அவனுக்கு மறுபிறப்புக்கிடையாது.

இரண்டாவதுஅத்தியாயம்-முற்றிற்று.

மூன்றாவது

# அ த் தி ய ா ய ம்.

## கிரகஸ்ததருமம்.

முதலாவது—மேற்சொன்னபடி மூன்றுவேதமும் ஓதுவதற்காகக் குருவினிடத்தில் முப்பத்தாறு-அல்லது பதினெட்டு- அல்லது ஒன்பது-வருஷமாவது-அல்லது ஓதிமுடிகிறவனாயிலாவது-பிரமசரியவிரதத்தை அநுஷ்டிக்கவேண்டியது.

உ—தன்வேதத்தைமுன்னிட்டு மூன்றுவேதங்களையாவது - இரண்டுவேதங்களையாவது-அல்லது-தன்வேதத்தையாவது-பிரமசரிய விரதம் வழுவாமல் ஓதி கிரகஸ்த்தாசிரமத்தையடையவேண்டியது

௩—பிதாவினிடத்தினின்றாவது அவரில்லாதபக்ஷத்தில் ஆசாரியரிடத்துநின்றாவது - விதிப்படிவேதமோதி முகிந்தவனாயிருக்கிற புத்திரனை-அல்லது-சிஷ்யனை பிதா-அல்லது- ஆசாரியன் புஷ்பசந்தநாதிகளாலே அலங்கரித்துஉயர்ந்தஆசநத்தில் உளுக்காரவைத்து கோதாநவிரதஞ் செய்வித்து பஞ்சாமிர்தத்தினு லுபசரிக்கவேண்டியது இது சமாவர்த்தநம்.

## விவாகவிஷயம்.

௪—மேற்சொன்னபடி சமாவர்த்தநஞ் செய்யப்பட்ட பிரமசாரியானவன்குருஅல்லது-தந்தையின் அநுமதிபெற்றுக்கொண்டு தன்வருணத்திற்பிறந்தவளாயும் லக்ஷணத்தோடுகூடியவளாயுமிருக்கிற கந்நிகையைக்கலியாணஞ்செய்துகொள்ள வேண்டியது.

ரு—தன்தாயின் எழுதலைமுறைக்குட்படாதவளாயும், தன்தகப்பன்கோத்திரத்திற் பிறவாதவளாயும், இருக்கிற கந்நிகையானவள் மூன்றுவருணத்தாருக்கும்-வைதீககாரியத்துக்கும்- புத்திரனையுண்டு பண்ணுகிறதற்குந்தக்க-ஸ்த்திரியாகச்சொல்லப்படுகிறாள்.

௬—பசு-வெள்ளாடு-செம்மறியாடு-தநம்-தாநியம் - இவைமுதலிய அதிகசம்பத்தையுடையவர்களாயிருப்பினும் மேற்சொல்லப்போகிற பத்துக்குலத்தையும் விவாகசம்பந்தத்தில் நீக்கிவிடவேண்டியது.

௭—சாதகர்மாதி சமஸ்காரமில்லாதவன் குலம்-புருஷப்பிரசையில்லாமல் ஸ்த்திரிபிரசையாகவேபிறக்குங்குலம்-வேதமோதாதகுலம்-தேகத்தில் நீளமானமயிருள்ளவன்குலம்- மூலவியாதியுள்ளகுலம்-க்ஷயரோகமுள்ளகுலம் - அக்கிநிபுஷ்ட்டியில்லாதவன்குலம்-பெருவியாதி யுள்ளகுலம் - வெண்குட்டமுள்ளகுலம் - குஷ்டவியாதியுள்ளகுலம் ஆக பத்தையும் நீக்கவேண்டியது.

௮—செம்பட்டமயிருள்ளவள்-அதிகவுபரமுள்ளவள்- தீராப்பிணியுள்ளவள்-மயிரில்லாதவள்-உடம்பெல்லாமயிருள்ளவள்-குரூரமாகப்பேசுகிறவள்-செங்கண்ணுள்ளவள்.

௯—நக்ஷத்திரம்-விருக்ஷம்-நதி-ஈநசாதி -மலை-பக்ஷி-பாம்பு-வேலைக்காரன் இவற்றின்பேருள்ளவள் - பயங்கரமானபேருள்ளவள்-இவ்வகை கந்நியரை விவாகஞ்செய்யக்கூடாது.

௰—அழகுள்ளவளாயும்-நல்லபேருள்ளவளாயும்-அன்னம்-யானை-இவற்றைப்போல்நடையுள்ளவளாயும்-மெல்லிதான,சரீரம்-மயிர்-பல் - இவைகளையுடைத்தானவளாயும், சிறுகுரலுள்ளவளாயும் இருக்கிறகந்நிகையைக் கலியாணஞ்செய்துகொள்ளவேண்டியது

௧௧—எந்தக்கந்நிகைக்கு பிராதாயில்லாமலும், தகப்பன் இன்னானென்றறியக்கூடாமலும், போய்விடுமோ அவளை இந்தக்கோத்திரத்தாளென்றறியக்கூடாமையாலும், அவளிடத்திற்பிறக்கிற பிள்ளை புத்திரிகாபுத்திரனவனென்கிறதினாலும் - விவாகஞ்செய்யக்கூடாது (புத்திரிகாபுத்திரனென்பதை ஒன்பதாவதத்தியாயத்திற்காண்க.)

௧௨—துவிஜர்களுக்கு முக்கியமாவிவாகஞ்செய்யும்போது தன் வருணத்திலேயே விவாகஞ்செய்வதுயர்ந்தது காமத்தினாலே இரண்டாவது விவாகஞ்செய்வதாயிருந்தால் மேற்சொல்லப்போகிற படிசெய்துகொள்ளவேண்டியது.

௧௩—சூத்திரனுக்குத்தன் சாதியிலும் வைசியனுக்கு தன்சாதியிலும் சூத்திரசாதியிலும் க்ஷத்திரியனுக்கு தன்சாதியிலும் வைசியசூத்திரசாதியிலும், பிராமணனுக்கு தன்சாதியிலும், மற்றமூன்றுசாதியிலும் விவாகஞ்செய்துகொள்ளலாம்.

௧௪—பிராமணன்-க்ஷத்திரியன்-இவர்களுக்கு தன்வருணத்துக்கந்நிகையகப்படாத ஆபத்துக்காலத்திலும் சூத்திரகந்நிகையைமுதலில் விவாகஞ்செய்யக்கூடாது.

௧௫—தன்சாதிக்குத்தாழ்ந்தசாதியில் விவாகஞ் செய்துகொள்ளுந்துவிஜர்கள் தன்குலத்தையும், புத்திரரையும் சூத்திரத்தன்மையையடைவிக்கிறார்கள்.

௧௬—சூத்திரசாதிக்கந்நிகையை கலியாணஞ்செய்கிறவன் பதிதனாகிறானென்று அத்திரியும் கௌதமரும்சொல்லுகிறார்கள் இது பிராமணவிஷயம்) சூத்திரக்கந்நிகையினிடத்து புத்திரனையுண்டுபண்ணுகிறவன் பதிதனாகிறான் என்றுசௌனகர்சொல்லுகிறார் இது (க்ஷத்திரியவிஷயம்) சூத்திரகந்நிகையினிடத்துப்பிறந்தவன் பதிதனாகிறானென்று பிருகுசொல்லுகிறார் (இதுவைசியவிஷயம்.)

௧௭—படுக்கையில் சூத்திரகந்நிகையோடு சமமாய்ப்படுத்திருக்கிற பிராமணன் நரகத்தையடைகிறான் பிள்ளையுண்டுபண்ணினால் பிராமணத்தன்மையினின்று நீங்கியேவிடுகிறான்.

௧௮—எவனுக்குத் தன்சாதியிற்பிறந்த பிள்ளையில்லாமல் சூத்திரசாதியிற் பிறந்தவன் வைதிக கர்மங்களைச்செய்கிறானோ அந்த

அவிசை தேவர்களும் பிதுர்க்களும் புசிக்கமாட்டார்கள் ஆகை யால் அவனுக்குச் சுவர்க்காதி புண்ணியலோகமில்லை.

௧௯—சூத்திரஸ்த்திரியின் அதரபாநஞ் செய்தவனுக்கும், அவ ளின்மூச்சுக்காற்று மேற்பட்டவனுக்கும், அவளிடத்திற் பிறந்தவனு க்கும், பிராயச்சித்தங்கிடையாது.

௨௦—நாலுசாதியாருக்கும் இம்மையிலும் மறுமையிலும்நன் மையையுந் தீமையையும் உண்டுபண்ணுகின்ற எட்டுவிவாகத்தை யுஞ்சுருக்கமாகச்சொல்லுகிறேன்கேளுங்கள்.

௨௧—பிராமம்-தெய்வம் - ஆருஷம்-பிராஜாபத்தியம்-ஆசுரம்- காந்தருவம்-இராக்ஷசம் தாழ்ந்ததானபைசாசம் -ஆக. அ.

௨௨—எந்தவருணத்தானுக்கு எந்தவிவாகம் உயர்ந்ததோ எந்த விவாகந்தாழ்ந்ததோ எந்தவிவாகத்தினால் பிறந்தபிள்ளையுயர்ந்தவ னோ எந்தவிவாகத்தினாற்பிறந்தவன் தாழ்ந்தவனோ இவைகளைமே லே சொல்லப்போகிறேன்கேளுங்கள்.

௨௩—பிராமணனுக்கு பிராமம்முதல் காந்தருவம்வரையில் கி ரமமாகஆறும் க்ஷத்திரியனுக்கு ஆசுரம்முதல் பைசாசம்வரையில் நான்கும் வைசியசூத்திராளுக்கு மேற்சொன்னநான்கில் இராக்ஷ சம் நீங்கலாக மூன்றும் தருமத்தைக்கொடுக்கத்தக்க விவாகங்களெ ன்றறியவேண்டியது.

௨௪—ஆனால் பிராமணனுக்கு பிராமம்முதல் நான்கினையும் க்ஷத்திரியனுக்கு இராக்ஷசத்தையும் வைசியசூத்திராளுக்கு ஆசுர த்தையும் உத்தமவிவாகமென்று பெரியோர்கள்சொல்லுகிறார்கள்

௨௫—பிராசாபத்தியமுதல் பைசாசவரையில் ஐந்துவிவாகத்து ள் மூன்று உயர்ந்தது இரண்டு தாழ்ந்தது ஆகையால் ஆசுரம் பைசாசம் இவ்விரண்டையும் பிராமணக்ஷத்திரியாள் செய்யலா காது.

உசு—காந்தருவம் இராக்ஷசம் இவ்விரண்டும் க்ஷத்திரியனுக்குயர்ந்ததாகவிருப்பதால் அவ்விரண்டையும் பண்ணிக்கொண்டாலும்,அல்லது ஒன்றைப்பண்ணிக்கொண்டாலும் கொள்ளலாம்.

உஎ—வேதமோதினவனையும், நல்லொழுக்கமுள்ளவனையு மிருக்கிற பிரமசாரியைத் தானுசுமே்வ அழைப்பித்து அவனை நூதநவஸ்த்திரத்தா லலங்கரித்து கந்நிகையை வஸ்திராபரணங்களா லலங்கரித்து அவனுக் கக்கந்நிகையைத் தாநஞ்செய்வது பிராமவிவாகம்.

உஅ—சோதிஷ்ட்டோமாதி எக்கியத்தில் தனக்குப்புரோகிதனுகவிருப்பவனுக்குத் தன்பெண்ணை அலங்கரித்துக் கொடுப்பதை தெய்வவிவாகமென்றுசொல்லுகிறார்கள்.

உகூ—தான் செய்யவேண்டிய யாகாதிதர்மத்துக்காக வரனிடத்தில் நின்றும் ஒரு-ருஷபம்-ஒருபசு-அல்லது இரண்டு ருஷபம்-இரண்டுபசு-இவைகளைவாங்கிக்கொண்டு கலியாணஞ்செய்துகொடுப்பதை ஆருஷவிவாகமென்றுசொல்லுகிறார்கள்.

ரு0—ஒருபிரமசாரியை யழைத்துப் பூசித்து தன்பெண்ணைத் தாநம்பண்ணும்போது நீங்களிருவருமாய் தருமங்களைச்செய்யுங்கோளென்று சொல்லிக்கொடுப்பதை பிரஜாபத்தியமென்று சொல்லுகிறார்கள்.

ருக—பெண்ணின் தகப்பனுக்கு கேழ்க்கும்பணத்தைக்கொடுத்து பெண்ணுக்கும் பூஷணங்களைப்போட்டு பெண்ணைவாங்கி விவாகஞ்செய்துகொள்ளுவதை ஆசுரவிவாகமென்று சொல்லுகிறார்கள்

ருஉ—ஸ்த்திரியும் புருஷனும் ஒருவர்க்கொருவர் புணர்ச்சியின் ஆசையால் மநமொத்து தாங்களாகச்சேர்தலை காந்தருவமென்று சொல்லுகிறார்கள்.

௩௩—ஒருவன் பலத்தினாலே ஒருகந்நிகையை அழும்போது அவள்வீட்டில்நின்றும், அவளது பந்துக்களையடித்தும், கொன்றும், பிளந்தும், வலிமையாற்கொண்டுபோகிறானே அதை இராக்ஷசவிவாகமென்றுசொல்லுகிறார்கள்.

௩௪—ஒருகந்நிகை தூங்கும்போதும் குடியினால் மயங்கியிருக்கும்போதும், பித்துக்கொண்டவளாயிருக்கும்போதும் அவளுடனே புணர்ச்சிசெய்வது முன்சொன்னஎழுவிவாகங்களுக்குந் தாழ்ந்ததான பைசாசவிவாகமென்று சொல்லுகிறார்கள்.

௩௫—ஜலத்தைக் கையில்இட்டுக் கந்நிகாதானஞ்செய்வதே பிராமணனுக்குயர்ந்தது. மற்ற மூன்றுவருணத்தாருக்கும் அப்படியே செய்துகொள்ளவேண்டுமென்னும் நியமமில்லை வாயினால் மந்திரஞ்சொல்லியுஞ் செய்துகொள்ளலாம்.

௩௬—ஓ-ருஷீசுரர்களே இதுவரையில்விவாகங்களின் கிரமங்களையுங்களுக்குச்சொன்னேன் இனி அந்தந்த விவாகங்களாற் பிறக்கும் பிள்ளைகளுக்கு மநுவினாற்சொல்லப்பட்ட குணதோஷங்களைச் சொல்லுகிறேன்.

௩௭—பிராமவிவாகஞ்செய்து பிறந்தபிள்ளை சாதுவாயிருந்தால் தன்முன் பத்துத்தலைமுறைவரையிலுள்ள பிதுர்க்களையுந் தன்னையும் நரகத்துக்குப்போகாமல் நல்லலோகத்தையடைவிக்கிறான் அவனுக்குப் பின்னும் பத்துத்தலைமுறைவரையில் சாதுக்களாகவே புத்திரர்பிறந்து நல்லகதியையடைகிறார்கள்.

௩௮—தெய்வவிவாகஞ்செய்துபிறந்தபிள்ளை தன் முன்னேழு பின்னேழு தலைமுறையிலுள்ளவர்களையும், ஆருடவிவாகஞ்செய்தவனுக்குப்பிறந்தபிள்ளை முன்மூன்று பின்மூன்று தலைமுறைகளிலுள்ளவர்களையும், பிராஜாபத்தியவிவாகஞ்செய்தவனுக்குப்பிறந்த

பிள்ளை முன்றூறு பின்றூறு தலைமுறையிலுள்ளவர்களையும் தன்னையும் கடைத்தேறப்பண்ணுகிறார்கள்.

௩௯—பிராமமுதலான எட்டுவிவாகங்களுக்குள் இப்போது கிரமமாகச்சொல்லிவந்த நாலுவிவாகத்தாற்பிறந்த பிள்ளைகள்மாத்திரம் பிரம்மதேய சுள்ளவர்களாயும் பெரியோர்களால் புகழப்பட்டவர்களாயுமிருக்கிறார்கள்.

௪௦—மேலும் அழகு-பலம்-குணம்-பொருள்-கீர்த்தி - போதுமான அநுபோகம்-தர்மம்-இவைகளுள்ளவர்களாய் நூறுவருஷம் ஜீவித்திருக்கிறார்கள்.

௪௧—மற்ற நான்குவிவாகத்தாற்பிறந்த பிள்ளைகள்கொலைசெய்கிறவர்களாயும், பொய்சொல்லுகிறவர்களாயும், வேதத்தையும்,யாகாதிதருமத்தையும், பகைக்கிறவர்களாயும், இருக்கிறார்கள்.

௪௨—முக்கியமாய் உத்தமமான விவாகத்தாற்பிறக்கும் பிள்ளைகள் சாதுக்களாயிருப்பார்கள் நிந்திக்கத்தக்க விவாகத்தாற்பிறக்குப்பிள்ளைகள் துஷ்டர்களாயிருப்பார்கள். ஆகையால் கெட்டதானவிவாகங்களைச்செய்யக்கூடாது.

௪௩—தன்சாதியிற் கலியாணம்பண்ணும்போது பாணிக்கிரகணத்தைமுன்னிட்டு விவாகஞ்செய்துகொள்ளவேண்டியது. மற்றசாதியிற்செய்துகொண்டால் மேற்சொல்லும்விதிப்படி செய்துகொள்ளவேண்டியது.

௪௪—க்ஷத்திரியஸ்த்திரி தனக்குமேலான வருணத்தானைக் கலியாணஞ்செய்துகொள்ளும்போது அவன் பிடித்துக்கொண்டிருக்குந்தண்டத்தையும் வைசியமாது அவ்விதமாகக்கலியாணஞ்செய்துகொள்ளும்போது அவன்பிடித்துக்கொண்டிருக்குஞ் சாட்டைக்கயிற்றினுனியையும் சூத்திரஸ்திரி அவனுடையவஸ்திரத்தினுனியை

யும் பிடித்துக்கொண்டுவிவாகஞ்செய்துகொள்ளவேண்டியது.

சரு—மனிதனானவன் பரதாரத்தைவிரும்பாமல் தன்தாரத்தினிடத்திடைவிடாத அன்புள்ளவனாய் அவளுடைய மேற்சொல்லப்போகிற ருதுகாலத்தில் சேரவேண்டியது. அல்லது மற்றகாலத்தில் அவளாலே விரும்பப்பட்டாவது, அல்லது தனக்கே புணர்ச்சி விருப்பத்தாலாவது, பருவகாலம் நீங்கலாக சேரவேண்டியது.

சசூ—மாதர்களுக்கு ருதுகாலம் வழக்கமா பதினாறுநாளென்று சொல்லப்படுகின்றது. அதில் மாதவிடாயானதுமுதல் நாலுநாள் பெரியோர்களாலே நிந்திக்கப்பட்டிருக்கின்றது.

சஎ—மேற்சொன்ன நாலுநாளுடன் ஏகாதசி திரயோதசி இவ்விரண்டையும் நீக்கி மற்றப்பத்துதினத்தில் சேர்வதேஉயர்ந்ததாகச்சொல்லுகிறார்கள்.

சஅ—மாதவிடாயானது முதல்-ஆறு-எட்டு-பத்து-பன்னிரண்டு பதினாலு-பதினாறு-இந்த இராத்திரிகளில் சேர்ந்தால் பிள்ளைகளும் ஐந்துமுதல் ஒற்றைப்பட்டநாள்களில் சேர்ந்தால் பெண்களும் பிறக்கின்றன. ஆகையால் புத்திரவிருப்புள்ளவன் இரட்டைதினத்திற்சேரவேண்டியது.

சகூ—புருஷனுக்கு சுக்கிலம் அதிகமாகவெளிப்படுமானால் புத்திரனாகவும், மாதர்க்குச் சுரோணிதமதிகமாகவிருந்தால் ஸ்த்திரீயாகவும், இருவருக்குஞ் சரியாயிருந்தால் பேடியாகவும், இருவருக்கும் இல்லாமலிருந்தால் அல்லது சொற்பமாயிருந்தால் கெர்ப்பவுற்பத்தியில்லாமையும் உண்டாகிறது.

டு0—எவன் நீக்கவேண்டியதான நாலுநாளையும் ஏகாதசி திரியோதசி இந்தநாளையும், அமாவாசி பௌர்ணமாவாசியும் நீக்கி மற்றதினத்தினிரவில் தன்மனைவியுடன் சேருகிறானோ அவன் கிரகஸ்தனாக விருப்பினும் பிரமசாரியாகவே சொல்லப்படுகிறான்

௫௧—பெண்ணைப்பெற்றதகப்பன் தெரிந்தவனாயிருந்தால் அந்தப் பெண்ணுக்காகக் கொஞ்சமேனும் பணம்வாங்கிக் கொண்டு கொடுக்கக்கூடாது. அப்படியாசையால் வாங்கிக்கொண்டால் பெண்ணைவிற்றவனாகவே ஆகிவிடுகிறான்.

௫௨—ஒருபெண்ணின் கணவனேனும் தகப்பனேனும் அவளுக்கு விவாககாலத்தில் ஸ்த்திரிதநமாகக் கொடுக்கப்பட்ட ஆடை ஆபரணம் -வாகநம் -இதுகளை பின்னுந் தாங்களுபயோகப்படுத்திக் கொண்டால் அவர்கள் அந்தப்பாவத்தினாலே அதோகதியையடைகிறார்கள்.

௫௩—ஆருடவிவாகத்தில் ஒரு-இடபம்-ஒருபசு-அல்லது-இரண்டு இடபம்-இரண்டுபசு வாங்கலாமென்று சிலபெரியோர்கள் அபிப்பிராயத்தை முன்சொல்லியிருக்கிறோம். அதுவும் தருமகாரியத்துக்கன்றி தன்னாசையினாலே வாங்கிக்கொள்ளுகிறது நியாயமன்று கொஞ்சமாவது, அதிகமாவது தன்னாசையால் வாங்கினால் அதுவும் விற்றதுபோலவேயாகும்.

௫௪—எந்தப்பெண்களின் பந்துக்கள் பணம்வாங்காமல் தானஞ்செய்கிறார்களோ அதுவிக்கிரயமன்று அவர்கள்தான்அந்தப்பெண்ணினிடத்தில் தயையும்-அன்பும்-உடையவர்களாயிருக்கிறார்கள்.

௫௫—தந்தை-கணவன்- உடன்பிறந்தார்-மைத்துனர் இவர்கள் க்ஷேமத்தை விரும்பினவர்களானால் பெண்டுகளை -கலியாணகாலத்திலும் பின்னும் பூஷணமுதலானவற்றால் உபசரித்து சந்தோஷிப்படுத்தவேண்டியது.

௫௬—எந்தவீட்டில் மாதர்கள் பூஷணமுதலியவற்றால் சந்தோஷித்தையடைந்திருக்கிறார்களோ அந்தவீட்டில் எல்லாதெய்வங்களும் சந்தோஷித்துடன் வசிக்கின்றார்கள். எந்தவீட்டில்அவ்வாறு

பூசிக்கப்படவில்லையோ அந்தவீட்டில் செய்கிற காரியங்களெல்லா ம்பலனில்லாததாகப் போய்விடுகின்றன.

௫௭—எந்தவம்ஸத்தில் உடன்பிறந்தாள்-முதலியவர்கள் ஆடையாபரணமில்லாததால் வியசநப்படுகிறார்களோ அந்தக்குலம் நசித்துப்போகின்றது. எந்தக்குலத்தில் அவர்கள் வியசநப்படவில்லையோ அந்தக்குலம் எப்போதும் விருத்தியடைகின்றது.

௫௮—மேலும் மாதர்கள் தங்களை பிதாமுதலியவர்கள் உபசரிக்காததால் இந்தக்குலம் அழிந்துபோகத்தக்கதென்று எந்தக்குலத்தைச் சாபமிடுகிறார்களோ அந்தக்குலம் சூநியம் வைக்கப்பட்டது போல் நசித்துப்போய்விடும்.

௫௯—ஆகையால் க்ஷேமத்தைக்கோரியமனிதர்கள் எப்போதும் தன்வீட்டில் நடக்கும் விரதங்கள் கலியாணங்கள் இவைமுதலிய விசேஷகாலங்களில் உடன்பிறந்தாள் முதலானமாதர்களை பூஷிணம் வஸ்த்திரம் சாப்பாடு இவற்றினால் சந்தோஷிப்படுத்த வேண்டியது.

௬0—எந்தவீட்டில் மனைவியினுடைய பணிவிடைமுதலியவற்றால் கணவன் பரதாரத்தைநினையாமலும், கணவனுடைய அன்புமுதலியவற்றால் மனைவி பரபுருஷனை நினையாமலும், ஒருவர்க்கொருவர் சந்தோஷித்துடன் இருக்கிறார்களோ அந்தக்குலத்தில் கலியாணங்கள் நிச்சயமாயுண்டாகின்றன.

௬௧—மனைவியானவள் ஆடையாபரணத்தால் விளங்காமற்போனால் கணவனை சந்தோஷமுள்ளவனாகச் செய்யமாட்டாள் கணவனுக்குச் சந்தோஷமில்லாமற்போனால் புணர்ச்சிசெய்யமாட்டான் அதனால் புத்திரவிருத்தியில்லாமலே போய்விடும்.

௬௨—அந்தமனைவியானவள் ஆடைமுதலியவற்றால் விளங்கினவளாயிருந்தால் கணவன்புணர்ச்சியால் அந்தக்குலம் விருத்தியடை

கின்றது. மனைவியைக் கணவன் விரும்பாமற்போனால் அவள் பர புருஷனோடு புணர்ச்சிசெய்யவரும், அதனாலக்குலமே தாழ்ந்து விடும்.

கூங—அந்தந்தச்சாதியானுக்குத் தகாதவிவாகஞ் செய்வதாலும்,சாதகர்ம்மாதிகளைச் செய்யாமையாலும், வேத மோதாலமையாலும்,பிராமணன்முதலிய பெரியோர்களைப் பூசியாலமையாலும்,உயர்ந்தகுலமும் இழிந்தகுலமாகிவிடும்.

கூச—சித்திரவேலைசெய்வதாலும். விவகாரஞ்செய்வதாலும். சூத்திரஸ்த்திரியைமாத்திரம் கலியாணஞ்செய்து பிள்ளைபெறுவதினாலும், பசு-குதிரை-பண்டி-இவற்றை விற்பனைசெய்வதினாலும் பயிரிவெதாலும் இராஜசேவையாலும்.

கூரு—எக்கியம்பண்ணி வைக்கத்தகாதவிராத்தியன்முதலானவர்களுக்கு அதைச்செய்வித்தலினாலும் தெய்வத்தை யொப்புக்கொள்ளாததினாலும், தத்தம் மந்திராநுஷ்டாநங்களைச் செய்யாததனாலும் நற்குலம் தாழ்வையடைகின்றது.

கூசு—மந்திராநுஷ்டாநத்தோடு கூடினகுலம் சொற்பபொருளுள்ளதா யிருப்பினும் உயர்ந்தகுலத்தோடு நினைக்கத்தக்கதாயும் கீர்த்தியை யுண்டுபண்ணுகிறதாயும் ஆகிறது.

கூஎ—இதுவரையில் விவாகத்தின் குணதோஷங்களைச் சொல்லிமேல் கிரகஸ்ததருமத்தைச்சொல்லுகிறார். விவாகமானபின்பு வைவாகிக்கியில் தன்சூத்திரத்திற்சொல்லிய ஔபாசநமுதலிய கருமங்களை விதிப்படிநடத்தி பஞ்சமஹாவெக்கியத்தில் சேர்ந்ததான வைசுவதேவத்தை நாடோறும் செய்யவேண்டியது.

## பஞ்சமகாஎக்கியவிதி.

கூஅ—கிரகஸ்த்தன் எந்திரம்-அல்லது-முறம்-அம்மி-துடைப்பம்

உரல் உலக்கை - தண்ணீர்க்குடம்- இவ்வைந்தையும்-உபயோகப்ப டுத்திக்கொள்ளுவதால் அவற்றால் அவனுக்கு ஐந்துகொலை யுண்டா கின்றது.

௬௯—அந்த ஐந்துபாபங்களையும் போக்குவதற்காக மகருஷிக ளால் தினந்தோறும், ஐந்துமஹாவெக்கியங்கள் கிரகஸ்தனுக்குக் கிரமமாக விதிக்கப்பட்டிருக்கின்றன.

௭0—அவ்வைந்து எக்கியத்தில் வேதமோதுதல் பிரம்ம எக்கி யம் அந்நத்தினாலாவது, ஜலதருப்பணத்தினாலாவது பிதுர்க்களைக் குறித்துதிருப்த்திசெய்வது பிதுர் எக்கியம்,தேவதைகளைக்குறித்து அக்கினியிலோமஞ்செய்வது தேவ எக்கியம்,வாயசபலி முதலான வைவைப்பது பூதஎக்கியம் அதிதிகளுக்குச் சாப்பாடுபோடுவது மாநுடஎக்கியம்,ஆக மகாஎக்கியம் ஐந்து.

௭௧—இந்த ஐந்துமஹாஎக்கியங்களையும், தன் சக்த்திக்குத்தக்க படி எவன்செய்கிறானோ அவன் கிரகஸ்த்தாசிரமத்தி லிருந்தபோ திலும் மேற்சொன்ன ஐந்துகொலைகளின் தோஷங்களை யடைகி றானில்லை.

௭௨—தான் வழிபடுதேவதைகள்-அதிதிகள்-வேலைக்காரர்கள்- தா ய்-தந்தைமுதலியபிதுர்க்கள்-தன்னாத்துமா-ஆகிய இவ்வைந்தும்ப ர்களுக்கும், எவன் அந்நமுதலியவற்றால் திருப்த்திசெய்யவில்லை யோ அவன் மூச்சுவிட்டுக்கொண்டிருந்தாலும் இறந்தவனுக்கொ ப்பாவான்.

௭௩—சிலபெரியோர்கள் இவ்வைந்து மஹாவெக்கியங்களுக்கு ம் அகுதம் என்றும், குதம் என்றும், பிரகுதமென்றும், பிராமிய குதமென்றும், பிராசிதமென்றும், வேறான நாமதேயங்களைச் சொ ல்லுகிறார்கள்.

௭௪—அகுதமாவது பிரம்மவெக்கியம் குதமாவது தேவஎக்கி

யம் பிரகுதமாவது பூதவெக்கியம் பிராமியகுதமாவது மாநுட வெக்கியப் பிராசிதமாவது, பிதுரெக்கியம்.

எடு—சிலவேளை வறுமையால் மாநுடஎக்கியம் பண்ணுதற்குச் சக்த்தியில்லாவிடினும் பிரம்ம எக்கியும் தேவ எக்கியம் இவைகளை யாவது இடைவிடாமற் செய்யவேண்டியது. தேவஎக்கியத்தில் அன் புள்ளவன் தாபரசங்கமத்தை இரக்ஷிக்கிறான்.

எசு—தேவர்களைக்குறித்து அக்கினியில்செய்யப்படுகிற ஓமங்க ள் சூரியனையடைகின்றன அவரிடத்தினின்றும் வருஷமுண்டாகின் றது அதனாலே தானியங்களுண்டாகின்றன அதனாலே ஜீவகோடி கள் விருத்தியடைகின்றன என்றுவேதத்திற் சொல்லப்பட்டிருக் கின்றது.

எஎ—சர்வஜெந்துக்களும் பிராணவாயுவையடைந்து எவ்வித மாய்ஜீவிக்கின்றனவோ அவ்விதமாய்-பிரமசாரி-வானப்பிரஸ்தன் சந்நியாசி-இம்மூவரும்-கிரகஸ்த்தனை அநுசரித்து ஜீவிக்கிறார்கள்.

எஅ—எந்தக்காரணத்தாலே கிரகஸ்த்தன் வேதமோதி வைப்பதி னாலும் பிக்ஷைபோடுவதினாலும் மற்ற மூன்றாசிரமத்தாரும் காப் பாற்றப் படுகிறார்களோ அந்தக்காரணத்தாலே அவனாசிரமமுயர் ந்ததென்று சொல்லப்படுகின்றது,

எகூ—இம்மையில் சுகத்தையும் மறுமையில் சாஸ்வதபுண்ணிய லோகத்தையும் எவன்விரும்புகிறானோ அவன் அந்தக்கிரகஸ்த்தாசி ரமத்தை முயற்சியுடன் காப்பாற்றவேண்டியது அது-இந்திரியக் கட்டுப்பாடில்லாதவர்களால் காப்பாற்றுவதரிது.

அ0—ருஷிகள்-பிதுர்க்கள்-தேவர்கள்-பூதங்கள்-அதிதிகள்-இவர் கள் கிரகஸ்த்தரிடத்தினின்றுந் திருப்த்தியைவிரும்புகிறார்கள் ஆ கையால் அதைமேற்சொல்லுகிறபடி செய்யவேண்டியது.

அக—வேதாத்தியயநத்தினலே ருஷிகளேயும் ஓமத்தினலே தேவர்களேயும், சிரார்த்தத்தினலேபிதுர்க்களேயும், போசநத்தினலே அதிதிகளேயும், பலிபோடுவதினலே பூதங்களேயும், திருப்த்திசெய்விக்க வேண்டியது.

அஉ—திநந்தோறுஞ்செய்யத்தக்கதான-பிதுர்-எக்கியத்தை அந்நத்தினலாவது அல்லது - சக்த்திக்குள்ளபடி ஜலதருப்பணத்தினலாவது-பால்-கிழங்கு-பழம்- இவைகளினலாவது பிதுர்க்களின் பிரீதியின்பொருட்டு செய்யவேண்டியது.

அரு—பஞ்சமஹாஎக்கியத்தில் சேர்ந்ததானபிதுர் எக்கியத்தில் ஒருபிராமணனேயாவது புசிப்பிக்கவேண்டியது பூத எக்கியத்தில் ஒருவனேயும் புசிப்பிக்கவேண்டியதில்லை பலிமாத்திரம்போடவேண்டியது.

அச—வைசுவதேவத்திற்காக பாகஞ்செய்யப்பட் டிருக்கிற அந்நத்தை லௌகீகாக்கிநியில் மேற் சொல்லப்போகிற தேவதைகளேக்குறித்து மூன்றுவருணத்தாரும் நாடோறும் ஓமஞ்செய்ய வேண்டியது.

அடு—அக்கிநிக்கும், சந்திரனுக்கும், அக்கிநீ ஷோமர்களுக்கு ஒன்ருகவும், விஸ்வேதேவர்களுக்கும்,தன்வந்திரிக்கும்.

அசு—குருவுக்கும், அநுமதிக்கும், பிரஜாபதிக்கும், ஆகாசபூமிகளுக்கு ஒன்ருகவும், இவைகளின்முடிவில் ஸ்விஷ்ட கிருதுவென்னும்அக்கிநிக்கும்ஓமம் செய்யவேண்டியது.

அஎ—இந்தப்படி அந்தந்தேவர்களுக்கு ஓமஞ் செய்யும்போது அந்தந்தேவர்களேத் தியாநஞ்செய்ய வேண்டியது. பின்பு கிழக்குத்திக்கில் இந்திரனுக்கும், இந்திரபரிஜநங்களுக்குப், தெற்குத்திக்கில் யமனுக்கும், யமபரிசநங்களுக்கும், மேற்குத்திக்கில்

வருணனுக்கும், வருணபரிசநங்களுக்கும், வடக்குத்திக்கில் சோமனுக்கும், சோமபரிசநங்களுக்கும் வரிசையாப்பூமியில் பலிவைக்கவேண்டியது.

அஅ—தேவர்களுக்கு வீட்டின்வாசற்படியிலும் ஜலதேவதைகளுக்கு ஜலத்திலும் வநதேவதைகட்கு உரலுலக்கையிரண்டிலுமாவது அல்லது-ஒன்றிலாவது பலிவைக்கவேண்டியது.

அகூ—தன்வீட்டின் வடகிழக்கில் அல்லது தன்சயநத்தின்தலைப்பக்கத்திலாவது லட்சுமிக்கும் தன்வீட்டின் தென்மேற்கிலாவது அல்லது தன்சயநத்தின் காற்பக்கத்திலாவது பத்திரகாளிக்கும் வீட்டினடுவில்பிரமனுக்கும் வாஸ்த்துபுருஷனுக்கும் பலிவைக்கவேண்டியது.

கூ0—விசுவேதேவர்களுக்கும், பகலிற்சஞ்சரிக்கும் பிராணிகளுக்கும், இரவிற்சஞ்சரிக்கும் பிராணிகளுக்கும், முற்றத்திலுகாயத்தில் பலிபோடவேண்டியது.

கூக—சர்வாந்திரியாமிக்கு மெத்தைமேலாவது அல்லது-தன்பின்பக்கத்திலாவது-பலிவைக்கவேண்டியது. பிதுர்க்களுக்கு மிகுந்த எல்லாவந்நத்தையும் தென்முகமாகக் காலைமடித்துக்கொண்டு பூமியில்பலிவைக்கவேண்டியது.

கூஉ—பின்னும் வீட்டிற்குப்பாகஞ் செய்திருக்கிற அந்நத்தில் கொஞ்சமெடுத்துக்கொண்டுவந்து-நாய்- பதிதன்-சண்டாளன்-தீராப்பிணியுள்ளவன்-காக்கை-கிருமி- இவைகளுக்கு சுத்தபூமியில் மெல்லெனபலி வைக்கவேண்டியது. இது பூதஎக்கியம்.

கூஙு—இந்தப்பிரகாரம் எவன் திநந்தோறும் சகலபிராணிகளையுந்திருப்த்தி செய்விக்கிறானோ அவன் தேசோரூபனாய் அர்ச்சிராதிமார்க்கத்தினாலே மேலானமோக்ஷத்தை யடைகிறான்.

கூச—இந்தப்படி பூதஎக்கியத்தைச்செய்து பின்பு அதிதியை முன்னம்புசிப்பிக்கவேண்டியது பிரமசாரி - சந்நியாசி-இவர்களுக்கு நல்வார்த்தைசொல்லுதல் கால்கழுவுதல் முதலியவுபசாரத்தோடு பிக்ஷையிட்டுப்பின்னவர்கள்கையில் ஜலம்விடவேண்டியது.

கூரு—தன்னுசாரியனுக்கு ஒருபசுவை சுவர்ந்ந பூஷணத்தாலலங்கரித்து தானஞ்செய்தால் எந்தப்புண்ணிய மடையப்படுகிறதோ அதை - பிரமசாரிமுதலானவர்களுக்குவிதிப்படி பிக்ஷையிடுவதால் கிரகஸ்த்தன் அடைகிறுன்.

கூசா—அதிகமாக பிக்ஷைகொடுப்பதற்குச் சக்தியில்லாதவன் ஒருகவளத்துக்குக்குறையாத அந்நத்தையும் தாகத்துக்குத்ஜீர்த்தத்தையும் தன்வீட்டிலுள்ள பதார்த்தங்களையும் வேதம்அதன்பொருள் இவற்றையறிந்த பிராமணனுக்கு விதிப்படி பூசித்துக்கொடுக்கவேண்டியது.

கூஎ—வேதம்-இவற்றின்பொருள் இவைகளையறியாத பிராமணனுக்கு தேவதைகளையும் பிதுர்க்களையுங்குறித்து தெரியாமையால் கொடுக்கப்பட்ட தானங்கள் சாம்பலிற்செய்த ஆகுதிபோல நசித்துப்போய்விடுகின்றன.

கூஅ—கல்வி-தவம்-இவைகளுள்ளவர்களாயிருக்கிற பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்ட தானங்கள் அக்கிநியிற்செய்த ஓமம்போற் பிரகாசிக்கின்றனபின்னும் இம்மையில் வியாதி-சத்துரு-இராஜபீடை - இவற்றினலுண்டான பயத்தில் நின்றும் மறுமையில் நரகத்தினின்றும் காப்பாற்றுகின்றன.

கூகூ—தன்வீட்டிற்குச் சுயமாகவந்த அதிதிக்கு காலுக்குத்தண்ணீர்கொடுத்து ஆசநத்திலுக்காரவைத்து தன்வீட்டிலிருக்கும் பதார்த்தங்களுடன் அந்நமிட்டு விதிப்படி யுபசாரஞ்செய்யவேண்டியது.

௧௦௦—தினந்தோறுங்கழனியிற்சிந்திப்போனநெற்களைப்பொறிக்கிக்கொண்டுவந்து அதனால் ஜீவித்தாலும் பஞ்சாக்கிநிமத்தியில் தவம்பண்ணினாலும் அதிதியாகவந்த பிராம்மணனுக்கு அந்நமிடாவிட்டால் மேற்சொன்ன புண்ணியத்தையெல்லாம் அவனபகரித்துக்கொண்டுபோய்விடுவன்.

௧௦௧—அதிதிகளுக்கு அந்நமிடச்சக்த்தியில்லாவிட்டாலும் படுக்கை இளைப்பாறுமிடம் தாகதீர்த்தம் பிரியவசநம் இவைகள் இல்லறத்தான்தருமவானானால் இல்லாமற்போய்விடாது.

௧௦௨—ஓரிராத்திரிவரையில் புதிதாய் வந்திருப்பவனை அதிதியாநினைக்கவேண்டியது நாடோறும்வராமல் ஒருகாலத்தில் வருகிறவனுக்கு அதிதியென்றுபெயர்.

௧௦௩—தன்னூரிலிருப்பவனும் தன்பிழைப்புக்காக விகடஞ்செய்கிறவனும் பத்தினியோடு கூடிக்கொண்டிருப்பவனும் வைசுவதேவகாலத்தில் தன்வீட்டுக்கு வந்தபோதிலும் அவர்களை அதிதியாகநினைக்கக்கூடாது.

௧௦௪—எந்தக்கிரகஸ்தர்கள் தனக்கு மனைவிமுதலானவர்கள் இருப்பினும் போசநவிருப்பத்தால் அயலூரில் ஒருவன்வீட்டு அந்நத்தை புசிக்கிறார்களோ அவர்கள் மறுபிறப்பில் மாடாய்ப்பிறந்து அந்நம்போட்டவர்களுக்கு உழைக்கிறார்கள்.

௧௦௫—இரவில்- போசநகாலத்தில்வந்தாலும் பின்புவந்தாலும் சமயந்தப்பிப்போயிற்றென்று வந்த அதிதியை புசிப்புக்கொடாமல் அனுப்பக்கூடாது.

௧௦௬—தயிர் பால் நெய் முதலிய எந்தவுயர்ந்தபதார்த்தத்தை அதிதிக்குப்பரிமாற வில்லையோ அதைத்தானும் புசிக்கக்கூடாது அதிதிக்குச்சாப்பாடுபோட்டால் பொருளையும், கீர்த்தியையும், ஆயுளையும், புண்ணியலோகத்தையும், கொடுக்கும்.

க0எ—ஆசநம் - இளைப்பாற்றுமிடம்-கட்டில்முதலியபடுக்கை-பின்ருெடர்தல் - பணிவிடை இவ்விதஉபசாரங்களை உயர்ந்தவர்களுக்குயர்ந்ததாகவும்,தாழ்ந்தவர்களுக்குத் தாழ்ந்ததாகவும்,சரியானவர்களுக்குச் சரியானதாகவும், செய்யவேண்டியது.

க0அ—வைசுவதேவகாலத்தில் வந்த அதிதிக்கு போசநமளித்த பின்பு மற்றும் அதிதிகள்வந்தால் அவர்களுக்கும் பூமியில்வைத்திருக்கும் பூதபலியந்நத்தைப்படைக்காமல் வேறந்நத்தைத்தன் சக்த்திக்குத்தக்கபடி படைக்கவேண்டியது.

க0கூ—தன்னை யொருவன் போசநத்துக்கு அழைக்குநிமித்தமாக தன்குலகோத்திரங்களை தானேசொல்லிக்கொள்ளக்கூடாது அதற்காக இவ்விரண்டையுஞ் சொன்னால் வாந்தியண்ண அந்நத்தைத்தின்னவனென்றுசொல்லப்படுகிறான்.

கக0—பிராமணனுக்கு க்ஷத்திரிய வைசியனும் க்ஷத்திரியனுக்கு வைசிய சூத்திரர்களும் வைசியனுக்கு சூத்திரனும் தாழ்ந்தஜாதியானதாலும் தோழன் பங்காளி இவர்கள்தன்பந்துக்களாதலானும்ஆசாரியன் தனக்கு எசமானனுதலாலும் இவர்களுக்குப் பூசை செய்வது அதிதிபூசையாகமாட்டாது.

கக௧—ஒருவேளை அந்நியதேசத்திலிருந்து ஒருக்ஷத்திரியன் அதிதியாகவந்தால் பிராமண அதிதிபுசித்தபின்பு அவனையும் புசிப்பிக்கவேண்டியது.

ககஉ—வைசியன்-சூத்திரன்-இவர்கள் - பிராமணன் வீட்டிற்கு அதிதியாகவந்தாலும் தன்பரிச்சாரகாள்சாப்பிடும்போது அவர்களையும்புசிப்பிக்கவேண்டியது.

ககரூ—மற்ற தோழன்முதலானவர்கள் அன்புடன்தன்வீட்டுக்குச் சாப்பாட்டுவேளையில் வந்தால அவர்களைப்பூசித்துத்தன் சக்திக்குத்தக்கபடி தன்ளுேடுபுசிப்பிக்கவேண்டியது.

ககச—புதிதாகக்கலியாணமான மருமகள் கந்நியாப்பெண்கள் நோயாளி கருப்பமாதர்கள் இவர்களை தேவபூசைசெய்தவுடனே அதிதிகளுக்குமுன்னமே யோசியாமல் சாப்பிடச்சொல்லவேண்டியது.

ககரு—எவன் இப்போது சொல்லிவந்தவிதிப்படி அதிதிமுதல் பரிசாரகாள் வரையில் முன்னம் அந்நம்போடாமல் தான் முன் புசிக்கிருனே அவன்-தான்இறந்தபின் தன்தேகத்தை-நாய்-கழுகு-இவைகள்தின்னுகிறதை அறியவில்லை.

ககசு—ஆகையால் அதிதிகளும் பரிசாரகாளும் சாப்பிட்டுமிகுந்த அந்நத்தைத்தானும் தன்மனைவியுஞ்சாப்பிடவேண்டியது.

ககஎ—தன்வீட்டிற் சமையலான பதார்த்தத்தை சுவாமி நைவேதநஞ்செய்து தேவர்கள்-ருஷிகள்-அதிதிகள்-இவர்களுக்கு முன்னம் பூசைசெய்துமிகுந்த அந்நத்தைக் கிரகஸ்த்தன் புசிக்கவேண்டியது.

ககஅ—எவன் தனக்காகவே பாகஞ்செய்து கொள்ளுகிருனோ அவன்பாபத்தையே சாப்பிடுகிருனென்றும் எவன் தேவர்முதலானவர்களுக்கு பூசித்து மிகுந்த அந்நத்தைப் புசிக்கிருனோ அவன் எக்கியசேஷித்தைச் புசிக்கிருனென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

ககக—அரசன் ரித்துவிக்கு விரதாநுஷ்டாநமுள்ள பிராமணன் குரு-தோழன்-மாமனர்-அம்மான்-இவர்கள்-ஒருவருஷமான பின்பு தன்வீட்டுக்குவந்தால் ‡ மதுபர்க்கத்துடன் பூசிக்கத்தக்கவர்கள்

கஉ0—ஆனால் அரசனும், விரதாநுஷ்டாநமுள்ள பிராமணனும், ஒருவருஷித்துக்குமேல் தான் யாகஞ்செய்யுங்காலத்தில் வந்தா

‡ மதுபர்க்கம்-என்பது-பஞ்சாமிர்தம்

ல்மாத்திரம் மதுபர்க்கத்தால் பூசிக்கத்தக்கவர்கள் மற்றவர்களை எக்கியமன்றியிலும் வருஷித்துக்குமேல் மதுபர்க்கத்தாலே பூசிக்கவேண்டியது.

௧௨௧—இரவில் பாகமான அந்நத்தினால் மனைவியைக் கொண்டு மந்திரமில்லாமல் பலியைமாத்திரம்வைக்கச்சொல்லவேண்டியது இதற்கு-இராத்திரி வைசுவம்தவமென்றுபெயர். இந்தவைசுவதேவம் பகலில் மந்திரத்தோடு தன்னாலும் இரவில் மந்திரமில்லாமல் மனைவியாலுஞ்செய்யப்படவேண்டியது.

௧௨௨—அமாவாசி திநத்தில் பிண்டபிதுர்எக்கியஞ்செய்து முடிந்தபின்பு அன்றையதிநஞ் செய்யவேண்டிய சிரார்த்தத்தை விதிப்படி அந்நத்தினால் செய்யவேண்டியது இது-இப்படியே மாதந்தோறுமென்றறியவேண்டியது.

௧௨௩—மாதந்தோறுஞ்செய்யத்தக்க அமாவாசியாசிரார்த்தத்தை 3 அநுவாஹாரியமென்று சொல்லுகிறார்கள் அதுபுதிதாயும் நாற்றமில்லாமலும் இருக்கிறமாம்சமுதலியவற்றாலே செய்யத்தக்கது.

௧௨௪—அந்தச்சிரார்த்தத்தில் எவர்கள்புசிக்கத்தக்கவர்களோ எவர்கள்தகாதவர்களோஎத்தனைபேர்வேண்டியதோ எந்தஅந்நம் உதவுமோ இவற்றை கிரமமாகச்சொல்லுகிறேன்.

௧௨௫—விசுவேதேவர்களுக்காக இரண்டுபேரையும் பிதுர்க்களுக்காக மூன்றுபேரையும் அல்லது இவ்விருவருக்கும் ஒவ்வொருவரையாவது புசிப்பிக்கவேண்டியது மிகுந்தபொருளுள்ளவனாயிருப்பினும் மேற்சொல்லியகணக்குக்குமேற் புசிப்பிக்கக்கூடாது.

---

3 அநுவாஹாரியம் - என்பது - பிண்டப்பிரதாநத்துக்குப் பின்புசெய்யத்தக்கது.

கஉசு—விரிவாகச்செய்தால் உபசாரம் தக்கதானதேசம் காலம் ஆசாரம் ஒழுக்கமுள்ளபிராமணன் இவ்வைந்தும் நேரிடாமற் போகும் ஆகையால் அதைநீக்கவேண்டியது.

கஉஎ—இப்போது சொல்லிவந்த அமாவாசியா சிரார்த்தம் பிரசித்தமானது, இதைச்செய்வதால் தன்பிதுர்க்களுக்கு பரலோகத்தில் திருப்த்தியும், தனக்கு வம்சவிருத்தியும், செல்வமும் உண்டாகிறது.

கஉஅ—வேதமோதினவனுன பிராமணனை சிரார்த்தத்திலும் தேவகாரியத்திலும், புசிப்பிக்கவேண்டியது, ஆசாரம் - வேதம் இவற்றாலுயர்ந்தவனுக்குக் கொடுத்தால் மேலானபலத்தைக்கொடுக்கிறது.

கஉகூ—மேற்சொன்ன தேவர்களையும் பிதுர்க்களையுங் குறித்து வேதவொழுக்கமுள்ள ஒவ்வொருபிராமணனை புசிப்பித்தாலும், பூரணமான பலனுண்டாகிறது. வேதம் ஓதாத அநேகம்பேர்களை புசிப்பித்தபோதிலும் அந்தப்பலன்வரமாட்டாது.

கங0—ஆகையால் சிரார்த்தஞ்செய்பவன் சிரார்த்ததினத்துக்கு முன்னுதாகவே வேதம் ஓதிய பிராமணனை விசாரித்துவைத்திருக்கவேண்டியது அவனே † ஹவ்விய‡கௌவியங்களுக்கு மேலான பாத்திரன் அவன் தன்னூரானாக இருந்தாலும் அதிதிக்குச் சமானமானவன்.

கஙக—வேதம் ஓதாதவர்களான லக்ஷம் பிராமணரை வரித்து சிரார்த்தஞ்செய்வதைக்காட்டிலும், வேதமோதிய ஒருவனை வரித்துச்செய்தால் அதைவிட அதிகபலனைத்தரும்.

---

† ஹவ்வியம்-என்பது-தெய்வத்தையுத்தேசித்துச்செய்வது.

‡ கௌவியம்-என்பது-பிதுர்க்களையுத்தேசித்துச்செய்வது.

கருஉ—ஞாநத்தினாலே யுயர்ந்தவனுக்கே தேவகாரியத்திலும் பிதுர்காரியத்திலும், தாநங்கொடுக்கவேண்டியது, இரத்தத்தினாலே பூசப்பட்டகையை இரத்தத்தினாலே யலம்பினால் சுத்தியாகாதது போல ஞாநமில்லாதவனுக்குக்கொடுத்தால் பயனில்லாததுமன்றி பாபமுமேறும்.

கருங—வேதமோதாதவனுக்கு சிரார்த்தங்கொடுப்பவன் எவ்வளவு கவளத்துக்குபயோகமாகும்படி கொடுக்கிறானோ அவ்வளவுகணக்குள்ள எரிந்துகொண்டிருக்கிற சூலர்ஷ்டிட்டி என்னும் எருக்கட்டிகளை எமலோகத்தில் அவன்வாயில் புகுத்துவார்கள்.

கருச—சிலபிராமணர் தத்துவக்கியாந முள்ளவர்களாயும் சிலர் தபோநிஷ்டர்களாயும் சிலர்-தவம்-வேதம் இவைகளுள்ளவர்களாயும், சிலர் யாகாதிகர்மாநுஷ்டாந முள்ளவர்களாயுமிருக்கிறார்கள்.

கருரு—அதில் பிதுர் சிரார்த்தத்தை தத்துவக்கியாநமுள்ளவர்களுக்கே முயற்சியோடுகொடுக்கவேண்டியது. தேவசிரார்த்தத்தை மேற்சொன்ன நால்வரில் யாருக்காவதுகொடுக்கலாம்

கருசு—தகப்பன்வேதமோதாதவன்- பிள்ளை வேதமோதினவன் மற்றொருவனுக்குத்தகப்பன்வேதமோதினவன் பிள்ளை வேதமோதாதவன்.

கருஎ—இவ்விருவகையில் பிள்ளை வேதமோதாதவனா யிருப்பினும் வேதமோதினவன்பிள்ளையே யுயர்ந்தவன் தகப்பன் வேதமோதாமல் பிள்ளையோதினவனா யிருப்பின் அவன் ஓதினவேதத்துக்காகவே அவனைப்பூசிக்கவேண்டியது.

கருஅ—சிரார்த்தத்தில் சிநேகிதனை வரிக்கக்கூடாது.அவன் சிநேகத்தை வேறேபொருளாலே சம்பாதித்துக் கொள்ளவேண்டியது. எவனைத் தோழனாகவும்,சத்துருவாகவும் அறியமாட்டானோ அவனை வரிக்கவேண்டியது.

கரு௯—எவன் தேவர்களையும், பிதுர்க்களையுங் குறித்துக்கொடுக்கு ஞ் சிரார்த்தபதார்த்தத்தை தோழமையை முன்னிட்டுக் கொடுக்கிருனே அது பரலோகத்தில் அவர்களுக்குப்பயன்கொடுக்கிறதில்லை,

கச0—எவன் தெரியாமையால் சிராரர்த்தத்தினலேயே சிநேகிதர்களைச் சந்தோஷிப்படுத்தி தோழமையைச் சம்பாதிக்கிருனே அந்த அதமனனவன் சொர்க்கலோகத்தை யடைந்தாலும் அங்கிருந்து கீழேவிழுகிருன்.

கசக—எந்த சிரார்த்தத்தில் தோழன்முதலான வெகுபேர்களை வரித்து புசிப்பித்துத் தெக்ஷிணைகொடுக்கிருனே அதை பைசாசத்தின் புசிப்பென்றறியவேண்டியது அந்த சிரார்த்தமானது குருட்டுமாடானதுவீட்டிலே தடுமாறுகிறதுபோல் இம்மையிலேயே தடுமாறிக்கொண்டிருக்கும்.

கசஉ—களர்நிலத்தில் விதைவிதைத்தவன் எப்படி பலனடையானே அப்படியே ஞானமில்லாதவனுக்குச் சிரார்த்தங்கொடுத்தவன் பலனடையமாட்டான்.

கசரு—ஞானமுள்ளவனுக்கு விதிப்படி பூசித்துத் தக்ஷிணைகொடுத்தால் இம்மையிலும், மறுமையிலும் கொடுத்தவனுக்கும் வாங்கினவனுக்கும் பலனைக்கொடுக்கிறது.

கசச—ஞானமுள்ளபிராமணன் அகப்படாதகாலத்தில் சொற்பருணத்தையுள்ள தன்மித்திரனை புசிப்பிக்கலாம் சத்துரு மிகுந்த ஞானவானனாலுங் கூடாது. அவனுக்குக்கொடுத்தது மறுமைக்குபயோகப்படாது.

கசரு—ஆகையால் சிரார்த்தத்தில் இருக்குவேத மோதினவன் நான்குவேதமுமோதினவன் தன்வேதமாவது முற்றுமோதினவன் எக்கியஞ்செய்வித்தவன் வேதமோதித் திரும்பிவந்தவன் இவர்களை முயற்சியுடன் வரிக்கவேண்டியது.

கசசு—இப்படிக்கொத்த தந்நியாத்துமாவான பிராமணன் எ ந்தச்சிரார்த்தத்தில் பூசிக்கப்பட்டவனுய்ப் புசிக்கிருனோ அந்தச்சி ரார்த்தஞ் செய்கிறவன் பிதுர்க்களுக்கு எழுதலைமுறை வரையிலு ம் மேலானதிருப்த்தியை இடைவிடாமலுண்டுபண்ணுகிறது.

கசள—இப்போதுசொல்லிவந்த சிரார்த்தவிதியானது முக்கிய பக்ஷவிஷயம் இரண்டாவதுபக்ஷத்தை மேற்சொல்லப்போகிறேன் அதுவும்பெரியோர்களால் எப்போதும் அநுஷ்டிக்கப்பட் டிருக கின்றது.

கசஅ—தாயைப்பெற்றவன் அம்மான்- மருமான்-மாமனர்-ஆ சாரியன்-பெண்வயிற்றுப்பிள்ளை மாப்பிள்ளை-சிறியதாய்- பெரிய தாய்பிள்ளைகள்முதலிய பந்து ரித்துவிக்கு சிஷ்யன் இந்தப்பத் துப்பேர்களையும் புசிப்பிக்கலாம்.

கசகூ—தேவகாரியத்தில் பிராமணர்களை தருமம் அறிந்தவன் பரீக்ஷைசெய்யக்கூடாது பிதுர்காரியத்தில் மாத்திரம் அவன்கு லகோத்திரத்தையும் ஞாநத்தையும் முயற்சியுடன் பரீக்ஷிக்கவே ண்டியது.

## சிரார்த்தத்தில்- நீக்கத்தக்கவந்தணர்கள்.

கரு௦—திருடர்-பஞ்சமஹாபாதகஞ்செய்தவன்-பேடி தெய்வ மில்லையென்றுசொல்பவன் இவர்களைதேவகாரியத்திலும்பிதுர்காரி யத்திலும் பூசைசெய்யக்கூடாதென்றுமநுப்பிரஜாபதிசொன்னுர்

கருக—சடைதரித்தபிரமசாரி வேதமோதாதவன் - மேகரோ கி-சூதாடுகிறவன்-கிராமப்புரோகிதன் இவர்களைசிரார்த்தத்தில் புசி ப்பிக்கக்கூடாது.

கருஉ—வைத்தியன்- கோயில்குருக்கள்-மாம்சம்விற்பவன் - வி யாபாரத்தால் ஜீவிப்பவன் இவர்களும்,

க௱௩—ஊராருக்கேனும், அரசனுக்கேனும், எவற்றொழில்செய்பவன்-கோணனகமுள்ளவன் சொற்றைப்பல்லன் குருவுக்குப்பிரதிகூலஞ்செய்தவன் ஔபாசநத்தை விட்டவன் வட்டியினாலேயே பிழைப்பவன் இவர்களும்.

க௱௪—க்ஷயரோகி தன்ஜீவநத்துக்காக ஆடுமாடு காப்பாற்றுகிறவன்-பரிவேத்தா பஞ்சமஹாஎக்கியஞ் செய்யாதவன்-பிராமணத்துவேஷி பரிவித்தி கிராமமுழுதும்பிக்ஷையெடுத்துப் பிழைப்பவன்-இவர்களும்.

க௱௫—கூத்தாடுகிறவன்-மாதலைப்புணரும் பிரமசாரி - அல்லது-சந்நியாசி-தன்சாதியின்றி சூத்திரஸ்த்திரியை விவாகஞ்செய்தவன்-விதவையைவிவாகஞ்செய்துபிறந்தவன்-ஒற்றைக்கண்ணன்-ஜாரஸ்திரிபுருஷின் இவர்களும்.

க௱௬—சம்பளம் வாங்கிக்கொண்டு வேதஞ்சொல்லுவிப்பவன் அவனிடத்தில் வேதமோதினவன், சூத்திரனிடத்தில் வியாகரணமுதலிய வித்தையைஅப்பியாசித்தவன், சூத்திரனுக்கு அவ்விதவித்தையைச்சொல்லுவித்தவன், எப்போதும் கொடுமையாய்ப்பேசுகிறவன், குண்டன்,கோளகன் இவர்களும்.

க௱௭—தாய்-தகப்பன்-குரு- இவர்களைக்காரணமின்றி நீக்கினவன், பதிதர்களோடு -வேதமோதல்-விவாகஞ்செய்தல்-முதலிய சம்பந்தமுள்ளவன், இவர்களும்.

க௱௮—வீட்டைக்கொளுத்தினவன்-விஷமிட்டவன்-குண்டனந்நத்தைச் சாப்பிட்டவன்* ஆட்டாங்கொடியைவிற்பனைசெய்பவன், சமுத்திரத்திற் கப்பன்மீது சஞ்சரித்தவன், பட்டுக்கூறுபவன், திலமர்த்தநஞ்செய்பவன், பொய்சாக்ஷிகளை யேற்படுத்துகிறவன்இவர்களும்.

---

* ஆட்டாங்கொடி-என்பது-யாகத்திற்குதவும் ஓர்கொடி.

கருசுஅ—தகப்பனோடு வழக்கிடுகிறவன், ஒருவனைக் கொண்டு சூதாடுகிறவன், மத்தியபாநம்பண்ணுகிறவன், பாபவியாதியுள்ளவன், சம்சயப்பட்டவன், டம்பத்துக்காகத்தருமஞ்செய்பவன், வெல்லமுதலிய ஷீட்ரசங்களைவிற்பவன் இவர்களும்.

கருகூ0—வில்லு-பாணமுதலியவற்றைச் செய்பவன்-திதிஷு-ருப்தி-மித்திரதுரோகி-சூதாடிப் பிழைப்பவன்-பிள்ளையிடத்தில் வேதங்கற்றவன் இவர்களும்.

கருகூக—பெருவியாதியன் - கண்டமாலையன் - வெண்குட்டன் கோளன்-பித்தன்-குருடன்-வேததூஷகன்-இவர்களும்.

கருகூஉ—குதிரை-இடபம்-ஒட்டை - இவைகளைப்பழக்குகிறவன் சோதிஷசாஸ்திரத்தால் பிழைப்பவன் தநுர்வேதமோதிவிப்போன் பக்ஷிகூடுவைத்து விளையாடுகிறவன்-இவர்களும்.

கருகூக—ஓடுகிறதண்ணீரி லணைகட்டுகிறவன்- தண்ணீரின்வேகத்தைத்தடுப்பவன்-மனைசாஸ்த்திரஞ்சொல்லிப்பிழைப்பவன் -சேவகவிருத்தியுள்ளவன்-கூலிக்கு மரம்வைத்துக்காப்பாற்றுகிறவன்-இவர்களும்.

கருகூச—நாய்வளர்த்து விளையாடுபவன்-பறவைவிற்கிறவன்-கந்நியைப்புணர்ந்து கெடுப்பவன் ஹிம்சையில்விருப்பமுள்ளவன் சூத்திரன்றொழிலைச்செய்பவன் - உச்சிட்டகணபதியைப் பூசிப்பவன்-இவர்களும்.

கருகூரு—குருபணிவிடை செய்தல்முதலிய ஆசாரம்இல்லாதவன் -தருமப்பண்ணாதவன்-திநந்தோறும் - பிக்ஷையெடுப்பவன்-தானேபயிர்செய்து ஜீவிக்கிறவன்-யானைக்காலன் - பெரியோர்களால் நிந்திக்கப்பட்டவன்-இவர்களும்.

கருகூகூ—எருமை-ஆடு-இவற்றைவிற்றுஜீவிக்கிறவன்-விதவையை விவாகஞ்செய்தவன்- கூலிக்குப் பிணந்தூக்குகிறவன்-இவர்களும் ஹவ்யகவ்யங்களில் முயற்சியுடன் நீக்கத்தக்கவர்கள்.

கசுஎ—திருடர்முதல்-பிணந்தூக்குகிறவன் வரையில் சொல்லப்பட்டவர்களாயும், ஈநாசாரமுள்ளவர்களாயும், நல்லோர்பந்தியில்-உட்காந்து புசிக்கத்தகாதவர்களாயும், இருக்கிற இந்த - ஈநட்பிராமணுளைத்தெரிந்தவன் தேவகாரியம் பிதுர்காரிய மிரண்டிலும், மரியாதைசெய்யாமல் நீக்கவேண்டியது.

கசுஅ—வேதமோதாத பிராமணன் வைக்கோலிற்பற்றப்பட்ட நெருப்புப்போல தேஜோவிர்த்தி யில்லாதவனுதலால் அவன் பொருட்டு சிரார்த்தங்கொடுக்கத்தகாது-(உ-ம்-சாம்பலில் ஓமஞ் செய்யக்கூடாதல்லவா.)

கசுகூ—மேற்சொன்ன-பந்திதூஷிகருக்கு சிரார்த்தங்கொடுத்தவனுக்கு இறந்தபின் வரும்பயன் முழுமையுஞ்சொல்லுகிறேன்

கஎ0—விரதானுஷ்டாநமில்லாத பரிவேத்தாமுதலிய பந்திதூஷிகர்களாலே எந்தச்சிரார்த்தத்தில் புசிக்கப்படுகிறதோ அதை-இராக்ஷதாள் புசிக்கிறார்கள்.

கஎக—கூடப்பிறந்த தமயன்-விவாகமில்லாமலிருக்க எவன் தான்முன்னுதாக விவாகஞ் செய்துகொள்ளுகிறானோ அவனுக்குப் பரிவேத்தாவென்றும் அவன்தமயனுக்குப் பரிவித்தியென்றும் பெயர்.

கஎஉ—பரிவித்தி-பரிவேத்தா- அவர்மனைவி-அவள்தகப்பன்-அந்தவிவாகஞ்செய்துவித்த புரோகிதன்.இவ்வைந்துபேர்களும் நரகத்தையடைகிறார்கள்.

கஎங—பிராதாயிறந்தபின் அவன்மனைவி புத்திரோற்பத்திக்காக தர்மமாகதன்னிடத்தில் வந்திருந்தபோதிலும் எவன்-அவளிடத்திற்காமத்தினாலே ஆலிங்கநமுதலிய சிரிங்காரசேஷ்டைசெய்கிறானோ அவனுக்கு திதிஷுபதியென்றுபெயர்.

கஎச—பரஸ்திரியி னிடத்தில் அவளிட பத்தா ஜீவித்திருக்கும் போது பரவிந்துக்குப்பிறந்தவனுக்கு குண்டனென்றும் பத்தா விறந்தபின் பிறந்தவனுக்குக் கோளகனென்றும்பெயர்.

கஎரு—குண்டன்-கோள்கனாகிய அவ்விருவரும் சிரார்த்தத்திலும் யாகத்திலும் தனக்குத்தாநங்கொடுக்கிறவனுக்குப் பலனையழித்து விடுகிறார்கள்.

கஎசு—பந்திதூஷகன் எவ்வளவுபிராமணாள் புசிக்கிறதைப்பார்க்கிறானோ அவ்வளவுபேர்களுக்கும், அந்நப்போட்ட மூடனுக்குப்பலனில்லை ஆகையால் பந்திதூஷகன் பாராதவண்ணஞ்செய்விக்கவேண்டியது.

கஎஎ—குருடன் - பிராமணாள்புசிக்குமிடத்து வந்தால் தொண்ணூறுபேருக்கு அந்நம்போட்டபலனையும், ஒற்றைக்கண்ணன்பார்த்தால் அறுபதுபேருக்கும், வெண்குட்டன்பார்த்தால் நூறுபேருக்கும், கருமவியாதியுள்ளவன் பார்த்தால் ஆயிரம்பேருக்கும் போட்ட அந்நத்தின்பலனை அழித்துவிடுகிறார்கள்.

கஎஅ—சூத்திரனுக்கு யாகஞ்செய்விக்கிறவன் எவ்வளவுபேர்களைத்தொடுகிறானோ அவ்வளவுபேர்களுக்குஞ்செய்த அந்நதாநத்துக்குப்பலனில்லை.

கஎகூ—வேதமோதினவனாயிருந்தபோதிலும் எந்தப்பிராமணன் சூத்திரனுக்கு யாகஞ்செய்விக்கிறவனிடத்தில் ஆசையால்தாநம்வாங்குகிறானோ அவன் - சுடாதமண்பாத்திரந் தண்ணீரில்விழுந்தாற்போல அழிந்துபோய்விடுகிறான்.

கஅ0—ஆட்டாங்கொடிவிற்பனைசெய்பவனுக்குசிரார்த்தங்கொடுத்தவன் மறுபிறப்பிற் பன்றியாய்ப்பிறந்து மலத்தைத்தின்னுகிறான் வயித்தியனுக்குக்கொடுத்தவன் மறுபிறப்பில்-சீழ்-இரத்தம்

இவற்றைச்சாப்பிடுகிறான் கோயில் குருக்கள் வட்டியினாற்பிழைப் பவன் இவர்களுக்குக்கொடுப்பவன் பிரயோசநத்தை யடையமா ட்டான்.

கஅக—வியாபாரிக்குக் கொடுக்கிறவனுக்கும் விதலவயைவிவா கஞ்செய்துபிறந்தவனுக்குக் கொடுக்கிறவனுக்கும் சாம்பலில் ஓம ஞ்செய்பவனுக்குப்பயனில்லாததுபோல் இம்மையிலும் மறுமை யிலும் பயனில்லை.

கஅஉ—மற்ற திருடர்முதலான ஈநர்களுக்குச் சிரார்த்தங்கொ டுப்பவன் மறுபிறவியில் புழு-உணி-இராக்ஷதாள்-நாய் - இவைமுத லிய அநேகம் பிறவிகளாய்ப் பிறக்கிறார்களென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

கஅஙு—பந்திதூஷிகர்களாலே கெடுக்கப்பட்ட பந்தியை எவர் கள் பரிசுத்தம் பண்ணுகிறார்களோ அப்படிக்கொத்த பந்திபாவ நாளான பிராமணோத்தமர்களைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

## சிரார்த்தத்தில்வரிக்கத்தக்கவந்தணர்கள்.

கஅச—நன்றாக வேதமோதினவர்களாயும் ஷடங்கமறிந்தவர்க ளாயும் வேதமோதினவர்கள் வம்சத்திற் பிறந்தவர்களாயும், இருக் கிறவர்கள் பந்திபாவனுளாவர்.

கஅடு—திரணசிகேதமென்னும் வேதமறிந்தவர் அக்கினிஹோ த்திரஞ்செய்கிறவன் திரிசுபர்நம்ஓதினவன் சீக்ஷைமுதலிய வேதா ங்கங்களறிந்தவன் -பிராம்மவிவாகஞ்செய்து பிறந்தவன்- ஆரணம றிந்தவன் இவர்களும்.

கஅசு—குருவினிடத்தில் வேதப்பொருளையறிந்தவன், சீஷனு க்கு வேதப்பொருளைச்சொல்லிவைக்குங்குரு பிரமசாரி ஆயிரம் பசுதாநம்பண்ணினவன் நூறுவயசுசென்றவன், இவர்களும் பந் தியைப்பரிசுத்தஞ்செய்பவர்.

கஅஎ—சிரார்த்தத் திநத்துக்கு இரண்டுநாள் அல்லது ஒருநாள் முன்னுதாக இப்போதுசொல்லிவந்த பிராமண சிரேஷ்டருக்குள்ளே மூன்றுபேருக்குக்குறையாதபேர்களைப் பூசித்து தான்செய்யுஞ் சிரார்த்தத்தை நிறைவேற்றிவைக்கும்படி வரிக்கவேண்டியது

## சிரார்த்தபிராமணவிரதம்.

கஅஅ—அப்படி வரிக்கப்பட்டபிராமணனும் சிரார்த்தகர்த்தாவும், சிரார்த்ததிநம்வரையில் சம்போகாதிகளைநீக்கிப் பரிசுத்தனாய் நித்திய செபங்கள்தவிர மற்றவேதங்களை அத்தியயநஞ் செய்யக்கூடாது.

கஅகூ—ஒருபிராமணனை எப்போது ஒருவன் சிரார்த்தத்துக்காக வரிக்கிறானோ அதுமுதல் அந்தவரிக்கப்பட்ட பிராமணனிடத்திற் பிதுர்தேவதைகள் வாயுசுவரூபமாளாய்ப் பிரவேசித்து அவனுட்காரும்போதுட்கார்ந்தும், நடக்கும்போது நடந்துகொண்டுமிருக்கிறார்கள் ஆகையால் அவன் பரிசுத்தனாயிருக்கவேண்டியது.

ககூ0—தேவபிதுர்காரியத்தில் ஒருவனால் வரிக்கப்பட்ட பிராமணன் ஒப்புக்கொண்டு அன்றையதிநம் வராவிட்டால் பாபியாய் மறுபிறப்பிற் பன்றியாய் பிறக்கிறான்.

ககூக—சிரார்த்தத்தில் வரிக்கப்பட்டவன் சூத்திரஸ்த்திரியோடு புணர்ந்தால் அந்தமூடன் கர்த்தாவின்பாவத்தையு மடைகிறான் இதனாலே கர்த்தாவுக்குப்பாவமில்லை.

ககூஉ—அநாதிதேவர்களான பிதுர்க்கள் கோபமில்லாதவர்களாயும், உள்ளும் புறம்பும் பரிசுத்தாளாயும், எப்போதும் பிரம்மவிசாரஞ்செய்பவர்களாயும், சண்டையில்லாதவர்களாயும், மஹாநுபாவர்களாயும் இருக்கிறார்கள் ஆகையால் கர்த்தாவும், போக்த்தாவும், இப்படியேயிருக்கவேண்டியது.

## பிதுர்க்களினுற்பத்தியும்பெயரும்.

கககரு—இந்தப் பிதுர்க்களுக்கு யாரிடத்தினின்றும் உற்பத்தியோ எந்தப்பிதுர்க்கள் எந்தவருணத்தாராலே எந்தநியமத்தோடு பூசிக்கத்தக்கவர்களோ அதுகளைக்கேளுங்கள்.

கககசு—இரண்ணிய கருப்பராலே உண்டுபண்ணப்பட்ட மநுப்பிரஜாபதியினால் மரீசிமுதலிய யாதொரு ருஷிகள் சிருஷ்டிக்கப்பட்டார்களோ அந்த மரீசிமுதலானவர்களாலே இந்தப்பிதுர்க்கள் சிருஷ்டிக்கப்பட்டார்கள்.

கககூ—விராட்புருஷனாலே சிருஷ்டிக்கப்பட்ட சோமசதர்கள் சாத்தியதேவர்களுக்குப் பிதுர்க்கள் உலகத்தில் பிரசித்தாளாயும் மரீசிமகருஷியினா லுண்டுபண்ணப்பட்டவர்களாயும், இருக்கிற அக்கிநிஷ்வாத்தர்கள் தேவர்களின் பிதுர்க்கள்.

கககசு—அத்திரிமகருஷியின் பிள்ளைகளானபருஹிஷித்துக்கள் தயித்தியர்-தாநவர்- யக்ஷர்-கந்தருவர்-உரகர்- இராக்கதர்-சுபர்நர்-கிந்நரர்-இவர்களுக்குப் பிதுர்க்கள்.

கககஎ—பிராமணர் பிதுர்க்களுக்கு சோமபாள் என்றும்- க்ஷத்திரியர் பிதுர்க்களுக்கு ஹவிர்புக்குக்கள் என்றும் வைசிய பிதுர்க்களுக்கு ஆஜ்ஜியபர் என்றும் சூத்திரபிதுர்க்களுக்கு சுகாலிகளென்றும் பெயர்.

கககஅ—அதில் சோமபாள் பிருகுவின் பிள்ளைகள்ஹவிர்புக்குக்கள் அங்கிரசின் புத்திரர்கள் ஆஜ்ஜிபர்கள் புலஸ்தியன் புத்திரர்கள் சுகாலிகள் வசிஷ்டன் புத்திரர்கள்.

கககக—அக்நிதத்தர்கள்-அநக்நிதத்தர்கள்-சோமபர்கள்-பருஹிஷித்துக்கள் அக்திஷ்வாத்தர்கள்-சௌமியாள் இவர்களையும் பிராமணபிதுர்க்களாகவே யறியவேண்டியது.

உ00—இப்போது எந்தபிதுர்கணங்கள் முக்கியமாச் சொல்லப்பட்டார்களோ அந்தப் பிதுர்கணங்களின் புத்திர பௌத்திராதிகள்தான் இவ்வுலகத்தில் அளவற்றவர்களா யிருக்கிறவர்கள்.

உ0க—அதெப்படியென்னில் மரீசிமுதலான ருஷிகளினின்றும் பிதுர்க்களும், அந்தப் பிதுர்க்களினின்றும் தேவாசுரர்களும், அந்தத் தேவர்களினின்றும் இந்தச்சராசரங்களும் வரிசையா யுண்டாகிறதுகள்.

## பார்வணசிரார்த்தநியமம்.

உ0உ—இந்தப் பிதுர்க்களுக்கு வெள்ளியாலாவது வெள்ளிசம்பந்தப்பட்ட தாம்பரத்தினுலாவது, சிரார்த்தத்தில் இலைபோடவேண்டியது. தீர்த்தத்தையாவது அன்புடன்கொடுத்தால் அக்ஷயமான திருப்த்திபுண்டாகிறது.

உ0ரு—துவிஜாதிகளுக்கு தேவகாரியத்தைவிட பிதுர்காரியம் முக்கியமானது. அந்தப் பிதுர்காரியத்துக்கு அந்தத்தேவகாரியமானது முன்செய்யத்தக்கதாயும்,திருப்த்தியைக்கொடுக்கிறதாயுமிருக்கிற ஓரங்கமாயிருக்கின்றது.

உ0ச—அந்தப்பிதுர்க்களைக் காப்பாற்றுகிறவர்களான விசுவேதேவர்களை முன்னம் ஒருபிராமணனிடத்தில் ஆவாகநஞ் செய்யவேண்டியது. இல்லாவிட்டால் இராக்கதர் அந்தப் பிதுர்காரியத்தை யழித்துப்போடுகிறார்கள்.

உ0டு—ஆகையால் முன்னம்விசுவேதேவர்களையும் பின்பு பிதுர்க்களையும் முடிவில் விஷ்ணுவையும், கிரமமாகவரித்து சிரார்த்தஞ்செய்யவேண்டியது. ஆதியிலு மந்தத்திலும், மேற்சொன்னதேவர்களல்லாமல் பிதுர்க்களைமாத்திரம் வரித்து சிரார்த்தஞ்செய்பவன் வம்சத்துடன் அழிகிறான்.

உ0சு—சிரார்த்தம்பண்ணுகிறவன் பரிசுத்தமாயும், ஏகாந்தமாயும், தென்புறந்தாழ்ந்ததாயுமிருக்கிற இடத்தை முயற்சியோடுசம்பாதித்து அலதப்பசுவின்சாணத்தால் மெழுகவேண்டியது.

உ0எ—சுயமாகவே பரிசுத்தமான ஆரண்ணியங்களிலும், நதீதீரங்களிலும், சநசங்கமில்லாதவிடங்களிலும் செய்யப்பட்ட சிரார்த்தங்களால் பிதுர்க்கள் எப்போதுந் திருப்த்தியடைகிறுர்கள்.

உ0அ—அந்தப்பரிசுத்தமானவிடத்தில் சிரார்த்தத்துக்காகவரிக்கப்பட்டபிராமணர்கள் ஸ்நாநஞ்செய்துவந்தபின்பு தேவர்களுக்கு கிழக்குமுகமாயும், பிதுர்க்களுக்கு வடக்குமுகமாயும் ஆசநம்போட்டு அதில் தேவாசநத்தில் இரண்டுதருப்பமும், பிதுராசநத்தில் மூன்றுதருப்பத்தாற் செய்யப்பட்ட*புக்கிநத்தையும்போட்டு அந்தப்பிராமணர்களை உட்காரச்சொல்லவேண்டியது.

உ0கூ—பூசிக்கத்தக்கவர்களானஅவர்களை ஆசநத்திலுட்காரவைத்தபின்பு வாசனையுள்ள கந்தம் - புஷ்பம்-இவைகளாலே விசுவேதேவபிராமணனை முன்னிட்டு பூசிக்கவேண்டியது.

உக0—அவர்களின்வலதுகையில் பவித்திரத்தைவைத்து எள்ளுடன்சேர்ந்த ஜலத்தை அர்க்கியமாகக்கொடுத்து அவர்களின்முன்பாகஅக்கினியைவளர்த்தி ஓமஞ்செய்கிறேனென்று அவர்களிடத்தில் அநுமதிபெற்றுக்கொண்டு மேற்சொல்லப்போகிற தேவர்களைக்குறித்து அக்கினியில் ஓமஞ்செய்யவேண்டியது.

உகக—அக்கினி-சோமன்- இயமன்-இவர்களுக்கு முன்னர்தனித்தனியாக அந்நத்தினுல் விதிப்படிஓமஞ்செய்து பின்பு பிதுர்க்களுக்கு ஓமஞ்செய்யவேண்டியது.

உகஉ—பிரமசாரி மனைவியில்லாதகிரகஸ்த்தன் இவர்கள் சிரார்

* புக்கிநம்-என்பது-மடிக்கப்பட்ட மூன்றுதருப்பம்.

த்தஞ்செய்தால் வரிக்கப்பட்டபிராமணன்கையில்அந்நத்தை போ
மம்பண்ணவேண்டியது. பிராமணரோ அக்கிநிசுவரூபரென்று வே
தமறிந்தருஷிகளாற்சொல்லப்பட்டிருக்கின்றது.

உகரு—மேலும் சிரார்த்தத்தில் வரிக்கப்பட்ட தேவபிதுர்க்கள்
கோபமில்லாதவர்களாயும் மிகுந்த தயையுள்ளவர்களாயும் பிராசீ
நாளாயும், உலகத்தின் க்ஷேமத்தைக் கோருகிறவர்களாயு மிருக்கி
றார்கள். ஆகையால் அவர்களை ஆவாகநஞ்செய்யப்பட்ட பிராம
ணர்களின் கையில் ஓமஞ்செய்வது அக்கிநியிற்செய்ததுபோல
வேயாம்.

உகச—அக்கிநியில் தென்புறத்தில் பிதுர்க்களின்பொருட்டுஅந்
நஓமஞ்செய்து பிண்டப்பிரதாநஞ்செய்யும்பூமியில் தெற்கு நு
னியான தர்ப்பையில் மூன்றிடத்தில் எள்ளுஞ் ஜலமும் கைமறித்
துவிடவேண்டியது.

உகரு—பின்பு அந்தஓமஞ்செய்து மிகுந்தவந்நத்தை மூன்று
பிண்டமாக்கி கைமறித்து தான் தெற்குமுகமாகவிருந்து முன்னெ
ள்ளுஞ்ஜலமும் விட்டவிடத்தில் பிதுர்க்களைத் தியாநித்துக்கொண்
டு பிண்டம்வைத்து அவைகளின்மேல் மறுபடியும் எள்ளுந்தண்
ணீரும்விடவேண்டியது.

உகசு—இந்தப்பிரகாரம் அவனவன் சூத்திரத்திற் சொன்னவிதி
ப்படி பிண்டம்வைத்தபின்பு அந்தப் பிண்டமிருந்தபாத்திரத்தி
லும் தன்கையிலும் ஒட்டியிருந்தஅந்நங்களை பிதுர் பிதாமஹப்பி
ரபிதாமஹர்களைக்குறித்து வைக்கப்பட்டிருக்கிற அந்த மூன்றுபி
ண்டங்களின்பக்கத்தில் † லேபபாகிகளான பிதுர்க்களுக்குப்போ
டவேண்டியது.

---

† லேபபாகிகள்-என்பது - பிரபிதாமஹனந்தகப்பன்முதலி
யமூன்றுபிதுர்க்கள்.

உகஎ—அதன்பின்பு வடக்குமுகமாகத்திரும்பி ஆசமநஞ்செய்து மூன்றுதரம்பிராணயாமஞ்செய்து பின்பு தெற்குமுகமாய் வசந்தருதுமுதலிய ஆறருதுக்களையும் பிதுர்க்களையும் மந்திரத்துடன் நமஸ்க்கரிக்கவேண்டியது.

உகஅ—முன் எள்ளுந்தண்ணீருமாகவிட்ட மீதிஜலத்தை தொன்னையுடன் கைமறித்தலாக பூமியில்ஜலம்விழும்படி மூன்றுபிண்டங்களையுந் தனித்தனி சுற்றவேண்டியது. அந்த மூன்றுபிண்டங்களிலும், கிரமமாக கொஞ்சங்கொஞ்சமெடுத்து தான் தனித்தனி மோந்துபோட்டுவிடவேண்டியது.

உகக—அந்தப்பிண்டங்களினின்றும் மற்றுங் கொஞ்சங்கொஞ்சமெடுத்து அந்தப் பிதுர்பிராமணுள் புசிக்குங்காலத்தில் அவர்களிலையில் கிரமமாக முன்னம் புசிக்கும்படி போட்டுவிடவேண்டியது.

உஉ0—தகப்பனிருக்கும்போது தான் தாயாருக்குச் சிரார்த்தஞ்செய்தால் பாட்டன் இரண்டாம்பாட்டன்- மூன்றும்பாட்டனை ஆவாகநம்பண்ணவேண்டியது. அல்லது பிதுர் ஸ்தாநத்தில் ஜீவித்திருக்குந் தன்தகப்பனையும் பிதா-மஹாப்பிரபிதாமஹாஸ்தாநத்தில் பிராமணலாயும் வரித்து சிரார்த்தஞ்செய்யலாம். அப்போது- பிதா மஹா பிரபிதா மஹானுக்குமாத்திரம் இரண்டுபிண்டம் வைக்கவேண்டியது.

உஉக—எவனுக்குத் தகப்பனிறந்து பாட்டன் ஜீவித்திருக்கிறுனே அவன் தகப்பனுக்கும் இரண்டாம்பாட்டனுக்கும் மூன்றும் பாட்டனுக்கும் சிரார்த்தஞ்செய்யவேண்டியது.

உஉஉ—அல்லது தன்மநதின்படி ஜீவித்திருக்கும்பாட்டனை பிதாமஹாஸ்தாநத்திலும் பிதுர்பிரபிதாமஹாஸ்தாநத்தில்பிராமணர்க

ளையும் வரித்து சிரார்த்தஞ்செய்யலாமென்றுமநுப்பிரஜாபதிசொல்லியிருக்கிறார்.

௨௨௩—மேற்சொன்னபடி பிதுர் பிராமணருக்குப் பிண்டசேஷத்தைப்பரிமாறும்போது வரிக்கப்பட்டபிராமணர்களின்கையில் எள்ளுந்தண்ணீருமவிட்டு அவர்களைப்பார்த்து பிதுர்க்களின்பொருட்டுத் திருப்தியுண்டாகத்தக்கதென்று சொல்லிப் பரிமாறவேண்டியது.

௨௨௪—பின்பு கர்த்தாவானவன் அந்நங் கறிமுதலியவை வைத்திருக்கும் பாத்திரத்தை தன்னிரண்டுகைகளினாலும் எடுத்துவந்து பிதுர்க்களை தியானித்துக்கொண்டு அந்தப்பிராமணர் சமீபத்தில் வைக்கவேண்டியது.

௨௨௫—எந்த அந்நம் பதார்த்தமுதலியவற்றை ஒருகையில்வைத்துக்கொண்டு மற்றொருகையாலதைமூடிக்கொண்டுவராமல் ஒருகையாலேயேகொணர்ந்து பரிமாறப்படுகிறதோ அவற்றை துஷ்டமநமுள்ள இராக்கதர்கள் புசித்துவிடுகிறார்கள்.

௨௨௬—குணமுள்ளதான வடை-கறியமுது-தயிர்-நெய்- தேன் இவற்றை முயற்சியுடன் உபபாத்திரத்தில் ஒன்றோடொன்றுசேராமல் பரிசுத்தனாய் அந்நத்துக்கு முந்தி பரிமாறவேண்டியது.

௨௨௭—வடைமுதலிய பலகாரங்களையும் பாயசம் கிழங்கு பழம் ருசியுள்ளமாம்சம் வாசனையுள்ளதீர்த்தம்.

௨௨௮—இவைகளையெல்லாம் கொண்டுவந்து அந்த இலையில் அவசரப்படாமல் இது புளிப்புள்ளது இதுகாரமுள்ளது இதுதித்திப்புள்ளது என்று அதனதன் குணங்களைச்சொல்லி வேறிடத்தில் மநம்வையாமல் சாக்கிரதையாய் பரிமாறவேண்டியது.

உஉகூ—அப்போது வியசநத்தாலே கண்ணீர்விடவும், கோபி த்துக்கொள்ளவும், பொய்சொல்லவும், சிந்தின அந்நத்தைக்காலா லே மிதிக்கவும் இலையில் அந்நத்தைத்தூவிப் பரிமாறவுங்கூடாது.

உநூ0—அவசரப்பட்டுங் கண்ணீருடனுஞ் சிரார்த்தஞ்செய்தா ல் பிரேதங்களையும் கோபத்துடன்செய்தால் சத்துருக்களையும் பொய்சொல்லிக்கொண்டு செய்தால் நாய்களையும் அந்நத்தைக் காலான் மிதித்துக்கொண்டுசெய்தால் இராக்கதர்களையும் அந்நத் தைத்தூவினுல் பாபிகளையும் அந்தசிரார்த்தபல னடைகின்றது.

உநூக—அந்தப்பிராமணர்களுக்கு எந்தெந்தப்பதார்த்தம் இஷ் ட்டமாயிருக்குமோ அதைப்பொறுமையின்றிப் பரிமாறவேண்டி யது. அவர்கள்புசிக்கும்போதுபரமாத்மசுவரூபத்தைச்சொல்லும் படியானவேதாந்தங்களைப் படிக்கவேண்டியது இது-பிதுர்க்களு க்கு இஷ்டமானது.

உநூஉ—பின்னும்-வேதம்-மநுமுதலியதர்மசாத்திரம்- சௌபர் ண்ணம்-மைத்திராவருணம்-முதலிய ஆக்கியாநங்கள் மஹாபாரத முதலிய இதிஹாசங்கள்- பிராமம்-முதலிய புராணங்கள் ஸ்ரீசூக்த முதலிய சூக்தங்கள் இவற்றையும் படிப்பிக்கவேண்டியது.

உநூரு—பிராமணர்கள் புசிக்கும்போது தான்சந்தோஷித்துட ன் அவர்களைச் சந்தோஷிப்படுத்தி கொஞ்சங்கொஞ்சமா அந்நமு தலியவற்றைப் பரிமாறி இந்தப்பாயசம் ருசியுள்ளது இதில்கொ ஞ்சம்புசியுங்கள் இந்தமோதகம் இன்பமானது இதைமாத்திரம் அங்கீகரியுங்களென்று பிரார்த்தித்து புசிப்பிக்கவேண்டியது.

உநூச—பெண்வயிற்றுப் பிள்ளையானவன் பிரமசாரியாயினு ம் அவனை ஸ்ரார்த்தத்தில் முயற்சியுடனே புசிப்பிக்கவேண்டியது நேபாளதேசத்துக் கம்பளத்தை ஆசநம்போடவேண்டியது.வீடு முழுதும் எள்ளிறைக்கவேண்டியது.

உ௩௫—சிரார்த்தத்தில் பெண்வயிற்றுப்பேரன் நேபாளதேசத்துக்கம்பளம் எள்ளு இந்தமூன்றும்மேலானதுகள் ஆசாரம்-கோபமில்லாமை, அவசரப்படாமை, இம்மூன்றையும் பிதுர்க்கள் துதிசெய்கிறார்கள்.

உ௩௬—பரிமாறத்தக்க எல்லாப்பதார்த்தங்களும் உஷ்ணங்களாயிருக்கவேண்டியது அந்தப்பிராமணர்களும் மௌநத்துடன் புசிக்கவேண்டியது எந்தப்பதார்த்தம் சுவையுள்ளதாக இருக்கின்றதென்று கர்த்தாகேட்பினும் அதன் குணதோஷங்களைச் சொல்லவுங்கூடாது.

உ௩௭—எதுவரையில் அந்நமுதலிய பதார்த்தங்கள் உஷ்ணங்களாயிருக்கின்றதோ எதுவரையில் பிராமணர்கள் மௌநத்துடன் புசிக்கிறார்களோ எதுவரையில் பதார்த்தங்களின் குணதோஷங்கள் சொல்லப்பட வில்லையோ அதுவரையிற்றான் பிதுர்க்கள் புசிக்கிறார்கள்.

உ௩௮—தலையில்- துணிகட்டிக்கொண்டும் காலில்-பாதக்குறடுபோட்டுக்கொண்டும் தென்முகமாயும் எந்த அந்நம் புசிக்கப்படுகின்றதோ அதை இராக்கதர்கள் புசிக்கிறார்கள் ஆகையாலிவ்விதமாகச் செய்யக்கூடாது.

உ௩௯—சண்டாளன் - ஊர்ப்பன்றி-கோழி-நாய்-மாதவிடாயானஸ்த்திரி,பேடி-இவர்கள் பிராமணர்கள் புசிக்கும்போதுபாராமலிருக்கும்படி செய்யவேண்டியது.

உ௪௰—அக்கிநிஹோத்திர முதலிய ஹோமம், பசு சுவர்நமுதலியதாநம், பிராமணசந்தர்ப்பணை தரிசபௌர்நமாசம் முதலிய தெய்வகாரியம் ஸ்ராத்தம் இவைகளைமேற்சொல்லியசண்டாளர் முதலானவர்கள் பார்த்தால் பயனில்லாதனவாய்ப் போய்விடுகின்றன.

உசக—பன்றி மோத்தலினாலும், கோழி சிறகின்காற்றினாலும், நாய் பார்வையினாலும். சூத்திரன்தொடுதலாலும் பதார்த்தம் அசுத்தமாகின்றது.

உசஉ—நொண்டி-ஒற்றைக்கண்ணன் கர்த்தாவின்வேலைக்காரனான சூத்திரன்-நான்குவிரல்- ஆறுவிரலுள்ளவன்-இவர்களை சிரார்த்த தினத்தில்அந்தவீட்டைவிட்டு வெளிப்படுத்தவேண்டியது.

உசரு—பிரம்சாரி - அதிதிபிராமணன் - இவர்கள் சிரார்த்தபிராமணாள் புசிக்குங்காலத்தில் வந்தால் அவர்களநுமதிபெற்றுக்கொண்டு பிக்ஷைபோடவும் சாப்பாடுபண்ணுவிக்கவுங்கூடும்.

உசச—அந்தச்சிரார்த்த பிராமணர்களுக்கு பரிமாறினபின்பு எல்லாப்பதார்த்தங்களையுங் கொஞ்சங்கொஞ்சமெடுத்து ஒருகவளஅந்நத்திற்சேர்த்து அவர்கள்சாப்பிட்டபின்பு அவர்களுக்கெதிரில் மேற்சொல்லும் மந்திரப்படி பூமியில் தருப்பையின்மீது வைக்கவேண்டியது.இதற்கு விகரமென்றுபெயர்.

உசடு—அந்தவிகரம் பூமியில் தர்ப்பையின்மேல்வைத்தால் தன்குலத்தில் சாதகர்மமுதலிய சமுஸ்க்காரம் இல்லாமலிறந்த ஸ்திரிகளுக்கும், பதிவிரதைகளுக்கும், குற்றமில்லாமல் தந்தைமுதலியவரைவிட்டுத்தனித்திருக்கிறவர்களுக்கும்,திருப்த்தியுண்டாகின்றது.

உசகூ—பின்பு அந்த அந்நத்தை எடுத்து -ஆசை - பொறாமை சோம்பல்-இவைகளில்லாத தன்வேலைக்காரர்களுக்குப் பகுத்துக்கொடுக்கவேண்டியது.

உசஎ—துவிஜர்கள் இறந்துபோய் சபிண்டீகரணத்துக்கு முந்தி ஏகாகசிரார்த்தத்தில் தேவப்பிராமணனில்லாமல் ஒருபிதுர்ப்பிராமணனைமாத்திரம் புசிப்பிக்கவேண்டியது. ஒருபிண்டம்போடவேண்டியது.

உ௪அ—சபிண்டீகரணம் ஆனபின்பு அமாவாசிமுதலான நித்திய நைமித்திகசிரார்த்தங்களை மேற்சொன்னபடி தேவதையோடும் மூன்றுபிண்டத்தோடும் புத்திரர்செய்யவேண்டியது.

உ௪௯—எவன் சிரார்த்தஞ்செய்து மிகுந்த அந்நமுதலியவற்றை சூத்திரனுக்கு போடுகிறானோ அந்தமூடன் காலசூத்திரமென்னும் நரகத்தில் தலைகீழாக விழுகிறான்,

உ௫0—அந்தச்சிரார்த்தத்தில் புசித்தபிராமணன் தன்மனைவி-புணர்ச்சியிலாசையால் வந்தபோதிலும் அவளுடன் அன்று சம்போகஞ்செய்தால் அவளுடையமலத்தில் அந்தமாதம்முழுதும் அவனுடையபிதுர்க்கள் மூழ்கிறார்கள்.

உ௫௧—இந்தமுன்சொன்னபடி பூமியில் விகரம்வைத்தபின்பு அந்தப்பிராமணனைப்பார்த்து திருப்த்திஆயிற்றாவென்றுகேட்டு திருப்த்தியானபின்பு அவர்களை கையைசுத்திசெய்து ஆசமநஞ்செய்யச்சொல்லவேண்டியது. பின்பு இஷ்ட்டமானவிடத்தில் உட்காரும்படிபிரார்த்திக்கவேண்டியது.

உ௫உ—அந்தப்பிராமணர்களும் புசித்து உட்கார்ந்துகொண்டு சிரார்த்தகர்த்தாவைப்பார்த்து அவன்செய்த பிதுர்காரியத்தை க்குறித்து ஆசீர்வாதஞ்செய்யவேண்டியது.

உ௫௩—அவர்கள் ஆசீர்வதித்தபின்பு சிரார்த்த கர்த்தாவானவன் மிகுந்தஅந்நத்தை என்னசெய்யலாமென்று அந்தப்பிராமணனை க்கேட்டு அவர்கள்சொல்லுகிறபடிசெய்யவேண்டியது.

உ௫௪—ஏகாகசிரார்த்தகாரியத்தில் சுவதிதம் என்றும் கோஷ்ட்டிசிரார்த்தத்தில் சுசுருதம் என்றும் நாந்திசிரார்த்தத்தில் சம்பந்நம் என்றும் தேவசிரார்த்தத்தில் ருசிதம் என்றும் பிரதிவசநத்தை ச்சொல்லவேண்டியது. இவையல்லாந் திருப்த்தியைக் காட்டுவதுதான்.

உடுரு—அமாவாசியமுதலிய சிரார்த்தங்களில் அபராந்நகால ந்தருப்பையினலாசநம்போடுவது பசுவின்சாணத்தால் வீட்டை மெழுகுவது எள்ளையிறைப்பது கார்ப்பண்ணியமில்லாமல் அந்ந மிடுவது பதார்த்தங்களை நன்றாகப்பாகம்பண்ணுவதுபரிசுத்தபிரா மணனை வரிப்பது இவைகளெல்லாம் உயர்ந்தசம்பத்தா யிருக் கின்றன.

உடுசு—தருப்பை-மந்திரம் பூர்வாந்நகாலம்-அவிசு- வீட்டின் பரிசுத்தம்-இவைகள்-தேவகாரியத்திலுயர்ந்தது.

உடுஎ—செந்நெலந்நம்-பசுவின்பால் - சோமலதையின்ரசம்- நாற்றமில்லாதமாம்சம்-கல்லுப்பு-இவைகள்-சுபாவத்திலேயே அவி சுகளாகச் சொல்லப்படுகின்றன.

உடுஅ—கர்த்தாவானவன் தென்முகமாய் பரிசுத்தனாக நின்று கொண்டு அந்தப்பிராமணனை மரியாதைசெய்து மேற்சொல்லும் அபிஷ்டங்களைக்கேட்டுக்கொள்ளவேண்டியது.

உடுகூ—சுவாமிகளே என்குலத்தில் கொடையுள்ளவர்கள் விர்த் தியடையவேண்டியது.வேதமானது-ஓதுவதாலும் ஓதிவிப்பதாலு ம் எக்கியயாகஞ்செய்வதாலும் விர்த்தியடையக்கடவது. புத்திர பௌத்திரர்முதலானசந்ததியும்வளரக்கடவது.வேதப்பொருளிலு ம்பெரியோர்களிடத்திலும் அன்பானது நீங்காமலிருக்கவேண்டி யது.கொடுக்கத்தக்கபொருள்களும்அதிகமாகவிருக்கவேண்டியது.

உசு0—இந்தப்படி கேட்டபின்பு முன்வைத்திருக்கிற மூன்றுபி ண்டத்திலும், பிராமணரிடத்திலும் ஆவாகநஞ் செய்யப்பட்டிரு க்கிற பிதுர்க்களை 0 விசர்ச்சநம்பண்ணிவிட்டுஅந்தப்பிண்டங்களை

---

0 விசர்ச்சநம்-என்பது-எதாஸ்த்தாநத்துக்குச்செல்லும்படி பிரார்த்தித்தல்.

பசு-பிராமணன்-அக்கிநி இவர்களுக்காவது புசிப்பிக்கலாம் ஜலத்திலாவது போட்டுவிடலாம்.

உசுக—இந்தப்பிண்டப்பிரதாநத்தை சிலபெரியோர்கள்பிராமணுள் புசித்தபின்பே செய்கிறார்கள். நெருப்பிலும் நீரிலும் போடுவதுபோல பக்ஷிகளுக்குஞ்சிலர்போடுகிறார்கள்.

உசுஉ—பதிவிரதையாயும்-தன்சாதியாயும்-மூத்தமனைவியாயும், பிதுர்காரியத்திலன்புள்ளவளாயும்-பிள்ளையில் விருப்பமுள்ளவளாயும் இருக்கிற ஸ்த்திரியானவள் அந்தமூன்றுபிண்டங்களில் பிதாமகனுதான நடுப்பிண்டத்தைப்புசிக்கவேண்டியது.

உசுங—அந்தநடுப்பிண்டத்தைச் சாப்பிட்டால் தீர்க்காயுளும் கீர்த்தியும்-புத்தியும்-பொருளும்- நற்குணமும்-சந்ததியும்-சாத்துவிகமும்-உள்ள புத்திரனைப்பெறுகிறாள்.

உசுச—பின்புகர்த்தாவானவன் தன்கால்-கை-சுத்திசெய்துகொண்டு ஆசமநஞ்செய்து தன்பங்காளிகளைப்பூசித்து அந்நம்போடவேண்டியது. பின்பு தாய்வழியுறவான பந்துகளுக்கும் அந்நம் போடவேண்டியது.

உசுரு—சிரார்த்தபிராமணர்கள் புசித்த உச்சிட்டத்தை அவர்களை யனுப்பியபின்பு சுத்திசெய்யவேண்டியது. பின்பு நித்தியகர்மமான வைசுவதேவம் அதிதிபோசநம் இவைகளைச் செய்யவேண்டியது இது தருமவிதி.

உசுசு—பிதுர்க்களுக்கு எவ்விதமாய் சிரார்த்தஞ்செய்தால்நெடுநாள்வரையிலும் எவ்விதமாகச்செய்தால் முடிவில்லாதகாலம்வரையிலும் திருப்த்தியுண்டாகுமோ அது முழுமையுஞ்சொல்லுகிறேன்.

உசுஎ—திலம்-செந்நெல்லரிசி-உளுந்து- ஜலம்-கிழங்கு-பழம்-

இலைகளினுல் சிரார்த்தஞ்செய்தால் மனிதர்களின்பிதுர்க்கள் ஒரு மாதம்வரையில் திருப்த்தியடைகிருர்கள்.

உசுஅ—பாடீநசம் முதலிய மச்சமாம்சத்தால் செய்தால்-இரண்டுமாதம்வரையிலும் அரிணமென்கிற-மான்-மாம்சத்தால்செய்தால் மூன்றுமாதம்வரையிலும் செம்மறியாட்டு மாம்சத்தால் செய்தால் நான்குமாதம்வரையிலும் பக்ஷிகளின்மாம்சத்தால்செய்தால் ஐந்துமாதம்வரையிலும் திருப்த்தியையடைகிருர்கள்.

உசுகூ—வெள்ளாட்டின் மாம்சத்தால் செய்தால் ஆறுமாதம்வரையிலும் புள்ளிமான்மாம்சத்தால் செய்தால் எழுமாதம்வரையிலும் கறுப்புமான்மாம்சத்தால் செய்தால் எட்டுமாதம்வரையிலும் கலைமான்மாம்சத்தால் செய்தால், ஒன்பதுமாதம் வரையிலுந்திருப்த்தியடைகிருர்கள்.

உஎ0—முள்ளம்பன்றி காட்டெருமைக்கடா இவைகளின்மாம்சத்தால் செய்தால் பத்துமாதம்வரையிலும் முயல்-ஆமை-இவைகளின்மாம்சத்தாற்செய்தால்பதினெருமாதம்வரையிலுந் திருப்த்தியடைகிருர்கள்.

உஎக—பசுவின்பால்-தயிர்-நெய்-இவைகளால்-சிரார்த்தஞ்செய்தால் ஒருவருடம்வரையிலும் தண்ணீர்குடிக்கும்போது இரண்டு காதுந்தண்ணீரிற்படக்குடிக்கின்ற க்ஷீணவிந்திரியத்தை யுடையதாகிய வார்த்தீநசமென்னும் கிழவெள்ளாட்டுக்கிடாவின் மாம்சத்தாற்செய்தால் பன்னிரண்டுவருஷவரையிலுந்திருப்த்தியடைகிருர்கள்.

உஎஉ—அந்தந்தக்காலத்தி லுண்டான கறியமுது முள்ளுள்ளவாளைமச்சமும் - கட்கமிருகம்-சிவந்தஆடு-இவைகளின் மாம்சங்களாலும் காட்டில் முளைத்திருக்கும் செந்நெலின் அரிசியினுலும் செய்தால் அளவற்றநாள்வரையிலும் திருப்த்தியடைகிருர்கள்.

## மஹாளயசிரார்த்தவிதி.

உஎரு—வருஷிருதுவில் புரட்டாசி கிருஷ்ணபக்ஷ திரியோதசியில் தேனினாலும் பாயசத்தினாலும் சிரார்த்தஞ்செய்தால் அக்ஷயமான திருப்த்தியுண்டாக்கும்.

உஎச—நம்முடைய வம்சத்தில் முன்சொன்னபடி திரியோதசியில் அபராணகாலத்தில் நமக்கு-தேன்-நெய்-பாயசம்- இவைகளுடன் சிரார்த்தஞ்செய்பவன் ஜநிப்பானுவென்று பிதுர்க்கள் ஆசைப்படுகிறார்கள்.

உஎரு—எந்த எந்த பதார்த்தத்துடன் சிரார்த்தஞ்செய்தாலும் அதையதை அன்புடனும் விதியுடனும் கொடுத்தால்மாத்திரம் பிதுர்க்களுக்கு மறுலகையில் அளவற்ற திருப்த்தியை யுண்டுபண்ணுகின்றது.

உஎகூ—கிருஷ்ணபக்ஷத்தில் தசமிமுதல் சதுர்த்தசி நீங்கலாக அமாவாசிவரையிலுள்ள திதிகள் எப்படி மாதசிரார்த்தஞ் செய்வதற்கு உயர்ந்தனவோ அப்படி மற்றதிதிகள் உயர்ந்தவைகளல்ல,(கலியுகத்தில் மாம்சம் நீங்கலாகச்செய்யவேண்டியதென்று வியாக்கியாதா நிருணயஞ்செய்திருக்கிறார்)

உஎஎ—துதியைமுதலான இரட்டைத்திதியிலும்,பரணிமுதலான இரட்டைநக்ஷத்திரத்திலும், மஹாளயசிரார்த்தஞ்செய்பவன் சர்வ அபீஷ்டங்களையும் பிரதமைமுதலிய ஒற்றைத்திதியிலும், அசுவநிமுதலிய ஒற்றைநக்ஷத்திரங்களிலும், சிரார்த்தஞ்செய்பவன் பத்திரசந்ததியும் அளவற்ற கல்வி பொருள் இவைகளையும் அடைகிறான்.

உஎஅ—சிரார்த்தஞ்செய்வதற்கு சுக்கிலபக்ஷத்தைவிட கிருஷ்ணபக்ஷமெப்படியுயர்ந்ததோ அப்படியே பகலில் முன்பாதியைவிட பின்பாதியுயர்ந்தது.

உஎகூ—பூணுநூலிடமிட்டுக்கொண்டு வலதுகைமறித்தும் கையில்பவித்திரத்துடனும் செய்யத்தக்கதான இந்தப்பிதுர்சிரார்த்தத்தைத் தான் சாமளவுஞ்செய்யவேண்டியது.

உஅ0—இரவிலும் இரண்டுசந்தியிலும் சூரியவுதயமாய் யாமத்துக்குள்ளவும் நித்திய சிரார்த்தஞ்செய்யக்கூடாது. அப்படிசெய்தால் அது இராக்கதர்களையடையும்.

உஅக—இப்போதுசொல்லிவந்த விதிப்படி மாதந்தோறும் சிரார்த்தஞ்செய்வதற்குச்சக்தியில்லாமற்போனல் ஒருவருஷத்தில் ஏமந்தருது, கிரீஷ்மருது வருஷருது இவைகளிலாவது பஞ்சமஹா எக்கியத்துக்குப்பின்பு அதில்சேர்ந்தபிதுர் சிரார்த்தஞ்செய்யவேண்டியது.

உஅஉ—பிதுர்சிரார்த்தத்தில் ஓமம் செய்வதை லௌகிகாக்கினியில் செய்யக்கூடாது. ஆதலால் கர்த்தா பத்திநியுள்ளகிரகஸ்த்தனயிருந்தால் அவன் வைதீக அக்கினியிலும் இல்லாவிட்டால் பிராமணர்களின் கையிலும் செய்யவேண்டியது. ஆஹிதா அக்கினியுள்ள கர்த்தாவானவன் மாதசிரார்த்தத்தை கிருஷ்ணபக்ஷத்தில் அமாவாசைதவிர மற்றதிதியில் செய்யக்கூடாது. இறந்ததிதியில்செய்யவேண்டிய சிரார்த்தத்தைமாத்திரம் இறந்ததிதியில்செய்யலாம்.

உஅ௩—பெரும்பாலும்சக்தியில்லாதவனயிருந்தால் ஸ்நாநஞ்செய்து ஜலத்தினுல் பிதுர்க்களைக்குறித்து தர்ப்பணஞ்செய்தானுல் நித்தியசிரார்த்தஞ்செய்தபலனை யடைகிருன்.

உஅச—பிதுர்க்களை வசுதேவதைகளாயும், பிதாமஹர்களை ருத்திரதேவதைகளாயும்,பிரபிதாமஹர்களை ஆதித்தியதேவதைகளாயும் பழமையான வேதஞ்சொல்லியிருக்கின்றது. ஆகையால் அவர்களை அத்தேவதைகளாகவே தியானிக்கவேண்டியது.

உ௮௫—எப்போதும் ஒருமனிதன் விகசத்தையும் அமிர்தத்தை யும் புசிக்கிறவனாக விருக்கவேண்டியது.விகசமாவது சிரார்த்தத்தி ன்சேஷம் அமிர்தமாவது எக்கியத்தின் சேஷம்.

உ௮௬—இதுவரையில் பாருவணமுதலிய சிரார்த்தம் பஞ்சம ஹா எக்கியம் இவைகளின்விதி உங்களுக்குச்சொல்லிமுடிந்தனஇ னி பிராமணன்முதலான வருணத்தாரின்ஜீவநோபாயவிருத்திகளை ச் சொல்லுகிறேன்கேளுங்கள்.

மூன்றாவது அத்தியாயம்-முற்றிற்று.

ஆக-அத்தியாயம்-௩-க்கு-சுலோகம்-௬௫௪.

நால்காவது

# அத்தியாயம்.

## பிராமணாதிகளின்ஜீவநகிருத்தியங்கள்.

க—த்விஜாதிகள் தன்வயதில் நாலிலொன்றான முதற்பாகத்தில் பிரமசாரியாய் குருகுலத்தில்வாசஞ்செய்து இரண்டாவதுபாகத்தி ல் கலியாணஞ்செய்துகொண்டு கிரகஸ்தாசிரமத்தில் வசிக்கவேண் டியது.

உ—பிராமணன் ஆபத்தில்லாதகாலத்தில் பிராணிகளுக்குத் து ரோகமில்லாமலே எக்கியஞ்செய்வித்தல் ஓதுவித்தல் நல்லபொரு ளைத்தாநம்வாங்குதல் இவைபோன்ற விருத்திகளாலேஜீவிக்கவேண் டியது. அப்படிக்குச் சரிப்படாதபோது சொற்பதுரோகமுள்ள தான கிருஷி வியாபாரமுதலியவற்றாலாவது குடும்பத்தைபோஷி க்கவேண்டியது.

௩—போகவிருப்பமின்றி சாஸ்திரப்படி மாதாபிதாமுதலிய கு டும்பசம்ரக்ஷணைக்கும்தன்பிராணசம்ரக்ஷணைக்கும் உபயோகமான

நந தாநியங்களை யுலகத்தாரால் நிந்திக்கப்படாததாயும் சாஸ்திர த்திற்சொல்லியதாயுமிருக்கிற மேற்சொல்லப்போகிற காரியங்களாலே சம்பாதிக்கவேண்டியது.

௪—ருதம்-அமிர்தம்- மிர்தம்-பிரமிர்தம் -சத்தியாநிர்தம்-இவை ஐந்தினுலும் பொருளைச்சம்பாதிக்கலாம்,சுநகவிர்த்தியினல் ஆபத்தில்லாதபோது ஒருக்காலும் ஜீவிக்கக்கூடாது.

௫—கழனியிலும், மற்றவிடத்திலும், சிந்தினநெல்லை இரண்டுவிரலால் பொறுக்குவதும்,மேற்சொன்னவிடங்களில் கதிர்நெல்லைப்பொறுக்குவதும்,ருதம்-என்பதாம்-தான் யாசிக்காமலே வருகின்றவை-அமிர்தம்-என்பதாம்-தான் யாசித்துவருகின்றவை-மிர்தம்-என்பதாம்-பயிரிடுவது, பிரமிர்தம் என்பதாம்.

௬—யாபாரஞ்செய்வது சத்தியாநிர்தம் என்பதாம் பிராமணன் இதனுலுஞ்ஜீவிக்கலாம் சேவகாவிருத்தியானது, நீசமாய்ப்பார்ப்பதாலும், யஜமாநற் மிரட்டுக்குட்படுதலாலும், ஈநவேலைசெய்வதாலும்.நாயின்பிழைப்புக்குச் சரியானதால் சுநகவிர்த்தியென்று சொல்லப்படுகின்றது.ஆகையால் இச்சேவகாவிர்த்தியை அகத்தியம் நீக்கவேண்டியது (இதுபிராமணவிஷயம்.)

௭—பிராமணசாதிகிரகஸ்தன் மூன்றுவருஷிம்வரையிலாவது அதிகமாயாவது போதுமானதாநியத்தை களஞ்சியத்திற்போட்டுவைத்துக்கொள்ளலாம் அவ்வளவுஞ்சக்தியில்லாதவன்ஒருவருஷித்துக்குக்குறையாம லிருக்கத்தக்க தாநியத்தை சாலிலிட்டுவைத்துக்கொள்ளலாம்.அதற்குஞ்சக்தியில்லாதவன்மூன்றுநாளைக்குபயோகமாகிய தாநியத்தை வைத்துக்கொள்ளலாம். அல்லது நாடோறும் சம்பாதித்துக்கொள்ளுகிறவனகவாவது இருக்கலாம்.

௮—இந்தநால்வரில் முன் சொல்லப்பட்டவர்களைவிட பின்

சொல்லப்பட்டவர்கள் மேலானவர்கள் ஏனென்றால் பொருளதிக மாக இல்லாததால் யாகாதிகளால் சொர்க்காதிபோகங்களை யடையவேண்டுமென்னும் இச்சையின்றிப் பரமாத்துமாவைத் தியாநிக்கிறார்களல்லவா.

கூ—எவன் பெரியகுடும்பியோ அவன்-ருத - அமிர்த-மிர்த-பிரமிர்த-சத்தியாநிர்த *குசீதம்-இவ்வாறினாலும் ஜீவிக்கலாம் அவனுக்குக்குறைந்தசமுசாரி-எக்கியஞ்செய்வித்தல் ஓதுவித்தல் தாநம்வாங்குதல் இம்மூன்றினாலும் ஜீவிக்கலாம். அதிலுங்குறைந்தசமுசாரி எக்கியஞ்செய்வித்தல் ஓதுவித்தல் இவ்விரண்டினாலும் ஜீவிக்கலாம் அதிலுங்குறைந்தவன் ஓதுவித்தலினால்மாத்திரம் ஜீவிக்கலாம்.

கய—ருதவிர்த்தியினால் ஜீவிக்கிறவன் ஏழையாயிருப்பனாதலால் அவன் அக்கிநிஹோத்திரத்தில் விருப்பமுள்ளவனாய்-தறுச-பௌர்நமாச-ஆக்கிரயண-இஷ்டிகளைமாத்திரம் சக்திக்குத்தக்கபடி செய்யவேண்டியது.

## கிரகஸ்த்தர்கள் கிர்த்தியாகிர்த்தியங்கள்.

கக—பிழைப்புக்காக விகடஞ்செய்யவும் வண்டைவார்த்தை சொல்லவுங்கூடாது - பொய்-டம்பம்-கோள்-இவைகளில்லாத தான பிராமணவிர்த்தியைத் தேடிப்பிழைக்கவேண்டியது.

கஉ—தனக்குக்கிடைத்திருக்கிற- தாநியம்-தநம் -பரிஜநம் புத்திர மித்திரர் இவைகளால் மேலானசந்தோஷித்தையடைந்து சுவர்க்காதிசுகத்தைத்தேடவேண்டியது. ஏனென்றால் ஒருவன்சந்தோஷித்தையடைந்தால் அவனுக்குச்சுகமுண்டாகிறது வியசநப்பட்டால் அவனுக்கு நரகதுக்கமுண்டாகின்றது.

---

* குசீதம்-என்பது-வட்டிவாங்குதல்.

கங—மேற்சொன்ன விர்த்திகளுக்குள் எந்தவிர்த்தியினலாவது ஜீவித்துக்கொண்டிருக்கிற விரதாநுஷ்டாநமுள்ள பிராமணன் சுவர்க்கம் ஆயுள் கீர்த்தி இவைகளை யுண்டுபண்ணத்தக்க மேற்சொல்லப்போகிற விரதங்களைச் செய்யவேண்டியது.

கச—அவனவன் வருணாசிரமங்களுக்கு தக்கதாக வேதத்திலுந் தருமசாஸ்திரத்திலுஞ் சொல்லப்பட்டிருக்கிற நித்தியகருமங்களை நாடோறும் சோம்பலில்லாமல் செய்யவேண்டியது. அவைகளைச் செய்கிறவன் மேலானகதியையடைகிறான்.

கரு—பாட்டுப்பாடுவது-கூத்தாடுவது - யாகஞ்செய்யத்தகாதவனுக்கு யாகஞ்செய்விப்பது இப்படிக்கொத்த சாஸ்திரவிருத்தமான கர்மத்தினல் பொருளைத் தேடிக்கொள்ளக்கூடாது. பொருளிருந்தாலும் இல்லாமற்போனாலும் பதிதன்முதலானவரிடத்துத் தன்ஜீவநத்துக்காகத் தாநப்வாங்கக்கூடாது.

கசு—சப்த்தாதிவிஷயங்களில் அதிகவிருப்பம் வைக்கக்கூடாது தன்மனைவியானாலும் சாஸ்திரவிரோதமாய் காமசேஷ்டைகளை நடத்தக்கூடாது.சிலவிசை விஷயவிச்சை யதிகமாக வந்திருந்தால் அதை அதினல்வரும் அற்பசுகத்தையும் சுவர்க்காதிபுண்ணியலோகநாசத்தையும் மநதினல் நினைத்து அதையடக்கவேண்டியது.

கஎ—வேதார்த்தசிந்தநைக்கு விரோதமான எல்லாவியாபாரங்களையும் நீக்கி எவ்விதமாயாவது ஜீவித்துக்கொண்டு வேதத்தை யோதவேண்டியது. அதுதானிவனுக்குப் பிரயோசநத்தை யுண்டுபண்ணுகிறது.

கஅ—வயது-யாகாதிகாரியம்,பொருள்-குலம்- இவைகளுக்குத் தகுதியான - வேஷம்- வாக்கு-புத்தி- இவைகளைத் தரித்துக்கொண்டு உலகத்தில் சஞ்சரிக்கவேண்டியது.

௧௯—புத்தியை விருத்திபண்ணத்தக்கதான வியாகரணம் மீமா ம்சை ஸ்மிருதி புராணம்-தர்க்கம் - இவைகளையும், பொருள்சம் பாதித்தற்குபயோகமான பார்கஸ்பத்தியம் ஔசநசம் முதலி ய அர்த்தசாஸ்திரங்களையும் இம்மைக்குபயோகமான சோதிஷ வைத்தியசாஸ்திரங்களையும் மறுமைக்குபயோகமான வேதாந்த சாஸ்திரங்களையும் நாடோறும் அப்பியசிக்கவேண்டியது.

௨௦—மனிதனானவன் எப்படியெப்படி சாஸ்திரத்தை யோது கிறானோ அப்படியப்படியே எல்லாக்கியாநத்தையுமறிந்து பிர ம்மவிசாரத்திற்கு அதிகாரியாயும் ஆகிறான்.

௨௧—மூன்றாவதத்தியாயத்திற் சொல்லிய தேவ எக்கியமுதலிய பஞ்சமஹா யெக்கியத்தையும் தன்சக்திக்குத்தக்கபடி நடத்தவே ண்டியது.

௨௨—எக்கியசாஸ்திரமறிந்த சிலபெரியோர்கள் ஆசையொழிந்த வர்களாய் பஞ்சமஹாஎக்கியங்களை மேற்சொன்னபடி செய்யா மல்-பஞ்சகியாநேந்திரியங்களைக்கொண்டு சம்பாதிக்கிறார்கள். (அ தாவது ஞாநத்தினாலே எக்கியதேவதையான பரமாத்மாவைத் தி யாநிப்பதால் அதன்பயனையடைகிறார்க ளென்பதாம்.)

௨௩—இன்னுஞ்சிலபேரியோர்கள் எக்கியத்தின்பயன் வாக்கினா லும்பிராணவாயுவினாலும் அழிவற்றதாக உண்டாகிறதென் றறிந் து அந்தப்பிராணனை வாக்கிலும் அந்தவாக்கை பிராணனிலும் அ டக்கி யெக்கியபலனை அடைகிறார்கள். (அதாவதுமௌநவிரதத்தி னாலும் மந்திரஉச்சாரணத்தினாலும் எக்கியபலனை யடைகிறார்க ளென்பதாம்)

௨௪—பிரம்மகியாநமுள்ள மற்றுஞ்சில பெரியோர்கள் எல் லா எக்கியகர்மபலன்களும் பிரம்மகியாநத்தா லுண்டாகிறதென்

றுகியாநக்கன்றால்அறிந் துஅந்தக் கியாநத்திலேயே பஞ்சஎக்கி யபலனைஅடைகிறார்கள்.

உடு—காலையிலும் மாலையிலும் அக்கினிஹோத்திரம் பண்ண வேண்டியது.அமாவாசியில் * தருசேஷ்ட்டியும் பௌர்ணமியில் பௌர்ணமாசேஷ்ட்டியும் செய்யவேண்டியது.

உசா—கார்த்திகைமாதத்தில் ஆக்கிரயனேஷ்டியும் ருதுவின்முடிவில் சாதுர்மாசேஷ்டியும் தக்ஷிணாயந உத்தராயணாதிகளில்பசுவதேஷ்டியும் சாந்திரமாநபிரகாரம் வருஷாந்தமும்வருஷாதியுமாகிய வசந்தகாலத்தில்அக்கினிஷ்டோமமும் செய்யவேண்டியது

## ஆகிதாக்கினிவிஷயம்.

உஎ—ஆகிதாக்கினியான பிராமணன் தான்தீர்க்காயுளாயிருக்க வேண்டுமென்னும் விருப்பமிருந்தால் புதிதாக நெல்லுவிளைந்து வந்தவுடனே ஆக்கிரயணேஷ்டி செய்யாமல் அதைத்தான்புசிக்கக்கூடாது. மேற்சொன்னகாலத்தில் பசுவதேஷ்டி செய்யாமல் மாம்சபக்ஷணமுஞ்செய்யக்கூடாது.

உஅ—மேற்சொல்லியபடிக்கு ஆக்கிரயனேஷ்டி பசுவதேஷ்டி செய்யாமற்போனால் இந்த ஆகிதாக்கினியினுடைய திரேதாக்கினிகள் புதிதான அந்நத்திலும் மாம்சத்திலும் விருப்பமுள்ளதுகளாய் இவனுடைய பிராணனையே புசிப்பதற்கு யத்தநப்படுகின்றன.

உகூ—இந்தக்கிரகஸ்த்தனுடைய வீட்டில்வந்திருக்கிற அதிதியானவன் தன்சக்திக்குத்தக்கதான ஆசநம்-போசநம்,சயநம்-தண்ணீர்-கிழங்கு-பழம்-இவைகளால் பூசிக்கப்படாதவனாய் வாசஞ்செய்யக்கூடாது.

---

* தருசேஷ்டிபௌர்ணமாசேஷ்டி-அக்கினிஹோத்திரியின்யாகவிசேஷம்.

ருO—வேதபாகியாளான சாக்கியர்கள் செய்யத்தகாதகாரியஞ் செய்கிறவர்கள் பூனையைப்போல்வேடங்கொண்டு பிறரைவஞ்சிப் பவர்கள் வேதத்தைநம்பாதவர்கள் வேதாந்தவிரோதமான தர்க்க யுக்திகளைச் சொல்லுகிறவர்கள் கொக்குப்போல் மோசக்கருத் துள்ளவர்கள் இவர்கள் அதிதிபூஜாகாலத்தில் வந்தாலும் வாயினு லும்பூசிக்கலாகாது.

ருக—வேதமோதினவர்கள் விரதமநுஷ்டித்தவர்கள் வேதம் விரதமிரண்டுமுள்ளவர்கள் சுரோத்திரியர்கள் இப்படிக்கொத்த கிரகஸ்தர்களை தேவகாரியத்திலும் பிதுர்காரியத்திலும் பூசிக்கவே ண்டியது இதற்குவேறுபட்டவர்களைநீக்கவேண்டியது.

ருஉ—பிரமசாரி-சந்நியாசி-முதலான பிக்ஷைக்காரர்களுக்குத்த ன்சக்திக்குத்தக்கபடி குடும்பத்துக்கு விரோதமில்லாமல் பிக்ஷை போட்டுத் தனக்குபயோகமாகிற விருக்ஷமுதலானவற்றிற்கும் ஜல த்தினல் திருப்தி செய்விக்கவேண்டியது.

ருரு—கர்மாநுஷ்டாநமுள்ள கிரகஸ்தனுக்கு அந்நவஸ்த்திரமி ல்லாமல் கஷ்டநேரிட்டால் அவன் க்ஷத்திரியஜாதியான அரசனிட த்துநின்றுவது தன்னிடத்திலெக்கியம் செய்துகொண்டவனிடத்து நின்றுவது. தன் சிஷ்யனிடத்தினின்றுவது, பொருளைச்சம்பாதித்து க்கொள்ளவேண்டியது. அவர்களிருக்கும்போது மற்றவர்களிடத்தி ல் தாநம்வாங்கக்கூடாது.

ருச—கிரகஸ்தன் வேதவித்தையினலும் தாநம்வாங்குவதாலும் பொருள்சம்பாதிக்காமல் பசியினற்றுன்பப்படக்கூடாது. ஆஸ்தி யிருக்கும்போது கிழிந்தும் அழுக்குள்ளதாயுமிருக்கிறவஸ்திரத்தை யுடுத்திக்கொள்ளக்கூடாது.

ருரு—மயிர்-நகம்-மீசை-தாடி-இவைகளை விதிப்படி க்ஷவரஞ் செய்துகொண்டு விரதோபவாசமுள்ளவனுய் உள்ளும் புறமும்

பரிசுத்தனாய் அழுக்கில்லாதவஸ்திரத்தைக்கட்டிக்கொண்டு வேதாத்தியயநமுள்ளவனாய் சரீரபோஷகமான ஔஷித சேவநம்பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டியது.

ருசு—மூங்கிற்றண்டம் - தீர்த்தகமண்டலம் எக்கியோபவீதம் தருப்பை பவித்திரம் சுவர்ந்நகுண்டலம் இவைகளை எப்போதுந் தரிக்கவேண்டியது.

ருஎ—சூரியனை உதிக்கும்போதும் அஸ்த்தமிக்கும்போதும் கிரஹணம் பிடித்திருக்கும்போதும் ஜலத்தில் பிரதிவிம்பித்திருக்கும்போதும் உச்சியிலிருக்கும்போதும் பார்க்கப்போகாது.

ருஅ—கன்றுக்குட்டிக்கட்டுங்கயிற்றைத் தாண்டக்கூடாது. மேகம் மழையைப்பெய்யும்போது ஓடப்போகாது ஜலத்தில்தன்னுருவத்தைப் பார்க்கக்கூடாது. இது சாஸ்திரத்தின் ஏற்பாடு.

ருகூ—மார்க்கத்தில்போகும்போது மண்மோடு பசுமாடு தெய்வம் பிராமணன் நெய்க்குடம் தேன்குடம் நாற்சந்தி அரசுமுதலிய புண்ணியவிருக்ஷம் நேரிட்டால் அவைகளைப் பிரதக்ஷிணமாகப் போகவேண்டியது.

சo—மிகவும் காமாதுரனாயிருந்தாலும் மனைவி ருதுவாய் மூன்றுநாளைக்குள்ளேபுணரக்கூடாது. புணராவிட்டாலும் அவளுடன் சரியானபடுக்கையில் படுக்கவுங்கூடாது.

சக—மனைவி மாதவிடாயாகி யிருக்கும்போது அவளுடன்புணர்ச்சிசெய்கிறவனுக்கு ஞானம்-தேஜசு-பலம்-கண்-ஆயுள்-இவைகள் குறைந்துபோய்விடுகின்றன.

சஉ—அந்தமங்கையை ரஜோதரிசநகாலத்தில் நிஷேதிச்சவனுக்கு மேற்சொன்னவைகள் விருத்தியடைகின்றன.

சந—தன் மனைவியுடன் ஒருபாத்திரத்திற் புசிக்கக்கூடாது.

அவள் சாப்பிடும்போதும் இருமும்போதும் கொட்டாவிவிடும் போதும் தன்னிஷ்டப்படி யுட்கார்ந்திருக்கும்போதும் கணவன் பார்க்கலாகாது.

சச—பின்னும் அவள்கண்ணுக்கு மையிட்டுக் கொள்ளும்போ தும் எண்ணெய்தேய்த்துக் கொள்ளும்போதும் மேல்வஸ்திர மில்லாமலிருக்கும்போதும் பிரசவிக்கும்போதும் தேஜசைவிரு ம்பினவன் பார்க்கப்படாது.

சரு—கிரகஸ்தன் ஒருவஸ்திரத்துடன் அந்நத்தைப் புசிக்கப்ப டாது வஸ்திரமில்லாமல் ஸ்நாநஞ்செய்யலாகாது மலமூத்திரங் களை மார்க்கத்திலும் சாம்பலிலும் மாட்டுத்தொழுத்திலும் விடக் கூடாது.

சகூ—பின்னும் உழுதநிலம் ஜலம் யாகசாலை மலை பாழ்ங்கோ யில் புற்று இவைகளிலும் ஜலமலங்களை யொருபோதும் விடப் படாது.

சஎ—அப்படியே ஜெந்துக்கள் வாசம்பண்ணும்படியான நில வெடிப்புகளிலும் நடந்துகொண்டும் நின்றுகொண்டும் ஆற்றங்க ரையிலும் மலையினுச்சியிலும் மலமூத்திரங்களைவிடப்படாது.

சஅ—வாயு-அக்கினி பிராமணாள் சூரியன் ஜலம்-பசு-இவைகளை ப்பார்த்துக்கொண்டு ஒருபோதும் மலமூத்திரங்களைவிடப்படாது

சகூ—தான் மலமூத்திர நிவர்த்திசெய்யப்போகிறவிடத்தை யா கத்துக்குதவாததான கழி கல்லு இலை செத்தை இவைகளால் மறை த்து ஒருவருடனும்பேசாமல் அங்கவஸ்த்திரத்தை தலையிற்கட்டிக் கொண்டு மலமூத்திரத்தைவிடவேண்டியது.

ரு0—மலமூத்திரங்களை பகலிலும் இரண்டுசந்தியிலும் வடக் குமுகமாயும் இரவில் தென்முகமாயும் விடவேண்டியது.

ருக—இரவிலாகிலும் பகலிலாகிலும் நிழல்-இருட்டு-இவைகளா ல் திக்குத்தெரியாதிருந்தாலும் புலி திருடர் இவைகளால் பயமு ண்டாயிருந்தாலும் தன்னிஷ்டப்படி யுட்கார்ந்து மலமூத்திர வி சர்ச்சநஞ்செய்யலாம்.

ருஉ—அக்கிநி-சூரியன்-சந்திரன் ஜலம்-துவிஜன் - பசு-வாயு இ வைகளுக்கெதிராக மலமூத்திர விஸர்ச்சநஞ்செய்தவனுக்கு கியா ந மழிந்துபோய்விடும்.

ருந—நெருப்பை வாயினூதப்படாது. சம்போககாலமன்றி மாதர் நிருவாணமாயிருப்பதைப் பார்க்கப்படாது. அசுத்தமான வஸ்துவை நெருப்பிற்போடப்படாது. காலை அக்கிநியில் காய்ச் சலாகாது.

ருச—உயரமாகத் தான்படுத்துக்கொண்டு அக்கிநியைக்கீழே வைக்கலாகாது. அதைத்தன்காலாற்றூண்டவுங்கூடாது. கால்மாட்டு ப்புறமும் அதனை வைக்கவும்படாது. யாருக்கும்பிராணபயம்வரு ங்காரியத்தைச் செய்யப்படாது.

ருரு—சந்தியாகாலத்தில் சாப்பிடவும் வழிநடக்கவும் தூங்கவுங் கூடாது. பூமியை குச்சுமுதலியவற்றால் காரணமின்றி கீறப்படா து. தன்றலையில் சூட்டினமலரை தானேவாங்கி யெறியப்படாது

ருசு—ஜலத்தில் மூத்திரம் மலம் கோழை எச்சல்பட்டவஸ்து இரத்தம் விஷம் இவைகளைப்போடப்படாது.

ருஎ—குடியில்லாதவீட்டில் தான் தநியாய்த்தூங்கலாகாது. வே தம் பொருள் இவைகளால் உயர்ந்தவன் தூங்கும்போது அவனை எழுப்பலாகாது. மாதவிடாயானவளுடன் பேசப்படாது. தன்னை வரிக்காமலிருக்கும்பொழுது யாககாரியத்தில் பிரவேசிக்கலாகாது

ருஅ—பசுவானது தண்ணீர்குடிக்கும்போதும், கன்று பால்கு

டிக்கும்போதும் தடைசெய்யக்கூடாது. மற்றொருவருக்குங் காண்பிக்கக்கூடாது. ஆகாசத்தில் இந்திரதநுசைக்கண்டால் அதனைத் தெரிந்தவன் மற்றொருவருக்குங் காட்டப்படாது.

௫௯—யாகசாலை பசுமாட்டுத்தொழும் பிராமணசமீபம் வேதாத்தியயநகாலம் போசநகாலம் இவ்வகளில் வலதுகையை உத்தரீயத்துக்குவெளியில் வைத்துக்கொண்டிருக்கவேண்டும்.

௬0—தருமமறிந்தவர்களில்லாமலும் விசேஷமாய் வியாதிக்கிடமாயிருக்கிற ஊரில் வாசஞ்செய்யப்படாது. தான் தநியாய்வழி நடக்கப்படாது. மலையில் அதிகநேரம் வாசஞ்செய்யப்படாது.

௬க—சூத்திரன் ராஜாவாயிருக்கும் இராச்சியத்திலும் தருமமறியாதவர்கள் பாஷண்டிகள் இவர்கள்வசிக்கும்படியான கிராமத்திலும் சமீபத்தில் சண்டாளர்வசிக்கின்ற கிராமத்திலும் வாசஞ்செய்யப்படாது.

௬௨—புண்ணாக்குமுதலான சாரமில்லாதபதார்த்தத்தைப் புசிக்கலாகாது. இரவிலும், பகலிலும், அந்நத்தை யதிகமாகப் புசிக்கப்படாது வயிற்றில் பாதிப்பங்கை அந்நத்தாலும் கால்பங்கை ஜலத்தினலும்நிரப்பி கால்பங்கைவாயுசஞ்சரிப்பதற்குவிடவேண்டியது உதயாஸ்தமயகாலத்தில் புசிக்கலாகாது மத்தியாநம்புசிப்பு விசேஷமாயிருக்குமாகில் இரவிற்புசிக்கலாகாது.

௬௩—இம்மைக்கும் மறுமைக்கும் உபயோகமில்லாத வீண்காரியத்தைச் செய்யப்படாது தண்ணீரை இரண்டுகையினலுமெடுத்துச் சாப்பிடப்படாது பக்ஷணங்களை மடியில்வைத்துக் கொண்டுபுசிக்கலாகாது ஒருபோதும் பிரயோசநமில்லாமல் சந்தோஷிப்படலாகாது.

௬௪—சாஸ்திரவிரோதமாய் கூத்தாடவும், பாடவும், மத்தளதாளமுதலியவாத்தியங்களைவாசிக்கவுங் கூடாது கையினற் புஜத்தைத்

தட்டவும் பல்லைமூடிக்கொண்டு இருப்பவும் கொழுப்பினால் கழுதைமுதலியபோற் கூப்பிடவும்படாது.

சுரு—வெங்கலப்பாத்திரத்தா லொருபோதும் கால்சுத்திபண்ணலாகாது பின்னமாய்ப்போன மண்பாத்திரத்திலும், மநதுக்குருசிக்காத பாத்திரத்திலும், புசிக்கப்படாது.

சுசு—பாதுகை பாதரக்ஷை வஸ்திரம் எக்கியோபவீதம் அலங்காரம் புஷ்பம் மாலை கமண்டலம் இவைகள் அந்நியனநுபவித்திருந்தால் அதைத்தான் தரிக்கப்படாது.

சுஎ—பழக்கப்படாதவைகளாயும் பசி-பிணி-இவைகளால்-பீடிக்கப்பட்டதாயும், பிந்நமான-கொம்பு-கண்- குளம்பு-வால்-இவைகளையுடையவாயும் இருக்கிற எருதுகள்கட்டப்பட்டிருக்கிற பண்டிகளில் ஏறப்படாது.

சுஅ—பழகினவாயும் வேகமாகநடக்கின்றனவாயும் சுபமான லட்சணமுள்ளனவாயும், அழகானவர்ணமுள்ளனவாயு மிருக்கிற இடபங்களை பண்டியிற்கட்டி சாட்டியா லதிகமாயடியாமல் சஞ்சரிக்கவேண்டியது.

சுகூ—சாமத்துக்குட்பட்ட இளவெய்யில் பிணத்தின்புகை பிந்நமான ஆசநம் இவைகளைநீக்கவேண்டியது. நகம்-மயிர் - இவைகளைத் தானாச் சேதிக்கக்கூடாது. நகத்தைப் பல்லினாற்கடித் திழுக்கவுங்கூடாது. (இளவெய்யலென்பதைசிலர் கந்நியாமாதத்து வெய்யிலென்றுசொல்லுகிறார்கள்.)

எ0—காரணமின்றி-மண்கட்டியையுடைக்கவும் நகத்தாற்றிரணத்தைக் கிள்ளவும் கூடாது. பயனில்லாதவேலையைச் செய்யப்படாது. பின்னாமேல் துக்கத்தையுண்டாக்கும்படியான காரியத்தைச் செய்யப்படாது.

௭௧—காரணமின்றி மண்கட்டியையுடைக்கிறவன் திரணத்தைக் கிள்ளுகிறவன் நகத்தைப் பல்லாற்கடிக்கிறவன் கோள்சொல்பவன் ஆசாரமில்லாதவன் இவர்கள் சீக்கிரத்தில் அழிந்துவிடுவார்கள்.

௭௨—லௌகிக விஷயத்திலேனும் வைதீகவிஷயத்திலேனும் பிடிவாதத்துடன் தான் கக்ஷி சொல்லப்படாது. குடிமிக்குவெளியில் பூவை சுத்திக்கொள்ளப்படாது. எருதின்மேலேறிக்கொண்டு போகக்கூடாது.

௭௩—விடு-ஊர்-இவைகளின்வாசற்கதவுசார்த்தியிருக்கும்போது வேறுவழியால் அவைகளுக்குள் பிரவேசிக்கலாகாது. இரவில் மரத்தடியைத் தூரமாய்நீக்கிவிடவேண்டியது.

௭௪—ஒருக்காலுஞ் சொக்கட்டான்முதலானவை விளையாடக்கூடாது. தன்பாதக்குறடு பாதரக்ஷையைத் தன்கையாலெடுத்துப் போகலாகாது. படுக்கையில் உட்கார்ந்துகொண்டும் இடதுகையில் அந்நத்தைவைத்துக்கொண்டும் ஆசநத்தின்மீது இலைபோட்டுக்கொண்டும் சாப்பிடப்படாது.

௭௫—எள்ளு சம்பந்தப்பட்ட எல்லாப்பதார்த்தத்தையும் இரவில் புசிக்கப்படாது. கௌபீநமில்லாமல் அம்மணமாகப் படுக்கப்படாது. சாப்பிட்டகையைக்கழுவாமல்வெளியிற்போகப்படாது

௭௬—தண்ணீரால் கால்கழுவி அந்த ஈரமிருக்கும்போதே புசிக்கவேண்டியது. காலீரம் உலர்ந்தபின் படுக்கவேண்டியது. ஈரக்காலுடன் சாப்பிடுகிறவன் தீர்க்காயுளாயிருப்பன்.

௭௭—கண்ணுக்குத்தெரியாத புதரில் ஒருபோதும் பிரவேசிக்கப்படாது. மலமூத்திரங்களைப் பார்க்கப்படாது. ஆற்றைக் கையினால்நீந்தித் தாண்டலாகாது.

௭௮—தீர்க்காயுளாயிருக்க விரும்புகிறவன்-மயிர்-சாம்பல்-எலு

ம்பு-ஓட்டாஞ்சல்லி-மண்டையோடு-பஞ்சு-உமி-இவைகளில் - அறி ந்து நிற்கவும் பாதத்லதவைக்கவுங்கூடாது.

எகூ—பதிதர்-சண்டாளர்-புழுக்கையர்-மூர்க்கர்-பொருள் முத லியவற்றால் கர்வமடைந்தவர்கள்-வண்ணான்முதலான தாழ்ந்தசாதி யர்-செம்படவர்- இவர்களுடன் ஒருமரத்தினிழலிற்கூட ஒருமித் து வசிக்கக்கூடாது.

அ0—சூத்திரனுக்கு இம்மைக்குபயோகமான அர்த்தசாஸ்த்திர த்தை சொல்லிவைக்கலாகாது.தனக்குச் சிஷ்ஷியனாகாத சூத்திரனு க்கு உச்சிட்டஅந்நத்தைக்கொடுக்கக்கூடாது. ஓமம்பண்ணி மிகுதி யை சூத்திரனுக்குக்கொடுக்கலாகாது. தருமம் விரதம் இவைகளை ஒருபிராமணனை முன்லவத்துக்கொள்ளாமல் நேராயவனுக்குஉப தேசிக்கப்படாது.

அக—எந்தப்பிராமணன் சூத்திரனுக்கு நேராக தருமத்தையு ம் விரதத்தையும் உபதேசிக்கிறானோ அவனந்தச்சூத்திரனோடுகூட அசம்விருதமென்னும் இருளில் மூழ்கிறான்.

அஉ—இரண்டுகைகளையுஞ் சேர்த்துக்கொண்டு தன்றலையைச் சொரியக்கூடாது. சாப்பிட்டுக் கைகால் சுத்திசெய்யாமல்தலையை யிடதுகையாலுந் தொடக்கூடாது. நோயில்லா திருக்கும்போது தலையன்றி ஸ்நாநஞ்செய்யக்கூடாது.

அரு—கோபத்தினால் ஒருவன் தலைமயிரைப்பிடித்திழுக்கவும் த லையிலடிக்கவுங்கூடாது. இதனால் கிரீடாகாலத்தில் மனைவிகூந்தலை ப்பிடிக்க நிஷேதமில்லை ஒருதிநத்தில் ஸ்நாநஞ்செய்து பின்புஅப் பிங்கநம் செய்யக்கூடாது.

அச—க்ஷத்திரியவம்சத்திற் பிறவாத அரசன்-கசாய்க்காரன்-தில

மர்த்தநஞ்செய்பவன்- கள்ளுக்கடைக்காரன் - வேசைத்தொழில் செய்பவன்-இவர்களிடத்தில் தாநம்வாங்கப்படாது.

அரு—திலமர்த்தநஞ் செய்பவன் பத்துக்கசாயிக் காரனுக்குச் சரியானவன் அவனிற் பத்துப்பங்கதிகம் கள்ளுவிற்பவன் அவனிற்பத்துப்பங்கதிகம் வேசைத்தொழில் செய்பவன் அவனிற்பத்துப்பங்கதிகம் அரசன்.

அசு—அரசன்பதினுயிரங் கசாயிக்கடை விற்கிறகொலைக்காரனுக்குச்சரியானவனுதலால் அவனிடத்தில் தாநம்வாங்குவது மிகவுங் கொடுமையானது.

அஎ—பேராசையுள்ளவனும் சாஸ்த்திரத்தைக் கடந்தவனும் க்ஷத்திரிய வம்சத்தில் பிறவாதவனும் இருக்கிற அரசனிடத்தில் எவன் தாநம்வாங்குகிருனே அவன் மேற்சொல்லும் இருபத்தொரு நரகங்களையும் முறையாக அடைகிருன்.

அஅ—தாமிசிரம்-அந்ததாமிசிரம்- மஹாரௌரவம்-ரௌரவம் நரகம்-காலசூத்திரம்-மஹாநரகம்.

அகூ—சஞ்சீவநம்-மஹாவீச்சி - தபநம்-சம்பிரதாபநம் - சம்ஹாதம்-காகோலம்-குண்டலம்-பூதிமிர்த்திகம்.

கூ0—லோகசங்கு-பிறுஜீஷம்-பந்தா-சால்மலீநதி- அசிபத்திரவநம்-லோகதாரகம்-ஆக இருபத்தொன்று.

கூக—இவைகளை யறிந்தவர்களாயும் தருமசாஸ்த்திர வேதபுராணமுதலியவற்றை ஓதினவர்களாயும் இருக்கிறபிராமணர் ஜந்மாந்திரத்திலும் மறுமையிலும் சுகவிருப்பத்தினுல் அந்தவரசனிடத்தில் தாநம்வாங்குகிறதில்லை.

கூஉ—இரவில் நான்காவது யாமத்தில் விழித்துக்கொண்டு தருமம்-பொருள்- இவற்றைச் சம்பாதிக்கவேண்டிய மார்க்கத்தையும்

அதனல்-தனக்குவரும் சரீரப்பிரயாசையையும் நினைத்துப் பின்பு வேதாந்தத்தால் பரமாத்துமாவைத்தியாநிக்கவேண்டியது.

கூ௩—பின்பு எழுந்திருந்து மலமூத்திரவிசர்ச்சநஞ் செய்து விதிப்படிசௌசசுத்தி செய்துகொண்டு மநஸதை வேறுவிடத்திற் செலுத்தாமல் சாக்கிரதையுடன் காலசந்தியாவந்தநஞ்செய்து ஸாவகாசமாய் செபஞ்செய்யவேண்டியது.

கூ௪—ருஷிகள் சந்தியாவந்தநத்தை ஸாவகாசமாகச் செய்து அதனல்-தீர்க்காயுளையும் ஞாநத்தையும் இம்மையிலும் மறுமையிலும் புகழையும் பிரம்மதேஜஸையும் அடைந்தார்கள்.

## சிராவணவிதி.

கூ௫—ஆவணி-அல்லது புரட்டாசிமாதங்களில் தன்சூத்திரக்காரர் சொன்னவிதிப்படி பௌர்ணமிதிதியில் உபாகர்மஞ்செய்து சாக்கிரதையுடன் நாலரைமாதம்வரையில் வேதமோதக்கடவன்.

கூ௬—தை-அல்லது மாசிமாதத்தில் - கிருஷ்ணப்பிரதமையில் பகற்பதினைந்து நாழிகைக்குமுன்னர் ஊருக்குவெளியில் வேதங்களுக்கு * உச்சர்ஜ்ஜநகர்மம்-செய்து ஓதுகிறத்தை நிறுத்தவேண்டியது.

கூ௭—இந்தப்படி உச்சர்ஜ்ஜநகர்மஞ்செய்தபின்பு மூன்றுநாள் அல்லது தொண்ணூறுநாழிகை அல்லது-ஒருநாள்வரையில் ஓதாமலிருக்கவேண்டியது.

கூ௮—பின்பு-சுக்கிலபக்ஷத்தில் மந்திரபிராமணத்தையும் கிருஷ்ணபக்ஷத்தில் வேதத்தின் அங்கங்களையும் பரிசுத்தனய் ஓதவேண்டியது.

---

* உச்சர்ஜ்ஜநம்-என்பது - வேதம்ஓதிநிறுத்துவதற்கு முன் செய்யத்தக்க ஓர்விரதம்.

## அநத்தியயநம்

கூகூ—வேதமோதும்போது எழுத்து-சுரம் - இவைகள்பிரிந்துதோற்ருமல் ஓதக்கூடாது சூத்திரன் சமீபத்திலிருக்கும்போது ஓதக்கூடாது. விடியற்காலத்தில் வேதமோதி இளைப்பினுல் மறுபடி நித்திரைசெய்யப்போகாது.

க00—வேதமோதக்கூடாதநாளிலும் நித்தியகர்மத்திற் சேர்ந்த காயத்திரியை நாடோறும் ஜெபிக்கவேண்டியது.விசேஷிவேதமந்திரத்தைக் கர்மாதிகள்நேரிட்டால் படிக்கலாம்.

க0க—மேற்சொல்லப்போகிற அநத்தியயநத்தை வேதமோதுஞ் சீடனும் ஓதிவைக்குங்குருவும் எப்போதும் அநுசரிக்கவேண்டியது.

க0உ—வருஷிகாலத்தில் இரவில் காதுக்குக்கேழ்க்கும்படி சப்தத்துடனே காற்றடிக்கும்போதும் பகலில் புழுதியுடனேகாற்றடிக்கும்போதும் அநத்தியயநம்.

க0ங—மின்னல் - இடி - இவற்றுடன் மழைபெய்யும்போதும்-பெரிதாய்-தூமகேதுவிழும்போதும் அந்தக்காலந்துவக்கி மறுநாளந்தக்காலம்வரையில் அநத்தியயநமென்று மநுவினபிப்பிராயம்.

க0ச—மேற்சொன்னமிந்நல் முதலியவைகள் வருஷிகாலத்தில் அந்திவேளையில் காணப்பட்டாலும் அநத்தியயநம், மற்றக்காலத்தில் அந்திவேளையில் மேகமாத்திரமிருந்தாலும் அநத்தியயநம்,

க0ரு—எல்லாக்காலத்திலும் இடிவிழும்போதும் பூமிநடுங்கும்போதும் நட்சத்திரம்விழும்போதும் மறுநாளதுவரையில் அநத்தியயநம்.

க0சு—காலசந்திவேளையில் மின்னலும் இடியுமாத்திரம் இருந்

று மழைபெய்யாமற்போனால் அன்றுமத்தியாநமாத்திரம் அநத்தியயநம், அவைசாயுங்காலநேரிட்டால்ஒருநாள் அநத்தியயநம்.

க0எ—ஊரிலாவது பட்டணத்திலாவது துர்க்கந்தவாசனை யிருந்தால் அது அடங்குகிறவரையில் பதிதாய் வேதமோதுகிறவர்களுக்கும் ஓதினதைச்சொல்பவர்களுக்கும் அநத்தியயநம்.

க0அ—ஊரில் செத்தபிணமிருக்கும்போதும்-பாபிகளருகிலிருக்கும்போதும் அழுகைக்குரல்கேட்க்கும்போதும் யாதோநிமித்தமாக மஹாஜநங் கூடியிருக்கும்போதும்-அநத்தியயநம்.

க0கூ—தண்ணீரிலிருக்கும்போதும், அர்த்தராத்திரியிலும் - ஜலமல நிவர்த்திசெய்திருக்கும்போதும் எச்சலுட னிருக்கும்போதும்சிராத்தத்திற்றன்னை வரித்திருக்கும்போதும் வேதத்தைமநதிலும்.நினைக்கலாகாது.

ககo—நவசிராத்தம்வாங்கினபோதும் தன்தேசவரசனுக்கு பிள்ளை பிறந்திருக்கிறபோதும் சந்திரசூரியகிரஹணம் பிடித்தபோதும் மூன்றுநாள் அநத்தியயநம்.

ககக—ஏகாகஞ்சாப்பிட்ட பிராமணனுடைய தேகத்தில் அந்த எண்ணெய் வாசனை அந்நமுதலானபதார்த்தங்கள் ஜீரணமாகிறவரையில் அநத்தியயநம்.

ககஉ—படுத்துக்கொண்டும் காலைநீட்டிக்கொண்டும் யோகாசநமாயிருந்துகொண்டும் மாமிசம் சூதகாந்நம் இவைகளைப்புசித்தும் ஓதலாகாது.

ககங—பனி மழைபெய்யும்போதும் பாணசப்தம் வீணைசப்தம் கேட்க்கும்போதும் இரண்டுசந்தி செய்மானகாலங்களிலும்அமாவாசி-சதுர்த்தசி -பௌர்நமி-அஷ்டமிகளிலும் ஓதக்கூடாது.

ககச—அமாவாசியிலோதினால் குருவையும் சதுர்த்தசி சிஷ்னை

யும் அஷ்டமி-பௌர்நமி ஓதினவேதத்தையும் அழித்துப்போடும் ஆகையா லவைகளை நீக்கவேண்டியது.

ககரு—மண்மாரிபெய்யும்போதும் திக்குகளில் எரிகிறபோதும், குள்ளநரி-நாய்-கழுதை-ஒண்டை இவைகளழும்போதும், வெகுபேர் பந்தியில் உட்கார்ந்திருக்கும்போதும், ஓதக்கூடாது.

ககசு—சுடுகாடு-கிராமம்-இவைகளின் சமீபத்திலும், தோழத்திலும், புணர்ச்சிகாலத்தில்தரித்த வஸ்திரத்தைத்தரித்திருக்கும் போதும், பிராமணூர்த்தப் சாப்பிட்டிருக்கும்போதும், ஓதக்கூடாது.

ககஎ—பசு-குதிரை-வஸ்த்திரம் முதலியவற்றை பிராமணன்-கையினாற் றானம்வாங்கினாலும் ஓதக்கூடாது. பிராமணனுக்குக்கையே வாயாகச்சொல்லப்படுகிறது.

ககஅ—ஊரில்-திருடன்-அக்கினி-இவைகளால் பயமுண்டாயிருக்கும்போதும், மற்ற எந்தஆச்சரியங் காணப்பட்டிருந்தாலும், மறுநாள் அதுவரையில் ஓதக்கூடாது.

ககக—ஆவணி புரட்டாசிமாதத்தில் உபாகர்மம் ஆனபின்பும் தை-மாசிமாதத்தில் உச்சர்ஜ்ஜநமானபின்பும் மூன்றுநாளும், மார்கழிமாதமுதல் மூன்று கிருஷ்ணாஷ்டமியிலும், சித்திரை ஆடி ஐப்பசி-தை-இந்தமாதப்பிரவேசத்திலும் ஒருநாள்-அநத்தியயநம்.

கஉ௦—குதிரை-மரம்-யானை-ஒட்டம்-கோவேறுகழுதை ஒண்டை மற்றும் பண்டிமுதலிய வாகநம் இவைகளை ஏறிக்கொண்டும் களர் நிலத்தில் நின்றுகொண்டும் ஓதக்கூடாது.

கஉக—வாயினாலும், ஆயுதத்தினாலும், சண்டைநடக்கும்போதும் சேனையின்பக்கத்தில்நின்றும் ஊரில் யுத்தம்நடக்கும்போதும் புசித்தகை யுலராமலிருக்கும்போதும், அஜீரணமாயிருக்கும்போ

லும், வாந்திசெய்தபின்பும், புளியேப்பம்வரும்போதும்,சூதககாலத்திலும் ஓதக்கூடாது.

கஉஉ—அதிதியை ஓதப்போகிறேனென்று கேட்டுக்கொள்ளாமலும், பெருங்காற்றடிக்கும்போதும், தன்தேகத்தில் இரத்தம்வரும்போதும், கத்தியால் காயம்பட்டிருக்கும்போதும்,ஓதக்கூடாது

கஉ௩—சாமவேதம் ஓதுஞ்சப்தம் கேழ்க்கிறபோது இருக்குயஜுசுகளை ஓதக்கூடாது ஒருவிசைவேதமுழுதிலும் ஓதியானபின்பும் ஆரணவேதம் ஓதினபின்பும் அன்று ஓதக்கூடாது.

கஉச—இருக்குவேதம்தேவர்களையும் யஜுர்வேதம் மானுடரையும் சாமவேதம் பிதுர்க்களையும் தெய்வமாகவுடையது ஆதலால் அந்தச்சாமவேதசப்தம் அபரிசுத்தமானது.

கஉரு—இந்தப்படி வேதத்தின் தேவதைகளையறிந்த வித்துவான்கள்நாடோறும் செய்யும் பிரம்மயெக்கியத்தில் இருக்கு-யஜுசு சாமம் - இவற்றைக்கிரமமாக ஓதுகிறார்கள். பின்னும் முன்னர் வேதலட்சணங்களையும் பின்னர் வேதத்தையும் ஓதுகிறார்கள்.

கஉசா—பசு-தவளை-பூனை-நாய்-பாம்பு- ஓணான்-எலி - இவைகள் ஓதுகிறவனுக்கும் உபாத்தியாயனுக்கும் நடுவிற்போனால் ஒருநாள் அநத்தியயநம்.

கஉஎ—அசுத்தமானஇடம்-தன்தேக அசுத்தி-இவ்விரண்டையும் பெரிய அநத்தியயநமாக ஓதுகிறவன் எப்போதும் நினைக்கவேண்டியது.

## பொதுவிதி.

கஉஅ—விரதாநுஷ்டானமுள்ள பிராமணனானவன் தன்மனைவி ருதுஸ்நாநஞ் செய்திருந்தாலும் அமாவாசி-சதுர்த்தசி-அஷ்டமி பௌர்ணமி இந்தநாள்களில் புணரக்கூடாது.

கஉகூ—புசித்தபின் காரணமின்றி வேடிக்கையாய் ஸ்நாநஞ்செய்யக்கூடாது நோயாளி தலைமுழுகக்கூடாது-பிறப்பு - இறப்பு-கிரஹணம்- இவையன்றிப் பாதிராத்திரியில் ஸ்நாநஞ்செய்யக்கூடாது.எப்போதும் கட்டின வஸ்திரத்துடனும் ஜலத்தின் குணந்தெரியாத குளமுதலியவற்றிலும் ஸ்நாநஞ் செய்யக்கூடாது.

கரு0—தெய்வவிம்பங்கள் - மாதா-பிதா-அரசன்- விரதாநுஷ்டாநமுள்ளவன் ஆசாரியன் யாகத்தில் தீக்ஷைபெற்றவன் இவர்களுடைய உருவநிழலை தெரிந்துமிதிக்கவும் தாண்டவுங்கூடாது.

கருக—நடுமத்தியாநத்திலும், அர்த்தராத்திரியிலும், மாம்சத்துடன் சிரார்த்தத்தில் புசித்தபின்னும், இரண்டுசந்தியிலும், நாற்சந்தியிலு சாவகாசமாய்நிற்கக்கூடாது.

கரு௨—அலாப்பு ஸ்நாநஞ்செய்தஜலம், மூத்திரமலம், உதிரம் கோழை-உமிழ்ந்ததாம்பூலம், வாந்தியெடுக்கப்பட்டவை, இவைகளில்தெரிந்துநிற்கக்கூடாது.

கருங—சத்துரு அவன்மந்திரிமுதலிய சிநேகிதாள்-அதர்ம்மமுள்ளவன்-திருடன்- பிறன்மனைவி-இவர்களுடன் சிநேகஞ்செய்யக்கூடாது.

கருச—இந்தவுலகத்தில் மனிதனுக்கு பிறன்மனைவியைப்புணர்தல்போல ஆயுளைக்குறைக்கும்படியான காரியம்வேறில்லை.

கருரு—க்ஷத்திரியன் சர்ப்பம் வெகுசாஸ்த்திரமோதின பிராமணன் இவர்கள் தற்காலத்தில் இளைத்திருந்தாலும் க்ஷேமத்தைக் கோரினவன் அவர்களை யொருபோதும் அவமாநஞ் செய்யக்கூடாது.

கருசு—மேற்சொன்னமூவரும் அவமாநஞ்செய்பவனை சமயத்தில் நாசம்பண்ணிப் போடுவார்கள் ஆதலால். புத்தியுள்ளவன் அவர்களை யவமாநஞ்செய்யக்கூடாது.

கரு௭—முன் தான்செய்த வியாபாரமுதலியகாரியத்தால் தனக்கு நஷ்டம்நேரிட்டாலும் துரதிர்ஷ்டசாலியென்று தன்னாத்துமாவை நிந்திக்கக்கூடாது. சாமளவும் பொருள்தேட முயற்சி செய்யவேண்டும். இந்தச்சம்பத்து வருகிறது அருமையென்று எண்ணக்கூடாது.

கரு௮—தான் பார்த்ததையும், கேட்டதையும், சத்தியமாய்ச் சொல்லவேண்டியது. அதிலும் ஒருவனுக்குப் பிரியமாகவேசொல்லவேண்டியது. சத்தியமாகவிருந்தாலும் ஒருவனுக்கு அநிஷ்டமானதையும், பிரியமாகவிருந்தாலும் அசத்தியத்தையுஞ், சொல்லவொண்ணாது. இது வேதத்தில் பழைமையான தர்ம்மமென்று சொல்லப்படுகின்றது.

கரு௯—அமங்கலமா யிருந்தாலும் மங்கலமென்றே முன்னஞ் சொல்லி பின்னர் அமங்கலத்தைத் தெரிவிக்கவேண்டியது. ஒருவனோடும் விருதாச்சண்டைபோடவும் வழக்காடவுங்கூடாது.

கச0—பொழுதுவிடியாம லிருக்கும்போதும், பொழுதுபோனபின்பும், உச்சியில் சூரியனிருக்கும்போதும், தானொருவனும் இன்னானென்றறியப் படாதவனுடனும், சூத்திரனுடனும், வழிநடக்கக்கூடாது.

கசக—கை, கால், கண், குறைந்தவர்கள் ஆறுவிரலுள்ளவர்கள் படியாதவர்கள், கிழவர், குரூபிகள், தரித்திரர்கள், ஈநசாதியர், இவர்களை அவர்களின் தோஷத்தைச்சொல்லிப் பரிகாசஞ் செய்யக்கூடாது.

கசஉ—புசித்தகை சுத்திசெய்யாமல்- பசு-பிராமணன்- அக்கினி இவர்களை இடதுகையாலுந் தொடப்படாது. அசுத்தனயிருக்கும்போது ஆகாயத்தில் சூரியசந்திர நக்ஷத்திரங்களைப் பார்க்கப்படாது.

கசரு—ஒருவேளை அசுத்தனாயிருக்கும்போது மேற்சொன்ன பசுமுதலியவற்றை தொட்டால் பரிசுத்தனாய் ஆசமநஞ்செய்து தன் கண், காது, தலை, மூக்கு, நாபி, இவ்விந்திரியங்களை தன்கையினால் ஜலத்தைத்தொட்டு துடைக்கவேண்டியது.

கசச—தனக்கு திரவுமுதலிய தொந்தரவில்லாதபோது தன் காதுமுதலான விந்திரியங்களையும், மயிர்களையும், இரகஸ்யஸ்தாநங்களையும், தொடக்கூடாது.

கசரு—இஷ்டசித்தியைக் கொடுக்கும்படியான கோரோசந முதலியவற்றை எப்போதுந் தரிக்கிறவனாயும், குருசேவைசெய்கிறவனாயும் உள்ளும்புறமும் பரிசுத்தனாயும், ஜிதேந்திரியனாயும், ஜெபம் ஹோமம்முதலிய வைதீககாரியங்களில் சோம்பலில்லாதவனாயுமிருக்கவேண்டியது.

கசசு—மேற்சொன்னபடி யிருக்கிறவர்களுக்கு தெய்வத்தினாலும், மநிதர்களினாலும், தீங்குநேரிடமாட்டாது.

கசஎ—நாடோறும் சந்தியாவந்தந காலம்போக மற்றகாலத்தில் சோம்பலின்றி வேதத்தையே ஓதவேண்டியது அதையிந்தப்பிராமணனுக்கு உயர்ந்ததருமமாகவும், மற்றவெல்லாம் இதற்குத்தாழ்ந்ததாகவும்சொல்லுகிறார்கள்.

கசஅ—எப்போதும் வேதமோதுவதாலும்உள்ளும்புறமும் ஆசாரமாயிருப்பதினாலும், ஜெபம் தபம் செய்வதினாலும், பிராணிகளுக்கு ஹிம்சைசெய்யாம லிருப்பதினாலும் முன்பிறப்பை நினைக்கும்படியான ஞாநமுண்டாகின்றது.

கசகூ—அப்படி முன்பிறப்பினினைவுவந்ததானால் பின்னும் கருப்பவாசநேரிடாமலிருக்கும்பொருட்டு வேதத்தையே ஓதுகிறான் அதனால் மோக்ஷசுகத்தையுமடைகிறான்.

கரு0—பௌர்ணமியிலும், அமாவாசியிலும், அநிஷ்டநிவர்த்தியின்பொருட்டு-சாவித்திரி ஹோமத்தையும், சாந்தி ஹோமத்தையும், மார்கழி கிருஷ்ணாஷ்டமி நவமிகளில்பிதுர்க்களைக்குறித்து அஷ்டகா அந்வஷ்டகா சிரார்த்தத்தையும் சோம்பலின்றிச் செய்யவேண்டியது.

கருக—தன்னுடைய அக்கினிகிரகத்துக்கு தூரமாக மலமூத்திரம் பாதப்பிரக்ஷாளநம் எச்சல்போடுதல் மனைவியுடன்புணர்தல் இவைகளைச்செய்யவேண்டியது.

கருஉ—மலநிவர்த்தி ஸ்நாநஞ்செய்தல் - பல்விளக்குதல் எண்ணெயிட்டுக்கொள்ளுதல்-தேவபூசை-இவைகளைப் பகல் பதினைந்துநாழிகைக்குமுன்னமே செய்யவேண்டியது.

கருங—அமாவாசி - பௌர்ணமி -முதலிய விசேஷதிநங்களில் தேவதாவிக்கிரகங்களையும் தர்மிஷ்டாளான பிராமணரையும், தன்னைக்காப்பாற்றுமரசனையும், குருவையும், தரிசிக்கவேண்டியது.

கருச—பெரியோர்கள், மாதா, பிதா, குரு, இவர்கள் தன்வீட்டுக்குவந்தால் விதிப்படி அவர்களை வந்தித்து தன்னாதநத்தையவர்களுக்குக்கொடுத்து அவர்களிருக்குமளவும் கையைக்கூப்பிக்கொண்டு அவர்களின் சமீபத்தில்நின்று உபசரித்து அவர்கள்போகும்போது பின்னாற்சென்று வழிவிடவேண்டியது.

கருரு—வேதத்திலும், தருமசாஸ்திரத்திலும், சொல்லப்பட்ட எல்லாக்கருமங்களையும், வேதாத்தியயநமுதலிய தருமங்களையும், பெரியோர்களின் அநுஷ்டாநத்தையும், சோம்பலின்றி நடத்தவேண்டியது.

கருசா—நல்லொழுக்கத்தினால் தீர்க்காயுளும், இஷ்டமான புத்திராளும், அழிவற்றபொருளும், அடையப்படுகிறது. நல்லொழுக்கமானது தீங்கை யழித்துவிடுகிறது.

கடுஎ—துராசாரமுள்ளவன், உலகத்தில் நிந்திக்கப்பட்டவனுயு ம், துன்பத்தைய நுபவிக்கிறவனுயும், வியாதியுள்ளவனுயும், அற்ப ஆயுளையுடையவனுயும், ஆகிவிடுகிருன். ஆகையால் நல்லொழுக்க முள்ளவனுயிருக்கவேண்டியது.

கடுஅ—எந்தநற்குறியில்லாவிட்டாலும், நல்லொழுக்கம், அன் பு, பொருமையில்லாமை இவைகளிருந்தால் அவன் நூறுவயதுள் ளவனுகயிருப்பன். ௬ி

கடுகூ—எந்தஎந்தக்காரியம் தனக்குச் சுவாதீநமில்லாமல் பரா தீநமாகவிருக்குமோ அந்தந்தக்காரியத்தை முயற்சியாய் நீக்கவே ண்டியது. எதுவெது தனக்குச்சுவாதீநமாகவிருக்குமோ அதைய தைச்சாக்கிரதையாய்ச் செய்யவேண்டியது.

கசூ0—ஒருவனுதவியா லாகவேண்டியவெல்லாம் துக்கம்,தான் செய்யக்கூடுமானவெல்லாஞ் சுகம், ஆகையால் இவ்விரண்டையும் சுகதுக்கங்களுக்கு சுருக்கமான அடையாளமென் றறியவேண்டி யது.

கசூக—எந்தக்காரியத்தைச் செய்யும்போது தன்மநதுக்குக்களி ப்புண்டாகுமோ அதைச் செய்யவேண்டியது. மற்றதை முயற்சி யோடு விட்டுவிடவேண்டியது.

கசூஉ—ஆசாரியன், வேதமோதுவித்த வுபாத்தியாயன், தாய் தகப்பன். குரு, பிராமணன், பசு, இருஷி, இவர்கள் தனக்குவிரோ தஞ்செய்தாலும், தான் அவர்களுக்குவிரோதஞ்செய்யக்கூடாது.

கசூகூ—தெய்வத்தை ஒப்புக்கொள்ளாமை வேதம், தெய்வம், இவைகளைத்தூஷித்தல், பகை, டம்பம், அகங்காரம், கோபம்.கொ டுமை இவைகளை நீக்கவேண்டியது.

கசூச—ஒருவனையடிக்கிறேனென்று தடிமுதலிய ஆயுதங்களை

உயரத்தூக்கவும் அதனலடிக்கவுங்கூடாது. புத்திரன், சிஷ்ன், மனைவி இவர்கள் அபராதஞ்செய்தால் அவர்களை கயிறு, பிரம்புமுதலிய கருவிகளாற் சிக்ஷிக்கவேண்டியது.

கசுரு—துவிஜாதியானுலும், பிராமணனை அடிக்கவேண்டுமென்று ஆயுதத்தைக் கையினற்றூக்கினல் நூறுவருஷம்வரையில் தாமிசிரமென்னு நரகத்தில்விழுகிருன்.

கசுசு—பிராமணனை செத்தைமுதலியவற்ருல் தெரிந்து கோபங்கொண்டு அடித்தால் இருபத்தொரு ஜென்மம் நாய்முதலியபாபசாதியில் பிறக்கிருன்.

கசுஎ—பிராமணன் தன்னேடு போர்க்களத்தில் சண்டைக்குவராமலிருக்கும்போது அவன்தேகத்தில் உதிரம்வரத்தக்ககாயஞ்செய்தால் இறந்தபின் ஞானமில்லாதவனுய் பலபலதுன்பங்களை யநுபவிக்கிருன்.

கசுஅ—இவன் பிராமணன்தேகத்தில் உண்டுபண்ணினவுதிரம் பூமியில்விழுந்து எவ்வளவுபுழுதியை கிரகிக்குமோ அவ்வளவுவருஷம்வரையில் இறந்தபின் அவனிரத்தத்தை நரகத்தில், நாய், நரிமுதலான ஜெந்துக்கள் சாப்பிடுகிறது.

கசுகூ—ஆகையால் தெரிந்தவன் பிராமணனை ஒருபோதும்அவமானஞ்செய்யவும் செத்தைமுதலானவற்ருலடிக்கவும், இரத்தத்தையுண்டுபண்ணவுங்கூடாது.

கஎ0—தருமமில்லாதவனுயும், பொய்சொல்லிப் பொருள்சம்பாதிக்கிறவனுயும், கொலையில்விருப்பமுள்ளவனுயும்,இருக்கிறவன் இம்மையிலேயே சுகப்படமாட்டான்.

கஎக—சாஸ்திரப்படி தருமமாகநடப்பவனுக்கு ஒருதுன்பம் நேரிட்டாலும், அவன் அதர்மத்தில் மநம்வைக்கக்கூடாது. ஏனெ

ன்றால் அதர்மஞ்செய்கிறபாபிகளுக்கு பொருள்முதலான சௌக்கியம்வருகிறப்போலிருந்தாலும், அவைகளெல்லாம் சீக்கிரத்திலழிந்துபோய்விடுகிறத்தைப் பார்க்கவேண்டியது.

களஉ—உலகத்தில் அதர்மஞ்செய்தால் அது பசுவைப்போல் உடனே பலனைக்கொடுக்கிறதில்லை. பின்னென்னவென்றால் மெல்ல மெல்ல அதன்பலகாலம்வந்தபின்பு செய்தவனை அடியோடேஅழித்துவிடும்.

களங—அதர்மம் செய்தவனுக்கு ஒருவேளை துன்பம்நேரிடாவிட்டாலும், அவன்பிள்ளைக்காவது. பேரனுக்காவது, புத்திரன்-பசு-தநம் இவைகளின் நாசமுதலிய துன்பநேரிடுமேதவிர செய்த அதர்மம் வீணாய்ப்போகாது.

களச—அயலானுக்குத் துரோகஞ்செய்தல்முதலிய அதர்மஞ்செய்கிறவன் ஏதோ பார்க்கச்சே விடுவாசனுடன் வாழ்கிறப்போலும் பிள்ளைபெண்கள்முதலிய அபிவிர்த்தியை அடைகிறப்போலும், சத்துருவை ஜயிக்கிறப்போலும், தோன்றப்பட்டாலும்,பின்பு அவன் எல்லாத்துடனும், பேரில்லாமல் அழிகிறான்.

களரு—சத்தியம், தருமம், நல்லொழுக்கம், சௌசம், இவைகளில் பிரீதியை எப்போதும் தானும்வைக்கவேண்டியது.தன்சிஷின், மனைவி, வேலைக்காரர், இவர்களையும், அவைகளைநடத்தும்படி சிக்ஷிக்கவேண்டியது. வாய், கை, வயறு, இவைகளையடக்கவேண்டியது. அதாவது வாயடக்குதல். உண்மைசொல்லுதல், கையடக்கல் ஒருவனையும் பீடியாமலிருத்தல், வயிறடக்கல் கண்டத்தை புசிக்க விரும்பாமை.

களசு—எந்த அர்த்தகாமங்கள் தர்ம்மவிரோதமாகவிருக்குமோ அதுகளையும், பிற்காலத்தில்அசௌக்கியத்தைக்கொடுக்கும்படியான

தருமத்தையும் உலகத்தாரால் நிந்திக்கப்பட்டவைகளையும் நீக்கவே ண்டியது -அதாவது. திருடி சம்பாதிக்கும்பொருளும் தீக்ஷாகால த்தில் செய்யும் புணர்ச்சியும் தர்மவிரோதமான அர்த்தகாமங்கள் குடும்பியா யிருக்கிறவன் எல்லாப்பொருளையுந் தாநஞ்செய்தல் பிற்காலத்திற்கு அசௌக்கியமானதருமம் கலியுகத்தில் மாம்சத் தோடு சிரார்த்தஞ்செய்தல் உலகத்தாரால் நிந்திக்கப்பட்டது. என் றறியவேண்டியது.

கஎஎ—உபயோகமில்லாத பொருளை எடுத்தல்முதலான கைசா பல்லியத்தையும், பிரயோசநமின்றி சுற்றுதல்முதலான கால்சா பல்லியத்தையும், பிறன்மனைவியைப்பார்த்தல் முதலான நேத்திர சாபல்லியத்தையும், வெகுஜநம் நிந்திக்கும்படியாய் பேசுதல்முத லிய வாக்குச்சாபல்லியத்தையும் கிருத்திருமபுத்தியையும் துரோக ஞ்செய்கிறத்தையும் அதில்மநம் வைக்கிறத்தையும் நீக்கவேண்டி யது.

கஎஅ—ஒரு விரதமுதலான விஷயத்தில் சாஸ்திரம் பலவிதமா ய்ச்சொல்லியிருந்தால் அதில் தன்தகப்பன் பாட்டன் எப்படிநட ந்தார்களோ அப்படியே தானும் நடக்கவேண்டியது.அந்தப்படி நடப்பவனுக்குக் கெடுதிவரமாட்டாது.

கஎகூ—தனக்கு யாகஞ்செய்துவைத்த ரித்திவிக்கு தன்புரோகி தன் ஆசாரியன் அம்மான் விருந்தாடி தன்னையடுத்தவர்கள் சிறுவர் கிழவர்-நோயாளி-வயித்தியன்-ஞாதி - மச்சினன்முதலியசம்பந்தி- மருமகன்முதலிய பந்துக்கள் இவர்களுடனும்.

கஅ0—தாய்-தகப்பன்-உடன்பிறந்தவள்-மருமகள்-சகோதரன் பிள்ளை-மனைவி-பெண்-வேலைக்காரர்-இவர்களுடனும் சண்டைசெ ய்யக்கூடாது.

கஅக—மேற்சொன்ன ரித்திவிக்கு முதலானவர்களுடன்விரோதிக்காமலிருந்தால் தனக்கு அக்கியாநகிரதமான பாபங்கள் நேரிடாது. இவர்கள் செய்தகுற்றங்களை மன்னித்தால் மேற்சொல்லும் புண்ணியலோகங்களைக் கிரகஸ்த்தனடைகிறான்.

கஅஉ—ஆசாரியன்-பிரம்மலோகத்திற்கும் தகப்பன் பிரசாபதிலோகத்திற்கும், விருந்தாடி இந்திரலோகத்திற்கும், ரித்திவிக்கு தேவலோகத்துக்கும், யஜமாநனாகிறார்கள்.

கஅரு—உடன்பிறந்தாள்-மருமகள்-இவர்கள்-அப்ச்சரலோகத்திற்கும், மருமகன் முதலியபந்துக்கள் விஸ்வேதேவலோகத்திற்கும், மைத்துனன்முதலான சம்பந்திகள் வருணலோகத்திற்கும்தாயும், அம்மானும், பூலோகத்திற்கும்,யஜமாநனாகவிருக்கிறார்கள்.

கஅச—சிறியோர்-கிழவர்-தன்னையடுத்தவர் - இவர்கள் - ஆகாயலோகத்திற்கு யஜமாநனாகிறார்கள். மூத்ததமயன்தன்பிதாவுக்குச்சரியாயும் பிள்ளையும் மனைவியும் தன்சரீரமாயும் சொல்லப்படுகிறார்கள்.

கஅடு—வேலைக்காரர்-தன்னிழலாயும், பெண் - தன்தயவுக்குப் பாத்திரமாயும்,இருக்கிறாள்.ஆதலால், இவர்களாற்பிழைசெய்யப்பட்டாலும் வருத்தமின்றிப் பொறுக்கவேண்டியது.மேற்சொன்னவர்களை யுபசரித்தால் மேற்சொன்ன லோகங்களை யடைகிறார்கள்.

கஅசு—வேதம்-கல்வி-இவைகள் தெரிந்திருப்பதால் தாநம்வாங்குதற்கு யோக்கியனாயிருந்தாலும் அடிக்கடி அதில் மநம்வைக்கலாகாது.அப்படி அதிகமாகத்தாநம்வாங்கினால் இவன்பிரம்மதேஜசுசீக்கிரத்தில் அழிந்துபோய்விடும்.

கஅஎ—அதிகபசியினால் துன்பப்பட்டிருந்தபோதிலும் பொருள்களின் தருமா தருமங்களையும், இன்னமந்திரஞ்சொல்லி இன்ன

தேவதையின்பிரீதிக்காகக் கொடுக்கிறானென்கிறதையும் அறியாமல் தெரிந்தவன் தானம்வாங்கக்கூடாது.

௧௮௮—சுவர்நம்-பூமி - குதிரை-பசு-அந்நம் - வஸ்த்திரம்-எள்ளு-நெய்-இவைகளை-கல்வியில்லாதவன்-தானம்வாங்கினால்-உலர்ந்த கட்டையில் நெருப்புவிழுந்தாற்போல் சாம்பலாகிப்போய்விடுகிறான் மறுபடிமாநுடஜநநமேயவனுக்கரிது.

௧௮௯—அப்படிக் கல்வியில்லாதவன் தானம்வாங்கினால் சுவர்ந தானம், ஆயுளையும், அந்நம் பூமி-பசு -இவைகள்சரீரத்தையும், குதிரை-கண்ணையும், வஸ்த்திரம், தோலையும், நெய், தேஜஸையும், எள்ளு, சந்ததியையும், அழித்துவிடுகிறது.

௧௯0—கல்வியில்லாமலும்,தவஞ்செய்யாமலும், இருக்கிறவன் தானம்வாங்குவதில் ஆசைலவத்தால் அவன் அந்தத்தானம்வாங்கின பொருளுடன் தண்ணீரில் கற்றோணியாற்போக யத்தநித்தவன் போல் அழிந்துபோகிறான்.

௧௯௧—ஆகையால்.கல்வியில்லாதவன் எந்தத்தானம் வாங்குகிறத்திலும் பயப்படவேண்டியது. அவன்சொற்பதானம் வாங்கினாலும் சேற்றிலகப்பட்ட பசுவைப்போலத் துன்பப்படுகிறான்.

௧௯௨—தருமமறிந்தவன். பூனையைப்போல்சூதுள்ளவனுக்கும் கொக்குப்போல் ஹிம்சையொன்றிலேயே விருப்பமுடையவனுக்கும் தண்ணீருங்கொடுக்கலாகாது. வேதமோதாதவனுக்குத் தானங் கொடுக்கவுங்கூடாது.

௧௯௩—இந்தமூன்றுபேர்களுக்கும் தானியாயமாய் சம்பாதித்த பொருளைக்கொடுத்தாலும் கொடுத்தவனுக்கு உடனே தீங்குண்டாகும் வாங்கினவர்களுக்கு இறந்தபின் தீங்குண்டாகும்.

௧௯௪—கற்றோணியால் ஆற்றைக்கடக்கயத்தநித்தவன் எப்படி

யத்தோணியோடு அழிந்துபோவானோ அப்படியேமூடனுக்குத் தானங்கொடுத்தவன் அம்மூடனோடு அழிந்துபோவான்.

ககரு—தருமஞ்செய்கிறதா யெங்குஞ் சொல்லிக்கொண்டிருந்து சம்பாதித்து கும்பலைக் கண்டபோது மாத்திரம் தருமஞ்செய்கிறாப்போல் பாவனைசெய்கிறவன் பிறன் பொருளிலாசைகொண்டவன், சூதன், டம்பாசாரி, பூனைச்சூதன், காதகன், பிறனது நற்குணத்தைக் கேட்கச்சகியாதவன்,

ககசா—கீழ்ப்பார்வையுள்ளவன், கொடுமையுள்ளவன், பிறன்காரியத்தைக் கெடுத்துத்தன்காரியத்தைச் சாதிக்கிறவன் ஏமாற்றுகிறவன் மேலுக்குமாத்திரம் வணக்கமுள்ளவன் கொக்குச்சூதன் இவர்களுக்கும் தானங்கொடுக்கக்கூடாது.

ககஎ—கொக்குச்சூதன், பூனைச்சூதன், இவர்கள் அந்ததாமிசிரம் என்னுநரகத்தில் அந்தப்பாபகர்மத்தினால் மூழ்கிறார்கள்.

ககஅ—பாபஞ்செய்தவன் தர்மஞ்செய்கிறாப்போல் பிராஜாபத்திய விரதமுதலான பிராயச்சித்தஞ்செய்து கொள்ளக்கூடாது. ஸ்திரி சூத்திரன்-இவர்களிடத்தில் தருமத்துக்காக இதைச்செய்கிறேனென்று டம்பமாகச் சொல்லிக்கொள்ளக்கூடாது. இன்னபாபம் போகிறத்துக்காக இதைச்செய்கிறேனென்றே சொல்லவேண்டியது.

ககசு—இன்னம் இவரையொத்த கபடாசாரமுள்ள அனைவரும் இம்மையிலும் மறுமையிலும் பெரியோர்களால் நிந்திக்கப்படுகிறார்கள் கபடமாகச்செய்த பிராயச்சித்தமும் இராக்கதரைச்சேர்ந்து விடுகின்றது.

௨00—கிரகஸ்தனுயிருப்பவன் பிரமசாரி முதலானவர்களின் வேஷம்பூண்டு பிக்ஷையெடுத்தால் அவன் அந்தப்பிரமசாரி முதலா

னவருக்குநேரிடும் பாபத்தையடைகிறான். இறந்தபின் கோழிமுதலான பக்ஷிசாதியிலும்பிறக்கிறான்.

உ0க—ஒருவன் வெட்டினகுளத்தில் ஒருபோதும் ஸ்நாநஞ்செய்யக்கூடாது. செய்தால் இவன் ஸ்நாநபலம்,குளம்வெட்டினவனுக்கும், அவன்பாபம் இவனுக்கும்வரும், (வேறு-ஆறுமுதலானவைகளில்லாவிட்டால் அப்போது அந்தக்குளத்தில் ஐந்துகைமண்ணெடுத்து வெளியிற்போட்டுவிட்டு ஸ்நாநஞ்செய்யவேண்டியது.)

உ0உ—வாகநம்-படுக்கை-ஆசநம்- கிணறு - தோட்டம் - வீடு-இவைகளை, உடையவன் அநுமதியின்றி அநுபவிக்கிறவன் உடையவன்பாவத்தில் நாலிலொன்றை வாங்கிக்கொள்ளுகிறான்.

உ0ங—ஆறு-புண்ணியதீர்த்தம்-தடாகம்†கர்த்தம்-ஓடை - மடு இவைகளில் ஸ்நாநஞ்செய்யவேண்டியது.

உ0ச—தெரிந்தவன் யமங்களை எப்பொழுதும் அடையவேண்டியது. நியமங்களையெல்லாம் திநந்தோறும் அவசியம் அடையவேண்டியதில்லை. யமங்களைத் திநந்தோறுமடையாவிட்டாலும், நியமங்களை முழுதும்விட்டுவிட்டாலும், அழிந்துபோய்விடுவான். யமமாவது பிரமசரியம்-தயை-பொறுமை-தியாநம்-சத்தியம்- சரியாயிருத்தல்-ஹிம்சைசெய்யாமை-திருடாமை எல்லோருக்கும் பிரியனாயிருக்குகை இந்திரியநிக்கிரகஞ்செய்கை ஆகபத்து. நியமமாவது, ஸ்நாநம்-மௌநம்-உபவாசம்- தேவபூசை - வேதாத்தியயநம் புணராமை-குருசிசுரூஷை-பரிசுத்தம்- கோபமில்லாமை- ஜாக்கிரதை-ஆகபத்து.

உ0ரு—வேதமோதினவர் சேர்ந்திருக்காத எக்கியத்திலும்,ஊர்

---

† கர்த்தம்-என்பது-எண்ணாயிரம் விற்கடை நீளத்துக்குக்குறைந்தது.

புரோகிதன் - ஸ்திரீ-பேடி-இவர்கள்செய்யும் யாகத்திலும், பிராமணனொருபோதும் புசிக்கக்கூடாது.

௨௦௬—இவர்கள் யாகஞ்செய்தால் பெரியோர்களுக்குத்துன்பமும், தேவர்களுக்கு விரோதமும், நேரிடுகிறபடியால் அந்த எக்கியத்தில் புசித்தலை நீக்கவேண்டியது.

௨௦௭—மதம்பிடித்தவன்-கோபமுள்ளவன்-நோயாளி-இவர்களின் அந்நம்-மயிர்-புழு-இவைகள்விழுந்தஅந்நம்-வேணுமென்று காலால்மிதித்த அந்நம்.

௨௦௮—சிசுஹத்திசெய்தவன் முதலான பாபிகள்பார்த்த அந்நம் மாதவிடாயானவளுக்குப்போட்டு மிகுந்தஅந்நம் காக்கை-நாய்-இவைகள்தீண்டினவந்நம்.

௨௦௯—பசுவினால் மோரப்பட்டவந்நம் தர்மத்திற்காக நேர்ந்தவர்களுக்குச் சத்திரத்திற்போடப்பட்டவந்நம் வெகு சாமாநிய ஜநங்களைக்கூட்டிப்போடுமந்நம் வேசியின்அந்நம் பெரியோர்களுக்கு இஷ்டமாகாத அந்நம்.

௨௧௦—திருடன் பாடகன் இவர்களினந்நம் தைச்சனந்நம் வட்டியினால் பிழைக்கிறவன் தீக்ஷிதன் கிருபணன் விலங்குக்காரன் அல்லது காவலில் வைக்கப்பட்டவன் இவர்களினந்நம்.

௨௧௧—பஞ்சமஹாபாதகன் பேடி குடிசைக்காரி - டம்பாசாரி இவர்களினந்நம்-முறிந்துபோனபால்-தயிர்முதலானவை பழையது-சூத்திரனுக்கிட்டு மிகுந்தவந்நம்.

௨௧௨—வயித்தியன்-வேட்டைக்காரன்- கொடுமையுள்ளவன் எச்சற்பொறுக்கி அநுலோமசாதியன் அல்லது அரசன் இவர்களினந்நம்-பிரசவித்தவள் சௌக்கியத்துக்காகச் செய்கிறஅந்நம் சாப்பிடும்போது பந்தியில் ஒருவன் எழுந்திருந்தபின் போடப்படும்அந்நம் தீட்டுக்காரன் அந்நம்.

உகந—மரியாதையின்றிப் போடப்படும் அந்நம் நைவேத்திய ஞ்செய்யப்படாத அந்நம். காரணமின்றிச் சமையல்செய்யப்பட் டமாம்சம், கணவன் பிள்ளை யிவர்களில்லாத ஸ்திரியினந்நம், சத் துருவினந்நம், பட்டணத்தில் சமைத்தவந்நம், பதிதன் அந்நம், தும்மினவேச்சதப்பட்டவந்நம்.

உகச—கோளன், பொய்சாட்சிசொல்பவன். எக்கியபலன் முத லானபுண்ணியத்தைவிற்பவன் நட்டுவன் தோணிக்காரன் செய்ந்ந ன்றிமறந்தவன். இவர்களின் அந்நம்.

உகரு—கருமான் செம்படவன் கூத்தாடி தட்டான் பிரம்புவே லைசெய்பவன் கத்திமுதலான ஆயுதம்விற்பவன். இவர்களின் அந்நம்

உகசு—வேட்டையாடுகிறதற்காக நாய்வளர்ப்பவன். கள்விற் பவன் வண்ணான் துணிக்குச்சாயம்போடுகிறவன் காதகன் கள்ளபு ருஷனையுடைத்தானவளது பர்த்தா இவர்களின் அந்நம்.

உகள—அந்தக் கள்ளபுருஷனைத்தெரிந்து அவனை வீட்டில்வை த்திருப்பவன் ஸ்திரிக்குட்பட்டவன் இறந்ததீட்டுள்ளவன் இவர்களி ன் அந்நம் தன்மநதுக்குச் சகியாதவந்நம் இவைகளையெல்லாம் புசிக்கக்கூடாது.

உகஅ—அப்படி அந்தவந்நங்களைப்புசித்தால் அரசனந்நம் தேஜ சையும், சூத்திரனந்நம் பிரம்மதேஜசையும், தட்டான் அந்நம் ஆயுளையும் சக்கிலியன்அந்நம் கீர்த்தியையும்.

உகக—சமையல்செய்பவன் அந்நம் புத்திரனையும் வண்ணான் அந்நம் பலத்தையும் சாமாநியமாய்ப் பலபேருடன் புசிக்கும் அந்நமும், வேசியின் அந்நமும் நல்லலோகத்தையும் அழிக்கிறது.

உஉ0—வயித்தியன் அந்நம் சவர்நீரைச் சாப்பிட்டதோஷத்தை யும். குடிசைக்காரியின் அந்நம் ரேதசைச்சாப்பிட்ட தோஷத்தை யும் வட்டியினாற்பிழைக்கிறவன் அந்நம் விஷ்டையைச்சாப்பிட்

டதோஷத்தையும் ஆயுதம் விற்பவன்அந்நம் கோழைமுதலானம லத்தைச்சாப்பிட்ட தோஷத்தையும் உண்டுபண்ணுகிறது.

உஉக—இவர்களைவிட முன்சொல்லப்பட்ட மற்றவர்களின் அந் நத்தைச் சாப்பிட்டவர்களுக்கு தோல் எலும்பு மயிர் இவைகளை ச்சாப்பிட்டதோஷ முண்டாகிறதென்று பெரியோர்கள்சொல்லு கிறார்கள்.

உஉஉ—ஆகையால் இவர்களில் ஒருவரந்நத்தை தெரியாமற்சா ப்பிட்டாலும், மூன்றுநாளுபவாசமிருக்கவேண்டியது. தெரிந்து முன்சொன்ன அந்நத்தையும் ரேதசு மலம் மூத்திரம் இவைகளை யும் சாப்பிட்டால் ஒரு கிருச்சிரவிரதத்தை யநுஷ்டிக்கவேண்டி யது.

உஉ௩—சிரார்த்தம் பஞ்சமஹாஎக்கியம் முதலியவில்லாத சூத் திரன் அந்நத்தைப் புசிக்கக்கூடாது. தனக்கு வேறுபிழைப்பில்லா விட்டால் அவனிடத்தி லொருநாளைக்குப் போதுமானவரிசியை வாங்கிக்கொள்ளலாம்.

உஉ௪—வேதமோதினவன் கிருபணனும் அதிகமாகத் தாநங் கொடுப்பவன் வட்டியினாற்பிழைக்கிறவனுகியும் இருக்கிறவிஷயத் தில் தேவர்கள்விசாரணைசெய்து இருவரந்நமும் சரியானதோஷ முள்ளதென்று ஏற்பாடுசெய்தார்கள்.

உஉ௫—அப்போது பிரமன் தேவர்களின்சமீபத்தில்வந்து ஓ தேவர்களே அவ்விரண்டந்நமும் பேதமுள்ளதேதவிர சரியானத ன்று. ஏனென்றால் அதிகதாநங்கொடுப்பவன் சிரத்தையோடு கொ டுக்கிறான். மற்றொருவன் சிரத்தையில்லாமற் கொடுக்கிறான். ஆத லால் சிரத்தையோடுகொடுப்பதே யுயர்ந்தது என்றுசொன்னார்.

உஉ௬—தினந்தோறும் யாகஞ்செய்தாலும், குளம்வெட்டுதல் முதலியதர்மஞ்செய்தாலும், நியாயமாகச்சம்பாதித்த பொருளால்

அன்புடன்செய்தால் அவ்விரண்டுஞ்செய்தவனுக்கு மறுமையில் அழிவற்றசௌக்கியத்தைக்கொடுக்கும்.

உஉ௭—தானஞ்செய்தாலும்,முன்சொன்னவிரண்டு தருமஞ்செய்தாலும் மநக்களிப்போடு நல்லவிடத்திலும் நல்லபாத்திரத்திலும் செய்யவேண்டியது.

உஉஅ—யாராவதொருவன் அபாத்திரனு யிருந்தாலும் அவன் தன்னை யாசித்தால் பொறுமையின்றி அவனுக்கும் அந்நங்கொடுக்கவேண்டியது. அதனுற் பாபநேரிட்டாலும் அதைச்சற்பாத்திரத்தில் செய்கிற தாநம்நீக்கிவிடும்.

## தாநப்பிரசம்சை.

உஉகூ—தண்ணீர்கொடுத்தவன் இப்பசிதாகம்வருத்தாதசந்தோஷித்தையும் அந்நங்கொடுத்தவன் அழிவற்றசுகத்தையும் திலதாநஞ்செய்தவன் இஷ்டமானபிள்ளையையும் தீபதாநஞ்செய்தவன்உயர்ந்தஞாநக்கண்ணையும்.

உ௩0—பூமிதாநஞ்செய்தவன்இப்பூமியினரசாட்சியும் சுவர்நதாநஞ்செய்தவன் தீர்க்காயுளையும் கிரகதாநஞ்செய்தவன் உயர்ந்தவீடுகளையும் வெள்ளிதாநஞ்செய்தவன் உயர்ந்தஅழகையும்.

உ௩க—வஸ்திரதாநஞ் செய்தவன் சந்திரலோகத்தையும் அசுவதாநஞ்செய்தவன் அசுவனிதேவலோகத்தையும் விருஷபதாநஞ்செய்தவன் குறைவற்றசெல்வத்தையும் கோதாநஞ்செய்தவன் சூரியலோகத்தையும்.

உ௩உ—வாகநம்-படுக்கை-இவைகளைக் கொடுத்தவன் குணமுள்ளமனைவியையும்,அபயஸ்தாநங் கொடுத்தவன் ஐசுவரியத்தையும் தாநியங்கொடுத்தவன் அழிவற்ற சௌக்கியத்தையும்,பிரம்மஞ்கியாநத்தைக் கொடுத்தவன் பிரம்மசாயுச்சியத்தையும் அடைவான்.

உருரு—ஜலம்-அந்நம்-பசு-பூமி - வஸ்திரம்-எள்ளு- சுவர்நம் நெய்-இந்தத்தாநங்களைவிட-பிரம்மக்கியாநதாநம் உயர்ந்தது.

உருச—ஆனால் இவன்மநதினாலே எதையெதைக்கருதிக்கொண்டு எந்தஎந்தத்தாநங்கொடுக்கிறானோ அதையதைக் கொண்டாடப்பட்டவனாய் அந்தஎண்ணத்தோடு அநுபவிக்கிறான்.

உருரு—எவன் மரியாதையோடு தாநஞ்செய்கிறானோ எவன் அதைவாங்குகிறானோ இவ்விருவரும் சுவர்க்கத்தையடைகிறார்கள் சிரத்தையில்லாமல் கொடுக்கிறவனும் அதைவாங்குகிறவனும் நரகத்தையடைகிறார்கள்.

உருசு—கடிநமானதவஞ் செய்தோமென்று செருக்கடையக்கூடாது.யாகஞ்செய்தபின்பு பொய்சொல்லவேகூடாது பிராமணர்களால் துன்பப்பட்டிருந்தபோதிலும் அவர்களையவமாநஞ் செய்யக்கூடாது தான் தாநங்கொடுத்ததைப் பிறருக்குச் சொல்லக்கூடாது.

உருஎ—யாகம் - பொய்சொல்லுதலினாலும், தவம்-செருக்கினாலும், ஆயுள்-பிராமண அவமாநத்தினாலும் தாநங்கொடுத்தது பிறனோடு சொல்லுதலினாலும், அழிந்துபோய்விடுகிறது.

உருஅ—பரலோக சாதகமான தருமத்தைக் கொஞ்சங்கொஞ்சமாக ஒருவரையும் பீடியாமல் செல்லுமுதலானவை புற்றையுண்டு பண்ணுகிறதுபோலச் சம்பாதிக்கவேண்டியது.

உருகூ—தகப்பன்-தாய்-பிள்ளை-பெண்சாதி-பங்காளி.இவர்களெல்லாம் பரலோகத்துக்குச்சகாயமாக வரமாட்டார்கள் தருமமொன்றே சகாயமாகவரும்.

உசo—ஜெந்து பிறக்கும்போது தான் ஒன்றாகவே பிறக்கிறது இறக்கும்போதும் தான் ஒன்றாகவேயிறக்கிறது. புண்ணியபாவ

த்தையும் தான் ஒன்றாகவேயநுபவிக்கிறது.தாய்முதலானவர்களது சுகதுக்கம் இவனுக்குவரமாட்டாது.

உசக—பூமியில் இவனிறந்தபின்பு விறகு-மண்கட்டி- இவைகள் போன்ற இவன்சரீரத்தை விட்டுவிட்டு இவன் பந்துக்களெல்லாம் போய்விடுகிறார்கள் தருமமாத்திரம் அவனையப்போதும் அநுசரிக்கிறது.

உசஉ—ஆகையால் தருமத்தினாலே நரகாதிதுக்கங்களைத்தாண்டுகிறபடியால் அந்தத்தருமத்தைத் தனக்குச் சகாயத்துக்காக நாடோறுங் கொஞ்சங்கொஞ்சமாகச் செய்யவேண்டியது.

உசந—தருமத்தைவிடாமற்செய்கிறவனும் ஒருவேளைப்பாபம் நேரிட்டாலும் அதை பிராஜாபத்தியாதி விரதங்களாலே போக்கடிக்கிறவனுமாகிய இருக்கிறபுருஷனை அந்தத்தருமமானது ஒளியுள்ளதேகத்தோடு பரலோகத்தையடைவிக்கின்றது.

உசச—தன்குலத்திற்குப் புகழைத்தேடவேண்டுமானால் வேதம் தவம்-இவைகளினாலே உயர்ந்தவரோடு விவாகமுதலியசம்பந்தஞ் செய்யவேண்டியது. தாழ்ந்தவர்களை நீக்கவேண்டியது.

உசரு—பிராமணன்வேதத்தினாலுயர்ந்தவர்களிடத்தில் சகவாசம்பண்ணிக்கொண்டும் ஈனர்களுடன் சகவாசஞ்செய்யாமலுமிருந்தால் சிரேஷ்டத்தன்மையையடைவான்.இல்லாவிட்டால் சூத்திரனுக்குச்சரியாவான்.

உசசா—எத்தனித்த காரியத்தை முடிக்கிறவனும் சாந்தனும் சுகதுக்கத்தைப் பொறுக்கிறவனும் துஷ்டசகவாசம் ஹிம்சை இவைகளைச் செய்யாதவனுமாயிருந்தால் அவன் தவமில்லாமலே இந்திரியநிக்கிரகத்தினாலும் கொடையினாலும் சுவர்க்காதிலோகங்களை அடைவான்.

உசஎ—விறகு-ஜலம்-கிழங்கு-பழம் அந்நம்-தேன்-அபையஸ்த் தாநம் இவைமுதலானவை தான்யாசிக்காமல்வந்தால் பதிதர்கள் நீங்கலாக மற்றயாரிடத்திலும்வாங்கிக்கொள்ளலாம்.

உசஅ—தான் நேராகவீவது, ஒருவனைக்கொண்டாவது, கேழ் க்காமலிருக்கும்போது தானிருக்குமிடத்திற்கு கொணர்ந்து ஸங் கல்பபூர்வகமாக கொடுக்கிறேனென்று சொல்லாமல் கொடுக்கப்ப டுகிற சுவர்நமுதலானவை பதிதர் நீங்கலாக மற்றபாபிகளிடத்திலு ம் வாங்கலாமென்று பிரமன் அபிப்பிராயப்படுகிறார்.

உசகூ—ஆகையால் எவனப்படிவந்த தாநத்தை வாங்கவில்லை யோ அவன்செய்யுஞ் சிரார்த்தத்தைப் பிதுர்க்கள் பதினைந்துவரு டம்வரையில் புசிக்கிறரில்லை அவன்செய்யும்ஹோமங்களை அக்கிநி யும் வகிக்கிறனில்லை.

உருo—கர்ப்பூரமுதலிய வாசநாதிரவியம்-படுக்கை-வீடு-தருப் பை-ஜலம்-புஷ்ப்பம்-அரதநம்-தயிர்-அவல்-அரிசி-மீன்-பால் - மா ம்ஸம்-கறியமுது இவைகள் வலுவில்வந்தால் நீக்கக்கூடாது.

உருக—பசியினல் துன்பப்படுகிற தாய் தகப்பன் குரு வேலை க்காரர் இவர்களைக் காப்பாற்றுகிறவனையும், தேவர் அதிதி இவர்களை ப்பூசிக்கிறவனையும் இருக்கிறவன் யாரிடத்திலும் தாநம்வாங்கலாம் அவைகளால் தான் ஜீவிக்கக்கூடாது.

உருஉ—தாய் தகப்பன் இவர்கள்முதலானவர்கள். இறந்துபோ னலும்,அல்லது தான் வேருகவிருந்தாலும்,நல்லவர்களிடத்துத்தா நம்வாங்கித் தான்ஜீவிக்கவேண்டியது.

உருங—தன்பயிரிடுகிறவன் தன்குலத்தில்தொன்றுதொட்டு ஊ ழியஞ்செய்கிறவன் தன் இடையன்,வேலைக்காரன்,தன் அம்பட்டன்

தன்னைக் காப்பாற்றவேண்டுமென்று அடுத்தவன் இவர்களுக்குத் தன்வீட்டிலிருந்து அந்நம்போடலாம்.

உருச—ஒருவனையொருவன்வந்து அடுக்கும்போது தன்சுவரூபம் தான்செய்கிறவேலை, தன்கோரிக்கை இவைகளெல்லாம் உண்மையாக அவனிடத்திற்சொல்லி தன்னாத்மாவையும் அவனுக்கு ஒப்புவிக்கவேண்டியது.

உருரு—தான் ஒருகுலமாயிருக்கும்போது எவன் தன்னைமறைத்து மற்றொருமாதிரியாக பெரியோர்களிடத்துச் சொல்லுகிறானோ அவன் ஆத்மத்துரோகஞ்செய்தபடியால் திருடனைக்காட்டிலும் அதிகபாபியென்று உலகத்திற்சொல்லப்படுவான்.

உருசா—சகலநிச்சயமும் வாயினாலேயேபிறக்கிறது, மந்திரசப்தங்களெல்லாம் வாயிலிருந்தேயுண்டாகிறது,ஆகையால் அந்தவாக்கையெவன்திருடுகிறானோ அவன் எல்லாவற்றையும் திருடினவனாகிறான்.

உருஎ—பின்பு வேதமோதல் பிள்ளையுண்டுபண்ணுதல் எக்கியஞ்செய்தல் இவைகளால் மஹாரிஷிகள் பிதுர்க்கள் தேவர்கள் இவர்களின்கடனைத்தீர்த்துப் பிள்ளையினிடத்தில் சகல குடும்பபாரத்தையும் வைத்துவிட்டு தான் பொதுவாக சந்நியாசியைப்போலொன்றிலும் பற்றில்லாதவனாக இருக்கவேண்டியது.

உருஅ—இரகசியமானவிடத்தில் இருந்துகொண்டு ஒருவனாக தன்னாத்துமா கடைத்தேறத்தக்ககாரியத்தை நினைக்கவேண்டியது. அப்படி யேகாகியாய்த்தியாநஞ்செய்கிறவன் மேலானசுகத்தையடைகிறான்.

உருகூ—கிரகஸ்தாசிரமத்திலிருக்கிறவிப்பிரனுடைய பழைமையான விருத்தியும் சத்வகுண விருத்திகரமான விர்தாநுஷ்டாநமுள்ளவனிட தருமமும் இதுவரையில் சொல்லப்பட்டது,

௨௬௦—இப்போதுசொல்லிவந்த ஆசாரத்தோடு ஜீவித்துக்கொண்டு வேதசாஸ்திரம் ஓதுகிற விப்பிரன் நித்தியகர்மாநுஷ்டாநத்தால் எப்போதும்பாபமில்லாதவனாய்ப் பிரம்மலோகத்தில்கொண்டாடப்படுகிறான்.

நான்காவது அத்தியாயம்-முற்றிற்று.

ஆக-அத்தியாயம்-௪க்கு-சுலோகம்-௬௧௪.

ஐந்தாவது

# அத்தியாயம்.

## மஹரிஷிகளின் வினா.

௧—இந்தப்படி சொல்லப்பட்ட விரதாநுஷ்டாநமுள்ளகிரகஸ்த்ததருமத்தைக்கேட்டு அந்தருஷிகள் கற்பாந்தரத்தில் அக்கினியின்புத்திரனை அந்தப்பிருகுமஹாமுநிவனைப்பார்த்து ஒருவசநஞ்சொல்லுகிறார்கள்.

௨—எல்லாச் சந்தேகத்தையும் தெளிவிக்கத்தக்க ஞாநமுள்ள ஓய்சுவாமீ தன்றன் தருமங்களை அநுஷ்டித்துக்கொண்டிருக்கிற விப்பிரர்களின் தருமமானது விதிப்படிசொல்லப்பட்டது.வேதசாஸ்திரமோதினவர்களுக்கு எப்படி துர்மரணமுண்டாகிறதையா.

## விடை.

௩—இந்தப்பிரகாரங் கேட்க்கப்பட்டும், தர்ம்மாத்துமாவாயும் இந்தக்கற்பத்தில் மநுவின்புத்திரனுமிருக்கிற அந்தப் பிருகுமஹாமுநியானவர் பிராமணரிகளை அபமிர்த்தியு எவ்விதமாகச்சொல்லுகிறதோ அதைச்சொல்லுகிறேன் கேளுங்கள்.

௪—வேதமோதாமையாலும், தன்ஆசாரத்தை விடுவதினாலும்

சக்தியிருக்கும்போது செய்யவேண்டிய பூஜாதிகாரியங்களை சோம்பலினால்விடுவதினாலும், சாப்பிடத்தகாததைச் சாப்பிடுவதினாலும் விப்பிரானை அபமிர்த்தியு கொல்லுகிறது.

## சாப்பிடத்தகாதவை.

௫—முள்ளங்கி முருங்கை வெங்காயம் மரத்திலும்,பூமியிலும் உண்டான காளான் அசுத்தமானவிடத்திலுண்டான பதார்த்தங்கள் இவைகள் துவிஜர்களுக்குப் பக்ஷிக்கத்தகாதவைகள்.

௬—மரத்தில் சுயமாயும்,வெட்டினதினாலும்உண்டான செகப்புமெழுகு உள்ளிப்பூண்டு சீம்பால் ஆவின்தயிர் இவைகளை முயற்சியுடன் விடவேண்டியது.

௭—தேவதைகளைக்குறியாமல் தன்னிஷ்டத்திற்காகச்செய்த அன்னம்,பாயசம்,வடை, யாகமின்றி மந்திரமில்லாமற் கொல்லப்பட்டஜெந்துக்களின்மாம்ஸம் தேவதைக்கு நைவேத்தியஞ்செய்யப்படாத அன்னம், ‡ ஹவிசு.

௮—கன்றுபோட்டு பத்துநாளாகாத பசு,ஆடு,எருமை, இவைகளுடையவும்,ஒட்டகம், ஒற்றைக்குளம்புள்ள குதிரைமுதலானவை புணரும்பருவத்தையுடைய பசு இவைகளுடையவும்.

௯—செம்மறியாடு-சினைப்பசு-கன்றுசெத்தபசு, ஸ்த்திரீ, காட்டெருமைநீங்கலாக மற்றமிருகம், இவைகளின்பாலும் புளித்துப்போனபால்,இவைகளை துவிஜாதிகள் முயற்சியோடு நீக்கவேண்டியது.

௧௦—புளிச்சுப்போன பதார்த்தங்களுக்குள் தயிரும் அதில்நின்

---

‡ ஹவிசு என்பது ஹோமத்திற்காகச்செய்த புரோடாசம் முதலிய.

V.B.S. ...NIYASARMA TAM... ...DIT.

றுண்டான வெண்ணெயும் ஜலசம்பந்தத்தால் புளித்தபழம், கிழங்கு புஷ்ப்பம்,இவ்வித ஊறுகாய்களும் சாப்பிடத்தக்கது.

கக—அரிசி,மாம்ஸம், இவைகளைச்சாப்பிடுகிறபக்ஷி ஊரில்வசிக்கிற புருமுதலியபட்சி ஒற்றைக்குளம்புள்ள மிருகங்களில் சாப்பிடத்தகாதென்று சொல்லப்பட்டவைகள் டிட்டிபம்.

கஉ—ஊர்க்குருவி, நீர்க்காக்காய், அன்னம்,சக்கிரவாகம்,ஊர்க்கோழி, சாரசபக்ஷி, கயறுவாற்குருவி,நச்சுக்குருவி,கிளி,சாரிகை.

கங—மரங்கொத்தி,சராரி,குருட்டுநாரை,காக்கை,விச்சுளி, ராஜாளி, வல்லூறு.

கச—கொக்கு,நாரை,அண்டங்காக்காய்,வலியன்,முதலை, ஊர்ப்பன்றி சகலவிதமீன்கள் இவைகளையெல்லாம் நீக்கவேண்டியது.

கரு—எவன் எதன்மாம்ஸத்தைச் சாப்பிடுகிறானோ அவன் அதன் மாம்ஸத்தைச் சாப்பிட்டவனாகச் சொல்லப்படுவான் மச்சமாம்ஸத்தைச் சாப்பிடுகிறவன்மாத்திரம் எல்லாமாம்சத்தையும் சாப்பிட்டவனாகச்சொல்லப்படுவான் ஆதலாலதைநீக்கவேண்டியது.

கசு—ஆனால் ஆயிரப்பல்லுள்ள பாடீநமென்னுமச்சமும் சிகப்புமச்சமும், எக்கியத்திலும், சிரார்த்தத்திலும் விதிக்கப்பட்டிருக்கின்றது. கும்பலோடுசஞ்சரிக்கிறமீனும் சிங்கமுகமீனும் முள்ளுமீனும், மற்றகாலங்களிலும், கூடுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால் ஆபத்துக்காலத்தில் இவைகள் கூடுமென்று தாத்பரியம்.

கஎ—தனியாகச்சஞ்சரிக்கிற பாம்புமுதலானவை இந்தச்சாதியென்றுதெரியாதிருக்கிற பட்சி மிருகங்கள் இவைகளைச்சாப்பிடக்கூடாது. சாப்பிடலாமென்று சொல்லப்பட்ட பட்சி மிருகங்களிலும் ஐந்நகமுள்ளதை நீக்கவேண்டியது.

கஅ—முள்ளம்பன்றி,சல்லிய மிருகம்,உடும்பு, காண்டாமிருகம் ஆமை,முயல்,இவைகள் ஐந்துநகங்களாயிருந்தபோதிலும் இவைக ளையும், ஒருபக்கம் பல்லுள்ளமிருகங்களில் ஒட்டகநீங்கலாக மற்ற வைகளையும் புசிக்கலாம்.

கசு—காளான்,ஊர்ப்பன்றி,வெங்காயம்,ஊர்க்கோழி,உள்ளிப்பூ ண்டு,இவைகளைத் துவிஜன் தெரிந்துபுசித்தால் உடனேபதிதனாகி விடுகிறான்.

உ0—இவ்வாறையும் துவிஜன் தெரியாமல் புசித்தால் சாந்தப நமென்னும் கிரிச்சிரத்தையாவது,சாந்திராயணத்தையாவது, அநு ஷ்டிக்கவேண்டியது.இவ்வாறும் நீங்கலாக மற்றநீக்கப்பட்டவஸ்து க்களை புசித்தால் ஒருதிந முபவாச மிருக்கவேண்டியது. சாந்தபந ம் சாந்திராயண மிவைகளை.கக வது, அத்தியாயத்திற்காண்க.

உக—துவிஜர்கள்-வருஷந்தோறும் புசிக்கத்தகாததைத் தெரி யாமற் புசித்தபாபம்-போகிறதற்காக ஒருபிராஜாபத்திய கிருச்சிர விரதத்தை யநுஷ்டிக்கவேண்டியது. தெரிந்து புசித்தால்அதற்குச் சொல்லிய பிராயச்சித்தத்தை அப்போதைக்கப் போதேசெய்ய வேண்டியது.

உஉ—புசிக்கும்படிசொல்லியிருக்கிற மிருகம்-பக்ஷி - இவைக ளை பிராமணர் எக்கியத்துக்காகவும், அல்லது-தன்மாதாபிதா முத லிய போஷிக்கவேண்டியவர்களைக் காப்பாற்றுவதற்காகவும்,கொல் லலாம்.முற்காலத்தில் அகத்தியமஹாமுநி தன்பிதாமுதலிய போ ஷியவர்க்கங்களுக்காக ஜெந்துஹிம்ஸைசெய்திருக்கிறார்.

உரு—இருடிகள்செய்த பழைமையானஎக்கியங்களில்பக்ஷிக்கத்

தர்கமிருகம்-பக்ஷி-இவைகள் அவிசாகவேயிருந்தது.ஆகையால் எக்கியத்தில் ஹிம்சைசெய்யலாம்.

உச—புசிக்கும்படி சொல்லப்பட்ட பதார்த்தங்கள் எண்ணெய்சம்பந்தமுள்ள தாகவிருந்தால் அதுவும் ஹோமஞ்செய்த மிகுதியும் முதல்நாளதாக விருந்தபோதிலும் புசிக்கலாம்.

உரு—அதிகநாட்பட்டதாக விருந்தாலும் எண்ணெய்சம்பந்தப்படாத தாகவிருந்தாலும் அரிசிமாவு-கோதும்பைமாவு- இவைகளை துவிஜர்கள் கிரகித்துக்கொள்ளலாம்.

உசு—துவிஜாதிகள் புசிக்கவேண்டியதும் நீக்கவேண்டியதும் இதுவரையில் சொல்லிமுகிந்தது.மாம்ஸம் புசிக்கவேண்டியதையும் நீக்கவேண்டியதையும்முழுமையுஞ் சொல்லப்போகிறேன்.

## மாம்ஸத்தின் விதிவிலக்குகள்.

உஎ—ஒருபிராமணன். தன்னைமாம்ஸம்புசிக்க வேணுமென்றுகேட்டுக்கொள்ளும்போதும்,விதிப்படிசிரார்த்தத்தில் வரிக்கப்பட்டபோதும் வேறேஆகாரமில்லாமல் மாம்ஸம் புசிக்காவிட்டால் உயிர்போகும்படிநேரிட்டசமயத்திலும் மந்திரத்தினாற்கொல்லப்பட்ட மிருகாதிகளின்மாம்ஸத்தை புசிக்கலாம்.

உஅ—எனென்றால். பிரமன்-இவ்வுலகமுழுதும் ஜீவனுக்காகாரமாகவுண்டுபண்ணினார். ஆகையால் நெல்லுமுதலான தாபரமும் மிருகமுதலானசங்கமமும் ஜீவனுக்காகாரமாகவேயிருக்கின்றன.

உகூ—எப்படியென்றால் மான்முதலியசரங்களுக்கு புல்லுமுதலிய அசரங்களும். புலிமுதலிய கோரைப்பல்லுள்ளவைகளுக்கு மான்முதலிய கோரைப்பல் வில்லாதவைகளும். மாநுடர்முதலிய கையுள்ளவர்களுக்கு மீன்முதலியகையில்லாதவைகளும். சிங்கமுத

ஷிய வீரியமுள்ளவைகளுக்கு யானைமுதலியபயமுள்ளவைகளும் ஆகாரமாக விருக்கின்றன.

ருo—ஆதலால் பிராணன்போகிறகாலத்தில் புசிக்கத்தகுந்தஜெந்துக்களை திநந்தோறும் புசித்தபோதிலும் தோஷித்தையடையமாட்டான். பிரமனாலேயே புசிக்கத்தக்கவர்களும் கொல்லத்தக்கவைகளும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறதல்லவா.

ருக—ஆனால் யாகஞ்செய்து அதின்மிகுந்த மாம்ஸத்தைப்புசித்தல் தேவகாரியமென்றும். மற்றவேளையில் தனக்காகஜெந்துக்களைக்கொன்றுபுசித்தல் ராக்ஷசகாரியமென்றுஞ் சொல்லப்படும்.

ருஉ—மாம்ஸங்கிரயத்திற்குவாங்கினாலும் தானாகவே சம்பாதித்தாலும் ஒருவனிஷ்டமாகக்கொடுத்தாலும்அவைகளைத் தேவர்களுக்கும் பிதுர்க்களுக்கும் நைவேத்தியஞ்செய்து புசிக்கிறவன் தூஷிக்கப்படமாட்டான்.

ருரு—மாம்ஸபக்ஷணத்தினா லுண்டானதோஷித்தை யறிந்த துவிஜனானவன் ஆபத்தில்லாதபோது யாகாதிகாரியமன்றி மாம்ஸத்தைப்புசிக்கக்கூடாது. புசித்தால் இறந்தபின் அந்தச் செந்துக்களினால் புசிக்கப்படுகிறவனாயும், அப்போது தன்னைக்காப்பற்ற சக்தியில்லாதவனாயும் ஆகிவிடுகிறான்.

ருச—வீணாகமாம்ஸத்தைப் புசிக்கிறவனுக்கு இறந்தபின்னெவ்வளவுதோஷமுண்டாகிறதோ அவ்வளவுதோஷம் பொருளாசையால்-மிருகங்களைக்கொன்று விற்பவனுக்கும் உண்டாகமாட்டாது.

ருரு—சிரார்த்தத்தில் விதிப்படி வரிக்கப்பட்ட துவிஜனானவன் தோஷமென்று மாம்ஸத்தைப்புசியாவிட்டால் அவன்இருபத்தொருஜநநம் பசுவாய்ப்பிறப்பான்.

ருசா—மந்திரமில்லாமற் கொல்லப்பட்ட பசுக்களை விப்பிரன்

ஒருபோதும் புசிக்கக்கூடாது. பழைமையானசாஸ்திர விதிப்படி மந்திரஞ்சொல்லிக் கொல்லப்பட்டிருந்தால் அதைப்புசிக்கலாம்.

௩௭—மிருகங்களின்தேகங்களை புசிக்கமநதிருந்தால் நெய்யினுலாவது,மாவினுலாவது, மிருகரூபமாகச்செய்து புசிக்கலாமேதவிர வீணுகப்பசுவைக் கொல்லவேண்டுமென்று மநதினுலும்நினைக்கக்கூடாது.

௩௮—பசுவைவீணுகக்கொல்பவன் அந்தப்பசுவுக்கு எத்தனைமயிரிருக்கின்றனவோ அத்தனைஜநநம் பசுவாகப்பிறந்து ஒருவரால் கொல்லப்படுவான்.

௩௯—எக்கியத்திற்காகவே பசுக்கள் பிரமனுல் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன,அந்தஎக்கியஞ்செய்தால் உலகமெல்லாம் க்ஷேமத்தையடைகின்றது. ஆகையால். எக்கியத்தில் செய்யும் பசுஹிம்சை ஹிம்சையல்ல.

௪0—கொடிகள்-பசுக்கள்-விருக்ஷங்கள்-மிருகங்கள்-பக்ஷிகள்-இவைகளை எக்கியத்திற்குபயோகப்படுத்தினுல் பின்பு அதுகளுயர்ந்தகதியை யடைகின்றன.

௪௧—மதுபர்க்கம்-எக்கியம்-சிரார்த்தம்-இவைகளுக்குமாத்திரம் ஜெந்துஹிம்சைசெய்யலாம். மற்றவிஷயத்திற் கூடாதென்று மநுப்பிரஜாபதி ஆஞ்ஞாபித்திருக்கிறுர்.

௪௨—வேதத்தின் தத்துவார்த்தத்தையறிந்த துவிஜனுனவன் இந்த மதுபர்க்கமுதலியவிஷயத்தில் ஜெந்துஹிம்சைசெய்தால் தன்னையும் அந்தஜெந்துவையும் நற்கதியையடைவிப்பான்.

௪௩—ஆத்துமக் கியாநமுள்ள துவிஜன் கிரகஸ்தனுயிருந்தாலும் பிரமசாரியாயிருந்தாலும் வாநப்பிரஸ்தனுயிருந்தாலும் ஆபத்திலும் வேதத்திற்சொல்லப்படாதஹிம்சையைச்செய்யக்கூடாது

சச—சராசரவிஷயத்தில் வேதத்திற்சொல்லப்பட்ட ஹிம்சையை ஹிம்சையென்று நினைக்கக்கூடாது. வேதத்தினின்றேதர்மம்விளங்குகிறதல்லவா. ஆதலால்- அந்தவேதம் ஹிம்சையைச் சொன்னபோதிலும் புண்ணியமாகவேயிருக்கும்.

சரு—தன்சுகத்துக்காக எவன் யாவருக்கும் உபத்திரவஞ்செய்யாத மான்முதலிய ஜெந்துக்களை ஹிம்சிக்கிருனே அவன் இம்மையிலும் மறுமையிலும் சுகமாவிர்த்தியடையமாட்டான்.

சசு—எவன் ஜெந்துக்களைக்கட்டாமலும், கொல்லாமலும், வருத்தப்படுத்தாமலுமிருக்கிருனே அவன் சகலஜநமித்திரனுக சகலசுகத்தையு மநுபவிக்கிருன்.

சஎ—பின்னும் அவன் எதைநினைக்கிருனேஎதைச்செய்கிருனே எதை ஆசைப்படுகிருனே அதனதன் பலன்களெல்லாம் அவனுக்குத்தானேயுண்டாகின்றன.

சஅ—ஜெந்துக்களை ஹிம்சைசெய்யாமல் ஒருபோதும் மாம்ஸமுண்டாகாது. ஜெந்துக்களைக் கொன்ருலும் சுவர்க்காதிலோகங் கிடைக்கமாட்டாது. ஆகையால் மாம்ஸத்தைநீக்கவேண்டியது.

சகூ—சுக்கில சோணிதத்தினலே ஜெந்துக்களுண்டாகிற விதத்தையும் கொடுமையாய் ஜெந்துக்களைக் கட்டவேண்டியதையும் கொல்லவேண்டியதையும் நன்ருகயோசித்தால் ஒருமாம்சமும்புசிக்கக்கூடாதென்று தோற்றப்படும்.

ருo—பிசாசம்பக்ஷிப்பதுபோல் எவன் மாம்ஸத்தை விதியின்றிபசிக்காமல் இருக்கிருனே அவன் உலகத்தில் எல்லோருக்கும்பிரியனுயும் நோயற்றவனுயுமிருப்பான்.

ருக—ஜெந்துவை-ஹிம்சைசெய்ய உத்திரவுசெய்கிறவன், அதைச்செய்கிறவன், மாம்ஸத்தை யறுத்தெடுக்கிறவன், அதைவிற்கிறவன்

அதைவாங்குகிறவன், அதைச்சமைக்கிறவன், பரிமாறுகிறவன், புசிக்கிறவன், இவர்களனைவரும் காதகர்களென்று சொல்லப்படுகிருர்கள்

ருஉ—எவன் யாகம்-சிரார்த்தமின்றி மற்றொருமாம்ஸத்தினலே தன்மாம்ஸத்தை விர்த்திசெய்ய நினைக்கிருனே அவனைவிட பாபி இந்தவுலகத்திலொருவருங்கிடையாது.

ருக—எவன் நூறுவருஷம்வரையில் வருஷந்தோறும் அசுவமேதயாகஞ்செய்கிருனே, எவன் மாம்ஸத்தை சாமளவுநீக்குகிருனே இவரிருவருக்கும் புண்ணியபலன்சரிதான்.

ருச—மாம்ஸத்தை நீக்குகிறவன் எந்தப்பலனையடைகிருனே அதை-பழம்-கிழங்கு-சாலியந்நம்-இவைகளால் ஜீவிக்கிற-முநியும் அடையமாட்டான்.

ருரு—நான் எதன்மாம்ஸத்தை இம்மையில் சாப்பிடுகிறேனே அது இறந்தபின் என்னைபக்ஷிக்கிறது. என்று மாம்ஸத்திற்கு மாம்ஸசப்தத்தைப்பெயராகச் சொல்லுகிருர்கள்.

ருசு—விதிவிலக்கில்லாத மாம்ஸபக்ஷணத்திலும், மதத்தையுண்டுபண்ணுகிற தேன்முதலியவற்றைச் சாப்பிடுகிறத்திலும், ஸ்திரிசம்போகத்திலும், பிராணிகளுக்குத் தோஷமில்லையென்று பிரவர்த்திசாஸ்திரஞ்சொல்லுகின்றது. இவைகளை நீக்கவேண்டுமென்று நிவர்த்திசாஸ்திரஞ்சொல்லுகின்றது. அதுவே மஹாபலனைக்கொடுக்கத்தக்கது.

ருஎ—இதற்குமேல் நான்குவருணத்தாருக்கும் கிரமமாக இறந்ததீட்டையும் பஞ்சலோகசுத்தியையுஞ் சொல்லப்போகிறேன்.

## இறப்பு பிறப்புகளின் தீட்டு.

ருஅ—பல்முளைக்கும்போதும், முளைத்தபின்பும், சௌளஞ்செய்தபின்பும், குழந்தையிறந்துபோனல் பங்காளிகளனைவருக்குந் தீட்டுண்டு.

ருகூ—சபிண்டர்களுக்குப் பத்துநாள்வரையில் இறந்ததீட்டு, ஆனால் வேதமுழுமையுமோதி அக்கிநிஹோத்திரஞ் செய்கிறவனாக இருந்தால் அவனுக்கொருநாளும் வேதமாத்திர மோதினவனுக்கு மூன்றுநாளும் ஸ்மார்த்தாசாரமுள்ளவனுக்கு நான்குநாளும்,இந் தக்குணம் ஒன்றுமில்லாதவனுக்கு பத்துநாள்தீட்டென்றும் அறிய வேண்டியது.

சூ௦—சபிண்டாளாவது தான்முதல் ஐந்தாம்பாட்டன் வரையி லுள்ள ஏழுதலைமுறைக்குட்பட்ட பங்காளிகள் சோதகாளாவது அந்த ஏழுதலைமுறைக்குமேல் குலகோத்திரந் தெரிகிறவரையிலு ள்ளபங்காளிகள்.

சூ௧—இந்த இறந்ததீட்டு சபிண்டர்களுக்குள்படிச்சொல்லப் பட்டதோ அப்படியே பிறப்பிலுந் தீட்டுண்டென்று சுத்தியைவி ரும்புகிறவன் அறியவேண்டியது.

சூ௨—இறந்ததீட்டு பங்காளிகள் அனைவருக்குஞ்சரிதான்.பிறப் பில் தாய்தந்தைகளுக்குமாத்திரம் தொடக்கூடாததீட்டு. அதிலு ம், தாய்க்குமாத்திரம் அதிகம் தகப்பனுக்கு பதினோராநாள் ஸ்நா நத்தோடே நீங்கிவிடுகிறது.

சூ௩—காமத்தினாலே வீரியத்தைவிட்டால் ஸ்நாநஞ்செய்தால் சுத்தனாவான். தனக்குப் பிறமனைவியிடத்தில் பிள்ளைபிறந்தால் மூ ன்றுநாள்தீட்டுண்டு.

சூ௪—சபிண்டர்கள் பத்துத்தினத்தினாலும்,சோதகர்கள் மூன் றுதினத்தினாலும் தீட்டைப் போக்கடித்துக்கொள்ளுகிறார்கள்.

சூ௫—இறந்துபோனகுருவுக்கு சிஷ்ன் கருமஞ்செய்தால் அவ ர். பங்காளிகளைப்போல் தானும், பத்துநாள் தீட்டிருக்கவேண்டி யது.

௬௬—கெர்ப்பத்தில் மூன்றுமாதமுதல்,ஏழுமாதத்துக்குள்ளாகச் சிசு இறந்துபோனால் எத்தனைமாதத்தி லிறந்துபோகின்றதோ மாதத்துக் கொருநாளாக அத்தனைநாள் தீட்டிருக்கவேண்டியது. தாயானவள் அதுநின்றவுடன் நாலாநாள் ஸ்நாநஞ்செய்தால் பரிசுத்தையாவாள்.

௬௭—மநிதர்களுக்கு சௌளஞ்செய்கிறதற்குமுன் குழந்தையிறந்தால் ஒருநாள்தீட்டும் அதற்குப்பின் உபநயநகாலத்துக்குள்ளிறந்தால் மூன்றுநாள்தீட்டும் உண்டு.

௬௮—இரண்டுவயதுக்குமுன் குழந்தையிறந்தால் அதை புஷ்பம்- மஞ்சள்முதலியவற்று லலங்கரித்து ஊருக்குவெளியில் பரிசுத்தமானபூமியில் புதைக்கவேண்டியது. இதற்கு சஞ்சயநங்கிடையாது.

௬௯—இந்தக்குழந்தையை தகநம்பண்ணக்கூடாது. இதற்குத் தர்ப்பணமுஞ்செய்யக்கூடாது. காட்டில்விறகைப்போடுவதுபோல் வியசநமின்றி புதைத்துவிட்டு பங்காளிகள் அனைவரும் மூன்றுநாள் தீட்டிருக்கவேண்டியது.

௭0—மூன்றுவருடத்துக்குமுன் குழந்தையிறந்தால் அதற்காக தகப்பனும்,ஞாதிகளும்,தர்ப்பணஞ் செய்யவேண்டியதில்லை.நாமகரணஞ்செய்தபின்பாவது,பற்கள்,முளைத்தபின்பாவது,இறந்தால் அக்குழந்தையினிடத்து அன்பினால் தர்ப்பணஞ்செய்தாலுஞ் செய்யலாம் விட்டாலும்விடலாம்.

௭௧—தன்னோடுகூட ஓதினவன் இறந்தால் ஒருநாள்தீட் டிருக்கவேண்டியது. சோதகாளுக்கு இறப்பிலும்,பிறப்பிலும்,மூன்றுநாள்வரையில் தீட்டுண்டு.

௭௨—ஒருபெண்ணை நிச்சிதார்த்தஞ்செய்தபின் விவாகஞ்செய்

கிறதற்குமுன் அந்தப்பெண்ணிறந்தால் யாருக்காக நிச்சயார்த்த ஞ்செய்தார்களோ அவனுக்கும், அவன்ஞாதிகளுக்கும் மூன்றுநாள்தீட்டுண்டு. அந்தப்பெண்தகப்பன்ஞாதிகளுக்கு முன்போலவே மூன்றுநாள் தீட்டுண்டு.

எங—மூன்றுநாள்தீட்டுள்ளவர்கள் அந்தமூன்றுநாள்வரையிலும் மண்ணுப்பு-மாம்ஸம்-புணர்ச்சி - இவைகளை நீக்கவேண்டியது நதிகளில் ஸ்நாநஞ்செய்யவேண்டியது.

எச—இதுவரையிற்சொல்லிவந்த தீட்டுக்கள் சமீபத்திலிருக்கும்போது இருக்கவேண்டியது. தேசாந்தரத்தி லிருக்கும்போது சபிண்டரும்,சோதகரும்,இருக்கவேண்டியதீட்டை யினிச்சொல்லப்போகிறேன்.

எரு—தேசாந்தரத்தில் தன்பங்காளியின் இறப்பையும்,பிறப்பையும் பத்துநாளைக்குள்கேட்டால் அந்தப்பத்துநாளோடேயே யிவன்தீட்டுப்போய்விடும்.

எசு—இறந்தசெய்தியை பத்துநாளைக்குமேற்பட்டுக்கேட்டால் சபிண்டருக்கு கேட்டநாள்முதல் மூன்றுநாள்தீட்டுண்டு. ஒருவருடத்துக்குமேற்பட்டால் ஸ்நாநத்தோடே தீட்டுப்போய்விடும். பிறந்தசெய்தியைப் பத்துநாளைக்குமேற்கேட்டால் தீட்டில்லை.

எஎ—சபிண்டர்கள் பங்காளிகளின் இறப்பை பத்துநாளைக்கு மேல் கேட்டாலும்,அவர்களின்பிறப்பைப் பத்துநாளைக்குள் கேட்டாலும்,கட்டினசோமனுடன் ஸ்நாநஞ்செய்தால் தொடுகிறத்துக்கு யோக்கியனாகிறான்.

எஅ—சபிண்டரில் பல்முளையாதசிறுவனிறந்தாலும் வேறுதேசத்திலிருக்கிற சோதகர்களிறந்ததை மூன்றுநாளைக்குமேற் கேட்

டாலும் கட்டினசோமனுடன் ஸ்நாநஞ்செய்தால் தீட்டுப்போய் விடும்.

எகூ—பத்துநாள்தீட்டுள்ள இறப்பிலாவது, பிறப்பிலாவது,மறு படியொருதீட்டுநேரிட்டால் முன்னிருந்ததீட்டோடே பின்வந்த தீட்டு போய்விடும். ஆனால் பத்துநாள்தீட்டுள்ள இறந்ததீட்டில் அந்தத்தீட்டும் பிறந்ததீட்டும்போய்விடும். பிறந்ததீட்டில் பிறந்த தீட்டுவந்தால் மாத்திரம்போய்விடும்.

அ0—ஆசாரியனிறந்தால் மூன்றுநாளும் அவன்பெண்சாதி பி ள்ளையிறந்தால் ஒருநாளுந்தீட்டுண்டு.இதுசாஸ்திரத்தின்மரியாதை

அக—வேதமோதினவனையும்,நற்குணமுள்ளவனையு மிருக்கிற பி ராமணன் தன்வீட்டில்வந்திறந்துபோனாலும்அம்மானிறந்துபோ னாலும்,மூன்றுநாள்தீட்டுண்டு.சிஷின்-ரித்துவிக்கு அம்மான்பிள்ளை முதலியபந்து இவர்களிறந்துபோனால் தொண்ணூறுநாழிகைதீட் டுண்டு.

அஉ—க்ஷத்திரியசாதியான தன்தேசஅரசனிறந்துபோனால் பக லிலானால் பொழுதுபோகிறவரையிலும் இரவிலானால் நக்ஷத்திரம றைகிறவரையிலும், அந்தத்தேசத்துப் பிரசைகளுக்குத்தீட்டுண்டு வேதமோதாதவன் தன்வீட்டிலிறந்தாலும் வேதமாத்திரம் ஓதுவி த்தகுருவிறந்தாலும், ஒருநாள்தீட்டுண்டு.

அரு—இப்போதுசொல்லிவந்த பத்துநாளையதீட்டு பிராமணர் களுக்கு, அப்படிக்கொத்தவிஷயத்தில் க்ஷத்திரியனுக்குப் பன்னி ரண்டுநாளும், வைசியனுக்குப் பதினைந்துநாளும், சூத்திரனுக்கு முப்பதுநாளும், இருக்கவேண்டியது.

அச—இந்தத் தீட்டுநாள்களை இதற்குமேல் வளர்த்தக்கூடாது ஔபாசநாதி வைதீககாரியத்தையும் இதற்குமேல்நிறுத்தக்கூடாது

அக்கிநிஹோத்திரந் திநந்தோறுஞ் செய்கிறவனாகவிருந்தால். தன் பங்காளியிறந்தம்பாதிலும்,ஒருநாள் அல்லது மூன்றுநாளைக்குமேல் நீட்டில்லை.

அரு—பறையன் தாமையானவள்-பதிதன்-பிரசவித்தவள்-பிணம்-பிணத்லைதத்தொட்டவன்-இவர்களைத் தெரியாமல்தொட்டால் ஸ்நாநஞ்செய்தால் பரிசுத்தனாகிருன்.

அசு—ஸ்நாநாதிகாலத்தில் பறையன்முதலிய அபரிசுத்தமுள்ளவர்களைப்பார்த்தால் ஆசமநஞ்செய்து காயத்திரி - சூரியமந்திரம். பவமான, ருக்கு இவைகளைத் தன்சக்த்திக்குத் தக்கதாகச் செபிக்க வேண்டியது.

அஎ—மனிதனெலும்பை-பிராமணன்-வேண்டுமென்று தொட்டால் ஸ்நாநஞ்செய்தால் பரிசுத்தனாவான். தெரியாமற்றொட்டால் ஆசமநஞ்செய்து பசுவைத்தொட்டாலும், சூரியனைப்பார்த்தாலும் பரிசுத்தனாவான்.

அஅ—எக்கியத்தில் தீக்ஷைபெற்றிருக்கிறவன் அது முடிகிறவரையில் மாதாபிதாதவிர ஞாதிகளிறந்தால் ஸ்நாநதர்ப்பணமுதலானவைகள் செய்யவேண்டியதில்லை முடிந்தபின் மூன்றுநாள்நீட்டிருந்து தர்ப்பணஞ்செய்தால் பரிசுத்தனாகிருன்.

அகூ—பெரும்பாலும் நித்தியகருமங்களைவிட்டவர்கள் சங்கரஜாதியரால் பிறந்தவர்கள் வேதத்லைதத்தூஷித்துக்கொண்டு சந்நியாசி வேடம்பூண்டவர்கள் விஷித்தைச்சாப்பிட்டாவது, கழுத்திற் சுருக்கிட்டுக்கொண்டாவது,இறந்தவர்கள் இவர்களுக்கும்

கூ0—வேதத்திற்குவிரோதமாக சந்நியாசத் தன்மையை யடைந்த ஸ்திரிகள் விபசாரிகள் கருப்பத்தையழிக்கிறவர்கள் கணவனுக்குத் துரோகஞ்செய்கிறவர்கள் மத்தியபாநஞ்செய்கிறவர்கள் இவர்களுக்குந் தருப்பணஞ்செய்யவேண்டியதில்லை.

கூக—தன்னுசாரியன்-தன்னுபாத்தியாயன்-தந்தை-தாய்- வேத மோதுவித்தகுரு-இவர்க ளிறந்துபோனுல் அந்தப்பிணத்தைத் தூக்குகிற சிஷ்ன்முதலானவன்-பிரமசாரியாகவிருந்தாலும், அவன்விரத மழியமாட்டாது.

கூஉ—சூத்திரனிறந்துபோனுல் ஊருக்குத் தெற்குப்பக்கத்தாலும்,வைசியன் இறந்துபோனுல் மேற்குப்பக்கத்தாலும், க்ஷத்திரியனிறந்துபோனுல்வடக்குப்பக்கத்தாலும்,பிராமணனிறந்துபோனுல் கிழக்குப்பக்கத்தாலும்,எடுத்துக்கொண்டுபோகவேண்டியது

கூக—அரசன் இந்திரன்றன்மையை யடைந்திருப்பதினுலும், பிரமசாரி-யாகஞ்செய்பவன்-இவர்கள் பிரம்மசுவரூபத்தை யடைந்திருப்பதினுலும்,அவர்கள் ஞாதிகளிறந்தால் தீட்டிருக்கவேண்டியதில்லை.

கூச—அரசன்-மேலானசிங்காசநத்தி லிருந்தாளும்போது எல்லாத்தீட்டும் ஸ்நாநத்தினுலேயேபோய்விடும் அந்த-ஆசநம்-சகலப்பிரசைகளைக்காப்பாற்றவும் அந்நம்போடவும் ஏற்பட்டிருக்கிறதல்லவா.

கூரு—விளையாட்டுச்சண்டைபோட்டு இறந்தவர்கள் மிந்நலிடிமுதலியவற்ருல்இறந்தவர்கள் பசு பிராமணன் இவர்களுக்காக இறந்தவர்கள் அரசனுல் தீட்டிருக்கவேண்டியதில்லையென்று சொல்லப்பட்டவன் இவர்களிறந்தால்ஸ்நாநத்தோடே தீட்டுப்போய்விடும்

கூசு—சந்திரன்-அக்கினி- சூரியன்-வாயு - இந்திரன்-குபேரன்-வருணன்-யமன்-இந்த எட்டுத்திக்குப்பாலகர்களின் ரூபத்தை அரசன்தரிக்கிருன்.

கூஎ—திக்குப்பாலகர்களின் சுவரூபனுகையால் அரசனுக்குத்தீட்டுவிதிக்கப்படவில்லை திக்குப்பாலகர்களாலேயே மனிதர்களுக்கு அசுத்தியுஞ்சுத்தியுமுண்டாகின்றது.

கூஅ—க்ஷத்திரியதருமப்படி யுத்தத்தில் கத்திமுதலிய ஆயுதத்தாலடிபட்டுஇறந்தவனுக்கு யாகஞ்செய்தவனுக்குண்டாகும் புண்ணியலோகமுண்டாகின்றது.உடனே அவன் தீட்டும்போய்விடுகிறது என்றுசாஸ்திரத்திற் சொல்லியிருக்கின்றது.

கூகூ—தீட்டுப்போகும்நாளில் நாலுவருணத்தாருக்குள் பிராமணனுக்கு ஸ்நானத்தாலும் க்ஷத்திரியனுக்கு - வாகநம் - வில்லு-இவைகளைத்தொடுவதினாலும் வைசியனுக்கு-உழக்கோல் - தராசு-கயிறு-இவைகளைத்தொடுவதினாலும் சூத்திரனுக்கு மூங்கிற்றடியைத்தொடுவதினாலும், சுத்தியுண்டாகிறது.

க00—ஓ்ருஷிகளே-உங்களுக்கு இதுவரையில்சபிண்டர்-சோதகர்-இவர்களின் தீட்டைச்சொன்னேன் இனிமற்றவர்கள்தீட்டைச்சொல்லப்போகிறேன்.

க0க—ஞாதிகளல்லாத ஒருபிராமணபிணத்தையும் அம்மான்முதலான தாயின்பந்துக்களின் பிணத்தையும் சிநேகத்தினால்- தூக்கினால்-மூன்றுநாள்தீட்டுண்டு.

க0உ—பிணந்தூக்கினவன்-தீட்டுக்காரனந்நத்தைச்சாப்பிட்டுக்கொண்டிருந்தால் அவன்பத்துநாள்தீட்டிருக்கவேண்டியது. அவனந்நத்தைச்சாப்பிடாமலும் அவன்வீட்டில்வாசஞ்செய்யாமலும் இருக்கிறபிணந்தூக்கினவனுக்கு ஒருநாள்தீட்டுண்டு.

க0௩—பங்காளியாயிருந்தாலும்,இல்லாவிட்டாலும்,வேணுமென்று இறந்தபிணத்தைப் பின்றொடர்ந்துபோனால் கட்டினவஸ்திரத்துடன் ஸ்நானஞ்செய்து நெருப்பைத்தொட்டு நெய்யைச்சாப்பிட்டால் சுத்தனாவான்.

க0௪—பிராமணன்முதலானோர் இறந்தால் அந்தச்சாதியர் இருக்கும்போது சூத்திரனைக்கொண்டு அப்பிணத்தையெடுக்கச்சொல்லக்

கூடாது. அப்படியெடுத்து தகநஞ் செய்தால் இறந்தவனுக்கு புண்ணியலோகம்வரமாட்டாது.

கα௬—ஞாநம்-தவம்-அக்கிநி- அவிசுமுதலிய ஆகாரம்-மண்-மநது-தண்ணீர்-பெருக்குதல்-மெழுகுதல்-காற்று-யாகாதிகர்மம்-சூரியன்-தீட்டிற்குச்சொல்லியநாள்-இவைகளெல்லாம் மனிதர்களுக்குச்சுத்தியைக்கொடுப்பவைகள்.

க0௬—இந்தச்சுத்திகளெல்லாவற்றையும்விட பொருள் நல்லதாகவிருக்கிறது உயர்ந்தசுத்தி. எவனுக்குப்பொருள் நியாயமாகச் சம்பாதிக்கப்பட்டிருக்கிறதோ அவன்றான்பரிசுத்தன் மண்ணாலுஞ் ஜலத்தாலுங் கழுவுகிறத்தினால் மாத்திரம் சுத்தனல்லன்.

க0எ—வித்துவான்கள்-பொறுமையினாலும்,அகிர்த்தியஞ்செய்தவர்கள் கொடையினாலும், இரகசியமாகப் பாவஞ்செய்தவர்கள் செபஞ்செய்வதினாலும்,வேதமோதினவர்கள் தவத்தினாலும் பரிசுத்தாளாகிறார்கள்.

க0அ—அசுத்தமான அங்கங்களெல்லாம் மண்- ஜலம்-முதலியவற்றால்-கழுவுகிறத்தினாலும், நதி- ஓட்டத்தினாலும், மாநசவிபசாரமுள்ள ஸ்திரி-தூமையினாலும்,பிராமணர்கள் சந்நியாசத்தினாலும் சுத்தாளாகிறார்கள்.

க0கூ—சரீரம்-ஜலத்தினாலும், மநம்-சத்தியத்தினாலும், ஜீவாத்மா-பிரம்மவித்தையை அப்பியசிக்கிறத்தினாலும், தவம்செய்கிறத்தினாலும் புத்தி யதார்த்தக்கியாநத்தினாலும், சுத்தியடைகிறது.

## லோகசுத்தி.

கக0—இதுவரையில் உங்களுக்குச்சரீரசம்பந்தமான தீட்டைச்சொன்னேன் இனி-பலவிதநிரவியசுத்தியைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

கககூ—காந்தியுள்ள தங்கப்பாத்திரம்-சகலரத்நம்-இவைகளுக்கு சாம்பல்-ஜலம்-மண்-இவைகளால் சுத்திசெய்யவேணுமென்று பெரியோர்கள்சொல்லுகிறார்கள்.

ககஉ—சித்திரவேலைசெய்யப்படாத தங்கப்பாத்திரம் வெள்ளிப்பாத்திரம் ஜலத்திலுண்டாகின்ற சங்கம்,இரத்திநம்.இவைகள் அழுக்கில்லாமலும், நெய்முதலிய வழுவழுப்பில்லாமலும், இருந்தால் அவைகளுக்கு ஜலத்தினலேயே சுத்தியுண்டாகிறது.

ககங—தங்கம்,வெள்ளி,இவைகள் அக்கினி ஜலம்,இவைகள் சேர்ந்துண்டாகிறபடியால் அவைகளுக்கு ஜலத்தினுற்கழுவி நெருப்பிற்காச்சினுல் உயர்ந்தசுத்தியுண்டாகிறது.

ககச—செம்பு,இரும்பு,வெங்கலம்,பித்தளை,தராய்,ஈயம், இந்தப்பாத்திரங்களுக்கு உப்பு,புளித்தண்ணீர்,சாம்பல்,சாணி, சுத்தஜலம் இவைகளால் அததற்குத்தக்கபடி சுத்திசெய்யவேண்டியது.

ககரு—நெய்,எண்ணெய்,இவைகள், காக்கைமுதலானவைகளால் தொடப்பட்டால் இரண்டுதர்ப்பையினுல் ஒருதுளி அப்பாலெடுத்துவிட்டால்சுத்தியாம்.

ககசு—படுக்கை அசுத்தப்பட்டால் ஜலப்புரோக்ஷணத்தினுலும் மரப்பாத்திரம் சீவுகிறத்தினுலும் எக்கியபாத்திரம்,கையாற்றுடைத்து ஜலத்தினலலம்புகிறத்தினுலும், வீடு பெருக்கி மெழுகுகிறத்தினுலும் சுத்தியடைகிறது.

ககஎ—நெய்ஹோமஞ்செய்கிற சுருக்கு, சுருவம், இவைகளை வெந்நீராலும் ஆபஸ்தம்பம், முறம்,பண்டி, உலக்கை,உரல்,இவைகளைதண்ணீரினுலும், சுத்திசெய்யவேண்டியது.

ககஅ—ஓராள்சுமைக்கு மேற்பட்டநெல்லு சோமன்மூட்டை

இவைகள் அசுத்தப்பட்டால் ஜலப்புரோக்ஷணத்தினாலும், அதற்குக் குறைவானதிரவியம், கழுவுதலினாலும், சுத்தியடைகின்றது.

கககூ — மான்றோல், புலித்தோல், மரவுரி, இவைகளை, வஸ்திரத்தைப்போலவும், காய், கிழங்கு, பழம், இவைகளை தானியத்தைப்போலவும், சுத்திசெய்யவேண்டியது.

கஉ௦ — புழுவினாலுண்டாக்கப்பட்ட பட்டுக்கள் ஆட்டுமயிரில் உண்டாக்கப்பட்ட கம்பளம் இவைகளைஉழமண்ணினாலும், நேபாளதேசகம்பளத்தை வேப்பங்கொட்டையினாலும், சாலுவையை, வில்வப்பழத்தினாலும், வெண்பட்டை வெண்கடுகினாலும் சுத்திசெய்யவேண்டியது.

கஉக — சங்கம்-தந்தம்-மான்முதலியவற்றின்கொம்பு- இவைகளை வெண்கடுகுப்பொடியினாலும். கோமூத்திரம்-ஜலம்- இவைகளாலும், சுத்திசெய்யவேண்டியது.

கஉஉ — அசுத்தப்பட்ட விறகு-புல்-வைக்கோல் இவைகளைஜலப்புரோக்ஷணத்தினாலும், வீட்டை-விளக்கி-மெழுகுவதினாலும், மண்பாத்திரங்களை மறுபடிசூளைபோடுவதினாலும், சுத்திசெய்யவேண்டியது.

கஉஙு — கள்-மூத்திரம்-மலம்-கோழை-ரோதசு- சுவர்நீர் இரத்தம் இவைகளின் சம்பந்தத்தாலசுத்தமான மண்பாத்திரங்கள் மறுபடி சூளைபோடினும் பரிசுத்தமாகமாட்டாது.

கஉச — வீடுமுதலானவற்றிற்கு சண்டாளாதிகளால் அசுத்தம் நேரிட்டபோது விளக்குதல் மெழுகுதல் கோமூத்திரந்தெளித்தல் கொஞ்சமேல்மண்ணை யெடுத்தப்பாற் போடுதல் பசுமாட்டை யொருநாள்வசிக்கும்படிசெய்தல் இவ்வைற்றினாலும் அந்தப் பூமி பரிசுத்தப்படுகிறது.

கஉ௫—பக்ஷியினுலும் பசுவினுலும்மோரப்பட்டும் காலினுல் மிதிக்கப்பட்டும்,தும்மினஎச்சல் மயிர் புழு இவைகளின் சம்பந்தப்பட்டும் இருக்கிற அந்நம் மண்ணைக்கிள்ளி அதன்மேற்போடுவதினுல் சுத்தியடைகின்றது.

கஉசு—அமேத்தியசம்பந்தப்பட்டவஸ்துக்களை அந்த அமேத்தியம் அதனுற்றம் இவைகள்போகிறவரையில் மண்போட்டு ஜலத்திருற் சுத்திசெய்யவேண்டியது. எந்தெந்தவிடத்தில் மண்ணினுல் சுத்திசொல்லப்பட் டிருக்கிறதோ அந்தவிடத்தில் ஜலமுங்கூடத்தான்.

கஉஎ—ஒருவிதத்தினுலும் கண்ணுக்குத்தெரியாதிருந்த பதார்த்தம் அலம்பப்பட்டபதார்த்தம் பிராமணனுல் பரிசுத்தமானதென்று சொல்லப்பட்டபதார்த்தம் இந்தமூன்றும் பிராமணர்களுக்குப்பரிசுத்தமானவையென்று தேவர்கள்விதித்திருக்கிறுர்கள்.

கஉஅ—மேகத்தினுல் பூமியில் வருஷிக்கப்பட்டும் பசுமாடுகுடிப்பதால் குறைவுபடாததாயுமிருக்கிற ஜலம் பரிசுத்தமானது.அதுவும் அமேத்தியசம்பந்தமில்லாமலும்,வாசனை-நிறம்-ருசி- இவைகளோடுகூடியிருக்கவேண்டியது.

கஉகூ—தேவர்களுக்கு பத்தியினுல் புஷ்பங்கட்டுகிறவன், விற்பனைக்காகக் கடையில் பரப்பப்பட்டவஸ்துக்கள். பிரமசாரிவாங்கின பிக்ஷாந்நம் இவைகள் எப்போதுஞ் சுத்தமுள்ளனவென்று சாஸ்த்திரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

கங0—ஸ்திரீகளின்முகம் காக்கைகள்முதலான பக்ஷிகளால் தள்ளப்பட்டபழம் பால்சுரக்கச்செய்யும்விஷயத்தில் ஊட்டுகிறகன்றின்வாய் வேட்டைபிடிக்கிறவிஷயத்தில் நாயின்வாய் இவைகள்சுபாவத்திலேயே சுத்தியுள்ளன.

கருக—வேட்டைநாய்-புலி-இராக்கதர்-சண்டாளர்-மாம்ஸவிற்ப ஊ செய்கிறவேட்டைக்காரன்-திருடன்-இவர்களால்கொல்லப்பட்ட மிருகத்தின் மாம்ஸத்தைப் பரிசுத்தமென்று மநு சொல்லியிருக்கிறார்.

கரு௨—தொப்புளுக்குமேற்பட்ட மனிதனிந்திரியங்கள் பரிசுத்தமானது. அதற்குத்தாழ்ந்த விந்திரியங்களும் அதினின்றுமுண்டான மலங்களும் அசுத்தமானவைகள்.

கருரு—ஈ ஜலத்திவலை நிழல் பசு குதிரை சூரியகாந்தி தூளி பூமி காற்று நெருப்பு இவைகள் மேலேபடுகிறத்தினால் அசுத்தமுண்டாகமாட்டாது.

கருச—தேகத்திலுண்டான மேற்சொல்லப்போகிற பன்னிரண்டுமலங்களையும் ஜலம் மண்ணு இவைகளினால் விதிப்படி அந்தந் தநாற்றம் போகிறவளையில் சுத்திசெய்யவேண்டியது.

கருரு—சவர்த்தன்னீர்-ரேதசு-இரத்தம்,சுண்டு மூத்திரம் மலம் காதுகுரும்பி நகம் அழுக்கு கண்ணீர் பூளை வியர்வு ஆகதேகமலங்கள்பன்னிரண்டு.

கருசா—மலமூத்திரவிசர்ச்சநஞ்செய்தபின்பு சிசுநத்தில் நெல்லிக்காய்ப்பிரமாணமுள்ள ஒருமண்ணும் ஆசநத்தில் மூன்றுமண்ணும், இடதுகைக்கு பத்துமண்ணும் இரண்டுகைகளையுஞ்சேர்த்து ஏழுமண்ணும்போட்டு ஜலத்தினாற்சுத்திசெய்யவேண்டியது.

கருஎ—மேற்சொல்லிய சௌசம் கிரகஸ்தாளுக்கு. பிரமசாரிகளுக்கு இதை யிரட்டிப்பாகவும்,வாநப்பிரஸ்தாளுக்கு மூன்றுபங்காகவும்,சந்நியாசிகளுக்கு நான்குபங்காகவும்,அறியவேண்டியது.

கருஅ—ஜலபாதை மலபாதைக்குப்போய் சுத்திபண்ணிக்கொண்டபின்பும் வேதமோதும்போதும் அந்நம் புசிக்கும்போதும்

மூன்றுதரம் ஆசமநஞ்செய்து கண்முதலிய இந்திரியங்களைத் து டைக்கவேண்டியது.

கஙௌ—தேகபரிசுத்தத்தைக் கோருகிறவன் ஜலத்தை மூன்றுதரம் ஆசமந மந்திரத்துடன் சாப்பிட்டு இரண்டுதரம் வாயைத்துடை க்கவேண்டியது. ஸ்திரீ சூத்திரன் ஒருதரம்துடைக்கவேண்டியது.

கசய—விதிப்படி பிராமணனுக்குப் பணிவிடைசெய்கிறசூத்தி ரன் மாதத்திலொருதரம் க்ஷவரஞ்செய்துகொள்ள வேண்டியது. வைசியனுக்குச்சொல்லியபடி பிறப்பிறப்புத்தீட் டிருக்கவேண்டி யது. துவிஜாதிகளின் சேஷத்தைச் சாப்பிடவேண்டியது.

கசக—வாயிலிருந்து தேகத்தில்விழுந்த ஜலத்திவலை வாயிற்பட் டமீசை இரண்டுபல்வரிசையி லொட்டப்பட்டவை.இவைகளுக்கு எச்சலில்லையென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

கசஉ—ஒருவன் ஆசமநஞ்செய்த ஜலத்திவலை மற்றொருவன் மு ழங்காலிற்குக் கீழ்ப்பட்டகாலில் பட்டால் அது பரிசுத்தபூமியிலி ருக்குஞ் ஜலத்திற்குச்சரியாகையால் அதனால் அபரிசுத்தனாகமாட் டான்.

கசரு—ஒருபொருளைக் கையில்வைத் திருக்கும்போது தன்தே கத்தில் எச்சல்சம்பந்தமுண்டானால் அதைக்கீழேவையாமலே ஆச மநஞ்செய்தால் அந்தப்பொருளுடன் பரிசுத்தனாகிறான்.

கசச—சாப்பிடுகிறத்துக்குமுன் வாந்திசெய்தால் ஸ்நாநஞ்செ ய்து நெய் சாப்பிடவேண்டியது. சாப்பிட்டபின் வாந்திசெய்தா ல் ஆசமநஞ்செய்யவேண்டியது. மைதுநஞ்செய்தவன் ஸ்நாநஞ் செய்யவேண்டியது.

கசடு—தூங்கினபின்பும், இருமினபின்பும், சாப்பிட்டபின்பும் காறியுமிழ்ந்தபின்பும், ஒருகாரணத்தைப்பற்றிப் பொய்சொன்ன

பின்பும் தீர்த்தஞ் சாப்பிட்டபின்பும் வேதம் ஓதப்போகிறபோதும் தான் பரிசுத்தனாகவிருந்தாலும் அந்தக்காலத்தில் ஆசமநஞ்செய்யவேண்டியது.

கசுசு—இதுவரையில்சகலமான சவுசவிதியும் திரவியசுத்தியும் எல்லாவருணத்தாருக்குஞ் சொல்லப்பட்டன. இனி ஸ்திரீகள் தருமத்தைக்கேளுங்கள்.

## மாதரொழுக்கம்.

கசுஎ—பாலியமாகவிருந்தாலும், யௌவநமாக விருந்தாலும் வார்த்திபமாகவிருந்தாலும் ஸ்த்திரீகள் தன்றன்வீடுகளிலும் தன் மநம்போனபடி ஒருகாரியத்தையுஞ்செய்யக்கூடாது.

கசுஅ—பாலியத்தில் தகப்பன்ஆஞ்ஞையிலும், யௌவநத்தில் கணவன்ஆஞ்ஞையிலும், கணவனிறந்தபின்பு பிள்ளைகள்ஆஞ்ஞையிலும் இருக்கவேண்டியதேயல்லது ஸ்திரீகள் தன்சுவாதீநமாகவொருபோதுமிருக்கக்கூடாது.

கசுகூ—தகப்பன்,கணவன், பிள்ளைகள், இவர்களில்லாமல் தான் மாத்திரந் தனியாயிருக்கவேண்டுமென்று ஒருபோது நினைக்கக்கூடாது. அவர்களில்லாமல் சுதந்தரியாயிருந்தால் பிறந்தகுலம் புகுந்தகுலம், இரண்டையும் நிந்திக்கும்படி செய்துவிடுவாள்.

கரு0—எப்போதும் தன்வீட்டுக்காரியத்தில் சமர்த்தையாயும், சந்தோஷிமுள்ளவளாயும், வீட்டிலிருக்கிற வஸ்துக்களைப் பரிசுத்தப்படுத்துகிறவளாயும், அதிகச்செலவில் மநமில்லாதவளாயும், இருக்கவேண்டியது.

கருக—தகப்பன் அல்லதுகூடப்பிறந்தவன் இவர்கள் இவளையாருக்கு விவாகஞ்செய்து கொடுக்கிறார்களோ அவன் ஜீவிக்கிறவனாயில் அவனுக்குப்பணிவிடைசெய்யவேண்டியது. அவனிறந்தபின்

ஹும் விபசாரஞ்செய்யாமல் அவனுக்கு சிரார்த்தமுதலியவற்றைச் செய்துகொண்டிருக்கவேண்டியது.

கடுஉ—ஸ்திரீகளுக்கு விவாககாலத்தில் சாந்திஹோமம் பிராஜாபத்தியஹோமம் இவைகளெல்லாம் இஷ்டசித்தியின் பொருட்டுச் செய்யப்படுகின்றன. நிச்சிதார்த்தத்தில் செய்யும் வாக்குத்தாநமே கணவன் யஜமாநனென்பதைக்காண்பிக்கின்றது.

கடுரு—ருதுகாலத்திலும் மற்றகாலத்திலும் விதிப்படிவிவாகஞ் செய்த பர்த்தாவானவன் மாதர்களுக்கு இம்மையில்சுகத்தைக்கொடுக்கிறான். விதிப்படி அவனையுபசரித்தால் மறுமையிலுஞ்சுகமுண்டாகிறது.

கடுச—கணவன்-துராசாரமுள்ளவனாகவிருந்தாலும் அந்நியஸ்திரீலோலனாயிருந்தாலும் நற்குணமில்லாதவனாயிருந்தாலும் பதிவிரதையான ஸ்திரீயானவள் அவனை தெய்வத்தைப்போற் பூசிக்கவேண்டியது.

கடுடு—ஸ்திரீகளுக்கு பஞ்சமஹாவெக்கியம், உபவாசம், விரதம், இவைமுதலானதருமங்கள் தனியாகக்கிடையாது. கணவனுக்குச் சிசுருஷைசெய்வதினாலேயே சுவர்க்கத்திற் பெருமை பெறுகிறார்கள்.

கடுசு—பரலோகத்தில்விருப்பமுள்ள ஸ்திரீயானவள் தன்கணவனிருந்தாலும் இறந்தாலும் அவனுக்குவிரோதமானகாரியத்தைச்செய்யக்கூடாது.

கடுஎ—கணவனிறந்தபின்பு பரிசுத்தமானகிழங்கு பழம் புஷ்பம் இப்பேர்க்கொத்த சொற்ப ஆகாரத்தினால் காலத்தைப்போக்கவேண்டியது. காமவிச்சையால் மற்றொருபுருஷன்பேரையுஞ்சொல்லக்கூடாது.

கடுஅ—கணவனிறந்தபின்பு தானிருக்கிறவளாயில் பொறுமையுள்ளவளாயும் பரிசுத்ததையாயும் பிரம்மத்தியாத முள்ளவளாயும் மதுமாம்ஸபக்ஷணஞ் செய்யாதவளாயும் மேலானபதிவிரதையின் தருமத்தைவிரும் புகிறவளாயும் இருக்கவேண்டியது.

கடுகூ—அநேகங்கோடிமாதர்கள் பாலியத்திலும் பிரமசரியத்திலும் இறந்து புத்திரசந்ததியில்லாமலே சுவர்க்கமடைந் திருக்கிறார்கள்.ஆதலாலிவளுக்குப் பிள்ளையில்லையென்று வருத்தம் வேண்டியதில்லை.

கசுO—கணவனிறந்தபின் பிரமசரிய்விரதமுள்ள பதிவிரதாஸ்திரீயானவள் பிள்ளையில்லாமலிருந்தபோதிலும் வாலகில்லியர் ஸநகாதிபிரமசாரிகளைப்போல மோக்ஷமடைவாள்.

கசுக—எந்தஸ்திரியானவள் சொற்கலோக மடைகிறதற்காக பிள்ளைவேண்டுமென்று கணவனிறந்தபின் மற்றொருவனோடு புணர்ச்சிசெய்கிறாளோ அவள் இவ்வுலகத்தில்நிந்திக்கப்படுவாள்.அப்படி பிறந்த பிள்ளையால் புண்ணியலோகத்தையுஞ் சேரமாட்டாள்.

கசுஉ—ஸ்திரீக்கு தன்கணவனைவிட மற்றொருவனு லுண்டாக்கப்பட்ட பிள்ளையும் சாஸ்திரத்திலொப்புக்கொள்ளப்பட்ட பிள்ளையன்று. உண்டுபண்ணுகிறவனுக்கும் உபயோகமில்லை. பதிவிரதாஸ்திரீகளுக்கு இரண்டாவதுவிவாகமும் ஒருசாஸ்திரத்திலுஞ்சொல்லப்படவில்லை.

கசுங—தாழ்ந்தவனான தன்புருஷனைநீக்கி உயர்ந்தவனான மற்றொருவனை எந்தஸ்திரீயடைகிறாளோ அவள் நிந்திக்கப்படுவாள்.மற்றொருவனோடு சேர்ந்தவளென்றுஞ்சொல்லப்படுகிறாள். ஒருவராலுங்கொண்டாடப்படமாட்டாள்.

கசுச—ஸ்திரீவிபசாரஞ் செய்கிறதினால் உலகத்தில் நிந்திக்கப்

படுகிறதுமல்லாமல் இறந்தபின் குள்ளநரியாகவும்பிறந்து வெண் குட்டமுதலிய கர்மவியாதியையும் அநுபவிக்கிறாள்.

கசுடு—எந்தஸ்திரீமநம்,வாக்கு,தேகம்,இவைகளையடக்கிக்கொண்டு விபசாரஞ்செய்யாம லிருக்கிறளோ அவள் பதிலோகத்தையுமடைவாள். பெரியோர்களால் பதிவிரதையென்றுஞ் சொல்லப்படுவாள்.

கசுசு—இப்போதுசொல்லிவந்தவிதிப்படி மநம்,வாக்கு,காயம் இவைகளால் பரிசுத்தையானஸ்திரீயானவள் இம்மையிற்புகழையும் மறுமையிற்பதிலோகத்தையும் அடைகிறாள்.

கசுஎ—இவ்விதநடையுள்ளவளாயும் தன்ஜாதியாயுமிருக்கிறபத்திநிகள் முன்னமிறந்துவிட்டால் அவர்களை துவிஜாதிகள் விதிப்படிவைதீகாக்கிநியினுலே தகநஞ்செய்து மற்றகருமங்களையுஞ்செய்யவேண்டியது.

கசுஅ—இந்தப்படி தனக்குமுன்னிறந்தஸ்திரீக்கு வைதீகாக்கிநியால்தகநஞ்செய்தால் மறுபடிமற்றொருபெண்ணைக் கலியாணஞ் செய்துகொண்டு அக்கிநிஹோத்திராதி காரியங்களை நடத்தவேண்டியது.

கசுக—மனைவியிறந்துபோனல் விதிப்படி இரண்டாவது கலியாணஞ்செய்துகொண்டு திநந்தோறும் பஞ்சமஹாஎக்கியங்களை நிறுத்தாமல் தன்வயதின்இரண்டாம்பாகத்தைக் கிரகஸ்தாசிரமத்தில் இருந்துபோக்கடிக்கவேண்டியது.

ஐந்தாவதுஅத்தியாயம்-முற்றிற்று.

ஆக-அத்தியாயம்-ரு க்கு-சுலோகம்-க0அரு.

ஆருவது

# அத்தியாயம்.

## வாநப்பிரஸ்தாசிரமதருமம்.

க—விரதாநுஷ்டாநமுள்ள துவிஜன் இந்தப்படி கிரகஸ்தாசிரமத்திலிருந்து பரிசுத்தனுய் இந்திரியங்களையடக்கிக்கொண்டு வாநப்பிரஸ்தாசிரமத்தை அடைந்து தபோவநத்தில் வசிக்கவேண்டியது.

உ—கிரகஸ்தன் தன்றேகத்தில் நரையையும் தன்பிள்ளைக்குப்பிள்ளையையும் எப்போது பார்ப்பானே அப்படிக்கொத்த வயதுவந்தபின்பு வாநப்பிரஸ்தாசிரமத்லதயடையவேண்டியது.

ரு—ஊரிலுண்டான சகலஆகாரங்கள் போகங்கள் வேலைக்காரர்கள் இவர்களை நீக்கிவிட்டு மனைவியை பிள்ளையினிடத் தொப்புவித்தாவது அல்லது அவளுக்கு கூடவர இஷ்டமிருந்தா லிட்டுக்கொண்டாவது வநத்திற்குப்போகவேண்டியது.

ச—அக்கிநிஹோத்திரத்தையும் சுருக்கு-சுருவமுதலிய ஹோமபாத்திரங்களையும் எடுத்துக்கொண்டு ஊரிலிருந்து வநத்திற் பிரவேசித்து ஜிதேந்திரியனுயிருக்கவேண்டியது.

ரு—சாலியந்நம் பலபல காய் கிழங்கு பழம் இவைகளால் கிரகஸ்தாசிரமத்திற்சொல்லிய பஞ்சமஹாவெக்கியங்களை விதிப்படி செய்யவேண்டியது.

சா—மான்றேல் முதலியவற்றையாவது மரவுரியையாவது தரிக்கவேண்டியது.காலையிலும் மாலையிலும் ஸ்நாநஞ்செய்யவேண்டியது. சடை மீசை தாடி நகம் இவைகளை வளர்க்கவேண்டியது.

எ—இவன் எதைச்சாப்பிடுகிறுனே அதனுலேயே பலி பிக்ஷை இவைகளைத் தன்சக்திக்குத்தக்கபடி கொடுக்கவேண்டியது. ஜலம்

கிழங்கு பழம் இவைகளால் தன்னாசிரமத்துக்குவந்தவர்களைப்பூசிக்கவேண்டியது.

அ—எப்போதும் வேதமோதுவதில் சாக்கிரதையுள்ளவனையும் குளிர்-கானல்-இப்படிக்கொத்த சுகதுக்கங்களைப் பொறுக்கிறவனையும், சகலபிராணிகளுக்கும் இஷ்டனையும் எப்போதுங்கொடுப்பவனையுந் தான்வாங்காதவனையும் இருக்கவேண்டியது.

கூ—அக்கிநிஹோத்திரம், தரிசம், பௌர்நமாசம், இவைகளை மனைவியின்றி வந்திருந்தபோதிலும் விடாமற் றன்சக்திக்குத்தக்கபடி செய்யவேண்டியது.

க0—நக்ஷத்திரயாகம்-ஆக்கிரயணம்-சாதுர்மாசியம்- உத்தராயணம் தக்ஷிணாயநம்-இவைகளை-உதிர்நெல்லுபொறுக்கி சம் பாதித்து அதனாற்செய்யவேண்டியது.

கக—வசந்தருது-சரத்ருது-இந்தக்காலங்களில்- காட்டிலுண்டானதாயும் பரிசுத்தமாயும் இருக்கிறசம்பாநெல்லு -கார்நெல்லு-இவைகளை-தானாகவேபொறுக்கிவந்து அதன் அரிசியினால் *புரோடாசம் †சரு இவைகளைச்செய்யவேண்டியது.

கஉ—காட்டிலுண்டான பரிசுத்தமான அரிசியினாற்செய்யப்பட்ட புரோடாசம்-சரு-இவைகளைத்தேவர்களுக்கு ஹோமஞ்செய்து மிகுதியைத்தான் புசிக்கவேண்டியது தனக்கு உப்பு தானாகவே உவர்மண்ணாலேகாச்சிக்கொள்ளவேண்டியது.

கங—பூமி-ஜலம் இவைகளிலுண்டான புஷ்பம்-கிழங்கு-காய்

---

*புரோடாசம்-என்பது-ஹோமத்திற்காகமாவினால் உப்பில்லாமல் தட்டிசுடப்பட்ட அடை.

† சரு-எ-து-வறுத்தஅரிசியினால் உப்பின்றிசமைத்தவந்நம்

பழம்- மணிப்புங்குமுதலான நல்லவிருக்ஷத்தின் பழத்தினாலுண்டான தேன்இலவமுதலியவற்றைப்புசிக்கலாம்.

கச—ஈயினாற்கட்டப்பட்ட தேன்-மாம்ஸம்-பூமியிலும்-மரத்திலுமுண்டான காளான்பூஸ்திரணம் *குருகம்-அழிஞ்சிற்பழம் இவைகளை நீக்கவேண்டியது.

கரு—வருஷந்தோறும் ஐப்பசிமாதத்தில் முன் சம்பாதிக்கப்பட்ட உதிர்நெல்லு கிழிந்ததுணி முதல்நாள்சம்பாதித்த காய்-கிழங்கு-பழம்-இவைகளை முழுமையும் தள்ளிப்போடவேண்டியது.

கசு—காட்டில்-உழுதபூமியில் விளைந்தநெல்லானது பயிரிட்டவனால் நிராகரிக்கப்பட் டிருந்தாலும் அதைத்தான் கிரகிக்கக்கூடாது ஊரில் உழாதபூமியிற்பயிரானாலும் காய்-கிழங்கு-பழம்-இவைகளைத்தனக்குத்துன்பப் நேரிட்டிருந்தபோதிலும்புசிக்கக்கூடாது

கஎ—காய் கிழங்குமுதலானவைகளை நெருப்பிற்பாகஞ்செய்தாவது தானேபழுத்த பின்பாவது கல்லினால் நெருக்கியாவது பற்களாற்கடித்தாவது புசிக்கலாம்.

கஅ—தனக்குபயோகமான ஆகாரத்தை தினந்தோறுமாவது ஒருமாதத்திற்காவது ஆறுமாதத்திற்காவது ஒவருஷத்திற்காவது சம்பாதித்துக்கொள்ளலாம்.

கக—மேற்சொன்ன ஆகாரங்களைத் தன்சக்திக்குத்தக்கபடி சம்பாதித்து இரவிலாவது பகலில் நாலாவது பாகத்திலாவது ஒருநாளுபவாசமிருந்து மறுநாள்சாயுங்காலமாவது மூன்றுநாள்உபவாசமிருந்து நாலாநாள்சாயுங்காலமாவது தன்சக்திக்குத் தக்கபடி புசிக்கலாம்.

---

* பூஸ்திரணமென்பது-மாளவதேசத்திலும்*குருகம்- என்பது-பால்ஹீகதேசத்திலுமுண்டாகிற-ஓர்பதார்த்தவிசேஷம்.

உ0—இல்லாவிட்டால் கிருஷ்ணபக்ஷத்திலுஞ் சுக்கிலபக்ஷத்தி லும் சாந்தராயணவிரதத்தினுலாவது காலத்தைப்போக்கவேண்டி யது அல்லது. பதினைந்து நாளுக்கொருவிசை சுடுகையானகஞ்சி யை ஒருவேளையாயினும் இரண்டு வேளையாயினும் புசிக்கலாம். எ ப்படியாவது விஷயவிச்சையை யடக்கவேண்டியது. சாந்திராய ணவிரதத்தைப் பதினோராவதுஅத்தியாயத்திற்காண்க.

உக—அல்லது வாநப்பிரஸ்த்தாசிரம நியமப்படி மரத்திற் ரு னுகப்பழுத்த பழங்களினுலும் தானுகவுதிர்ந்த புஷ்பங்களினுலு ம் தானுகவுலர்ந்த கொடியுள்ளகிழங்குகளினுலும் விரதத்தைக்கெ டுக்காமல் திநந்தோறும் ஜீவிக்கலாம்.

உஉ—இளைப்பாக இருந்தால் பரிசுத்தமானபூமியில் படுத்துக் கொண்டு புரளலாம் ஆசநத்திலுட்கார்ந்துகொண்டானுலும் இரு க்கலாம் அல்லது-உலாத்தினுலுமுலாத்தலாம் நாடோறும் திரிகா லத்திலும் ஸ்நாநஞ்செய்யவேண்டியது.

உரு—தன்தபசு கிரமமாகவிருத்தியாகும்பொருட்டு கிரீஷ்மகா லத்தில் பஞ்சாக்கிநிமத்தியி லிருந்துகொண்டும் மழைகாலத்தில் மழையிலிருந்துகொண்டும் பனிக்காலத்தில் ஈரத்துணியைப்போ ர்த்துக்கொண்டும் தவஞ்செய்யவேண்டியது.

உச—திநந்தோறும் திரிகாலத்திலும் ஸ்நாநஞ்செய்து தேவ ருஷி பிதுர்க்களுக்கு தர்ப்பணஞ் செய்யவேண்டியது பக்ஷோப வாசம்-மாதோபவாசம் இவைகளால் தன்றேகத்தை யொடுக்கவே ண்டியது.

உடு—இந்தப்படி ஆறுமாதமானபின்பு வேதத்திற்சொல்லிய மூன்றக்கினிகளையும் ஆத்மசமாரோபணஞ்செய்து வீடில்லாதவ னுயும் அக்கினிஹோத்திர மில்லாதவனுயும் பழமுதலானவற்றை

ட்புசித்துக்கொண்டு மரத்தின்மேலே மௌநமாய் வசித்தாலும் வசிக்கலாம்.

உசு—நல்லபழஞ்சாப்பிடவேண்டுமென்றும் குளிர் வெய்யலில்லாமலிருக்கவேண்டுமென்றும் தோற்றுகிறசுகப்பிரயோசநத்தில் விருப்பமில்லாதவனும், புணர்ச்சியில்லாதவனும், தரையிற்படுக்கிறவனும், நேரிடுகிறமரத்தடியில் மமதையின்றி வாசஞ்செய்யவேண்டியது.

உஎ—காய் கிழங்குமுதலியவை அகப்படாவிட்டால் வாநப்பிரஸ்தபிராமணனிடத்திலும் அவர்களில்லாவிட்டால் வநவாசஞ்செய்கிற கிரகஸ்த்தாளிடத்திலும் தன்பிராணதாரத்துக்கு உபயோகமானமட்டில் பிக்ஷையெடுத்துக்கொள்ளவேண்டியது.

உஅ—அவர்களுமில்லாதபோது ஊரிற்போய் இரண்டுகையிலாவது மரப்பாத்திரம் தொன்னையிலாவது எட்டுக்கவளவந்நம்வாங்கிப்புசிக்கவேண்டியது.

உகூ—இப்போது சொல்லிவந்தவிரதங்களையும் இன்னம் அநேகவிரதங்களையும் அநுஷ்டித்துக்கொண்டு தான் நற்கதியை யடையும்பொருட்டு உபநிஷத்து வேதாந்தம் இவைகளால் பிரம்மத்தை த்தியாநித்துக்கொண் டிருக்கவேண்டியது.

ௐ—ருஷி-சந்நியாசி-கிரகஸ்தன்-பிரமச்சாரி-இவர்களால் தன்றன்வித்தியா தபோவிர்த்திக்காகவும், சரீரசுத்திக்காகவும், மேற்சொன்ன உபநிஷத்துமுதலிய வேதாந்தங்கள் ஓதப்படுகின்றன.

ௐக—அதிகவயதானபின்பு ஈசாநியதிக்கில் பரிசுத்தனாய் தன் தேகம் அழிகிறவரையில் ஜலத்தையும் காற்றையும் புசித்துக்கொண்டு மஹாப்பிரஸ்தாநமாயும் போகலாம்.

ௐஉ—இப்படிசொல்லிவந்த மஹாமுநிவிரதத்தில் ஏதயா

வதொன்றை அநுஷ்டித்து தன்சரீரத்தைவிடுகிறவன். பயம்-துக்கம் இவைகளில்லாதவனாய் பிரம்மலோகத்தில் மேலானசுகத்தை யடைவான்.

௩௩—அல்லது இந்தப்படி காட்டில், தன்னாயுளின் மூன்றும்பாகத்தைப் போக்கடித்துவிட்டு நாலாவதுபாகத்தில் ஆசையொழிந்தபின் சம்சாரசம்பந்தங்களை முழுதும் துறந்துவிட்டுச் சந்நியாச ஆசிரமத்தை அடையவேண்டியது.

## ஸந்நியாசதருமம்.

௩௪—பிரமசரிய ஆசிரமத்திலிருந்து கிரகஸ்தாசிரமத்தையும் அதிலிருந்து வாநப்பிரஸ்தாசிரமத்தையும், அடைந்து அந்தந்த ஆசிரமத்திற்செய்யவேண்டிய ஹோமம்-பலி - பிக்ஷைபோடுவது இவைகளைச்செய்துசெய்து அதனால் இளைப்படைந்தவனாய் அவைகளைநீக்கிச் சந்நியாசஞ் செய்துகொண்டால் மேலானசுகத்தையுடைவான்.

௩௫—ருஷிகள் பிதுர்க்கள் தேவர்கள் இவர்களுக்குக் கடன்காரனாகாமல் சந்நியாசத்தில் மநம்வைக்கவேண்டியது. இல்லாவிட்டால் நரகத்தையடைவான்.

௩௬—தேவர் ருஷி பிதுர்க்களிடத்தில் மூன்றுகடனுடன் மனிதன் பிறக்கிறான். அவைகளில் எக்கியத்தால் தேவர்களுக்கும் பிள்ளை பெறுவதால் பிதுர்க்களுக்கும், வேதமோதுவதால் ருஷிகளுக்குங் கடனைத்தீர்த்து ஜோதிஷ்டோமமுதலிய யாகாதிகளையும் சக்திக்குத்தக்கபடிசெய்து பின்பு மோக்ஷத்திற்குபயோகமான சந்நியாசத்தில் மநம்வைக்கவேண்டியது.

௩௭—வேதமோதாமலும் பிள்ளைபெறாமலும் யாகஞ்செய்யாமலும் மோக்ஷத்திற்கு முயற்சிசெய்கிறவன் நரகத்தையடைவான்.

ருஅ—எஜுர்வேதத்தில் சொல்லிய எல்லாப்பொருள்களையும் தக்ஷிணையாகவுடைய பிராஜாபத்திய இஷ்டியைச்செய்து அக்கினியை ஆத்மசமாரோபணஞ்செய்துகொண்டு கிரகஸ்தாசிரமத்திலிருந்தே சந்நியாசஞ்செய்துகொள்ளலாம்.

ருகூ—எவன் சகலபிராணிகளையும் பயப்படுத்தாமல் கிரகஸ்தாசிரமத்தினின்றும் ஸந்நியாசஞ்செய்துகொள்ளுகிறானோ அவன் தேஜோரூபமானலோகங்களை யடைகிறானென்று தெரிந்தவர்கள்சொல்லுகிறார்கள்.

சய—எந்த துவிஜனிடத்திலிருந்து ஒருபிராணிகளுக்கும் சிறிதும் பயமுண்டாகவில்லையோ அவனுக்கு இறந்தபின் ஒருவரிடத்திலிருந்தும் பயமில்லை.

சக—ஸந்நியாச ஆசிரமஞ்செய்துகொண்டவன் பரிசுத்தமான கமண்டலம் தண்டம் பவித்திரம்-இவைமுதலானவற்றைக் கிரகித்துக்கொண்டு ஒருவரால் கொடுக்கப்பட்டாலும், விஷயபோகங்களில் விருப்பமில்லாதவனாய் மௌநவிரதத்தோ டிருக்கவேண்டியது.

சஉ—ஒருவர்சகாயமின்றி யேகாகியாய் பரமாத்துமாவைச்சிந்திக்கிறவனுக்கு மோக்ஷசித்தியுண்டாகிறத்தை நன்றாகஅறிந்து தானுமப்படியே தனியாய்ச் சஞ்சரிக்கவேண்டியது. அப்படியிருந்தால் ஒருவருடைய சேர்க்கை பிரிவு இவைகளால் இவனுக்கு சுகதுக்கநேரிடாது.

சங—அக்கினியில் பாகஞ்செய்யாதவனாயும், வீடில்லாதவனாயுமிருந்துகொண்டு நாடோறும் பிக்ஷைக்காகக்கிராமத்திற் பிரவேசிக்கவேண்டியது.ஒருபொருளிலும் விருப்பமில்லாதவனாயும், ரோகநிவர்த்திக்காக அவிஷிதஞ்சாப்பிடாதவனாயும், ஸ்திரபுத்தியாயும், பிர

ம்மசிந்தனை யுடையவனாயும் இரவும்பகலுங் காட்டில்வசிக்கவேண்டியது.

சச—மண்பாத்திரம் வைத்துக்கொள்ளுதல், மரத்தினடியில்வசித்தல் கந்தைத்துணியைக் கட்டிக்கொள்ளுதல், ஏகாகியாயிருத்தல் சத்துரு மித்திராளின்றி யெல்லோரையுஞ் சமமாய்ப்பார்த்தல் இவையெல்லாம் மோக்ஷத்தைவிரும்பினவனுக்கடையாளம்.

சரு—தான் ஜீவித்திருப்பதையும்,இறப்பதையும் சந்தோஷிக்கக்கூடாது. வேலைக்காரனானவன் தனக்கு யஜமானன் சம்பளங்கொடுக்கிறநாளை எதிர்பார்த்திருக்கிறாப்போல தன் தேகநாசகாலத்தை எதிர்பார்த்திருக்கவேண்டியது.

சசு—நடக்கும்போது பூமியைத்தன்கண்ணினாற் பார்த்து காலெடுத்து வைக்கவேண்டியது. தண்ணீரைத் துணியினால் வடிகட்டிச் சாப்பிடவேண்டியது. உண்மையாகப்பேசவேண்டியது. அந்தராத்மாவுக்குச் சந்தோஷமானகாரியத்தைச் செய்யவேண்டியது

சஎ—ஒருவன் அக்கிரமமாகத்தன்னைத்திட்டினாலும், அதைப் பொறுக்கவேண்டியது. ஒருவனையும் தான் அவமானஞ் செய்யக்கூடாது. அநித்தியமாயும் ரோகத்துக் கிருப்பிடமாயுமிருக்கிற இந்தத்தேகத்தைக்குறித்து ஒருவருடனும் விரோதிக்கக்கூடாது.

சஅ—தன்னையொருவன் கோபித்தாலும், தான் கோபிக்கலாகாது. ஒருவன் திட்டினாலும் தானல்லவார்த்தையாகப் பேசவேண்டியது.பஞ்சேந்திரியம்-மநது-புத்தி-இந்தவேழினாலும் அறியப்பட்ட உலகவிவசாரத்தையும், அழிவுள்ளதான தர்மார்த்தகாமவிஷயமானவார்த்தையையும் பேசக்கூடாது.

சகூ—பிரமக்கியாநியாயும் தண்டகாஷாயத்திலும் அதிகவிருப்பமில்லாதவனாயும், யோகாசநமுள்ளவனாயும், விஷயசம்பத்துமில்

லாதவனும், தன்தேகத்தைமாத்திரம் சகாயமாக விற்றுக்கொண்டு மோக்ஷத்தை விரும்புகிறவனும், உலகத்திற் சஞ்சரிக்கவேண்டியது.

ருo—பூகம்பத்தைச்சொல்லுகிற சாஸ்திரம்-கண்-துடித்தல் முதலானவற்றைச்சொல்லும் நிமித்தசாஸ்திரம் வயித்தியம்-சோதிடம்-தர்க்கம்-இவைகளைச்சொல்லி பிக்ஷை சம்பாதிக்கக்கூடாது.

ருக—ஒருவீட்டில் பிரமசாரி- வாநப்பிரஸ்தன் இவர்கள்பிக்ஷைக்குவந்திருக்கும்போதும், பக்ஷி-நாய் - இவைகள் - சோறுதின்றுகொண்டிருக்கும்போதும், அந்தவீட்டில் தான் பிக்ஷைக்குப்போகக்கூடாது.

ருஉ—தலைமயிர்-நகம்-மீசை இவைகளை க்ஷவரஞ்செய்துகொண்டு கமண்டலம்,திரிதண்டம்,தருப்பை,காஷாயம், இவைகளைத்தரித்துக்கொண்டு யாரையுந் துன்பப்படுத்தாமல் ஜிதேந்திரியனாய் ஓரிடத்திலும் நிலைபெற்றிராமல் தேசசஞ்சாரஞ்செய்யவேண்டியது.

ருஙு—சுவர்நம் -வெள்ளி-தாம்பரம்- இவைமுதலான லோகபாத்திரங்களை நீக்கி-மண்-மரம்-இந்தப்பாத்திரங்களை ஓட்டையில்லாததாய் எடுத்துக்கொள்ளவேண்டியது. அந்தப்பாத்திரங்களை யாகபாத்திரங்களைப்போல மண்ணாலுந் தண்ணீராலுஞ் சுத்திசெய்யவேண்டியது.

ருச—தேங்காய்ப்பாத்திரம்-சுரைக்காய்-மரப்பாத்திரம்- தொன்னை-மண்பாத்திரம்-மூங்கிற்படி- இவைகளை- சந்நியாசியின் பாத்திரமென்று சுவாயம்புவ மநுசொல்லியிருக்கிறார்.

ருரு—ஒருவேளைபிக்ஷையெடுக்கவேண்டியது. அதையும் அதிகமாகவெடுக்கக்கூடாது. சந்நியாசி-அதிகபிக்ஷையெடுத்துப்புசித்தால் ஸ்திரீமுதலியவிஷயத்திலுஞ் சம்பந்தப்படுவான்.

கூசு—புகையில்லாமலும், உலக்கைச்சத்தமில்லாமலும், அடுப் பெரியாமலும், அதிதிகள் சாப்பிடப்பட்டுமிருக்கிற கிரகஸ்தன் வீட்டில் ஸந்நியாசி பிக்ஷைக்குப்போகவேண்டியது.

கூஎ—பிக்ஷையகப்படாவிட்டால் விசநமுள்ளவனுயும், அகப் பட்டால் சந்தோஷமுள்ளவனுயு மிராமல் பிராணனைமாத்திரங் காப்பாற்றுகிறவனுய் பரமாணுவளவிலும்,ஆசையில்லாதவனுயிரு க்கவேண்டியது.

கூஅ—தன்னையொருவன் பூசித்துப்பிக்ஷைகொடுத்தால்அதைத் தான் தடுக்கவேண்டியது. அந்தப்பூசையில் ஸந்நியாசி விருப்பங் கொண்டால் மோட்சமடையுஞ் சமயமாயிருந்தாலும் ஜந்மாந்த ரத்தையடைவான்.

கூகூ—கொஞ்சமாகப்புசிப்பதினுலும், ஏகாந்தத்தில் வசித்தலா லும், விஷயங்களாலிழுக்கப்படுகிற இந்திரியங்களை நல்லவழியிற்றி ருப்பவேண்டியது.

சு0—இந்திரிய நிக்கிரகத்தாலும் இராகத்துவேஷமில்லாமையா லும் ஜெந்து ஹிம்சைசெய்யாமையாலும் மோக்ஷமடைகிறதற் கு யோக்கியனுவான்.

சுக—இந்திரியநிக்கிரகமில்லாத மனிதர்களுக்கு பாபகர்மத்தினு ல் வரும் பசுமுதலிய பிறப்பையும் நரகத்தில் விழுவதையும் எமலோகத்திலுண்டான யாதனையையுஞ் சொல்லுகிற சாஸ்த்திரத்தைப் ப்பார்க்கவேண்டியது.

சுஉ—பின்னும் இஷ்டர்களோடு பிரிவையும் சத்துருக்களோடு பழகுதலையும் கிழத்தனத்தாலும் வியாதியினுலும் வருந்துன்ப த்தையும்.

சுரு—இந்தத்தேகத்தை விடும்போதுண்டான கபம் முதலான மரணவஸ்தையையும் மறுபடி கர்ப்பவாசத்தையும் இவனுத்மா

நாய்முதலிய அநேகம்பாபயோநிகளில் ஜநிப்பதையும் யோசிக்க வேண்டியது.

௬௪—பின்னும் அதர்மஞ்செய்வதினால் பிராணிகளுக்குவருந் துன்பத்தையும் பிரமஞாநத்தினாலுண்டான அழிவற்றமோக்ஷசு கத்தையும்.

௬௫—பரமாத்மா சர்வாந்தரியாமியாய் உயர்ந்தவர்களிடத்தி லும் தாழ்ந்தவர்களிடத்திலும் சூக்ஷ்மவுருவமாகப் பிரவேசித்து அவரவர்களுக்குச் சுகதுக்கங்களைக்கொடுத்துக்கொண்டிருக்கிறதை யும் ஞாநதிருஷ்டியினால் யோசிக்கவேண்டியது.

௬௬—ஒருவன் ஒருஆசிரமத்திலிருந்து அந்த ஆசிரமத்துக்குத் தக்க தண்டகமண்டலமுதலிய அடையாளங்களில்லாம லிருந்தா லும் எல்லாப்பிராணிகளிடத்திலும் சமபுத்தியுடையவனாய் தரும ஞ்செய்ய வேண்டியதேயன்றி, காஷாயந்தரித்தல்முதலிய வேட மாத்திரந் தருமத்துக்குக் காரணமாகமாட்டாது.

௬௭—அதெப்படியென்றால் தேத்தாங்கொட்டை எப்படியும் தண்ணீரைத் தெளிவிக்கிறதுதான் ஆனாலும் அதைத்தண்ணீரிற்றே ய்க்காமல் பெயரைச்சொன்னதினால் தண்ணீர்த்தெளியுமா.

௬௮—இரவிலேனும்-பகலிலேனும்-மற்றவேளையிலேனும் தன் பிராணன்போகிறசமயமாயிருந்தாலும் பூமியை நன்றாகப்பார்த் து ஒருஜெந்துவுந் துன்பப்படாம லிருக்கும்படி நடக்கவேண்டி யது.

௬௯—இரவிலும்-பகலிலும்-தனக்குத்தெரியாமையால் யாதா வது ஒருஜெந்து இறந்துபோகிறத்தினாலுண்டான பாவம் போகி றதற்காக ஸ்நாநஞ்செய்தவுடனே ஸந்நியாசி ஆறுபிராணாயாமஞ் செய்யவேண்டியது.

எ0—பிராமணன்,வியாக்கிருதிகாயத்திரி,பிரணவம்,இவைகளோடுகூடிய பிராணுயாமத்தை மூன்றுதரம் செய்தாலும் அதுவே அவனுக்கு உயர்ந்த தபசுக்குச்சரி யென்றறியவேண்டியது.

எக—சுவர்நம் முதலானவைவயின் அழுக்கு நெருப்பிற்காச்சினுலெப்படிபோய்விடுமோ அப்படியேதேகத்தைச் சார்ந்த இந்திரியதோஷிங்களெல்லாம் பிராணுயாமத்தால் போய்விடும்.

எஉ—பிராணுயாமத்தினுல் இந்திரியதோஷிங்களேயும்,பரமாத்துமாவிடத்தில் மநம்வைப்பதினுல் பிரார்த்தகர்மத்தையும்,இந்திரியநிக்கிரகத்தால் விஷயசம்பந்தங்களேயும், பிரமத்தியாநத்தினுல் காமக்குரோதங்களேயும்,போக்கடிக்கவேண்டியது.

எங—சாஸ்திரம்படியாதவர்களால் காணக்கூடாததான ஜீவாத்மாவினுடைய தேவமநுஷியபசுவாதி யோநிப்பிரவேசத்தைத் தான் தியாநத்தினுலறிந்து பிரம்மநிஷ்டனுயிருக்கவேண்டியது.

எச—பிரம்மசாக்ஷாத்காரஞ் செய்தவனுக்கு கர்மபந்தம் வரமாட்டாது. அதாவது ஜநந மரண ரூபமான ஸம்ஸாரசக்கரத்தில் துன்பப்படமாட்டானென்று கருத்து. பிரம்மத்தியாநமில்லாவிட்டால் மறுபடி ஜநநமரணத்தையடைகிறுன்.

எரு—ஹிம்ஸைசெய்யாமையாலும்,இந்திரியங்களுக்கு விஷயப்பற்றில்லாமையாலும், நித்தியகர்மாநுஷ்டாநஞ் செய்வதாலும் சாந்திராயணுதி தவஞ்செய்வதினுலும்,பெரியோர்களிவ்வுலகத்தில் மோக்ஷத்தைச்சாதிக்கிறுர்கள்.

எசு—தூண்போன்ற எலும்பையுடைத்தாயும், கயறுபோன்ற நரம்பையுடைத்தாயும்,மாம்ஸம்-இரத்தம்-இவைகளாகிற பூச்சையுடைத்தாயும்,தோலாகிறபோர்வையையுடைத்தாயும், மலமூத்திரங்களினுல் பூரணமாயும்,துர்க்கந்தமுள்ளதாயும்,

எஎ—கிழத்தனம்-துக்கம்-நோய்-இவைகளால் வாசஞ்செய்யப் பட்டும், பசி-தாகம்-குளிர்-கானல்-இவைகளால் பயத்தை புண்டு பண்ணுகிறதாயும், பெருப்பாலும் இரஜோகுணமுள்ளதாயும், பஞ்ச பூதங்களுக் கிருப்பிடமாயும், ஸ்திரமில்லாததாயுமிருக்கிற இந்தச்ச ரீரமாகிறவீட்டை இவனாத்மா மறுபடி யடையாமலிருக்குப்படி செய்யவேண்டியது.

எஅ—ஆற்றங்கரையிலிருக்கிற விருக்ஷத்திற்கு ஆற்றினீரினால் நாசம்வருவதுபோல் கர்மயோகஞ்செய்கிறவனுக்கு பிராரப்த்தகர்ம்மம் ஒழிந்தவுடனே மோக்ஷமுண்டாகிறது. ஞாநயோகஞ்செய்கிறவனுக்கு பக்ஷியானது தான் வாசஞ்செய்கிறமரத்தைத் தானே விடுவதுபோல் தனக்கிஷ்டமானபோது பீஷ்மாதிகளைப்போல் தேகத்தியாகமுண்டாகிறது. இவருக்கும் சம்சாரமாகிற முதலையினால் பயப்நேரிடுகிறதில்லை. அதாவது மறுபிறப்பில்லையென்று கருத்து.

எகூ—பிரமக்கியாநியானவன் தன்னிஷ்டர்களிடத்தில் தன்புண்ணியத்தையும் தன் துவேஷிகளிடத்தில் தன்பாபத்தையும் விட்டுவிட்டு அழிவற்றபிரம்மாநந்தத்தையடைகிறான்.

அ௦—எப்போது பிரம்மத்தியாநத்தால் தோஷித்தையேயுண்டுபண்ணுகிறதான சகலவிஷயங்களிலும் ஆசையை நீக்குகிறானோ அப்போது இம்மையிலும் மறுமையிலும் அழிவற்ற சுகத்தையடைவான்.

அக—சகலமாந புத்திரமித்திராதி சமுசாரசம்பந்தங்களில் மெல்லமெல்ல மமதையைநீக்கி மாநாவமாநமுதலிய தொந்தவியாதியினின்றும் நீந்தியிருக்கிறவன் ஞாநயோகம் அல்லது கர்மயோகம் இவைகளால் பிரம்மசாயுச்சியத்தையடைகிறான்.

அஉ—மேற்சொன்ன மமதையைவிடுகிறது முதலானவையெல்

லாம் பிரம்மத்தியாநஞ்செய்பவனுக்குமாத்திரம் பலனைக்கொடுக்குமேதவிர ஆத்மத்தியாநமில்லாதவனுக்கு ஒருகர்மமும் பலனைக்கொடுக்காது.

அரு—இந்தச்சந்நியாசி வேதாந்தவாக்கியத்தால் அதியெக்கியம் அதிதெய்வம் அத்தியாத்மம் என்றுசொல்லப்பட்ட பிரமசுரூபத்தை எப்போதும் தியாநிக்கவேண்டியது.

அசு—இந்த வேதாந்தமானது-அதன்பொருள் தெரியாமலோதுகிறவனையும்-காப்பாற்றுகிறது-அதன்பொருளறிந்தவர்களை - விசேஷமாய் காப்பாற்றுகிறது· கைவல்லியத்தை விரும்பினவர்களுக்கும் மோக்ஷத்தைவிரும்புகிறவர்களுக்கும் இதுதான் கதியாகவிருக்கிறது.

அ௭—இந்தவிதிப்படி எந்தத்துவிஜன் ஸந்நியாசஞ்செய்துகொள்ளுகிறானோ அவன் சகலபாபங்களையும் இம்மையிலேயே நீக்கிவிட்டு மேலானபிரமசுவரூபத்தையடைகிறான்·

அஅ—இதுவரையில் மஹாத்மாக்களான சந்நியாசிகளின் பொதுவான தர்மங்களைச்சொல்லிவந்தேன் இனி வேதத்திற்சொல்லிய கர்மங்களைச் செய்துகொண்டு சம்சாரசம்பந்தமில்லாமல் வீட்டிலேயே வசிக்கிறசந்நியாசி பேதத்தின் தர்மத்தைச் சொல்லப்போகிறேன்·

அகூ—தனித்தனியாய்ச்சொல்லப்பட்டிருக்கிற பிரமசாரி கிரகஸ்தன் வாநப்பிரஸ்தன் சந்நியாசி இந்தநாலாச்சிரமமும் கிரகஸ்தாசிரமத்தினலேயேவுண்டாகிறது.

கூ0—சாஸ்திரப்படி அதனதன் கர்மங்களை நடத்திவந்தால் இந்த நான்காஸ்ரமங்களும் தனித்தனியாகவே மோக்ஷத்தைக் கொடுக்கிறதுகள்.

கூக—நான்காச்சிரமிகளுக்குள்ளே வேதம் - தர்மசாஸ்திரம்-

இவைகளிற்சொல்லுகிற கர்மாநுஷ்டாநஞ்செய்கிற கிரகஸ்தன் மற்றமூவரையும் பிக்ஷைகொடுத்துக் காப்பாற்றுகிறபடியால் அவன் உயர்ந்தவனென்றுசொல்லப்படுகிறான்.

கூ0—❁நதி*நதம் இவைகள் சமுத்திரத்தைச்சேருகிறாப்போல பிரமசாரி-வாநப்பிரஸ்தன் ஸந்நியாசி- இவர்கள் கிரகஸ்தனையே பிக்ஷைக்காகச்சேருகிறார்கள்.

கூக—இந்தநால்வராலும் பத்துவிதமாக மேற்சொல்லப்போகிற தருமமானது முயற்சியினாலடையத்தக்கது.

கூஉ—அவைகளாவன-சந்தோஷம்-தனக்கொருவ னபகாரஞ்செய்தாலும்பிரதிசெய்யாமை- மநோநிக்கிரகம்- அந்நியாயமாய்ப்பொருள்தேடாமை-நல்லொழுக்கம்-இந்திரியநிக்கிரகம்-சாஸ்திரக்கியாநம்-பிரமக்கியாநம்-உண்மை-கோபமில்லாமை-ஆகபத்து.

கூரு—இந்தப் பத்துவித தர்மங்களை எவர்களறிந்து அந்தப்படி நடத்துகிறார்களோ அவர்கள் மேலானமோக்ஷத்தை யடைகிறார்கள்.

கூச—பத்துவிததர்மங்களையும் அநுஷ்டித்து இந்திரியநிக்கிரகமுள்ளவனாயிருக்கிற கிரகஸ்தன் முக்கடனையும்தீர்த்து பின்புவேதாந்தார்த்தங்களைக் குருவினிடத்திற்கேட்டு ஸந்நியாஸஞ்செய்துகொள்ளவேண்டியது.

கூரு—கிரகஸ்தாசிரமத்திற் செய்யத்தக்க சகலகர்மங்களையும் நீக்கிவிட்டுப், பிராணாயாமமுதலானவற்றால் தனக்கு அஞ்ஞாநகிருதமான பாவங்களையும் போக்கடித்து, பரிசுத்தனாய் வேதாந்தத்தை

---

❁ கிழக்குமுகமாய்ஓடுகிறஆற்றுக்கு-நதியென்றும்

* மேற்குமுகமாய்ஓடுகிறஆற்றுக்கு நதமென்றும்பெயர்.

யோதிக்கொண்டு,புத்திரனிடத்திலேயே வஸ்திரம் பிக்ஷை இவைக ளைவாங்கிக்கொண்டு,சுகமாக வாசஞ்செய்யலாம். இதுதான் குடீச் சரனென்னும் சந்நியாசிபேதத்தின்தர்மம்.

கூகூ—இந்தப்பிரகாரம் ஸமஸ்தகர்மங்களையும் நீக்கிவிட்டு தா னற்கதியை யடையும்பொருட்டு முயற்சியுள்ளவனாய் ஒன்றிலும் பற்றில்லாதவனாய் ஸந்நியாசஞ்செய்து கொள்ளுகிறவன் பாவத் தைப்போக்கடித்து மேலானகதியையடைகிறான்.

கூஎ—இதுவலாயில் பிராமணருடைய நாலுவித ஆசிரமங்களி ன் தருமங்களை யுங்களுக்குச்சொல்லிவந்தேன் இனி பரிசுத்தமாயு ம் சுவர்க்கத்தைக்கொடுக்கிறதாயும் இருக்கிற பட்டாபிஷேகஞ்செ ய்யப்பட்ட அரசர்களின்தருமங்களைக்கேளுங்கள்.

ஆறுவது அத்தியாயம்-முற்றிற்று.

ஆக-அத்தியாயம்-சு க்கு-சுலோகம்-ககஅ0.

ஏழாவது

# அத்தியாயம்.

## இராஜதர்மம்.

முதலாவது—அரசர்கள்-இம்மைக்கும், மறுமைக்கும்,உபயோ கமாகநடத்தவேண்டிய தர்மங்களையும், அவர்களுத்பத்தியையும், அவர்களுக்குண்டானபலனையும், விதிப்படிகேளுங்கள்.

உ—வேதத்திற்சொல்லிய உபநயநமுதலான சமுஸ்காரங்கள்

செய்துகொண்டவனுயிருக்கிற க்ஷத்திரியனாலே இவ்வுலகம் விதிப்படிகாப்பாற்றத்தக்கது.

## அரசன்சிறப்பு.

ங—உலகத்தில் அரசனில்லாமற்போனல் பலமுள்ளவனிடத்திற் பலமில்லாதவர்கள் பயத்தினலழிந்து போவார்கள். ஆகையினல் இவ்வுலகமெல்லாம் அழியாமலிருக்கும்பொருட்டுச் சுவாமியானவர் அரசனையுண்டுபண்ணினர்.

ச—இந்திரன்,வாயு,எமன், சூரியன்,அக்கிநி,வருணன், சந்திரன், குபேரன், இவர்கள் அம்ஸங்களினலேயே அரசனுண்டாக்கப்பட்டான்.

ரு—இப்படிக்கொத்ததேவர்களின் அம்ஸமாலகையால் அரசன் சகலமனிதர்களைவிட அதிககாந்தியுள்ளவனும்அனைவனையும்ஆளத்தக்க வீரியமுள்ளவனுமிருக்கிறன்.

சா—இந்தவரசன்-சூரியன்போல் தன்னைப் பார்க்கிறவர்களின் கண்களையு மநமதையும் தகிக்கிறபடியால் பூமியில் ஒருவரும் அவனுக்கெதிராகநின்று பார்க்கக்கூடாதவராயிருக்கிறார்கள்.

எ—அவ்வரசன் தன்மகிமையினல் சமயத்துக்குத்தக்கபடி அக்கிநியாகவும், வாயுவாகவும், சூரியனகவும், சந்திரனகவும், எமனகவும், குபேரனகவும்,வருணனகவும்,தேவேந்திரனகவும்,இருப்பான்.

அ—அவ்வரசன் சிறுவனக விருந்தபோதிலும் அவனைமனிதனென்று அவமாநஞ்செய்யக்கூடாது. ஏனெனில் மேலானதேவர்களின்கூட்டமே அந்தவரசனுருவமாக விருக்கிறதல்லவா.

கூ—அக்கிநியானது அஜாக்கிரதையாய் தன்கிட்டவந்தவனை மாத்திரம் தகிக்கும் அரசனகிற அக்கிநிகோபித்துக்கொண்டால் தநம்தானியம்புத்திரமித்திரகளத்திராதிகளோடும் அழித்துப்போடும்.

க0—அவ்வரசன் காரியாகாரியங்களேயும், தன்சக்தியையும் தேசகாலங்களே யும்,நன்ருகயோசித்து தருமசித்தியின்பொருட்டு அநேகம் ரூபத்தையெடுத்துக்கொள்ளுகிருன் அதாவது.தனக்குப் பலஹீநகாலத்தில் அடங்கியிருப்பான்'பலமுள்ளபோது போர் க்குவருவான்.

கக—எந்தவரசன் தயையினுல்பொருளும் சத்துருஜயமும்உண் டாகிறதோ எவன் துவேஷத்தினுல்மரண முண்டாகிறதோ அவன் தேஜோரூபனல்லவா ஆதலால் பொருளேவிரும்பினவனும் சத்து ருஜயத்தை விரும்பினவனும் ஜீவித்திருப்பதை விரும்பினவனும் அவனேயெதிர்க்கக்கூடாது.

கஉ—அவ்வரசனேடு எவன்புத்தி யில்லாமையால் துவேஷித்து க்கொள்ளுகிருனே அவன்ருனகவே யழிந்துபோகிருன் அரச னும் அவனழிகிறதைக்குறித்து யோசிக்கிருன்.

கரு—ஆதலால்-அவ்வரசனெதைய நுஷ்டிக்கும்படியாயும், எதை நீக்கும்படியாயும், ஏற்பாடுசெய்கிருனே அதையொருவருந்தடுக் கக்கூடாது.

## தண்டப்பிரசம்சை.

கச—பிரமன்-அவ்வரசன் சகலபிராணிகளேயுங்காப்பாற்றுவதற் குபயோகமாயும், தர்மசுவரூபமாயும்,பிரம்மதேஜசுள்ளதாயும்,இ ருக்கிறதண்டத்தை ஏற்படுத்தினர்.

கரு—அந்தத்தண்டத்தினிடத்தில் பயத்தினுல் சராசரங்களெல் லாம்சுகத்தை யநுபவிக்கிறதுமன்றி தன்றன்றருமங்களே விடாம லும் அநுஷ்டிக்கின்றன.

கசா—குற்றஞ்செய்கிற மனிதர்களுக்குத் தண்டனேசெய்யும் போது தேசம்-காலம்-சாமர்த்தியம் வித்தை-இவைகளேயெல்லாம்

யோசித்துப்பார்த்து அரசன்தக்கபடி சிக்ஷைசெய்யவேண்டியது.

கஎ—அந்தத்தண்டனையானது அரசனுக்குப் பெருமையை யுண்டாக்குவதால் அரசனாகவும் சமஸ்தப்பிராணிகளையுந் தண்டித் தலால் புருஷித்தன்மையுள்ளதாயும்,சமஸ்தகாரியங்களை வெளிப்ப டுத்தவும் அடக்கவும் சாமர்த்தியமுள்ளதா யிருப்பதால் பிரமசரி யமுதலிய நான்கு ஆசிரமங்களின் தருமநடப்பதற்குப் பிணையாக வும் இருக்கிறது.

கஅ—தண்டமானது எல்லாப்பிரஜைகளையும் ஆஞ்ஞைசெய்கி றது எல்லாரையுங்காப்பாற்றுகிறது தூங்குகிறவாளிடத்தில் விழி த்துக்கொண்டிருக்கிறது ஆகையால் தருமத்தையே தண்டஸ்வரூ பமாகப்பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

கசு—அந்தத்தண்டமானது நன்றாக ஆளப்பட்டால் சகலப்பிர ஜைகளையும் சுகப்படுத்தும் இல்லாவிட்டால் எல்லாவற்றையும் அழித்துவிடும்.

உ0—அரசன் சோம்பலில்லாமல் தண்டிக்கத்தக்கவர்களைத்தண் டியாமற்போனால் பெரியமச்சங்கள் சின்னமச்சங்களைப்போல பலமுள்ளவர்கள்பலமில்லாதவர்களைபொருள்-பசு-தாநியம்-இவை களையெல்லாம் அபகரித்துக்கொண்டு கொன்றுவிடுவார்கள்.

உக—அரசன்தக்கபடி தண்டனைசெய்யாதபோது அந்தத்தே சத்தில் எக்கிய யாகங்களில் புரோடாசத்தை காக்கைமுதலானவை கள்தின்றுவிடும் அவிசைநாய்முதலியவை நக்கும் அவனவன்பொ ருள் அவனவனுக்கு சொந்தமாகமாட்டாது தாழ்ந்தசாதியானும் உயர்ந்தசாதியானவான்.

உஉ—தண்டனைசெய்தால்மாத்திரம் உலகத்தார் சரியாக நடப் பார்களேயன்றி சுபாவத்திலேயே சரியாக நடக்கமாட்டார்கள்

தண்டனைக்குப்பயந்தே உலகமுழுதும் சுகத்தையநுபவிக்கிறது.

உரு—இந்திராதிதேவர்கள்-அசுரர்-கந்தருவர்-இராக்கதர்-பக்ஷிக ள்-பாம்புகள்-இவர்களெல்லாம் ஜெகதீசனிடத்தில் தண்டனைக்கு ப்பயந்தே பிரபஞ்சத்துக்கு சுகத்தைச்செய்கின்றனர்.

உச—அரசன்-தண்டனைசெய்யாவிடில் உலகத்தார் ஜாதிமரியா தையையும் சாஸ்த்திரமரியாதையையும் கடந்து நடப்பார்கள் அன்றியும் ஒருவன்மனைவியைப்புணர்ந்திடுதல் திருடுதல் வன்செய் கை இவைகளால் ஒருவர்க்கொருவர் சண்டைசெய்வார்கள்.

உரு—அரசன்சரியாக விசாரிப்பானாகில் அவடத்தில் கறுத்த மேனியும் சிவந்தகண்ணுமுள்ள பாவத்தைப்போக்கிற தண்டமெ ன்னும் தெய்வத்தன்மையையுடைய புருஷன்சஞ்சரிக்கிறான் ஆத லால் அவடத்தில் ஜநங்கள் துன்பப்படமாட்டார்கள்.

உசு—அந்தத்தண்டத்தை பட்டாபிஷேகமுதலிய சடங்குகளு ள்ளவனையும், உண்மைபேசுகிறவனையும்,பொய்-மெய்-இவைகளைய றிந்து தீர்மானிப்பதில் பழக்கமுள்ளவனையும், நீதிசாஸ்த்திரத்தில் ஞானமுள்ளவனையும், தர்மம்-அர்த்தம்-காமம்-இவைகளை யறிந்தவ னையும்,இருக்கிற அரசனானவன் ஆளுகிறவனாயிருக்கவேண்டியது.

உஎ—அந்தத்தண்டபுருஷனைத் தக்கபடியாளுகிற அரசன் தர் மார்த்தகாமங்களால் விருத்தியடைவான். அப்படிஆளாமலும்,விட யப்பற்றுள்ளவனையும், கோபியாயும், துர்மார்க்கனாயும், இருக்கிற அரசனை அந்தத்தண்டத்தைக்கொண்டே மந்திரிமுதலானவர்கள் கொன்றுவிடுவார்கள்.

உஅ—மந்திரி-சேநாபதி-புரோகிதன்-முதலிய சகாயமில்லாம லும் ஞானமில்லாமலும் இருக்கிற அரசர்களால் அதிககாந்தியுள்ள

அந்தத்தண்டபுருஷின் ஆளக்கூடாதவன் அரசன்- தர்மமில்லாதவ னாயிருந்தால் அவனைக்குடும்பத்தோடு அழித்துவிடுவன்.

உகூ—அவனையழித்தபின்பு கோட்டை-தேசம் - உலகம்-சரம் அசரம் சுவர்க்கத்தில் வாசஞ்செய்கிற தேவர்-முநிவர்- இவர்களையு ம் அழித்துவிடுவான்.

௩0—அந்தத்தண்டபுருஷின் மந்திரிமுதலிய சகாயமில்லாமனு ம், மூடனும்,பேராசையுள்ளவனும், புத்தி-கல்வி- இல்லாதவனு யும், விடயப்பற்றுள்ளவனும்,இருக்கிற அரசனால் விதிப்படியாள ப்படமாட்டான்.

௩க—பொருண்முதலியவற்றில் பரிசுத்தம்-சத்தியம்-சாஸ்த்திரக் கியாநம் குணமுள்ளமந்திரிமுதலியவுதவி தத்துவக்கியாநம் இவை களையுள்ள அரசனாலாளப்படுவான்.

௩உ—அரசன்-தன்தேசப்பிரசைகளை நியாயப்படி யாளுகிறவ னும் சத்துருக்களை யதிகமாகத்தண்டிக்கிறவனும் குணமுள்ள தோழரிடத்தில் கபடமில்லாதவனும் பிராமணர் சொற்பகுற்ற ஞ்செய்தா லதைப்பொறுக்கிறவனும் இருக்கவேண்டியது.

௩௩—இவ்விதமான அரசன் பொருளில்லாதவனாய் உதிர்ந்தநெ ல்லைப் பொறுக்கி ஜீவித்தாலும், அவன்கீர்த்தி தண்ணீரில்விழுந்த எண்ணெய்போல் எங்கும்பரவும்.

௩௪—இவ்விதகுணமும் இந்திரியக்கட்டுப்பாடும் இல்லாதவரச ன் கீர்த்தி தண்ணீரில்விழுந்த நெய்யைப்போலஅழுந்திவிடும்.

௩௫—தன்றன் தருமத்தைநடத்துகிற நான்குவருணத்தாரையும் நான்குஆசிரமத்தாரையும் காப்பாற்றுவதற்காக அரசன்பிரமனால் சிருஷ்டிக்கப்பட்டான்.

௩௬—அவ்வரசன் அநேகம் பரிசநங்களை வைத்துக்கொண்டு

எவ்விதமாகப்பிரசைகளைக்காப்பாற்றவேண்டுமோ-எது எது-செய்யவேண்டியதோ அதைமுழுதும் உங்களுக்கு கிரமமாகச்சொல்லப்போகிறேன்.

## அரசன்செய்கை.

ரு௭—அரசன்-தினந்தோறுங் காலையிலெழுந்து மூன்று வேதமோதினவர்களாயும் நீதிசாஸ்திரவித்வான்களாயும் இருக்கிற பிராமணனையுபசரித்து அவர்கள்சொல்லுகிறபடி நீதிசெலுத்தவேண்டியது.

ருஅ—அதிலும் கல்வியாலும், வயதாலும், பெரியவர்களாயும் உள்ளும்புறமும் பரிசுத்தாளாயும்,இருக்கிறபிராமணனை எப்போதும் உபசரிக்கவேண்டியது. பெரியோர்களை உபசரிக்கிறவனுக்கு இராக்கதராலும் பயநேரிடாது.

ருகூ—தான் நியாயமறிந்திருப்பினும் அந்தப்பெரியோர்களிடத்தில் நியாயத்தை வணக்கமாய் கேழ்க்கவேண்டியது. பெரியோர்களால் சிக்ஷிக்கப்பட்டால் ஒருபோதும் அழியமாட்டான்.

சo—அநேக அரசர்கள் பெரியோர்களால் சிக்ஷிக்கப்படாததால் சதுரங்கசேனையுடன் அழிந்துபோனார்கள். இராச்சியமிழந்து கானகத்தில் ஓடிப்போனவர்களும், அந்தப்பெரியோர்களின் சிக்ஷையினால் இராச்சியத்தையநுபவித்தார்கள்.

சக—அந்த வணக்கமில்லாததால்-வேனன்- நகுஷின் - சுதாசன் யவனன்-சுமுகன்-நிமி-இவர்கள்-இராச்சியத்தையிழந்து அழிந்துபோனார்கள்.

சஉ—பிருதுசக்கிரவர்த்தி, மநுச்சக்கிரவர்த்தி, இவ்விருவரும் வணக்கத்தினால்இராச்சியத்தையும்,குபேரன் தநாதிபத்தியத்தையும்

விசுவாமித்திரன் பிராமணத்தன்மையையும் அடைந்தார்கள்.

சரு—மூன்றுவேதமோதினவர்களிடத்தில் வேதத்தைப்பொருளுடனும்,நீதிசாஸ்திரந்தெரிந்தவர்களிடத்தில் நீதியையும்,தார்க்கிகாளிடத்தில் தர்க்கத்தையும்,தேசபாஷைகளை அவைதெரிந்தவரிடத்திலும், கிரகித்துக்கொள்ளவேண்டியது.

சச—இரவும்பகலும் இந்திரியநிக்கிரகத்திலேயே முயற்சிசெய்யவேண்டியது.இந்திரியங்களை ஜயித்த அரசனுக்குத்தான் பிரசைகள் சுவாதீநப்படுவார்கள்.

சடு—முன்னம் இன்பம்போலும் பின்னர் துன்பத்தைக்கொடுக்கிறதாயுமிருக்கிற மேற்சொல்லப்போகிறகாமத்தினாலுண்டான பத்துவிததுக்கங்களையும்,கோபத்தினாலுண்டான எட்டுவிததுக்கங்களையும்,அரசன் முயற்சியோடு நீக்கவேண்டியது.

சசூ—இவைகளில் காமத்தினாலுண்டான துக்கத்திற் பற்றுள்ளவரசன் தருமம்-பொருள்-இவைகளை- இழந்துபோவான். கோபத்தினாலுண்டான துக்கத்திற் பற்றுள்ளவன் தன்றேகத்தையே யிழந்துபோவான்.

சஎ—காமத்தினாலுண்டான பத்துத்துக்கங்களாவன வேட்டையாடுதல் சூதாடுதல் - பகலிற்றூங்குதல்-வம்பளத்தல் ஸ்திரிலோலனுயிருத்தல்-குடித்தல்-பாட்டு-கூத்து-வாத்தியம்-இவைகளில் விருப்பமுள்ளவனுயிருத்தல் வீணனதிரிச்சல்-ஆகப்பத்து.

சஅ—கோபத்தினாலுண்டான எட்டுத்துக்கங்களாவன - கோள்துணிவு-துரோகம்-பொறாமை-பிறன்குணத்தைச்சகியாமை-ஒருவன்பொருளை யபகரித்தல் காரணமின்றி அடித்தல்- திட்டுதல்- ஆக எட்டு.

சகூ—இருவகையாகச் சொல்லப்பட்ட இந்தப் பதினெட்டு

குணங்களுக்கும் எதைக்காரணமென்று பெரியோர்கள்சொல்லுகி ருர்களோ அந்தலோபகுணத்தை முயற்சியோடு அரசன் நீக்கவே ண்டியது.

ருo—காமத்தினுலுண்டான பத்துத்துக்கங்களுக்குள் குடித்தல் சூதாடுதல்-ஸ்திரீலோலனுயிருத்தல். வேட்டையாடுதல் இவைநான் கும் அதிகதுன்பத்தைக்கொடுக்கின்றனவென்றுஅறியவேண்டியது

ருக—கோபத்தினுலுண்டான துக்கங்களுக்குள் காரணமின்றி அடித்தல்-திட்டுதல்- பொருளையபகரித்தல் இம்மூன்றும் கஷ்டத் தைக்கொடுக்கின்றனவென்று அறியவேண்டியது

ருஉ—காமத்தினுலுங் கோபத்தினுலுமுண்டான இந்த எழுக்கு ள் கடையிலிருந்து ஒன்றுகொன்று அதிககஷ்டத்தைக் கொடுக்கி றது என்றறியவேண்டியது.

ருரு—வியசநம்-மரணம்-இவ்விரண்டில்-வியசநம்- கஷ்டமான து. ஏனென்ருல் வியசநப்படுகிறவன் இறந்தபின் நரகத்தையும் வியசநமின்றியிறந்தவன் சுவர்க்கத்தையுமடைகிருன்.

ருச—பாட்டன் நாள்முதல் மந்திரித்தனஞ்செய்த வம்சஸ்த் தாளாயும் நீதிசாஸ்திரம்-வேதாந்தம்-தநுர்வேதம்-இவைகளறிந்தவ ர்களாயும், பலமுள்ளவர்களாயும், நற்குலத்திற் பிறந்தவர்களாயும் இருக்கிறமந்திரிகளை எழு அல்லது எட்டுப்பேளையாகிலும் பரீ க்ஷைசெய்து யோசனைசொல்வதற்காக வைத்துக்கொள்ளவேண் டியது.

ருரு—சுலபமான சமுசாரகாரியத்தையும் ஒருவனுகச்செய்யக் கூடாதவனுயிருக்கிருன்.அப்படியிருக்க அதிகவருத்துள்ள இராச்சி யத்தை சகாயமின்றி ஆளக்கூடுமா.

ருசு—அந்தமந்திரிகளோடு அனைவருமறியக்கூடுமான சண்டை சமாதானம் இரதகஜதுரகபதாதி-பொக்கிஷம்- பட்டணம்-தேசம் இவைகளைக்குறித்தும், பசு-தாநியம் - இவைகளைக்காப்பாற்றுவது சம்பாதித்தபொருளை நல்லவர்களுக்குக்கொடுப்பது. இவைகளைக் குறித்தும் யோசிக்கவேண்டியது.

ருஎ—அந்தமந்திரிகளின் அபிப்பிராயத்தைத் தனித்தனியாய் இரகசியத்திலறிந்து சகலரும் செய்யத்தக்கதாகச்சொன்னகாரியத்தை தனக்குமநமிருந்தால்செய்யலாம்.

ருஅ—அவர்களுக்குள்ளே உயர்ந்தவனும்,பண்டிதனுமிருக்கிற பிராமணமந்திரியோடு சத்துருவைச் சமாதானப்படுத்துவது, எதிர்ப்பது, சண்டைக்குப்போவது,சமயம்பார்ப்பது, எதிரியின்சேனையைக்கலைப்பது, ஒருவனைத்தான் சரணமாகவடைவது இவ்வாறையும் யோசிக்கவேண்டியது.

ருகூ—அந்தப்பிராமணமந்திரியினிடத்தில் திநந்தோறும்நம்பிக்கையுள்ளவனுய் சகலத்தையுஞ் சொல்லி அவருடன்யோசித்து ஒருகாரியத்தை ஆரம்பிக்கவேண்டியது.

சு0—பரிசுத்தமுள்ளவர்களாயும்,ஞாநமுள்ளவர்களாயும்,பொருளை விருத்திசெய்கிறவர்களாயுமிருக்கிற மற்றுஞ் சிலபேர்களை பொக்கிஷமுதலானவிடங்களில் நியமிக்கவேண்டியது.

சுக—தனக்கு எவ்வளவு சிப்பந்திகளிருந்தால் காரியநிறைவேறுமோ அவ்வளவுபேர்களைச் சோம்பலில்லாதவர்களாயும், சமர்த்தாளாயும் எற்படுத்திக்கொள்ளவேண்டியது.

சுஉ—அந்தச்சிப்பந்திகளுக்குள் பலம்-சாமர்த்தியம்-நல்லகுலப்பிறப்பு இவைகளுள்ளவர்களை பொக்கிஷம்-தங்கசாலை-நெற்களம்

இவைமுதலானவைகளில் நியமிக்கவேண்டியது. பயசாலிகளை அந்தப்புரத்திலும்,மடைப்பள்ளியிலும், நியமிக்கவேண்டியது.

௬௩—சகலசாஸ்திரமறிந்தவனும்,சொற்குறி - கண்சிமிட்டுதல் முதலியசாடை-சிட்டிகைப்போடுதல்முதலியசெய்கை-இவைகளைக்கண்டுபிடிக்கிறவனும்,பொருளாசையில்லாதவனும்,சமர்த்தனும்,நல்லகுலத்திற் பிறந்தவனும், இருக்கிற ஒருதூதனை அரசன் தன்னிடத்தில் வைத்துக்கொள்ளவேண்டியது.

௬௪—அந்தத்தூதன் சகலரிடத்திலும் அன்புள்ளவனும்,சமர்த்தனும்,பொருளாசையில்லாதவனும்,நியாபகமுள்ளவனும்,தேசகாலங்களையறிந்தவனும்,தேகபுஷ்டியுள்ளவனும், பயமில்லாதவனும்,சமுஸ்கிர்தமுதலிய பாஷைபேசுகிறவனும், இருந்தால் அரசனுக்குப்பெருமையை யுண்டுபண்ணுவான்.

௬௫—ஆயுதவித்தையில் பழக்கமுள்ள சதுரங்கபலத்தை சேநாதிபதியின் அதீநமாகவும்,தேசவிசாரணை பொக்கிஷம் இவற்றைத் தன்னதீநமாகவும், ஒருவனிடத்தில் சண்டைசெய்வது சமாதானமாவது இவற்றைத்தூதனதீநமாகவும் அரசன்செய்யவேண்டியது

௬௬—தூதனே விரோதிகளைச் சிநேகிதாளாகவும், சிநேகிதர்களை விரோதிகளாகவும்,செய்விக்கிறான் தேசாந்தரத்திலும், அவனாலேயே யுத்தசமாதானங்கள் உண்டாகிறது.

௬௭—அந்தத்தூதன் சத்துருவினிடத்திற்குத் தான்மறைந்துகொண்டுபோய் அவனபிப்பிராயம் செய்கை அவன் சேனையின் அபிப்பிராயம். பலம்-இச்சை-இவைகளை அறியவேண்டியது.

௬௮—இந்தப்படி சத்துருவின் அபிப்பிராயங்களை நன்றாகவறிந்து தனக்குத் தீங்குநேரிடாமல் தப்பித்துக்கொண்டு வரவேண்டியது.

V. B. SUBRAHMANIYA SARMA
TAMIL-PANDIT

சுகூ—தன்பட்டணத்துக்குச் சமீபத்தில் சொற்பபுல் ஜலம் இவைகளோடுகூடினதாயும் நன்றாகவிளையும்படியான கழனிகளை யுடைத்தானதாயும் வியாபாரிகள் இருக்கத்தக்கவிடங்களை யுடைத்தானதாயும் தன்றேசத்திற்பிழைக்கிற ஜநங்களால் வசிக்கப்படுகிற தாயும் காற்றையும் வெய்யிலையுமறைக்காததாயுமிருக்கிற உபகிராமங்களை ஏற்படுத்தவேண்டியது.

## அரண்முதலியவற்றின்விதி.

எ0—பன்னிரண்டுமுழ உயரமுள்ள கற்கோட்டையையாவது-மிகுந்தஆழமுள்ள ஜலக்கோட்டையையாவது-ஒரு யோசனைதூரமுள்ள வநக்கோட்டையையாவது-சதுரங்கபலக்கோட்டையையாவது, மலைக்கோட்டையையாவது-சுற்றிலும் ஐந்துயோசனைதூரமுள்ள நீரற்ற பூமிக்கோட்டையையாவது- ஏற்படுத்திக்கொண்டு அதற்குட்பட்ட பட்டணத்தில்அரசன்வாசஞ்செய்யவேண்டியது.

எக—எல்லாக்கோட்டைகளையும்விட மலைக்கோட்டை யுயர்ந்ததாகையால் அதனையுடைய பட்டணத்தில் அரசன் முயற்சியோடு வாசஞ்செய்யவேண்டியது.

எஉ—இந்தக் கோட்டைகளுக்குள் ஐந்துயோசனைதூரந் தண்ணியில்லாதபூமிக்கோட்டை-மிருகங்களினாலும்,கற்கோட்டை-பெருச்சாளிமுதலானவைகளினாலும், நீர்க்கோட்டை-முதலைமுதலானவைகளாலும், வநக்கோட்டை குரங்குமுதலானவைகளாலும், சேனைக்கோட்டை-வீரர்களினாலும், மலைக்கோட்டை-தேவர்களினாலும், சூழப்பட்டிருக்கவேண்டியது.

எஙு—இந்தக்கோட்டைகளில் வசிக்கின்ற ஜெந்துக்கள் வேடர் முதலானவர்களால் துன்பப்படாமலிருந்தால் அந்தவரசனுக்கு சத்துருவினின்றும் பயநேரிடாது.

எச—இந்தக்கோட்டைமேல் நிற்கிற வொருவில்லாளி தன்னை யெதிர்க்கவந்தநூறுசத்துருக்களோடும், நூறுவில்லாளி பதினாயிரம் சத்துருக்களோடும், சண்டைசெய்வார்கள் ஆகையால் கோட்டை உண்டுபண்ணிக்கொள்ளவேண்டுமென்று விதிக்கப்படுகின்றது.

எடு—அந்தக்கோட்டைக்குள் கத்திமுதலான ஆயுதங்கள் மிகுந் தபொருள் தாநியம்-குதிரை-யானை-பிராமணன்-யந்திரமறிந்தவன் சித்திரவேலைக்காரன்-புல்-வைக்கோல்-தண்ணீர்-இவைகள்பூரணமா யிருக்கும்படி செய்யவேண்டியது.

எசு—அந்தப்பட்டணத்தினடுவில் அந்தப்புரம் அக்கினிசாலை- ஆயுதச்சாலை-இவைகளுள்ளதாயும் உழலைத்தடி-வெளிச்சுவர்-இவை களால் காக்கப்பட்டதாயும் எக்காலத்திலும் மலரவும் பழுக்கவுந் தகுதியான விருக்ஷங்களையுடைத்தானதாயும், நடைவாவியுள்ளதாயு ம், இருக்கிற ஒருவீட்டை அரசன் தனக்காக ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது.

எஎ—அந்தவீட்டிற்போனபின்பு தன்ஜாதியாயும், அதிகஅழகு ள்ளவளாயும், நற்குலத்தில் பிறந்தவளாயும், மநதைக் கிரகிக்கிறவ ளாயும்,மெல்லிதானசரீரமுள்ளவளாயும்,குணசாலியாயும் இருக்கி ற ஸ்திரீயை விவாகஞ்செய்துகொள்ளவேண்டியது.

எஅ—புரோகிதனையும், ரித்துவிக்கையும், தனக்கு-ஏற்பாடுசெ ய்துகொள்ளவேண்டியது. அவ்விருவரும் முறையே இவ்வரசனு க்குவேதத்திற்சொல்லியபடி யுத்தசாஸ்திரத்தையும், அக்கினிஹோ த்திரமுதலிய வைதீககாரியங்களை சாக்கிரதையாக உபதேசஞ்செ ய்விக்கவும், நடத்திவைக்கவும்வேண்டியது.

எகூ—பின்பு அதிகதக்ஷிணையுள்ள அசுவமேதமுதலான யாகத் தை அரசன்செய்யவேண்டியது. தருமத்திற்காக பிராமணர்களுக்

கு விடுமுதலானபோகங்களையும். தானங்களையுங் கொடுக்கவேண்டியது.

அ௰—தான்வாங்கிக்கொள்ளவேண்டிய மாசத்தீர்வை வருஷத்தீர்வை இவைகளை நம்பிக்கையுள்ள மந்திரிமுதலானவர்களால் சாஸ்த்திரப்படி பிரஜைகளிடத்தில் வாங்கிக்கொண்டு தன்தேசவாசிகளிடத்தில்,பிள்ளையிடத்தில் தகப்பன்போல், அன்புள்ளவனுகவிருக்கவேண்டியது.

அக—யானை-குதிரை-காலாள்-இவைகளின்குணதோஷம் வைத்தியம்-இவைகளை-நன்ருகஅறிந்து இருப்பவர்களை அதற்குமேல்விசாரணைக்காரர்களாக ஏற்படுத்தவேண்டியது. அவர்களும் தத்தங்காரியங்களில் சாக்கிரதையாக வேலைக்காரர்களை விசாரணைசெய்யவேண்டியது.

அஉ—குருகுலவாசஞ்செய்து வேதமோதித்திரும்பிவந்த பிரமசாரிகளுக்கு குருதக்ஷிணையும்விவாகத்துக்குபயோகமான பொருளையுங் கொடுத்து பூசிக்கவேண்டியது. பிராமணர்களுக்கு கொடுத்தபொருள் நற்கதியைக்கொடுப்பதால் அரசர்களுக்குஅப்பொருள்அழிவற்ற நீதியாயிருக்கிறது.

அ௩—ஏனென்ருல் பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்டபொருளைத் திருடன் - சத்துரு- இவர்கள் அரசனிடபொருளைப்போல அபகரிக்கமாட்டார்கள். அழிவற்றபலனையுங்கொடுக்கிறது- ஆகையால்.அழிவில்லாத புதையல்போன்றபிராமணதானத்தைச் செய்யவேண்டியது.

அச—அக்கினியிலோமஞ்செய்யப்பட்டது ஒருகால் உருகியும் உலர்ந்தும் கண்ணுக்குத்தெரியாமலும் போய்விடும்.பிராமணமுகமாகிற அக்கினியில் ஹோமஞ்செய்தது அழிவற்றதாகவேபலனைக்கொடுக்கும்.

அரு—க்ஷத்திரியன்முதலானோர்க்கு கொடுக்கிறதானத்துக்கு சாஸ்திரத்தில் சொல்லிய பலன்மூன்வரும், அநுஷ்டானமில்லாமல்-பிராமணனென்றுதன்னைச்சொல்லுகிற பிராமணனுக்குக் கொடுத்ததானம் அதற்கிரட்டிப்பாகும், வேதமோதுகிற பிராமணனுக்குக் கொடுத்த தானம் இலக்ஷம்பங்காகும்,வேதமுழுமையும் ஓதினபிராமணனுக்குக்கொடுக்குந் தானத்தின்பலனுக்குக் கணக்கேயில்லை.

அசா—சற்பாத்திரமாகவிருப்பதினாலும், சிரத்தையோடுகொடுப்பதினாலும் கொடுக்கும்பொருள் சொற்பமானாலும் அதிகமானாலும் இறந்தபின் அதிகபலனைக்கொடுக்கிறது.

அஎ—தன்னை தனக்குச்சரியானவனேனும் உயர்ந்தவனேனுந் தாழ்ந்தவனேனும் சண்டைக்கழைத்தால் க்ஷத்திரியதர்மத்தை நினைத்து பயப்படாமல்அரசன்சண்டைக்குப்போகவேண்டியது.

அஅ—ஏனென்றால் சண்டையில் புறங்கொடாமலிருத்தல் பிரஜைகளைநியாயமாகக்காப்பாற்றல் பிராமணர்களைப்பூசித்தல் இம்மூன்றும் அரசனுக்கு மேலானக்ஷேமத்தையுண்டுபண்ணுகிறது.

## யுத்ததருமம்.

அகூ—யுத்தத்தில் ஒருவனையொருவர் கொல்லவேண்டுமென்று நினைத்துப் போர்செய்யும்போது புறங்கொடுக்காமல் சண்டைசெய்து இறக்கிறவரசர்கள் சுவர்க்கத்தையடைகிறார்கள்.

கூ0—ஓராயுதத்தை மற்றோராயுதமாகக்காட்டியும்,*கர்ணிக்காரபாணங்கள்,நுனியில் விடந்தடவினபாணங்கள்,நெருப்பிற்காச்சின

---

* கர்ணிக்காரபாணம்-என்பது-சல்லடைபோன்றஉருவமுள்ளதாய்-மேற்புறத்தில் நெருங்கியமுள்ளையுடையதாக இருப்பது.

பாணங்கள்,இவைகளினாலும் சத்ருருக்களைச் சண்டையிற்கொல்ல க்கூடாது.

௯௧—இரதத்தைவிட்டுப் பூமியிலிறங்கினவன்-பேடி - அஞ்சலி செய்தவன்-தலைமயிரையவிழ்த்துக்கொண்டிருப்பவன்-குந்திக்கொண்டிருப்பவன்-அபயமென்றுசொன்னவன் - இவர்களைக் கொல்லக் கூடாது.

௯௨—தூங்குகிறவன்-சந்தோஷமில்லாதவன்- வஸ்திரமில்லாதவன்-ஆயுதமில்லாதவன்-போரிலெதிர்க்காதவன்-சண்டையைப்பார்ப்பவன்-மற்றொருவனோடு சண்டைபோடுகிறவன்-இவர்களையுங்கொல்லக்கூடாது.

௯௩—ஆயுதமொடிந்தவன்-பிள்ளைமுதலானவர்களிறந்து வியசனப்படுகிறவன்-நன்றாக அடிபட்டவன்-பயந்தவன் - புறங்கொடுத்தோடுகிறவன்- இவர்களைப் பெரியோர்களின் தருமத்லைநினைத்து, அடியாமலிருக்கவேண்டியது.

௯௪—எந்தவீரன் யுத்தத்தில் முதுகுகொடுத்தோடி சத்ருருவாற்கொல்லப்படுகிறானோ அவன் தனக்குச்சம்பளங்கொடுக்கிற யசமானன்பாவத்தையும் வாங்கிக்கொள்ளுகிறான்.

௯௫—அப்படி முதுகுகொடுத்தோடுகிற வீரன்-பரலோகத்துக்காகச் சம்பாதித்திருக்கிறபுண்ணியத்தை யசமானனடைகிறான்.

௯௬—இரதம்-குதிரை-யானை-குடை-வஸ்திரம்-தானியம் - பசு-ஸ்திரி-ஆயுதமுதலியவைகளையும்-வெள்ளி-சுவர்ணம்-நீங்கலாக-மற்ற பாத்திரங்களையும்-எந்தவீரன்-சண்டையில்-ஜயிக்கிறானோ-அவனுக்கு அவைசொந்தமாகின்றன.

௯௭—போரில் - வீரர்களினால் ஜயிக்கப்பட்ட சொத்துக்களில் பூமி-சுவர்ணம்-வெள்ளி- ரத்நம்- முதலிய உயர்ந்தவஸ்துக்களை அர

சனுக்குக்கொடுக்க வேண்டுமென்று வேதத்திற் சொல்லியிருக்கின்றன. அரசன்-தானுங்கூடச் சண்டைசெய்து ஜயித்த சொத்துக்களிலும்- வீரர்கள்- குணத்திற்குத் தகுதியாகப் பகுத்துக்கொடுக்க வேண்டியது.

கூஅ—நிந்திக்கப்படாமலும் அநாதியாயுமிருக்கிற யுத்ததருமமானது இதுவரையில் சொல்லப்பட்டது. இவ்விதமாக சத்துருவதைசெய்கின்ற அரசனுக்குப் பாபம்நேரிடாது.

கூகூ—அரசன் அடையப்படாதபொருளை சம்பாதிக்கவிரும்பவேண்டியது. சம்பாதித்தபொருளை முயற்சியோடுகாப்பாற்றவேண்டியது.காப்பாற்றினபொருளை- விருத்திசெய்யவேண்டியது.விருத்திசெய்தபொருளைசற்பாத்திரத்திற்செலவுசெய்யவேண்டியது.

க00—இந்நான்குகாரியங்களையும் புருஷார்த்த பிரயோசநமென்றறிந்து திநந்தோறும் அவைகளைச்சோம்பலின்றி அநுசரிக்கவேண்டியது.

க0க—தானடையவேண்டியபொருளை சண்டைசெய்தேயடையவேண்டியது.அதை தன்சுவாதீநத்தில் காக்கவேண்டியது. அதையும் வியாபாரத்தினாலே விர்த்திசெய்யவேண்டியது.அதையுந் தாநத்தினாலேயேசெலவுசெய்யவேண்டியது.

க0உ—அரசனுக்குச்சதுரங்கபலம் எப்போதுஞ்சாக்கிரதையாகவேயிருக்கவேண்டியது. தநுர்வித்தையால் தன்சாமர்த்தியத்தை எப்போதும் பிரகாசப்படுத்தவேண்டியது. தன்னாலோசனையையெப்போதும் வெளிப்படுத்தாமலும், நாடோறுஞ் சத்துருவை ஜயிக்க சமயந்தேடுகிறவனாயும் இருக்கவேண்டியது.

க0ங—சதுரங்கசேனை சாக்கிரதையாகவிருக்கிறவரசனுக்கே சக

ல ஜநங்களும் பயப்படுகிறபடியினாலே அதைக்கொண்டே யனைவ
ரையும் சுவாதீநப்படுத்தவேண்டியது.

க0ச—தன்மந்திரிகளிடத்தில் கிஞ்சித்துஞ் சூதுசெய்யக்கூடா
து. தன்வேவுகாரரால் சத்துரு சூதுமார்க்கங்களை யறியவேண்டி
யது.

க0ரு—சத்துரு தன்சூதையறியக்கூடாது. அவன்சூதைத் தான
றியவேண்டியது. ஆமையானது சமயத்துக்குத்தக்கபடி தன்தேக
ங்களையடக்கிக்கொள்ளுகிறாப்போல் அரசன்சதுரங்கசேனைகளையு
ம் தனக்குள் அடக்கிக்கொண்டு தன்னபிப்பிராயத்தை வெளிவிடா
மலிருக்கவேண்டியது.

க0சு—ஓட்டத்தைச் சுபாவமாகவுடைய தண்ணீரிலிருக்கிறமீன்க
ளைகொக்குகளானவை அதுவேதியாபகமாகவிருந்து பிடிக்கின்றன
போல் சத்துரு ஜயமுதலானகாரியங்களை யோசிக்கவேண்டும். சிங்க
மானது தன்வீரியத்தினால் பெரிதானதேகமுள்ள யானைகளைக்கொ
ல்லுகிறாப்போல் பலமுள்ள சத்துருக்களையுஞ் ஜயிக்கவேண்டும்
இடையர்களால் காக்கப்பட்டபசுக்களை செந்நாய்சமயம்பார்த்து
ப்பிடிக்கிறதுபோல் கோட்டைக்குள்ளிருக்கிற சத்துருக்களையும்
கொல்லவேண்டும். காட்டில் வேடர்களினாற்சூழப்பட்ட முயலான
து எழும்பியோடுகிறாப்போல் சத்துருக்களால் சூழப்பட்டதேச
த்தினின்றும் அவர்களுக்குத்தெரியாமல் தான் வேறிடத்திற்குப்
போய்விடவேண்டியது.

## உபாயவிதி.

க0எ—இந்தப்படியாக சத்துருஜயஞ்செய்கிறவனுக்கு யார்வி
ரோதஞ்செய்வார்களோ அவர்களை சாம-தாந-பேத-தண்ட- உபா
யங்களினால் தனக்குச் சுவாதீநப்படுத்தவேண்டியது.

க0அ—விரோதிகள் சாமதாநபேதங்களினால் சுவாதீநப்படாவிட்டால்மாத்திரம் தண்டோபாயத்தினால் மெதுவாகச் சுவாதீநப்படுத்தவேண்டியது.

க0௯—இந்த நான்குபாயங்களுக்குள் சாமோபாயத்தில் பிரயாசை செலவு இல்லாததாலும் தண்டோபாயத்தில் காரியசாதகம் ஆகிறதினாலும் அவ்விரண்டையும் அரசர்களுக்கு இராச்சியமுதலிய சுகத்தைத்தருவதாக பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

## உலகபரிபாலநதருமம்.

கக0—பயிரிடுகிறவன் பயிருடனுண்டான புல்லுமுதலானவைகளை பிடுங்கிவிட்டு பயிர்களைக்காப்பாற்றுகிறாற்போல்அரசன் தன் தேசத்திலுண்டான துஷ்டர்களைத்துரத்திவிட்டு நல்லோர்களைக் காப்பாற்றவேண்டியது.

ககக—எந்தவரசன் மூடத்தனத்தினாலே நல்லவர் பொல்லாதவரென்று பகுத்தறியாமல் எல்லோரையுந் துன்பப்படுத்துவானோ அவன் இராச்சியத்தையுமிழந்து தானும் புத்திரமித்திரகளத்திராதிகளுடனே யிறந்துபோவான்.

ககஉ—பிராணிகளின் சரீரத்தைத் துன்பப்படுத்தினால் பிராணனெப்படிபோய்விடுமோ அப்படியே அரசன் தேசத்தாரைத் துன்பப்படுத்தினால் அவன்பிராணன் போய்விடும்.

ககரு—தேசத்தைக்காப்பாற்றுவதற்காக மேற்சொல்லும் உபாயத்தை அரசன் அநுசரிக்கவேண்டியது. அதனாலதிகப் பிரயாசையில்லாமல் விருத்தியடைகிறான்.

உத்தியோகஸ்தர்களை

## ஏற்படுத்தவேண்டியவிதி.

ககச—இரண்டு அல்லது மூன்று-அல்லது ஐந்து-அல்லது நூறு

கிராமங்களுக்கு ஒருவிசாரணைக்காரனைத் தக்கபடி ஏற்படுத்தவேண்டியது. அதுகளை தான் மேல்விசாரணைசெய்யவேண்டியது.

கக௫—அந்தந்தக்கிராமத்துக்கு ஒரு யஜமானனையும் அதற்கு மேல் அந்தப்பப்பத்துக்கிராமாதிபதிகளுக்கு மற்றவொருயஜமானனையும் அப்படியே அவர்கள் இருபது இருபது பேருக்கு மற்றோர்யஜமானனையும், அதற்குமேல் அவர்கள் நூறுநூறுபேருக்கு மற்றோர்யஜமானனையும்,அதற்குமேல் அவர்கள் ஆயிரம்பேருக்கு மற்றோர் யஜமானனையும், விசாரணைக்காரனாக ஏற்படுத்தவேண்டியது.

கக௬—அந்தந்தக் கிராமாதிபதிகள் அந்தந்த ஊரிலுண்டான சொற்பமான திருட்டுமுதலான வியவகாரங்களை தாமே முடிவு செய்யலாம்.அதற்குமேற்பட்ட குற்றங்களை தன்யஜமானனான பத்துக்கிராமாதிபதிக்குத் தெரியப்படுத்தவேண்டியது. அவனும் தன்னால்முடிவுசெய்யக்கூடாதவைகளைதன்யசமானனான இருபது கிராமாதிபதிக்குத் தெரிவிக்கவேண்டியது.

ககஎ—அவனும் தன்னால்முடிவுசெய்யப்படாதவைகளை தன்யசமானனான நூறுகிராமாதிபதிக்கும் அவனும் இவ்விதமாகவே ஆயிரங்கிராமாதிபதிக்கும் அறிவிக்கவேண்டியது.

## சம்பளவேற்பாடு.

கக௮—கிராமாதிபதி தன்கிராமத்துப்பிரஜைகளால் நாடோறும் அரசனுக்கு கொடுக்கவேண்டியவைகளான சோறு-தண்ணீர்-விறகு-இவைகளைத்தன்ஜீவநத்துக்கு எடுத்துக்கொள்ளலாம்.

கக௯—பத்துக்கிராமாதிபதி ஏரொன்றுக்கு ஆறுமாடு விடுகோலுள்ள இரண்டேரால் உழப்படுகிறபூமியில்விளைந்த தானியத்தையும்,இருபதுகிராமாதிபதி அதற்கு ஐந்துபங்குதானியத்தையும்,நூறு

கிராமாதிபதி நடுத்திறமான ஒருகிராமத்தையும், ஆயிரங்கிராமாதி பதி நடுத்திறமான ஒருபட்டணத்தையும் தன்ஜீவநத்திற்காகஅநு பவித்துக்கொள்ளவேண்டியது.

கஉ௦—கிராமாதிபதிமுதல் ஆயிரங்கிராமாதிபதிவரையில் செய் ததீர்மானங்கள் கிராமத்தாருக்கு விரோதமாகவிருந்து அரசனிட த்தில் பிரயாதுவந்தால் சகலஜநங்களிடத்தும் அன்புள்ள ஒருமந்தி ரி சோம்பலில்லாமல் அதைவிசாரிக்கவேண்டியது.

கஉக—பட்டணங்கள்தோறும் இவ்வரசன் எல்லாக்காரியங்களையு ம் விசாரிக்கிற ஒருநியாயாதிபதியை ஏற்படுத்தி அவனுக்கு உயர்ந் ததாயும் ஆகாசத்தில் நக்ஷத்திரங்களினடுவில் சுக்கிரன்போல் அதி கஒளியுள்ளதாயும் கோட்டையுள்ளதாயும் இருக்கிற ஒருவீட்டையு ங்கொடுக்கவேண்டியது.

கஉஉ—அந்தநியாயாதிபதியும் அந்தக் கிராமாதிபதிமுதலான தனக்குக்கீழ்ப்பட்டவர்களை தானாகவே அந்த அந்தவிடத்திற்போ ய் விசாரிக்கவேண்டியது.தன்சேவகாரர்களினால் கிராமத்தார்களி ன் கருத்தையுமறிந்து கிரமப்படி தீர்மானிக்கவேண்டியது.

கஉ௩—உலகத்தில் அரசன் நியமித்த உத்தியோகஸ்தர் அனேகரு ம்வழக்காளியிடத்திற் பொருளைவாங்கிக்கொண்டு மூடத்தனத்தின ல் பிரசைகளைப்பெரும்பாலுந் துன்பப்படுத்துகிறார்கள் ஆதலா ல் அவர்களிடத்தினின்றும் குடிகளை அரசன் தான்காப்பாற்றவே ண்டியது.

கஉ௪—எந்தவுத்தியோகஸ்தர்கள் வழக்காளியிடத்தில் பொரு ளைவாங்குவார்களோ அவர்களின் பொருண்முழுமையும் அரசனப கரித்துக்கொண்டு அந்தப்பாபிகளையுந் தேசத்தைவிட்டுத் துரத்த வேண்டியது.

கஉ௫—அரசன்-எவற்றொழில்செய்கிற வெள்ளாட்டி-வேலைக்காரன் இவர்களுக்கு அவரவர்கள்யோக்கியதைக்குத்தக்கபடி நாடோறுஞ் சம்பளங்கொடுக்கவேண்டியது.

கஉ௬—சாமொவி-தண்ணீரெடுக்கிறவன்-இப்படிக்கொத்த வேலைக்காரர்களுக்கு தினந்தோறும் அந்தந்ததேசத்தில் வழங்கிவரும் ஒருபணஞ் சம்பளமும்,ஆறுமாதத்திற்கிரண்டு துணியும்,மாதத்திற்கு ஒருதுரோணநெல்லும்,அதற்குமேலான மடைப்பள்ளிவேலை செய்கிறவர்களுக்கு நாடோறும் ஆறுபணஞ்சம்பளமும், மாசத்திற்கு இரண்டுதுணியும் ஆறு * துரோணநெல்லும் கொடுக்கவேண்டியது.

## தீர்வைவிதி.

கஉ௭—வியாபாரிகளிடத்தில் அவரவர்கள் வாங்கினபொருளின் கிரயத்தையும்,விற்பனைசெய்யுங்கிரயத்தையும்,அந்தச்சரக்குவந்த மார்க்கத்தையும், அவர்களின் பிரயாசத்தையும், அதனாலுண்டான செலவையும், அவர்களுக்குவரப்பட்டமொத்தலாபத்தையும்,யோசித்துப்பார்த்து தக்கபடி தீர்வைவாங்கவேண்டியது.

கஉ௮—தானும் குடிகளும் எப்படி சுகமாகப் பயனையடையலாமோ அந்தப்படியோசித்து அரசன்தீர்வைவாங்கவேண்டியது

கஉ௯—இரத்தம்-பால்-தேன்-இவைகளை-அட்டை-கன்று-வண்டு-இவைகள் எப்படி சிறுகசிறுக கிரிகிக்கின்றனவோ அப்படியே அரசனும் குடிகள் தனக்குக் கொடுக்கவேண்டிய வருஷத்தீர்வையை சிறுகசிறுகவாங்கிக்கொள்ளவேண்டியது.

---

* எட்டுமுஷ்டிகொண்டதாநியத்திற்கு கிஞ்சித்தென்றும் அது எட்டுகொண்டதற்கு-புஷ்கலமென்றும்-அது-நாலுகொண்டதற்கு-ஆடகமென்றும்-அது-நாலுகொண்டதற்கு-துரோணமென்றும் பெயர்.

கஙௐ—அதாவன-பொருள்-பசு-இவைகளால்வரப்பட்ட லாபத்தில் ஐம்பதிலொன்றும்,தானியத்தில் அந்தந்தநிலத்தின் சாராசாரத்துக்குத்தக்கபடி எட்டில்-அல்லது ஆறில்-அல்லது பன்னிரண்டில் ஒருபங்கும் தீர்வைவாங்கிக்கொள்ளவேண்டியது.

கஙக—மரம்-கொடி-மாமிசம்-தேன் - நெய்- வாசநாதிரவியம் இரசம்-புஷ்பம்-கிழங்கு-பழம்-இவைகளினும்.

கஙஉ—இலை-கறியமுது-விறகு- தோல்-மரவுரி - மண்பாண்டம் இரத்திநமுதலியவைகள் இவைகளினும் இலாபத்தில் ஆறிலொருபங்கை அரசன் தீர்வையாகவாங்கிக்கொள்ளவேண்டியது.

கஙங—அரசனெளியவனாகவிருந்தாலும் வேதமோதின பிராமணசிரோஷ்ட்டனிடத்தில் ஒருபோதும் தீர்வைவாங்கக்கூடாது.அந்தப்பிராமணனும் தன்றேசத்தில் பசியினாற்றுன்பப்படக்கூடாது.

கஙச—எந்தஅரசன் இராச்சியத்தில் வேதமோதினவன் சாப்பாட்டுக்கில்லாமல் பசியினால் துன்பப்படுகிறானோ அந்தவரசன் தேசமெல்லாஞ்சீக்கிரத்திலேயே க்ஷாமத்தினாற்றுன்பப்பட்டு அழிந்துவிடும்.

கஙரு—அந்தப்பிராமணர் படித்திருக்கிற வேதசாஸ்திரத்தையும், அவனுடைய ஞாநாநுஷ்டாநத்தையும் அறிந்து அதற்குத்தக்கபடி அவனுக்குத்தருமமான ஜீவநோபாயத்தையேற்படுத்தி தகப்பன் றன்பெற்றபிள்ளையைப்போல் அவர்களை திருடர்முதலானவர்களிடத்தினின்றும் பயப்படாமல் இருக்கும்படி காப்பாற்றவேண்டியது.

கஙசு—அரசர்களால் காக்கப்பட்டஅந்தப்பிராமணர்கள் திநந்தோறும்இவன்தேசத்தில் யாதொருதருமத்தைச் செய்கிறார்களோ அதனாலரசனுக்கு ஆயுள்-பொருள் - தேசம்- இவைகள் விருத்தியடைகின்றன.

கஙௗ—காய்-கறிமுதலானவைகளைத் தன்றேசத்தில் கொண்டுவ
ந்து விற்றுப்பிழைக்கிற ஏழைகளிடத்தில் வருஷத்திற்கொருதரம்
சொற்பபொருளைத் தீர்வையாக அரசன் வாங்கிக்கொள்ளவேண்
டியது.

கஙஅ—மிட்டாயிக்காரர்- சிற்பவேலைக்காரர்-கொல்லத்துக்காரர்
மூட்டைக்காரர்-இவர்களிடத்தில் மாதத்திலொருநாள் அரசன் வே
லைவாங்கிக்கொள்ளவேண்டியது.

கஙகூ—குடிகளிடத்தில் தயையினல் இவ்விதமான தீர்வையும்
வாங்காவிடில் தான் துன்பப்படுவான். அதிகமாகவாங்கினல் குடிக
ள் துன்பப்படுகிறார்கள். ஆதலா லிருவருக்குங் கெடுதிநேரிடாதவ
ண்ணஞ் செய்யவேண்டியது.

கச०—அந்தந்தக்காரியத்திற்குத்தக்கபடி சிலகாரியத்தில்கோப
முள்ளவனும்,சிலகாரியத்திற்பொறுமையுள்ளவனும்,இருக்கவே
ண்டியது. அப்படியிருந்தால் குடிகளுக்கு இஷ்டமுள்ளவனு யி
ருப்பான்.

கசக—அரசன்தானே காரியவிசாரணைசெய்ய வருத்தமானசமய
த்தில் தருமமறிந்தவனும்,ஜிதேந்திரியனும், பொறுமையுள்ளவ
னும், நற்குலத்தானுமிருக்கிற மந்திரியை அந்த ஆசநத்திலிருந்
து வியவகாரங்களை விசாரிக்கும்படி நியமிக்கவேண்டியது.

கசஉ—இதுவரையில் சொல்லிய ஏற்பாடுகளை ஏற்படுத்தி அர
சன் அஜாக்கிரதையில்லாமல் தன்பிரஜைகளைக் காப்பாற்றவேண்
டியது.

கசரு—ஏனென்றால் எந்தவரசன் மந்திரி முதலானவர்களுட
னே உலகத்தை ஆளும்போது திருடர்முதலானவர்களால் குடிகள்
துன்பப்படுகிறார்களோ அந்தவரசன் ஜீவித்திருந்தபோதும் இற
ந்தவனுக்குச் சரியானவன்தான்.

கசச—க்ஷத்திரியனுக்கு எல்லாத்தருமங்களைவிட தருமப்படிபி ரஜைகளைக் காப்பாற்றுகிறது உயர்ந்ததருமம். அவன் விதிப்படி தீர்வைவாங்கிஜீவிப்பதும் தருமத்தையே கொடுக்கிறது.

கசரு—அரசன் இரவில் நான்காவதுயாமத்தில் எழுந்து மலஜல பாதைகளைத் தீர்த்துக்கொண்டு ஜெபம்-ஹோமம்-பிராமணபூஜை இவைகளைச்செய்து பின்பு லக்ஷணமுள்ளதான சபைக்குப்போக வேண்டியது.

கசசு—அவடத்தில்இருந்துகொண்டு தன்னைப்பார்க்கவந்த சகலப்பிரஜைகளை தன்றரிசநம்- பேச்சு-இவைகளாற் சந்தோஷிப்படுத்தி யனுப்பிவிட்டு பின்பு தன்மந்திரிகளோடு தன்தேசசங்கதிகளைக்குறித்து யோசிக்கவேண்டியது.

## ஆலோசனைவிதி.

கசஎ—மலையினுச்சி-அல்லது மேல்மெத்தை-காடு- இவைகளில் ஒருவர்கண்ணுக்கும் தாங்கள்யோசிக்கிறது தெரியாமலிருக்கும்படி யோசிக்கவேண்டியது.

கசஅ—எந்தஅரசன் மந்திராலோசனைசெய்யும்போது மற்றொருஜநங்கள் அதை அறியவில்லையோ அவ்வரசன் கொஞ்சபொக்ஷிமுள்ளவனுயிருந்தாலும் பூமிமுழுதும் ஆளுவான்.

கசகூ—மூடன்-ஊமையன்-குருடன்-செவிடன்-கிளி - கிழவன் ஸ்திரி-நோயாளிகள் மிலேச்சன்-அங்கஹீனன்-இவர்கள் - தாங்கள் யோசிக்கிறவிடத்திலிருந்தால் துரத்திவிடவேண்டியது.

கரு௦—ஏனெனில் முன்சொன்னவர்கள் ஒருகால்பரியாசஞ்செய்யப்பட்டார்களாகில் மந்திராலோசனையை மற்றொருவருக்குச் சொல்லுவார்கள் ஸ்திரீகள் மிகுதியுஞ்சொல்வார்கள் ஆகையால் இவர்களைநீக்கவேண்டியது.

கடுக—பகலிலாவது இரவிலாவது பதினைந்துநாழிகைவேளையி ல் தன்சிரமத்தைப் போக்கடித்துக்கொண்டு இளைப்பில்லாதவனாய் தருமம் - அர்த்தம்-காமம்-இவைகளைக்குறித்து அந்தமந்திரிகளோ டாவது தான்தனியாகவாவது யோசிக்கவேண்டியது.

கடுஉ—ஒன்றுக்கொன்று விருத்தமாயிருக்கிற தருமார்த்தகாம ங்களை விரோதமின்றிநடத்தலைக்குறித்தும், தன்பெண்ணைத் தகுந் தவிடத்திற்கொடுப்பதைக்குறித்தும்,தன்பிள்ளைக்கு வித்தை கற்பி ப்பதைக்குறித்தும்.

கடுங—பத்திரிகைகொண்டுபோகிற தூதனை யோரிடத்திற்கு அனுப்புவிப்பதைக்குறித்தும்,ஆரம்பித்தகாரியத்தை முடிப்பதை க்குறித்தும், அந்தப்புரச்சங்கதியைக்குறித்தும், வேவுகாரர்களின் செய்கையைக்குறித்தும்.

கடுச—மற்ற கப்பம்வாங்குவது, சம்பளங்கொடுப்பது, குற்ற முள்ளவுத்தியோகஸ்த்தர்களைநீக்குவது வழக்காளிகளைவிசாரிப்பது அபராதம்போடுவது, பிராயச்சித்தஞ்செய்துவைப்பது,தீர்வைவா ங்குவது-சதுரங்கபலம்.சாரபுருஷின் சேவகர்கள்-தனக்காகப்பயிர் பார்க்கிறவன்-யாபாரஞ்செய்கிறவன்-தன்னந்தப்புரக்காவற்காரன் சந்நியாசிவேடம்பூண்டவன்- தேசசமாச்சாரம் - இவனுடைதிர்க் கத்தருந்தகாதென்பது-இவைகளையும்.

கடுரு—மத்தியஸ்தன்கருத்து தன்னைஜயிக்க நினைத்தவன்செய் கை தன்றேசத்திற்கிரண்டுதேசம் விட்டிருக்கிறவனபிப்பிராயம் தன்பக்கத்துத்தேசத்தானபிப்பிராயம் தனக்கனுதியான சத்துரு க்களினபிப்பிராயம் இவைகளையும் சாக்கிரதையாகஆலோசிக்கவே ண்டியது.

கடுசு—தன்தேசத்திற்கு இரண்டுதேசம்விட்டிருக்கிறவன் மத்தியஸ்தன் தன்னைஜயிக்கநினைத்தவன் தன்பக்கத்துத்தேசத்தான் இந்தநால்வரும் மேற்சொன்ன எட்டும் தேசத்திற்கு மூலப்பிரகிருதிகள்.

கடுஎ—மந்திரி-தேசம்-கோட்டை-பொக்கிஷம்-சதுரங்கபலம் இவ்வைந்தும் முன்சொன்ன பன்னிரண்டு மூலப்பிரகிரதிகளுக்கும் தனித்தனியாகவுண்டு. ஆகையால் தேசத்திற்கு பிரகிரதி எழுபத்திரண்டென்றுஞ்சொல்லுகிறார்கள்.

கடுஅ—தன்தேசத்திற்கு பக்கத்திலிருக்கிறவனையும் அவனையநுசரித்தவனையும்-சத்துருவாயும், அதற்கயல்தேசத்தானை தனக்குமித்திரனையும், அதற்கயல்தேசத்தானைமத்தியஸ்தனையும், அறியவேண்டியது.

கடுகூ—இவர்களையெல்லாம் சதுர்விதவுபாயத்தினாலாவது அல்லது தண்டத்தினாலேமாத்திரமாவது தனக்குச்சுவாதீநப் படுத்திக்கொள்ளவேண்டியது.

## சந்திமுதலியவைகள்.

கசு0—சத்துருவுடன் சமாதானமாகுதல்-சண்டைசெய்தல்-யுத்தத்திற்குப்போகுதல்-போகமாலிருத்தல்-தன்சேனையையிரண்டாகப்பிரித்தல்-பலமுள்ள மற்றொருவனைத்தானடைதல்-இவ்வாறினையும்ஆலோசிக்கவேண்டியது.

கசுக—இந்தப்படி யோசித்துப்பார்த்து எந்தெந்தக்காரியங்களுக்கு எதையெதைச்செய்யவேண்டுமோ அதையதைச்செய்யவேண்டியது.

கசுஉ—இவ்வாறுகுணங்களும் ஒவ்வொன்று இவ்விரண்டுவிதமாகுமென்றுசொல்லுகிறார்கள்.

கசுரு—சத்துருக்களோடு சமாதநஞ்செய்வது தற்காலபலனுக்கும் பின்னுண்டாகப்போகிறபலனுக்குமென்று இரண்டுவிதமாகவிருக்கின்றது.

கசுசா—சண்டைசெய்வது அகாலத்திலேனுங் காலத்திலேனும் தன்பிரயோசநத்துக்காக சத்துருவுடன் எதிர்ப்பதென்றும் தன் ஸ்நேஹனைக்காப்பாற்றுவதற்காக அவன்சத்துருவுடன் எதிர்ப்பதென்றும் இரண்டுவிதமாகிறது.

கசுரு—சண்டைக்குப்போகிறது சத்துருவின் வியசநகாலத்தில் தான் தனியாகச்சென்று எதிர்ப்பதென்றும் - அவனுக்குப்பலமுள்ளபோது தன்ஸ்நேஹனோடு சேர்ந்தெதிர்ப்ப தென்றும் இரண்டுவிதமாகிறது.

கசுசா—யுத்தத்திற்குப்போகாமலிருத்தல், தனக்கு ஜந்மாந்திரகர்மத்தினாலாவது -சுபாவத்தினாலாவது-சேனை பொக்கிஷம்- இவைகளுக்கு குறைவுவந்திருக்கும்போதென்றும் தன்ஸ்நேஹனுக்கு தானுபகாரஞ்செய்யவேண்டி யிருக்கும்போதென்றும் - இரண்டுவிதமாகிறது.

கசுஎ—தன்சேனையை இரண்டாகப்பிரித்தல் தன்சத்துருவுடன் சண்டைக்குப்போகிறதற்கென்றும் அந்தச்சமயத்தில் தன்பட்டணத்தைக் காப்பாற்றவேண்டியதற்கென்றும் இரண்டுவிதமாகிறது.

கசுஅ—பலவந்தனையடைதல் சத்துருவினாலட்போது நேரிட்டதுன்பத்தைப் போக்குகிறதற்கென்றும் பின்புசத்துருவால் பயங்வாராமைக்கென்றும் இரண்டுவிதமாகிறது.

கசுகூ—எப்போது ஒருவனோடு சமாதாநஞ்செய்வதால் பின்பு அதிகலாபமுறுதியாகக்கிடைக்குமோ அவனுக்குக்கொஞ்சம்பொருள்கொடுத்தாகிலும் அவனிடத்தில் கொஞ்சம்வாங்கிக்கொண்டாகிலும் சமாதாநமாகவேண்டியது.

கஎ0—எப்போது தன்மந்திரிமுதலான பரிசநங்கள் சண்டையில்மநக்களிப்புள்ளவர்களாகவிருப்பரோ அப்போது தனக்குஞ் சதுரங்கபலமிருந்தால் சண்டைக்குத்துவக்கலாம்.

கஎக—எப்போது தன்னுடையமந்திரி-சேநை- இவர்கள் சந்தோஷம்-பலம்-உள்ளவர்களாயும், சத்துருவின்சேநை துன்பப்படுகிறதாயும்,தன்புத்திக்கு நன்றாகத்தோற்றுமோ அப்போது சண்டைக்காகச் சத்துருவுடன் எதிர்க்கவேண்டியது.

கஎஉ—எப்போதுதனக்குச்சதுரங்கபலம்-வாகநம்-இவைகளாற்குறைவுண்டாகுமோ அப்போது சத்துருக்களை கப்பம்கொடுத்து நல்வார்த்தைசொல்லிச் சண்டைக்குப்போகாம லிருக்கவேண்டியது.

கஎரு—எப்போது சகலவிதத்தாலும் சத்துரு ஜயிக்கக்கூடாதவனாகக்காணப்படுவானோ அப்போது தன்சேநையையிரண்டாகப்பகுத்து ஒன்றைச்சண்டையிலும் மற்றொன்றைத் தன்கோட்டையிலுநிறுத்தி தானும் அக்கோட்டையை அடையவேண்டும்.

கஎச—எப்போதுதான் சத்துருசேநைக்கு உட்பட்டவனாகப் போய்விடுவன்போல் தோற்றப்படுமோ அப்போது-தர்மம்-பலம்-இவைகளையுடைய மற்றொரு அரசனைச் சரணமாக அடையவேண்டியது.

கஎடு—தனக்குவிரோதமான தன்னுடைய பிரகிருதிபலம் சத்துருபலம் இவைகளாலுண்டானதுன்பத்தை எவன் நீக்குவானோ அவனைநாடோறும் குருவைப்போல் உபசரிக்கவேண்டியது.

கஎசு—ஒருவனையடுத்தும் தனக்குவிரோதம் நீங்காமல் தோஷமே நேரிட்டால் நியாயப்பிரகாரம் பயமின்றி இராச்சியத்தை

யாவது சுவர்க்கத்தையாவதுகொடுக்கிறதான சண்டையைச்செய்ய வேண்டியது.

களஎ—நீதிசாஸ்திரமறிந்தவன் தன்சத்துரு மித்திரன்-மத்தியஸ்தன்-இவர்கள் தனக்குமேற்பட்டவர்களாக எப்படியிருக்கமாட்டார்களோ அப்படிக்கொத்தமுயற்சியைச் சதுர்விதவுபாயத்தினுலும் செய்யவேண்டியது. பொருளாசையினுல் மித்திரனும் துரோகம் செய்வானென்று இங்கு அவனையும் எண்ணப்படுகிறது.

களஅ—முன்செய்தகாரியத்தினுல் வந்தலாபம்- அப்பொழுது செய்யவேண்டியகாரியம்- தான்செய்புங்காரியத்தா லுண்டானகுணதோஷம்-வரவு-செலவு-இருப்பு-இவைகளையும்- நன்ருகயோசிக்கவேண்டியது.

களகூ—எவன் குணதோஷங்களையறிந்து குணமுள்ளதைச்செய்து தோஷமுள்ளவைகளை நீக்கி அப்போது செய்யவேண்டியதையும் உடனேசெய்து முன்செய்தகாரியத்தைப் பூர்த்திசெய்யநினைக்கிறவனுகியுமிருக்கிருனே அவனுக்கு எப்போதுஞ் சத்துருபயமுண்டாகாது.

கஅ0—வெகுவாகச்சொல்லுகிறத்தினுலென்ன சத்துரு-மித்திரன்- மத்தியஸ்தன்- இவர்கள் இவனையெப்படி துன்பப்படுத்த மாட்டார்களோ அப்படிக்கொத்த உபாயந்தேடவேண்டியது.

கஅக—அரசன்-எப்போது சத்துருவுடன் சண்டைக்குப்போக நினைக்கிருனே அப்போது மேற்சொல்லும்விதிப்படி அவசரப்படாமல் போகவேண்டியது.

கஅஉ—சுபமான மார்கழிமாதத்தில் அரசன் சண்டைக்குப் போகவேண்டியது. தனக்குப்பலக்குறைவில்லாதிருந்து பலகாலத்திலேயே சத்துருவின்தேசத்தை யெதிர்க்கவேணுமென்று மநமிருந்தால் பங்குனி சித்திலாமாதங்களிலும் போகலாம்.

கஅரு—மற்றமாதங்களிலும்-தனக்கு அகத்தியம் ஜயமுண்டாகுமென்றும் தன்சத்துருசதுரங்க பலமில்லாமல் துன்பப்படுகிறானென்றும் தோன்றினுற்போகலாம்.

கஅச—தன்பட்டணத்தில் தகுந்த உத்தியோகஸ்தனை அநேகஞ்சேனைகளுடன் வைத்துவிட்டுப் பிரயாணத்துக்குத்தக்க வாகநமுதலானவைகளையும் சத்துருதேசத்திலிருப்பதற்கு தகுந்த அரிசிமுதலிய சாமான்களையும் சாக்கிரதைசெய்துகொண்டு தன்சேனையையும் நன்றாகச் சுவாதீநப்படுத்திக்கொண்டு சாரார்களையும் ஏற்படுத்தி பின்பு யுத்தத்திற்குப்போகவேண்டியது.

கஅடு—வழியிலுண்டானமரங்களைக்கழித்து- புதருகளைவெட்டிமேடுபள்ளங்களைநிரவி வேவுகாரரால் எதிரியினபிப்பிராயத்தையறிந்துகொண்டும் இரதம்-கஜம்-துரகம்- பதாதி-சேநாதிபதி- தொழிலாளி-இவ்வாறுவிதமானபலத்தையுங் கூட்டிக்கொண்டு யுத்தசாஸ்த்திரப்படி சத்துருவின்பட்டணத்திற்கு மெதுவாகப் போகவேண்டியது.

கஅசு—தனக்குத்தெரியாமல் தன்சத்துருவினிடத்திற் பேசுகிறமித்திரன் முன் தன்னிடத்திலிருந்து பின் சத்துருவிடத்திற்குப்போய் மறுபடியும்-தன்னிடத்திற்குவந்திருக்கிறவீரன் இவ்விருவரிடத்திலும் மிகுந்தசாக்கிரதையாக இருக்கவேண்டியது.இவர்களைஜயிப்பது மிகவுங்கஷ்டமானது.

கஅஎ—அந்தச்சத்துருவின் பட்டணத்தின்வழியை தெண்டவியூகத்தினுலாவது-சகடவியூகத்தினுலாவது - வராகவியூகத்தினுலாவது மச்சவியூகத்தினுலாவது- சூசிகாவியூகத்தினுலாவது - காருடவியூகத்தினுலாவது-மறைக்கவேண்டியது.தெண்டவியூகமாவது முன்சேனைத்தலைவனும்-நடுவிலரசனும்-பின்னர்-சேநாதிபதியும் -இருபுற

மும்-யானை-குதிரைகளும்-இதற்கப்புறம்-காலாளுகளுமாயிருப்ப து.சகடவியூகமாவது-முன்னே-கொஞ்சஞ்சேனையும் பின்னாலதி கசேனையுமாயிருப்பது. வராகவியூகமாவது - முன்னும்பின்னுஞ் சொற்பசேனைகளும்.இடையில் அதிகசேனைகளாகவிருப்பது.இத ற்குவேறான - மச்சவியூகமுங்- காருடவியூகமும் - சிற்றெறும்புசா ரைபோல் ஒரேவரிசையாய்நிற்பது சூசிகாவியூகம்- தெண்டவியூக த்தால்-நாலுபக்கத்திலும் பயமுண்டாகும்போதும்- சகடவியூகத் தால்-பின்னாற்பயமுண்டாகும்போதும்-வராகவியூகம்-காருடவியூ கம் இவைகளால்-இருபக்கத்திலும்-பயமுண்டாகும்போதும்- மச் சவியூகத்தால் முன்னும்பின்னும் பயமுண்டாகும்போதுஞ்-சூசி காவியூகத்தால்-முன்னே பயமுண்டாகும்போதும் எதிர்க்கவேண் டியது.

கஅஅ—அந்தச்சத்துருவின் பட்டணத்துக்குள் எந்தத்திக்குவ ழியாய் தனக்கு அதிகபயமுண்டாகுமோ அந்தத்திக்கில் அதிகசே னையைவைக்கவேண்டியது. பத்மவியூகத்தால் எப்போதுமெதி ர்க்கலாம்.

கஅகூ—ஆயிரந்தேர்-ஆயிரம்யானை-ஆயிரங்குதிரை - ஆயிரங்கா லாள்-இதற்கு-ஒருசதுரங்கமென்றுபெயர். இப்படி பத்துகொண் டதற்கு யசமாநன் - பத்தியென்றுபெயருடையவன்.பத்துபத்திக் குயஜமாநன்-சேநாதிபதி.இப்படி பத்துச்சேநாதிபதிக்கு யஜமா நன்-சேனைத்தலைவன்.இப்படிக்கொத்தசேனைத்தலைவனையும்,சேநா திபதியையும், அவரவர்சேனைகளுடன் சத்துருவின்பட்டணத்தின் நால்குபுறத்திலும்நிறுத்தி எந்தப்பக்கத்தில் தனக்குப்பயமுண்டா குமோ அதை முன்னர் எதிர்க்கவேண்டியது.

ககூ௦—சிலசேனைகளை போர்க்களத்திற்கு நெடுந்தூரத்தில் நிறு

த்தி அலவகளுக்குப் பயமில்லாதவர்களாயும்,சமர்த்தாளாயும்,தன க்கிஷ்டர்களாயுமிருக்கிற சேநாதிபதிகளை யேற்பாடுசெய்து பேரி கை கனகதப்பட்டைமுதலிய வாத்தியமடிக்கும்போது சண்டைக் குவருகிறதென்றும், மற்றொருவாத்திய மடிக்கும்போது ஓடிப் போகிறதென்றுஞ் சங்கேதஞ்சொல்லிவைக்கவேண்டியது.

கஙக—பலமில்லாதவர்களை கும்பலாகவாவது - சூசிகாவியூகம் வச்சிரயூகமாயாவது நின்றுகொண்டும்- பலமுள்ளவர்களைத் தனித் தனியாகநின்றுகொண்டுஞ் சண்டைசெய்யச்சொல்லவேண்டியது.

கஙஉ—ஸமபூமியில்-தேர்-குதிரைகளிருந்துகொண்டும் -கொஞ் சஜலமுள்ளவிடத்தில்-ஒடம்-யானை - இவைக ளிருந்துகொண்டும்- செடி-புதர்-உள்ளவிடத்தில்-பாணங்களாலும்,அவையில்லாதவிடத் தில் உலக்கை-கத்தி-முதலிய-ஆயுதங்களாலுஞ் சண்டைசெய்யவே ண்டியது.

கஙரு—குருக்ஷேத்திரம்-மச்சதேசம்-பாஞ்சாலம் - சூரசேநம் இந்தத்தேசத்திலுண்டானவர்களையும்,மற்றும்-பலமுள்ளவர்களாயு ம்-உருவில் உயர்ந்தவர்களாயும்-பருமனில்லாதவர்களாயும்-இருக்கி றவர்களைச் சேனைக்குமுன் வைத்துக்கொண்டு சண்டைசெய்யவே ண்டியது.

கஙச—சேனைகளைக்கூட்டி - நீங்கள்ஜயித்தால் மரியாதைசெய் வேன்-தோற்றோடினால் நரகத்தையடைவீர்கள் என்று பிரியவச னஞ்சொல்லி அவர்களின்கருத்தையறிந்து அவர்க ளதற்காகத் து ன்பப்படுகிறதற்கும். சந்தோஷிப்படுகிறதற்கும்-உண்டானகாரண த்தையும் சத்துருவிஷயத்தில் அவர்களுக்கிருக்கிறகருத்தையும்அறி யவேண்டியது.

கஙடு—சண்டைக்குவந்த சத்துருவை மறுபடியோடவொட்

டாமல் தகையவேண்டியது.அவன்தேசத்துஜநங்களைப் பீடிக்கவேண்டியது. புல்லு-நெல்லு-விறகு-தண்ணீர்-சோறு-முதலியவற்றையும் அவர்களுக்குதவாமற் கெடுக்கவேண்டியது.

கக௯௬—அவனுக்குதவியான தடாகம்-ஏரி-இவைகளையும் உடைக்கவேண்டியது. கோட்டை-உழலைமரம் - முதலியவற்றையும்-நாசஞ்செய்யவேண்டியது. சதுரங்கசேனைகளையும், அபகரித்துக்கொண்டு இரவில் அவனைமிரட்டி அவமானஞ்செய்யவேண்டியது.

கக௯௭—தன்னை யவமானஞ்செய்த அரசன்வம்சத்திற் பிறந்தவனை-அவன்மந்திரிகளோடு ஜயிக்கவேண்டியது.அவனால் தன்சேனைக்குண்டான துன்பங்களையும் யோசிக்கவேண்டியது.தனக்குத் தசாநாதன் நல்லவனாயிருந்தால் பயமின்றி சண்டைசெய்யவேண்டியது.

கக௯௮—சாஸ்திரப்படியாக நல்வார்த்தைசொல்வது பொருளைக்கொடுப்பது-கலைப்பது - இம்மூன்றினாலுமாவது. அல்லது ஒன்றொன்றினாலாவது சத்துருவை ஜயிக்கவேண்டியதேயல்லது ஒருநாளுஞ் சண்டையையே முக்கியமாகச்செய்யக்கூடாது.

கக௯௯—ஜயமும்-தோற்பும்-இருவருக்கும் - பொதுவாகையால் வேறுபாயத்தினால் காரியம்-சாதகமாகிறபக்ஷத்தில் சண்டையைநீக்கவேண்டியது.

உ00—இம் மூன்றுபாயத்தினால் சத்துருவை ஜயிக்கக்கூடாதசமயத்தில் சத்துருவை ஜயிக்கத்தக்க சேனைகளைக் கூட்டிக்கொண்டு யுத்தஞ்செய்யவேண்டியது.

உ0க—இத்தப்பிரகாரஞ் சத்துருவை ஜயித்து தேவர்களையும் தர்மிஷ்டாளான பிராமணர்களையும் பூசித்து தன்சேனைகளுக்கும்

சம்மாநஞ்செய்து இனியெல்லோரும் பயமின்றியிருக்கலாமென்று பிரசித்தப்படுத்தவேண்டியது.

உ0உ—பின்பு-அத்தேயத்துக்குடிகள் மந்திரிகள் - இவர்களின் உட்கருத்தையறிந்து அந்தவரசன்-வம்சத்திற்பிறந்தவனை அத்தேயத்திற்கு முடிசூட்டி அவனிடத்திலொரு ஏற்பாடுசெய்துகொள்ளவேண்டியது.

உ0ரு—அவன் தனக்கு அடங்கியிருப்பதற்காக பிரமாணம்வாங்கிக்கொண்டு,மந்திரி-வேலைக்காரன்-இவர்களை அவனுக்கு ஏற்படுத்தி இரத்திநம்-வஸ்திரமுதலிய வெருமாநங்களைக்கொடுத்து சந்தோஷிப்படுத்தவேண்டியது.

உ0ச—ஒருவனுக்குப் பிரியமானபொருளை தான் வாங்கிக்கொள்ளுவது வருத்தமாயும்,அதைக்கொடுப்பது இஷ்டமாயும் இருக்கின்றது. ஆதலால் ஒருவிசேஷகாலத்தில் ஒருவெகுமதிசெய்தால் சந்தோஷத்தை யுண்டுபண்ணுகிறது.

உ0டு—முன்பிறப்பிற்செய்த புண்ணியபாபத்தின்பயன் தேவர்மூலமாயும் மானுடர்மூலமாயும் உண்டாகிறது. அவற்றில் தேவர்மூலத்துக்கு யோசனையில்லை.மானுடர்மூலத்துக்குத்தான் இவ்விதமான யோசனைமுதலியவையுண்டு.

உ0கா—இவ்விதமாகச் சண்டையாவது போடவேண்டியது. அல்லது-அவனுடன் சமாதாநஞ்செய்து அவனைத் தோழனுக்கிக்கொண்டு அவன்கொடுத்த பொருளையும், தேசத்தையும், வாங்கிக்கொண்டு ஸ்நேகலாபம் இரத்திநலாபம்-பூமிலாபம் - இம்மூன்றுவிதமானபலன் வந்ததைப்பார்த்து திரும்பவேண்டியது.

உ0எ—தானெதிர்க்கப்போன தேசத்திற்கு பின்தேசத்தான்

பக்கத்துத்தேசத்தான் அவர்களுக்கொத்தாசைசெய்பவன் இவர்கள் கருத்தறிந்து அந்தச்சத்துரு தனக்குத்தோழனானாலும் ஆகாவிட்டாலும் அவன்கொடுக்கிறபூமியையும் பொருளையுமாவது வழிச்செலவுக்காக வாங்கிக்கொள்ளவேண்டியது.

உ0அ—தத்காலமிளைத்திருந்தாலும் பின்னாற்செளக்கியப்படத்தக்கவனையும்,ஸ்திரபுத்தியுள்ளவனையுமிருக்கிற மித்திரனையடைகிறத்தினாலே அரசன் விர்த்தியடைகிறாப்போல் சுவர்நம்-பூமி- இவைகளால் விர்த்தியடையமாட்டான்.

உ0கூ—தருமம்-செய்ந்நன்றி-உள்ளவனையும் ஜநங்களைச்சந்தோஷிப்படுத்துகிறவனையும் தன்னிடத்தில் விசுவாசமுள்ளவனையும், துவக்கினகாரியத்தை முடிக்கிறவனையும்-சுவாதீநனையுமிருக்கிற தோழனானவன் கொண்டாடத்தக்கவன்.

உக0—சாஸ்திரமறிந்தவனையும்-நற்குலத்தானையும்- பலவானையும் சமர்த்தனையும்-தாதாவாயும்-செய்ந்நன்றி யறிந்தவனையும் - தயிரியமுள்ளவனையும்-இருக்கிறசத்துருவை ஜயிப்பது அரிதென்று சொல்லுகிறார்கள்.

உகக—சாதுத்தன்மை-உயர்ந்தவன் தாழ்ந்தவனென்றறிதல்-வலிமை-தயை-அதிககொடை-இவைகள்-மத்தியஸ்தனுக்குக் குறிகளாகவிருக்கின்றன.

உகஉ—துன்பம்நேரிட்டபோது ஆரோக்கியமுதலான க்ஷேமத்தைக் கொடுக்கிறதாயும் - ஆற்றுவாய்க்காற் பாச்சலுள்ளதாயும்-அதிகபுற்களினால்- பசுக்களைவிர்த்திசெய்கிறதாயுமிருக்கிற பூமியையாவது- ஒருவனுக்குக்கொடுத்துத் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டியது.

உகங—ஆபத்தைப்போக்குவதற்காக பொருளைக் காப்பாற்ற வேண்டியது. அந்தப்பொருளைச்செலவழித்தாவது மனையாளைக் காப்பாற்றவேண்டியது. இவ்விரண்டினாலும் எப்போதுந்தன்னைக் காப்பாற்றவேண்டியது.

உகச—தனக்குப் பொக்கிஷநாசம்-மித்திரநாசம்- சேநாநாசம் இவைகள் ஏககாலத்தில் நேரிட்டாலும் மதங்கலங்காமல் நன்றாக யோசித்து சதுர்விதவுபாயத்தினாலும் தான்சுகப்படுகிறதை நினைக்கவேண்டியது.

உகரு—தன்னையும்- தானடையவேண்டியதையும் - சதுர்விதவுபாயங்களையும்-நன்றாயறிந்து பொருள்கிடைக்கும்பொருட்டு க்ஷத்திரியதன்மைப்படி யத்தநஞ் செய்யவேண்டியது.

## அரசன்போஜநவிதி.

உகசா—இந்தப்பிரகாரம் நடத்தவேண்டியதான இராஜ்ஜியகாரியங்களைமந்திரிகளுடன் யோசித்து ஆயுதத்தினாற்கொஞ்சம் விளையாடிநடுமத்தியாநத்தில் போசநத்திற்காக தன்னரண்மனைக்குவரவேண்டியது.

உகஎ—அந்தவரண்மனையில் தனக்குவந்த ஸ்ரீக துக்கவிஷயத்தில் தன்னைப்போன்றவர்களாயும் சமயமறிந்தவர்களாயும் யாராலுங் கலைக்கக்கூடாதவர்களாயும் விஷமுதலியவைகளைக்கலக்காதவராயும் இருக்கிற பரிச்சாரகாளால் பாகஞ்செய்யப்பட்டிருக்கிற அந்நமுதலியவற்றை விஷத்தைப்போக்கும்படியான மந்திரத்தைச்சொல்லிப்புசிக்கவேண்டியது.

உகஅ—தான்புசிக்கும்பதார்த்தங்களில் விஷத்தைப்போக்கும்படியான மூலிகைகளைச் சேர்த்துக்கொள்ளவேண்டியது அப்ப

டிப்பட்டஜீவரத்திநங்களை - எப்போதும் அரசன் கையில்மறவா மற்றரிக்கவேண்டியது.

உகக—அரசன்புசிக்கும்போது பரீக்ஷிக்கப்பட்டவர்களாயும் பரிசுத்தமான வேஷம் - ஆபரணமுள்ளவர்களாயும் வேறிடத்தில் மநம்வையாதவர்களாயுமிருக்கிற ஸ்திரிகள் - தூபம்-விசிறி-சாமரம் - ஸ்நாநபாநங்களுக்கு உபயோகமான தண்ணீர் இவைகளா லுபசரிக்கவேண்டியது.

உஉ௦—இந்தப்பிரகாரம் வாகநம்-படுக்கை-ஆசநம் - அசநம்-ஸ்நாநம்-பூச்சு-மற்றும்-அலங்காரங்கள்- இவைகளிலும் அரசன்சாக்கிரதையாயிருக்கவேண்டியது.

உஉக—புசித்தபின்பு -அந்தப்புரத்தில் தன்ஸ்திரீகளுடன் ஒரு முகூர்த்தகாலம் விளையாடிப் பின்பு பகலின் எட்டாவதுபாகத்தில் அலங்காரமுள்ளவனாய் சபைக்குப்போய் இராஜகாரியத்தைப் பார்க்கவேண்டியது.

உஉஉ—பின்பு அந்தஅலங்காரத்துடனே வில்வித்தை முதலிய கற்றுக்கொள்ளுகிறவர்கள் வாகநம்-ஆபரணம்-ஆயுதம் - இவைகளிருக்கிறவிடத்திற்குப்போய் பார்க்கவேண்டியது.

உஉ௩—மறுபடிமாலையில் சந்திசெய்துவிட்டு வீட்டுக்குள் கத்தியைக்கையில்வைத்துக்கொண்டு இரகசியத்தைச்சொல்லுகிற வேவுகாரர்களின் சமாச்சாரங்களை விசாரிக்கவேண்டியது.

உஉ௪—பின்பு அவர்களோடுமற்றொருவிடுதிக்குப்போய் அவர்களையொவ்வொருவராக அநுப்பிவிட்டு தன்பரிசாரக ஸ்திரீகளுடன்போஜநத்திற்காக அந்தப்புரம் செல்லவேண்டியது.

உஉ௫—அவடத்திற்புசித்தபின்பு கூத்து-பாட்டு - வாத்தியம்

இவைகளால் கொஞ்சஞ்சந்தோஷமடைந்து பின்பு அந்தப்புரத்தி ற்படுத்து விடியற்காலம் வருத்தமின்றி எழுந்திருக்கவேண்டியது.

உஉசு—இப்போதுசொல்லிவந்த விதிப்படி இராஜ்ஜியகாரியங் களையெல்லாம் அரசன் தனக்குநோயில்லாதகாலத்தில் தானேவி சாரிக்கவேண்டியது. நோயிருந்தால் தக்கமந்திரிமுதலானவர்களா ல் விசாரிக்கச்செய்யவேண்டியது.

எழாவதத்தியாயம்-முற்றிற்று.

ஆக-அத்தியாயம்-எ-க்கு-சுலோகம்-கசா0சு.

எட்டாவது

# அத்தியாயம்.

## வியவஹாரதரிசனம்.

க—வியவஹாரங்களை தீர்மானிக்கமனமுள்ளவரசன் மந்திரா லோசனையறிந்த மந்திரிகளோடும்- பிராமணர்களோடும்-வணக்க முள்ளவனாய் நீதிசபைக்குப்போகவேண்டியது.

உ—அந்தச்சபையில் வணக்கமுள்ளவேஷத்தையே ஆபரணமா கவுள்ளவனாய் உட்கார்ந்தாவது அல்லது- சொற்பகாரியமா யிருந் தால் நின்றுகொண்டாவது வலதுகையைத்தூக்கிக்கொண்டு வழக் காளியின் வழக்கை விசாரிக்கவேண்டியது.

ா—பதினெட்டுவழியாலும் வந்திருக்கிற வழக்காளிகளின் வழக் கைசாஸ்திரத்தில் பார்க்கப்பட்டும் உலகத்திற்காணப்பட்டும் இருக் கிற சாக்ஷிமுதலான காரணங்களால் திநந்தோறுந் தனித்தனி யாக விசாரிக்கவேண்டியது.

௪—அந்தப்பதினெட்டுவழிகளாவன. முதலாவது- கடன்கொடாமல் இரண்டாவது-ஒருவரிடத்துக்காக்கும்படி வைத்தபொருள்-மூன்றாவது-உடையவனல்லான் விற்றல்-நான்காவது கூடிலாபஞ்சம் பாதித்தல்-ஐந்தாவது- தானஞ்செய்தபொருளைக் கொடாமை.

௫—ஆறாவது சம்பளங்கொடாமை-ஏழாவது-கட்டுப்பாட்டை மீறிநடத்தல்-எட்டாவது-ஒருபொருளை விற்றாவது வாங்கியாவது பின்புசந்தேகித்தல்-ஒன்பதாவது-மாட்டையுடையவனுக்கும் மேய்ப்பவனுக்கும்வரும்வழக்கு.

௬—பத்தாவது-எல்லைவழக்கு-பதினொன்றாவது-அடித்தல்-பன்னிரண்டாவது-திட்டல்-பதின்மூன்றாவது-திருட்டு-பதினான்காவது-வன்செய்கை-பதினைந்தாவது-ஒருவன்ஸ்திரீயை அபகரித்தல்.

௭—பதினாறாவது-மாதராடவர்தருமம்-பதினேழாவது- விபாகம்-பதினெட்டாவது-சூதாடல்-இப்பதினெட்டும்-வழக்குக்கு இருப்பிடமாயிருக்கின்றன.

௮—இந்தவிஷயங்களில் அதிகமாக வழக்கிடுகின்ற - மனிதர்களின்வழக்கை பழைமையானதருமப்படி தீர்மானிக்கவேண்டியது.

௯—அரசன் காரியாந்திரத்தினாலாவது-பிணியினாலாவது-தானுக்கே-எப்போது விசாரணைசெய்யக்கூடாதோ அப்போது வழக்கைக்கண்டுபிடிக்கிறவிஷயத்தில்-பண்டிதனானபிராமணனை விசாரிக்கும்படி நியமிக்கவேண்டியது.

௧0—அந்த பண்டிதப்பிராமணனும் மூன்று * சபிகர்களோடு மேலான அந்தச்சபையிற் பிரவேசித்து உட்கார்ந்தாவது நின்று

---

* சபிகர்-என்பது-நீதிக்காரனுடனிருந்து-வழக்காளிகளின்நியாயாநியாயத்தை அறிகிறதற்காகநியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்.

கொண்டாவது அரசன் விசாரிக்கவேண்டியகாரியங்களைத் தான் விசாரிக்கவேண்டியது. உலாவிக்கொண்டு விசாரிக்கக்கூடாது.

கக—சபையாவது-எவ்விடத்தில்வேதமறிந்த மூன்று சபிகபிராமணரும் அரசனுலேற்படுத்தப்பட்ட பண்டிதபிராமணனும் இருக்கிறார்களோ அந்தவிடத்தையே சபையென்று சொல்லுகிறார்கள்.

கஉ—அதர்மத்தினுல் கெடுக்கப்பட்டு நீதிசபைக்குவந்த தருமத்திற்கு விரோதமான அதர்மத்தை சபிகர்கள் நீக்காமற்போனுல் அந்தவிஷயத்தில் அவர்கள் பாபியாகிறார்கள்.

கஈ—மனிதன் வழக்கைக்குறித்து நீதிசபைக்குப்போகாமலே இருக்கவேண்டியது; அல்லது போனுல் உண்மையையாவது சொல்லவேண்டியது. அறிந்ததை சொல்லாமற்போனுலும், அறியாததை விரோதமாகச்சொன்னுலும் பாபியாகிறான்.

கச—எந்தவழக்கில் தருமமானது வாதிபிரதிவாதிகளின் அதர்மத்தாலும்-சத்தியமானது சாக்ஷிகளின் அசத்தியத்தாலும்-விசாரணைகாலத்தில் கெடுக்கப்படுகிறதோ அந்தவழக்கில் சபிகர் குற்றவாளிகள்.

கரு—தருமம் அழிக்கப்பட்டால் அது நம்மையழிக்கும், அது காப்பாற்றப்பட்டால் நம்மைக்காப்பாற்றும், அழிக்கப்படாத தருமம் நம்மையழிக்காது ஆகையால் தருமத்தையழிக்கக்கூடாது; என்று நீதிக்காரன் சபிகர்களை நோக்கிச்சொல்லவேண்டியது.

கசு—தெய்வத்தன்மையுள்ளதருமமானது அபீஷ்டங்களையெல்லாம் வருஷிக்கிறபடியினுல் அதை விருஷமென்றுசொல்லுகிறார்கள். அதை யழிக்கிறவனை விருஷலனென்று தேவர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால் தருமத்தையழிக்கக்கூடாது. விருஷலனுவது தருமகாதகன்.

கஎ—தேகத்தோடு மற்றவைகளெல்லாம் அழிந்துபோகிறது தருமமொன்றே இறந்தபின்னும் அநுசரிக்கிறது. ஆதலால் அதுவே மேலானசிநேகிதன்.

கஅ—அக்கிரமமாகச்செய்த தீர்ப்பினால்வரும் அதர்மத்தில் நாலிலொருபங்குசெய்தவனையும் மற்றொருபங்கு சான்றினனாயும்-மற்றொருபங்கு சபிகர்களையும்-மற்றொருபங்கு அரசனையும்அடைகின்றது.

ககூ—எந்தவழக்கில் தண்டிக்கத்தக்கவன் தண்டிக்கப்படுகிறானோ-அந்தவழக்கில் அரசனுக்குப்பாவமில்லை சபிகர்களுக்குங்குற்றமில்லை பாவமானது செய்தவனைச்சாரும்.

உ0—பிராமணகுலத்திற்பிறந்து கர்மாநுஷ்டாநமில்லாத பிராமணனேனும் அரசன்செய்யவேண்டிய தீர்மானங்களைச் செய்யலாம்.சூத்திரனொருபோதுந் தீர்மானஞ்செய்யக்கூடாது.

உக—எந்தத்தேசத்தில் அரசன்செய்யவேண்டியதருமவிசாரணையைச் சூத்திரன் செய்கிறானோ அந்தத்தேசமுழுதும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே சேற்றிலகப்பட்ட பசுவைப்போலே துன்பப்படுகின்றது.

உஉ—எந்தத்தேசத்தில் சூத்திரர். தெய்வத்தைநிந்திக்கிறவர்கள் இவர்கள் அதிகமாயும்-துஜாதிகளில்லாமலும் இருக்கிறார்களோ அத்தேசமுழுதும்-வறுமை-நோய்-இவைகளால் துன்பப்பட்டுச் சீக்கிரத்தில் அழிந்துபோய்விடும்.

உ௩—நீதிக்காரன் -தருமாசநத்தி லுட்கார்ந்துகொண்டு சரீரங்களைப் போர்த்துக்கொண்டு திக்குப்பாலகர்களுக்கு வந்தநஞ்செய்து பின்பு வழக்குகளை விசாரிக்கத்துவக்கவேண்டியது.

உச—வழக்கின் உயர்வு-தாழ்வு-லாபம்-நஷ்டம்-தருமம்-அதர்மம்

இவைகளை நன்முயறிந்து வருணக்கிரமமாக விதிப்படிவழக்கை விசாரிக்கவேண்டியது.

உடு—வெளியில்காணத்தக்கதான தொநி-முகவருணம்-கீழ்ப்பார்வைமுதலிய- அபிப்பிராயக்குறி-வியர்வை-மயிர்க்கூச்சு - கைதட்டல்முதலியசேஷ்டை-கண்செய்கை-இவைகளால் -வழக்காளியினுட்கருத்தையறியவேண்டியது.

உசா—ஏனென்றால் மேற்சொன்ன உருவம்-அபிப்பிராயக்குறி நடை-செய்கை-சொல்-கண்-வாய்-இவைகளின்குறி - இவைகளாலேயே-மனிதர்களின் உட்கருத்து அறியப்படுகிறது.

உஎ—தன்பொருளைக்காப்பாற்றத் திறமில்லாத சிறுவன்பொருளை அவன் வேதமோதிவருகிறவனாயிலாவது, அவனுக்குப் பாலியம்போகிறவனாயிலாவது-அரசன் காப்பாற்றவேண்டியது. (பதினாறுவயதுவரையில் பாலியம்.)

உஅ—மலடி-இறந்துபோன பிள்ளையையுடையவள்- தேசாந்தரம்போனபதியையுடைய பதிவிரதாஸ்திரி-பந்துவில்லாதவள்-விதவைகள் - இவர்களின்பொருளையும் அரசனே காப்பாற்றவேண்டியது.

உகூ—இந்தஸ்திரிகள் ஜீவித்திருக்கும்போது அவர்களின்பந்துக்களாராவது அவர்களின்பொருளையபகரித்துக்கொண்டு அவர்களைக்காப்பாற்றுவிட்டால் அவர்களை தர்மிஷ்டனனவரசன் திருடனைப்போல்தண்டித்து பொருளையும் வாங்கிக்கொடுக்கவேண்டியது.

ரு0—ஒருவன் கைதப்பி அரசனிடத்து அகப்பட்டபொருளை அரசன் மூன்றுவருஷம்வரையில் வைத்துக்காப்பாற்ற வேண்டியது. அதற்குள்ளாகவுடையவன் வந்துபெற்றுக்கொள்ளாவிடில் அரசன் அதையெடுத்துக்கொள்ளவேணடியது.

உகூ

ருக—எவன் இந்தப்பொருளெனதென்று சொல்லுவானோ அவனை அந்தப்பொருளின்ரூபம்-தொகை-அதுகெட்டுப்போனவிடம் இவைமுதலானவைகளைத் தர்க்கித்துக் கேள்விகேட்கவேண்டியது. உடையவனாகவிருந்தால் அப்பொருளைக்கொடுத்துவிடலாம்.

ருஉ—பொருள் கைவிட்டுப்போனவிடத்தையும் காலத்தையும் நிறத்தையும், உருவத்தையும், இடைமுதலானகணக்கையும், சரியாகச்சொல்லாவிடில் அவனுக்கு அந்தப்பொருளின் தொகைக்குச்சரியானதண்டம்விதிக்க.

ருரு—தப்பிப்போ யகப்பட்டபொருளை காப்பாற்றினதற்காக அரசன் ஆறில்அல்லது-பத்தில்அல்லது-பன்னிரண்டில் ஒருபங்கை அப்பொருளுடையவன் குணகுணத்துக்குத்தக்கபடி பெரியோர்களின்தருமத்தை நினைத்து எடுத்துக்கொண்டு மற்றதை உடையவனுக்குக்கொடுத்துவிடவேண்டும்.

ருச—ஒருவன் கைதப்பிப்போனபொருளை அரசன்மனிதர்கள் கண்டெடுத்தால் அதை யரசன்தன்காவலில் வைத்துக்காப்பாற்றவேண்டியது. அதைத்தன்காவற்காரர்களில் யாராவது திருடினால் அவர்களையானையின்காலா லிடறச்செய்யவேண்டியது.

ருரு—எவன் ஒரு புதையலைக்கண்டெடுத்து அந்தப்பொருளை த்தனதென்று ருசுப்படுத்துவானோ அதிலும் ஆறிலாவது பன்னிரண்டிலாவது ஒன்றினை யெடுத்துக்கொண்டு மற்றதையவனுக்குக் கொடுக்கவேண்டியது.

ருசு—ஒருவன் அந்தப்புதையலைத் தனதென்றுபொய்யாகச்சாதித்ததாகத்தெரிந்தால் அவனுக்கு அந்தப்பொருளின் தொகையில் பதினாறிலொருபங்கு அல்லது-அவனாஸ்தியி லெட்டிலொருபங்காவது தண்டம் விதிக்கவேண்டியது.

௩எ—வித்துவானன பிராமணனுக்கு அவனல் வைக்கப்பட்ட புதையலகப்பட்டால் முற்றுமவனே யெடுத்துக்கொள்ளலாம் அதேனெனில் அவனெல்லாருக்குப் மேலானவனல்லவா.

௩அ—அரசன் பூமியிலிருந்து புதையல்கண்டெடுத்தால் அதில் பாதியைப்பிராமணர்களுக்கு தானஞ்செய்து மற்றதைத்தன் பொக்கிஷத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டியது.

௩௯—கல்வியுள்ள பிராமணன்தவிர மற்றவர்களுக்கு பூமியிலிருந்து அகப்பட்ட இரத்திநமுதலியபுதையல்களில் அரசனுக்குப் பாதி கொடுக்கவேண்டியது. ஏனெனில் - அவன் பூமிக்குயஜமாநனல்லவா.

௪0—திருடன் கொண்டுபோகப்பட்டபொருளை அரசன்கண்டுபிடித்தால் அதற்குடையவனகப்படாதபோது அதைச்சகலவருணத்தாருக்குங் கொடுக்கவேண்டியது.அரசன்றனக்கு உபயோகப்படுத்திக்கொண்டால் திருடன்பாவம் அரசனைச்சாரும்.

௪க—அரசன்-ஜாதிதருமம்-தேசதருமம்- யாபாரிகளின்தருமம் குலதருமம்-இவைகளை நன்முக விசாரித்து அதற்கு விரோதமின்றி தான்றீர்மாநிக்கவேண்டியது.

௪உ—ஏனென்ருல் தன்றன் காரியங்களைச் செய்துகொண்டும் தன்றன்அநுஷ்டாநத்தில் சாக்கிரதையுள்ளவர்களாயு மிருக்கிறமனிதர்கள் தூரதேசத்திலிருந்தாலும், அனைவருக்கும்இஷ்டராகிருர்கள்.

௪௩—அரசனேனும் அல்லது அவனல் நியமிக்கப்பட்டநீதிக்காரனேனும் தானுக ஒருவழக்கைக் கற்பிக்கவும் ஒருவர்கொண்டுவருகிறவழக்கை விசாரிக்காமலிருககவுங்கூடாது.

௪௪—கத்தியினல் வெட்டப்பட்டமிருகம் ஓடிப்போனவிடத்

தை வேடன் இரத்தபிந்துக்களால் அறிகிறதுபோல் அரசன் பிரமாணமுதலிய காரணங்களால் தருமத்தினுண்மையைக் கண்டறிய வேண்டியது.

சடு—நீதிக்காரன் சத்தியத்தையும், பொருட்டொகையையும், சாக்ஷிகளின் உண்மையையும், தேசத்தையும், அபராதத்தின் சுலபாதிக்கியத்தையும், காலத்தையும், யோசித்துப்பார்த்து தன்னாத்துமா நரகத்தையடையாதிருக்கும்படி தீர்மானிக்கவேண்டியது.

சசா—அந்தத்தேசத்திலிருக்கிற பெரியோர்கள் தருமமறிந்த பிராமணர்கள் இவர்களினாலெந்த தேசாசாரகுலாசாரங்கள் யேற்படுத்தப்பட்டிருக்கின்றனவோ அதற்குவிரோதமில்லாமல் தான் தீர்மானிக்கவேண்டியது.

## கடன்கோடல்.

சஎ—கொடுத்தபொருள் தனக்குக்கிடைக்கும்பொருட்டு †உத்தமர்ணனால் கேட்டுக்கொள்ளப்பட்ட நீதிக்காரன் * அதமர்ணனைவிசாரித்து அவனிடத்தினின்றும் பொருளைவாங்கி உத்தமர்ணனுக்குக்கொடுக்கவேண்டியது.

சஅ—மேல்சொல்லப்போகிற உபாயங்களுக்குள் எந்தெந்தவிதத்தினா லுத்தமர்ணன் அதமர்ணனிடத்தில் பொருளைவாங்கிக்கொள்ளலாமோ அந்தந்தவுபாயத்தினால் வாங்கிக்கொள்ளலாம்.

சகூ—உபாயமாவது அதமர்ணன் பந்துக்களைக்கொண்டு அவனுக்கு நல்வார்த்தை சொல்லியாவது-அவனைத்தானேயநுசரித்தாவது-சீட்டுமுதலியஆதாரவைக்கொண்டு வழக்கிட்டாவது - பூஷிண

---

† உத்தமர்ணன்-என்பது-கடன்கொடுத்தவன்

* அதமர்ணன்-என்பது-கடன்வாங்கினவன்

முதலியவற்றை யவனிடத்திரவலாக வாங்கிக்கொண்டு கடனையொழுங்குபடுத்தென்றுசொல்லியாவது அவன்பசுமுதலானவற்றை மறித்து அவன்வீட்டுவாசற்படியில் படுத்துக்கொண்டாவது அவனைத்தன்வீட்டில்அழைத்து அடித்தாவது உத்தமர்ணன்பொருளைவாங்கிக்கொள்ளலாம்.

௫௦—எந்த உத்தமர்ணன் தான்கொடுத்தபொருளை எவ்விதமாயாவது தானே வாங்கிக்கொள்வானோ அவனை அரசன்விசாரிக்கக்கூடாது.

௫௧—நீதிக்குவந்தபின்னும் அதமர்ணன் கடன்கொடுக்கவேண்டியதில்லையென்று மாறுபாடுசெய்தால் பத்திரஞ் சான்றினர் முதலானவர்களால் கொடுக்கவேண்டியதாக ஏற்பட்டால் உத்தமர்ணனுக்குப்பொருளையும் வாங்கிக்கொடுத்து அதமர்ணன் சத்திக்குத்தக்கபடி தண்டத்தையும் விதிக்கவேண்டியது.

௫௨—நீதிக்காரன் கடனைக்கொடுத்துவிடென்று நீதிசபையில் சொல்லும்போது அதமர்ணன் நான் கொடுக்கவேண்டியதில்லையென்றால் பணங்கொடுத்தபோது இருந்தசான்றினர் அப்போது ஏற்பட்டபத்திரம் இவைகளைக்கொண்டு உத்தமர்ணன் ருசுப்படுத்தவேண்டியது.

௫௩—எவன் தான்பணங்கொடுக்கும்போது இல்லாதசான்றினரைக்காட்டுகிறானோ எவன்சான்றினரைக்காட்டிமறைக்கிறானோ எவன் முன்னுக்குப்பின்விரோதமாகக் காரியங்களையறியாமற் பேசுகிறானோ இவர்களையும்.

௫௪—எவன் முன் தான்பணங்கொடுத்ததாகவும் பின்பு தன்பிள்ளைமுதலானவர்கள் கொடுத்ததாகவும் வியாஜத்தைச்சொல்லிவிட்டு ஓடிப்போகிறானோ எவன் நீதிக்காரன்கேட்குங்கேள்விக்கு உத்தரவுசொல்லவில்லையோ இவர்களையும்.

௫௫—எவன் சான்றினரோடு பேசக்கூடாதவிடத்தில் இரகசியமாகப்பேசுகிருனே எவன் ஆக்ஷேபித்துக்கேட்பதற்குச் சரியாகச் சமாதானம்சொல்லவில்லையோ எவன் வழக்கிட்டு விசாரணைகாலத்தில் தேசாந்திரத்துக்குப்போகிருனே இவர்களையும்.

௫௬—எவன் நீதிக்காரன்வழக்கை தர்க்கித்துக் கேட்கும்போது சரியாகச்சொல்லவில்லையோ எவன் சான்றினர்முதலிய ருசுக் கொடுக்கவில்லையோ எவன் தனக்குவிரோதமானவைகளைச் சாதகமாகச்சொல்லுகிருனே இவர்களையும்.

௫௭—எவன் தனக்குச் சான்றினிருக்கிறார்களென்றுசொல்லி காண்பிக்கச்சொல்லும்போது காண்பிக்கவில்லையோ இவனையும் இ஼வ்விதகாரணங்களால்தோற்றவர்களாகத் தீர்மானிக்கவேண்டியது

௫அ—உத்தமர்ணன் விசாரணைகாலத்தில் தன்வழக்குக்குச்சரியான உத்தரஞ்சொல்லாவிடில் அவனைக் காவலிலாவது வைக்கவேண்டியது. தண்டமாவது விதிக்கவேண்டியது. அதமர்ணன் நாற்பத்தைந்துநாளைக்குள்ளாவது நீதிக்குவந்து தன்னியாயத்தைச்சொல்லிக்கொள்ளாவிடில் வழக்கில்தோற்றுப்போவான்.

௫௯—எந்த அதமர்ணன் எவ்வளவுபொருளைக் கொடுக்கவேண்டியதில்லையென்று மறைக்கிருனே எந்த வுத்தமர்ணன் எவ்வளவு பொருள் வரவேண்டுமென்று பொய்சொல்லுகிருனே தருமமறியாத இவ்விருவர்களுக்கும் அந்தப்பொருளுக்கிரட்டிப்பானதண்டம்விதிக்க.

௬0—உத்தமர்ணனுல் நீதிக்கழைக்கப்பட்ட அதமர்ணன் வாங்கினதேயில்லையென்று பொய்சொன்னுல் மூன்றுக்குக்குறையாத சான்றினரால் நீதிக்காரன்முன்பாக உத்தமர்ணன் ருசுப்பிக்கவேண்டியது.

௬௧—உத்தமர்ணன் எப்படிக்கொத்தசான்றினரை விவஹாரத்தில் லவத்துக்கொள்ளலாமோ அவர்களையும் அவர்களுண்மையாகச் சொல்லவேண்டிய விதத்தையும் சொல்லப்போகிறேன்.

## சான்றினர்பிரகரணம்.

௬௨—கிரகஸ்தர்களாயும்,புத்திரவான்களாயும்,அந்தத்தேசத்திற் பிறந்தவர்களாயும்,நான்குவருணத்திலொருவர்களாயும்.இருப்பவர்கள் உத்தமர்ணனல் சொல்லப்பட்டவர்களாய் சான்றினர்தன்மைக்குஉரியவர்களாகிறார்கள்.ஆபத்தில்லாதபோது இவர்களைவிட யாருங்கூடாது.

௬௩—சகலவருணங்களிலும் உண்மையைப்பேசுகிறவர்களாயும் சகலதருமத்தை யறிந்தவர்களாயும் ஆசையில்லாதவர்களாயு மிருப்பவர்களைச் சான்றினராகக்கோரவேண்டியது. மற்றவர்களை நீக்க வேண்டியது.

௬௪—பொருளில் சம்பந்தப்பட்டவர்கள் சிநேகிதர்கள் வேலைக்காரர்கள்-சத்துருக்கள் - பிரசித்தமானதோஷமுள்ளவர்கள்-நோயாளிகள்-பஞ்சமஹாபாவிகள்-இவர்களைச் சான்றினராகக் கோரக்கூடாது.

௬௫—அரசன்-மிட்டாயிக்காரன்-நட்டுவன் - வேதமோதினவன் மாணுக்கன்-சந்நியாசி-இவர்களையும்.

௬௬—ஒருவனுக்குட்பட்டவன்-அபவாதமுள்ளவன்- சமுசயப்பட்டவன்-ஈனத்தொழில்செய்பவன்-பாலன் - கிழவன்-ஒருவன்-பறையன்-இந்திரியமில்லாதவன் இவர்களையும்.

௬௭—வியசநமுள்ளவன்-குடியன்-பித்தன் - பசிதாகமுள்ளவன் இளைப்படைந்தவன்-காமவிகாரமுள்ளவன் அதிககோபமுள்ளவன் திருடன்-இவர்களையுஞ் சான்றினராகக்கோரக்கூடாது.

சுஅ—ஸ்திரிகளுக்கு ஸ்திரிகளும்-துஜர்களுக்குத் துஜர்களும் சூத்திரர்களுக்குச் சற்சூத்திரர்களும்,பறையன்முதலானவர்களுக்குப் பறையன் முதலானவர்களும், சான்றினராக இருக்கவேண்டியது.

சுகூ—ஆனல் வீட்டுக்குள்ளாவது காட்டிலாவது இறந்துபோகும்படியான ஆபத்திலாவது எவன் தத்காலத்தில் அநுபோகசாலியாய்சமீபத்திலிருக்கிறானோ அவனைச் சான்றினனாகச்சொல்லலாம்

எ0—இப்படிக்கொத்த ஆபத்துநேரிட்டபோது முன்சொன்னகுணமுடையவர் அகப்படாவிடில் ஸ்திரி-பாலன்-கிழவன்-சீஷன்பந்து-அடிமை-வேலைக்காரன்-இவர்களையும் சான்றினராகச்சொல்லலாம்.

எக—சான்றுரைக்கும்போது சித்தசுவாதீநமில்லாத - பாலன் கிழவன்-நோயாளி-பித்தன்-இவர்களின்வசநங்கள்-நிலையில்லாததால் அவர்களைக் குறிகளாலறியவேண்டியது.

எஉ—சகலமான துணிவுகாரியங்களிலும்,திருட்டுச்சங்கதிகளிலும்,பிறன்மனைவியை அபகரித்தவிஷயங்களிலும்,அடித்தல் திட்டல் இவைகளிலும் சான்றினரை-தக்கவரொன்றுந் தகாதவரொன்றும்பரிசோதிக்கவேண்டியதில்லை.

எஙு—ஒருவிஷயத்தில் சான்றினர்களுடையமொழிக ளிருவிதப்படில் அரசன் அதிகசான்றினரை எடுத்துக்கொள்ளவேண்டியது. இரண்டுபக்ஷமுஞ்சரியாகவிருந்தால் அதிககுணமுள்ளவர்களையும் அவர்களும் இரண்டுவிதமாகவிருந்தால் பிராமணனையும் எடுத்துக்கொள்ளவேண்டியது.

எச—சான்றினர் தன்கண்ணினுல்பார்க்கப்பட்டாவது கேட்கப்பட்டாவதிருக்கிறகாரியத்திலதை யுண்மையாகச்சொன்னல் தருமம் அர்த்தம் இவைகளால் குறைவுபடார்கள்.

எரு—கண்ணாற்பார்க்கப்பட்டும் காதால் கேட்கப்பட்டும் இரா ததை நீதிசபையில் பிதற்றுகிறசான்றினன் இறந்தபின் சுவர்க்கத்தை விட்டு நரகத்தையடைகிறான்.

எசு—ஒருவிஷயத்தில் தான்சான்றினனாகக் கோரப்படாதவனாக விருந்தாலும் அதுகாரியத்தைத் தான்பார்த்தாயினும் கேட்டாயினும் இருப்பானாகில் அந்தவிஷயத்தில் நீதிக்காரன் கேட்பானாகில் தான் பார்த்ததையுங் கேட்டதையும் உண்மையாகச் சொல்லவேண்டியது.

எஎ—ஆசையில்லாத வொருவனையேனும் சான்றினனாக்கோரலாம் மாதர்கள்பலரேனும் அவர்கள்புத்தியில் நிலையில்லாமையால் அவர்களையும் முன்சொன்ன தோஷமுள்ளவர்களையும் கடன்முதலியவிஷயத்தில் சான்றினராக வேற்படுத்தக்கூடாது.

எஅ—சான்றினரால் சுபாவத்திற்சொல்லப்பட்டவார்த்தையை உண்மையாக அறியவேண்டியது. பயப்படுத்துவதினால் முன்சொன்னதற்குப்பின் விரோதமாகவிருந்தால் அதைத் தருமமாவெந்து கொள்ளக்கூடாது.

எகூ—நீதிக்காரன் சபையினடுவில்வந்த சான்றினரை வாதி பிரதிவாதிகளுக்கெதிரில் நிறுத்தி மேற்சொல்லப்போகிற விதிப்படி நல்வார்த்தையாக வினவவேண்டியது.

அ0—ஓய் சான்றினரே இவ்விஷயத்தில் உங்களைச்சான்றினராகக்கோரியிருப்பதினால் இவர்களிருவருக்கும் நடந்தகாரியத்தில் நீங்களறிந்ததை உண்மையாகச்சொல்லுங்கள்,

அக—உண்மையைச் சொல்பவன் மேலானவுலகத்தையும்-இம்மையில் மேலானகீர்த்தியையுமடைகிறான். இந்தச்சொல்லானது பிரமனால் கொண்டாடப்பட்டிருக்கிறது.

அஉ—பொய்சான்றுரைப்பவன் நூறுஜநநதம்வலாயில் வருண

னுடைய சர்ப்பபாசத்தாலே கட்டப்படுகிருன் ஆகையால்.உண்மையாகச்சொல்லவேண்டியது.

அ௩—உண்மையைச்சொன்னுல் சான்றினன் பரிசுத்தனுகிருன் தருமம்வளருகிறது ஆகையால். சகலவருணத்தார் விஷயத்திலும் சான்றினர் உண்மையேசொல்லவேண்டியது.

அ௪—மனிதருக்கெல்லாம் தன்தன் அந்தராத்மாவேசான்ருகவும் கதியாயுமிருக்கிறது.ஆதலால் மேலான சான்ருகியவுன் அந்தராத்மாவை நீயவமாநஞ்செய்யாதே.

அ௫—பாபிகள் தாங்கள்பாபஞ்செய்யும்போது தங்களை யொருவரும்பார்க்கவில்லையென்று நினைக்கிருர்கள் அவர்களைம்மேற்சொல்லும்தேவர்களும் அவர்களந்தராத்மாவும் பார்க்கிருர்கள்.

அ௬—ஆகாயம்-பூமி-வாயு-ஜலம்-மநம்-சந்திரன்-சூரியன்- அக்கிநி-யமன்-இரவு-இரண்டுசந்தி-தருமம்-இவைகள்மனிதர்களின் சகலநடையையும் அறிகிருர்கள்.

அ௭—பகலில்பதினைந்து நாழிகைக்குள்ளாக நீதிசபையில் தேவதாவிக்கிரகம்பிராமணர்கள் இவர்கள்சமீபத்தில்பிராமணர்முதலான சான்றினலாபரிசுத்தாளாக கிழக்குமுகம் அல்லது-வடக்குமுகமாகநிறுத்தி தானும்பரிசுத்தனுப் சத்தியஞ்செய்வித்து சான்றினலா விசாரணைசெய்யவேண்டியது.

அஅ—பிராமணனை சொல்லென்றும், க்ஷத்திரியனை உண்மையைச்சொல்லென்றும்,வைசியனை நீபொய்சொன்னுல் உன்னுடையபசுவும் விதையும், பொன்னும், பலியாதழியுமென்றும், சூத்திரனை நீபொய்சொன்னுல் மறையோனைக்கொன்றதுமுதலியபாபங்களை யடைவாயென்றும், சத்தியங்கேட்கவேண்டியது.

அ௯—மித்திரத்துரோகி மறையோனைக்கொன்றவன் ஸ்திரீயை

த்கொன்றவன் - மகலவக்கொன்றவன் - செய்ந்நன்றியை மறந்தவன் இவர்களடையுமுலகத்தை பொய்சான்றுரைத்தவனடைவான்.

கூ0—ஒய்குணமுள்ள சான்றினர்களே நீங்கள் பொய்சொன்னால் நீபிறந்தநாண்முதல் இதுவரையிற்செய்த புண்ணியமெல்லாம் நீவளர்க்கு நாய்க்குப்போய்ச்சேரும்.

கூக—ஒய்கல்யாணகுணமுள்ள சான்றினனே நீயொருவனாக விருக்கிறேனென்றுநினைக்கிறாய் அதுசரியன்று. ஏனென்றால்-உன்னுடையமநதில் நீசெய்யும் புண்ணியபாவங்களைப் பார்த்துக்கொண்டு பரமாத்மாவாசஞ்செய்கிறார்.

கூஉ—சூரியன்பிள்ளையாகிய யமனே உன்மநதில் வாசஞ்செய்கிறார். பொய்சொல்லுதல் முதலியவற்றால் உனக்கவனிடத்தில் விரோதமில்லாமலிருந்தால் கங்கை-குருக்ஷேத்திர முதலியவற்றைக் குளித்து நீபுண்ணியயாத்திரைபோகவேண்டியதில்லை.

கூங—பொய்சான்றுரைத்தவன் வஸ்திரமில்லாதவனாய் மொட்டைத்தலையனாய்-குருடனாய் - பசிதாகங்கொண்டு தன்சத்துருவின் வீட்டில் பிக்ஷையெடுப்பான்.

கூச—பின்னும் தருமநிச்சயத்திற்காக கேட்கப்பட்ட எந்த சான்றினன் பொய்லயச்சொல்வானோ அவன்பாபியாய் தலைகீழாகக் காடாந்தகாரநரகத்தில்வீழ்வான்.

கூரு—எவன்காணாதகாரியத்தை சொற்ப பிரயோசநத்துக்காக நீதிசபையில் பொய்யாகச் சொல்வானோ அவன் ஆசையினால் மீன்களை முள்ளுடன்சாப்பிடுகிற குருடன்போல் துன்பப்படுவான்

கூசு—எவன் சான்றுரைக்கும்போது அனைத்துமறிந்த அவன் அந்தராத்மா நடுங்கவில்லையோ இவ்வுலகத்தில் அவனைவிடயாரையு முயர்ந்தவனாக தேவர்கள்சொல்லவில்லை.

கூஎ—ஓய் நற்குணமுள்ளசான்றினரே எந்தெந்தக்காரியத்தில் பொய்ச்சான்றுரைப்பவன் எவ்வளவுபந்துக்களை கொன்றபாபத்தையடைகிருனே அதைக்கணக்குடன்சொல்லுகிறேன்கேளுங்கள்

கூஅ—ஓராட்டைக்குறித்துச் சொன்னபொய்சுற்றத்தாரில் ஐவரையும், ஒரு பசுவைக்குறித்துச்சொன்னபொய்- பதின்மரையும், ஒருகுதிரையைக்குறித்துச்சொன்னபொய்- நூறம்பதின்மரையும், ஒருமானுடனைக்குறித்துச்சொன்னபொய்- ஓராயிரவரையும், கொல்லும்.

கூகூ—பொன்விஷயத்திற்சொன்னபொய் - பிறந்தும்பிறவாமலுமிருக்கிற தன்புத்திரர்களையும், பூமிவிஷயத்திற்சொன்னபொய் சகலபிராணிகளையும் கொன்றுவிடும். ஆதலால்பூமிவிஷயத்திற்பொய்சொல்லற்க.

க00—பின்னும் தடாகமுதலிய நீர்நிலைகள்-பெண்- போகம்-புணர்ச்சி-முத்துமுதலிய மணிவகைகள்-கல்லிலிம்பதங்கள்- இந்த விஷயத்திற்சொன்னபொய் பூமிவிஷயம்போல்-உன்சுற்றத்தாரெல்லோரையுங் கொன்றதோஷத்தை உண்டுபண்ணும்.

க0க—இப்போதுசொல்லிய தோஷங்களையெல்லாம் நீயறிந்து நீகேட்டதையும் பார்த்ததையும் சீக்கிரத்தில் சரியாகச்சொல்லென்றுகேட்கவேண்டியது.

க0உ—மாட்டுமூலமா ஜீவிக்கிறவர்களாயும்,வர்த்தகஞ்செய்கிறவர்களாயும்,மிட்டாய் விற்கிறவர்களாயும்,சிற்பிவேலைசெய்கிறவர்களாயும்,பாடகர்களாயும்,ஏவற்றொழில் செய்கிறவர்களாயும், வட்டிவாங்கிப்பிழைக்கிறவர்களாயும் இருக்கிறபிராமணர்களை சூத்திரரைப்போல எண்ணவேண்டியது. ஆதலால் அவர்களை சூத்திரரைப்போல் பிரமாணம்கேட்கவேண்டியது.

௧0௫—எவன் காரியத்தினுண்மை யறிந்திருந்தாலும், ஒருவனு க்குத் தீங்குவராமையின்பொருட்டு வேறுவிதமாகச் சொல்லுகிரு னே அவன் சுவர்க்கலோகத்தினின்றும் நழுவமாட்டானென்று மே்த வர்கள்சொன்னதாகச் சொல்லுகிருர்கள்.

௧0௪—சூத்திரன்-வைசியன்-க்ஷத்திரியன்-பிராமணன்-இவர்களு க்கு எந்தவிஷயத்தி லுண்மைசொன்னல் வதம் நேரிடுமோ அப் போது பொய்சொல்லலாம், அந்தப்பொய்யானது உண்மையை விடமேலானது.

௧0௫—ஆனலந்தப் பொய்யினலுண்டான பாபத்திற்கு பிரா யச்சித்தமாக வாக்கை தேவதையாகவுடைய அவிசுக்களால் சரஸ்வ தியைக்குறித்து ஹோமஞ்செய்யவேண்டியது.

௧0௬—அல்லது கூச்மாண்டங்களினலே வருணனை தேவதை யாகவுடைய இருக்கினலாவது ஜலத்தைதேவதையாகவுடைய மூ ன்றிருக்கினலாவது அக்கினியில் ஹோமஞ்செய்யவேண்டியது.

௧0எ—கடன்முதலியவிஷயங்களில் நீதிக்காரனல் அழைக்கப்ப ட்ட சான்றினன் பிணிமுதலிய பீடையில்லாதபோது நாற்பத்தை ந்துநாளைக்குள்ளாக அதன்சங்கதியைவந்து சொல்லாவிடில்கடன் பொருளை உடையவனுக்கும்-கடனில்- பத்திலொருபங்கை அரச னுக்கும் தண்டமாகவும் கொடுக்கத்தக்கவனவான்.

௧0அ—நீதியிற்-சான்றுரைத்த எவனுக்கு எழுநாளைக்குள் நோ ய்-அக்கினிபயம்-சுற்றத்தார்நாசம்-இவைகளுண்டாகிறதோ அவனை அந்தக்கடனையுங்கொடுக்கச்செய்து அவனுக்கு அபராதமும் விதி க்கவேண்டியது.

௧0௯—சான்றினரில்லாதவிஷயத்தில் வாதி- பிரதிவாதிகளினுண்

மையை-அறியாத நீதிக்காரன் மேற்சொல்லுகிறபடி சத்தியத்தினு லாவது அறியவேண்டியது.

௧௧௦—சத்தவிருஷிகளாலும்,தேவர்களாலும் வழக்கிற்சத்தியஞ் செய்யப்பட்டிருக்கிறது.வசிஷ்டரும்-பியவனன்பிள்ளையான சுதாமாவென்னும் அரசனிடத்துத் தன்னை விசுவாமித்திரன் தன்னிட நூறுபிள்ளையையும் பக்ஷித்ததாகச்சொல்லும்பொழுது இல்லையென்று சத்தியஞ்செய்தார்.

௧௧௧—தெரிந்தவன் வீண்காரியத்திலும் சொற்பகாரியத்திலுஞ் சத்தியஞ்செய்யக்கூடாது. அப்படிசெய்கிறவன் இம்மையிலும் மறுமையிலும் அழிகிறான்.

௧௧௨—அநேகம் ஸ்திரீயுள்ளவன் அந்தஸ்திரீகளின் புணர்ச்சிவிஷயத்திலும்,விவாகவிஷயத்திலும்,பசுமாடுகளின் புல்லுவிஷயத்திலும்,ஹோமசமித்துக்கள் விஷயத்திலும்,பிராமணனைக் காப்பாற்றும்விஷயத்திலும், பொய்சத்தியம்பண்ணினாலும் குற்றமில்லை.

௧௧௩—வாதி-பிரதிவாதிகளை பிரமாணங்கேட்கும்போதும், பிராமணனைச் சத்தியமாகச்சொல்லென்றும் க்ஷத்திரியனை உன்வாகநம் ஆயுதம்-இவைகளின்மேல்-ஆணையிட்டுச் சொல்லென்றும், வைசியனை-உன்பசு-தாநியம்-தநம் - இவைகளின்மே லாணையிட்டுச்சொல்லென்றும்-சூத்திரனை- நான்பொய்சொன்னால் பஞ்சமஹாபாதகங்களை யடையக்கடவேனென்றும் சொல்லச்சொல்லி பிரமாணங் கேட்கவேண்டியது.

௧௧௪—பிரமாணஞ்செய்பவனை மழுவாகிலும் எடுக்கச்சொல்லவேண்டியது.ஜலத்திலாவது அமிழ்த்தவேண்டியது.அல்லது பிள்ளை மனையாள்-இவர்களின் தலையிலாவது அடிக்கச்செய்யவேண்டியது

௧௧௫—மழுவெடுக்கிறவனுக்கு கைவேகாமலும், ஜலத்திலமுத்தி

னவன் மிதவாமலும்,பிள்ளை-மனையாள் தலையிலடித்தவனுக்கு உட னே துன்பம்நேரிடாமலுமிருந்தால் பிரமாணத்திற் பரிசுத்தர்க ளாக அறியவேண்டியது.

௧௧௬—முற்காலத்தில் பின்னேதரனுன கநிஷ்டபிராதாவினுலே நீ பிராமணனன்று சூத்திரஸ்திரீக்குப் பிறந்தவனென்று தூஷிக்க ப்பட்ட வத்ஸமஹாமுநி அக்கிநியிற் பிரவேசிக்கும்போது அக்கி நியானவன் அவருடைய ஒருமயிரையுங்கொளுத்தவில்லை.

௧௧௭—எந்தவழக்கிற் பொய்சான்றுகூறப்பட்டதென்று தெரிய ப்படுமோ அந்தவழக்கு தீர்மாநஞ்செய்யப்பட்டிருந்தாலும் உ டைக்கப்படும்.அதிற்செய்த தண்டனையும்,மாறிப்போம் விசாரணை முடிந்து தீர்ப்புசொல்லுகிறசமயமாயிருந்தாலும் மறுபடியும் விசாரிக்கவேண்டியது.

௧௧௮—பொருளாசை குடிமயக்கம்-அச்சம்-நட்பு-காமம்-கோ பம்-அறியாமை-பாலியம்-இவைகளால் பொய்சான் றுரைக்கப்படு கின்றன.

௧௧௯—இவைகளுக்குள்-எவ்விஷயத்தால்-பொய்சான்றுரைக்கி றவனுக்கு எவ்விததண்டனையோ அதைக்கிரமமாகச்சொல்லப்போ கிறேன்.

௧௨0—அந்தணன்முதலிய நான்குவருணத்துச் சான்றினன் பொருளாசையால் பொய்ச்சான்றுரைப்பின் ஆயிரம்பணமும் மயக்கத்தாலுரைப்பின் பூர்வசாகசதண்டமும், அச்சத்தாலுரைப் பின் இரண்டு மத்திமசாகசதண்டமும்,நட்பாலுரைப்பின் நான்கு பூர்வசாகசதண்டமும்

௧௨௧—காமத்தாலுரைப்பில் பதின்மடங்குபூர்வசாகசதண்டமு ம்,கோபத்தாலுரைப்பின் மும்மடங்கு பூர்வசாகசதண்டமும்,அறி யாமையாலுரைப்பின் இருநூறுபணமும், பாலியத்தாலுரைப்பி

ன் நூறுபண தண்டமும் அவனுக்குவிதிக்கப்படும், இந்த யிரண்
டுசுலோகத்திலும் சொல்லப்பட்ட பூர்வசாகசமுதலியவற்றின் க
ணக்கை பின்னுற்காண்க.

கஉஉ—உண்மையாகிற தருமமழியாமைக்கும், பொய்யாகிய அதருமமுண்டாகாமைக்கும் பொய்ச்சான்றுரைப்பவர்க்கு இந்தத்தண்டனைகளை பெரியோர்களால் விதிக்கப்பட்டதாக மநுவாதிகள்சொல்லுகிறுர்கள்.

கஉ௩—பொய்ச்சான்றுரைக்கின்ற க்ஷத்திரியன்முதல் மூன்றுவருணத்தாரையும்,தருமிஷ்டனுனவரசன் தன்தேசத்தைவிட்டுத்துரத்தவேண்டியது. அல்லது சிக்ஷையாவது செய்யவேண்டியது.பிராமணனைமாத்திரம் தேசத்தைவிட்டே துரத்தவேண்டியது.

கஉ௪—பிராமணனெழிய மூன்றுவருணத்தாருக்கும்,சிக்ஷிக்கத்தக்கவிடம் பத்தென்றும் பிராமணனைக் காயப்படுத்தாமல் துரத்திவிடவேண்டியதென்று சுவாயம்புவமநு சொல்லியிருக்கிறுர்.சிலர் இந்தலோகத்துக்கு வஸ்திரத்தையுரிந்துகொண்டும் அவன்வீட்டையிடித்தும் ஊரைவிட்டுத் துரத்தவேண்டியதென்றும் அபிப்பிராயப்படுகிறுர்கள்.

கஉ௫—அந்தப்பத்திடங்களாவன உபஸ்தம்- உதரம்-நா- கை- கால்-கண்-மூக்கு-காது-பொருள்-தேகம்-ஆகப்பத்து இவைகளில் யெந்த அங்கத்தால் குற்றம்செய்யப்படுகிறதோ அந்தஅவயவத்தில் அடித்தல்முதலிய சிக்ஷிக்கவேண்டியதென்றகருத்து.

கஉ௬—சான்றினைக்குறித்த தண்டங்களை அவர்களின்முதற்றடவை இரண்டாந்தடவை யென்பதையும் குற்றங் குணங்களையும் சாமர்த்தியத்தையும், குற்றஞ்செய்த தேசத்தையும்,காலத்தையும்,

தண்டத்தை விதிக்கின்ற வசநங்களையும் நன்ருக ஆராய்ந்து தக்கபடிதண்டம்விதிக்க.

கஉஎ—அதர்மமாகத் தண்டித்தால் இம்மையில் யசஸையும், மறுமையில் கீர்த்தியையும், சுவர்க்கத்லதையும், அழிக்கும்-ஆதலால் அதைநீக்கவேண்டியது.

கஉஅ—தண்டிக்கத்தகாதவர்களை பொருளாசையால் தண்டிக்கிறவனும், தண்டிக்கத்தக்கவர்களை தாக்ஷிணியத்தால் தண்டியாமலும் இருக்கிறவரசன் இம்மையில் அபயசஸையும் மறுமையில் நரகத்தையும் அடைகிருன்.

கஉகூ—பொய்சொல்பவனை முதல்விசை தப்புக்காரியம்செய்தாய் இனிசெய்யாதேயென்று சொல்லி வாயால் மிரட்டவேண்டியது. மறுபடிசெய்தால் சீ, துஷ்டா உன்னைச்சுடவேண்டுமென்று இதுமுதலானதிட்டைத் திட்டவேண்டியது. மூன்ரும்விசைசெய்தால் தண்டம்விதிக்கவேண்டியது. நான்காவதுவிசை அடித்தல்-காயப்படுத்தல்முதலான சிக்ஷை விதிக்கவேண்டியது.

கரு0—இவர்கள் அடியாலும் அடங்காவிடில் அப்போதுமுன்சொன்னநாலுதண்டனையுஞ்செய்யவேண்டியது.

## பொருளின்தொகை.

கருக—உலகத்தில் விவஹாரத்திற்காக செம்பு-பொன் - வெள்ளி இவைகளுக்கு யாதொருகணக்கேற்பட்டிருக்கிறதோ அதை முழுதுஞ்சொல்லப்போகிறேன்.

கருஉ—சிறுபுழையின்வழிவருஞ் சூரியகிரணத்திலே நுண்ணிதாகக்காணப்படுகின்றவைகளுக்கு திரிசரேணு என்றுபெயர்.

கருங—திரிசரேணு-எட்டுகொண்டது-ஈர்- ஈர் மூன்றுகொண்டது-மன்கடுகு-மன்கடுகு-மூன்றுகொண்டது வெண்கடுகு.

கரு௪—வெண்கடுகு ஆறுகொண்டது-நடுத்தரயவம்- நடுத்தரயவம்-மூன்றுகொண்டது-குன்றி-குன்றி-ஐந்துகொண்டது- மாடம் மாடம்-பதினாறுகொண்டது-பொன்-இந்தப்பொன்- இரண்டரை-விராகனிடையாகும்.

கரு௫—பொன்-நாலுகொண்டது-பலம்-பலம்-பத்துக்கொண்டது-தரணம்-இதற்குமேல்-வெள்ளிக்கணக்கு-மேற்சொன்ன குன்றியிரண்டுகொண்டது-வெள்ளிமாடம்.

கரு௬—வெள்ளிமாடம்-பதினாறுகொண்டது-வெள்ளித்தரணம் அதற்குப்புராணமென்றும்பெயர்·தாம்பரக்கணக்கு-பொன்கணக்கிற்காட்டிய பலத்தில்-நாலிலொருபங்கான தாம்பரத்துக்கு காருடிகமென்றும் காருடாபணமென்றும்-பணமென்றும்பெயராம்·

கரு௭—வெள்ளித்தரணம் பத்துக்கொண்டது-பலம்- அதற்குச் சதமானமென்றுபெயர். பொன்னின்பலத்தை நிஷ்கமென்றுமறியவேண்டியது·

கரு௮—பிரதமசாகசத்திற்கு இருநூற்றைம்பதுபணமும்-மத்திமசாகசத்திற்கு-ஐந்நூறுபணமும்-உத்தமசாகசத்திற்கு- ஆயிரம்பணமும்-கணக்கென்றறியவேண்டியது. பிரதமசாகசத்துக்கு பூர்வசாகசமென்று நாமாந்தரமுண்டு.

கரு௯—பிரதிவாதி தநிகன்கேழ்க்கும்போது கொடாமல் நீதிக்குவந்தபின் தான் கடன்கொடுக்கவேண்டியதாக ஏத்துக்கொண்டால்- நூற்றுக்கைந்துபணமும்- நீதிக்குவந்தபின்னும் தான் கொடுக்கவேண்டியகடனை-யேத்துகொள்ளாவிடில்- நூற்றுக்குப் பத்துப் பணமும் தண்டம்விதிக்கவேண்டியது· இது மநுவின்கட்டளை.

## வட்டிவாங்குதல்.

கச௰—வட்டியினுற்பிழைக்கிறவன் பொருள்வளர்வதற்காக வசிட்டருநிவரூலேற்படுத்தப்பட்ட நூற்றுக்கொன்றேகால்வட்டியை மாதந்தோறும் வாங்கவேண்டியது.

கசக—பெரியோர்களினுல் வழங்கியதருமத்தை நினைத்துக்கொண்டு ஈடில்லாத்தொகைக்கு- நூற்றுக்கு இரண்டுவட்டியும், மாதந்தோறும்வாங்கலாம், இதனுற் பாபியாகமாட்டான்.

கசஉ—மாதந்தோறும் ஈடில்லாக்கடனுக்கு நூற்றுக்கு இரண்டு-மூன்று-நான்கு-ஐந்து- வட்டியை- வருணக்கிரமமாக வாங்கிக்கொள்ளவேண்டியது.

கசங—விளைநிலத்தை அநுபவிக்கும்படி ஙீடாகவைத்து கடன் வாங்கினவிஷயத்தில் நூற்றுக்கு ஒன்றேகால் வட்டிவாங்கக்கூடாது. கெடுவு தப்பிப்போனுலும் அந்தநிலத்தை தான் ஒருவனுக்கு தாநமும் விக்கிரயமுஞ்செய்யக்கூடாது.

கசச—ஈடுவைக்கப்பட்ட வஸ்திராபரணமுதலானவற்றை உடையவனுத்திரவின்றி அநுபவிக்கக்கூடாது. அநுபவித்தால் வட்டியையுந்தள்ளி அநுபோகத்தினுல் ஈட்டுக்கு அழிவுநேரிட்டால் உடையவனுக்கு முதலைக்கொடுத்து சந்தோஷிப்படுத்தவேண்டியது.

கசடு—ஈடுவைத்தபொருள் இஷ்டத்தினுல் அநுபவிக்கும்படி கொடுத்தபொருள் இவ்விரண்டும் எவ்வளவுகாலமானுலும் அநுபோகத்தால் அழியமாட்டாது. நெடுங்காலமானபோதிலும் அதையுடையவன் இஷ்டமானபோது பெற்றுக்கொள்ளலாம்.

கசசு—உடையவனிஷ்டத்தினுல் அநுபவிக்கும்படியாகக் கொடுத்த-பசு-ஒட்டகம்-பழக்கிறகுதிரை- எருதுமுதலியவைகள் அநுபவிக்கிறவனுக்குச்சொந்தமாகாது.

கசஎ—தன்-இஷ்டமின்றி-யாதாவது ஒருபொருளை மற்ருெருவன் அநுபவிக்கும்போது உடையவன் அவ்வூரிலிருந்துகொண்டு பத்துவருஷம்வரையில் தடைசெய்யாவிட்டால் அந்தப்பொருள் அதற்குமேல் அவனுக்குச்சொந்தமாகாது. அநுபவிக்கிறவனுக்குச்சொந்தமாகும்.

கசஅ—ஆனல் பொருளுடையவன் புத்தியறிந்தவனுயும், பதினறுவயதுக்குமேற்பட்டவனுயுமிருந்து அவனுக்கெதிரில் அப்பொருளைப்பத்துவருஷம் அநுபவித்தால் அநுபோகக்காரனுக்குச்சொந்தமாகும் பின்பு உடையவன்வழக்கிடக்கூடாது.

கசகூ—ஈடுவைத்தபொருள் எல்லை-சிறியவன்பொருள்-இஷ்டத்திறைல் அநுபவிக்கும்படி கொடுத்தபொருள் †நிக்ஷேபம் *உபநிதி ஸ்திரீகள்-அரசன்பொருள்-அந்தணன்பொருள்-இவைகள் பத்துவருஷத்திய-அநுபோகத்திறைலும் அழியமாட்டாது.

கடு0—உடையவனுத்தரவின்றி அவனுக்குத்தெரியாமலீட்டையநுபவிக்கிற மூடன் தானநுபவித்ததால் வந்ததோஷம்போகிறதற்காக அரைவட்டி தள்ளவேண்டியது. வலுவுசெய்து அநுபவித்தால் முழுவட்டியும் தள்ளவேண்டியது.

கடுக—பொருளிரட்டிப்பாகுமளவும்,வட்டிவிதிக்கப்பட்டது; தானியம்-பழம்-முதலானவை - ஆட்டுமயிர்-வாகநம் - இவைகளைக்கிரயங்கட்டிக்கொடுத்தால் முதலுக்கு ஐந்துபங்கைவிடவட்டியுயராது.

---

† நிக்ஷேபம்-என்பது-தொகையைச்சொல்லி முத்திரையில்லாமல் ஒருவனிடத்தில்-காக்கும்படிவைக்கும்பொருள்.

* உபநிதி-என்பது - தொகையைச்சொல்லாமல் முத்திரையுடன்வைக்கும்பொருள்.

கடுஉ—ஏற்பாடுசெய்துகொடுத்த வட்டியைவிட அதிகவட்டி கிடைக்கமாட்டாது. வட்டி யேற்பாடுசெய்யாமல் கொடுத்தால் உடையவன் கேட்கிறவளாயில் வட்டியில்லை கேட்டுக் கொடாவிடி ல் அதுமுதல் நூற்றுக்கு ஐந்துவட்டிவளாயில் வருணக்கிரமமாக க்கொடுக்கத்தக்கது. இந்தமுறைப்படி வாங்காமல் பிராமணனிடத் திலும்-இரண்டுக்குமேற்பட்டவட்டிவாங்குவதை நிந்திக்கிறார்கள்.

கடுரு—உத்தமர்ணன் மாசந்தோறுமாவது - மூன்றுமாசத்துக் கொருவிசையாவது வருஷத்துக்கொருவிசையாவது வட்டியைக் கொடுக்கும்படி யேற்பாடுசெய்துகொள்ளவேண்டியது. அதற்கு மேற்கூடாது இப்படி ஒத்துக்கொண்டபடி வட்டி கொடாவிட் டாலும் அந்தவட்டிக்கு வட்டிவாங்கக்கூடாது. சாஸ்திரத்திற்சொ ல்லியதைவிட அதிகவட்டியும் தநரட்டிப்புக்குமேற்பட்ட வட்டி யையும்,விரைவில் அதிகலாபத்தையுண்டாக்குகிறகாலிகவிர்த்தியை யும்,எவல்செய்யத்தக்க காயிகவிர்த்தியையும் கடன்காரன் அவசரத் தினால் ஏற்றுக்கொண்ட காரிகவிர்த்தியையும் வாங்கக்கூடாது.

கடுச—முதற்பொருளும் வட்டியுஞ்சேர்த்துக்கொடுக்கச் சக்த் தியில்லாதவன் தநிகனுடையசம்மதியினாலே அதுவலாக்குங்கூடி யவட்டியைக்கொடுத்து முதற்பொருளுக்கு அந்தவருடமுதலிய லவ கண்டெழுதிய புதுப்பத்திரத்தைப்பிறப்பிக்க.

கடுடு—அப்படிவட்டியுங்கொடுக்கச் சக்தியில்லாதவன் வட்டியு முதலோடுகூட்டி கூடியதொகைக்கு வட்டியோடுபுதுப்பத்திரம் பிறப்பிக்க.

## ஒப்பிப்பணிசெய்யாமை.

கடுசு—இந்தத்தேசத்திற்கு இவ்வளவுதிநத்தில் கொண்டுபோய் விடுகிறேனென்று சத்தம் ஏற்பாடுசெய்துகொண்டவண்டிக்காரன்

முதலானவர் அந்தக்கெடுப்படி கொண்டுபோய்விடாவிடில் பே சினசத்தத்தொகை முழுமையும் அடையமாட்டார்.

கடுஎ—தண்ணீரிலும், பூமியிலும், நடையறிந்தவியாபாரிமுத லானவர்கள் எந்தத்தேசத்திற்கு எந்தச்சுமைக்கு-எந்தக்காலத்திற்கு எவ்வளவுசத்தம் கொடுக்கலாமென்று சொல்லுகிறார்களோ அதை அனைவருமேற்றுகொள்ளவேண்டியது.

## பிணையினிலக்கணம்.

கடுஅ—காண்பிக்கும்பிணையினன் - கடனுடையவனைத்தநிகன் காண்பிக்கச்சொன்னபோது காண்பியாவிடில் அந்தக்கடனைத்தா ன்கொடுக்கவேண்டியது.

கடுகூ—தகப்பன் காண்பிக்கும் பிணைக்காக கொடுக்கவேண்டிய பொருள் பரிகாசமாகப்பந்தியம்வைத்தபொருள் சூதாடிக்கொடு க்கவேண்டியபொருள் குடித்ததற்காகக் கொடுக்கவேண்டியபொ ருள்-தண்டப்பொருள்-ஆயத்தீர்வை-இவைகளை பிள்ளைகொடுக்க வேண்டியதில்லை.

கசு0—காண்பிக்கும் பிணைவிஷயத்தில் மாத்திரம் தந்தைக்காக மைந்தன் கொடுக்கவேண்டியதில்லை கொடுக்கும் பிணைவிஷயத்தி ல் மைந்தர்களுங்கொடுக்கவேண்டியது.

கசுக—தனக்குக்கொடுக்கவேண்டிய தொகையையறிந்த காண் பிக்கும் பிணையினனிறந்துபோனால் தநிகன் எவ்விதமாகக்கடனை ப்பெற்றுக்கொள்ளலாமென்றால்.

கசுஉ—காண்பிக்கும் பிணையினன் அந்தக்கால அளவுக்குள்ளே கடனுடையவனைக்கொண்டு அக்கடனை தீராவிட்டாலும் அல்லது அவனை அழைத்துவந்து காண்பியாவிட்டாலும் அந்தவாதிக்குச் சேரவேண்டியகடன்தொகையை பிணையினனேனும், அவன்மை ந்தனேனும் கொடுக்கவேண்டியது.

கசுரு—குடி-வெறி-நோய் - சுவாதீநமில்லாமை- பாலியம்-கிழ தீதனம் இவ்விதகுணமுள்ளவர்களுக்கு அவர்களின்-பிதா-பிராதா இவர்களநுமதியின்றி கொடுத்த கடன்முதலானவைகளைக் குறித்து பிரியாதுவந்தால் அது நீக்கிவிடத்தக்கது.

கசுச—ஒருவிஷயம் சீட்டில் காணபட்டிருந்தாலும்,அது தரு மத்திற்கும், உலகவழக்கத்திற்கும், விரோதமாகவிருந்தால் அது உண்லமயாகாதாகையால் நிறைவேற்றக்கூடாது.

கசுடு—ஒருவனை மோசஞ்செய்வதற்காக சூதாகவைக்கப்பட் ட ஈடும், விக்கிரயமும், கொடுத்தலும்,வாங்குதலும், மற்றுமுள்ள சூதானகாரியங்களும் உண்மையல்லாததால் அவைகளையும் தள்ளி ப்போடவேண்டியது.

கசுசு—விபாகத்துக்குமுன் குடும்பத்துக்காகக் கடன்வாங்கிச் செலவழித்தவன் அந்தக்கடனைக்கொடாமலிறந்துபோனால் பிரா தாக்கள் பிரித்துக்கொண்டிருந்தாலும் வீதப்படிபொதுவில் அந் தக்கடனைக்கொடுக்கவேண்டியது.

கசுஎ—ஒருவனுடைய வேலைக்காரர்கள் தன்யஜமாநன் குடும் பவிஷயத்திற்காக யஜமாநன் ஊரிலிருக்கும்போதாவது அல்ல து அந்நியதேசத்திலிருக்கும்போதாவது எந்தக்கடனைவாங்குகிறா ர்களோ அதை யசமாநனேற்றுகொள்ளவேண்டியது.

கசுஅ—வலிமையால் கொடுக்கப்பட்டதும், அநுபவிக்கப்பட் டதும்,எழுதிக்கொள்ளப்பட்டதும்,மற்றக்காரியங்களும் நீக்கத்த க்கவைகளென்று மநுசொல்லியிருக்கிறார்.

கசுகூ—சான்றினர்-பிணையினர்-நீதிக்காரன்-இம்மூவரும்பிறனு க்காகப்பிரயாசைப்படுகிறார்கள்.அந்தணன்- தநிகன்-யாபாரி- அர சன் இந்நால்வரும் பிறரால் விருத்தியடைகிறார்கள்.

௧௭௦—அரசன்-எளியவனாகவிருந்தபோதிலும் அதிகதீர்வையை வாங்கக்கூடாது. தநிகனாகவிருந்தாலும் வாங்கத்தக்கதை சிறிதுந் தள்ளக்கூடாது.

௧௭௧—அரசன்வாங்கத்தகாத தீர்வையைவாங்குவதினாலும்,வாங்கத்தக்கதை விடுவதினாலும் அசமர்த்தனென்றுசொல்லப்படுவான் பின்னும் இம்மைமறுமைப்பயனின்றியழிந்துபோகிறான்.

௧௭௨—நியாயமாய்த் தீர்வைவாங்குவதாலும்,வருணாசிரமதருமந் தப்பாமல் காப்பாற்றுவதாலும்,அரசன் சமர்த்தனென்றுசொல்லப்படுவான்.அன்றியும் இம்மைமறுமைப்பயனையும் அடைகிறான்

௧௭௩—ஆதலால்-அரசன் கோபம்-இந்திரியம்- இவைகளை அடக்கிக்கொண்டு யமதருமராஜாவைப்போல் தானும் ஒருவனிடத்தி லிஷ்டத்தையும், ஒருவனிடத்திற்கோபத்தையும், வையாமல் தருமப்படியாவனையுஞ் சரியாகப்பார்க்கவேண்டியது.

௧௭௪—எந்தவரசன் பொருளாசையால் வழக்குகளை அநியாயமாகத் தீர்மானிக்கிறானோ அந்தத் துராத்மாவை சத்துருக்கள் விரைவில் கைவசப்படுத்துகிறார்கள்.

௧௭௫—எந்தநீதிக்காரன் இராகத்துவேஷங்களை யடக்கிக்கொண்டு விவகாரங்களை தருமப்படிவிசாரிக்கிறானோ அவனை பிரசைகள்-நதிகள்-சமுத்திரத்தைப்போல அடைந்துவேறுபடாமல் இருக்கின்றனர்.

௧௭௬—எந்தத்தநிகன்- நானரசனுக்குச் சிநேகிதனென்று கெருவத்தினால்ஸ்மிருதிக்கும் ஆசாரத்துக்கும் விரோதமாய் தன்மநதிற்குஎற்றபடி கடன்காரனைத்துன்பப்படுத்துகிறானோ அதை கடன்காரன் நீதிக்காரனுக்கறிவித்தால் அவன் தநிகனுக்குக் கடனைவாங்கிக்கொடுத்து தநிகன்செய்தகுற்றத்திற்காக அவனுக்கு அந்தக்கடன் தொகையில் நாலிலொன்று தண்டம்விதிக்க.

கஎஎ—தநிகனுக்கு சரியானஜாதியாகவாவது அல்லது தாழ்ந்த ஜாதியாகவாவதிருக்கிற கடன்காரன் தான்வாங்கினகடனைக்கொடுக்கச் சக்த்தியில்லாமற்போனால் தன்ஜாதிக்குத்தக்க வேலையினலாவது கடனைத்தீர்க்கவேண்டியது. உயர்ந்தஜாதியாகவிருந்தால் அந்தக் கடனைக் கிடைத்தபோது கொஞ்சங்கொஞ்சமாகத் தீர்க்கவேண்டியது.

சஎஅ—கடன்விஷயத்தில் ஒருவருக்கொருவர் வழக்காடுகின்ற மனிதர்களின்காரியங்களை இப்போது சொன்னவிதிப்படி சான்றினர்முதலிய நம்பிக்கையினல் உறுதிப்பட்டபடி அரசன்தீர்மானிக்கவேண்டியது.

## நிக்ஷேபம்.

கஎகூ—நற்குலத்திற்பிறந்தும்-நல்லொழுக்கமுள்ளவனயும்-தருமமறிந்தவனயும் - சத்தியவாதியாயும்-பெருங்குடும்பியாயும் - தநிகனயும் - பூசிக்கத்தக்கவனயும் இருக்கிறவனிடத்தில் தெரிந்தவன் நிக்ஷேபத்தைவைக்கவேண்டியது.

கஅ0—எவன்-எவன்கையில் எந்தப்பொருளை எந்தவடையாளத்தோடு நிக்ஷேபமாகக்கொடுக்கிருனே அவன் அந்தப்பொருளை அந்தவடையாளத்துடன் வாங்கிக்கொள்ளவேண்டியது.

கஅக—நிக்ஷேபம்வைத்தவன் கேட்கும்போது அதைவாங்கினவன் கொடாவிட்டால் அவன் நீதிக்கறிவிக்கவேண்டியது. நீதிக்காரனும் அவனைத்தனியாக விசாரிக்கவேண்டியது.

கஅஉ—நிக்ஷேபம்வைக்கும்போது சாக்ஷியில்லாவிடில் வயது-உருவம்-உள்ளவர்களான தன்னிடவேவுகாரனைக்கொண்டு மற்ருருநிக்ஷேபத்தைஅவனிடத்தில்வைக்கச்சொல்லி பின்புஅவனைஅந்த நிக்ஷேபத்தைஅவர்களைக்கொண்டேகேட்கச்சொல்லவேண்டியது.

கஅரு—அந்தப்பொருளை வைத்தபடிமுத்திரையோடு கொடுத்துவிட்டானாகில் மூன்வைத்ததாகச்சொல்லிக்கொண்ட விஷயத்தில் இவன்-சிறிதும் மோசஞ்செய்யவில்லையென்று நீதிக்காரனறியவேண்டியது.

கஅச—பின்புவைத்தநிக்ஷேபத்தையும் கொடாவிடில் முன்வைத்தவனுக்கும் பின்வைத்தவனுக்கும் அவனிடத்தில் நிக்ஷேபத்தொகையை வாங்கிக்கொடுத்து அவனையும் தண்டிக்கவேண்டியது.இதுதான் தருமநிச்சயம்.

கஅடு—ஒருவனால் வைக்கப்பட்ட நிக்ஷேபம்-உபநிதி-இவைகளை வைத்தவனிருக்கும்போது அவன்பிள்ளையிடத்தில் கொடுக்கக்கூடாது.வைத்தவனிறந்துபோனால் அவன்புத்திரனிடத்தில் வாங்கினவன் தானாகவேகொடுக்கவேண்டியது.

கஅகூ—அந்தநிக்ஷேபம்-உபநிதி இவைகளை வாங்கினவன் வைத்தவனிறந்தபின்பு அவன் பிள்ளைக்குக்கொடுத்தால் பிள்ளையேனும் அரசனேனும் மற்றுமுன்னிடத்தில் வைத்திருப்பதைக் கொண்டுவாவென்று ஆக்ஷேபிக்கக்கூடாது.

கஅள—சிலவிசை அவனிடத்தில் இன்னும்வைத்திருப்பதுபோல் அவன்பேச்சுமுதலிய குறிகளாற்றெரிந்தால் அவனடையை விசாரித்துப் பிரமாணமுதலானவற்றைக்கேளாமல் நல்வார்த்தையால் பெற்றுக்கொள்ளவேண்டியது.

கஅஅ—இந்தவிதிப்படியாக வெல்லாநிக்ஷேப விஷயத்திலும்-தீர்மானிக்கவேண்டியது.முத்திரையிட்டுவைத்தநிக்ஷேபத்தை அந்தமுத்திரையுடன் வாங்கினவன்கொடுத்துவிட்டால் மறுபடி அவனிடத்தில் நிக்ஷேபம்வைத்தவன் சந்தேகப்பட்டால் அதைஒப்புக்கொள்ளக்கூடாது.

கஅக—நிக்ஷேபம்-உபநிதி-இவ்விரண்டும் வாங்கினவனால் அநுபவிக்கப்படாமல் திருடர்களினால் அபகரிக்கப்பட்டாவது ஜலத்தினால்வேறோரிடத்திற்குக்கொண்டுபோகப்பட்டாவது-நெருப்பினால் எரிக்கப்பட்டாவது-போயிருந்தால் வாங்கினவன் கொடுத்தவனுக்கு சிறிதுங்கொடுக்கவேண்டியதில்லை.

கக0—நிக்ஷேபத்தையபகரித்தவன் நிக்ஷேபம்வையாமற்கேட்கிறவன் இவ்விருவரிடவுண்மையை நான்குவித உபாயத்தினாலும் சத்தியத்தினாலும், அறியவேண்டியது.

ககக—எவன் நிக்ஷேபம்வையாமற்கேட்பானோ எவனதையபகரிப்பானோ இருவருக்கும் திருடன்தண்டனையைவிதிக்க அல்லது அதற்குச்சரியான தண்டம் வாங்குக.

ககஉ—ஆனால் நிக்ஷேபம்-உபநிதி-இவைகளையபகரித்தவனுக்கு முதற்றடவையில் அதற்குச்சரியானதொகையை தணடமாக விதிக்க. இரண்டாந்தடவையில்மேற்சொன்னபடிதண்டிக்க.

ககரு—உன்மேல் அரசன் கோபங்கொண்டிருக்கிறான் நான் உன்னைக்காப்பாற்றுகிறேன் என்று இவ்வித மாறுபாடுகளைச்சொல்லி எவனொருவன் பொருளையபகரிப்பானோ அவனை அவன் சுற்றத்தாருடன் அரசன்பலவிதமான அங்கச்சேதஞ்செய்து யாவருக்குந்தெரியக் கொல்லவேண்டியது.

ககச—சான்றினர்முன்பாக எவன் எவ்வளவுதொகையை ஒருவனிடத்தில் நிக்ஷேபமாகவைத்தானோ அவனுக்கு அந்தத்தொகையிசகினால் அப்போதிருந்தசான்றினர் சொல்லுகிறபடி வைத்தவன் வாங்கிக்கொள்ளவேண்டியது.இல்லாவிட்டால் அவனை அரசன்தண்டிக்கவேண்டியது.

சகடு—ஒருவனுக்குந்தெரியாமல் ஒருவனிடத்தில் நிக்ஷேபம்

வைத்தால் பின்பு அப்படிரகசியமாகவே வாங்கினவன் கொடுத்து விடவேண்டியது. ஏனென்றால்-எப்போதும் வாங்கினபடிகொடுப்பது நியாயமல்லவா.

கக்கு—இந்தப்படிவிசுவாசத்தோடு கொடுக்கப்பட்டபொருள் நிக்ஷேபம்-உபநிதி இவைகளை அரசன் வாங்கினவர்களைத் துன்பப்படுத்தாமல் கொடுக்கும்படிதீர்மானிக்கவேண்டியது.

## உடையவனல்லான்விற்றல்.

ககஎ—உடையவனல்லான் உடையவனுத்திரவின்றி அவன்பொருளைவிற்கிறவனும் அதனாற்றன்னைத்திருடனென்று நினையாதவனுயுமிருக்கிற அந்தத்திருடனை சான்றினனாகக்கோரக்கூடாது.

ககஅ—ஒருவன்பொருளையபகரித்த உடையவனல்லான் உடையவனுக்குப்பந்துவாகவிருந்தால் அவனுக்கு அறுநூறுபணம்தண்டம் விதிக்கவேண்டியது. அவன் பந்துவல்லாமலிருந்து விற்றபொருளையும் அவன்புத்திராதிக ளிடத்துக்கொடாம விருந்தால் அவனைத்திருடனைப்போல் தண்டிக்கவேண்டியது.

ககக—உடையவனல்லான்செய்த தானம்-விக்கிரயம்- ஒரு எற்பாடு-இவைகளைக்குறித்துவழக்குவந்தால் அவைகளை மாற்றவேண்டியது என்றுசாஸ்த்திரமரியாதை.

உ00—எந்தப்பொருள் விஷயத்தில் வந்தவழிதெரியாமல் அநுபோகமாத்திரமிருக்கிறதோ அந்தவிஷயத்தில்அநுபோகம்பெரிதல்ல வந்தவழியேகாரணம்.

உ0க—சான்றினன்முன்பாக உடையவனல்லானிடத்தில் ஒரு பொருளையொருவன் கிரயத்துக்குவாங்கியிருந்தால் அந்தப்பொருளை பின்பு உடையவன் பெற்றுக்கொள்ளவேண்டுமானுல் அவன்

தியாயமாக் கிரயம்வாங்கியிருப்பதால் தான்கொடுத்தபொருளை தனக்குவிற்ற வுடையவனல்லானிடத்தில் பெற்றுக்கொள்ளவேண்டியது.

உ0உ—உடையவனல்லான் ஒருபொருளை யாவருமறிய விற்று தேசாந்தரம்-அல்லது இறந்தாகிலும்போய்விட்டால் அவனிடத்து கிரயத்துக்குவாங்கினவனை அரசன் தண்டிக்கக்கூடாது.பொருளுக்குடையவன் அவன்கொடுத்த கிரயத்தொகையைக்கொடுத்துத் தன்பொருளைப் பெற்றுக்கொள்ளவேண்டியது.

உ0ங—குங்குமமுதலியவற்றோடு செங்கற்பொடிமுதலியவற்றைக்கலந்தும் தாழ்ந்தபொருளை உயர்ந்ததென்று சொல்லியும் இடைகுறைவாயும், பொருளைத்தூரத்தில்வைத்துக்கொண்டும், மறைத்துவைத்துக்கொண்டும் விற்பனைசெய்யக்கூடாது. செய்தால் உடையவனல்லானைப்போல் தண்டிக்க.

உ0ச—ஒருபெண்ணைக் கலியாணஞ்செய்து கொடுக்கிறதாக கந்நியா*சுல்க்கம்வாங்கிக்கொண்டவன் விவாககாலத்தில்மற்றொரு பெண்ணைக்கொடுக்கவந்தால் முன்கொடுத்த சுல்க்கத்துக்கே அவ்விரண்டுபெண்ணையுங் கலியாணஞ்செய்து கொடுக்கத்தக்கதென்று மநு சொல்லியிருக்கிறார்.

உ0ரு—பயித்தியக்காரி-குஷ்டரோகி-மற்றொருவனைப் புணர்ந்தவள்-இவர்களின் இவ்விததோஷத்தை விவாகத்துக்குமுன் சொல்லாமல் கொடுத்தால் கொடுத்தவனைத் தண்டிக்கவேண்டியது.

## கூடிமேம்படல்.

உ0சா—வேள்வியில் வரிக்கப்பட்ட ரித்துவிக்கு ஆனவன்-அந்தக்காரியத்தை, கொஞ்சம்செய்து,முடிக்காமல் நோயினால் படுத்து

* சுல்க்கம்-என்பது-பரியம்.

க்கொள்ளுவானாகில் அவன்செய்தகாரியத்துக்குத் தகுதியாக மற்ற ரித்துவிக்குகளுடன் யோசித்து அவனுக்கு தக்ஷிணையை யேற்படுத்தவேண்டியது.

உ0எ—சில்லறை தக்ஷிணைவாங்கிக்கொண்டபின் அந்த ரித்துவிக்கு தனதுகாரியத்தைவிட்டு நீங்கவிரும்பினால் அவன் தன்னுடைய காரியத்தை அந்நியனாலேனும் தானிருந்த கணத்தாரு ளொருவனாலேனும் முடிப்பித்து தனக்குச்சேரவேண்டிய மொத்ததக்ஷிணையையடைக.

உ0அ—எந்தவேள்வியில் எவ்வளவு சமுதாயதக்ஷிணைகள் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவைகளை அந்த வேள்வியிலிருக்கிற ரித்துவிக்குகள் தனித்தனியாகவே வாங்கிக்கொள்ளலாம் அல்லது ஒன்றாகச்சேர்த்தாவது பிரித்துக்கொள்ளலாம்.

உ0கூ—அந்த அத்வரியுமுதலிய நால்வகைக் கணத்தாருக்கும் யஜமானனால் சமுதாயதக்ஷிணையன்றி விசேஷிதக்ஷிணையாகக் கொடுக்கப்பட்ட தேரினை அத்துவரியுவும் வெள்ளைப்பரியினை பிரமாவும், வெள்ளைவாற்பரியினை-ஓதாவும், பண்டியை உற்காதாவும் முறையேகொள்க.

உக0—சமுதாயதக்ஷிணையை நூறுபங்காக்கி அவற்றுள் நாற்பத்தெட்டு பங்கை ஓதாமுதலிய முதற்கணத்தினர்நால்வரும், சமமாகக்கொள்க. மிகுந்த ஐம்பத்திரண்டுபங்கினுள் இருபத்துநாலு பங்கை பிரதிபிரஸ்தாதாமுதலிய இரண்டாங்கணத்தினர் நால்வரும் சமமாகக்கொள்க.மிகுந்த இருபத்தெட்டுப்பங்கினுள் பதினாறு பங்கை அச்சாவாக்கு முதலியமூன்றாங்கணத்தினர் நால்வருஞ்சமமாகக்கொள்க.மிகுந்த பன்னிரண்டுபங்கை கிராவாமுதலிய நான்காங்கணத்தினர் நால்வரும் சமமாகக்கொள்க. இப்பதினாறுபேரும் ரித்துவிக்குகளாவர்.

உகக—கூடிலாபஞ்சப்பாதிக்கிற மனிதர்களான ரித்துவிக்குகள் இப்போதுசொல்லிவந்த விதிப்படி பகுத்துக்கொள்க. மற்றும் கொல்லத்துவேலைமுதலிய தொழிலை கூடிச்செய்கிறவர்களும் இப்படியே வேலைக்குத்தக்கபடி சமமாகப்பிரித்துக்கொள்க.

## நல்கிநல்காமை.

உகஉ—தருமஞ்செய்யப்போகிறேனென்று சொல்பவனுக்கு ஒருதொகையைஒருவன்கொடுத்தால் அந்தத்தருமத்தை அவன்செய்யாவிட்டால் கொடுத்தவன் அந்தத்தொகையை வாங்கிக்கொள்ளலாம்,கொடுக்கிறதாக வாக்குத்தத்தஞ்செய்திருந்தாலும் கொடுக்க வேண்டியதில்லை.

உகரு—வேள்விமுதலான தருமகாரியத்தைச் செய்வதற்காக பொருளையாசித்து வாங்கினவன் அந்தக்காரியத்தைச்செய்யாமல் மதத்தாலேனும்,பொருளாசையாலேனும், காரியஞ்செய்தேனென்று பொய்சொன்னால் அரசன் அவன்யாசித்துவாங்கினபொருளையும்,அந்தக்குற்றத்துக்குத்தண்டமாக ஒருபொன்னையும் அவனிடத்தில்வாங்குக.

உகச—நல்கி நல்காமையின்தருமம் இப்போதுசொல்லியாயிற்று. இனிக் கூலிகொடாமையின்தருமம் சொல்லப்போகிறேன்.

## கூலிகொடாமை.

உகரு—ஒருவன் ஒருவேலையைச்செய்கிறதாக ஒப்புக்கொண்டு தனக்கு நோயில்லாமலிருக்கும்போது அந்தவேலையைக் கர்வத்தாற்செய்யாவிடில் அவனுக்கு எட்டுக்குன்றிபொன் தண்டப்விதிக்க. அவன்செய்தவேலைக்குக் கூலியுங்கொடுக்கவேண்டியதில்லை.

உகசா—வேலையாளன் பிணிமுதலிய துன்பத்தால் வேலைசெய்

யாமல் காலதாமசமானாலும் அந்தவேலையைமுடித்து முன்பேசி னகூலியையடைவான்.

உகஎ—வேலையாளன் ஏற்றுகொண்டவேலையை ஒருவனைக்கொ ண்டாவது தானாவது முடிக்காவிடில் சிறிது குறைவாயிருப்பினு ம் அவனுக்குக் கூலிகொடுக்கத்தக்கதன்று.

உகஅ—இதுவரையில் கூலிகொடாமையின்சங்கதியை முழுது ஞ்சொல்லிவிட்டேன் இனி கட்டுப்பாட்டைக்கடப்பவர்களின் சி க்ஷையைச்சொல்லப்போகிறேன்.

## கட்டுப்பாட்டைமீறுதல்.

உகக—கிராமம்-தேசம் - இவைகளிலிருக்கிற யாபாரிமுதலிய கூட்டத்தார் - அந்தணர்முதலியகுடிகள் - ஒருதேவாலயமுதலிய விஷயத்தில் ஒரு கட்டுப்பாடுசெய்துகொண்டதை ஒருவன்மீறினா ல் அவனை அரசன் அந்தவிடத்தைவிட்டுத் துரத்தவேண்டியது.

உஉ0—இந்தக்கட்டுப்பாட்டை மீறுகிறவனுக்குக் குற்றத்துக் குத்தக்கபடி அரசன்-நாலுபொன்-அல்லது-ஆறுநிஷ்கம்- அல்லது நூறுவெள்ளி தண்டம்விதிக்க.

உஉக—தருமிஷ்டனான வரசன்-கிராமம்-சாதி-கூட்டம்-இவைக ளைக்குறித்துண்டான கட்டுப்பாட்டை மீறுகிறவர்களுக்கு இப் போதுசொல்லிவந்த தண்டனையைவிதிக்க.

## விற்றுகொண்டுள்ளமொப்பாமை.

உஉஉ—ஒருவனுக்கு ஒருபொருளைவாங்கியாவது விற்றுவது பின்பு சந்தேகமுண்டானால் அந்தப்பொருளைப் பத்துநாளைக்குள் விற்றிருந்தால் வாங்கிக்கொள்ளலாம், வாங்கியிருந்தாலும் கொடுத் துவிடலாம்.

உஉ௩—பத்துநாளைக்குப்பின் வாங்கினவன் கொடுத்துவிடவும் விற்றவன் வாங்கிக்கொள்ளவும் வலிமைசெய்தால் இருவருக்கும் அறுநூறுபணம் தனித்தனி தண்டம்விதிக்க.

உஉ௪—ஒருவன்-குற்றமுள்ளபெண்ணை குற்றத்தைச்சொல்லாமல் விவாகஞ்செய்துகொடுத்தால் அவனுக்கு அரசன் தொண்ணூற்றாறுபணம் தண்டம்விதிக்க.

உஉ௫—ஒருவன் ஒருகந்நிகையை விபசாரதோஷமுள்ளவளென்றுசொல்லி அந்தத்தோஷத்தை நிரூபிக்காவிடில் அவனுக்கு நூறுபணந் தண்டம்விதிக்க.

உஉ௬—விவாகத்தில் பாணிக்கிரகணமுதலிய மந்திரங்கள் கந்நியாப்பெண் விவாகத்திற்குமாத்திரமேயன்றி முன்னொருவனோடு புணர்ந்தவர்களுக்குக்கிடையாது. அப்படிச் செய்துகொண்டவிவாகம் தருமகாரியத்துக்கு உபயோகமாகாது.

உஉ௭—பாணிக்கிரகணமந்திரஞ்சொல்லி விவாகஞ்செய்துகொண்டாற்றான் தருமபத்திநியாவள் அதிலும் தீவலஞ்செய்யும்போது மனைவியை எழடிவைக்கச்செய்து அம்மிமிதிக்கிற மந்திரத்தை கணவன்சொல்லுகிறத்தால் அந்தத்தருமபத்திநியின் பெருமை அறியத்தக்கதாகவிருக்கிறது.

உஉ௮—மற்ற எந்தக்காரியஞ்செய்தபின்பும் ஒருவர்க்கொருவர் பச்சாத்தாபமுண்டாகிறதோ அந்தக்காரியத்தையெல்லாம் இப்போது சொல்லிவந்தவிதிப்படி பத்துநாளைக்குள் மாற்றிக்கொள்ளும்படி அரசன் தருமமாத்தீர்மானிக்க.

## சாமிபாலவிவாதம்.

உஉ௯—மாட்டுக்குடையவனுக்கும் மேய்ப்பவனுக்கும் மாட்

கேனுக்குந் தப்பிதநேரிடுமாகில் அந்தவிஷயத்தில் தீர்மானிக்கவே ண்டியதை தருமமாகச் சொல்லப்போகிறேன்.

உருo—பசுக்களை பகலில்மேய்ப்பவன் ஓட்டிக்கொண்டு போனதுமுதல் இரவில் உடையவனிடத்தில் ஒப்புவிக்கிறவரையில் அந்தப்பசுக்களுக்கேனும் பசுக்களால் பயிர்களுக்கேனுந் தீங்குநேரிட்டால் மேய்ப்பவனைக்குற்றஞ்சாரும் பின்புநேரிட்டால் உடையவனைச்சாரும்

உருக—பாற்கூலிக்காக மாடுமேய்ப்பவன் உடையவனுத்தரவின்பேரில் பத்துமாட்டுக்கு ஒருசுறவுள்ள மாட்டைக்கறந்துகொள்ளலாம் அதுதானவனுக்குக்கூலி.

உருஉ—மந்தையில் கெட்டுப்போகப்பட்டும் புழுமுதலியவற்றால் கொல்லப்பட்டும் செந்நாய்முதலியவற்றால் அறையப்பட்டும் மேடுபள்ளத்தில்விழப்பட்டும் மனுஷியக்குறைவினால் சேதமாயுமிருக்கிறபசுவின் நஷ்டத்தை மேய்ப்பவன் உடையவனுக்குக்கொடுக்க.

உருங—திருடர்கூட்டங்கூடி இரைந்துகொண்டு பசுக்களைத்திருடினால் அந்தநஷ்டத்தை மேய்ப்பவன் கொடுக்கவேண்டியதில்லை ஆனால் அதுநடந்த இடத்தையும் காலத்தையும் உடையவனுக்குடனே அறிவிக்கவேண்டியது.

உருச—காடுமுதலியவிடங்களில் பசுக்கள் தானாக விறந்துபோனால் அந்தப்பசுக்களின் காது-தோல்-வால்மயிர்- கோரோசநம்-மற்றுங்கொம்புமுதலியவைகள் இவைகளை உடையவனுக்குக்காட்டவேண்டியது.

உருரு—வெள்ளாடு-செம்மறியாடு முதலியவற்றை மந்தைபோட்டிருக்கும்போது மேய்ப்பவன் சாக்கிரதைக்குறைவினால் செத்

நாய்முதலியவைகள் ஆடுகளைக்கொன்றால் அந்தக்குற்றம் மேய்ப்பவனைச்சாரும்.

உருசு—அவைகள் மந்தையைவிட்டு காட்டில்மேயும்போது செந்நாய்முதலியவை பாய்ந்துகொன்றால் அந்தக்குற்றம் மேய்ப்பவனைச்சாராது.

உருஎ—ஒருகிராமத்திற்கு நான்குபுறத்திலும் நானூறுமுழதூரம் மந்தைவெளி யேற்படுத்தவேண்டியது. அல்லது பலமுள்ளவனாற்சுழற்றிவிடப்பட்ட மூன்றுகோல்முறை வரையிலாவது ஏற்படுத்தவேண்டியது. பட்டணத்திற்கு இதற்குநான்குபங்கு அதிகமாக ஏற்படுத்தவேண்டியது.

உருஅ—அந்தமந்தைவெளிக்குள் வேலிகட்டாமலிருக்கிற பயிர்களை மாடுமேய்ந்தால் அரசன்மேய்ப்பவனுக்கு தண்டம்விதிக்கக்கூடாது.

உருகூ—அவ்விடத்தில் இடப்பட்டபயிர்களுக்கு ஒட்டகத்தின்கண்ணுக்குப் பயிர்தெரியாமலிருக்கும்படி வேலிகட்டி-அதில்நாய்பன்றிமுதலிய நுழையும்படியான சந்துகளையும் அடைக்கவேண்டியது.

உசூ0—வழிக்கும்-ஊருக்கும்- சமீபத்திலிருக்கிறபயிர் வேலிகட்டியிருக்கிறபயிர்-இவைகளில் மேய்ப்பவனுள்ளமாடுமேய்ந்தால் மேய்ப்பவனுக்கு நூறுபணந் தண்டம்விதிக்க. மேய்ப்பவனில்லாவிடில் அவைகளைப்பயிர்க்காரன் பிடித்துக்கட்டவேண்டியது.

உசக—மற்றவிடங்களின் மாடுமேய்ந்தால் மேய்ப்பவனுக்கு அந்தத்தேசத்தில் வழங்குகிற ஒன்றேகாற்பணம் தண்டம்விதிக்க எல்லாவிஷயத்திலும் பயிர்க்காரனஷ்டத்தைக் குற்றத்துக்குத் தக்

கபடி உடையவனேனும் மேய்ப்பவனேனும் கொடுக்கவேண்டி யது.

உசஉ—கன்றுபோட்டுப் பத்துநாளாகாதபசு-கோயில்மாடு-சக்கரம்போட்டபசு-ருஷபம்-பொலியெருதுகள் இவைகள் பயிரை மேய்ந்தால் மேய்ப்பவனிருப்பினு மில்லாவிடினும் தண்டம்விதிக்கக்கூடாதென்று மநுசொன்னர்.

உசங—பயிரிட்டவனே மாட்டைவிட்டுப்பயிரை யழித்தாலும் தக்ககாலத்தில் விதைக்காவிடினும் அவனிடத்தில் அந்நிலத்தின்தீர்வையைப் பத்துப்பங்கதிகமாக வாங்கவேண்டியது. மேற்சொன்ன குற்றம் அவனுக்குத்தெரியாமல் அவன்வேலைக்காரனுல்நேரிட்டால் ஐந்துபங்கதிகமாகவாங்கவேண்டியது.

உசச—தர்மிஷ்டனனவரசன்-உடையவன்-மேய்ப்பவன்-மாடு இவர்களின்குற்றவிஷயத்தில் இப்போது சொல்லிவந்தபடி தண்டிக்க.

## எல்லைவழக்கு.

உசரு—இரண்டுகிராமத்தார்- எல்லையைக்குறித்து வழக்கிட்டால் சேறுதண்ணீரில்லாத ஆநிமாதத்தில் பிரகாசமாத்தெரிகிற வரப்புமுதலிய வடையாளங்களைக்கொண்டு அரசன் அந்த இரண்டுகிராமத்தாருக்கும் நஷ்டம்வராதபடி எல்லையை எற்படுத்தவேண்டியது.

உசசு—எல்லைமுடிகிறவிடத்தில்- ஆல்-அரசு-முருக்கு-அத்தி-இலவு-அசோகு-ஆச்சா-பனை-பாலை- இம்மரங்களை - அடையாளமாக எற்படுத்தவேண்டியது.

உசஎ—மூங்கிற்புதர்-வன்னிக்கொடி-மேடைகள் -கொறுக்கை நாணல்-முள்ளுப்புதர்-இவைகளை எல்லைமுடிவில் எற்படுத்தியிருந்தால் அவ்வெல்லை அழியமாட்டாது.

௨௪௮—இரண்டெல்லைக்குநடுவில்-குளம்-கிணறு-துரவு-வாய்க்கால்-கோயில்-இவைகளை ஏற்பாடுசெய்யவேண்டியது.

௨௪௯—உலகத்தில் மனிதர்களுக்கு எப்போதும் எல்லைவிஷயத்தில் அடிக்கடி உண்டாகிற சந்தேகத்தை அரசனாலோசித்து மற்றும் மறைவான சிலவடையாளங்களை யேற்படுத்தவேண்டியது.

௨௫0—கல்-எலும்பு-பசுவின்வால்மயிர் - உமி-சாம்பல் - மண்டையோடு-காட்டெருமுட்டை-வெந்தசெங்கல்-கரி - பருக்காங்கல் மணல்.

௨௫௧—நெடுங்காலமாயினும்-பூமியிலழியாததான - மற்றும்-இவ்விதமான-பஞ்சுமுதலியவைகளை அடையாளங்களாக இரண்டெல்லைக்கு நடுவில் குடத்திற்போட்டுப்புதைத்துவைக்கவேண்டியது

௨௫௨—எல்லைவழக்குப்போடும்போது மேற்சொன்ன அடையாளங்களாலும்,முன்னநுபோகத்தாலும், தண்ணீர்ப்பாச்சலாலும், அரசன் எல்லையை ஏற்படுத்தவேண்டியது.

௨௫௩—எல்லைவிஷயத்தில் மேற்சொன்ன வெளியடையாளம் உள்ளடையாளம்-இவைகளாலும்,சந்தேகந்தீராவிடில் சாக்ஷிகளின் பிரமாணத்தைக்கொண்டு தீர்மானிக்கவேண்டியது.

௨௫௪—உபயவாதிகள்-ஊரார்-கிராமாதிகாரி - இவர்களின்முன்பாக சான்றினரை எல்லையைக்குறித்து அடையாளங் கேட்கவேண்டியது.

௨௫௫—அந்தசாக்ஷிகளனைவரும் எவ்விதமாகச் சொல்லுகிறார்களோ அவ்விதமாக எல்லையை ஏற்படுத்தி அந்த ஏற்பாட்டையும் அந்தச் சான்றினர்பேர்களையும் பத்திரத்திலெழுதிவைக்கவேண்டியது.

௨௫௬—அந்தச்சான்றினர் சிவந்தபூமாலை சிவந்தவஸ்திரம்

இவைகளைத்தரித்து தலையில் மண்கட்டியையவைத்துக்கொண்டு நாங்கள்பொய்சொன்னால் எங்கள்புண்ணியம் எங்களுக்குதவாமற்போகட்டும் என்று பிரமாணஞ்செய்து உண்மையைச்சொல்லவேண்டியது.

உடுஎ—அந்தச்சான்றினர்கள் உண்மையைச்சொன்னால் பரிசுத்தாளாகுகிறார்கள். பொய்சொன்னால் அவர்களுக்குத் தனித்தனியா இருநூறுபணந் தண்டம்விதிக்க.

உடுஅ—சான்றினரில்லாவிடில் பக்கத்திலிருக்கிற நாலுகிராமத்தார் அரசன்முன்பாக பிரமாணஞ்செய்து எல்லையேற்படுத்துக.

உடுகூ—மேற்சொன்ன சான்றினர் பக்கத்துக்கிராமவாசிகள் இவர்களாலும், நிச்சயம் ஏற்படாவிடில் பரம்பரையா யவ்வூருக்குச்சமீபத்தில் குடியிருக்கிற மேற்சொல்லும் வநவாசிகளையும் கேட்கவேண்டியது.

உசுo—அவர்களாவார்-வேடன்-வலைக்காரன்-இடையன்-செம்படவன்-வேர்வகைவிற்கிற - வில்லி-பாம்பாட்டி - சிந்தினநெல்லைச்சாரிப்பிழைக்கிற பிசைஷக்காரன்-மற்றும்- இவர்போன்றவர்களையும்-கேட்கவேண்டியது. அவர்கள் அடிக்கடி அந்தக்கிராமத்தின்வழியாய்ப் போகும்போதும் வரும்போதும் எல்லை அடையாளத்தை அறிந்திருப்பார்கள்.

உசுக—மேற்சொன்னவநவாசிகள்சொல்லும் அடையாளத்தைக்கொண்டு இரண்டுகிராமத்தினடுவில் எல்லையினடையாளத்தைதருமமாய் ஏற்படுத்தவேண்டியது.

உசுஉ—ஒருருக்குள் கழனி-கிணறு-குளம்-பூந்தோட்டம் வீடு-இவைகளுக்கு-எல்லைத்தகராறுண்டானால் அததற்குப் பக்கத்திலிரு

க்கின்றசான்றினர் பிரமாணங்களைக்கொண்டு நிச்சயிக்கவேண்டிய து. அவ்விஷயத்தில் வநவாசிகளுதவமாட்டார்கள்.

உ௬௩—எல்லைவிஷயத்தில் பக்கத்துக்கிராமவாசிகள் பொய் சொன்னால் அவர்களுக்கு தனித்தனி அரசன் ஐந்நூறுபணம்தண் டம்விதிக்க.

உ௬௪—எவன் ஒருவனிடகழனி தோட்டம்-வீடு-குளம்-இவைக ளிலொன்றை உடையவனை அடித்து மிரட்டி அபகரித்துக்கொள் ளுவானோ அவனுக்கு அரசன் ஐந்நூறுபணமும் உடையவனுக்கு த்தெரியாமல் அதை அபகரித்தவனுக்கு இருநூறுபணமும் தண் டம்விதிக்க.

உ௬௫—சான்றினரில்லாமல் எல்லைத்தகராறுநேரிட்ட பூமியை அரசன் மிகவு முதவியாகத்தக்க கிராமத்திற்சேர்க்க. இது சாஸ்திர த்தின் ஏற்பாடு.

உ௬௬—எல்லைத்தகராறு தீர்க்கிறவிஷயத்தில் நடக்கவேண்டிய தருமம் சொல்லப்பட்டது. இனி சொற்கொடுமைக்கு சிக்ஷைசொ ல்லப்போகிறேன்.

## சொற்கொடுமை.

உ௬௭—பிராமணனை-அந்நியாயமாய்த்திட்டுகிற க்ஷத்திரியனுக் கு நூறுபணத்தையும், அவ்விதவைசியனுக்கு நூற்றைம்பது-அல்ல து-இருநூறுபணத்தையும் அவரொத்தசூத்திரனுக்கு அடித்தலையு ம், அரசன் தண்டமாகவிதிக்க.

உ௬௮—பிராமணன்-க்ஷத்திரியனை- அந்நியாயமாகத்திட்டினால் ஐம்பதுபணத்தையும், அவ்விதமாகவைசியனைத்திட்டினால் இருபத் தைந்துபணத்தையும், சூத்திரனைத்திட்டினால் பன்னிரண்டுபணத் தையும், அரசன் தண்டம்விதிக்க.

உ௬௯—துவிஜாதிகள் தன்றன்சாதிக்குள் திட்டிக்கொண்டால் பன்னிரண்டுபணத்தையும், வாயிலேற்சொல்லக்கூடாதான திட்டை திட்டிக்கொண்டால் இருபத்திநாலுபணத்தையும் தண்டம்விதிக்க

உஎ0—சூத்திரன் துவிஜர்களை கொடுமையாகத்திட்டினால் அவன் தாழ்ந்தவிடமானகாலிற்பிறந்தவனாகையால் அவனுக்கையறுக்க

உஎக—துவிஜர்களை-பெயர்-ஜாதி-இவைகளைச்சொல்லிஇகழ்ச்சியாகத்திட்டுகிற சூத்திரன்வாயில் பத்தங்குலமுள்ள எஃகுகம்பியைக்காச்சி-எரிய-எரியவைக்க.

உஎஉ—அகங்காரத்தால் நீ யிதைச்செய்யவேண்டுமென்று பிராமணனுக்குத் தருமத்தையுபதேசிக்கிற சூத்திரனுடைய வாயிலுங் காதிலும் எண்ணெயைக்காச்சி யூற்றவேண்டியது.

உஎ௩—ஒருவனைப்பார்த்து நீசாஸ்திரம் ஓதவில்லை நல்லதேயத்திலும் பிறந்தவனல்ல நல்லகுலத்தானுமன்று. சாதகர்ம்மமுதலிய சரீரசமுஸ்காரமும் உனக்காகவில்லை என்று இவ்விதமாக அக்கிரமமாகத்திட்டுகிற துவிஜர்களுக்கு இருநூறுபணம் தண்டம் விதிக்க.

உஎ௪—ஒற்றைக்கண்ணன்-காலொண்டி-கைநொண்டி-இவர்களை அக்குறைவைச்சொல்லி யழைத்தவர்களுக்கு சொற்பசிக்ஷையான காருடாபணதண்டத்தைவிதிக்க.

உஎ௫—தாய்-தகப்பன்-மனையாள்-உடன்பிறந்தான்-பிள்ளை-குரு-இவர்களை ஒருதோஷத்தைச்சொல்லித் திட்டுகிறவனுக்கும் அல்லது இவர்களை ஒருவர்க்கொருவர் ஆகாமல் கலைக்கிறவனுக்கும், குருவுக்கு வழிவிடாதவனுக்கும் நூறுபணம் தண்டம்விதிக்க.

உஎ௬—பிராமணனும், க்ஷத்திரியனும் ஒருவர்க்கொருவர் கண்டபடிதிட்டிக்கொண்டால் தருமமறிந்த அரசன் அந்தப்பிராமண

னுக்கு இருநூற்லறம்பதுபணமும் க்ஷத்திரியனுக்கு ஐந்நூறுபணமுந்தண்டப்விதிக்க.

உஎஎ—வைசியனுஞ் சூத்திரனும் கண்டபடி திட்டிக்கொண்டால் வைசியனுக்கு இருநூற்றைம்பதுபணமும்-சூத்திரனுக்கு காயமில்லாமல் ஐந்நூறுபணமும் தண்டம்விதிக்க இதனுல் மேற்சொன்ன நாவறுத்தல் பிராமணக்ஷத்திரிய விஷயமென்று அறியவேண்டியது.

உஎஅ—இதுவனாயில் சொற்கொடுமைக்குச் சிக்ஷைசொல்லப்பட்டது. இனித்தண்டக் கொடுமையைக்குறித்துச் சிக்ஷைசொல்லப்போகிறேன்.

## தண்டக்கொடுமை.

உஎகூ—சூத்திரன் துவிஜாதிகளினது எந்தெந்த அவயவங்களைக் கையினுலாவது- ஆயுதத்தினுலாவது - அடிக்கிறுனோ அவனுடைய அந்தந்த அவயவங்களை குறைக்கவேண்டியதென்று மநுப்பிரஜாபதிசொல்லியிருக்கிறுர்.

உஅ0—கோபத்திருல் கையையாவது-தடியையாவது - தூக்கியடித்தால் அவன் கையையும், உதைத்தால் அவன்காலையும், சேதிக்கவேண்டியது.

உஅக—பிராமணனுடன் அவனுசநத்திலுட்கார்ந்த சூத்திரனை அவனுக்குப்பிராணஹாநி வராமலிருக்கும்படி இடுப்பிற் சூடுபோட்டாவது-ஆசநத்தில் சிறிதறுத்தாவது-ஊளாவிட்டுத் துரத்தவேண்டியது.

உஅஉ—பிராமணனைப்பார்த்து சூத்திரன்-அகங்காரத்தினுல் காறி உமிழ்ந்தால் இரண்டு உதடுகளையும் - மூத்திரத்லதமேலேவிட்டு அவமாநஞ்செய்தால் சிசிநத்தையும் - மலத்தைமேலேயெறிந்து அவமாநஞ்செய்தால் ஆசநத்தையும் - சேதிக்கவேண்டியது.

உஅ௩—அகங்காரத்தால் தலைமயிர்-கால்-தாடி-மீசை-கழுத்து-சிசிநம்-இவைகளைப்பிடிக்கிற சூத்திரன்கைகளை யோசிக்காமல்வெட்டவேண்டியது.

உஅச—எல்லாவருணத்தாரிலும் சதைபுரள அடித்தவனுக்கும் இரத்தங்காண அடித்தவனுக்கும்-நூறுபணத்தையும்,தசைதெறிக்க அடித்தவனுக்கு ஆறுநிஷ்கத்தையும், தண்டமாகவிதிக்க.எலும்புமுறிய அடித்தவனை தேசத்தினின்றும் ஓட்டுக.

உஅரு—மரம்-கொடி- முதலியவற்றையழித்தால், அதனாலுண்டாகும் பலனுக்குத்தக்கதாக ஆயிரம்பணம்வரையில் தண்டம் விதிக்க.

உஅசு—மானுடர்-பசு-இவர்களை துன்பப்படும்படியடித்தால் அத்துன்பத்திற்குத்தகுதியாக முன்மூன்றுவது சுலோகத்தில்சொன்னபடி குறைவாயேனும் அதிகமாயேனுந் தண்டம்விதிக்க.

உஅஎ—சரீரங்களில் காயம்படவாயினும், இரத்தமுண்டாகவாயினும்,அடித்து உபத்திரவப்படுத்தினவனிடத்தில்,அடிபட்டவனுக்குச் சொஸ்தமாகிற வரையில், உண்டான வயித்தியச்செலவு சாப்பாட்டுச்செலவு இவைகளை வாங்கிக்கொடுத்து விதிப்படிதண்டமும் வாங்குக.

உஅஅ—எவன் ஒருவனுடைய சுவர்ந ஆபரணம்- தாம்பரபாத்திரமுதலிய சொத்துக்களை இன்னதென்று தெரிந்தாவது-தெரியாமலாவது-போக்கடிப்பானோ அவன்சொத்துக்காரனுக்கு பொருளையும் அரசனுக்கு அதற்குச்சரியான தண்டத்தையுங்கொடுக்க

உஅகூ—ஒருவனுடைய தோல்-அதனாற்செய்யப்பட்ட கவசமுதலியவை-மரப்பாத்திரம் - மண்பாத்திரம்-புஷ்பம்-கிழங்கு-பழம் இவைகளைப் போக்கடித்தால் - பொருட்காரனுக்குப் பொருளின்

கிரயத்தையும் - அரசனுக்கு அதற்கைந்துபங்கு தண்டத்தையும் கொடுக்க.

உகூ0—தேர்முதலியவாகநம் சாரதி வாகநத்திற்குடையவன் இவர்களால் உயிருக்கும் பொருளுக்கும் சேதநேரிட்டால் பத்து விஷயம் நீங்கலாக மற்றவிஷயத்திற்றண்டிக்க.

உகூக—பத்துவிஷயமாவன-மூக்கணாங்கயறு அறுந்தேனும்-நுகத்தடி யொடிந்தேனும்-தரையின் மேடுபள்ளத்தினுல் குடைகவிழ்ந்தேனும்-எதிரிட்டுபண்டிவருமேனும்-சக்கிரப்பழுவொடிந்தேனும்-அச்சுமுறிந்தேனும்.

உகூஉ—ஜீநி-சேணம்-வார்-அறுந்தேனும்,கடிவாளம்-பூட்டாங்கயறு-கழன்றேனும்,சாட்டிக்கோலொடிந்தேனும், சாரதிவிலகு-விலகென்றுலாக்கும்போதேனும்,மனிதர்களுக்கேனும்-பொருளுக்கேனுந் துன்பம் நேரிட்டால், தண்டிக்கக்கூடாதென்று மநுசொல்லியிருக்கிருர்.

உகூங—பொருளுக்காவது- உயிருக்காவது - சாரதிமுட்டாள்தன்மையால் பண்டிதிரும்பி துன்பமுண்டானுல் அவ்விதசாரதியை வைத்துக்கொண்டதற்காக அந்தயசமாநனுக்கு இருநூறுபணந் தண்டம்விதிக்க.

உகூச—அந்தச்சாரதி தெரிந்தவனுகவிருந்தால் யஜமாநனுக்கு விதித்த இருநூறுபணந்தண்டத்தை அவனேகொடுக்க மூடனுகவிருந்தால் யஜமாநன் கொடுக்க. பின்னும் யஜமாநன்தண்டம் கொடுத்தாலும் அந்தமூடச்சாரதியும் அவ்வாகநத்திலேறி யிருக்கிறமற்றவர்களும் தனித்தனிநூறுபணம் தண்டங்கொடுக்க.

உகூரு—சாரதியானவன் எதிரில் பண்டியாவது- மாடுகளாவது வரும்போது - தன்பண்டியைநிறுத்தாமல் ஓட்டி ஜெந்துக்களை

ஹிம்ஸைசெய்தால் அவனுக்குயோசனையின்றித் தண்டம்விதிக்க.

உகூகூ—அந்தச்சாரதியால் மனிதருக்கு ஹிம்ஸைநேரிட்டால் ஆயிரம்பணமும்-பசு ஒட்டகம்-யானை-குதிரை-இவைமுதலிய-வுயர்ந்தஜெந்துக்களுக்கு ஹிம்ஸைநேரிட்டால் ஐந்நூறுபணமும் தண்டம்விதிக்க.

உகூஎ—ஜெந்துக்களைமுட்டிஹிம்சிக்கிற-பசுஜாதிகளை- ஹிம்சித்தால் இருநூறுபணமும், மான்முதலியவற்றையும்-கிளி-ஹம்ஸம் ஸாரஸம்முதலியவற்றையும் ஹிம்சித்தால், ஐம்பதுபணமும் தண்டம்விதிக்க.

உகூஅ—கழுதை வெள்ளாடு-செம்மறியாடு - இவற்றிற்கு ஹிம்ஸைநேரிட்டால் ஐந்துவெள்ளிமாடத்தையும் நாய்-பன்றி-யிவற்றிற்குத்துன்பம்நேரிட்டால் ஒரு வெள்ளிமாடத்தையுந் தண்டமாக விதிக்க.

உகூகூ—மனையாள்-பிள்ளை வேலைக்காரன்-சிஷ்ன்-உடன்பிறந்த தம்பி-இவர்கள்குற்றஞ்செய்தால் கயறு-பிரம்பு-இவைகளாலடிக்க வேண்டியது.

௩00—அதுவும் சரீரத்தின்பின்புறத்தில் தண்டிக்க. தலையிலொருபோதுந் தண்டிக்கக்கூடாது. இதற்கு விரோதமாகச்செய்கிறவன் திருடன்குற்றத்தையடைவான்.

௩0க—தண்டக்கொடுமைக்கு முழுதுஞ் சிக்ஷைசொல்லப்பட்டது. இனி திருடனுக்குத் தண்டவிதியைச்சொல்லப்போகிறேன்.

## திருட்டு.

௩0உ—அரசன்-திருடர்களை அடக்குவதில் அதிகமுயற்சியோடிருக்கவேண்டியது. அதனால் அவனுக்குப்புகழும் தேசமும்வளருகிறது.

௩0௩—பயத்தைப்போக்கடிக்கிற அரசன் எப்போதும்பூசிக்க த்தக்கவன். ஏனெனில் அபயத்தையேதக்ஷிணையாகவுடைய பிரஜாரக்ஷணமாகிற யாகமானது அந்தஅரசனிடத்தில் எப்போதும் விர்த்தியடைகிறதல்லவா.

௩0௪—அரசன் யாவரையும் நன்றாகக்காப்பதினால் அவன்தேசத்துப்பிரசைகளால் செய்யப்பட்டதருமத்தில் ஆறிலொன்றையும் இல்லாவிடில் அதர்மத்தில் ஆறிலொன்றையும் அடைகிறான்.

௩0௫—அரசன் நன்றாகக்காப்பாற்றினால் வேதமோதல் எக்கியஞ்செய்தல் தானம்கொடுத்தல் தெய்வத்தைப்பூசித்தல் இவைகளாலுண்டானபுண்ணியத்திலும் ஆறிலொன்றையடைகிறான்.

௩0௬—எல்லோரையுந் தருமப்படி காப்பாற்றிக்கொண்டும் துஷ்டர்களைத்தண்டித்துக்கொண்டும் இருக்கிறவரசன் நாடோறும் இலக்ஷம்வராகனை தக்ஷிணையாகவுடைய யாகஞ்செய்த புண்ணியத்தையடைகிறான்.

௩0௭—எந்தவரசன் உலகத்தைக்காப்பாற்றாமல் தானியத்தீர்வையையும், றொக்கத்தீர்வையையும், ஆயத்தீர்வையையும், நாடோறும் வாங்கத்தக்க கடைத்தீர்வையையும், தண்டப்பொருளையும், வாங்குகிறானோ அவனுடனேயிறந்து நரகத்தையுமடைகிறான்.

௩0௮—உலகத்தைக்காப்பாற்றாமல் தீர்வைமுதலியவற்றை வாங்குகிறவரசன் தன்றேசத்திலுள்ள ஜநங்கள்செய்கின்ற எல்லாப்பாபங்களையும் தானேயடைகிறானென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

௩0௯—நீதிசாஸ்திரமரியாதையைக்கடந்தவனையும், தெய்வத்தையொப்புக்கொள்ளாதவனையும், வஞ்சகனையும், உலகத்தைக் காப்பாற்றாமல் தீர்வைவாங்கிப்புசிக்கிறவனையும், இருக்கிறவரசன் அதோகதியையடைகிறவனென்று அறிக.

௩௧०—அரசன் திருடர்முதலான அதர்மிஷ்டர்களை சாவடியில் வைப்பது-விலங்கிடுவது-கைகால்குறைப்பது - இம்மூன்றினுலும் குற்றத்துக்குத்தக்கபடி சிக்ஷைசெய்து அடக்கவேண்டியது.

௩௧௧—அரசர்கள் துஷ்டநிக்கிரகத்தாலும் சிஷ்டபரிபாலநத்தாலும் துவிஜர்கள் எக்கியங்கள்செய்கிறதால் பரிசுத்தாளாகிறது போல் பரிசுத்தாளாகிறார்கள்.

௩௧௨—தனக்கு நன்மையைக்கோருகிறவரசன் வழக்கில்தோற்றவரோனும் சிறியவரோனும் கிழவரோனும் நோயாளியேனும் தன்னைத்திட்டினுல் அதைப்பொறுக்கவேண்டியது.

௩௧௩—அரசன் துன்பப்பட்டவர்களின் திட்டைப்பொறுத்தால் சுவர்க்கத்தில் பெருமைபெறுவான். தன்னுடைய ஐசுவரியமதத்தினுல் பொறுக்காவிடில் நரகத்தையடைவான்.

௩௧௪—பிராமணனுடைய சுவர்நத்தை திருடினவனுக்குப்பின்பு அறிவுவந்தால் தலைமயிரையவிழ்த்துக்கொண்டு தான்செய்தகுற்றத்தைச்சொல்லி என்னைத் தண்டிக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு அரசனிடத்திற்கு ஓடவேண்டியது.

௩௧௫—அப்போது தன்றோளில் உலக்கை அல்லது கருங்காலித்தடி-அல்லது - இரண்டுமுனையிலுங்கூருள்ள-சத்தி - இரும்புத்தடி இவைகளில்யாதாவது ஒன்றைவைத்துக்கொண்டு போகவேண்டியது.

௩௧௬—அரசனவனை மரிக்கும்படிதண்டித்தாலும் உயிருடன் விட்டுவிட்டாலுந் திருடன்பாபம்போய்விடும். தண்டியாமலேவிட்டுவிட்டால் திருடன்பாவம் அரசனைச்சாரும்.

௩௧௭—சிசுஹத்திசெய்தவன்பாவம் அவன்சோற்றைத் தின்னுகிறவனையும் விபசாரியின்பாவம் அதைப்பொறுக்குங் கணவனையும்

ஷிஷின்பாவம் குருவையும் - யாகஞ்செய்கிறவன்பாபம் அதைச் செய்துவிக்கிறபுரோகிதனையும்-திருடன்பாவம் அத்தேச அரசனை யடைகிறதினால் நீதியில்லாத அரசன் (?) ...

ஷிஷ்ன்பாவம் குருவையும் - யாகஞ்செய்கிறவன்பாபம் அதைச் செய்துவிக்கிறபுரோகிதனையும்-திருடன்பாவம் அத்தேச அரசனை யுஞ்சாரும்.

ருகஅ—பாவஞ்செய்தமனிதர்கள் அரசனால்தண்டிக்கப்பட்டால் தன்பாபங்களைநீக்கிப் பெரியோர்கள்போல் சுவர்க்கத்தையடைகிறார்கள்.

ருககூ—கிணற்றங்கரையில் தாம்புக்கயறு-குடம்- இவைகளைத்திருடுகிறவனுக்கும் தண்ணீர்ப்பந்தலழிப்பவனுக்கும் அந்தந்தப் பொருளினஷ்டத்தை வாங்குகிறத்துடன் தனித்தனி ஒருபொன் மாடம் தண்டமும்விதிக்க.

ருஉ0—பத்துக்†கும்பத்துக்கு அதிகமாகத் தாநியந்திருடினவனுக்கு மரணதண்டனையும்-கைகால்முதலிய அங்கச்சேதங்களையுந் தக்கபடிவிதிக்க. ஒருதுரோணமுதல் பத்துக்கும்பம்வரையில் திருடினவனுக்கு-அப்பொருளுக்குப் பதினொருபங்கதிகமான தண்டத்தையும் விதித்து உடையவனுக்குப் பொருளையும் வாங்கிக்கொடுக்க.

ருஉக—தராசினால்நிறுக்கத்தக்கதான சுவர்நம்-வெள்ளி-பட்டாடைகள் இவைகளை நூறுபலத்துக்கு மேற்றிருடினவனுக்கு மரணம்வரையில் தக்கபடிதண்டம் விதிக்க

ருஉஉ—மேற்சொன்ன சுவர்நமுதலியவற்றை ஐம்பதுபலத்துக்குமேல் நூறுபலம்வரையில் திருடினவனுக்கு கைகளைக்குறைத்தலைத் தண்டமாகவிதிக்கவேண்டியது. அதற்குக்குறைந்துதிருடினவனுக்கு முதலைவிடபதினொருபங்கு அதிகதண்டம்விதிக்க.

---

† கும்பமாவது-இருபதுதுரோணம் கொண்டது - துரோணக்கணக்கை ஏழாவதுஅத்தியாயத்தில்-கஉ0-வது - சுலோகத்தில் காண்க.

௩௨௩—நற்குலத்திற்பிறந்தபுருஷர் பதிவிருதாஸ்திரீகள் மேலான இரத்திநங்கள் இவைகளையபகரித்தவனுக்கு மரணதண்டம்விதிக்க.

௩௨௪—யானை-எருமை-முதலிய பெரிய பசுக்கள் கத்தி-ஆயுதம்-மருந்து இவைகளையபகரித்தவனுக்கு அவனுடைய வறுமை அதையுபயோகித்தவிஷயம் இவைகளையறிந்து தக்கபடிதண்டம் விதிக்க.

௩௨௫—பிராமணன்பசுக்களை யபகரித்தவனுக்கும் மலட்டுப்பசுக்களுக்கு சுமையெடுப்பதற்காக மூக்குக்குற்றினவனுக்கும் யாகபசுவையபகரித்தவனுக்கும் பாதிக்கால்வெட்டுவதை உடனேதண்டமாகவிதிக்க.

௩௨௬—பட்டுநூல்-பஞ்சு-கஞ்சா-சாணி-வெல்லம்-தயிர்-பால்-மோர்-தண்ணீர்-புல்லு-இவைகளை அபகரித்தவனுக்கும்.

௩௨௭—மூங்கில்-தோல்-இவைகளாற்செய்யப்பட்ட படிமுதலிய பாத்திரம்-உப்பு-மண்பாத்திரம்-மண்-சாம்பல் - இவைகளை யபகரித்தவனுக்கும்.

௩௨௮—மச்சங்கள்-பக்ஷிகள்-நல்லெண்ணெய்-நெய்- மாம்ஸம் தேன்-வெண்ணெய்-மான்கொம்பு-தோல்-இவைகளை யபகரித்தவனுக்கும்.

௩௨௯—இன்னும் இவைபோன்ற வஸ்துக்கள் - மது - சோறு நீங்கலாகமற்ற சமைத்தபக்ஷியம் வடை-இவைமுதலானவைகளை யபகரித்தவனுக்கும் முதலுக்கிரட்டிப்பு தண்டம்விதிக்க.

௩௩0—புஷ்பம்-கழனியில்விளைந்திருக்கிறதாநியம்- புதர்-மரம் வேலிகட்டப்படாதவிருக்ஷம் இவைகளின்பழத்தையும் அபகரித்த

வனுக்கு ஐந்துபொன்குன்றியையேனும் ஐந்து வெள்ளிக்குன்றி யையேனும் தக்கபடி தண்டம்விதிக்க.

ருருக—உடையவனுக்குச் சம்பந்தமில்லாதவன்-வேலிகட்டப்ப ட்ட தானியம்-கறி-கிழங்கு-பழம்-களத்துநெல்லு- இவைகளைத்திரு டினல்-நூறுபணமும்,உடையவனுக்குச்சம்பந்தப்பட்டவன் திரு டினல் ஐம்பதுபணமும் தண்டம்விதிக்க.

ருருஉ—உடையவனுக்கெதிரில் வலிமைசெய்து ஒருபொருளை யபகரித்தால் அதைவன்றிருட்டென்றும், உடையவனில்லாதசமய த்திலபகரித்ததையும், அபகரித்ததில்லையென்றுசொல்லுவதையும், திருட்டென்றுசொல்லுகிறார்கள்.வன்றிருட்டுக்கு வன்செய்கைக்கு விதித்த தண்டம்விதிக்க.

ருருரு—அநுபோகத்திற்கு வைத்திருக்கிற மேற்சொன்ன இந்த ப்பட்டுநூல்முதலிய திரவியங்களை திருடினவனுக்கும்,வைதீகாக்கி நியைத்திருடினவனுக்கும், இருநூற்றைம்பதுபணந் தண்டம்விதி க்க.வைதீகாக்கிநியைதிருடினவன் உடையவனுக்கு செல்லும்நஷ்ட த்தை கொடுக்கவேண்டியது.

ருருச—திருடன் எந்தெந்த அங்கங்களால் மனிதர்களை எவ்வித மாகவடிக்கிறனோ மறுபடியப்படி செய்யாமலிருக்கிறதற்காக அ வனுடைய அந்தந்தவங்கங்களை வெட்டித்தண்டிக்கவேண்டியது.

ருருரு—தன்னுடையதந்தை-ஆசிரியன்-இஷ்டன்-தாய்-மனையா ள்-பிள்ளை-புரோகிதன் - இவர்களேனும்-தன்றன்-தருமங்களை யநு ஷ்டியாவிடில் அரசன் தண்டிக்காமல்விடக்கூடாது.

ருருசா—எந்தக்குற்றஞ்செய்தால் மற்றஜநங்களுக்கு ஒருகாரு டாபணம் தண்டமாக விதிக்கவேண்டுமோ அவ்விதகுற்றம் அரச னேசெய்துவிட்டால் அவனுக்கு ஆயிரப்பணந்தண்டம் விதிக்க வேண்டியது. இதுசாஸ்த்திரத்தின்னேற்பாடு.

௩௱௭—எந்தத்திருட்டுக்கு எவ்வளவுதண்டம் விதித்திருக்கின்ற தோ அதை திருட்டின் குணதோஷங்களையறிந்து திருடின சூத்திர னுக்கு எட்டுப்பங்குவரையிலும் அவ்விதவைசியனுக்கு பதினாறுப ங்குவரையிலும் அவ்விதக்ஷத்திரியனுக்கு முப்பத்திரண்டு பங்கு வரையிலும்.

௩௱௮—அவ்விதபிராமணனுக்கு அறுபத்துநாலு அல்லது நூறு-அல்லது நூற்றிருபத்தெட்டுபங்குவரையிலும் தண்டம்விதிக்க. ஏனென்றால் அந்தப்பிராமணன் அந்தத் திருட்டினால்வருந்தோஷத்தை யறிந்தவனல்லவா.

௩௱௯—வேலியில்லாத-அத்தி-ஆல்-முதலியவற்றின்பழம்-கிழங்கு - ஹோமத்திற்காகச்சமித்து பசுக்களுக்காகப்புல்லு இலைகளை அயலான்பூமியிலிருந்து கேளாமலெடுத்துக்கொண்டாலும் அது திருட்டல்லவென்று மநுசொல்லியிருப்பதால் அவ்விஷயத்தில் தண்டிக்கக்கூடாது.

௩௪0—உடையவன்கொடாமல் தானேயெடுத்துக் கொள்ளுகிறவனான திருடனுக்குஎக்கியயாகாதிகளை செய்துவைத்தாவது-அந்தத்திருட்டுப் பொருளைத் தக்ஷிணைவாங்குகிற பிராமணனும் அந்தத்திருடனுக்குச் சரியானவன்.

௩௪௧—துவிஜனும், ஜீவன விருத்தியில்லாதவனும்,வழிநடக்கிறவனும், இருந்து இரண்டுகருப்பங்கழியையும், இரண்டுகிழங்கையும், அயலானிலத்திலிருந்து கேளாமலெடுத்துக்கொண்டால் அவனைத்தண்டிக்கக்கூடாது.

௩௪௨—கட்டியிருக்கின்ற மாடு-குதிரை-முதலியவற்றை யவிழ்த்து விடுகிறவனுக்கும், விட்டிருக்கிறமாடுமுதலியவற்றைக்கட்டுகிறவனுக்கும், வேலைக்காரன்-குதிரை - இரதம்-இவற்றை யபகரிக்கிற

வனுக்கும் அவயவங்களைக் குறைப்பதையும், பொருளைக் கவருத லையும் தண்டமாகவிதிக்க.

ருசரு—இவ்விதமாக திருடர்களைத்தண்டிக்கிற வரசன் இவ்வுலகத்திற்புகழையும், இறந்தபின் ஒப்பற்றசுகத்தையும், அடைகிறான்.

## வன்செய்கை.

ருசச—அழிவற்றபிரபுத்தன்மையையும், அளவற்றபுகழையும் விரும்பினவரசன் சற்றுநேரமும், வன்செய்கைசெய்பவனை தண்டிக்காமல் உபேக்ஷையாயிருக்கக்கூடாது.

ருசரு—திட்டுகிறவன்-திருடுகிறவன்-அடிக்கிறவன்- இவர்களைவிட வன்செய்கைக்காரனை அதிகபாபியென்றறிக.

ருசசா—வன்செய்கைசெய்பவனை எந்தவரசன்பொறுக்கிறானோ அவனழிந்துபோய்விடுவதுமன்றி உலகத்தாரின் பகையையும் அடைவான்.

ருசஎ—அரசன்-தன்னிஷ்டர்களின் பேச்சைக்கேட்டாவது,அதிகபொருளிலாபத்தையிச்சித்தாவது, அனைவருக்கும்பயத்தை யுண்டாக்குகின்ற வன்செய்கையனை தண்டியாமல்விடக்கூடாது.

ருசஅ—வன்செய்கைக்காரரால் தருமமழியும்போதும் அரசனில்லாமையால் வருமாசிரமதருமம் அழியும்போதும்,பிரம்மக்ஷத்திரிய வைசியாள் மூவரும் ஆயுதமெடுத்துக்கொண்டு காப்பாற்றலாம்.

ருசகூ—தன்னாத்மாவைக் காப்பாற்றுவதற்காகவும்,எக்கியத்தில் தீக்ஷைபெற்றவனைக் காப்பாற்றவும், தன்பொருளை யபகரித்துக்கொண்டுபோகிற சமயத்திலும், ஸ்திரீ-பிராமணன்- இவர்களைக்காப்பாற்றுவதற்காகவும், நியாயமாய்த் தருமயுத்தஞ்செய்து ஒருவனைக்கொன்றவனுக்கு அதர்மநேரிடாது.

௩௫0—குரு-சிறியவன்-கிழவன்-வேதமோதினவந்தணன்- இவர்களுக்குள் யாவனேனும் கத்திமுதலிய ஆயுதமெடுத்துத் தன்னைக் கொல்லவந்தால் தானோடித் தப்பித்துக்கொள்ளக்கூடாதபோது யோசியாமலவனைக் கொல்லவேண்டியது.

௩௫௧—கொல்லவருகிறவனிடகோபம் அவனெதிராளிக்கு இவனையேகொன்றுவிடும்படியான கோபத்தையுண்டாக்குகிறபடியால் அவனைப் பத்துப்பேருக்குத் தெரிந்தாவது-இரகசியமாயாவது கொல்லுகிறவனுக்கு ஒருதோஷமுங்கிடையாது அவனையரசனுந் தண்டிக்கக்கூடாது.

## ஸ்திரீசங்கிரகணம்.

௩௫௨—பிறன்மனைவியின் போகத்தில் விருப்பமுள்ளவர்களை பயத்தையுண்டுபண்ணுகின்ற உதட்டை அறுத்தல் மூக்கையறுத்தல் முதலியவடையாளங்களைச்செய்து அரசனூரைவிட்டோட்டுக

௩௫௩—பிறன்மனைவிபோகத்தினால் உலகத்தில்வருணசங்கிரமமுண்டாகின்றது.அதனால் தருமகாரியம் நடக்காமல் உலகமெல்லாம் மழையில்லாமல் அழிந்துபோய்விடுகிறது.

௩௫௪—முன்பு ஒருஸ்திரீவிஷயத்தில் சந்தேகிக்கப்பட்டவன் இரகசியத்தில் காரணமின்றி அந்தஸ்திரீயோடு பேசினால் அவனுக்கு இருநூற்றைம்பதுபணந்தண்டம்விதிக்க.

௩௫௫—முன்பு சந்தேகமில்லாதவன் ஒரு காரியத்தைப்பற்றி ஒருவன்மனையாளோடு பஹிரங்கமாய்ப்பேசினால் அவனுக்குத்தண்டமும் தோஷமுமில்லை.

௩௫௬—ஒருவன் முன்பு சந்தேகிக்கப்படாதவனாயிருந்தாலும் பிறன்மனையாளோடு-குளத்தங்கரை-ஜநமில்லாதகாடு-தோப்பு-ஆற்

றங்களை-இவ்விடங்களிற்பேசினல் அவனுக்கு ஆயிரம்பணம் தண்டம்விதிக்க.

ருடுஎ—பிறன்மனைவிக்கு சந்தநமுதலியவற்றை யனுப்புதல் ஆலிங்கநமுதலிய விளையாட்டைச்செய்தல், அவள்பூஷிணம்- வஸ்திரமுதலியவற்றைத் தொடுதல் ஒருபடுக்கையில் உட்காருதல் - இவைகளும்.

ருடுஅ—தொடப்படாத ஸ்தநமுதலியவற்றைத் தொடுதல் அவள் - இவன் சிசிநமுதலியவற்றைத் தொட்டாலதைப்பொறுத்திருத்தல். இருவருஞ்சங்கேதஞ்செய்துகொள்ளுதல் இவைகளும்,புணர்ச்சிபுண்டென்பதைக்காட்டுதலால் இவ்விதகுற்றத்திற்கும் ஆயிரம்பணந்தண்டம்விதிக்க.

ருடுகூ—சூத்திரன் வலிமையால் மற்ற மூன்றுவருணத்தார் மனைவியைப்புணர்ந்தால் அவனை உயிர்போகிறவரையில் தண்டிக்க ஆனல் நான்குவருணத்தாருக்கும் பொருள்-புத்திரன் இவர்களைவிட மனைவியை விபசாரதோஷமின்றி காப்பாற்றுவதே மேலானதருமம்.

ருசு0—பிக்ஷைக்காரன்-கட்டியங்கூறுகிறவன் -யாகதீக்ஷதன்-பாசகன் - இவர்கள் - தன்றன்காரியத்திற்காக - பிறன்மனையாளோடு தடையின்றிப்பேசலாம்.

ருசுக—நீ யென்மனையாளுடன் பேசவேண்டியதில்லையென்று ஒருவனுற் றகையப்பட்டவன் மறுபடியும் அவன் மனையாளோடு பேசினல் ஒருபொன் தண்டம்விதிக்க.

ருசுஉ—இதுவரையிற்சொல்லிவந்த சிக்ஷையானது மனைவிவழியாய்ப்பிழைக்கிறவனையும்,பிறன் தன்மனையாளோடு புணருவதைப் பொறுக்கிறவனையும், பிறனைத் தன்மனையாளிடத் தழைத்துவந்து

விடுகிறவனும், இருக்கிற-வேவுகாரன்-கூத்தாடி- பாடகன் இவர்க ளின்மனைவியைச்சேருகிறவனுக்கு விதிக்கத்தக்கதன்று.

௩௬௩—ஆனால் அவர்களுடன் தகாதவிடத்தில் பேசுகிறவனுக் கும் வெள்ளாட்டி வேலைக்காரி-ஒருவன்வைத்திருக்குந்தேவடியாள் சந்நியாசம் அடைந்தவள்-இவர்களோடு - இரகசியத்திற்பேசுகிறவ னுக்கும் யாதேனுங்கொஞ்சந்தண்டம்விதிக்க.

௩௬௪—போகவிருப்பமில்லாத தன்சாதிகந்நிகையை வலிமை செய்துபுணர்ந்தவனை உடனே சிசிநமுதலியவற்றை அறுத்துக் கொல்லவேண்டியது போகவிருப்பமிருக்கும் கந்நிகையை புண ர்ந்தவனுக்கு மரணதண்டம்விதிக்கக்கூடாது.

௩௬௫—ஒரு கந்நியாஸ்திரீ போகவிருப்பத்தினால் தன்னைவி டவுயர்ந்தசாதியானை தானாகவலடைந்தால் அவளை தண்டிக்கக்கூ டாது. தாழ்ந்தசாதியானை யடைந்தால் வீட்டிலேயேதண்டித்து அடக்கவேண்டியது.

௩௬௬—உயர்ந்தசாதிகந்நிகையைப்புணர்ந்த தாழ்ந்தஜாதியா னுக்கும், மரணவரையில்சிக்ஷைவிதிக்கவேண்டியது. தன்ஜாதிக்கந் நிகையைப்புணர்ந்தவன் அவள்தந்தைக்குச்சம்மதியிருந்தால் தந் தைகேட்கும் கந்நியாசுல்க்கப்பொருளைக்கொடுத்து அக்கந்நிகை யைக் கலியாணஞ்செய்துகொள்க.

௩௬௭—தன்சாதிகந்நிகையை வலிமையால் இரகசியஸ்தானத் தில் விரலினால் துன்பப்படுத்துகிறவனுக்கு இரண்டுவிரலையறுத்து அறுநூறுபணந்தண்டம்விதிக்க.

௩௬௮—தன்னிடத்தில்விருப்பமுள்ள தன்ஜாதிகந்நிகையை இர கசியஸ்தானத்தில் விரலினால்பிடிப்பவனுக்கு விரலையறுக்காமல்

இனி யவ்விதகுற்றஞ்செய்யாமைக்காக இருநூறுபணந் தண்டம் விதிக்க.

௬௯௯—ஒருகந்நிகையை மற்றொருகந்நிகை முன்போலஅபாயஸ்தாநத்தில் விரலினால்பிடித்தால் அவளுக்கு இருநூறுபணந்தண்டம்விதித்து அந்தக்கந்நிகைக்குள்ள சுல்க்கப்பொருளை இரட்டிப்பாக அவள்தந்தைக்குக் கொடுக்கச்செய்து ஜாட்டியால் பத்தடியுமடிக்க.

௩௭0—இவ்விதமாக வொருஸ்திரீசெய்தால் அவள்தலையை முண்டமாகச்சிரைத்து விரலிரண்டையுமறுத்து கழுதைமேலேற்றி இராஜமார்க்கத்திற்றுரத்துக.

௩௭௧—ஒருஸ்திரீ தான் ஜாதியினாலும், குணத்தினாலும், உயர்ந்திருப்பதாகக்கௌர்வங்கொண்டு தன்புருஷனைவிட்டு மற்றொருவனைச்சேர்ந்தால் அவளை அரசன் வெகுசநங்களுக்கெதிரில் நாயைவிட்டுக்கடிக்கச்செய்க.

௩௭௨—ஒருவன்மனையாளைப்புணருகிறபாபியை அரசன் எரிகிற இருப்புப்பலகையில் படுக்கச்செய்து அவன்சரீரம் வேகுமளவும் காஷ்டங்களைப்போடச்செய்யவேண்டியது.

௩௭௩—ஒருஸ்திரீயைப்புணர்ந்ததற்காக ஒருதரந்தண்டிக்கப்பட்டவன் ஒருவருஷத்துக்குமேல் மறுபடி அந்தஸ்திரீயைப்புணர்ந்தால் அவனுக்கு முதல்தடவைசிக்ஷைக்கு இரட்டிப்பாகவிதிக்க. விராத்தியஸ்திரீ -சண்டாளஸ்திரீ-இவர்களைப்புணர்ந்தவனுக்கும் ஆயிரம்பணந்தண்டம்விதிக்க.

௩௭௪—சூத்திரன் காக்கப்படாத துவிஜாதிகளின்மனைவியைப்புணர்ந்தால்-பீஜம்-சிசிநம்-இவைகளை அடியோடறுக்கவேண்டி

யது, காக்கப்பட்டஸ்திரீயைப்புணர்ந்தால் தேகமுழுதும்வெட்டி அவனுடைய எல்லாப்பொருளையுங்கவருக.

௩௭௬—கற்புடைய பிராமணஜாதிஸ்திரீயைப்புணர்ந்த வைசியனை ஒருவருஷம்வரையில் காவலில்வைத்து அவன்பொருண்முழுமையும் அரசன்கவருக. அவ்விதக்ஷத்திரியனுக்கு ஆயிரம்பணந்தண்டம்விதித்து கழுதைமூத்திரத்தைவிட்டு அவன்றலையை முண்டநஞ்செய்க.

௩௭௯—கணவன்முதலியவர்களால் காக்கப்படாத பிராமணஸ்திரீயை வைசியன்புணர்ந்தால் ஐந்நூறுபணமும், அவ்விதக்ஷத்திரியனுக்கு ஆயிரம்பணமுந் தண்டம்விதிக்க.

௩௭௭—கற்புடைய பிராமணஸ்திரீயைப்புணர்ந்த வைசியக்ஷத்திரியர்களுடைய பொருண் முழுமையும்பிடுங்கிக்கொண்டு ஊனாவிட்டோட்டுக, அல்லது இரும்புப்பலகையிலாவது வைத்துக்கொளுத்துக.

௩௭௮—பிராமணன் தன்ஜாதி கற்புடையஸ்திரீயை ஒருக்கால் வலிமையாற்புணர்ந்தால் ஆயிரம்பணமும், அவளுக்குத் தன்னிடத்துவிருப்பமிருந்துபுணர்ந்தால் ஐந்நூறுபணமுந் தண்டமாக விதிக்க.

௩௭௯—பிராமணனுக்குத் தலையைமுண்டநஞ்செய்வது கொலைத்தண்டமாகும் மற்றவருணத்தாருக்கு கொலைத்தண்டமுண்டு.

௩௮௦—பிராமணன் எல்லாப்பாவஞ்செய்தாலும் அவனைக் கொல்லாமல் காயமின்றி அவன்பொருளுடன் ஊலாவிட்டுத்துரத்தவேண்டியது.

௩௮௧—பிரமஹத்தியைவிட அதிகமானபாவ மூலகத்திற்கிடை

யாது ஆதலால். பிராமணனைக்கொல்லவேண்டுமென்று அரசன்மந திலும் நினைக்கக்கூடாது.

௬அ௨—கற்புடைய க்ஷத்திரியஸ்திரீயை குணமுள்ள வைசியன டைந்தால் ஐந்நூறுபணமும், அவ்வித வைசியஸ்திரீயை பஃகிர ங்கமாகப்புணர்ந்த க்ஷத்திரியனுக்கு ஆயிரம்பணமுந் தண்டம் விதிக்க

௬அ௩—கற்புடைய க்ஷத்திரியவைசிய ஸ்திரீயைப்புணர்ந்த பிரா மணனுக்கும் அவ்விதசூத்திரஸ்திரீயைப்புணர்ந்த க்ஷத்திரியவைசி யர்களுக்கும்,ஆயிரம்பணந்தண்டம்விதிக்க.

௬அ௪—கற்பில்லாத க்ஷத்திரியஸ்திரீயைப்புணர்ந்த வைசியனு க்கு ஐந்நூறுபணத்தையும், அவ்விதக்ஷத்திரியனுக்கு கழுதைமூத் திரத்தினல் தலையைமுண்டநஞ் செய்வதையாவது-ஐந்நூறுபணத் தையாவது-தண்டமாகவிதிக்க.

௬அ௫—கற்பில்லாத க்ஷத்திரியவைசிய சூத்திரஸ்திரீகளைப்புண ர்ந்த பிராமணனுக்கு ஐந்நூறுபணமும், சண்டாளஸ்த்திரீயைப்பு ணர்ந்த பிராமணனுக்கு ஆயிரம்பணமுந்தண்டம்விதிக்க.

௬அ௬—திருடன்-பிறன்மனையாளைப் புணருகிறவன்-திட்டுகிறவ ன்-வன்செய்கைக்காரன்-அடிக்கிறவன்- இவ்வைந்துபேரும் எந்தவ ரசன் பட்டணத்திலிருக்கவில்லையோ அவ்வரசன் இந்திரனுலகத் தையடைகிறான்.

௬அ௭—முன்சொன்னஐந்துபேரையும் தன்பட்டணத்திலிராம ற்செய்கிறவரசன் தன்ஜாதியிற்சிறந்தவனாய் இராஜ்ஜியசுகத்தையும் உலகத்தில் புகழையுமடைகிறான்.

௬அ௮—ர்ாககாரியஞ்செய்துவிக்க சமர்த்தனை ரித்துவிக்கை

௬௬

நீக்குகிறவனுக்கும், தோஷமில்லாத எக்கியஞ்செய்கிறவனை நீக்கி
ன ரித்துவிக்குக்கும் தனித்தனியே ஆயிரம்பணம் தண்டம்விதிக்க

ருஅகூ—தாய்-தந்தை-மனையாள்-பிள்ளை-இவர்களை மாஹாபா
தகமுதலியகுற்றமின்றி நீக்கக்கூடாது. அப்படி நீக்குகிறவனுக்கு
அறுநூறுபணந்தண்டம்விதிக்க.

ருகூ0—துவிஜாதிகள்-தன்றன்வருணாசிரம தருமங்களைக்குறித்து
விவாதப்பட்டால் நன்மையைக்கோறினவரசன் இதுசரி இதுசரி
யன்றென்று தானுகத்தீர்மானிக்கக்கூடாது.

ருகூக—அப்படிவழக்கிடுகிற துவிஜாதிகளைத் தக்கபடி பூஜித்து
நல்லவார்த்தையால் அவர்களின்கோபத்தைத்தணித்து பின்புபிரா
மணர்களைவைத்துக்கொண்டு தீர்மானிக்கவேண்டியது.

ருகூஉ—இருபதுபேர்புசிக்கத்தக்க கலியாணமுதலியகாரியத்தி
ல் அந்தப்பந்தியிலிருந்து சாப்பிடத்தக்க தன்பக்கத்துவீட்டுக்கா
ரனையும், அதற்கயல்வீட்டுக்காரனையும், புசிப்பியாதவனுக்கு, ஒரு
பொன்மாடந்தண்டம்விதிக்க.

ருகூரு—தன்வீட்டில்நடக்கிற சுபகாரியங்களில் சாதுவான³சுரோ
த்திரியனைப்புசிப்பிக்காத சுரோத்திரியனுக்கு ஒருபொன்மாடம்
தண்டம்விதித்து அந்தச்சாப்பாட்டையும் இரட்டிப்பாகக்கொடு
க்கச்செய்க.

ருகூச—குருடன்-மூடன்-நொண்டி-எழுபதுவயதான கிழவன்
சுரோத்திரியனுக்கு வுபகாரஞ்செய்கிறவன் இவர்களிடத்தில் கொ
ஞ்சமேனுந் தீர்வைவாங்கக்கூடாது.

ருகூடு—சுரோத்திரியன்-நோயாளி-துன்பப்பட்டவன்- சிறியவ
ன்-கிழவன்-ஏழை-உயர்ந்தகுலத்தான் - கொடையுள்ளவன்-இவர்க
ளை எப்போதும் அரசன் பூசிக்கவேண்டியது.

---

3 சுரோத்திரியன்-என்பது-வேதமுற்றுமோதினவன்.

௩௯௭—வண்ணான்-மேடுபள்ளமில்லாமல் சமமாயிருக்கிற இலவம்பலகையில் துணிகளைத் துவைத்துவேறொருவருக்கு இரவற்கொடாமலும் ஒருவர் துணிகளால் மற்றொருவர் துணிகளை மூட்டைகட்டாமலும் உடையவனிடத்துக் கெடுப்படிக்கொடுக்க இப்படிநடத்தாவிடில் அவனைத்தண்டிக்க.

௩௯௮—சேடன்-பத்துப்பலநூலுக்கு ஒருபலமதிகமாக நெய்துகொடுக்கவேண்டியது கொடாவிடில் பன்னிரண்டுபணந்தண்டம்விதித்து பொருட்காரனுக்குப் பொருளைக்கொடுப்பிக்க.

௩௯௯—நீரிலும் பூமியிலும் உண்டாகிற சகலசரக்குகளின் ஸாராஸாரங்களையும், விலைகளையும், அறிந்தவர்களானவர்த்தகர்களை ஆயச்சாவடியிலேற்படுத்தி அவர்கள் ஏற்படுத்தின அந்தந்தச்சரக்கின் மொத்தலாபத்தில் இருபதிலொருபங்கு அரசன் தீர்வைவாங்கிக்கொள்க.

௩௯௯—அரசனுக்குத்தக்கதான அந்தத்தேசத்திலுண்டான யானை-குதிரைமுதலியவைகளையும் அரசனால் இதைவெளியில் கொண்டுபோய்விற்கக்கூடாதென்று தடுக்கப்பட்டசரக்குகளையும் வேறுதேசத்துக்கு ஒருவன்கொண்டுபோனால் அப்பொருண்முழுமையும் அரசன் பரிமுதலாக அபகரித்துக்கொள்ளவேண்டியது.

௪00—ஆயச்சாவடிவழியைவிட்டு திருட்டுவழி போகிறவன் அகாலத்தில்விற்பவன் வாங்குபவன் ஆயத்தீர்வைக்காகச் சரக்கின் விலையைக்குறைவாகச்சொல்பவன் இவர்களிடத்தில் அரசன் எட்டுப்பங்கு அதிகமாய்த்தீர்வைவாங்குக.

௪0௧—சகலசரக்குவிஷயத்திலும் அதுவதுவந்தவழியையும், போகும்வழியையும், வாங்கினநாளையும், வாங்கினவிலையையும், அதற்குக்கூடியவட்டியையும், சத்தச்செலவையும், நன்றாவறிந்து தக்கபடி

விலையேற்படுத்தி விற்கவும் -வாங்கவும்-அரசன்கட்டளையிடுக.

ச0உ—அரசன்-நிலையில்லாத விலையையுடைய சரக்குகளுக்கு ஐந்தைந்து நாளும் கொஞ்சம்நிலையான விலையையுடைய சரக்குகளுக்குப் பதினைந்துநாளுங்கழிந்தபின்பு யாபாரிகளின் முன்பாகவிலையேற்படுத்தவேண்டியது.

சOஙூ—அரசன் - தன்னுத்தியோகஸ்தர்களைக்கொண்டு படிக்கட்டு-தராசு-மரக்கால்-இவைகளுக்கு முத்திரைபோடுவித்து ஆறுமாதத்திற்கு ஒருவிசை அதுசரியாயிருக்கிறதாவென்று பரீக்ஷைசெய்யவேண்டியது. சரியாகவில்லாவிடில் தண்டிக்க.

சOச—வெற்றுபண்டிக்கு ஒருபணமும், மூட்டைதூக்குகிற ஆள்களுக்கு அரைப்பணமும், சுமையெடுக்கிற இடபமுதலியபசுக்களுக்கும், ஸ்திரீகளுக்கும்,காற்பணமும், மூட்டையில்லாதவர்களுக்கு அரைக்காற்பணமும், தோணிக்காரன்கூலிவாங்குக.

சOரு—சரக்குபண்டிகளுக்கு அந்தச்சரக்கின்உயர்வுதாழ்வுக்குத்தக்கதாகவும்,சரக்கில்லாமல் கோணிமுதலியவையேற்றியபண்டிக்கு அந்தச்சுமைக்குத்தக்கதாயும்,ஏழைகளுக்கு யாதாவது கொஞ்சமும் ஓடக்காரன் கூலிவாங்கிக்கொள்ளவேண்டியது.

சOசா—ஆற்றில்போகவேண்டியவழித்தூரவு மேடுபள்ளமான தேசம்-வருஷாதிகாலம்-இவைகளையோசித்து தோணிக்காரன் தக்கபடிகூலிவாங்குக இந்தக்கூலியேற்பாடுநதிவிஷயத்தில்மாத்திரமே தவிர காற்றினல் சஞ்சரிக்கவேண்டியதான சமுத்திரத்துக்குக்கிடையாது அந்தவிஷயத்தில் பிரயாசைக்குத்தக்கபடி ஏற்பாடுசெய்துகொள்ளவேண்டியது.

சOஎ—இரண்டுமாதத்திற்குமேற்பட்ட கர்ப்பிணி - சந்நியாசி-

வாநப்பிரஸ்தன்-பிரமசாரி-பிராமணன்-இவர்களிடத்தில் தோணிக்காரன் சத்தம்வாங்கக்கூடாது.

சOஅ—தோணியிலேற்றினசாமான்கள் தோணிக்காரன் அஜாக்கிரதையினால் நஷ்டப்பட்டால் அந்தநஷ்டத்தை அந்தத்தோணியைநடத்தின தோணிக்காரர்களனைவரும் பாகப்படிகொடுக்க.

சOகூ—இப்போதுசொல்லப்பட்ட நஷ்டவிஷயமானது-மனுஷியக்குறைவினால் வந்தவிஷயத்தில்மாத்திரமேதவிர தெய்வகதியாகத் தோணியிற்சேதம்வந்தால் தோணிக்காரனைத் தண்டிக்கக்கூடாது.

சகO—அரசன் வைசியனை-வர்த்தகம்-வட்டிவாங்குதல் -பயிரிடுதல்-பசுவைக்காப்பாற்றல்-இவைகளையும். சூத்திரனை துவிஜாதிகளுக்குப்பணிவிடையுஞ் செய்யச்சொல்லவேண்டியது. அப்படிச்செய்யாவிடில் அவர்களைத்தண்டிக்க.

சகக—விருத்தியில்லாமல்வருத்தப்படுகிற க்ஷத்திரிய வைசியாள் ததிகனான பிராமணனை-அடுத்தால்-அவர்களை அவன் தனக்கூழியஞ் செய்யச்சொல்லாமல் தயையால் வியாபாரமுதலிய தொழிலைச் செய்யும்படி நியமித்துக் காப்பாற்றுக.

சகஉ—உபநயநமுதலிய சமுஸ்காரமுள்ளவர்களாயும், தொழிற்செய்வதில் மதமில்லாதவர்களாயுமிருக்கிற துவிஜர்களை பிரபுத்தன்மையாலும்,லோபகுணத்தினாலும், வேலைகொள்ளுகிற பிராமணனுக்கு அரசன் அறுநூறுபணந்தண்டம்விதிக்க.

சகரு—பிராமணன் சம்பளங்கொடுத்தேனுங் கொடாமலேனும் சூத்திரனிடத்தில் வேலைவாங்கலாம்.ஏனெனில் அவன் பிராமணல்வேலைக்காகவே பிரமனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறானல்லவா.

சகச—சூத்திரன்-யஜமாநனால் வேலையினின்று நீங்கப்பட்டிரு

த்தாலும் அந்தவேலையானது அவனைவிட்டுநீங்காது. இம்மைக்கும் மறுமைக்கும் உபயோகமாக அவனுடன்பிறந்த அந்தவேலையை எவன்தான்நீக்குவன் ஆதலால் அவன் மறுமைக்காகவும் பிராமண சிசுருஷை செய்யவேண்டியது.

சகரு—யுத்தத்தில் ஜெயித்துக்கொண்டுவரப்பட்டவன், பத்தியினால் வேலைசெய்கிறவன், தன்னுடைய தேவடியாள்மகன், விலைக்கு வாங்கப்பட்டவன், ஒருவனால்கொடுக்கப்பட்டவன் குலவழியாக தொன்றுதொட்டுவேலைசெய்கிறவன், குற்றத்திற்காக வேலைசெய்கிறவன், என தொழிலாளிகள் எழுவகைப்படுவர்.

சகசு—மனையாள்-பிள்ளை-வேலைக்காரன்-இவர்களுக்கு பொருளில் சுவாதீநமில்லை - இவர்கள் எப்பொருளைச் சம்பாதித்தாலும் அவைகள் அவர்களின் எஜமாநனையேசாரும். அதாவது யஜமாநனுத்தரவின்றி தருமவிஷயத்திற்கும் தங்கள்பொருளை செலவழிக்கக் கூடாதென்றுகருத்து.

சகஎ—பிராமணன்சந்தேகமின்றி மேற்சொன்ன எழுவிததொழிலாளியானசூத்திரரிடத்தினின்று பொருளை வலிமையாலும் எடுத்துக்கொள்ளலாம் யஜமாநனெடுத்துக்கொள்ளத்தக்க பொருளையுடைய அந்தச்சூத்திரர் தன்பொருளுக்குக்கொஞ்சமுஞ் சொந்தக்காரரல்ல.

சகஅ—வைசியனையுஞ்சூத்திரனையும் தன்றன்றொழிலைச் செய்யும்படியாக முயற்சியோடு அரசன்கட்டளையிடுக. இல்லாவிடில் அவர்களுலகமுழுமையும் அழித்துப்போடுவார்கள்.

சகசு—தன் மந்திரி-புரோகிதன்-முதலிய மனிதர்களைக்கொண்டு இம்மைக்கும் மறுமைக்கும் உபயோகமாகத் தான்செய்விக்கிற லௌகிக வைதிககாரியங்களையும், குதிரைமுதலிய-வாகநம் - வரவு-

செலவு-இருப்பு-இரத்திநசாலை-தங்கசாலை-பொக்கிஷம்- இவைகளை யும் திநந்தோறும் அரசன் பார்க்கவேண்டியது.

சஉ0—இவ்விதமாக இதுவரையில் சகல வியவஹாரங்களையும் தீர்மானிக்கிற அரசன் பாபத்தினின்றுநீங்கி சுவர்க்கமுதலிய மேலானகதியையடைகிறான்.

எட்டாவதத்தியாயம்-முற்றிற்று.

ஆக-அத்தியாயம்-அ-க்கு-சுலோகம்-கஅஉகூ.

ஒன்பதாவது

# அத்தியாயம்.

## மாதராடவர்தருமம்.

க—விபசாரதோஷமில்லாமல் தருமமாக ஒருவருக்கொருவர் வழிபட்டிருக்கிற-ஸ்திரீ-புருஷர்கள்-சேர்ந்திருக்கும்போதும், பிரிந்திருக்கும்போதும் அவர்கள்நடத்தவேண்டிய பழைமையானதருமங்களைச் சொல்லப்போகிறேன்.

உ—கணவன்முதலிய பந்துக்கள் இரவிலும் பகலிலும், ஒருகாரியத்திலும் மாதரைச் சுவாதீநமில்லாதவர்களாகச் செய்யவேண்டியது. அவர்கள் கெட்டதான விஷயப்பற்றுள்ளவர்களாக விருந்தாலும், தங்கள்வசத்தி லிருக்கச்செய்யவேண்டியது.

ங—மாதர் இளமைப்பருவத்தில் பிதாவினாலும், யௌவநத்திற்கணவனாலும், மூப்பில் மைந்தனாலும்,காக்கத்தக்கவராகையால் எக்காலமும் மாதர் சுவாதீநமுடையவரல்லர்.

ச—பெண்ணை-ருதுகாலத்திற்குமுன் தக்கவரனுக்குக் கலியாணஞ்செய்துகொடாத தகப்பனும் மனைவியை ருதுகாலத்திற்புணரா

தகணவனும், கணவனிறந்தபின் தாயைக்காப்பாற்ருத பிள்ளையும் நிந்திக்கப்படுவார்கள்.

௬—சிறிதேனும் கெட்டசகவாசத்தினின்று மாதனைக்காப்பாற் றவேண்டியது. இல்லாவிடில் பிறந்தகுலம்-புகுந்தகுலம் - இரண் டையும் அழித்துப்போடுவார்கள்.

௬—எல்லாவருணத்தாருக்கும், மனைவியைக் காப்பாற்றுவதை மேலானதருமமென்று அறிந்துகொண்டு மனையாளை கணவர்கள் சக்த்தியில்லாதவர்களாயிருப்பினும் காப்பாற்றுவதில் முயற்சிசெ ய்யவேண்டியது.

எ—மனையாளைக்காக்கிறவன் தன்சந்ததி-நல்லொழுக்கம்- தன்கு லம்-தனதாத்மா-தன்னிடவைதீகதருமம்- இவைகளையும் - முயற்சி யோடு காப்பாற்றுகிறவனுகிருன்.

அ—கணவன் இந்திரியரூபமாகத்தன்மனையாளையடைந்து கருப் பமாகஜநித்து பின்பு அவளிடத்தினின்று பிள்ளையாகப் பிறக்கிறப டியால் அந்த மனையாளுக்கு ஜாயையென்றும் பெயருண்டா யிற்று.

௯—மாதர் எவ்விதபுருஷனைப்புணருகிருர்களோ அவனையொ த்தபிள்ளையைப்பெறுகிருர்கள். ஆலகையால் பரிசுத்தமான பிள்ளை பிறப்பதற்காக முயற்சியோடு மனைவியை விபசாரதோஷத்தினி ன்றுங் காப்பாற்றுக.

௧௦—ஒருவனும் மாதர்களைப் பலாத்காரத்தினுல் விபசாரத்தி னின்றும் காப்பாற்ற வல்லனல்லன். ஆதலால் மேற்சொல்லுமுபா யங்களைக்கொண்டு காப்பாற்றுக.

௧௧—வீட்டுக்குவேண்டிய பாத்திரமுதலியவற்றை கொள்ளுதற் காகக் கொடுத்தபொருளைக் காப்பாற்றுவது செலவிடுவது பாத்

திரமுதலியபொருளைச்சுத்திசெய்வது-வீடுவிளக்குவது-தேவபூசை முதலியவற்றிற்குதவியான காரியஞ்செய்வது அடுக்களைக்காரியம்-வீட்டுப்பாத்திரம்-படுக்கை முதலானவைகளைப்பார்ப்பது- இவை முதலிய-அவசியமானகாரியங்களை மனைவிக்குக்கற்பித்து அவளுடையமநம்வேறிடத்திற்செல்லாதபடிசெய்க.

௧௨—மாதர்கள் தங்களைத்தாமே காக்கவேண்டும். அதுவே அவர்களுக்கு நல்லகாப்பாகும் நல்லகாவலாளரைவைத்து வெளியில்போகவொட்டாமல் வீட்டிலேயே நன்றாகக் காப்பாற்றினாலும் காக்கப்படமாட்டார்கள்.

௧௩—கள்ளுகுடித்தல் துட்டர்கூட்டுறவு-கணவனைவிட்டயலூருக்குப்போகுதல்-காரணமின்றி இங்குமங்கும்போகுதல்- தான்விரும்பியவிடத்திற்றூங்குதல்-அயலகத்தமர்தல்- இவ்வாறும் மாதர்களுக்கு நிந்தையானசெய்கையாம்.

௧௪—மாதர்-ஆடவரிடத்தில் அழகையும், பருவத்தையும்,விரும்பாமலே ஆண்தன்மையைமாத்திரம் முக்கியமாகவெண்ணி அவர்களைப்புணருகிறார்கள்.

௧௫—மாதர்கள் கற்புநிலையின்மையும், நிலையாமநமும், நண்பின்மையும், இயற்கையாகவுடையவராதலால் கணவனாற்காக்கப்பட்டிருப்பினும்-அவர்களை விரோதிக்கின்றார்கள்.

௧௬—மாதர்களுக்கு இந்தசுபாவம் பிரமன்சிருட்டித்தபோதேயுண்டானதென்றறிந்து ஆடவர்கள் அவர்கள் கேடுறாமல்நடப்பதற்காக மேலானமுயற்சிசெய்யவேண்டியது.

௧௭—படுக்கை-ஆசநம்-அலங்காரம்-காமம்-கோபம்-பொய்-துரோகசிந்தை - இவற்றினை மாதர்பொருட்டே மநுவானவர் கற்பித்தார்.

கஅ—மாதர்களுக்கு ஜாதகர்மமுதலியவை மந்திரத்தோடு கிடையாது. இவர்களுக்கு மநச்சுத்தியுங்கிடையாது பாவத்தைப் போக்கிற மந்திரோபதேசமுமில்லை ஆகையால்.பொய்யைப்போல் அபரிசுத்தாளாயிருக்கிறார்கள்.

கக—மாதர்கள் பெரும்பாலும் விபசாரதோஷிமுள்ளவர்களென்று அநேகசுருதிகளிலுஞ் சாஸ்த்திரங்களிலுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன.அதற்குதிருஷ்டாந்திரமாக அந்தவிபசாரத்துக்கு சுருதியில்சொல்லிய பிராயச்சித்தத்தைக்கேளுங்கள்.

உ0—ஒருவன்-தன்னிடதாய்க்கு மாநஸவியபிசாரம் நேரிட்டதாகவறிந்து அதற்குப் பிராயச்சித்தஞ்செய்கிறான் என்றுயானவள் கற்பின்றி அயலான்வீட்டிற்குப்போய் அங்கு பரபுருஷனைப்பார்த்து யாதாவது மநதினாலாசைப்பட்டிருந்தால் அந்த ஆசையினாலுண்டான ரேதஸ்ஸை என்பிதா தனதுரேதஸ்ஸினால் பரிசுத்தஞ் செய்யக்கடவன். இதுவே மாதர்கள் நிலையில்லா மநமுடையவர் என்கிறதற்கு திருஷ்டாந்திரம்.

உக—மேற்சொல்லிய பிராயச்சித்தம் கணவனுக்குவிரோதமாகப்பரபுருஷனைமநதினால்நினைப்பதாகிற மாநஸவியபிசாரத்துக்கு விதிக்கப்பட்டது. இந்தப்பிராயச்சித்தமும், அந்தத்தாய்வயிற்றில் தான்பிறந்ததற்காக புத்திரன்செய்துகொள்ளவேண்டியதே அல்லது அவளுக்கன்று.

உஉ—நதி-சுபாவத்தில் எந்தருசியுள்ளதாகவிருந்தாலும், சமுத்திரத்திற்சேர்ந்தால் அதுபோலாகிறதுபோல் மாதர்களும் தன்னை விவாகஞ்செய்துகொண்டவன் குணத்தையேயடைகிறார்கள்.

உரு—அது-எப்படியென்னில் வசிஷ்டமுநியினால் விவாகஞ்செய்யப்பட்ட அக்ஷமாலையும் மந்தபாலமுநியினால் விவாகஞ்செய்ய

ப்பட்ட சாரங்கியும் அதமசாதியாகவிருந்தபோதிலும் அந்தமுநி வரின் குணத்தையே அடைந்துபூசிக்கத்தக்கவர்களானார்கள்.

உச—மற்றுஞ்சில சத்தியவதிமுதலியதாழ்ந்த ஜாதிஸ்திரீகளும் உயர்ந்தஜாதிபுருஷனையடைந்து தன்னுடையபதிவிரதாதருமங்க ளினாலும் தன்றன்கணவன்மஹிமையினாலும் இவ்வுலகத்தில்மேன் மையடைந்தார்கள்.

உடு—இதுவரையில் லோகாசாரமான மாதராடவர் தருமஞ் சொல்லப்பட்டது. இனி இம்மையிலு மறுமையிலுஞ் சுகத்தைக் கொடுக்கிற புத்திரதருமங்களைக்கேளுங்கள்.

## புத்திரவிஷயம்.

உசூ—மாதர்களைக்காப்பாற்றுவதில் இவ்விதப்பிரயாச மிருப்பி னும் நல்லபிள்ளையைப்பெற்று அதிகசுகத்தை யுண்டுபண்ணுகிற படியால் அவர்களை ஆடையாபரணத்தா லலங்கரிக்கவேண்டியது. வீட்டிற்கு அழகை வருவிக்கிறவர்களான மாதர்களுக்கும் மஹாலக்ஷிமிக்கும், யாதேனும் பேதமில்லை.(செல்வமில்லாதவீடெப்படி விளங்காதோ அப்படியே மாதரில்லாத வீடுமென்றுகருத்து.)

உஎ—பிள்ளைபெறுவது - பெற்றபிள்ளையைக் காப்பாற்றுவது- நாடோறும் வந்தவிருந்தினர் முதலானவரை யுபசரிப்பது-இவை முதலியவைகளுக்கெல்லா மாதர்களேகாரணமாக விருக்கிறார்கள் என்பதுபிரத்தியக்ஷமாகவே யிருக்கிறது.

உஅ—பரிசுத்தமான பிள்ளைபெறுவது-அக்கினிஹோத்திர முத லிய தருமகாரியஞ்செய்வது-மேலானபணிவிடை-புணர்ச்சி-தனக் கும் தன்பிதுர்க்களுக்கும், சொர்க்கலோகப்பிராப்த்தி இவைக ளெல்லாம் மனைவிஆதீநமாகவேயிருக்கின்றன.

உகூ—எந்தஸ்திரீ-திரிகரணசுத்தியுடையவளாகி கணவன்சொற்

கடவாமல் நடக்கிறுளோ அவள் இகத்தில்பெரியோர்களாலே நல்லவளென்று கொண்டாடப்பட்டவளாகி பரத்தில் பதியடையும் உலகத்தையடைவாள்.

௱௦—கணவன்சொற்படிநடவாதவள் உலகத்தாரால் நிந்திக்கப்பட்டு நரியாப்பிறந்து பாவப்பிணியால் வருந்துவாள்.

௱௧—புத்திரவிஷயத்தைக்குறித்து மநுமுதலியபெரியோர்களாலும்,மற்றுமநேகமஹாமுநிவர்களாலும்,சொல்லப்பட்டும் அனைவருக்கும் இஷ்டமாயும் புண்ணியமாயுமிருக்கிற மேற்சொல்லப்போகிற † உபந்நியாசத்தைக்கேளுங்கள்.

௱௨—புத்திரன் கணவனைச்சாருவனென்று பெரியோர்கள்சொல்லுகிறுர்கள். அந்தக்கணவன் இரண்டுவிதமென்று கேட்டிருக்கிறேம்-அதாவது.சிலர்பிள்ளையையுண்டுபண்ணினவனைக்கணவனென்றும் சிலர்கலியாணஞ் செய்தவனைக்கணவனென்றுஞ் சொல்லுகிறுர்கள்.

௱௩—மாதனை-க்ஷேத்திரத்திற்குச்சரியாகவும், புருஷனை வித்துக்குச்சரியாகவும், சொல்லுகிறுர்கள். இந்தக்ஷேத்திரமும், இந்தவிதையும், சேர்ந்துதான் சகலஜெந்துக்களுமுண்டாகின்றன - ஆதலால்.இருவருங்கூடிப்பிறக்கிற அந்தப்பிள்ளை யாருக்குச்சொந்தமென்றுல்.

௱௪—சிலவிடத்தில் வீரியமுயர்ந்திருக்கின்றது-அதாவது. பிள்ளைபிதாவின்குணத்தையேயடைந்திருக்கிறுன். இதற்குத்திருஷ்டாந்திரம்-வியாசன்- ருசியசிருங்கன் முதலானவர்கள். சிலவிடத்தில் க்ஷேத்திரமுயர்ந்திருக்கின்றது-அதாவது. அந்தப்பிள்ளைக்ஷேத்திர

---

† உபந்நியாசமென்பது-ஒருசங்கதியைக்குறித்து ஏற்பட்ட நிச்சயம்.

த்தின்குணத்தை யடைந்திருக்கிறான். இதற்குத் திருஷ்டாந்திரம் திருதராட்டிரன்முதலானவர்கள். ஆனால் இரண்டும் எந்தவிடத்திற்ச ரியானதாயிருக்கின்றனவோ அந்தப்பிள்ளைதான் கொண்டாடப்ப டுகிறான் (அதாவது. கணவனுக்கு தன்ஜாதிமனையாளிடத்தில் பிறந் தவனே உயர்ந்தவனென்றுகருத்து.)

ருரு—பீஜம்-யோநி - இவ்விரண்டையும் யோசிக்குமிடத்தில் பீஜமுயர்ந்திருக்கின்றது அதேனெனில். எல்லா ஜெந்துக்களும் பீஜத்தினடையாளத்துடன் பிறக்கின்றனவல்லவா.

ருசு—பீஜம் உயர்ந்ததென்பதற்குத் திருஷ்டாந்திரம். தகுதி யானகாலத்தில் நெல்லுமுதலியவிதையை விதைத்தால் பின்பு அதனாலுண்டாகிற தாநியங்கள் அந்தவித்தி னுருவத்துடனே அந் தக்ஷேத்திரத்தி லுண்டாகின்றன.

ருஎ—க்ஷேத்திரம் உயர்ந்ததல்லவென்கிறதற்குத் திருஷ்டாந்திர ம். சகல தாபரங்களுக்கும் பூமியையே யோநியாகச்சொல்லுகிறா ர்கள். ஆகிலும் அதிலுண்டானவிருக்ஷமுதலானவைகளுக்குப் பூமி யினடையாளங் கொஞ்சமுங்காணப்படவில்லை.

ருஅ—ஒருக்ஷேத்திரத்தில் அநேகவித்துகளை விதைத்தாலும் அதது தன்றன் வித்தினடையாளங்களைக் காட்டுகிறதேயன்றி க்ஷே த்திரத்தினடையாளங்களைக் காட்டுகிறதில்லை.

ருகூ—சம்பா முதலியநெல்லுகள் மற்றும் தாநியங்கள்-பயறு எள்ளு-உழுந்து-வெங்காயம் - கரும்பு-இவைகளெல்லாம் தன்றன் வித்துப்போலவே விளைகின்றன.

சo—ஒருதாநியத்தை விதைத்தால் மற்றொருதாநியமாகவிளைகி றதென்பது கிடையாது. எந்தவித்துவிதைக்கிறமோ அந்தப்பயி ர்தான்முளையும்.

சக—ஆகையால் சுபாவத்திற்றெரிந்தவனும், பெரியோர்களாற் சிக்ஷிக்கப்பட்டவனும், வேதவேதாங்கங்களை யறிந்தவனும், ஆயுளைவிரும்பினவனுமிருக்கிற மனிதன் ஒருபோதும் பிறன்மனையாளிடத்தில் வித்தை விதைக்கக்கூடாது.

சஉ—ஒருவன் பிறன்மனையாளிடத்தில் வித்தைவிதைக்கக்கூடாதென்னும் விஷயத்தில் வாயுதேவன் அநேகம்பாட்டுக்களைச் சொல்லியிருப்பதாகப் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

சஙு—ஒருவேடனடித்த மிருகத்தின்பேரில் மற்றொருவனம்பெய்தால் அந்தஅம்பு வீணாகிறதுபோல் ஒருவன்மனையாளிடத்தில் மற்றொருவன்விதைத்தவித்தும் வீணாகும்.

சச—இந்தப்பிரதிவியை அநேகமரசர்க ளாண்டபோதிலும் முன்னம் பிருதுசக்கிரவர்த்தியாண்டபடியால் அவனுடையபத்தினியென்றே சொல்லுகிறார்கள். அதுபோலவே முன்னம் ஒருபூமியை காடுவெட்டி திருத்தினவனுக்கு அந்தப்பூமி சொந்தமென்றும்,முன்னம் மிருகத்தின்மீது அம்பெய்தவனுக்கு அந்தமிருகஞ் சொந்தமென்றும் சொல்லுகிறார்கள்.

சரு—மனையாள்-பிள்ளை-கணவன்- இம்மூவருஞ்சேர்ந்துதான் புருஷனாகிறானென்று வேதத்திற் சொல்லியிருக்கிறது. (அதாவது மனையாள் பாதிசரீரமென்றும்,புத்திரன் ஆத்மசுவரூபமென்றும் கருத்து) பின்னும் வேதமறிந்தவர்களும்,கணவனுக்கும் மனையாளுக்கும் பேதமில்லையென்று இருவருக்கும் ஐக்கியஞ்சொல்லுகிறார்கள்.

சசு—கணவன் மனையாளைத்தள்ளிவிட்டாலும்,விற்றாலும், அந்தமனையாள்தன்மை அவனைவிட்டு நீங்காது. இப்படிஇவர்களுக்கு பிரமன் சிருஷ்டிகாலத்திலேயே ஏற்படுத்தியிருக்கிற சாசுவதமான

தருமத்தை நாமறிந்திருக்கிறோம். (ஆதலாலிவ்விதமான பிறன்மனையாளிடத்தில் பிறந்தபிள்ளையும் உபயோகமாகமாட்டான் )

சஎ—தந்தைபொருளை மைந்தர்கள்பிரித்துக்கொள்வதும்,ஒருபெண்ணைத்தாநஞ்செய்வதும்,ஒருபசுமுதலியபொருளைத் தாநஞ்செய்வதும்,ஒருதரமேசெய்யத்தக்கது. இம்மூன்றும் சத்துக்களால் ஒருதரமேசெய்யப்படும்.

சஅ—எப்படியானால் ஒருவனுடைய பசு-குதிரை- ஒட்டகம்-தாசி-எருமை-ஆடுமுதலியவைகளில்-மற்றொருவன் பொலியெருது-முதலியவற்றைக்கொண்டு கன்றுமுதலியவற்றையுண்டுபண்ணினவனுக்கு அவைகள் சொந்தமாகாதோ அப்படியேபிறன்மனையாளிடத்திலுங் கண்டுகொள்க.

சகூ—நிலமில்லாதவொருவன் வித்துள்ளவனாக விருக்கிறோமென்று மற்றொருவனிலத்தில் வித்தைவிதைத்தால் அந்தநிலத்தில்விளைந்ததாநியத்தை விதைத்தவன் அடைகிறானென்பது எங்குங்கிடையாது.

ருo—ஒருவன் பசுவினிடத்து மற்றொருவன் ருஷபமானது நூறுகன்றுகளையுண்டுபண்ணினாலும், பசுவுக்குடையவனையேசாரும். ருஷபம் உடையவனுக்கு வீணாக வீரியச்செலவுமாத்திரந்தான்.

ருக—அப்படியே ஒருவன்மனையாளிடத்தில் மற்றொருவனுண்டுபண்ணினபிள்ளை உடையவனைச்சாருமேயன்றி உண்டுபண்ணினவனைச்சாராது.

ருஉ—ஒருவனுக்கு நிலமில்லாமல் வித்துள்ளவனா யிருந்தால் மற்றுமொருவனையடைந்து உன்னிலத்தில் நான் பயிரிடுகிறேன் அப்பயிர் நம்மிருவருக்கும் பொதுவாயிருக்கட்டுமென்று ஏற்பாடுசெய்துகொண்டு பயிரிடுகிறாப்போல் ஒருவன் மனையாளிடத்தில்

மனையாளில்லாதமற்ருெருவன் பிள்ளையையும் உண்டுபண்ணலாம், அந்தவேற்பாடுஇல்லாவிட்டால் உடையவனைச்சாருமென்பது பிரத்தியக்ஷமாகவேயிருக்கிறது. ஏனெனில் பீஜத்தைவிட நில முயர்ந்ததல்லவா.

௫௩—நிலவிஷயத்தைப்போல் மாதர்விஷயத்திலும், கணவனும் மற்ருெருவனும்,பயிரைக்குறித்தாப்போல் புத்திரவுற்பத்தியைக்குறித்தும் ஏற்பாடுசெய்துகொண்டால் அதில் விளைகிறதாநியம்போல் பிறந்தபிள்ளையும் இருவருக்கும் சொந்தமாகவிருப்பதை உலகத்திற் கண்டிருக்கிருேம்.

௫௪—வெள்ளத்தினுலும், காற்றினுலும், ஒருவனிலத்திலின்று மற்ருெருவனிலத்தில் ஒதுக்கப்பட்ட வித்தானது பலித்தால். அது நிலத்திற்குடையவனுக்குச் சொந்தமாகுமேயன்றி வித்துக்குடையவனுக்குச் சொந்தமாகாது.

௫௫—பின்னும்ஒருவன் பசு-குதிரை-தாசி-ஒட்டகம்-ஆடு-பக்ஷி எருமை-இவைகளின்கன்றுமுதலியவிஷயத்திலும்,கழனிவிஷயத்தில், முன்சொன்ன திஷ்டாந்தரப்படியறிக.

௫௬—இதுவரையிலுங்களுக்கு-யோநி-பீஜம்-இவைகளின் - ஏற்றக்குலறவுகளைச்சொன்னேன் இனி மாதர்களுக்குப் பிள்ளையில்லாமல் ஸந்ததியேநசிக்கும்படியான ஆபத்தில் நடக்கவேண்டியதருமத்தைச் சொல்லப்போகிறேன்.

## மாதர்களின் ஆப்த்தருமம்.

௫௭—அண்ணன்மனையாள் தம்பிக்குக் குருவின்மனையாளுக்குச் சரியானவளென்றும்,தம்பிமனையாள் அண்ணனுக்கு மருமகளுக்குச்சரியானவளென்றும் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது.

௫௮—அண்ணன்-தம்பி-இருவரும் - சந்ததி நசிக்கும்படியான

ஆபத்துக்காலமன்றி பெரியோர்களின் அநுமதிபெற்றுக்கொண்டு ஒருவன்மனையாளை மற்றொருவன் புணர்ந்தாலும், பதிதாளாகிறார்கள்.

ருகூ—பிள்ளையில்லாமல் அந்தக்குலநசிக்கிறதாக விருந்தால் அப்போதந்தஸ்திரீ-தன்கணவன்-மாமனார்-முதலானவர்களின் உத்தரவுபெற்றுக்கொண்டுதன்மைத்துனன் அல்லது தன்கணவனுக்கு ஏழுதலைமுறைக்குட்பட்டபங்காளி இவர்களோடு மேற்சொல்லுகிறபடி புணர்ந்து குலத்திற்குத்தக்கதான ஒருபிள்ளையை பெற்றுக்கொள்ளலாம்.

சூ0—விதவையிடத்தில் பெரியோர்களினநுமதி பெற்றுக்கொண்டு புணரப்போகிறவன் தன்தேகமெங்கும் நெய்யைப்பூசிக்கொண்டு இரவில் இருட்டானவிடத்தில் அவளைப்புணர்ந்து ஒரேபிள்ளையை யுண்டுபண்ணவேண்டியது. இரண்டாம்பிள்ளையை ஒருபோதும் உண்டுபண்ணக்கூடாது.

சூக—ஒருபிள்ளையிருப்பதை பிள்ளையிராததற்குச் சரியென்று சாஸ்திரம் சொல்லுகிறபடியால் இரண்டாவதுபிள்ளையும் உண்டுபண்ணலாமென்று புத்திரோற்பத்தி சாஸ்த்திரமறிந்த சிலபெரியோர்கள் சொல்லுகிறார்கள். சிலர் ஒருபிள்ளைபிறந்து அவன் அக்குலத்திற்குத்தகாதவனாகவிருந்தால் அப்போது இரண்டாவதுபிள்ளையை யுண்டுபண்ணலாமென்று தாத்பரியப்படுகிறார்கள்.

சூஉ—அந்தவிதவையிடத்தில் விதிப்படிபுணர்ந்து கருப்பமுண்டானால் பின்புசாஸ்த்திரப்படி ஒருவர்க்கொருவர் குருவைப்போலவும் மருமகளைப்போலவுமெண்ணி மரியாதையாகவிருக்கவேண்டியது.

சூரு—பெரியோர்களால் நியமிக்கப்பட்டிருக்கிற ஜியேஷ்டட

கநிஷ்டர்கள் மேற்சொல்லிய விதிப்படிநடவாமல் காமத்தால் மறுபடியுஞ்சேர்ந்தால்மருமகளுடனுங் குருபத்நியுடனும்புண ருகிறவனைப்போலே பதிதாளாகிறார்கள்.

௬௪—பிள்ளையில்லாமற்போனாலும் விதவையைக் கணவனன்றி மற்றொருவனிடத்துப்பிள்ளையைப் பெற்றுக்கொள்ளும் படியாக துவிஜர்கள் அநுமதிசெய்யக்கூடாது. செய்தால் பழைமையான பதிவிர்தாதர்மத்தை யழித்துவிடுவார்கள் (இது துவாபரயுககலியு கவிஷயம்)

௬௫—எந்தவேதத்தாருக்கும் புத்திரனில்லாமற்போனால் மற் றொருவனுடன்கூடி பிள்ளையைப்பெற்றுக்கொள்ளும்படி விவாக மந்திரத்தில்சொல்லவில்லை விவாகவிதாயக சூத்திரத்திலும் விதவா விவாகஞ்செய்யும்படி விதிகிடையாது.

௬௬—ஒருவன்மனையாள் மற்றொருவனைப்புணர்வது சாஸ்திரத் திற்சொல்லியிருந்தாலும் அதுபசுசாதியின் தருமமேயல்லதுமனி தர்களுக்குக் கூடாதென்று பெரியோர்களால் நிந்திக்கப்பட்டிரு ந்தது. வேணனென்னும் அதார்மிகனான அரசனுலகாளும்போது அந்தப்பசுசாதிதர்மத்தை மனிதர்களுக்கும் ஏற்படுத்தினான்அது முதல்தான் இந்தஅதர்மமுண்டாயிற்று.

௬௭—அந்தவேணனனவன் இந்தப்பூமிமுழுதும் ஓர்குடையி ன்கீழாண்டபடியால் அரசர்களுக்கெல்லாம் மேலானவனென்று சொல்லப்படுகிறானேயல்லது தார்மிகனாக விருந்ததாலன்று அவ ன்காமத்திற்குச் ஃவாதீநப்பட்டு வர்ணசங்கரத்லத யுண்டுபண் ணினான்.

௬அ—அதுமுதலாக மாதர்களை கணவனிறந்தபின் எவனாவது தெரியாமல் சாஸ்திரமிருக்கிறதென்று மற்றொருவனிடத்திற் புத்தி

ரவுற்பத்திக்காக புணரவுத்திரவுகொடுத்தால் அவனைப்பெரியோர்க ள்நிந்திக்கிறார்கள். (இந்தவிஷயத்தில் மநு முன்னம் தானேயநும திசெய்து பின்னதைநிந்திப்பது த்வாபரயுக கலியுகதர்மமென்று பிரகற்பதிவியாக்கியாநம்செய்திருக்கிறார்.)

சகூ—ஒருபெண்ணை ஒருவனுக்குக்கொடுக்கிறதா உண்மையாக வாக்குத்தாநம்செய்தபின்பு அந்தவரநிறந்துபோனால் அவன்தம்பி அல்லது-அவனண்ணன் விவாகஞ்செய்து மேற்சொல்லும்விதிப்படியா இருக்கவேண்டியது.

எ0—அவனந்தப்பெண்ணை விதிப்படிவிவாகஞ்செய்து வெள்ளைவஸ்திரமுடையவளாயும் திரிகரணசுத்தியுடையவளாயு மிருக்கச்செய்து ருதுஸ்நாநமானவுடன் ஒருநாள்புணர்ந்து மறுபடிருது காலம்வரையிற்பார்த்து கருப்பமுண்டாகாவிடில் கருப்பமுண்டாகிறவரையில் அந்தந்தருதுஸ்நாநமானவுடன் ஒவ்வோர்நாள்புணரவேண்டியது.

எக—கந்நியாதாநத்தின் குணதோஷத்தை யறிந்தவன் ஒருபெண்ணை யொருவனுக்குக்கொடுக்கிறதாக வாயினால்நிச்சயஞ்செய்தபின் அவனிறந்தாலும் மேற்சொன்னவிதியைவிட்டு மற்றொருவனுக்குக்கொடுக்கக்கூடாது. கொடுத்தால் ஆயிரம்பேர் சுற்றத்தாரைக்கொன்றதோஷித்தையடைகிறான்.

எஉ—வைதவ்வியம்-தீராப்பிணி-விபசாரதோஷிம் இவைகளுள்ள பெண்களை மாறுபாடாகக்கொடுத்தால் விதிப்படிபாணிக்கிரஹணஞ் செய்துகொண்டாலும் அம்பிபிதிக்கிறதற்குமுன் அந்தக்குற்றங்கள்தெரிந்தால் உடனே நீக்கிவிட்டால்தோஷமில்லை.

எஙு—மேற்சொல்லிய குற்றமுள்ளபெண்களை அக்குற்றத்தைச்சொல்லாமல் கொடுக்கிறதுராத்மாவுக்கு ஏதேனும் சுல்க்கம்கொடுக்கவேண்டியதில்லை கொடுத்திருந்தாலும் வாங்கிக்கொள்ளலாம்.

{ கணவனும் மனையாளும் பிரிந்திருக்குங்காலத்து நடக்கவேண்டியதருமம். }

எ௪—கணவனானவன் காரியத்தைக்குறித்து தேசாந்தரம்போகும்பொழுது தான்பேர்ய்வருமளவும் மனைவியினுடைய ஜீவநத்துக்குவேண்டியபொருளைக்கொடுத்துப் போகுக அப்படிச்செய்யாவிடில் அவள்மேன்மையுடையவளாயினும் ஜீவநத்தின்பொருட்டு இழிவானகாரியஞ்செய்வாள்.

எரு—கணவன்தேசாந்தரம் போயிருந்தபோது அவன்கொடுத்தபொருளை வைத்துக்கொண்டு அவன்வருமளவும் உயர்ந்தபூஷணவஸ்திரங்களைநீக்கி அயலகத்திற்குச்செல்லாம லிருக்கவேண்டியது. ஜீவநத்திற்காக பொருள்கொடுக்காமல்போய்விட்டால் இழிவில்லாத கோலபிடுதல்-இராட்டணநூற்றல் முதலிய தக்கசெய்கைகளால் கற்புநிலைகெடாமல் ஜீவநஞ்செய்துகொண்டிருக்க.

எசா—குருவாக்கிய பரிபாலநமுதலிய தருமகாரியத்திற்காக தேசாந்தரம்போனகணவனை எட்டுவருஷம்வரையிலும், ஒருவித்தையைச்சம்பாதிக்கவும், அதனாற்புகழைச்சம்பாதிக்கவும், போன கணவனை ஆறுவருஷம்வரையிலும்,மற்றொருஸ்திரீயைச்சம்பாதிக்கப்போனகணவனை மூன்றுவருஷம்வரையிலும்,பார்த்து வராவிடில் அவனிருக்குமிடஞ்செல்லவேண்டியது.

எஎ—கணவனைமனைவிபகைத்தால் அவனொருவருஷம்வரையிலும் பார்த்து அவள்வணங்காவிடில் அவளுக்குத்தான்கொடுத்த ஆடையாபரணமுதலியவற்றை வாங்கிக்கொண்டு அவளோடு பேசுதலும் புணர்தலும் ஒழிக்க,ஜீவநத்துக்காகக்கொடுத்தது கவரத்தக்கதன்று.

எஅ—கணவன் சூதாடுகிறவனாயிருந்தாலும், குடியனாகவிருந்தாலும்,நோயாளியாகவிருந்தாலும்,அவனுக்குமனைவி கர்வத்தால்

பணிவிடைசெய்யாவிட்டால் அவளுக்கு அலங்காரம் வஸ்த்திரம் படுக்கை-இவைகளைக்கொடாமல் மூன்றுமாதம் நீக்கிவைக்கவேண்டியது.

எகூ—உன்மத்தன்-பதிதன்-பேடி-போகத்தில் மகிழ்ச்சியில்லாதவன்-பாவப்பிணியினன் - இப்படிப்பட்டகணவனை பகைக்கிறமனைவியருக்கு விலக்குதலும் ஆடையாபரணமுதலியவற்றைக் கவர்தலும் இல்லை.

அ௦—மதுபாநஞ்செய்பவள் தீயநடையுள்ளவள் கணவனுக்கு மாறுபாடுசெய்பவள் தீராப்பிணியினள்-மிகுந்த கொடுமையுடையவள் பொருளையழிப்பவள்-இவ்வகை மனைவியரை ஜீவநத்திற்குக்கொடுத்து நீக்கிவிட்டு இரண்டாவது விவாகஞ்செய்க.

அக—மலடியானமனைவியை எட்டுவருஷத்திற்குமேலும், சாப்பிள்ளைபெறுபவளை பத்துவருஷத்திற்குமேலும், பெண்ணையே பெறுபவளை பதினொருவருஷத்திற்குமேலும், தீங்குசொல்பவளை அப்பொழுதேயும் நீக்கி வேறுவிவாகஞ்செய்துகொள்க.இந்தமனைவியர்களுக்கு மநமகிழ்ச்சிப்பொருள் கொடுக்கவேண்டியதில்லை.

அஉ—கணவனுடைய நன்மையைவிரும்பினவளாயும், நல்லொழுக்கமுடையவளாயும் இருந்தமனைவி பிணியினளாயிருப்பினும் வேறுவிவாகஞ்செய்க விரும்பினவன் அந்தமனைவியின் அநுமதிபெற்றுக்கொண்டுசெய்க- அவளையொருபோதும் அவமதிக்கக்கூடாது.

அரு—மூத்தமனைவியானவள் கோபத்தினாலே வீட்டினின்றும் வெளிப்பட்டால் அவளைக் கணவன் தடுத்துக்காக்க அல்லது அவளுடைய தந்தைமுதலானவரிடத்தொப்புவிக்க.

அச—கணவன்முதலானவர்கள் குடிக்கவேண்டாமென்றுசொ

ல்லியிருந்தும் கலியாணமுதலியகாரியங்களில் குடிக்கிற க்ஷத்திரி யஜாதிமுதலியமாதர்களுக்கும் அப்படியே சபையில் சுவதந்திர மாய்-பாட்டு-கூத்து- முதலியவற்றைப்பார்க்கிற மாதர்களுக்கும், அந்தக்குற்றத்திற்காக தன்னிடத்தில் பிரியாதுவந்தால்- அரசன் ஆறு-தங்கக்குன்றி தண்டமாகவிதிக்க.

அரு—துவிஜாதிகள் - தன்றன்ஜாதிகளிலும், மற்றஜாதிகளிலும் கலியாணஞ்செய்துகொண்டால் அந்தந்தஸ்திரீகளுக்கு வருணக்கி ரமமாக மூத்ததன்மையையும்-வீடு- ஆடையாபரண முதலியவற் றையும்-மரியாதையையும்,எற்படுத்தவேண்டியது.

அசு—துவிஜாதிகளுக்கு தன்ஜாதிமனைவியே கணவனுக்கு சரீ ரப்பணிவிடை- அந்நமிடல்- ஹோமகாரியஞ்செய்தல் - அதிதிபூ சை-பிக்ஷையிடல் - இவைகளை நாடோறும் செய்யவேண்டியது. மற்றஜாதிமனைவியர் ஒருபோதுஞ்செய்யக்கூடாது.

அஎ—எவன் மூடத்தனத்தால் தன்ஜாதிமனைவி கிட்டவிருக்கை யில் வேறுஜாதிமனைவியைக்கொண்டு மேற்சொன்ன தன்னுடைய சரீரப்பணிவிடைமுதலியவற்றை செய்வித்துக் கொள்ளுகிறானோ அவன் 3 பிரம்மசண்டாளனுக்குச் சரியானவனென்று பெரியோர் கள் சொல்லுகிறார்கள்.

அஅ—குலம்-நல்லொழுக்கம் இவைகளாலுயர்ந்தவனும், பெ ண்ணுக்குத்தக்க ரூபமுள்ளவனும்,தன்ஜாதிக்குத்தக்க ஜாதியுள்ள வனுமிருக்கிறவரனுக்கு தனதுபெண்-எட்டுவயதுக் குட்பட்டிரு ந்தாலும்,விதிப்படி விவாகஞ்செய்துகொடுத்து விடலாம்.

அகூ—பெண்ணுக்கு ருதுகாலம் வந்துவிட்டாலும்.சாமளவும்

---

3 பிரம்மசண்டாளன்-என்பது - பிராமணஸ்திரீயினிடத்தில் சூத்திரனுக்குப்பிறந்தவன்.

கலியாணமில்லாமல் கந்நிகையாகவே தன்வீட்டிலிருந்தாலும் இருக்கக்கூடும். குணமில்லாதவரனுக்கு[illegible]ரம் ஒருபோது மிவளை கொடுக்கக்கூடாது.

௯௰—பெண்ணானவள் தான் ருதுவானது துவக்கி மூன்றுவருஷம்வரையில் தகப்பன் தக்கவரனுக்குக்கொடுப்பனென்கிறதை யெதிர்பார்த்திருக்கவேண்டியது. அதற்குள் தகுந்தவரனுக்குக் கொடாவிடில் தானாகவே தகுந்தவரனை வரித்துக்கொள்ளக்கடவள்.

௯௰௧—மேற்சொன்னபடி கணவனைத் தானாகவேவரித்துக்கொள்ளுகிறபெண்ணுக்கும், அவளைக் கலியாணஞ்செய்துகொள்ளுகிறவரனுக்கும், யாதொருபாபமும் நேரிடாது.

௯௰௨—தானாகப் புருஷனை வரித்துக்கொள்ளுகிறவள்- தந்தை தாய் உடன்பிறந்தவர்இவர்கள்தனக்கு முன்கொடுத்தபூஷணங்களை எடுத்துக்கொள்ளக்கூடாது. எடுத்துக்கொண்டால் திருடியாவாள்.

௯௰௩—ருதுவானபெண்ணை விவாகஞ்செய்பவன் அவள்தகப்பனுக்குச் சுல்க்கங்கொடுக்கவேண்டியதில்லை. ஏனெனில் அந்தப்பெண்ணை ருதுகாலத்தில் புருஷனுடன்சேரும்படி செய்யாததால் அவன்சுவாதீந மெடுபட்டுப்போய்விட்டதல்லவா.

௯௰௪—முப்பதுவயதுள்ளவரந் அழகான பன்னிரண்டுவயதுள்ளபெண்ணையும், இருபத்திநாலுவயதுள்ளவரந் எட்டுவயதுள்ள பெண்ணையும் விவாகஞ்செய்துகொள்ளலாம் இதற்குமுன் விவாகஞ்செய்துகொள்ள அவசரப்பட்டால் வேதமோதல்முதலியதர்ம்மகாரியம்கெடும்-அதனால் பின்பு துக்கப்படுவான்.

௯௰௫—மனிதர்கள் தெய்வத்தினால்கொடுக்கப்பட்டமனைவியையடைகிறார்களேயன்றித் தன்மநதின்படியடையவில்லை. ஆகையால் கற்புடைய அந்தமனைவியைக் காப்பாற்றிக்கொண்டு தேவர்க

ளுக்குப்பிரியமான எக்கியங்களைச் செய்யவேண்டியது. (தேவதை களால் கொடுக்கப்பட்டார்கள் என்கிறவிஷயம்ஸ்ருதியில் பிரசி த்தமாயிருக்கிறது.)

௯௬—மாதர்கள் கருப்பந்தரிப்பதற்கும், ஆடவர்கள்கருப்பமு ண்டு பண்ணுகிறதற்கும், பிரமனால் சிருஷ்டிக்கப்பட்டார்கள். ஆத லால் மாதராடவர்களுக்கு கலியாணஞ்செய்தநாண்முதல் யாகாதி தர்ம்மகாரியங்களில் அதிகார மிருவருக்கும்பொதுவானதென்றும் கணவன்செய்யுந்தருமத்தில் மனைவிக்குப்பங்குண்டென்றும் வே தத்திற்சொல்லப்பட்டிருக்கின்றன.

௯௭—ஒருபெண்ணுக்குச் சுல்க்கங்கொடுத்தபின் அந்தவரந் இறந்துபோனால் அந்தப்பெண்ணுக்கு மநமிருந்தால் அந்தவரந் தம்பிக்குக்கொடுத்துவிடலாம்.

௯௮—வேதமோதாதவனான சூத்திரனும் பெண்ணுக்குச் சுல் க்கம்வாங்கக்கூடாது. வேதமோதின துவிஜர்கள் வாங்கக்கூடாதெ ன்பதை சொல்லவேண்டியதில்லை அப்படி வாங்குகிறது அந்தப் பெண்ணுக்கு மறைவிடமானகிரயமேயாகும்.

௯௯—முன்னமொருவனுக்குப் பெண்ணைக்கொடுக்கிறதாகச் சொல்லி பின் வேறொருவனுக்குக்கொடுப்பதென்பது முற்காலத் திலும் இக்காலத்திலும் பெரியோர்களால் செய்யப்படவில்லை எதிர்காலத்திலும் செய்யமாட்டார்கள்.

௧௦௦—முன் கல்ப்பங்களிலும் சுல்க்கமென்றுபெயருள்ள கிரை யப்பொருளை வாங்கிக்கொண்டு-பெண்ணை மாறுபாடாய் விற்கிற தென்பதை நாம் கேட்டதில்லை.

௧௦௧—கணவனும் - மனைவியும்-சாமளவும் - விபசாரதோஷம்

இல்லாமலிருக்கவேண்டியது. இதுதான் மாதராடவர்களுக்கு சுருக்கமான தருமமென்றறிக.

௧௦௨—விவாகஞ்செய்துகொண்டபின் கணவனுக்கும்-மனைவிக்கும் விபசாரதோஷம் வராமலிருந்துகொண்டு இருவரும் பிரியாமல்-தரும- அர்த்த-காம விஷியமான காரியத்தை நாடோறுஞ் செய்யவேண்டியது.

௧௦௩—இதுவரையில் கணவனுக்கும்,மனையாளுக்கும்,ஒருவருக்கொருவர் இஷ்டமான தருமத்தையும்,குலநசிக்கும்படியான ஆபத்தில் நடக்கவேண்டியதருமத்தையும் சொன்னேன் இனி தாயபாகத்தைக்கேளுங்கள்.

## தாயபாகம்.

௧௦௪—தாய்தந்தை யிருவருமிறந்தபின் மைந்தர்களனைவருமொன்றாகக்கூடி அவர்கள் சம்பாதித்துவைத்த ஆஸ்தியை பிரித்துக்கொள்க. ஏனெனில்-தாய்தந்தை யிருக்கையில் அவர்கள்பொருள் மைந்தருக்கு சுவாதீநமில்லையல்லவா.

௧௦௫—அல்லது பிரித்துக்கொள்ளாதபக்ஷத்தில் ஜியேஷ்ட்டபுத்திரனே பிதாவின்பொருளைமுழுமையும் தன் சுவாதீநத்திலவைத்துக்கொண்டு தன்சகோதரர்களை தகப்பன்போல் காப்பாற்றவேண்டியது. தம்பிகளும் அந்தமூத்தவனை தகப்பனைப்போலநுசரித்துப்பிழைக்கவேண்டியது.

௧௦௬—ஏனென்றால் மூத்தபிள்ளைபிறந்ததினாலேயே தகப்பன் புத்திரவானாயும், பிதுர்க்களின் கடனைத்தீர்த்தவனாயும், ஆகிறபடியால் அவன்வசத்தில் பிதுர்தநமிருக்கலாமென்று சொல்லப்பட்டது.

௧௦௭—பின்னும் மூத்தபுத்திரன்பிறந்ததனால் பிதுர்க்கள்கடனை

த்தீர்க்கிறதுமன்றி மோக்ஷத்தையுமடைகிருனென்று சுருதியில் சொல்லியிருப்பதால் அவன்றான் தருமத்தினுற் பிறந்தபுத்திரன். மற்றவர்கள் காமத்தினுலுண்டானவர்களென்று சொல்லப்படுகிருர்கள்.

கO அ—ஆதலால் தந்தையானவன் மைந்தர்களைப்போல் மூத்தவன் இளையவர்களை ஒன்ருகவிருக்கிறவனாயில் அந்நவஸ்திர முதலியவைகளாற் காப்பாற்றவேண்டியது. இளையவர்களும் மூத்தவனிடத்தில் தகப்பன்மரியாதையாக இருக்கவேண்டியது.

கOகூ—மூத்தவன் யோக்கியனுகவிருந்தால் குலத்தைவிளங்கச் செய்வான். இல்லாவிடில் குலத்தையழிப்பான். ஆதலால் நல்லொழுக்கமுள்ள மூத்தவன்மிகவும்பூஜிக்கத்தக்கவன். அவன்பெரியோர்களால் நிந்திக்கப்படாதவனுயு மிருக்கிருன்.

ககO—தங்களிடத்தில் அன்புள்ள மூத்தவனை தாய்தகப்பனைப்போலவும், அன்பில்லாவிடில் அம்மான்முதலியபந்துக்களைப்போலவும், உபசரிக்கவேண்டியது.

ககக—இவ்விதமாகக்கூடியிருந்தாலும் இருக்கலாம் அல்லது தருமவிருப்பத்தினுல் பகுத்தாவதுகொள்ளலாம், பகுத்துக்கொண்டால் தருமகாரியம் விருத்தியடையும்(அதாவது ஒன்ருகவிருக்கும்போது தேவபூஜை-பிதுர்பூஜை-அதிதிபூஜை - இவைகள் ஒன்ருகவிருக்கும் பிரித்துக்கொண்டால் அவைகள் தனித்தனியே வீடுகள்தோறுநடக்கும்.ஆதலால் விபாகம்செய்துகொள்வது தருமமென்று கூறுகிறது.)

## எடுகூறு.

ககஉ—எல்லாப்பொருளிலும் மூத்தவன் இருபதிலொருபங்கும்-இரண்டாவதுபுத்திரன் நாற்பதிலொருபங்கும்-மூன்ருவது புத்

திரல் என்பதிலொருபங்கும்-எடுகூறாகவெடுத்துக்கொண்டு மற்ற வற்றை சரியாகமூன்றுபேரும்பகுத்துக்கொள்க.

௧௧௩—சிலவிசை மூன்றுக்கு அதிகபிள்ளைகளிருந்தால் மூத்தவனும், கடையவனும்,முன்சொன்னபடி இருபதிலொன்றும், எண்பதிலொன்றும்,எடுகூறைமுறையேகொள்க.மத்தியமர்கள் அனைவரும் நாற்பதிலொருபங்கையே தனித்தனி எடுத்துக்கொள்க.

௧௧௪—எல்லாப்பொருளிலும் பங்குவராத உயர்ந்தபொருளையும், பத்துப்பசுக்களுக்கு ஒருபசுவையும்,மூத்தவன்குணசாலியாயிருந்தால் எடுத்துக்கொள்ளவேண்டியது.

௧௧௫—எல்லாரும் வேதமுதலானவையோதி வேள்விமுதலியகிரியைகளைச் செய்யத்தக்கவர்களாகவிருந்தால் மேற்சொன்னபத்துப்பசுவுக்குஒருபசு-பங்குவராததையெடுத்துக்கொள்ளுதல் இவ்விதஎடுகூறில்லை ஆனால்மூத்தவனுக்கேதேனும் உத்தமமானவொருபொருள்மேன்மையின் பொருட்டுக்கொடுக்க.

௧௧௬—மேற்சொல்லியபடி இருபதிலொன்றுமுதலிய எடுகூறு எடுத்துக்கொண்டால் மிகுதியை அனைவரும்சரியாகப் பகுத்துக் கொள்க. இல்லாவிடில் மேற்சொல்லுகிறபடிபகுத்துக்கொள்க.

௧௧௭—மூத்தவன் இரண்டுபாகமும், அவனுக்கு நேரிளையவன் ஒன்றரைபாகமும், மற்றையெல்லாரும் ஒவ்வொருபாகமாகப்பிரித்துக்கொள்க. இதுதருமமான பிரிவினைதான் ஆனால் இது அந்த மூத்தவனும் இளையவனும் மற்றவர்களைவிட கல்விமானாயிருக்கிற விஷயம்

௧௧௮—இவ்விதமாக பிரித்துக்கொண்டபின் அவர்களினுடன்பிறந்தாள் கலியாணஞ்செய்யப் படாதவளாயிருந்தால் பகுத்துக் கொண்டபிராதாக்கள் அவள்கலியாணத்திற்காக தன்றன்பங்கில்நா

விலொருபங்கு கொடுக்கவேண்டியது கொடாவிடில் பதிதர்களா கிறார்கள். (அதாவது ஒருவனுக்கு இரண்டுமூன்று தாரமிருந்தால் அந்தந்தத்தாரத்திற்குப்பிறந்த புத்திரர்கள் அந்தந்தத் தாரத்திற்கு ப்பிறந்தபெண்களுக்குத் தனித்தனிபாகத்தில் நாலிலொருபங்கு கலியாணத்துக்காகக் கொடுக்கவேண்டியதென்றுகருத்து.)

௧௧௯—ஆடு-மாடு-குதிரை-இவைகள்-பங்குவராமலிருந்தால் மூ த்தவனேயெடுத்துக் கொள்ளவேண்டியது அல்லது. அதைகிரைய ங்கட்டி அந்தந்தத்தொகையை அனைவரும் பகுத்துக்கொள்ளத் தக்கது.

௧௨0—மூத்தவனுக்குப்பிள்ளையில்லாமலிருந்து அவன்மனையா ளிடத்து இளையவன்பிள்ளையுண்டுபண்ணி யிருந்தால் அந்தப்பிள் ளைக்கு மூத்தவனுக்குக் கொடுக்கவேண்டிய எடுகூறு கொடுக்கா மலே அனைவரும்சரியாகப் பகுத்துக்கொள்க. இதுதருமத்தின் ஏற்பாடு.

௧௨௧—மூத்தவன்மனையாளிடத்தில் இளையவனாற்பிறந்தவன் மூ த்தவனைப்போல் எடுகூறுக்கு அதிகாரியல்லன். உலகத்தில்பிதாவயிற் றிற்பிறப்பதேயுயர்ந்தது அயலானுக்குப்பிறந்தவன்பிதாவுக்குப்பி றந்தவனைப்போ லாகமாட்டான். ஆதலால் முன்சொன்னபடி சரி யாகப்பகுத்துக் கொள்க.

௧௨௨—ஒருவனுக்கு இரண்டுமூன்றுவருணத்தில்விவாகமாயிரு ந்து அதில் மூத்ததாரத்துமைந்தன் சிறுவனாயும், இரண்டாந்தார த்துமைந்தன் மூத்தவனாயுமிருந்தால் யாருக்கு எடுகூறுகொடுக்க வேண்டியதென்று சந்தேகநேரிட்டால்.

௧௨௩—மூத்தமனைவிக்குப் பிறந்தவன் சிறுவனாகவிருந்தாலும் முதற்றாரமான ஒருருஷபத்தை எடுகூறாக எடுத்துக்கொள்க. இவ்

விதமாகவே மற்றமனைவியர்மைந்தர்களும் தாயின்கிரமப்படி எற்படுகிற மூத்ததன்மைக்குத்தக்கபடி அதற்கு இரண்டாந்தரமான ருஷபத்தை தனித்தனி எடுகூறெடுத்துக்கொள்க. இந்தத்தன்ஜாதிமனைவியை மூதற்றாரமென்றும், மற்றஜாதிமனைவியை இரண்டாவதுமூன்றாவதென்றும்முறையேகொள்க. வேறுஜாதி மனைவிக்குப் பிறந்தபிள்ளைகளின் விபாகம் மேற்சொல்லப்படும்.

௧௨௪—மூத்தமனைவிமைந்தன் வயதினால் மூத்தவனாயிருந்தால் பதினைந்துபசுவையும், ஒரு இடபத்தையும் எடுகூறெடுத்துக்கொள்க. மற்றவர்கள் தாயின்வரிசைப்படி. ஆடுமுதலியவற்றில் எடுகூறெடுத்துக்கொண்டு கிரமப்படி பகுத்துக்கொள்க.

௧௨௫—ஒருவனுக்குத் தன்ஜாதிமனைவிகளே இரண்டுமூன்றுபேரிருந்தால் அவர்கள்மைந்தர்களுக்கு மனைவிவரிசையில்லாமலே வயதின்கிரமப்படி மூத்ததன்மை எற்படும்.

௧௨௬—எனென்றால் ஜோதிஷ்டோமயாகத்தில் சௌபிரமண்ணியமந்திரத்தைச்சொல்லும்போது வயதினால்மூத்தவனையே குறிப்பாகச்சொல்லவேண்டுமென்று இருடிகளாலேற்படுத்தப்பட்டிருக்கின்றன. (அதாவது இன்னானுடையபிதா எக்கியஞ்செய்கிறானென்று சொல்லுகிறது அந்தஎக்கியத்துக்கு சடங்கு ஒருபுத்திரனில்லாதவன் அந்தஎக்கியம் செய்யக்கூடாது. பின்னும் ஒருகருப்பத்தில் இரட்டைப்பிள்ளைபிறந்தால் முன்னம்பிறந்தவனுக்கே மூத்ததன்மைசொல்லப்படுகின்றது. (இந்தஎடுகூறு கலியுகத்திற்குக்கூடாது.)

௧௨௭—ஒருவனுக்குப் பிள்ளையில்லாமல் பெண்மாத்திரமிருந்தால் அந்தப்பெண்ணை விவாகஞ்செய்துகொடுக்கும்போது வரனிடத்தில் இந்தப்பெண்ணுக்கு பிராதாவில்லாததால் இவளுக்குப்பிறக்கிறபிள்ளை என்வம்சத்திற்கு சிரார்த்தஞ்செய்கிறவனாகவிருக்க

வேண்டுமென்று ஏற்பாடுசெய்துகொள்ளவேண்டியது.இவளுக்கு ப் புத்திரிகையென்றுபெயர்.

கஉஅ—இவ்விதமாகவே தன்வம்சம் விர்த்தியடைவதற்காக- ஸா க்ஷாத் தக்ஷப்பிரஜாபதியானவர் தன்னுடைய எல்லாப்பெண்க ளையும் புத்திரிகளாகவே தானஞ்செய்தார்.

கஉகூ—தான்பெற்றஎல்லாப்பெண்களையும் அலங்கரித்து மநம கிழ்ச்சியுடன்வரர்களையும்பூசித்து யமதருமராஜாவுக்கு பத்துப்பெ ண்களையும், கசியபருக்குப் பதின்மூன்றுபெண்களையும், சந்திரனு க்கு-இருபத்தேழுபெண்களையும் புத்திரிகளாக தானஞ்செய்தார்.

கஙo—தன்னுத்மாவுக்கும்,பிள்ளைக்கும் பேதமில்லை, அந்தப்பி ள்ளையைப்போலத்தான் பெண்ணும்.ஆகையால் தன்னுத்மாவாகிற பெண்ணிருக்கும்போது தன்பொருளை எப்படி அயலானெடுத் துக்கொள்வான்.

கஙக—தாய்க்கு விவாகமுதலியகாரியத்தில் தந்தைமுதலானவர் கள்கொடுத்த பூஷணமுதலிய சீதநப்பொருளை அவளிறந்தபின் அவளுடையகலியாணமாகாத பெண்களே எடுத்துக்கொள்க. புத் திரனில்லாத மாதா மகன்பொருளை முழுதும் புத்திரிகையாகக் கொடுத்தபெண்ணின்வயிற்றில்பிறந்த தௌஹித்திரன் . எடுத்துக் கொள்க.

கஙஉ—புத்திரியாகக்கொடுத்த பெண்ணின்வயிற்றில்பிறந்தபிள் ளையானவன் தன்னைப்பெற்றதகப்பனுக்கு தன்னைவிட வேறுபிள் ளையில்லாதபோது அவனுடைய ஆஸ்தியையுமெடுத்துக்கொண்டு அவனுக்கும் மாதாமகனுக்கும் பிண்டம்போட்டு சிரார்த்தஞ்செ ய்யவேண்டியது.

கஙஙு—பௌத்திரனுக்கும் தௌஹித்திரனுக்கும், உலகத்தில் யாதேனும் பேதங்கிடையாது. ஏனென்றால் அவ்விருவரும் அம்

தப்பாட்டன்வயற்றிற்பிறந்த பிள்ளையையும்,பெண்ணையும்,தந்தை யாயும் தாயாகவும் உடையவர்களல்லவா.

௧௩௪—ஒருவன் தன்னிட பெண்ணை புத்திரிகையாக ஏற்பாடுசெய்துகொடுத்தபின்பு தனக்குப் புத்திரன்பிறந்தால் அந்தப்பெண்ணுக்கும் பிள்ளைக்கும் சரியாகப்பகுக்க.அப்பெண் மூத்தவளாயிருப்பினும் ஸ்திரீஜாதியானகையால் எடுகூறு கொடுக்கத்தக்கதன்று.

௧௩௫—புத்திரிகையாகக்கொடுத்தபெண்ணுக்குப்பிள்ளையில்லாமலிறந்துபோனால் அப்பெண்ணின்தாயும் தகப்பனுமிறந்தபின் அவள்பொருளை அவள்கணவன் சந்தேகமின்றி முழுமையும் எடுத்துக்கொள்க.

௧௩௬—பெண்ணைப் புத்திரிகையென்றுசொல்லிக்கொடுத்தாலும் சொல்லாமற்கொடுத்தாலும், அவளுடையமைந்தன் பிள்ளையில்லாத மாதா மகனுக்குக் கர்மமுதலானவைசெய்து அவன்பொருளையு மெடுத்துக்கொள்க.

௧௩௭—மனிதர்களுக்குப் பிள்ளைபிறந்தால் சுவர்க்கமுதலியபுண்ணியலோகத்தையடைகிறார்கள். பிள்ளைக்குப்பிள்ளைபிறந்தால் மேற்சொன்ன புண்ணியலோகத்தில் நெடுங்காலம் வாசத்தையும் பிள்ளைக்குப்பேரன்பிறந்தால் சூரியலோகத்தையும், அடைகிறார்கள்.(ஆதலால் புத்திரசந்ததியிருக்கையில் பெண்சந்ததிக்குஅதிகாரமில்லையென்று கருத்து.)

௧௩௮—மைந்தன் தந்தையை-பும்-என்னும் - நரகத்தினின்றும் காப்பாற்றுகிறபடியால் புத்திரனென்று ஸாக்ஷாது பிரமனாலேயே சொல்லப்படுகிறான்.

௧௩௯—பௌத்திரனுக்கும், புத்திரிகையாகக்கொடுத்த பெண்வயிற்றிற்பிறந்த தௌஹித்திரனுக்கும், பேதமில்லையென்பதில் மற்

றமொருதிருஷ்டாந்திரம். அதாவது தௌஹித்திரனும் மாதாமக னைப் பரலோகத்தில் பௌத்திரன்போலேயே நரகத்தினின்றும் காப்பாற்றுகிறான். இம்மையிலும் ரக்ஷிக்கிறான்.

௧௪௦—புத்திரிகாபுத்திரனானவன் சிரார்த்தம் செய்யும்போது முன்னம் தன்றாய்க்கும், இரண்டாவது தாயின்றந்தைக்கும், மூன் றாவது தாயின்பாட்டனுக்கும் பிண்டம்வைக்கவேண்டியது.

௧௪௧—தத்தபுத்திரன் எல்லாகுணங்களுமுள்ளவனாக விருந்தால் வேறு கோத்திரத்திலிருந்துவந்திருந்தாலுந் தகப்பன்பொருளை ஔரஸபுத்திரனுடன் பிரித்துக்கொள்க.

௧௪௨—தத்தன்-ஜநகபிதாவினுடைய பொருளையும் கோத்திரத் தையுமடையக்கூடாது.அவ்விரண்டையும் அடைகிறவன்றான் பிண் டம்போடுவதுமுதலிய சிரார்த்தஞ்செய்யவேண்டியது. அந்தப் பிள்ளையை ஸ்விகாரங்கொடுத்தவுடனே பெற்றவனுக்குச்செய்ய வேண்டிய சிரார்த்தமுதலியவை நீங்கிவிடுகின்றன.

௧௪௩—பெரியோர்களுத்திரவின்றி மைத்துனன்முதலிய மற் றொருவனைப் புணர்ந்தவளுக்குப் பிறந்தவனும், பிள்ளையிருக்கும் போது பெரியோர்களின் உத்திரவுபெற்றுக்கொண்டு காமத்தினால் மைத்துனன்முதலானோனைப்புணர்ந்துபிறந்தவனும், ஜாரத்தின த்தாலும்,காமத்தினாலும் பிறந்தவர்களாகையால் பங்குக்குரியவர் களன்று.

௧௪௪—பெரியோர்களுத்திரவுபெற்றிருக்கிற மாதரிடத்திலும் இந்தஅத்தியாயம் - ௬0-வது - சுலோகத்தில் சொல்லியவிதிப்படி புணராத மைத்துனன் முதலானவர்கள் பதிதாளாகிறபடியால் அத்தப்பதிதர்களுக்குப்பிறந்த மைத்தனும் பங்குக்குரியவனல் லன்.

௧௪௫—அந்தஸ்திரியினிடத்தில் விதிப்படிபிறந்த க்ஷேத்திரஜ னும் ஔரசனைப்போலே பங்குக்குரியவன் பின்னும் தன்தாயை கலியாணம்பண்ணினவனான தன்தகப்பனுக்கு தருமமான புத்தி ரனாகவுஞ்சொல்லப்படுகிறான்.

௧௪௬—விபாகத்துக்குப்பின்- பிராதாயிறந்துபோய் அவனு டையதாபரசங்கமப்பொருளை வைத்திருக்கிற சகோதரன் அவன் மனைவியைக்காப்பாற்றி அவளிடத்தில் விதிப்படி தானொருபிள்ளை யையுண்டுபண்ணி அவனுக்கே தான்வைத்திருக்கிற பொருளைக் கொடுக்கவேண்டியது.

௧௪௭—ஒருஸ்திரீயானவள் பெரியோர்களினுத்திரவுபெற்றிருந் தாலும் மைத்துனனிடத்திலேனும் சபிண்டரிடத்திலேனும் விதி யின்றிகாமத்தினால் பெற்றுக்கொண்டபிள்ளையை டங்குக்குரியவன ல்லனென்றும்,விருதாவாப்பிறந்தவனென்றும்,பெரியோர்கள்சொ ல்லுகிறார்கள்.

௧௪௮—இதுவரையிற்சொல்லிவந்தவிபாகதருமமானது ஒருவ னுக்கு தன்ஜாதிமனையாளிடத்து பிறந்தமைந்தர்களின் விஷயம் இனிநானுசாதிமனையாளுக்குப் பிறந்தமைந்தர்களின் விபாகத்தை க்கேளுங்கள்.

௧௪௯—பிராமணன் நாலுஜாதிமாதரை விவாகஞ்செய்திருந்தா ல் அவர்களின் மைந்தர்கள் விபாகஞ் செய்துகொள்ளும்போது மேற்சொல்லியபடிபகுக்க.

௧௫0—பிராமணஜாதி மனைவியுடைய மைந்தனுக்கு ஒரு உழவு வேலைக்காரனையும், ஒருவிடபத்தையும், குதிரைமுதலிய ஒருவாகந த்தையும், மோதிரமுதலிய ஒருபூஷணத்தையும், ஒருவீட்டையும்

மற்றும் எல்லாப்பொருளிலும் ஒவ்வொருபங்குகளையும் எடுகூருக க்கொடுக்கவேண்டியது.

கருக—மற்றவெல்லாப்பொருளையும் பிராமணமனைவியுடைய மைந்தன் மூன்றுபங்கும் க்ஷத்திரியமனைவியுடையமைந்தன் இரண்டுபங்கும் வைசியமனைவியுடையமைந்தன் ஒன்றரைப்பங்கும் சூத்திரமனைவியுடைய மைந்தன் ஒருபங்குமாகப் பிரித்துக்கொள்க. இப்படிநாலுஜாதிமைந்தரில்லாவிட்டாலும் இருப்பவர் இந்தக் கணக்குப்படியே பகுத்துக்கொள்க.

கருஉ—இல்லாவிடில் விபாகதருமந்தெரித்தவனான பிராமணமனைவியின் மைந்தன் தானெடுகூறெடுத்துக்கொள்ளாமலே எல்லாப் பொருளையும் பத்துப்பங்காகப்பகுத்து மேற்சொல்லுகிறபடிதருமமாகப்பகுத்துக்கொள்க.

கருரு—அப்பத்துப்பங்கில்-நாலு-மூன்று-இரண்டு- ஒன்று-ஆகிய பங்குகளை மைந்தர்கள் வருணக்கிரமமாக முறையே எடுத்துக் கொள்க.

கருச—பிராமணனுக்கு மூன்றுவருணமனையாளுக்குமைந்தர்களிருந்தாலும் இல்லாவிட்டாலும் சூத்திரமனைவிமைந்தனுக்கு பத்திலொருபங்கைவிட அதிகபாகங்கொடுப்பது தருமமன்று.

கருரு—பிராமணன்-க்ஷத்திரியன்-வைசியன்-இந்தமூன்றுவருணத்தாருக்கும் சூத்திரமனையாளிடத்திற்பிறந்தமைந்தனுக்கு இந்தப் பத்திலொருபங்குங்கிடையாதென்றுசொல்வது சிலர்பக்ஷம். அதற்கு விவாகஞ்செய்யப்படாத சூத்திரஸ்திரீயைச் சேர்ந்துபிறந்த மைந்தன் விஷயமென்று சிலர் தாத்பரியஞ்சொல்லுகிறார்கள். ஆனால் அவன் தகப்பன் எவ்வளவுபொருளை இஷ்டத்தினாற் கொடுப்பானோஅதைவாங்கிக்கொள்க.

௧௫௬—துவிஜர்களுக்குத்தன்றன் ஜாதிமனைவிகளிடத்தில் பிறந்தோர்க ளனைவரும் மூத்தவனுக்கு எடுகூறுகொடுத்து மற்றவைகளை அவனுடன்சரியாகப்பகுத்துக்கொள்க.

௧௫௭—சூத்திரனுக்கு தன்ஜாதிஸ்திரீமாத்திரம் மனைவியாகலாமேயன்றி உயர்ந்தஜாதிதாழ்ந்தஜாதிஸ்திரிகள் கூடாது. தன்ஜாதி மனைவியிடத்தில் நூறுபிள்ளைபிறந்தாலும் அனைவரும் சரியாகவே பகுத்துக்கொள்க. அவர்கள் எடுகூறுகொடுக்கவேண்டியதில்லை.

௧௫௮—சுவாயம்புவ மநுவானவர்மனிதர்களுக்குமேற்சொல்லப்போகிறபன்னிரண்டுவிதமானமைந்தர்களுக்குள் முன்னறுமைந்தர்கள் பிள்ளையில்லாதசபிண்டர்முதலானவர்களின்பொருளையெடுத்துக்கொள்ளத்தக்கவராயும் தந்தையின்கோத்திரத்தையும் பொருளையும் அடைகிறவர்களாயுமிருக்கிறார்கள். பின்னறுபேர்கள் தந்தையின்கோத்திரத்தையும் பொருளையுமாத்திர மடைகிறார்கள். சிலர் பின்னறுபேர்கள்தந்தையின்கோத்திரத்தை யடையமாட்டார்கள்.கேவலம் பந்துக்களைப்போலதருப்பணமாத்திரஞ்செய்யவேண்டியவர்களென்றும் மேற்சொல்லுகிறபடி பொருளையுமடையார்களென்றும்,சொல்லுகிறார்கள்.

௧௫௯—ஔரசன்-க்ஷேத்திரஜன்-தத்தன்-கிருத்திரிமன்-கூடோத்பந்நன்-அபவித்தன் - இவ்வாறுபுத்திராளும், பிதுராஸ்த்திக்கும், பிள்ளையில்லாத ஞாதிகளாஸ்த்திக்கும், உரியவர்கள்.

௧௬0—காநீநன் - சஹோடன்-கிரீதன் - பௌநற்பவன்- சுயந்தத்தன்-சௌத்திரன்,இவ்வாறுபுத்திராளும் தந்தையின்பொருளுக்குமாத்திரமுரியவர்கள்.

௧௬௧—சம்புமுதலியவற்றால் ஆற்றைத்தாண்டுகிறவன் எந்தப்பயனையடைவானோ அவ்விதப்பயனைத்தான் க்ஷேத்திரஜன்முதலிய

பதினேருபிள்ளைகளைப் பரலோகசாதகமாக வைத்துக்கொண்டிருக்கிறவன் அடைகிறன்.

கசாஉ—க்ஷேத்திரஜன்பிறந்தபின் ஔரசன் பிறந்துஅந்தக்ஷேத்திரஜனைப் பெற்றவனுக்கு தன்தாரத்தில் பிள்ளைபிறக்காவிட்டால் அப்போது இவ்விருவரும் அவனவன்பெத்ததகப்பனுடைய ஆஸ்தியை அவனவனெடுத்துக்கொள்ளவேண்டியது.

கசாந—ஔரசன்பின்னுற்பிறந்தாலும் அவனேதகப்பன் பொருளுக்குப்பிரபுவாகிறன் க்ஷேத்திரஜன்தவிர மற்றவர்களுக்கெல்லாம் அந்தஔரஸன் தனக்குப்பாபம் நேரிடாமைக்காக மேற்சொல்லியவிதிப்படி அந்நவஸ்திரத்துக்குக்கொடுக்கவேணடியது.

கசாச—ஔரசன் தான்பகுத்துக்கொள்ளும்போது தன்றந்தை முதலானவர்களின் ஆஸ்த்தியில் க்ஷேத்திரஜல்குணத்துக்குத் தக்கபடி ஆறிலொருபங்காவது ஐந்திலொருபங்காவது கொடுக்கவேண்டியது.

கசாரு—ஔரஸனும் க்ஷேத்திரஜனும் மேற்சொன்னவிதிப்படி தந்தையின்பொருளுக்கு உரியவர்கள்.மற்றதத்தன்முதலிய பத்து புத்திரர்களும் முன்பிள்ளைகளில்லாவிடில் பின்பிள்ளைகள் முறையாக தந்தையின்கோத்திரத்திற்கும் கருமத்திற்கும் பொருளுக்குமுரியவர்கள்.

கசாசா—தன்ஜாதிஸ்திரீயை கந்நிகையாகவிருக்கும்போது விவாகஞ்செய்து அவளிடத்தில் எந்தப்பிள்ளையைத் தானேபெறுகிறனே அவனை முக்கியமான ஔரஸபுத்திரனென்று அறியவேண்டியது.

கசாஎ—பிள்ளைபிறக்கிறதற்குமுன் இறந்துபோனவன்-பேடி-பிள்ளைபிறக்கவிரோதமானபிணியுள்ளவன் இவர்களின்மனைவிகளிட

த்தில் மைத்துனன்முதலானவர்களால் மேற்சொன்னவிதிப்படி யுண்டுபண்ணப்பட்டபிள்ளையை க்ஷேத்திரஜனென்று சொல்லுகிறார்கள்.

௧௬௮—தந்தையுந்தாயும் சம்மதித்து இருவருங்கூடியேனும் ஒருவராயேனும்,தங்கள்வயிற்றிற்பிறந்தபிள்ளையை தன்ஜாதியாயும்,பிள்ளையில்லாமல் துன்பப்படுகிறவனுயும் இருக்கிற ஒருவனுக்கு பிரீதியுடன் இந்தப்பிள்ளை யுனக்கே சொந்தமென்றுசொல்லி ஜலத்தைவிட்டு தானஞ்செய்யப்பட்டவனை தத்தனென்றுசொல்லுகிறார்கள்.

௧௬௯—தன்ஜாதியாயும் பிதுர்க்களுக்குச் சிரார்த்தஞ்செய்வதாலும்,விடுவதாலும் வருங் குணகுணங்களையறிந்தவனுயும், தாய்தந்தைகளைப் பூசிக்கிறவனுயுமிருக்கிற எந்தப்பிள்ளையை தானே பிள்ளையாகவைத்துக்கொள்ளுகிறானே அவனைக்கிரத்திரமபுத்திரனுகச் சொல்லுகிறார்கள்.

௧௭0—ஒருவன்மனையாள் கணவன்வீட்டிலிருக்கும்போது அவனுக்குத்தெரியாமல் எந்தஜாதிபுருஷனேனும் அவளிடத்தில் ஒரு பிள்ளையையுண்டுபண்ணினால் அப்பிள்ளையை அந்தக்கணவனுக்கு கூடோத்பந்நபுத்திரனென்று சொல்லுகிறார்கள்.

௧௭௧—தாய்-தந்தை யிருவராலாவது அல்லது ஒருவராலாவது எறிந்துவிடப்பட்ட பிள்ளையை எடுத்துக்கொள்ளுகிறவனுக்கு அபவித்தபுத்திரனென்று சொல்லுகிறார்கள்.

௧௭௨—எந்தப்பெண் விவாகத்துக்குமுன் தகப்பன்வீட்டிலிருக்கும்போது யாருக்குந்தெரியாமல் இரகசியமாக ஒருவனைப்புணர்ந்து ஒருபிள்ளையைப் பெற்றுக்கொள்ளுகிறாளோ அந்தப்பிள்ளையை பின்பு அவளைக் கலியாணஞ்செய்துகொள்ளுகிறவனுக்கு காநீநபுத்திரனென்றுசொல்லுகிறார்கள்.

௧௭௩—எவன் ஒருபெண்ணை கருப்பமாயிருக்கிறுளென்று அறிந்தாவது - அறியாமலாவது விவாகஞ் செய்துகொள்ளுகிருனே அவனுக்கு அந்தக்கருப்பத்திஞற்பிறந்தபிள்ளையை ஸகோடபுத்திரனென்றுசொல்லுகிருர்கள்.

௧௭௪—எவன் தனக்குப்பிள்ளையில்லாமையால் ஒருபிள்ளையை அவன் தாய்தகப்பனிடத்து விலைக்குவாங்கிக் கொள்ளுகிருனே அவன் குணத்திஞல் தனக்குத்தக்கவஞயினும்,தகாதவஞயினும் வாங்கினவனுக்கு கிரீதபுத்திரனென்றுசொல்லப்படுகிருன்.

௧௭௫—எந்தஸ்திரீயானவள் கணவஞல் நீக்கப்பட்டாவது. கணவனிறந்தபின்பாவது,மற்றெருவனை சுவேச்சையாகவே புணர்ந்து எந்தப்பிள்ளையைப் பெறுகிருளோ அந்தப்பிள்ளையை யுண்டுபண்ணினவனுக்குப் பௌநற்பவ புத்திரனென்று சொல்லுகிருர்கள்.

௧௭௬—ஆனல் அந்தஸ்திரீயானவள் கணவஞல் தொடப்படாத யோநியையுடையவளாகவே மற்றெருவனையடைந்தால் அந்தஸ்திரீயை புணரப்போகிறவன் புநர்விவாகவிதிப்படி கலியாணஞ் செய்துகொள்ளவேண்டியது.சிலர்இந்தச்சுலோகத்துக்கு ஒருஸ்திரீ தன்னைக்கலியாணஞ்செய்தபுருஷனுக்கு தன்னைப்புணர திறமில்லாமலிருந்து அவனைநீக்கி கொஞ்சநாள் வேறுபுருஷனிடத்திலிருந்து மறுபடியும் முன்விவாகஞ்செய்தவனையே யடைந்தால் அவனை புநர்விவாகமந்திரத்தால் கலியாணஞ்செய்துகொள்ளலாமென்று தாற்பரியம்சொல்லுகிருர்கள்.

௧௭௭—ஒருசிறுவன் தாய்தந்தையிறந்துபோயாவது, அல்லது அவர்களால் காரணமின்றி நீக்கப்பட்டவஞயாவது,தானுகவேயொ

ருவனை புத்திரனாகவந்தடைந்தால் அவனைச் சுயந்தத்தனென்று சொல்லுகிறார்கள்.

௧௭௮—பிராம்மணன் தன்னால்விவாகஞ்செய்யப்பட்ட சூத்திரமனையாளிடத்தில் காமத்தினால் உண்டுபண்ணினபிள்ளையானவன்செய்கிற சிரார்த்தகாரியங்கள் பரலோகத்துக்கு உபயோகமாகாததால் உயிரோடிருந்தாலும் பிணத்தோடு சரியாகச் சொல்லப்படுகிறான் ஆதலால் அவனை பாரசவபுத்திரனென்று சொல்லுகிறார்கள்.இவன் தான் முன்பு சௌத்திரனென்று சொல்லப்பட்டவன்.

௧௭௯—சூத்திரனுக்கு- தன்தாசி-அல்லது வேலைக்காரன்மனைவி இவர்களிடத்தில்பிறந்த புத்திரர்கள் தந்தையி னநுமதிபெற்றிருந்தால்அவன் சொந்தமனையாளுக்குப்பிறந்த புத்திரர்களோடு பாகத்தையடையலாம்.இது தருமமானயேற்பாடு நடந்தும்வருகிறது.

௧௮௦—ஔரசனில்லாதகாலத்தில் அவன்செய்யவேண்டிய சிரார்த்தமுதலியவும் குலமுமழிந்துபோகிறபடியால் மற்ற பதினொருபுத்திரர்களையும் புத்திரனென்றே பெரியோர்களான ருஷிகள் சொல்லுகிறார்கள்.

௧௮௧—க்ஷேத்திரஜன்முதலிய பதினொருபிள்ளைகளும் ஔரசனிருக்கையில் சிரார்த்தமுதலியகாரியத்தைச்செய்வதற்கு யோக்கியாளாகமாட்டார்கள்.தங்களையுண்டுபண்ணினவனையே யடையவேண்டியவர்கள். பௌநர்ப்பவன் - சௌத்திரன்-இவ்விருவரும்-அந்நியராலுண்டுபண்ணப்படாமலிருந்தாலும் வைதிககாரியத்துக்கு உதவமாட்டார்கள் என்று இந்த மொத்தமாய் பதினொருபுத்திராளென்றுசொல்லப்பட்டது.

௧௮௨—ஒருதாய் தந்தைகளிடத்தில் பிறந்த அநேகஞ் சகோதரர்களுக்குள் ஒருவனுக்குப் புத்திரனிருந்தாலும் அப்புத்திரனாலே

அனைவரும் புத்திரனுடையவர்களென்று மநு சொல்லியிருக்கிறார் ஆனால் ஒருவனுக்கு புத்திரன்-மனையாள்-பெண்-தந்தை-தாய்- உடன்பிறந்த பிராதா-இவர்களில்லாதபோது தான் அந்தபிராதாவின் புத்திரனுக்கு கர்மத்திற்கும்,பொருளுக்கும், அதிகாரமுண்டென்று சாஸ்திரத்தில் சொல்லியிருந்தாலும் சந்ததிக்கு அழிவுவராததால் அவனிருக்கையில் க்ஷேத்திரஜன்முதலியமைந்தனை விருப்பபடாதென்னுங் கருத்தைப்பற்றி இந்தச்சுலோகம் விதிக்கப்பட்டது

௧அ௩—பின்னும்ஒருவனால் விவாகஞ்செய்யப்பட்ட அநேகமனைவிகளுக்குள் ஒருமனையாளுக்குப் புத்திரனிருந்தாலும் அந்தப் புத்திரனால் அனைவரும்புத்திரனை உடையவர்களென்று மநுசொல்லியிருக்கிறார். இங்கு மேற்சொல்லும்முறையேகாண்க.

௧அ௪—ஔரஸன்முதலிய உயர்ந்தபுத்திரரில்லாவிடில்பின்சொன்ன புத்திரர்கள் தந்தையின்பொருளை எடுத்துக்கொள்ளலாம். பௌநற்பவன்முதலியவர்கள் வெகுபேர்களிருந்தால் அனைவரும் சரியாகப்பகுத்துக்கொள்க.

௧அ௫—தகப்பனுக்கு ஔரசனில்லாமல் க்ஷேத்திரஜன்முதலிய புத்திரர்களிருக்கும்போது அவனுடையபொருளை அவன் தகப்பனும் உடன்பிறந்தவனும் எடுத்துக்கொள்ளக்கூடாது. க்ஷேத்திரஜன்முதலிய புத்திரர்களும் மனைவி-பெண் - இவர்களுமில்லாவிடில் அந்தப்பொருளை தந்தையும்,அவனில்லாவிடில் சகோதரரும் எடுத்துக்கொள்க.

௧அ௬—புத்திரர்கள் மூன்றுபெயரான தன்னுடையதந்தை-பாட்டன்-இரண்டாம்பாட்டன்-இவர்களுக்கு தருப்பணம் பிண்டதானமுதலியவைசெய்யவேண்டியவர்களாகையால் அந்தமூவருடைய

பொருளுக்கும் க்ஷேத்திரஜன்முதலியபுத்திரர்களும் உரியவர்களாகிறார்கள். அவர்களிருக்க மற்றவர்களுரியரல்லர்.

௬௭—புத்திரசந்ததியில்லாதவன் ஆஸ்திக்கு தௌஹித்திரனும்-அவனில்லாவிடில் மனையாளும்-அவளில்லாவிடில் புத்திரியும் அவளில்லாவிடில் தந்தையும்-அவனில்லாவிடில் தாயும்-அவளில்லாவிடில் சகோதரர்களும்-அவர்களில்லாவிடில் சகோதரர்புத்திரர்களும்-அவர்களில்லாவிடில் தந்தையின்தாயாகிய பாட்டியும் அவளில்லாவிடில் பின்னேதர பிராதருசந்ததியும் - அது இல்லாவிடில் சபிண்டர்களும் அவர்களில்லாவிடில் ஸோதகர்களும் அவர்களில்லாவிடில் அம்மான்முதலிய பந்துக்களும் அவர்களில்லாவிடில் ஆசாரியனும் அவனில்லாவிடில் சிஷ்னும் அவனில்லாவிடில் கூட ஓதினவனும் அவனில்லாவிடில் அரசனும் முறையேகொள்க.

௧௮௮—ஆனால்பிராமணனுக்கு கூடஓதினவனாயில் சொல்லப்பட்டவர்களனைவருமில்லாவிடில் அவன்பொருளை மூன்றுவேதமோதினவர்களாயும்,உள்ளும்புறமும்பரிசுத்தராயும் பொறுமையுள்ளவர்களாயுமிருக்கிறபிராமணர்கள் எடுத்துக்கொள்க.அதனால் இறந்துபோனவனுக்கு சிரார்த்தமுதலிய அறம்குறையாது.

௧௮௯—ஏனென்றால் பொருளுக்குரியவர்களான மேற்சொன்னயாவருமில்லாவிடில் பிராமணன்பொருளைமாத்திரம் அரசன்தானெடுத்துக்கொள்ளாமல் பிராமணர்களுக்குத் தானஞ்செய்யவேண்டுமென்று சாஸ்திரமிருப்பதால் மேற்சொல்லியபடி குணமுள்ளபிராமணனில்லாவிட்டாலும் எந்தபிராமணனுக்காவதுகொடுத்துவிடுக. மற்றவருணத்தார்பொருளை அரசனெடுத்துக்கொள்க.

௧௯0—கணவன் புத்திர னில்லாமலிறந்துபோனால் மனையாள்

கணவன்கோத்திரமுள்ள ஒருபுருஷனிடத்தில் விதிப்படிபுத்திரனை ப்பெற்றுக்கொண்டு அப்புத்திரனுக்கு கணவன்சம்பாதித்த பொரு ளைக்கொடுத்துவிடவேண்டியது.

கசுக—புத்திரன்பிறந்தபின் கணவனிறந்து பின்பு அந்தம னையாள் மற்றொருவனிடத்திலொருபிள்ளையைப் பெற்றுக்கொண் டால் அவ்விரண்டுபுத்திராளும் தன்றன்பிதாவின் ஆஸ்தியை எடுத் துக்கொள்ளவேண்டியதேயல்லது இரண்டாஸ்த்தியையுஞ் சேர்த் து பிரித்துக்கொள்ளக்கூடாது.

## சீதநம்.

கசுஉ—தாயிறந்தபின் அவள்பொருளை அவள் வயிற்றிற்பிறந்த புத்திரர்களும் கலியாணஞ்செய்யப்படாத பெண்களும் சரியாக ப்பகுத்துக்கொள்ளவேண்டியது. கலியாணஞ்செய்தபெண்களுக் கு கொஞ்சம்பொருள் மரியாதையாகக்கொடுக்கவேண்டியது.

கசுங—அவள்பெண்களுக்குப்பிறந்த கலியாணஞ் செய்யப்ப டாத தௌஹித்திரிகளுக்கும் அன்பைமுன்னிட்டு பாட்டியின் பொருளில் கொஞ்சங்கொடுக்கவேண்டியது.

கசுச—பெண்ணைக்கலியாணஞ்செய்துகொடுக்கும்போது தந் தைமுதலானவரால் அக்கினிமுன்பாகக்கொடுக்கப்பட்டபொருளெ ன்றும் அவள்கணவன்வீட்டுக்குப்போகும்போது தந்தைகொடுத் தபொருளென்றும் கணவன் அன்பினுல் கொடுத்தபொருளென்று ம் பிராதாவினுல் ஒருசுபகாரியத்தில் கொடுக்கப்பட்ட பொருளெ ன்றும் தாய்கொடுத்தபொருளென்றும் மற்றுமொருசமயத்தில் ச ந்தோஷித்தால் தந்தைமுதலிய சுற்றத்தாரால் கொடுத்தபொரு ளென்றும் சீதநம் அறுவகைப்படும்.

௧௯௫—மேற்சொன்ன அறுவகைச்சீதநப்பொருளையும் கலியாணமானபின்பு அன்போடுகணவன்சுற்றத்தாரோனும் தந்தைசுற்றத்தாரோனும் கொடுத்தபொருளையும் கணவன் அன்பினால்கொடுத்தபொருளையும் தாயிறந்தபின் தந்தையிருந்தபோதிலும் அவள்மைந்தரும் கலியாணமாகாத பெண்களும் எடுத்துக்கொள்ள வேண்டியது.

௧௯௬—பிராம்மம்-தெய்வம்- ஆருடம்-காந்தருவம்-பிராசாபத்தியம்-இவ்வைந்து விவாகத்தினாலும் கலியாணஞ்செய்துகொண்ட மனைவியின் அறுவகைச்சீதநப்பொருளை அவளிறந்தபின் அவளுக்குப்பிள்ளைபெண்ணில்லாவிடில் கணவனேயெடுத்துக்கொள்க.

௧௯௭—ஆசுரம்-இராக்கதம்-பைசாசம்-இம்மூன்றுவிவாகத்தினாலும் கலியாணஞ்செய்யப்பட்ட ஸ்திரீகளடைந்த அறுவகைச்சீதநப்பொருளை அவளுக்குப்பிள்ளைபெண்ணில்லாவிடில் அவளிறந்தபின் அவள்தாய்தந்தை எடுத்துக்கொள்க.

௧௯௮—பிராமணன்இரண்டுமூன்று ஜாதியில்விவாகஞ் செய்திருந்தால்அவர்களுக்குள்ளே-பெண்-பிள்ளை-கணவன்-இல்லாதமனைவியின் சீதநப்பொருளை பிராமணஜாதியான சக்களத்தியின்பெண்கள் எடுத்துக்கொள்க. அவர்களில்லாவிட்டால் அவள்புத்திரர்களெடுத்துக்கொள்க.

௧௯௯—அநேகம்பிராதாக்களுக்கு பொதுவாகிய குடும்பதநத்தை எடுத்து மாதர்கள்தங்களுக்கு ஆபரணமுதலியவற்றைவாங்கிக்கொள்ளக்கூடாது. கணவனுத்தரவின்றி அவன்பொருளையும் தாங்களுபயோகப்படுத்திக்கொள்ளக்கூடாது அப்படி எடுத்திருந்தாலது சீதநமாகாது.

௨00—கணவனிருக்கும்போது மனைவிகளணிந்திருந்த பூஷண

ங்களை அவனிறந்தபின் அவன்சகோதரர்கள் பிரித்துக்கொள்ளக் கூடாது பிரித்துக்கொண்டால் பதிதாளாகிறார்கள்.

௨௦௧—பேடி-பதிதன்-பிறவிக்குருடன்-பிறவிச்செவிடன்-பித்தன்-மூடன்-ஊமையன்-நொண்டிமுதலிய மற்றவர்களும் பங்குக்குரியரல்லர்.

௨௦௨—ஆனால்மேற் சொல்லப்பட்டயாவருக்கும் அவர்களிறக்குமளவும் அந்நவஸ்த்திரத்துக்குக்கொடுக்க இல்லாவிடில்பாபிகளாகிறார்கள்.

௨௦௩—ஒருக்கால் அவர்கள்விவாகத்தில் விருப்பங்கொண்டு விவாகஞ்செய்துகொண்டால் அந்தஸ்திரீகளிடத்தில் மற்றொருவன் விதிப்படிபிள்ளையுண்டுபண்ணினாலும் தானாக உண்டுபண்ணினாலும் அல்லது தத்தன்முதலியபிள்ளையைவைத்துக்கொண்டாலும் சரியாகப்பாகங்கொடுக்க.

௨௦௪—தகப்பனிறந்தபின் மூத்தவன் தன்சாமர்த்தியத்தால் யாதாவதொருபொருள் சம்பாதித்தால் அதைஅப்போது கல்வியை அப்பியாசித்துக் கொண்டிருந்ததம்பிகளுக்கு பகுத்துக்கொடுக்க மற்றவர்களுக்குக்கொடுக்கவேண்டியதில்லை.

௨௦௫—பகுத்துக்கொள்ளுகிறதற்குமுன்னாவது-பின்னாவது-பிராதாக்களனைவரும் சேர்ந்து பயிர்-வியாபாரம்-இவைகளால் சம்பாதித்த ஸ்வார்ச்சிதப்பொருளை எடுகூறில்லாமற்பகுத்துக்கொள்க இதில்சந்தேகப்படவேண்டாம்.

௨௦௬—கல்வியினால்பிரஸங்கஞ்செய்து சம்பாதித்தபொருளையும், தோழமையினால் சம்பாதித்தபொருளையும், கலியாணத்தில் மாமனார்முதலியவர்களால் கொடுக்கப்பட்டபொருளையும், மற்றும் யாவராலேனும் மரியாதையாகக்கொடுத்தபொருளையும், அவரவர்களேயெடுத்துக் கொள்வதேயன்றிப் பகுத்துக் கொள்ளக்கூடாது

௨௦எ—அநேகம்பிராதாக்களுக்குள் ஒருவன் உத்தியோகமுதலியவற்றல் சம்பாதிக்கத்திறமுள்ளவனுய் பிதாவின்பொருள் வேண்டியதில்லையென்றல் அவனுக்கேதேனுஞ் சிறிதுகொடுத்து அவனைவேருகவைக்கவேண்டியது. இல்லாவிடில் அவன் மைந்தன்முதலியவர் காலாந்தரத்தில் வழக்குக்குவருவார்கள்.

௨௦அ—தகப்பன்பொருளுக்கு விரோதமின்றி தான் பிரயாசப்பட்டு ஒருபொருளை சம்பாதித்திருந்தால் அதைத்தன்பிராதாக்களுக்கு இஷ்டமிருந்தாற்கொடுக்கலாம் இல்லாவிடில் வேண்டியதில்லை.

௨௦கூ—தந்தைக்குச் சாமர்த்தியமில்லாமையால் ஒருவனலபகரிக்கப்பட்டதந்தையின்பொருளை புத்திரர்களில் ஒருவன் தன்சாமர்த்தியத்தாலடைந்தால் அது சுவார்ச்சிதமாகையால் அவனுக்கு மநமில்லாவிடில் அனைவரும்பகுத்துக்கொள்ளக்கூடாது.

௨௧௦—பிராதாக்கள் பாகஞ்செய்துகொண்டபின் மறுபடியுங் கூடியிருந்து சிலகாலங்கழித்தபின் பிரித்துக்கொண்டால் அனைவரும் எடுகூறில்லாமலே பகுத்துக்கொள்க.

௨௧௧—பிராதாக்க ளிவ்விதமாகப் பகுத்துக்கொள்ளும்போது அவர்களில் மூத்தவனேனும் இளையவனேனும்-இறந்துபோனலுமாய், தேசாந்தரம்போனலும்,சந்நியாசம்புகுந்தாலும் அவன்பங்கு அழியமாட்டாது பின்னென்னவெனில்.

௨௧௨—அவனுக்கு-புத்திரன்-மனையாள்-தந்தை-தாய் - இவர்கள் முறையாகவில்லாவிடில் கூடியிருந்த சோதரப்பிராதாக்களும், அவர்களில்லாவிடில் சகோதரிகளும், அவர்களில்லாவிடில் பின்னேதரப்பிராதாக்களும் முறையாகப் பகுத்துக்கொள்க.

௨௧௩—பொருளாசையால் இளையவர்களை வஞ்சனைசெய்கிற

மூத்தவனுக்கு மூத்தவனென்னு மரியாதையும்-எடுகூறும் கிடைக்கமாட்டாது அரசனும் அவனைத்தண்டிக்க.

௨௧௪—சூதாடுகிறவர் வேசிவீட்டுக்குப்போகிறவர் இவ்விதது ஷ்டநடைகளையுடையபிராதாக்களும் பங்குக்குரியவரல்லர், மூத்தவன் தன்வசமாய் தந்தையின்பொருளிருக்கும்போது அதனால்-தனக்கோராஸ்தியைச் சம்பாதித்துக்கொள்ளக்கூடாது.

## பிதாவிருக்கையிற்பங்கிடும்வகை.

௨௧௫—விபாகத்திற்குமுன் பிராதாக்களனைவரும் வெளியில்சஞ்சரித்துப் பொருள்சம்பாதித்தால் அனைவரும் எடுகூறின்றி சரியாகப்பகுத்துக்கொள்ளும்படி தந்தையானவன் ஏற்படுத்த வேண்டியது.

௨௧௬—பிதா மைந்தருடன் பகுத்துக்கொண்டபின் மறுபடி அவனுக்கொரு பிள்ளைபிறந்தால் அந்தப்பிள்ளை அந்தப்பிதா தனக்காக வைத்துக்கொண்டிருந்தபொருளை எடுத்துக்கொள்க. அல்லது பிரித்துக்கொண்டவர்கள் தகப்பனிடத்தில் கூடியிருந்தால் அவர்களோடு இவனுஞ் சரியாகப்பகுத்துக்கொள்க.

௨௧௭—விபாகத்திற்குப்பின் பிறந்தபிள்ளையானவன் பிள்ளையில்லாமலிறந்துபோனால் அவன்பொருளை அவன்தந்தையும், அவனில்லாவிடில் தாயும், அவளில்லாவிடில் தகப்பனைப்பெற்றபாட்டியும் எடுத்துக்கொள்ளவேண்டியது.

௨௧௮—கடனையும், பொருளையும், முறைப்படிபகுத்துக்கொண்டபின் மறுபடிகடனாவது, பொருளாவது இருக்கிறதாகக்காலாந்திரத்தில்தெரிந்தால் அதையுஞ் சரியாகப்பகுத்துக்கொள்க அதற்கு எடுகூறில்லை.

௨௧௯—சொற்பவிலையுள்ள வஸ்திரம்-வாகநம்-சமைத்த அந்நம் முதலியவை-கிணறு-வேலைக்காறி-மந்திரி-புரோகிதன்-தெருக்குறடு

வழிநடை-இவைகளை-பகுத்துக்கொள்ளக்கூடாதென்று பெரியோர்கள்சொல்லுகிறார்கள். அது அது யாராருடைய அநுபவத்தில் இருக்கிறதோ அவனவனே அதையதை யநுபவிக்கவேண்டியது.

௨௨0—இதுவரையில் மைந்தர்கள் செய்துகொள்ளவேண்டிய தாயபாகத்தையும்-க்ஷேத்திரஜன்முதலிய புத்திரர்கள்செய்யவேண்டிய சிரார்த்தவிதியையுஞ்சொன்னேன். இனிச்சூதாடுகிறவிதியைக் கேளுங்கள்.

## சூது.

௨௨௧—மேற்சொல்லும் லக்ஷணமுள்ள-தியூதம் - சமாஹ்வயம் இவ்விரண்டையும் அரசன் தன்றேயத்திலிராம லிக்கவேண்டியது. இவ்விரண்டுதோஷங்களும் அரசனுக்கு அழிவையுண்டுபண்ணும்.

௨௨௨—மேற்சொல்லியவிரண்டும் வெளிப்பட்ட திருட்டாகையால் அதையடக்குவதில் அரசன் மிகுந்த முயற்சிசெய்யவேண்டியது.

௨௨௩—கவறு-சதுரங்கமுதலியவற்றாலாடுதல்- தியூதமென்றும்- ஆடு-கோழி - கடா-மல்லன் - முதலியவற்றால் பந்தயம்வைத்துப் போர்பொருத்துவித்தல் சமாஹ்வயமென்றுஞ் சொல்லப்படுகின்றன.

௨௨௪—இவ்விரண்டையும் செய்கிறவனையும், செய்விப்பவனையும் எக்கியோபவீதமுதலிய பிராமணர்களின் அடையாளத்தைத் தரிக்கிற சூத்திரனையும்,அரசன் அங்கச்சேதமுதலியசிக்ஷைசெய்யவேண்டியது.

௨௨௫—சூதாடுகிறவன்-கூத்தாடி-பாடகன் - கொடியநடையுள்ளவன்- வேதஸ்மிருதிகளை நிந்திப்பவன்- விரதாநுஷ்டாநமில்லாதவன்-ஆபத்தில்லாதபோது தன்ஜாதித்தொழிலைவிட்டுமற்றொருஜாதித்

தொழிலைச் செய்பவன் - குடியன் இவர்களை அரசன் பட்டணத்தைவிட்டோட்டவேண்டியது.

௨௨௬—திருடரான மேற்சொல்லிய சூதர்முதலியவர்கள் பட்டணத்திலிருந்தால் வஞ்சனைமுதலியகாரியத்தினால் நல்லொழுக்கமுள்ளவர்களை பீடிப்பார்கள்.

௨௨௭—இந்தச்சூதானது முன்காலங்களிலும் ஒருவர்க்கொருவர் அதிகவிரோதத்தையுண்டுபண்ணிற்று. ஆகையால் தெரிந்தவன் விளையாட்டுக்கும் அதை யாடக்கூடாது.

௨௨௮—இரகசியமாகவாவது,வெளிப்பட்டாவது, எவனிந்தச்சூதாடுகிறானோ அவனுக்கு அரசன் தன்னிஷ்டப்படி தண்டம்விதிக்கலாம்.

௨௨௯—அரசனால் விதிக்கப்பட்ட தண்டப்பொருளைக்கொடுக்கவகையில்லாத க்ஷத்திரிய வைசிய-சூத்திரர்கள்- அதற்குத்தக்கவேலைசெய்தாவது கழிக்க. பிராமணன்மாத்திரம் மெல்லமெல்ல சம்பாதித்துக்கொடுக்க.

௨௩0—மாதர்-சிறியவன்-கிழவன்-பித்தன் -வறுமைப்படுகிறவன் பாபப்பிணியினன்-இவர்கள்-சூதாடினால் -சாட்டி - மரப்பட்டை-கயறு-பிரம்பு-இவைகளால் அடித்தலையுங் கட்டுதலையும் தண்டமாகவிதிக்க.

## பொதுவானசிலதண்டங்கள்.

௨௩௧—அரசனால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் கக்ஷிக்காரர்களிடத்தில் பொருளைவாங்கிக்கொண்டு வழக்கைக்கெடுத்தால் அவர்களுடைய சகலபொருள்களையும் அரசன் கவர்க.

௨௩௨—பொய்சாஸநத்தை உண்டாக்குதல் அரசன்-மந்திரி-

நண்பின்ன் இவரையும்-அரண்-கோசம்-தண்டம்-இராச்சியம்-இவற்றையும்இகழ்தல்,மாதர்-சிறியவன்-பிராமணன்-இவர்களைக்கொல்லுதல்,தன்பகைவரிடத்திற்சேவித்தல், இவற்றைச்செய்பவர்களை அரசன் கொல்லவேண்டியது.

௨௫௩—கடன்கோடன்முதலியவிவகாரத்தில் நீதிக்காரனால் தருமப்படி தீர்க்கப்பட்டதையும்,குற்றவிஷயத்தில் விதிக்கப்பட்டதண்டத்தையும், காரணமின்றி அரசன்மாற்றக்கூடாது.

௨௫௪—மந்திரிகளேனும் நீதிக்காரனேனும் ஒருவழக்கை யொருவன் தாக்ஷண்ணியத்துக்காக அக்கிரமமாகத்தீர்ப்புச்செய்தால் அந்தத்தீர்ப்பை அரசனுடைத்து சரியானதீர்ப்புச்செய்து அவர்களுக்காயிரம்பணந்தண்டம்விதிக்க.

௨௫௫—பிரமஹத்திசெய்தவன் சுராபானஞ்செய்த பிராமணன் பிராமணன்பொன்னைத்திருடினவன் குருபத்தினியைப்புணர்ந்தவன் இந்தநான்குபேரையும் தனித்தனியே மஹாபாபிகளென்றறியவேண்டியது.

௨௫௬—இந்தநாலுபேர்களும் பிராயச்சித்தஞ்செய்துகொள்ளாவிடில் மேற்சொல்லுகிறபடி சரீரதண்டத்தையும், பொருள்தண்டத்தையும்,குற்றத்துக்குத்தக்கதாக அரசன் தருமமாக விதிக்கவேண்டியது.

௨௫௭—காச்சிய இருப்புச்சலாகையால் குருபத்தினியைப் புணர்ந்தவனெற்றியில் யோநியைப்போலவும், ஸுராபானஞ்செய்த துவிஜனெற்றியில் ஸுராத்துவஜத்தைப்போலவும், பிராமணன் பொன்னைத்திருடினவனெற்றியில் நாயின்காலைப்போலவும், பிரம்மஹத்திசெய்தவனெற்றியில் கவந்தபுருஷனைப்போலவும், ஒவ்வொருமுத்திரையை சாமளவுமிருக்கத்தக்கதாகப் போடவேண்டியது.

உ௩அ—அந்தமஹாபாபிகளுக்கு யாரும்பந்தியில் அந்நம்போ டக்கூடாது. எக்கியயாகாதிசெய்விக்கவும், வேதமோதுவிக்கவும் கலியாணமுதலியசம்பந்தஞ்செய்யவும் கூடாது. அவர்களொருக ருமத்திற்குந் தகாதவர்களரகையால்தீநாளாய் பூமியெங்குஞ்சஞ் ரிக்கக்கடவர்கள்.

உ௩௯—மேற்சொன்னபடிஅரசனால் அடையாளம்போடப்ப ட்ட மஹாபாபிகளை அவர்களின்பங்காளிகளும் அம்மான்முதலி யபந்துக்களும் தாக்ஷிண்ணியமின்றி நீக்கவேண்டியது. அவர்களி டத்தில் தயவுசெய்யவும் அவர்களை வந்தநஞ்செய்யவுங்கூடாது. இது மநுவின்கட்டளை.

உ௪௦—இந்தமஹாபாவஞ்செய்த துவிஜர்கள் சாஸ்திரப்படி அந்தந்தப்பாவத்திற்குப்பிராயச் சித்தஞ் செய்துகொண்டாராகில் அவர்களினெற்றியிலரசன் முத்திரைபோடக்கூடாது. ஆயிரம்பண மாத்திரம் தண்டம்விதிக்க.

உ௪௧—இந்தமஹாபாதகங்களை குணமுள்ளபிராமணன் தெரி யாமற்செய்தால் அவன்பிராயச்சித்தஞ் செய்துகொண்டபிறகு அவனுக்கரசன் ஐந்நூறுபணந்தண்டம்விதிக்க. அறிந்துசெய்தால் தேசத்தினின்றும் அவன்பொருளோடுதுரத்துக.

உ௪௨—பிராமணன்நீங்கலாக குணமுள்ளமற்றமூன்றுவருணத் தாரும் மஹாபாதகங்களை அறியாமற்செய்தால் அவர்களதுஎல்லா ப்பொருளின்கவர்ச்சியை தண்டமாகவிதிக்க. அறிந்துசெய்தால் எல்லாப்பொருளையும்கவர்ந்து ஊரைவிட்டுந்துரத்துக.சிலர் அறி ந்துசெய்ததற்கு கொலைத்தண்டமென்றுசொல்லுகிறார்கள்.

உ௪௩—தருமமறிந்தவரசன் மஹாபாபிகளுக்கு விதித்ததண்ட ப்பொருளையும் அவர்களிடத்தில் தானுகக் கவர்ந்தபொருளையும்

தானெடுத்துக்கொள்ளக்கூடாது.பொருளாசையால் எடுத்துக்கொண்டால் அவர்களின்பாபத்தைத் தானடைவான்.

௨௪௪—அந்தப்பொருளை வருணதேவனுக்குத் திருப்தியாக தண்ணீரிலாவது போடவேண்டியது. அல்லது வேதவேதாந்தங்களையோதிய நல்லொழுக்கமுள்ள பிராமணனுக்கேனுங் கொடுக்கவேண்டியது.

௨௪௫—வருணன் குற்றஞ்செய்தஅரசனுக்குத் தண்டம்விதிக்கிறவனாகையாலும் வேதமோதினபிராமணன் சகலலோகத்திற்கும் பிராயச்சித்த முதலானவற்றைவிதித்தலினால் பிரபுவாகையாலும் அவ்விருவரும் மஹாபாபிகளின்தண்டப்பொருளுக்கு டிஜமானாகிறார்கள்.

௨௪௬—எந்ததேசத்தில் அரசன் மேற்சொன்ன மஹாபாபிகளின்பொருளை தான் எடுத்துக்கொள்ளவில்லையோ அந்ததேசத்தில் பிரஜைகள் பிறக்கத்தக்ககாலம்வந்தபின் பிறக்கிறார்கள் நெடுங்காலமும் ஜீவிக்கிறார்கள் அற்பாயுள் நேரிடுகிறதில்லை.

௨௪௭—பின்னும்பயிர்களும் வைசியருக்கு நல்லபலனைத்தரும் சிசுக்களுமிறக்காது அங்கஹீநமாயொரு ஜெந்துவும்பிறக்காது.

௨௪௮—மதத்தினால் பிராமணன்பொருளைப் பிடுங்கிக்கொண்டு அவனை அடித்துத் துன்பப்படுத்துகிற சூத்திரனை பயங்கரமான சித்திரவதைசெய்துகொல்லவேண்டியது.

௨௪௯—அரசன்கொல்லத்தகாதவனைக்கொன்றால் எவ்வளவுதோஷமுண்டாகுமோ அவ்வளவுதோஷம் கொல்லவேண்டியவனைவிட்டாலும் உண்டாகும். சாஸ்திரப்படிதண்டித்தால் தருமமேயுண்டாகும்.

௨௫௦—இதுவரையில் கடன்கோடன்முதலிய பதினெட்டுவழக்

ளாலும் ஒருவருக்கொருவர் வழக்காடுகிற வாதி -பிரதிவாதிகளுக்கு செய்யவேண்டிய தீர்மானம்விரிவாச்சொல்லிமுடிந்தது.

## ஒழிபு.

உ௫௧—இவ்விதமாத்தருமமாகச்செங்கோல்செலுத்துகிற அரசன் தானடையாத இராச்சியத்தையடையமுயற்சிசெய்யவேண்டியது.அடைந்தவிராச்சியத்தை பரிபாலநஞ்செய்யவேண்டியது.

உ௫உ—அரசன் காக்கப்பட்டஇராச்சியத்தில் எழாவதத்தியாயத்தில்சொல்லியபடி கோட்டைமுதலியவற்றை யேற்படுத்திக்கொண்டு துஷ்டர்களையடக்குவதில் முயற்சியுள்ளவனாக விருக்கவேண்டியது.

உ௫௩—துஷ்டநிக்கிரகம் - சிஷ்டபரிபாலநம் இவைகளைச்செய்துகொண்டு பிரஜைகளைக்காப்பாற்றுகிற அரசர்கள் சுவர்க்கத்தையடைகிறார்கள்.

உ௫௪—திருடன்முதலிய துஷ்டர்களை நிக்கிரகஞ்செய்யாமல் தீர்வையைமாத்திரம் வாங்கிக்கொள்ளுகிற அரசனை உலகத்தார்பகைப்பார்கள். அவன்வேறொருகருமத்தினால் சுவர்க்கத்திற்கு உபயோகமாகச்செய்திருக்கிற புண்ணியமும் அழியும்.

உ௫௫—எந்தவரசன் புஜபலாக்கிரமத்தினால் ஆளப்பட்டதேசமானது பயமற்றிருக்கிறதோ அந்தத்தேசம் தண்ணீர்வார்த்துவளர்த்தமரம்போல்செழிக்கும்.

உ௫௬—தெரிந்துந்தெரியாமலும் அயலான்பொருளை அபகரிக்கிற இரண்டுவகைப்பட்ட திருடர்களை அரசன் வேவுகாரராகிற கண்ணினாற்பார்த்தறியவேண்டியது.

உ௫௭—அவர்களுக்குள் தப்புத்தராசுவைத்துக்கொண்டு பலபலவியாபாரஞ்செய்கிறவர்கள் வெளிப்பட்டதிருடர்கள் காட்டில்

மறைந்துவாசஞ்செய்துகொண்டு திருடுகிறவேடர் முதலியவர்கள் வெளிப்படாததிருடர்கள்.

௨௫௮—பரிதாநம்வாங்குகிறவர்கள் உனக்குஒருகிரஹம் போராதிருக்கிறது அதற்கு இந்ததாநம்செய்யவேண்டுமென்று இதுமுதலிய ஒருமுகாந்திரத்தினல் ஒருவனைப்பயப்படுத்தி பொருளைவாங்குகிறவர்கள்-பொன்-ஆபரணம்-முதலானவைகளை இரவலாகவாங்கிக்கொண்டுபோய் அதில் தாம்பரமுதலியவை கலக்கிறவர்கள் - பொருள்-பிள்ளை-நமக்கு இருக்கிறதென்றுமமதையடைகிறவர்கள் பாபத்தைச்செய்துவிட்டு மேலுக்கு நல்லவேஷம்தரித்து இருப்பவர்கள் கையில் ரேகையைப்பார்த்து நன்மைதிமையைச் சொல்லி பொருள்வாங்குகிறவர்கள்.

௨௫௯—யானையைப்பழக்கிப் பிழைக்கிறவர்கள்-தக்கபடிமருந்துகொடுத்து சிகிச்சைசெய்யாதவயித்தியர்கள் சித்திரவேலைசெய்துபிழைக்கிறவர்கள் ஒருவனை மயக்கடிக்கிறவேசிகள்.

௨௬0—இவர்முதலானவர்களை வெளிப்பட்ட திருடரென்றும் நல்லோர்வேடங்கொண்டிருக்கிற ஈநஜாதிகளை வெளிப்படாததிருடர்களென்றும் நன்றாகவறிக.

௨௬௧—மாறுவேடம்பூண்டு அந்தயாபாரி முதலானவர்களின் தொழிலைச்செய்கிறவர்போல் அவர்களின் திருட்டையறியத்தக்கவர்களான நல்லநடத்தையுள்ளவேவுகாரரால் வெளிப்பட்டதிருடர்களின்குற்றங்களையறிந்து அவர்களை அரசன் அடக்கவேண்டியது.

௨௬௨—இருவகைப்பட்ட அந்தத்திருடர்களின் குற்றத்திற்கு தான்செய்யுந்தண்டனையை பட்டணமெங்கும் பிரசித்தஞ்செய்து வைத்து குற்றத்திற்குத்தகுதியானதண்டனையை சரியாக விதிக்க வேண்டும்,

உ௬௩—பயமில்லாமல் நல்லவரைப்போல் பூமியிற்சஞ்சரிக்கிற பாபிகளானதிருடர்களை தண்டோபாயமின்றி அடக்கிறது பிரயாசம். ஆதலால் தக்கபடி தண்டிக்க.

உ௬௪—†சபை-தண்ணீர்ப்பந்தல்-பண்ணியாரக்கடை - வேசி வீடு-கள்ளுக்கடை-அந்நசத்திரம்-நாற்சந்திவீதி- ஆல்முதலிய பெரியமரத்தினடி-வெகுஜநநடக்குமிடம்.

உ௬௫—அழிந்ததோட்டம்-காடு-தொழிலாளிகள் வேலைசெய்யுமிடம்-யாருமில்லாதவீடு-தோப்பு-நந்தவநம்.

உ௬௬—இந்தவிடங்களில் அரசன் திருடரைத் தகைந்துபிடிக்கிறநிமித்தம் சிலசைந்நியங்களை நிலையாகவேற்படுத்தி- சிலசைந்நியங்களை யிங்குமங்குஞ்சஞ்சரித்து மேற்பார்வைபார்க்கும்படி செய்வித்து வேவுகாரர்களைக்கொண்டும் பரிசோதிக்கவேண்டியது.

உ௬௭—ஏனென்றால் இவ்விடங்களில் பெரும்பாலும் திருடர் கள்குடிக்கவும்-அந்நம்-பலகாரம் வாங்கிச்சாப்பிடவும்- புணரவும் திருடியசொத்தைமாற்றவும் சஞ்சரிப்பார்கள். தனக்குச்சுவாதீநராயும் திருடரைவஞ்சிப்பதில் சாமர்த்தியமுள்ளவராயும் தந்திரவாதிகளாயும் இருக்கிற முன்திருடர்களைக்கொண்டு திருடர்களைக் கண்டுபிடித்து சிக்ஷிக்கவேண்டியது.

உ௬௮—அந்தமுன்திருடர்களும் மாறுவேடம்பூண்டுகொண்டு திருடர்களைக்கண்டுபிடித்து நீங்கள் எங்கள்வீட்டுக்கு வாருங்கள் பலகாரஞ்சாப்பிடலாமென்றும் அவடத்தில் எல்லாவிஷயத்திலும் சரியாகச் சோதிடஞ்சொல்லுகிறபிராமணனைக்காட்டுகிறோமென்றும் அநேகம்பேருடன் சண்டைசெய்யத்தக்க ஒருமல்லனைப்பா

---

† சபையென்பது-ஊரிலேனும் பட்டணத்திலேனும் வழக்கமாய் வெகுஜநம் கூட்டங்கூடுமிடம்.

ரிக்கலாமென்றும் சூதுசொல்லியழைத்துவந்து காவற்காரரிடத்தி லொப்புவிக்கவேண்டியது.

உசுகூ—சிலதிருடர்கள் முன் திருடர்களிடத்தில் பிடித்துக்கொடுத்துவிடுவனென்னுஞ் சந்தேகத்தினால் அவர்களுக்குச் சுவாதீநப்படாமலிருந்தால் அவர்கள் திருடர்தாமென்று அரசன்-அறிந்து திருடராகவிருந்தால் அவர்களைவலிமைசெய்து அவர்களோடு கூடியிருக்கும் சுற்றத்தாரோடுகொல்லவேண்டியது.

உஎ0—ஆனால் தருமவானான அரசன் பொருளைப்பறிப்பது உயிரைவதைப்பது இதுமுதலிய தடையமின்றி திருடனைக்கொல்லக்கூடாது. தடையமுண்டேல் அத்திருடனை யோசியாமற்கொல்லலாம்.

உஎக—கிராமத்தார்முதலியவர்கள் திருடரென்றுதெரிந்தும் அவர்களுக்குச் சோறிட்டாலும் வீட்டிலிடங்கொடுத்தாலும் சட்டி-பானை முதலியபாத்திரங்களைக்கொடுத்தாலும் அவர்களையுந்திருடனைப்போல் தண்டிக்கவேண்டும்.

உஎஉ—பட்டணத்தில் நியமிக்கப்பட்ட காவற்காரர்களும் எல்லைமுகில் நியமிக்கப்பட்ட சேனைகளும் திருடர்களுக்கொத்தாசைசெய்தால் அவர்களையும் திருடனைப்போல் தண்டிக்க.

உஎ௩—ஒருவருக்கு யாகாதி-தருமகாரியத்தைச் செய்துவைத்து அதனால்ஜீவிக்கிற அந்தணன் அதைச்செய்விக்காவிட்டால் அவனை அரசன் தண்டிக்கவேண்டியது.

உஎச—கிராமத்திலும் மார்க்கத்திலும் திருடரால் துன்பநேரிடும்போதும் கழனியில் விளைந்ததாநியத்தை திருடர் அபகரிக்கும்போதும், வெள்ளத்தால் ஏரிமுதலியவற்றில் அணையுடைந்தபோதும், பக்கத்திலிருப்பவர்கள் கூடுமானவரையில் சகாயஞ்செய்யா

விடில் அவர்களைப்பரிவாரத்தோடு ஊரைவிட்டுத் துரத்தவேண்டியது.

உ௭௫—அரசன் பொக்கிஷத்திலிருந்துபொருளைத் திருடுகிறவனாயும் அரசனுத்திரவிற்குப் பிரதிகூலமாகநடப்பவனாயும், அரசனுக்கும் அவன்எதிரிகளுக்கும் விரோதத்தையுண்டாக்கிறவர்களையும், குற்றத்துக்குத்தக்கபடி நாநாவிதமான கால்-கையறுத்தல்-நாவறுத்தல்முதலிய தண்டனைசெய்யவாவது-கொல்லவாவதுவேண்டியது.

உ௭௬—இரவில் பூட்டையுடைத்துத்திருடுகிறவனை கையிரண்டையும்வெட்டி கூரானகழுமரத்திலேற்றவேண்டியது.

உ௭௭—முடிச்சவிழ்ப்பவனுக்கு முதற்றடவையில் தர்ச்சநியம்-அங்குட்டமென்னும்-விரல்களை-அறுத்தலும். இரண்டாவதுசெய்கையில்-கைகாலிரண்டையுஞ் சேதித்தலும்.மூன்றுவதுசெய்கையில் வதைத்தலுந் தண்டமாம்.

உ௭௮—முடிச்சவிழ்க்குந் திருடனுடைய நடத்தையையறிந்தவர்கள் அவனுக்கு-நெருப்பு-சோறு-ஆயுதம்-இடம் - இவைகளைக் கொடுத்து அவனோடு உறவாடிக்கொண்டிருந்தால் அவர்களைத்திருடனைப்போல் அரசன்தண்டிக்க.

உ௭௯—வெகுஜநங்களுடைய ஸ்நாநபாநங்களுக்கு உபயோகமாகவிருக்கிற-ஏரி-குளம் - இவைகளையுடைத்தவனை ஜலத்திற்கட்டிப்போட்டாவது வேறுவிதமாயாவது கொல்லவேண்டியது. அல்லது அதை முன்போல செவ்வையாகக்கட்டிவிடுவானாகில் அவனுக்கு ஆயிரம்பணம் தண்டம்விதிக்க.

உ௮0 —அரசனுடைய-பொக்கிஷசாலை-ஆயுதசாலை- பெரிதான கோயில் இவைகளை யிடித்தவனுக்கும், இரத கஜ துரகங்களைத்

திருடினவனுக்கும்.அரசன் யோசியாமல் கொலைத்தண்டம்விதிக்க.

௨௲௧—ஜநங்களுக்குபயோகமாக வைத்திருக்கிற குளத்துநீரை கழனிக்குப்பாய்ச்சினவனுக்கும் அக்குளத்துக்கு தண்ணீர்வரும் வழியைத் தூர்த்தவனுக்கும் இருநூற்றைம்பதுபணந் தண்டம்விதிக்க.

௨௲௨—பிணிமுதலிய ஆபத்தில்லாதசமயத்தில் இராஜவீதியில் அல்லது வெகுஜநநடக்குந்தெருவில் மலோபாதைசெய்தவனுக்கு இரண்டு காருடாபணந்தண்டம்விதித்து அவனை அந்தமலத்தைச் சீக்கிரத்திலெடுக்கும்படிவிதிக்க.

௨௲௩—பிணியினன்-கிழவன்-கர்ப்பிணி- சிறுவன்-இவர்கள்-மேற்சொன்னவிடங்களில் மேற்சொன்னகுற்றங்களைச்செய்தால் ஏனிப்படிசெய்தீர்களென்று அவர்களைக்கண்டித்து அவர்களை அந்தமலத்தையெடுத்து சுத்திசெய்யும்படிவிதிக்க.இதுசாஸ்திரமரியாதை

௨௲௪—வயித்தியர்கள் மாடுமுதலியபசுக்கள் விஷயத்தில் தகாதமருந்துகொடுத்து பிணியைவிருத்திசெய்வித்தால் அவர்களுக்கு இருநூற்றைம்பது பணமும். அவ்விதமாகமனிதர் விஷயத்திற் செய்தால் ஐந்நூறுபணமும் தண்டம்விதிக்க.

௨௲௫—மரப்பாலம்-கற்பாலம்-கொடிமரம் - துவஜஸ்தம்பம்-யூபஸ்தம்பம்-தேவதாவிக்கிரகம் இவைகளை பின்னஞ்செய்தவனுக்கு ஐந்நூறுபணம் தண்டம்விதித்து பின்னஞ்செய்ததை முன்போல் செவ்வைப்படுத்தும்படி விதிக்க.

௨௲௬—ஒருவனுக்கு நல்லபொருளைக் கெட்டபொருளோடுகலந்து கொடுத்தவனுக்கும், ஒருவன் மாணிக்கம் முதலியவற்றை உடைத்தவனுக்கும், ஒருவன்முத்துமுதலியவற்றிற்கு தகாதவிடத்

தில் துவாரமிட்டவனுக்கும், இருநூற்றைம்பதுபணந் தண்டம்வி தித்துப் பொருட்காரனுக்குப் பொருளையுங்கொடுப்பிக்க.

௨௮௭—உயர்ந்தசரக்கின் விலைவாங்கிக்கொண்டு தாழ்ந்தசரக் கைக்கொடுத்தவனுக்கும்,ஒருசரக்கை ஒருவனுக்குயர்ந்தவிலையாயு ம், ஒருவனுக்குத் தாழ்ந்தவிலையாயும் கொடுத்தவனுக்கும் அப் பொருட்டொகைக்குத்தக்கபடி- இருநூற்றைம்பது அல்லது-ஐந் நூறுபணந்தண்டம்விதிக்க.

௨௮௮—குற்றவாளிகள் அனைவரையும்பார்த்து துக்கப்படும்ப டியாக இராஜமார்க்கத்தில் அடிக்கிற இடங்களையும்,சாவடிகளையும் ஏற்படுத்திவைக்கவேண்டியது.

௨௮௯—மதிலை-இடிப்பவன்-அகழைத்தூர்த்தவன்- கோட்டைவா சற்படியையிடித்தவன்-இவர்களை அரசன்-உடனே தன்னிராச்சிய த்தைவிட்டுத்துரத்தவேண்டியது.

௨௯0—ஒருவனைக்குறித்து மரணஹோமஞ்செய்யத்தொடங்கி னவனுக்கும்,பலபல பைசாசங்களையேவி குடும்பத்தைக்கலைக்க யத்தநித்தவனுக்கும் தாய்-தந்தை-கணவன்-இவர்களைக்கைவசப்ப டுத்துவதற்காக மருந்துகொடுப்பவருக்கும் அவர்களின் அச்செய் கையால்கெடுதிவராமலிருந்தால் இருநூறுபணந் தண்டம்விதிக்க கெடுதிநேரிட்டால் மரணபரியந்தமானதண்டமுண்டு.

௨௯௧—முளைக்கிறதற்கு உபயோகமாகாத நெல்லுமுதலியதானி யத்தை விதையென்றுசொல்லி விற்பவனுக்கும்,நல்லவிதையில் தா நியத்தைக்கலந்துவிற்கிறவனுக்கும், எல்லை அடையாளத்தைக் கெடு த்தவனுக்கும்- விகாரமாக காதுமுதலியவுறுப்புகளைச் சேதித்து கொலைசெய்வதையேதண்டமாகவிதிக்க.

௨௯௨—இடைக்குறைவாயும்,உரைக்குறைவாயும் மட்டப்பொ

ன்னைக்கலந்தும், மாறுபாடாய்விற்கிற தட்டான்-எல்லாத்திருடரை யும்விட அதிகபாபியாகையால் குற்றத்துக்குத்தக்கபடி கொஞ்ச மாவது முழுமைக்குமாவது அவனைக்கண்டங்கண்டமாக அரசன் வெட்டவேண்டியது.

உகரு—கலப்பை-கோடாலி-மண்வெட்டி-மருந்து-கத்திமுதலி ய-ஆயுதம்-இவைகளைத்திருடினவனுக்கு அவைகளுபயோகமாகுங் காலத்தையும் காரியத்தையும் யோசித்துப்பார்த்து அரசன்- தண் டப்விதிக்க.

உகச—அரசன்-மந்திரி-பட்டணம்-இராச்சியம் - பொக்கிஷம் சேனை- மித்திரன் - இவ்வேழுப்பிரகிருதிகளும் இராச்சியத்திற்கு- அங்கமாகும்.

உகடு—இவ்வேழங்கங்களுக்குள் பின்னங்கங்களைக்காட்டிலும், முன்னங்கங்களுக்குக் குறைவுவந்தால் அதிகவியசநமுண்டாகும் அதாவது மித்திரவியசநத்தைக்காட்டிலும் சேனையின்நாசம் கஷ்ட டம்-அதைக்காட்டிலும் பொக்கிஷநாசம் கஷ்டம்-இப்படியேமற் றவற்றையுங்காண்க.

உகசு—கோவாலத்தால் கட்டப்பட்டிருக்கிற சந்நியாசியின் திரிதண்டத்தில் எப்படி ஒருதண்டத்தைவிட ஒருதண்டம் மேன் மையையடையவில்லையோ அப்படிபோல் எழங்கங்களாற்காக்கப் பட்டிருக்கிற இராச்சியத்திற்கும் ஓரங்கமுயர்ந்தும் ஓரங்கந்தாழ்ந் தும் இருக்கிறதில்லை. அதாவது ஒன்றாலாகிறகாரியம் மற்றொன்றா லாகாதென்றுகருத்து.

உகஎ—அதனதன்காரியத்தில் அந்தந்த அங்கம் மேலாகவிருக் கிறது. அதாவது எந்தஅங்கத்தினால் எந்தக்காரியஞ் சாதிக்கப்படு மோ அந்தக்காரியத்தில் அந்தவங்கம் மேலானது.

௨௯அ—அரசன் -வேவுகாரர்களால் ஸேனைகளின் சந்தோஷந் தைரியம்-எண்ணம்-இவைகளையும் லோகத்தார்சொல்லிக்கொள்ளு கிற-தன்சக்த்தியையும்-எதிரியின் சக்த்தியையும் நாடோறும் அறி யவேண்டும்.

௨௯௯—சத்துருவுடன் போர்செய்வதிலுண்டான சகலவுபத்தி ரவங்களையும்-வியசநங்களையும் எதிரிக்கும்-தனக்கும்-நேரிடுகிற-லா பலோபத்தையும்-யோசித்து சந்திமுதலியகாரியங்களைத் துவக்க வேண்டியது.

௩00—அரசன்-யுத்தமுதலிய ஒருகாரியஞ்செய்து இளைப்பாறி யாமிமறுபடியும் அந்தக்காரியங்களைத்துவக்கவேண்டியது. ஏனெ ன்றால் உலகத்தில் ஒருகாரியஞ்செய்துகொண்டிருக்கிற புருஷனு க்குச் செல்வந் தானேவருகிறதல்லவா.

௩0௧—கிரதயுகம்-திரேதாயுகம்-துவாபரியுகம்-கலியுகம்-இந்தநா லும்-அரசன்-நடையினாலேயே-உண்டாகின்றன-ஆகையால்-அரச னே யுகமென்றுசொல்லப்படுகிறான்.

௩0௨—அதாவது அரசன்-அக்கியாநத்தாலும்- சோம்பலினாலு ம்-உலகத்தாரிட நியாய- அந்நியாயத்தைக் கண்டுபிடிக்காமலிருந் தால் கலியுகதருமமும்.நியாய அந்நியாயங்கள்தெரிந்தும்-சரியா ய் அதிகாரஞ்செய்யாவிட்டில் துவாபரியுகதருமமும்- நியாயவிசார ணையில்-முயற்சியுள்ளவனாகவிருந்தால் திரேதாயுகதருமமும்-சாஸ் திரப்படி காரியங்களை-தானுமநுஷ்டித்துப் பிரசைகளையும் அநு ஷ்டிக்கச்செய்தால் கிரதயுகதருமமும் நடக்கிறது.

௩0௩—இந்திரன்-சூரியன்-வாயு-யமன்-வருணன்-சந்திரன்-அக்கி நி-பிரிதிவி-இவர்களின்நடையை அநுசரித்து அரசன் - நடக்கவே ண்டும்.

௫௦௪—ஆவணிமுதல்-நாலுமாதம்வரையில் இந்திரன் மழையை யுண்டுபண்ணி ஜநங்களைச் சந்தோஷிப்பபடுத்துகிறதுபோல் அரசன்-தன்னிராச்சியத்திலிருக்கிற பிரஜைகளுக்கு அபீஷ்டத்தையுண்டுபண்ணுகிறது-இந்திரன்விரதம்.

௫௦௫—சூரியன்-மார்கழிமுதல் - எட்டுமாதம்வரையில் தன்னுடையகிரணங்களாலே-அதிகமாகத்தபியாமல்பூமியிலிருக்கிற ஜலத்தைக் கொஞ்சங்கொஞ்சமாக இழுக்கிறதுபோல் அரசன் ஜநங்களை உபத்திரவப்படுத்தாமல் மாதந்தோறும் சிறிதுசிறிதாகத் தீர்வைவாங்குவது சூரியன்விரதம்.

௫௦௬—வாயு சகலஜெந்துக்களிடத்திலும் பிராணரூபமாய்உள்ளேநுழைந்து சஞ்சரிக்கிறதுபோல் அரசன் வேவுகாரர்களால்எதிரியின்பட்டணத்திற்பிரவேசித்திருப்பது வாயுவின்விரதம்.

௫௦௭—யமன் தண்டனைகாலத்தில்மித்திரனென்றும்சத்துருவென்றும் பேதமின்றியாவரையுஞ் சரியாக சிக்ஷிக்கிறதுபோல் அரசன் குற்றஞ்செய்தபிரசைகளை பக்ஷபாதமில்லாமல் சரியாகத்தண்டிப்பது யமன்விரதம்.

௫௦௮—வருணன் தன்னால் தண்டிக்கத்தக்கவர்களான பாபஞ்செய்தபிரசைகளை பாசங்களால் யோசனையின்றிக்கட்டுகிறதுபோல் அரசன் பாபிகளை தயையில்லாமல் தண்டிப்பது வருணன்விரதம்.

௫௦௯—பூரணசந்திரனைப்பார்த்து மனிதர்கள்சந்தோஷிப்படுகிறதுபோல் அரசன் தன்னைப்பார்த்து மந்திரிமுதலிய பரிஜநங்கள்சந்தோஷிக்கும்படிசெய்வது சந்திரன்விரதம்.

௫௧௦—அரசன் அக்கினிபோல் சோம்பலில்லாமல் பிரதாபமுள்ளவனாய் துஷ்டர்களையும், தனக்கபகாரஞ்செய்கிறமந்திரிகளையும், சிக்ஷித்துக்கொண்டிருப்பது அக்கினிவிரதம்.

௩௧௧—பூமியானது ஜங்கமஸ்தாவரரூபமான சகலபிராணிகளையு ம் உயர்வுதாழ்வில்லாமல் சரியாத்தரிக்கிறதுபோல் அரசன் பண் டிதபாமரசாதாரணமாய் பேதமின்றி அனைவரையுங் காப்பாற்றுவ து பிரிதிவிவிரதம்.

௩௧௨—இந்தவுபாயங்களாலும் அந்தந்தக்காலத்திற்குத் தக்கபடி தனக்குத்தோற்றுகிறமற்றுமுள்ள வுபாயங்களாலும் அரசன் தன் றேயத்தில் வாசஞ்செய்துகொண்டிருக்கிற திருடர்களையும், அய லான்தேசத்தில்வாசஞ்செய்துகொண்டு தன்தேசத்தில் திருடுகிறதி ருடர்களையும் தண்டித்தடக்குக.

௩௧௩—தனக்குபொக்கிஷநாசமுதலிய மேலானஆபத்துவந்தா லும் அரசன் அதிகதீர்வையையேற்படுத்தி பிராமணர்களுக்குக் கோபம்வரச்செய்யக்கூடாது. அவர்கள்கோபித்தால் இவன்சேனை யோடும் வாகநத்தோடும் அழிந்துபோகும்படிசபிப்பார்கள்.

௩௧௪—எந்தப்பிராமணனுடையசாபத்தினாலே அக்கினி எல்லா வற்றையுஞ்சாப்பிடுகிறவனாயும், சமுத்திரம் உப்புத்தண்ணீராயும், சந்திரன் விருத்தி-க்ஷயம் இவ்விரண்டையுமடைகிறவனாயும் இருக் கிறார்களோ அவர்களைகோபிக்கச்செய்த எவன்றான் அழியாமலிரு ப்பன்.

௩௧௫—பின்னும் எவர்கள்கோபித்தால் வேறானசுவர்க்கமுதலிய லோகங்களையும் திக்குப்பாலகர்களையும் தேவர்களைமநுஷியராக வும்,சிருஷ்டிப்பார்களோ அவர்களைப்பீடிக்கிற எவன்க்ஷேமத்தை யடைவான்.

௩௧௬—யஜநயாஜநம் செய்துகொண்டிருக்கிற யாதொருபிரா மணனாலேயே உலகங்களும் தேவர்களும் இருப்பையடைகிறார் களோ பின்னும் யாதொருபிராமணனுக்கு வேதமேபொருளாக

இருக்கிறதோ அப்படிப்பட்ட வித்துவானான பிராமணர்களை ஜீவித்திருப்பதில் விருப்பமுள்ள எவன்ஹிம்ஸைசெய்வான்.

௩௧எ—வைதீகமாயிருந்தாலும் லௌகீகமாயிருந்தாலும் அக்கினியானது எப்படிமேலான தெய்வமாகவேயிருக்கிறதோ அப்படியே பிராமணன்ஞானியாயிருந்தாலும் மூடனாயிருந்தாலும் அவனேமேலானதெய்வம்.

௩௧அ—ஒளியுள்ள அக்கினியானது மயானத்தில் பிணத்தைத்தகித்தாலும் நிந்தனையில்லாமல் யாகத்தில் எப்படிஹோமத்தினால் விர்த்திசெய்யப்படுகிறதோ.

௩௧௯—அப்படியே பிராமணர்கள் கெட்டகாரியங்களில் பிரவேசித்திருந்தாலும் சகலமான சுபாசுபங்களிலும் பூசிக்கத்தக்கவர்கள் ஏனெனில்.அவர்கள்மேலானதெய்வமல்லவா(இதில்பிராமணன்பெருமையைச்சொன்னதாகையால் முன்சொன்னதற்கு விரோதமில்லை.)

௩௨0—பிராமணர்களுக்கு எப்போதும் அதிக்கிரமஞ்செய்து துன்பப்படுத்துகிறக்ஷத்திரியனை பிராமணனே சாபத்தினாலாவது மரணஹோமத்தினாலாவது அடக்கிறவனாயிருக்கவேண்டியது ஏனென்றால். க்ஷத்திரியன் பிராமணனிடத்திலுண்டானவனல்லவா.

௩௨௧—ஜலத்தினின்றும் அக்கினியும் பிராமணனிடத்தினின்றும் க்ஷத்திரியனும் கல்லினின்றும் லோஹமும் உண்டாயிற்று அவைகளின்சக்திகள் எங்கும்வியாபரிக்கிறதாயிருந்தாலும் தன்றன்னுற்பத்திஸ்தானங்களில் அடங்கிப்போகிறதுகள்(அதாவது.முன்ஒருகாலத்தில் க்ஷத்திரியஜாதிக்கு நாசம்வந்துஅப்போது அந்தக்ஷத்திரியஜாதி ஸ்திரியிடத்தில் பிராமணன்புணர்ந்து அந்தஜாதிமறுபடி விருத்தியடையும்படி செய்தானதலால்பிராமணனால்க்ஷத்திரியனுண்டானனென்றுசொல்லப்படுகிறது.)

௩௨௨—பிராமணனில்லாதக்ஷத்திரியன் ஹோமாதிகாரியமில்லாததினாலும் க்ஷத்திரியனில்லாதபிராமணன் காப்பாற்றுவாரில்லாததினாலும் விர்த்தியடையமாட்டார்கள் இருவருங் கூடியிருந்தால் இம்மையிலும் மறுமையிலுஞ் சுகப்படுகிறார்கள்.

௩௨௩—அரசன்தனக்குமூப்புவந்தபின்பு செலவழிந்ததுபோக மிகுதியிருக்கிற தண்டப்பொருளை பிராமணர்களுக்குக்கொடுத்துவிட்டு புத்திரனிடத்தில் ராச்சியத்தையும், ஒப்புவித்துவிட்டு வீரசொர்க்கத்தில் விருப்பமிருந்தால் போர்க்களத்திற் சண்டைசெய்து பிராணனை விடவேண்டியது.

௩௨௪—தருமப்படி முயற்சியுள்ளவனாய் நீதிசெலுத்துகிற அரசன்-உலகத்தாருக்குப் பிரியமானகாரியத்தைச் செய்யும்படி எல்லாவேலைக்காரரையும் நியமிக்கவேண்டியது.

௩௨௫—ஏழாவதத்தியாயமுதல் இதுவரையில் பழைமையான இராஜதருமஞ்சொல்லிமுடிந்தது இனி-வைசிய சூத்திராளுடைய கர்மவிதிலயை சொல்லப்போகிறேன்.

## வைசியதருமம்.

௩௨௬—வைசியன் உபநயநமுதலிய சம்ஸ்காரஞ் செய்துகொண்டு வேதமோதினபின் விவாகஞ்செய்துகொண்டு பசுவைக்காப்பாற்றுவதிலும் பயிர்முதலிய ஜீவநவிர்த்தியிலும் முயற்சியுள்ளவனாக இருக்கவேண்டியது.

௩௨௭—பிரமன் பசுக்களையுண்டுபண்ணி அதைக்காப்பாற்றும்பொருட்டு வைசியனிடத்திலும் பிரசைகளைச்சிருட்டித்து அவர்களைமறுமையிலும் இம்மையிலும் காப்பாற்றும்பொருட்டுபிராமணக்ஷத்திரியாளிடத்திலும் ஒப்புவித்தார்.

௩௨௮—பசுக்களை தாம் காப்பாற்றவேண்டாமென்று வைசிய ன்எண்ணக்கூடாது அவன்காப்பாற்றும்போது மற்றொருஜாதியா னும் பசுக்களைக்காப்பாற்றக்கூடாது.

௩௨௯—முத்து-இரத்திநம்-பவளம்-லோகம்-வஸ்திரம்- கர்ப்பூர முதலிய வாசநாதிரவியம் - உப்புமுதலிய இரசம் -இவைகளுக்கு அந்தந்தத்தேசத்திலிருக்கிறவிலையி னேற்றக்குறைவையும் சரக்கி ன்சாராசாரங்களையும் வைசியனறியவேண்டும்.

௩௩0—எல்லாவிதைகளையும் விதைக்கிறமுறைமையையும்,அது வரவிதைக்கவேண்டிய காலத்தையும்,நிலத்தின்குணதோஷத்தையு ம்,படி-தராசு-இவைகளிலிருக்கிற தந்திரவுபாயத்தையும் அறியவே ண்டும்.

௩௩௧—ஒருமாதிரியானசரக்குகளில்நலமிளப்பத்தையும் சரக்கு களுக்கு அந்தந்தத்தேசத்திலிருக்கிற விலையையும் இந்தச்சரக்கை இவ்வளவுகாலம்வைத்திருந்தால் இவ்வளவுலாபம் அல்லது இவ்வள வுநஷ்டம் வருமென்பதையும்,இந்தத்தேசத்தில் புல்-தண்ணீருப் பதால் பசுக்கள் விர்த்தியடையுமென்பதையும் அறியவேண்டும்.

௩௩௨—பயிர்வேலைசெய்பவர்களுக்கும் -மாடுமேய்ப்பவர்களு க்கும்-தேசம்-காலம்-இவைகளுக்குத்தக்கபடி சம்பளங்கொடுப்ப தை யோசிக்கவேண்டியது. பின்னும் கௌடதேசமுதலிய நாலு தேசத்தில்வழங்குகிற பாஷையை அறியவேண்டியது. சரக்குகளை சமையம்பார்த்து விற்கவும் வாங்கவும்வேண்டியது.

௩௩௩—தருமமாக வியாபாரஞ்செய்து பொருளை விர்த்திசெய் யமுயற்சிவேண்டியது.மற்ற தானங்களைவிட சகலபிராணிகளுக்கு ம் அசத்திபம் அந்நதானஞ்செய்யவேண்டியது.

## சூத்திரதருமம்.

௩௩௪—வேதசாஸ்திரமறிந்து கீர்த்திபெற்ற கிரகஸ்தபிராமணனுக்கு சிசுருஷைசெய்வதே சூத்திரனுக்கு மோக்ஷத்தைத்தருவிக்கிற மேலானதருமமாகும்.

௩௩௫—உள்ளும் புறம்பும் பரிசுத்தனாய் உயர்ந்தசாதியானை கொடுமையாகப் பேசாமல் பிராமணனுக்கும் அவனில்லாவிடில் க்ஷத்திரியனுக்கும், அவனில்லாவிடில் வைசியனுக்கும்,மேலானபணிவிடைசெய்துகொண்டு அகங்காரமில்லாமல் நாடோறுமடுத்திருக்கிற சூத்திரன் மேலானசாதியாவான். (அதாவது பிராமணனைப்போல உபசரிக்கப்படுவான்.)

௩௩௬—இதுவரையில் ஆபத்தில்லாதகாலத்தில் நான்குவருணத்தாருக்கும் கர்மவிதிசொல்லி முற்றிற்று. ஆபத்துக்காலத்தில் அந்தவருணத்தார்களால் நடத்தவேண்டிய தருமத்தையும் சங்கரஜாதியுண்டாகிறதையும் கிரமமாகக்கேளுங்கள்.

ஒன்பதாவதத்தியாயம்-முற்றிற்று.

ஆக-அத்தியாயம்-௯-க்கு-சுலோகம்-௨௧௬௨.

பத்தாவது

# அத்தியாயம்.

## சங்கரஜாதியினுற்பத்தி.

௧—தன்றன் கருமத்தில் நிலைபெற்ற பிரம்ம-க்ஷத்திரிய-வைசியர்-மூவரும்-வேதமோதவேண்டும், அதில் க்ஷத்திரிய-வைசியர்களு

க்கு பிராமணனோதிவைக்கவேண்டும் அவ்விருவரும் ஓதிவைக்கக்கூடாது. இது சாஸ்திர நிச்சயம்.

உ—பிராமணன் எல்லாவருணத்தாருக்கும்-ஜீவநோபாயங்களை யறிந்துசொல்லித் தானும்-தன்ஜீவநோபாயத்தையறிந்து அந்தப்படி செய்யவேண்டும்.

ங—உயர்ந்தஜாதியாகையாலும் சுபாவத்தில் உயர்ந்தவிடத்திற் பிறந்ததனாலும்- அநுஷ்டாநத்தை முக்கியமாகக்கொண்டிருப்பதனாலும்-அதிகசமஸ்காரங்களைத் தரிப்பதனாலும்-பிராமணன் வருணத்தாருக்கெல்லாம் ஓதுவிக்கவும் - ஜீவநவிருத்தியை யறிந்து சொல்லவும்பிரபுவாகிறான்.

ச—நாலுவருணத்தாருக்குள் பிராமணன்-க்ஷத்திரியன்-வைசியன்-இம்மூவரும்-இரண்டுவிதமாகப்பிறப்பதனால்-துவிஜாதிகளென்று சொல்லப்படுகிறார்கள். சூத்திரனுக்கு உபநயநமுதலிய வில்லாததால் ஒருஜாதியாகவேயிருக்கிறான். இந்த நான்குவருணத்தார்தவிர-ஐந்தாவதுவருணத்தான்கிடையாது.

டு—நான்குவருணங்களிலும்-தன்ஜாதியர்களாயும்-விபசாரதோஷமில்லாதவர்களாயும் இருக்கிற தருமபத்நிகளிடத்தில் விவாகஞ்செய்தகணவனால் உண்டுபண்ணப்பட்ட மைந்தர்களை அந்தந்தஜாதியர்களாக அறியவேண்டும்.

## அநுலோமஜாதி.

சூ—துவிஜாதிகளினால்-தங்கள் தங்கள் வருணத்துக்கு அடுத்த இரண்டாவதுவருண ஸ்திரீகளில் உண்டுபண்ணப்பட்ட பிள்ளைகள்-தாயின்ஜாதிக்கு உயர்ந்தவர்களாயும் - தகப்பன்ஜாதியை யடையாதவர்களாயும்-தகப்பனுக்குச்சரியானவர்களென்று சொல்லத்தக்கவர்களாயும் இருக்கிறார்கள்.

எ—இப்போதுசொன்னது அடுத்த தாழ்ந்தஜாதி ஸ்திரீயினிடத்துப்பிறந்த அநுலோமஜாதிகளின்விஷயம். இனி ஒன்றுவிட்டும் இரண்டுவிட்டும் தாழ்ந்தசாதி ஸ்திரீயினிடத்துப்பிறந்தவன் விதியை தருமமாகச்சொல்லுகிறேன் கேளுங்கள்.

அ—பிராமணனுக்கு விவாகஞ்செய்துகொண்ட வைசியமனைவியிடத்துப்பிறந்தவன்-அம்பஷ்டன்-என்றும் அவ்வித சூத்திரமனைவியிடத்துப்பிறந்தவன்-நிஷாதனென்றுஞ் சொல்லப்படுகிறான் இவனுக்குப் பாரசவனென்றும் பெயருண்டு.

௯—க்ஷத்திரியனுக்கு அவனால் விவாகஞ்செய்யப்பட்ட- சூத்திரமனைவியிடத்துப்பிறந்தவன்-கொடுமையான செய்கையுள்ளவனும்-க்ஷத்திரிய சூத்திரர்கள்-நடையுள்ளவனும் இருக்கிறான். அவனுக்கு உக்கிரனென்றுபெயர்.

௧0—பிராமணனுக்கு தனக்குத்தாழ்ந்த மூன்றுஜாதியிலும்-க்ஷத்திரியனுக்கு-தனக்குத்தாழ்ந்த யிரண்டுஜாதியிலும் - வைசியனுக்கு-தனக்குத்தாழ்ந்த ஒருஜாதியிலும்,பிறக்கிறவர்களான இந்தஆறுபேர்களும் தன்ஜாதிமனையாளிடத்தில் பிறந்தவர்களைப்பார்க்கிலும்-நிகிருஷ்டாளானகையால் *அபசதாளென்றுசொல்லப்படுவார்.

## பிரதிலோமஜாதி.

௧௧—க்ஷத்திரியனுக்கு பிராமணஸ்திரீயிடத்தில் பிறந்தவன் சூதனென்றும்-வைசியனுக்கு-க்ஷத்திரியஸ்திரீயினிடத்தில் பிறந்தவன்- மாகதனென்றும், அவனுக்குப் பிராமணஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் வைதேகனென்றும் சொல்லப்படுகிறான்.

௧௨—சூத்திரனுக்கு வைசியஸ்திரீ- க்ஷத்திரியஸ்திரீ - பிராமண

* அபசதாள்-என்பது-ஸாரமில்லாதவர்கள்.

ஸ்திரீ-இவர்களிடத்திற்பிறந்தவர்கள் அயோகவனென்றும்- க்ஷத்தாவென்றும்-மனிதருக்குள்தாழ்ந்த சண்டாளனென்றும் முறையே சொல்லப்படுவார்.

கங--அநுலோமஜாதியில் பிராமணனுக்கு- வைசியமனையாளிடத்திற்பிறந்த அம்பஷ்டன்-க்ஷத்திரியனுக்குச் சூத்திரமனைவியிடத்துப்பிறந்த உக்கிரன் - இவர்களைப்போல பிரதிலோமஜாதியில் க்ஷத்தாவும்-வைதேகனும் தொடுகிறத்துக்கு யோக்கியரென்று சொல்லப்படுகிறார்கள்.

கச—துவிஜாதிகளுக்குத் தாழ்ந்தஜாதியில் அநுலோமமாகப்பிறந்தபிள்ளைகள் தாயின்ஜாதியை யடைகிறபடியால் தாயின்ஜாதிக்கு விதித்த சம்ஸ்காரம் செய்யத்தக்கவர்களென்று சொல்லுகிறார்கள்

## அந்தராளஜாதி.

கரு—பிராமணனுக்கு உக்கிரகந்நிகையினிடத்துப் பிறந்தவன் ஆவிரதன் என்றும் - அம்பஷ்ட கந்நிகையினிடத்திற் பிறந்தவன் அபீரனென்றும்- அயோகவகந்நியிடத்துப்பிறந்தவன் திக்குவணனென்றுஞ்சொல்லப்படுவார்கள்.

ககூ—சூத்திரனுக்கு பிரதிலோமமாக வைசிய-க்ஷத்திரிய- பிராமணஸ்திரீகளிடத்தில் பிரதிலோமமாகப்பிறந்த அயோகவன்-க்ஷத்தா-சண்டாளன்-இந்தமூவரும்-ஒரு தருமகாரியத்திற்குந் தகாதவர்கள்.

கஎ—வைசியனுக்கு பிரதிலோமமாக க்ஷத்திரிய பிராமணஸ்திரீகளிடத்தில் பிறந்த மாகதன்-வைதேகன்-இவர்களும்- க்ஷத்திரியனுக்கு பிராமணஸ்திரீயிடத்திற்பிறந்த-ஸூதனும்-பிதுர்க்கள்காரியஞ் செய்யத்தகாதவர்களாகையால் இந்தமூவரும் அபசதாளாகவே சொல்லப்படுகிறார்கள்.

கஅ—நிஷாதனுக்கு சூத்திரஸ்திரீயிடத்தில் புல்க்கசனும் சூத்தி

ரனுக்கு நிஷாதஸ்திரீயிடத்தில் குக்குடகனும்-பிறக்கிறார்கள்.

௧௯—க்ஷத்தாவுக்கு உக்கிரகந்நிகையிடத்தில்-சுவபாகனும்- வைதேகனுக்கு-அம்பஷ்டகந்நிகையிடத்தில்-வேணனும் பிறக்கிறான்

## விராத்தியஜாதி.

௨௦—துவிஜாதிகளுக்கு தன்ஜாதிஸ்திரீகளிடத்தில் பிறந்தபுத்திரனுக்கு விதிப்படிகாலத்தில் உபநயநமுதலிய சம்ஸ்காரம் இல்லாமற்போனால் காயத்திரியில்லாதவரான விராத்திய ஜாதிகளாகச் சொல்லப்படுகிறார்கள்.

௨௧—விராத்திய பிராமணனுக்கு அவ்வித பிராமண ஸ்திரியிடத்தில் பாபியானபூர்ஜகண்டகன் பிறக்கிறான். அவனுக்கு ஆவந்தியன்-வாடதாநன்- புஷ்பதன்-சைகன்-என-அந்தந்ததேசங்களில் வெவ்வேறுபெயருண்டு.

௨௨—விராத்தியக்ஷத்திரியனுக்கு அவ்விதக்ஷத்திரிய ஸ்திரீயினிடத்தில் சல்லன்பிறக்கிறான் அவனுக்கு- மல்லன்-நிச்சுவி-நடன்-கரணன்-கஸன்-திரவிடன்- என-அந்தந்ததேசத்தில் வெவ்வேறுபெயருண்டு.

௨௩—விராத்தியவைசியனுக்கு அவ்விதவைசிய ஸ்திரீயிடத்தில் சுதன்வாபிறக்கிறான். அவனுக்கு ஆசாரி-காரூசன்-விஜன்மா-மைத்திரன்-சாத்துவதன்-என.அந்தந்ததேசத்தில்வெவ்வேறுபெயருண்டு

௨௪—நான்கு வருணங்களுக்கும் வியபசார தோஷத்தினாலும் தன்கோத்திரத்தில் விவாகஞ்செய்துகொள்ளுகிறத்தினாலும் சாதகருமமுதலிய கருமத்தைச்செய்து கொள்ளாததினாலும் சங்கரஜாதிகளுண்டாகிறதுக்கு என்கிறதற்கு இந்தவிராத்தியாளே திருஷ்டாந்தரமாகவிருக்கிறார்கள்.

௨௫—பிரதிலோமஜாதியானும் அநுலோமஜாதியானும் சம்ப

ந்தஞ்செய்துகொண்டு பிறந்தவர்களான பாகியஜாதியை முழுது
ம் விரிவாகச்சொல்லுகிறேன்.

## பாகியஜாதி.

௨௬—சூதன் வைதேகன்-மனிதர்களுக்குள்தாழ்ந்தசண்டாளன்
மாகதன்-க்ஷத்தா-அயோகவன்-

௨௭—இவ்வாறுபேரும் தன்ஜாதிஸ்திரீகளிலும் நான்குவருணத்
தார்ஸ்திரீகளிலும் தங்களுக்குச்சரியானஜாதியானபிள்ளைகளையுண்
டுபண்ணுகிறார்கள்.

௨௮—பிராமணனுக்கு க்ஷத்திரியவைசியஸ்திரீகளிடத்திற் பிற
ந்தவர்கள் எப்படி உபநயநமுதலியவற்றிற்குரியவர்களா யிருப்
பதால் உயர்ந்திருக்கிறார்களோ அப்படியே வைசியனுக்கு க்ஷத்
திரியஸ்திரீயிடத்திலும் க்ஷத்திரியனுக்குப் பிராமணஸ்திரீயிடத்தி
லும் பிறந்தபுத்திரர்கள் சூத்திரனுக்கு வைசியக்ஷத்திரியபிராம
ணஜாதிஸ்திரீயிடத்திற் பிறந்தவர்களைக்காட்டிலும் உயர்ந்தவர்கள்

௨௯—மேற்சொன்னசூதன்முதலிய ஆறுபேர்களும் ஒருவர்க்
கு ஒருவருடைய மனையாளிடத்தில் தங்களைவிட நிந்திக்கப்பட்ட
வர்களாயும் மரியாதை செய்யத்தகாதவர்களாயும் இருக்கிறவெ
கு பாகியஜாதிகளை உண்டுபண்ணுகிறார்கள்.

௩0—சூத்திரன் பிராமணஸ்திரீயிடத்தில் எப்படி பாகியஜாதியான
சண்டாளனைஉண்டுபண்ணுகிறானோ அப்படியே அந்தச்சண்டாள
ன்முதலிய பாகியஜாதிகளும் நான்குவருண ஸ்திரீகளிடத்திலும்
தனக்குந்தாழ்ந்த * பாகியஜாதியாரை உண்டுபண்ணுகிறார்கள்.

௩௧—சூத்திரனுக்கு மேலானமூன்றுவருணத்து மனைவிகளிடத்
தில்பிறந்த அயோகவன்-க்ஷத்தா-சண்டாளன்-இம்மூவரும்தன்றன்

---

* பாகியஜாதியாவது -கிட்டவரத்தகாதஜாதி.

ஜாதிஸ்திரீகளிடத்திலும் நான்குவருணத்தார் மனைவிகளிடத்திலும் ஒவ்வொருத்தர் ஐவைந்துபிள்ளைகள்விழுக்காடு மிகவும்பாகியஜாதிகளான பதினைந்துபிள்ளைகளை யுண்டுபண்ணுகிறார்கள்.

௩௨—மேற்சொல்லும் அடையாளமுள்ள தஸியூவானவன் அயோகவஜாதிஸ்திரீயிடத்தில் எண்ணெயிடுதல்-கைகால்பிடித்தல்-வலைத்தொழில் இவைகளை ஜீவநவிர்த்தியாகவுடைய சைரந்திரியனை யுண்டுபண்ணுகிறான்.

௩௩—வைசியனுக்கு பிராமணமனைவியிடத்துப் பிறந்தவனான வைதேகன் சூத்திரவைசியமனைவியிடத்திற்பிறந்தவனான அயோகவஸ்திரீயிடத்தில் இன்சொற்சொல்லுகிற மைத்திரேயனையுண்டுபண்ணுகிறான் அவனுக்கு விடியற்காலம் மணியடித்துக்கொண்டு அனைவரையும்துதிசெய்து பிச்சையெடுப்பது ஜீவநம் இவனைத்தான்குடும்பாண்டியென்கிறார்கள்.

௩௪—பிராமணனுக்கு சூத்திர மனைவியிடத்துப்பிறந்தவனான நிஷாதன் அயோகவஸ்த்திரீயிடத்தில் ஓடம்விடுகிறதொழிலையுடைய மார்க்கவனை உண்டுபண்ணுகிறான். அவனை ஆரியாவர்த்ததேசவாசிகள் செம்படவனென்றுசொல்லுகிறார்கள்.

௩௫—ஈநஜாதிகளுள் மேற்சொன்ன சைரந்திரன்- மைத்திரேயன்-மார்க்கவன்-இம்மூவர்களும் அயோகவஸ்திரீயிடத்தில் பிறந்தவர்களாயிருந்தாலும் தகப்பன்பேதத்தால் வேறுவேறுதொழில் உள்ளவர்களாயும் பிணத்தின் துணியையுடுத்திக்கொள்ளுகிறவராயும் நிந்திக்கத்தக்கதான எச்சிலந்நத்தைச் சாப்பிடுகிறவராயு மிருக்கிறார்கள்.

௩௬—நிஷாதனுக்கு விதேகஜாதிஸ்த்திரீயிடத்தில் தோல்வேலை செய்கிறகாருவாரன் உண்டாகிறான் வைதேகன் - சைரந்திரன்-

முதலிய வகுப்பினர் ஊருக்கு வெளியில் குடியிருக்கவேண்டிய வர்கள்.

௩எ—சண்டாளனுக்கு வைதேகஸ்திரீயிடத்தில் பாண்டுசோபாகன் பிறக்கிறான் அவனுக்கு மூங்கில்வேலைசெய்வதுதொழில். நிஷாதனுக்கு அந்தஸ்திரீயிடத்தில் ஆகிண்டிகன்பிறக்கிறான் இவனுக்கு குற்றவாளிகளை அடித்தல்- கட்டுதல்-கொலைசெய்தல் இவைகளைச் செய்யுமிடத்தில்காவலிருப்பதுதொழில்.

௩அ—சண்டாளனுக்கு புல்க்கசஜாதிஸ்திரீயிடத்தில் சோபாகன் பிறக்கிறான் அவனுக்கு அரசனுத்தரவுபடி கொலைசெய்யத்தக்கவர்களை கொலைசெய்வதுதொழில் ஆதலால் எப்போதும் அவன் பெரியோர்களினாலே நிந்திக்கப்பட்டவனும் மிகுபாபியாயுமிருக்கிறான்.

௩௯—சண்டாளனுக்கு நிஷாதஜாதிஸ்திரீயிடத்தில் அந்தியாவசாயிபிறக்கிறான். அவனுக்கு சண்டாளன்றொழிலைவிடக் கெட்டதான சுடுகாட்டைக்காப்பதுதொழில்.

௪௦—தாய்தந்தைகளின் கெட்டசேர்க்கையினாலே பிறந்தவர்களான சங்கரஜாதிகளினுற்பத்தியை விசிதமாச்சொன்னேன் இவர்கள் இரகசியமாய் விபசரித்துப்பிறந்தாலும் பிரகாசமா விபசரித்துப்பிறந்தாலும் தன்றன்றொழிலாலறியப்படுவார்கள்.

௪௧—துவிஜாதிகளுக்குஅநுலோமமாகப்பிறந்த ஆறுபேர்களும்ஸ்வஜாதியில்பிறந்தவர்கள்போல் உபநயநமுதலியவை செய்யத்தக்கவர்கள் பிரதிலோமமாகப் பிறந்தவர்களனைவரும் உபநயநம்முதலியவற்றிற்குதவாதவர்கள்.

௪௨—தன்ஜாதியில்பிறந்தவர்களும் அநுலோமஜாதியர்களும்தவம்-பீஜம்-இவைகளின் பிரபாவத்தினால் கிரதயுக திரேதாயுகங்களில்

உயர்வையும் பின்பு அந்தப் பிரபாவமில்லாததால் தாழ்வையும் அடைகிறார்கள்.

௪௩—பிராமணனிடத்தில் வணங்காமையாலும் உபநயநமுதலிய கர்மலோபத்தினாலும் மேற்சொல்லும் க்ஷத்திரியஜாதிகள் இவ்வுலகத்தில் வரவர சூத்திரத்தன்மையையடைந்தார்கள்.

௪௪—பௌண்டரம்-ஔண்டரம் திரவிடம் -காம்போசம்-யவநம்-சகம்-பாரதம்-பால்ஹிகம்-சீநம் - கிராதம் தரதம்-கசம்-இந்த தேசங்களை யாண்டவர்களனைவரும் மேற்சொன்னபடி சூத்திராளாய்விட்டார்கள்.

௪௫—உலகத்தில் நான்குவருணத்தாருக்கும் சங்கரஜாதியிற்பிறந்தவர்களில் சிலர் மிலேச்சபாஷையுள்ளவர்களாயும் சிலர் ஸம்ஸ்கிருதம்முதலிய உயர்ந்தபாஷையுள்ளவர்களாயும் இருக்கிறார்கள். ஆகிலும் அனைவரும்*தஸ்யூக்களென்று சொல்லப்படுவார்கள்.

௪௬—அநுலோமபிரதிலோம ஜாதியரனைவரும் துவிஜாதிகளுக்கு உபகாரமான மேற்சொல்லுந் தொழிலைச்செய்து ஜீவிக்கவேண்டியது.

## சங்கரஜாதிகளின்றொழில்.

௪௭—சூதஜாதியருக்கு தேரோட்டுவதும் அம்பஷ்டஜாதியருக்கு இரணவயித்தியஞ்செய்வதும் வைதேகஜாதியருக்கு அந்தப்புரத்தில் காவலிருப்பதும் மாகதஜாதியருக்கு சமுத்திரத்திலும் கரையிலும் வர்த்தகஞ்செய்வதும் தொழில்.

௪௮—நிஷாதனுக்கு மீன்பிடிப்பதும், அயோகவனுக்கு தச்சுவேலையும், மேதன்-ஆந்திரன்-சுஞ்சு-மத்கு-இவர்களுக்கு-விற்பனைக்காக காட்டில்மிருகங்களைக்கொல்வதும் தொழில்.

௪௯—க்ஷத்தா-உக்கிரன்-புல்க்கசன்-இவர்களுக்கு வளையிலிருக்

* தஸ்யூக்களென்பது-திருடர்கள்.

கிற-எலி-உடும்பு - முதலியஜெந்துக்களைப்பிடிப்பதும் திக்குவண ஹுக்கு தோல்வர்த்தகஞ்செய்வதும் வேணனுக்கு தாளம்முதலிய வாத்தியம்வாசிப்பதும் தொழில்.

௫௦—இவர்களனைவரும் பட்டணத்துக்கும் ஊருக்கும் வெளி யில்-மரத்தடி-தோப்பு - மயாநத்திற்குச் சமீபமானவிடம்- மலை பூந்தோட்டம்-இவைகளில் அனைவருக்கும் இவர்கள் இன்னதொழி லாளிகளென்று தெரியும்படி தன்றன்றொழிலைச்செய்துகொண்டு வாசஞ்செய்யவேண்டியது.

௫௧—சண்டாளனுக்கும் - சுவபாகனுக்கும் - ஊருக்கு - வெ ளியில் விடிருக்கவேண்டியது. அவர்களுக்கு லோகபாத்திரங்கூ டாது. அவர்கள்தீண்டினபாத்திரங்களை சுத்திசெய்தாலும் பரிசுத் தமாகாது. அவர்களுக்கு நாயுங்கழுதையும் வளர்க்கத்தக்கது. மாடு முதலியவைத்துக்கொண்டு ஜீவிக்கக்கூடாது.

௫௨—அவர்கள் பிணத்தின் துணியையுடுக்கவேண்டும்.உடைந்த சட்டியில் அந்நம் புசிக்கவேண்டும்.இரும்பு பித்தளை யிவைகளாற் செய்யப்பட்ட பூஷணங்களை யணியவேண்டும்.அவர்கள் எப்போ தும் தொழிலுக்காக திரிந்துகொண்டிருக்கவேண்டும்.

௫௩—தருமகாரியஞ்செய்கிறசமயத்தில் அவர்களைப்பார்க்கவு ம் அவர்களோடுபேசவுங்கூடாது. அவர்கள் தங்கள்ஜாதியிலேயே சம்பந்தஞ்செய்துகொள்ளவும் கடன்முதலிய வாங்கிக்கொள்ள வும் வேண்டியது.

௫௪—இவர்களுக்கு நேரே அந்நம் போடக்கூடாது வேலையா ளைவிட்டு உடைந்தபாத்திரங்களால் அந்நம்போட்டு வைக்க வேண்டும். அவர்கள் ஊரிலும் பட்டணங்களிலும் இரவில் சஞ்சரி க்கக்கூடாது.

௫௫—அவர்கள்பகலில் கிராமத்திலும் ஊரிலும் ஒருபொருளைவிற்கவும் வாங்கவும்-அரசன்கொடுத்த அடையாளத்தோடு சஞ்சரிக்கவேண்டும். பந்துவில்லாமலிறந்துபோன அநாதப்பிரேதத்தை எடுக்கவேண்டும்.இது அவர்களுக்குத்தருமமுறை.

௫௬—பின்னும் அரசனுத்திரவின்படி கொலைசெய்யத்தக்க குற்றவாளிகளை விதிப்படிகொல்லவேண்டும். கொல்லப்பட்டவர்களின் வஸ்திரம் பூஷணம் படுக்கை இவைகளையெடுத்துக்கொள்ளக்கடவர்கள்.

௫௭—சங்கரஜாதியிற்பிறந்தவன் வருணத்தாரைப்போல நல்ல வேடத்தைத் தரித்திருந்தபோதிலும் மேற்சொல்லுங் கெட்டதொழிலினால் அவனைஈநனென்று அறியவேண்டும்.

௫௮—துஷ்டத்தனம்-துச்சவாக்கு-கொடுமை-ஹிம்ஸைசெய்வது-ஈநத்தொழில்- நல்லொழுக்கமில்லாமை -இவைகள் ஈநஜாதியிற்பிறந்தவனென்பதைக்காட்டுகின்றன.

௫௯—ஈநசாதியிற்பிறந்தவன் தகப்பன்செய்கையையாவது தாயின்செய்கையையாவது அல்லது இருவரின்செய்கையையுமாவது செய்வானேயல்லது தன்னுற்பத்தியைமறைக்க சமர்த்தனாக மாட்டான்.

௬0—உயர்ந்தகுலத்தில் மறைவான விபசாரத்தினால் பிறந்தவனும் தந்தையின் செய்கையை கொஞ்சமேனு மதிகமேனுஞ் செய்வான்.

௬௧—எந்தராச்சியத்தில் இவ்விதமான சங்கரஜாதியர்கள் பிறக்கிறார்களோ அந்தராச்சியம் பிரஜைகளோடு சீக்கிரத்தில் அழிந்துபோகும்.

௬௨—பிராமணன்-பசு-ஸ்திரீ-பாலன் - இவர்களைக் காப்பாற்று

தற்காக பாகியஜாதியர்கள் பொருளைவாங்காமலே உயிரைவிடுவது அவர்களுக்குச் சுவர்க்கத்திற்குக் காரணமாகும்.

௬௩—ஹிம்சைசெய்யாமை சத்தியம் - தீவினையாற்பொருள்சம்பாதியாமை-ஒழுக்கம்-இந்திரியநிக்கிரகம்-இந்நான்கையும்-நாலுவருணத்தாருக்கும் முக்கியமானதருமமென்று சுருக்கமாய் மநு சொல்லியிருக்கிறார்.அவைகள் சங்கரஜாதிகளுக்கும் இருக்கவேண்டியவைகள்.

௬௪.—பிராமணன் விவாகஞ்செய்துகொண்ட சூத்திரஸ்திரீயிடத்திற்பிறந்தபெண் பிராமணனையே விவாகஞ்செய்துகொண்டு அவளுக்கும் பெண்ணாகவேபிறந்து அவளுக்கும் பெண்கள்பிறந்து அவர்களும் இவ்விதமாகவே ஏழுதலைமுறைவரையில் பிராமணனையேவிவாகஞ்செய்து கொண்டுவந்தால் ஏழாவதுதலைமுறையில் பிறந்தவர்கள் பிராமணஜாதியர்களாகிறார்கள்.

௬௫—மேற்சொன்னபடி பெண்சந்ததிவழியினால் சூத்திரகுலத்தில் ஏழாந்தலைமுறையில் பிராமணனுக்குப்பிறந்தவன் பிராமணனாகிறான் அந்த சூத்திரஸ்திரீயிடத்திலேயே பிராமணனுக்குப்பிறந்த புருஷசந்ததி சூத்திரத்தன்மையையடையும் க்ஷத்திரியனுக்கு சூத்திரஸ்திரீயிடத்தில் பிறந்தபெண்சந்ததி க்ஷத்திரியனையே விவாகஞ்செய்துகொண்டுவந்தால் ஐந்தாவதுதலைமுறையில் க்ஷத்திரியத்தன்மையையும் வைசியனுக்கு சூத்திரஸ்திரீயிடத்தில் பிறந்தபெண்சந்ததி மூன்றுதலைமுறைவரையில் வைசியனை விவாகஞ்செய்துகொண்டுவந்தால் வைசியத்தன்மையையும் அடையும்.

௬௬—விவாகஞ்செய்யப்படாத சூத்திரஸ்திரீயிடத்தில் பிராமணனுக்கு ஒருவன்பிறந்தான். பிராமணஸ்திரீயிடத்தில்-சூத்திரனுக்கு ஒருவன்பிறந்தான். இவர்களில் பிராமணபிதாக்குப் பிறந்தவனே உயர்ந்தவனா பிராமணக்ஷேத்திரத்துக்குப் பிறந்தவன் உயர்ந்தவனாவென்று சந்தேகமுண்டானால் சொல்லுகிறோம்.

௬௭—பிராமணபிந்திக்கு சூத்திரஸ்திரீயிடத்திற் பிறந்தவன் அநுலோமஜாதியனுதலால் அவன் பாகயக்கியம் முதலிய நற்செய்கையைச்செய்வானுகில் உயர்ந்தவனுவான் சூத்திரனுக்குப் பிராமணஸ்திரீயிடத்திற் பிறந்தவன் பிரதிலோமஜாதியனுதலால் அவன் சூத்திரஜாதிக்குத் தாழ்ந்தவனுவான் இது சரியானநிச்சயம்.

௬௮—ஆகிலும் அவ்விருவரில் முன்னவன் விவாகமில்லாமற்பிறந்தஇனும் பின்னவன் பிரதிலோமஜாதிய னுகையாலும் இருவருக்கும் சாதகர்மமுதலிய சமஸ்கார மொன்றுங்கிடையாது இது வேசாஸ்திரவிதி.

௬௯—எப்படி நல்லநிலத்தில் நல்லவித்தைவிதைத்தால் நன்றுகமுளைக்குமோ அப்படியே தன்சாதியிற்பிறந்தவனே நல்லபுத்திரன் அவனுக்கே உபநயநமுதலிய சமஸ்காரங்கள் விதித்திருக்கின்றன.

௭௦—சிலர் வித்தினையும்-சிலர் க்ஷேத்திரத்தினையும் சிலரிரண்டையும் புகழுகிறுர்கள் அவ்விஷயத்தில் மேற்சொல்லுவதை சாஸ்திரமுறையென்றறிக.

௭௧—கெட்டநிலத்தில் விதைத்தவிதை விளைதற்குமுன்னமே அழியும்,பயிரிடப்படாத நல்லநிலமும் கரம்பாகிவிடும்,ஆதலாலிரண்டுஞ் சரியாயிருந்தபோதிலும்.

௭௨—பீஜத்தின்மகிமையினுல் மிருகம்முதலிய திரியக்கு யோநிகளில் பிறந்தருசியசிருங்கன் முதலானவர்களும் பெரியோர்களிஞற் பூசிக்கப்பட்டு மேலானருஷிகளாக ஆயிருப்பதனுல் பீஜமே மேலானதாகவிருக்கிறது.

௭௩—பிராமணன்தொழிலைச் செய்தாலும் சூத்திரன் பிராமணஜாதியாகமாட்டான் ஏனென்றுல் அவனுக்கு பிராமணஜாதித்தொழிலில் அதிகாரமில்லையல்லவா சூத்திரன் தொழிலைச்செய்தாலும்

பிராமணன்சூத்திர்ஜாதியாகமாட்டான் ஏனென்றால் அவன் ஹீநத்தொழிலைச்செய்தாலும் அவன்ஜாதி உயர்ந்ததல்லவா இப்படியே இந்தவிஷயங்களை பிரம்மாவும் நிச்சயஞ்செய்திருக்கிறார்.

## பிராமணன்றொழில்.

௭௪—பிரம்மக்கியாந நிஷ்டனும் பிராமண ஜாதிஸ்திரீயினிடத்தில் பிறந்தவனும் தன்கர்மத்தில் நிலைபெற்றவனுமிருக்கிற பிராமணன் மேற்சொல்லப்போகிற ஆறுகர்மங்களினாலுஞ் ஜீவிக்க வேண்டியது.

௭௫—அவையாவன-ஓதிவைத்தல்-ஓதல்-யாகஞ்செய்தல்-யாகஞ்செய்வித்தல்-கொடுத்தல்-வாங்குதல் - இவ்வாறும் பிராமணன்றொழில்.

௭௬—அவற்றுள் ஓதிவைத்தல்-யாகஞ்செய்வித்தல் -நல்லோரிடத்தில் தாநம்வாங்குதல் - இம்மூன்றும்-அவனுக்கு ஜீவநோபாயங்களான தொழில்கள்.

## க்ஷத்திரியன்றொழில்.

௭௭—க்ஷத்திரியனுக்கு பிராமணனுக்குச்சொல்லிய ஆறுகர்மங்களில் ஓதிவைத்தல்-யாகஞ்செய்வித்தல்-தாநம்வாங்குதல் - இம்மூன்றுநீங்கலாக மற்றவற்றையறியவேண்டியது.

## வைசியன்றொழில்.

௭௮—வைசியனுக்கும் ஓதிவைத்தல்முதலிய மூன்றுங்கிடையாது ஏனென்றால் இவ்விருவருக்கும் பிராமணனுக்கு ஜீவநவிர்த்தியாக விதித்ததொழில்களை மநுப்பிரஜாபதி விதிக்கவில்லையல்லவா

## க்ஷத்திரியவைசியர்களின்ஜீவநவிர்த்தி.

௭௯—க்ஷத்திரியனுக்கு-கத்தி-பாணமுதலிய ஆயுதத்தைத் தரித்

து உலகாள்வதும் வைசியனுக்கு வர்த்தகஞ்செய்வது- பசுவைக்கா ப்பது-பயிரிடுவது - இவைகளும் - ஜீவநோபாயமாம். மேற்சொ ல்லிய யாகம்செய்தல் -தானம்கொடுத்தல் - ஓதல்-இவை தர்மோ பாயமாம்.

## மூவருக்கும்சிறந்ததொழில்.

அ௦—பிராமணனுக்கு ஓதிவைத்தலும்-க்ஷத்திரியனுக்கு உலகா ள்வதும் -வைசியனுக்கு வர்த்தகஞ்செய்வதும் தத்தந்தொழிலிற்சி றந்தது.

## அந்தணன் ஆபத்தருமம்.

அக—பிராமணனுக்கு மேற்சொல்லியபிரகாரமாக தன்றொழி லினால் ஜீவிக்கக்கூடாத சமயத்தில் கிராமாதிகாரந் தேசாதிகாரமு தலிய க்ஷத்திரியன்றொழிலினால் ஜீவிக்கவேண்டியது. ஏனென்றால் அது அவனுக்கு அடுத்தஜாதியின்றொழிலல்லவா.

அஉ—தன்ஜாதித்தொழில் க்ஷத்திரியஜாதித்தொழிலிரண்டினாலு ம் ஜீவிக்கக்கூடாவிடில் வைசியன்றொழிலான பயிரிடுதல் பசுவை க்காப்பாற்றல் வியாபாரஞ்செய்தல் இவைகளாலும் ஜீவிக்கலாம்.

அ௩—பிராமணனும் க்ஷத்திரியனும் வைசியன்றொழிலினால் ஜீ வித்தபோதிலும் அதிகஹிம்சையுள்ளதாயும் பராதீநமாயுமிருக்கி ற பயிரிடுதலை அகத்தியம்நீக்கவேண்டியது(அதைச்செய்யாவிட்டா ல் ஜீவநம் நடக்காதகாலத்தில் அதையும் அந்நியனைக்கொண்டு செ ய்விக்கவேண்டுமென்று முன்சுலோகத்திற்குக்கருத்து.

அச—சிலர்பயிரிடுதலை நல்லதொழிலென்று நினைக்கிறார்கள் அ ந்தப்பிழைப்புப் பெரியோர்களால் நிந்திக்கப்பட்டது ஏனெனில் இரும்பை முகத்திலேயுடைய கலப்பையும் மண்வெட்டியும் பூமி யையும் பூமியிலுண்டான பலபல ஜெந்துக்களையும் வெட்டுகிறத ல்லவா.

அ௫—பிழைப்பில்லாததால் தன்தன்தொழிலவிட்டு வைசியன் தொழிலான வியாபாரம் செய்கிற பிராமணனும் க்ஷத்திரியனும் மேற்சொல்லியவை நீங்கலாக மற்றச்சரக்கை ஜீவநத்திற்குப் பொருளை விருத்திசெய்வதற்கும் விற்கலாம்.

அ௬—சகலமான இரசவஸ்துக்கள் சமைத்தவந்நம்-எள்ளு-கெம்புமுதலியகல்லு உப்பு-மனிதர்-பசுக்கள்-இவைகளைவிற்கக்கூடாது.

அ௭—சிவந்தசாயமுள்ள நூல் வஸ்திரம் சிகப்பில்லாமற் போனாலும் சணப்பு - பட்டு - கம்பளம் - பழம்-கிழங்கு-மருந்து.

அ௮—ஜலம்-ஆயுதம்-விஷம்-மாம்ஸம்-ஆட்டாங்கொடி-கருப்பூரமுதலிய வாசநாதிரவியம்- பால்- தேன்- தயிர்- எண்ணெய்-மது வெல்லம்- தருப்பை.

அ௯—காட்டிலுண்டான யானைமுதலியபலபலமிருகங்கள்-சிங்கம்- பக்ஷி- சாராயம்- அவிரி- அரக்கு - குதிரைமுதலிய வாகநம். இவைகளெல்லாம் விற்கக்கூடாது.

௯0—ஆனல் பயிரிடுகிறபிராமணனுக்கு எள்ளுவிளைந்தால்அந்த எள்ளை வேறேதானியத்திற்கு மாறியாவது அல்லது நேராகவாவது அதிககாலம் வைத்திராமல் உடனேவிற்று தருமகாரியத்திற்கு உபயோகஞ் செய்யவேண்டியது.

௯௧—எவன்புசிப்பது எண்ணெயிட்டுக்கொள்வது தானஞ்செய்வது இவைதவிர மற்றவிஷயத்திற்கு எள்ளையுதவிக் கொள்ளுகிறானோ அந்தப்பிராமணன் தன்பிதுர்க்களுடன் நாயின்மலத்தில் புழுவாகப் புழுக்கிறான்.

௯௨—பிராமணன். மாம்ஸம்-அரக்கு-உப்பு- இவைகளைவிற்றால் உடனேபதிதனுவான்.பால்விற்றால் மூன்றுதிநத்தில்சூத்திரனுவான்

௯௩—நிந்திக்கப்பட்ட மற்றசரக்குகளை பொருளாசையால் வி

ற்கிற பிராமணன் எழுதிநத்தில் வைசிய தன்மையை அடைகிருன்

௯௪—தன்னிடத்திலிருக்கிற வெல்லம்முதலிய இரசங்களை நெய் முதலிய இரசங்களால் மாற்றிக்கொள்ள வேண்டியது உப்பைமாத்திரம் வேறேசரக்கினுல் மாற்றிக்கொள்ளக்கூடாது சமைத்த அந்நத்தை அரிசியினுலும், எள்ளை சரியான அரிசிமுதலிய தாநியத்தாலும் மாற்றிக்கொள்ளவேண்டியது.

## க்ஷத்திரியன் ஆபத்தருமம்.

௯௫—க்ஷத்திரியன் சுவஜாதிவிருத்தியினுலும் பிராமணனுக்கு விதித்தவைசிய விருத்தியினுலும் பிழைக்கக்கூடாதபோது இரசம் முதலான யாபாரஞ்செய்தாவது பிழைக்கலாமேயல்லது எவ்வித ஆபத்திலும் தனக்குமேலான ஜாதியான் தொழிலைச்செய்ய எண்ணங்கொள்ளக்கூடாது.

௯௬—தாழ்ந்தஜாதியான் பொருளாசையால் தனக்குமேலான ஜாதியான் ருெழிலைச்செய்தால் அவன் பொருண்முழுமையும் அரசன் கிரகித்துக்கொண்டு அவனையும் உடனே ஊராவிட்டோட்டுகை.

௯௭—ஏறக்குறைய நடத்தினுலும் தன்ஜாதிதருமமே மேலானது அந்நியஜாதி தருமத்தை நன்ருக அநுஷ்டித்தாலும் அது தாழ்ந்தது- ஒருஜாதியின் தொழிலாற் பிழைக்கிறவன் உடனே அந்த ஜாதியிலிருந்து பதிதனுவான்.

## வைசியனுபத்தருமம்.

௯௮—வைசியன். தன்ஜாதித்தொழிலால் ஜீவிக்ககூடாத சமயத்தில் சூத்திரன்ருெழிலினுல் ஜீவிக்கலாம் ஆனுல்செய்யக்கூடாததான உச்சிஷ்ட போஜநமுதலிய காரியங்களைக் கூடுமானவனாயில்

நீக்கவேண்டியது கொஞ்சம் சௌக்கியமுண்டானவுடனே அவன் தொழிலைவிட்டுவிடவேண்டும்.

## சூத்திராபத்தருமம்.

௯௯—சூத்திரன்- பிராமணனுக்கு பணிவிடைசெய்வதனால்தன் மனையாள் மைந்தன் முதலானவர்களின் பசியைத்தீர்க்கக் கூடாவிடில் பலகார முதலியவற்றைச்செய்து விற்றுப்பிழைக்கலாம்.

௧00—பின்னும் எந்தத்தொழிலினால் துவிஜாதிகள் உபசரிக்கப் படுவார்களோ அவ்விதமான சிற்பவேலை-தச்சுவேலை இவைகளைச் செய்தும்ஜீவிக்கலாம்.

## பிராமணன்ஆபத்தொழில்.

௧0௧—ஜீவநமில்லாமல் வருத்தப்படுகிற பிராமணன்- க்ஷத்திரிய வைசியஜாதித்தொழிலை யநுசரியாமல் தன்ஜாதித்தொழிலினாற் பிழைக்கநினைத்தால் மேற்சொல்லுகிற தருமப்படிநடத்தவேண்டும்.

௧0௨—விருத்தியில்லாமல் துன்பப்படுகிறபிராமணன் சங்கரஜாதியர்முதலான தகாதவரிடத்திலும் தாநம்வாங்கலாம் அதனால் அவனுக்கு தோஷம்வராது(உதாஹரணம் பரிசுத்தமான கங்காஜலமுதலான வற்றில் தெருத்தண்ணிமுதலானது விழுவதனால் தோஷமுண்டாகுமென்பது நியாயமாய் ஒப்புக்கொள்ளத்தக்க தன்றல்லவா.)

௧0௩—விருத்தியல்லாமல் வருத்தப்படுகிற பிராமணனுக்கு தகாதவனுக்கு ஓதிவைத்தல் - யாகஞ்செய்வித்தல் - நிந்திக்கத்தக்கதான - தாநம்வாங்குதல்-இவைகளினால்- தோஷமில்லை அவன்- நீர் நெருப்பு - இவைகளைப்போல் சுபாவத்தில் பரிசுத்தனல்லவா.

௧0௪—பிராணன் போகும்படியான ஆபத்தையடைந்தவன்

பிரதிலோம ஜாதியான்முதலான எவனுடைய அந்நத்தைச் சாப்பிட்டபோதிலும் ஆகாசத்திலெறிந்தசேறுபோல் அவனிடத்திற் பாபமொட்டாது.

## உதாஹரணம்.

௧0௫—அஜீகர்த்தனென்னும் முநி பசியினால் வருத்தப்பட்டு சுநச்சேபனென்னும் தன்பிள்ளையை நூறுபசுவைவாங்கிக்கொண்டு யக்கியபசுவாகக்கொல்லும்படி தானேவிற்றார் பசிக்குமாற்றுஞ் செய்தபடியால் அவருக்கு அதனால் பாபம்நேரிடவில்லை

௧0௬—தருமத்தையும், அதருமத்தையும், நன்றாகவறிந்த வாமதேவரும் பசியினாற் கஷ்டப்பட்டு பிராணனைக்காப்பாற்றும் பொருட்டு நாயின்மாம்ஸத்தைச்சாப்பிட யத்தநித்தார் அதனால் அவருக்குப் பாபம்வரவில்லை.

௧0௭—தவமிகுந்த பாரத்வாஜமஹாமுநி புத்திரனுடன் நிர்மா னுஷ்ஷியமானகாட்டில் அதிகபசிகொண்டு விருதுவென்னும் தச்சனிடத்தில் அநேகபசுக்களைத் தாநம்வாங்கினார்.

௧0௮—தருமமா தருமங்களையறிந்த விசுவாமித்திரன்பசியினால் துன்பப்பட்டு சண்டாளன்கையிலிருந்த நாயின் முழங்கால் மாம்ஸத்தை வாங்கிச்சாப்பிட யத்தநித்தார் அதனால் அவருக்குப் பாபுமுண்டாகவில்லை.

௧0௯—கெட்டவனிடத்தில் தாநம்வாங்குதல் ஒழுக்கமில்லாதவனுக்கு யாகஞ்செய்விப்பது- ஓதிவைப்பது- இம்மூன்றில் - முதற்சொல்லியது- தாழ்ந்தது- அது பிராமணனுக்கு நரகவேதுவாகும் ஒன்றாலும் ஜீவிக்கக்கூடாதபோது அதைச்செய்யலாம்.

௧௧0—ஏனென்றால் யாகஞ்செய்விப்பதும்- ஓதிவைப்பதும்- உபநயநமுதலிய சமஸ்காரமுள்ளவனுக்கே செய்விக்கப் படும்

தாநம்வாங்குவது சம்ஸ்காரமில்லாத சூத்திரனிடத்திலும்-சண்டாளரிடத்திலும்- வாங்கப்படுமாதலால்- அதுதாழ்ந்தது.

௧௧௧—தகாதவனுக்குச்செய்துவைத்த- எக்கியம்-ஓதல்- இவைகளாலுண்டான பாபம் - ஜபஹோமங்களால் - போக்கடிக்கப்படும் தகாதவனிடத்தில் தாநம்வாங்கினபாபம் - அந்தப்பொருளைத்தாநஞ்செய்தாற்றான்தீரும்.

௧௧௨—பிராமணனென்றினும் ஜீவிக்கக்கூடாதபோது*சிலத்தினாலாவது ௩ உஞ்சத்தினாலாவது ஜீவிக்கலாம் கெட்டதாநம்வாங்குகிறத்தைவிட சிலம் மேலானது அதைவிட உஞ்சம்மேலானது.

௧௧௩—விருத்தியில்லாமல் வருத்தப்படுகிற கர்ம்மாநுஷ்டாநமுள்ளபிராமணன்-தன் குடும்பஜீவநத்திற்காக தாநியம்- வஸ்திரம்- இவைகளையும் யாகத்திற்காக பொருளையும் சாஸ்திரப்படி நீதிசெலுத்தாத அரசனிடத்திலும் வாங்கலாம், அவன் லோபகுணத்தால் அன்போடுகொடாவிடில் அவனையாசிக்கக்கூடாது.

௧௧௪—பயிரிட்டிருக்கிற நிலத்தை தாநம்வாங்குவதைவிட பயிரிடாதநிலத்தை தாநம்வாங்குவதிற்றோஷமில்லை இப்படியே- பசு-வெள்ளாடு- சுவர்நம்-தாநியம்- அந்நம்-இவைகளில்முன் சொல்லப்பட்டதுகளை விட பின் சொல்லியவற்றைத் தாநம் வாங்குவதில் அதிகதோஷம்.

௧௧௫—மேற்சொல்லப்போகிற ஏழுவிதத்தினாலும் சம்பாதித்த பொருள்-தோஷமில்லாதது. அதில் பிதுர்தநம்-புதையல்-கிறையப்பொருள் இம்மூன்றும் எல்லாவருணத்தாருக்குஞ்சரி - ஜயப்

* சிந்தின கதிர்நெல்லைப்பொறுக்குவது சிலம் ௩ சிந்தின தனிநெல்லைப்பொறுக்குவது உஞ்சம்.

பொருள் க்ஷத்திரியனுக்கும், வட்டிவாங்குதல்-வர்த்தகம்-அல்லது பயிரிடுதல் இவ்விரண்டும்-வைசியனுக்கும் நல்லவனிடத்தில் தானம்வாங்குவது பிராமணனுக்குமுயர்ந்தது.

௧௧௬—வயித்தியம்- தர்க்கமுதலிய வித்தை - சிற்பவேலைசெய்வது-அரசனிடத்தில் சேவகாவிர்த்திசெய்வது-மற்றும்யாரிடத்திலும் ஏவற்றொழில்செய்வது-பசுசவரக்ஷணம்-வர்த்தகம்-பயிர்- தயிரியம்-கண்டவிடத்திற் பிக்ஷையெடுப்பது-வட்டிவாங்குவது - இந்தப்பத்தும் ஆபத்காலத்தில் ஜீவநத்துக்குக்காரணமா யிருக்கின்றன.

௧௧௭—முக்கியமாய் பிராமணனும் க்ஷத்திரியனும் வட்டிவாங்கக்கூடாது. ஆனல் வட்டிப்பொருளை தருமத்துக்குபயோகப்படுத்துகிறவிஷயத்தில் கால்வட்டி அல்லது அரைவட்டிவாங்கலாம்.

[ஆபத்துக்காலத்திற்குரியக்ஷத்திரியஜாதித்தொழில்.]

௧௧௮—க்ஷத்திரியன் மிகுந்த ஆபத்துக்காலத்திலும் பிரஜைகளைக்காப்பாற்றுகிறபடியால் நாலிலொன்று தாநியத்திர்வைவாங்கிக்கொண்டாலும் தோஷித்தையடையமாட்டான்,

௧௧௯—அந்தக்ஷத்திரியனுக்குச் சத்துருவைஜயிப்பது ஜாதிதருமம், சண்டையில் பயத்தினல் திரும்பிவரக்கூடாது. ஆயுதமெடுத்து வைசியனைத் திருடரிடத்தில்நின்றுங் காப்பாற்றித் தருமப்படி மேற்சொல்லும்விதமாக கப்பம்வாங்கவேண்டும். (பெரும்பாலும் வைசியரே பணக்காறராயும், வியாபாரியாயும் இருப்பார் ஆதலால் இங்கு அவர்களைக்குறித்துக்காட்டியது.)

௧௨௦—தாநியவியாபாரஞ்செய்கிற வைசியாளிடத்தில் அந்த லாபத்தில் இருபதில் எட்டுப்பங்கையும் ஐம்பதிலொன்றுவாங்கவேண்டிய ரெக்கலாபத்தில் இருபதிலொன்றும் வாங்கிக்கொள்ளலாம்

எப்போதும்தொழில்செய்கிற சூத்திராளிடத்திலும்,தச்சன் - கருமான்-முதலிய தொழிலாளிகளிடத்திலும் தீர்வைவாங்கக்கூடாது மேற்சொன்னபடி வேலைவாங்கிக்கொள்ளுதல்தீர்வையாம்.

௧௨௧—சூத்திரன் பிராமணசிசுருஷையால் ஜீவிக்கக்கூடாதபோது க்ஷத்திரியனையாவது, தநிகனான வைசியனையாவது அடுத்து ஜீவிக்கலாம்.

௧௨௨—சூத்திரன் சுவர்க்கத்திற்காவது, ஜீவநத்திற்காகவாவது அல்லது இரண்டிற்குமாவது, பிராமணனையே தொழவேண்டும் இவன் பிராமணனையடுத்த சூத்திரனென்று ஒருவனுக்குப்பெயர்வந்தால் அதேயவனுக்குப்பாக்கியம்.

௧௨௩—ஆதலால் பிராமணனையுபசரிப்பதே சூத்திரனுக்கு எல்லாத்தொழிலையும்விட மேலானதருமமென்றும் மற்றவையெல்லாம் பயனில்லாதவையென்றும் கருமகாண்டத்திற் சொல்லியிருக்கிறது·(ஆனால் இங்கு அவனுக்கு பிராமணசிசுருஷையை துதிசெய்தவிஷயமேயன்றி மற்றதை நிந்திக்கிறவிஷயமன்று)

௧௨௪—பிராமணனும் தனக்குவேலைசெய்கிற சூத்திரன்சக்தியையும்,அவன்செய்யும்பணிவிடையையும் அவன்காப்பாற்றவேண்டிய குடும்பத்தையும் யோசித்து ஜீவநத்திற்குத்தக்கபடி கூலியேற்படுத்தவேண்டும்·

௧௨௫—பின்னும் மிகுந்தவந்நம்- பழையவஸ்திரம் - நொய்முதலிய ஸாரமில்லாததாநியம் பழையபாத்திரம் இவைமுதலானவற்றை அடுத்த சூத்திரனுக்குக்கொடுக்கவேண்டும்.

௧௨௬—சூத்திரனுக்கு சாப்பிடத்தகாத முள்ளங்கிமுதலியவற்றைச்சாப்பிட்டதனால் தோஷமில்லை.அவனுக்கு உபநயநமுதலிய சம்ஸ்காரமும் அக்கினிஹோத்திரமுதலியவும் கிடையாது. ஆனால்

பாக எக்கியமுதலியதருமகாரியங்கள்மாத்திரம் அவனுக்குநீக்கப்ப டவில்லை.

௧௨௭—தன்ஜாதிதருமமறிந்த சூத்திரர்கள் துவிஜாதிகளின்தரும மானபாகயக்கியத்தை அநுஷ்டிக்கும்போது வேதமந்திரமில்லாம ல்நமஸ்காரமந்திரத்தால் பஞ்சயக்கியங்களை குலவழக்கப்படி அநு ஷ்டித்தால் உலகத்தாரால் தூஷிக்கப்படாமல் நற்புகழையுமடை வார்கள்.

௧௨௮—சூத்திரன் எப்படியெப்படி பிறத்தியான்குணத்தைத் தூஷியாமல் துவிஜாதிகளைப்போல தானும் நல்லொழுக்கமாகந டக்கிறானோ அப்படியே இம்மையியில் புகழப்பட்டவனாய் மறு மையில் நற்கதியையும் அடைகிறான்.

௧௨௯—சூத்திரன் பொருள்சம்பாதிக்கத்தக்கவனா யிருந்தாலும் குடும்பத்திற்குபயோகமானதைவிட மிகவுமதிகபொருளைச் சம் பாதிக்கக்கூடாது. அப்படிசம்பாதித்தால் தன்னாலுபசரிக்கத்தக்க பிராமணனையே ஹிம்சைசெய்யவேண்டிவரும்.

௧௩௦—இதுவரையில் நாலுவருணத்தாருக்கும் ஆபத்தருமம் சொல்லிமுடிந்தது ஆபத்துக்காலத்தில் இந்தத்தருமங்களை சரியா கநடத்துகிறவர்கள் நற்கதியடைவார்கள்.

௧௩௧—இதுவரையில் நான்குவருணத்தாருக்கும் ஆசாரவிதியை நன்றாக முழுதுஞ்சொன்னேன் இனி நேரிட்டபாபத்தைப்போக் குவதால் சுபமான பிராயச்சித்தவிதியை சொல்லப்போகிறேன்.

பத்தாவதத்தியாயம்-முற்றிற்று.

ஆக-அத்தியாயம்-௧௦க்கு-சுலோகம் ௨௨௬௫.

பதினோராவது

# அத்தியாயம்.

## பிராயச்சித்தவிதி.

க—சந்ததி விருத்தியின்பொருட்டு கலியாணத்துக்காக யாசிப்பவன் தானத்தையும், பிராயச்சித்தமாக மேல் விதிக்கப்போகிறபடியால் அந்தத்தானம் கொடுக்கத்தக்கவர்களை முன்புசொல்லுகிறார் அவசியஞ் செய்யவேண்டிய ஜோதிஷ்டோமாதி யாகத்திற்காக யாசிப்பவன், தீர்த்தயாத்திரை ஸ்தலயாத்திரை செய்பவன், விசுவஜித்து யாகஞ்செய்யப் போகிறவன், குருதக்ஷிணைக்கும் தாயைக்காப்பாற்றவும்- தந்தையைக் காப்பாற்றவும்- வேதமோதவும்- யாசிப்பவர்கள், நோயாளி.

உ—இந்த ஒன்பதுபேர்களையும் ஸ்நாதகப்பிராமணனென்றும் தருமத்திற்காகப் பிக்ஷையெடுக்கிறவர்களென்றும் அறிந்து அவர்களுக்குப் பொருளில்லாவிடில் அவரவர்வித்தைக்குத்தக்கபடி பசு பொன்முதலிய தானங்கொடுக்கவேண்டும்.

ங—பிராமண சிரேஷ்டர்களான இந்த ஒன்பதுபேருக்குமாத்திரம் எக்கிய ❁ வேதிநடுவில் தக்ஷிணையுடன் அந்நம் போடலாம் மற்றவர்களுக்கு வேதிக்கு வெளியில் அந்நம் போட வேண்டும். இது சாஸ்திரமரியாதை.

ச—யாகஞ்செய்யும்போது அதற்கு உபயோகமான மணி-முத்து- முதலிய எல்லா இரத்நங்களையும் யாகதக்ஷிணைக்குப் போதுமான பொருளையும் வேதமோதினபிராமணர்களைத்தன்னிடத்தில்

❁ வேதியென்பது - யாகசாலைக்குள் அக்கினிகுண்டமிருக்கும் ஸ்தானம்.

வாங்கிக்கொள்ளும்படி அரசன் வேண்டிக்கொள்ள வேண்டியது.

௫—ஒருவன் விவாகஞ் செய்துகொண்டு பிள்ளைபிறந்தபின் காமத்தினால் ஒருவனிடத்தில் பொருளையாசித்து மறுபடி விவாகஞ் செய்து கொண்டால் அவனுக்கு அந்த ஸ்திரீயிடத்தில் புணர்ந்தது தான் பிரயோசநம் அவளுக்குப்பிறந்த மைந்தர்கள்செய்யும் தருப்பணமுதலிய காரியங்கள் பொருள்கொடுத்தவனையேசாரும் இந்தகாமத்தினால் யாசித்து மறுபடி விவாஹஞ்செய்யக்கூடாதென்பதையும் அவனுக்குப் பொருள்கொடுக்கிறவனுக்கு பலனில்லையென்பதையும்சொன்னதேயன்றி சந்ததிவிஷயமன்று.

௬—பசு-பூமி- பொன்- முதலியவற்றை வேதமோதினவர்களாயும் பிள்ளை மனையாள் முதலானவர்களிடத்தில் அதிகப்பற்றில்லாதவர்களாயும் இருக்கிற பிராமணனிடத்தில் தன்சக்திக்குத் தக்கபடி தாநஞ்செய்தால் சுவர்க்கத்தை யடைவான்.

௭—எவனுக்கு மூன்றுவருஷத்திற்காவது அல்லது அதற்குமேற் பட்டாவது குடும்பசம்ரக்ஷணைக்குப் போதுமானதிரவிய மிருக்குமோ அவன் காமியஸோமபாநஞ் செய்யலாம் நித்தியஸோமபாநத்திற்கு இந்தவேற்பாடில்லை.

௮—மேற்சொன்னகணக்குக் குறைந்தபொருளுள்ளவன் காமிய ஸோமபாநஞ்செய்தால் அவன் அதற்குமுன் செய்த நித்திய ஸோமபாநத்தின் பலனையும் அடையமாட்டான்.

௯—அதிகபொருளுள்ள எவன் தன்தாய்தந்தைமுதலிய பந்துக்கள் வறுமையினால் கஷ்டப்படும்போது இம்மையில் புகழுக்காக அந்நியாளுக்குத் தாநங்கொடுக்கிறானோ அந்தத்தாநம் தருமமன்று அது முன்னம் தேன்போல் ருசியுள்ளதாயும் பின்பு விஷம்போல் துன்பப்படுத்துகிறதாயுமிருக்கும் அதாவது யேதோபார்

க்கச்சே புகழ்வருகிறப்போ விருந்தாலும் பின்பு நரகமுண்டாகு மென்றுகருத்து.

௧௦—பின்னும் எவன் பிள்ளை மனைவிமுதலிய அவசியம் போஷிக்க வேண்டியவர்களைத் துன்பப்படுத்திப் பரலோகத்திற்காகத் தானஞ்செய்கிறனோ அந்தத்தானமும் அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் உபத்திரவத்தையே யுண்டுபண்ணும்.

௧௧—யாகஞ்செய்கிற க்ஷத்திரியனுக்கும் அதிலும் விசேஷமாய் பிராமணனுக்கும் யாகத்திற்கு எல்லா அங்கமுமிருந்து யாதாவது ஒரு அங்கங்குறைந்து அப்போது அரசனும் தருமிஷ்டனுகவிருந்தால்-

௧௨— அதிகபசுமுதலியவற்றால் செல்வமுடையவனும், யாகஞ்செய்யாதவனும், *ஸோமபானம் பண்ணுதவனும் இருக்கிற வவசியன் வீட்டிலிருந்து கேட்டுக்கொடாவிடில் வலிமைசெய்தாவது-களவுசெய்தாவது - அந்தயாகத்திற்குவேண்டிய திரவியத்தை யாகஞ்செய்வோன் கொண்டுவரலாம்.

௧௩—அவ்விதவைசிய னில்லாவிடில் யாகத்திற்கு இரண்டு மூன்று அல்லது அதிக அங்கங்குறைந்தாலும் செல்வமுள்ள சூத்திரன் வீட்டிலிருந்து யதேஷ்டமாக யோசனையின்றிக்கேளாமலும்வலிமையினுல் கொண்டுவரலாம் ஏனென்றால் அவனுக்கு ஒரு யாகத்திலுஞ் சம்பந்த மில்லையல்லவா.

௧௪—பின்னும் அவ்வித சூத்திரனில்லா விட்டாலும் அக்கிநிஹோத்திரஞ்செய்யாத பிராமணன் நூறுபசுவைக்காப்பாற்றுகிற

---

* ஸோமபானமென்பது - ஓர்யாகவிசேஷம் அது இருவகைப்படும்-நித்தியமென்றும்-காமியமென்றும்-அதில் சந்தியாவந்தனாதிகளைப்போல் அவசியம் செய்யவேண்டியது நித்தியம். ஒரு பலனை விரும்பிச்செய்வது காமிஷ்டம்.

வனாகவும்-யாகஞ்செய்யாதவன் ஆயிரம் பசுவைக் காப்பாற்றுகிற வனாகவும் இருந்தால் அவர்கள் வீட்டிலிருந்தும் மேற்சொல்லிய அங்கங்களை விசாரிக்காமல் கொண்டுவரலாம்.

௧௫—திநந்தோறுந்தான் தாநம்வாங்குகிறவனுயும் தானொரு வனுக்குந் தாநங்கொடாதவனுயும் இருக்கிறவனை மேற்சொல்லிய யாகத்திற்காக வேண்டியபொருளைக்கேழ்க்க கொடாவிடில் வலி மைசெய்தாவது- களவுசெய்தாவது - அவன் வீட்டிலிருந்து கொண்டுவரலாம் இப்படிசெய்தால் தருமம் வளரும் (அதாவது அந் தப் பொருளுடையவனுக்குப் நற்கதியுண்டாகு மாதலால் இதுத ருமவிருத்தி.)

௧௬—அப்படியே மூன்றுதிநம் உபவாசமிருந்து அவனுக்கு நாலாநாள் போஜநத்திற்காகப் பொருளில்லாவிடில் தாநதருமஞ் செய்யாதவனிடத்தி னின்றும் ஒருதிநத்திற்குப் போதுமானபொ ருளை களவுசெய்தாவது கொண்டுவரலாம்.

௧௭—யாகஞ்செய்யாதவன் தானியம்- களம்-கழனி- வீடு-இவற் றுள் எவ்விடத்தில்- அகப்படுமோ அவ்விடத்தினின்று மெடுத்து க்கொள்ளலாம் உடையவன் என்திருடினுயென்று கேட்டால் தான் செய்யும் யாகாதிதருமகாரியத்தை அவனுக்குச்சொல்லவேண்டும்

௧௮—க்ஷத்திரியனுக்கு இவ்வித ஆபத்து நேரிட்டாலும் அவன் ஒருபோதும் பிராமணன் பொருளை யபகரிக்கக்கூடாது வேறு எந்தவிதத்தாலும் பொருளகப்படாததான மிகுந்த ஆபத்து அவ னுக்கு வந்தால் சந்தியாவந்தநமுதலிய கிருத்தியத்தைச் செய்யா மலும் திருடுதல்முதலிய அகிர்த்தியத்தைச் செய்கிறவனுயும் இருக் கிற பிராமணன் க்ஷத்திரியன் இவர் பொருளை யபகரிக்கலாம்.

௧௯—தான்யாகஞ்செய்யாமலிருந்தாலும் எவன் யாகமுதலிய

தருமஞ் செய்யாத அஸத்தி னிடத்திலிருந்த பொருளைவாங்கி யாவது அபகரித்தாவது யாகஞ்செய்கிற சத்புருஷனுக்குக் கொடுப்பானே அவன் தன்னையோடமாக்கி பொருட்காரனையும் யாகஞ்செய்கிறவனையும் கரையேற்றிவைக்கிறான். (அதாவது பொருள் நல்லவிஷயத்தில் உபயோகமானதாலும் பொருளில்லாததினா லுண்டான துன்பம் நீங்கினதாலும் இருவருக்கும் முறையே சுகமுண்டாகிறது)

௨0—யாகஞ்செய்கிறவன் பொருளை தேவதைகளின்பொருளென்றும், யாகஞ்செய்யாதவன்பொருளை அசுரர்கள்பொருளென்றும், பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஆதலால் ஆசுரப்பொருளை தேவப்பொருளாக்குவது தருமமாகும்.

௨௧—தருமசிந்தையுள்ள அரசன் இவ்விதமாக திருடிவந்து யாககாரியஞ்செய்கிறபிராமணனை தண்டிக்கக்கூடாது. அரசன் மூடத்தன்மையால் பிராமணன் பசியினால்துன்பத்தையடைகிறான்.

௨௨—ஆதலால் அரசனந்தப் பிராமணன்குடும்பத்தையும் தருமநடையையும் அவன் ஓதினவேதத்தையும் ஒழுக்கத்தையும் பார்த்துத் தன்அரண்மனையிலிருந்து அவனுக்குப்போதுமான ஜீவநவிருத்தியை ஏற்படுத்தவேண்டும்.

௨௩—அந்தப்பிராமணனுக்கு ஜீவநமுண்டாக்கி நாலுபக்கத்திலும் அவனைக்காத்தால் அவன்செய்கிறதருமத்தில் ஆறிலொன்று அரசனுக்குவரும்.

௨௪—யாகஞ்செய்கிறதற்காக பிராமணன் ஒருபோதுஞ் சூத்திரனிடத்தில் பொருளை யாசகம்வாங்கக்கூடாது. வாங்கி யாகஞ்செய்தால் சண்டாளனாகப்பிறப்பான். க்ஷேமமிருக்கும்போது வலுவில் அவன்கொடுத்ததைவாங்கினால் குற்றமில்லை முன்புயாச

கஞ்செய்யும்போது மத்தியில் பொருளில்லாதிருந்தால் சூத்திரன் பொருளை உபயோகப்படுத்தலாமென்று சொல்லியது. இங்குமுக்கியமாய் எல்லாப்பொருளையும் வாங்கக்கூடாதென்பது.

௨௫—ஒருபிராமணன் யாகத்திற்காக யாசித்துவாங்கினபொருளை முழுதும் அந்தயாகத்தில் தானஞ்செய்யாவிடில் அந்தப்பிராமணன் பாசப்பக்ஷி அல்லது காகமாகவாவது பிறந்து நூறுவருஷமிருப்பான்.

௨௬—ஆசையினால் தேவசொத்தையாவது பிராமணன்சொத்தையாவது அபகரித்தபாபியானவன் மறுபிறப்பில் கழுகுதின்னமாம்ஸமீதியினால் ஜீவிப்பான்.

௨௭—மேற்சொல்லியபடி நித்தியசோமயாகஞ்செய்யக்கூடாவிடில் அதற்குப்பிராயச்சித்தமாக வருஷந்தோறும் சித்திரைமாதத்தில் ஒருவிசைவைசுவானர எஷிட்டியையாவது செய்யவேண்டியது

௨௮—பிராமணனானவன் தனக்கு ஆபத்தில்லாதபோது ஆபத்காலதருமத்தை யநுஷ்டித்தால் பரலோகத்தில் அதன்பயனையடையமாட்டானென்று பெரியோர்கள் நிச்சயஞ்செய்திருக்கிறார்கள்.

௨௯—விசுவேதேவர்-சாத்தியர்-பிராமணர்-மஹருஷிகள்-இவர்களனைவருங்கூடி ஆபத்காலத்திலும் முக்கியதருமத்தையேயநுஷ்டித்தால் மரணநேரிடுமேயென்று பயந்து முக்கியமானதருமத்திற்குப்பதிலாக கெவுணதருமத்தை ஆபத்திற்கேற்பாடுசெய்தார்கள் ஆதலால் திராதகாலத்திற்குமாத்திரம் தோஷமில்லை.

௩0—ஆதலால் முக்கிய அநுஷ்டானத்துக்கு அதிகாரியாயிருந்து கௌணநுஷ்டானத்தைச்செய்தால் அந்தப்புத்திகெட்டவன் மறுமையிற்பலனையடைகிறானில்லை.

௩௧—தருமமறிந்தபிராமணன் அரசனிடத்தில் ஒருவழக்குஞ் சொல்லிக்கொள்ளவேண்டியதில்லை தனக்கபகாரஞ்செய்பவர்களை தானேயபிசாரமந்திரத்தின் வீரியத்தினால் சிக்ஷிக்கலாம். (அதாவது இங்கு தனக்குஅந்நியாயஞ்செய்பவனை தானும் சிக்ஷிக்கலாமென்று கருத்தே தவிர அரசனிடத்தில் அறிவிப்பதை நிந்தித்தவிஷயமன்று)

௩௨—சுவாதீநமான தன்சகத்தி பராதீநமான-அரசன்சக்தி-இவ்விரண்டில் தன்னுடையசக்தியே மேலானது ஆகையால் பிராமணன் தன்சக்தியினாலேயே சத்துருக்களையடக்கவேண்டும். அவர்களின் சக்தியை பின்னால் முறையேகாண்க.

௩௩—அதர்வணவேதத்திற்சொல்லிய ஆங்கீரசமுதலிய அபிசார மந்திரங்களை யோசியாமற்பிரயோகிக்கலாம். அந்தமந்திரமுள்ள வாக்கே பிராமணனுக்காயுதமாகையால் அதைக்கொண்டே யவன் சத்துருவைஜயிக்கவேண்டும்.

௩௪—க்ஷத்திரியன் தன்புஜபலத்தினால் தன்னுடைய ஆபத்தைப்போக்கவேண்டும். வைசிய சூத்திரர்கள் தன்பொருளைக்கொடுத்து தங்கள் ஆபத்தைப் போக்கிக்கொள்ளவேண்டும். பிராமணன் மேற்சொன்னபடி அபிசாரமந்திரத்தினால் செய்யப்படுகிற செபஹோமங்களால் ஆபத்தைப்போக்கிக்கொள்ளவேண்டும்.

௩௫—சாஸ்திரத்தில் விதித்தகர்மங்களை அநுஷ்டிக்கிறவனாயும்சிஷ்யாதிகளை சிக்ஷிக்கிறவனாயும் பிராயச்சித்தமுதலிய தருமத்தை விதிக்கிறவனாயும் யாவருக்கும் மித்திரனாயும் இருக்கிற பிராமணன் மயித்திரப்பிராமணனென்று சொல்லப்படுகிறான். ஆதலால் அவனுக்கு அநிஷ்டமாநத்தைச்சொல்லவும் அவனைத் துச்சமாய்ப்பேசவும் நிந்திக்கவுங்கூடாது.

## அக்கிநிஹோத்திரிவிஷயம்.

௩௬—விவாகமாகாத கந்நிகை-யுவதி - அற்பவித்தையுள்ளவன் மூடன் அல்லது சிறுவன்-துக்கமுள்ளவன்-பிணியினன்- உபநயந முதலிய சம்ஸ்காரமில்லாதவன்-இவர்கள் ஒருவனுடைய வைதீகாக்கிநியில் அவனுக்காக ஹோமஞ்செய்யக்கூடாது.

௩௭—அவர்கள் ஹோமஞ்செய்தால் அக்கிநிக்குடையவனுடன் நரகத்தையடைவார்கள். ஆகையால் வேதமறிந்தவனுயும், அக்கிநி காரியமறிந்தவனுயுமிருக்கிறவனே ஹோமஞ்செய்யவேண்டும். ஆதலால் தனக்கு அஸௌகரியம்நேரிட்டபோது தக்கவர்களைக்கொண்டே ஹோமஞ்செய்யச்சொல்லவேண்டியது.

௩௮—பிராமணன்பொருளுள்ளவனுகவிருந்து அக்கிநி † ஆதானஞ்செய்துகொள்ளும்போது பிரஜாபதியைத் தேவதையாகவுடைய அசுவத்தை தக்ஷிணையாகக்கொடாவிடில் ஆஹிதாக்கிநியாகமாட்டான். ஆதலால் ஆதாநகாலத்தில் அசுவத்தை தாநஞ்செய்யவேண்டியது.

௩௯—புண்ணியகாரியத்தில் அன்புள்ளவன் இந்திரியங்களையடக்கிக்கொண்டு தீர்த்தயாத்திரைமுதலானபுண்ணியங்களை அன்போடு செய்யக்கடவனேயல்லது ஒருபோதும் கொஞ்சந்தக்ஷிணையையுடைய யாகத்தைச்செய்யக்கூடாது.

௪0—தக்ஷிணை கொஞ்சமாகக்கொடுத்து யாகஞ் செய்தால் கண்முதலிய இந்திரியங்கள் இம்மையில்-யஸஸு-புத்திரர்- பசுக்கள்-ஆயுள்- மறுமையிற்கீர்த்தி-சுவர்க்கம்-இவையெல்லாம் அழிந்து

---

† ஆதாநமென்பது - அக்கிநிஹோத்திரி செய்யவேண்டிய ஓர்கருமவிசேஷம்.

போய்விடும். ஆகையால் சொற்பதநமுள்ளவன் யாகஞ்செய்யக்கூடாது.

௪௩—அக்கிநிஹோத்திரியான பிராமணன்-காமகாரத்தினால்-இரண்டுகாலம் ஹோமஞ்செய்யாவிட்டால் அது புத்திரஹத்திக்குச்சமானமானதாகையால் அதற்கு பிராயச்சித்தமாக ஒருமாதம் சாந்திராயணவிரதமிருக்கவேண்டும்.

௪௨—எந்தப்பிராமணர்கள் சூத்திரனிடத்திற் பொருளைதாநம் வாங்கி அக்கிநிஹோத்திரஞ்செய்கிறார்களோ அவர்கள் அந்தச்சூத்திரனுக்கு ரித்துவிக்குகளாகச் சொல்லப்படுவார்களேயன்றி அதின்பயனையடையமாட்டார்கள் பின்னும் பிரமவாதிகளுக்குள் பழிக்கப்படுவார்கள்.

௪௩—அவ்விதமாக சூத்திரன்பொருளால் அக்கிநிஹோத்திரஞ்செய்கிற அந்தமூடனான பிராமணன்றலையில் பொருள்கொடுத்த சூத்திரனானவன் காலைவைத்தேறி பரலோகத்தில் தன்கஷ்டங்களைத் தாண்டுகிறான்.

௪௪—நாடோறும் செய்யத்தக்க சந்தியாவந்தந கிர்த்தியங்களைச் செய்யாதவனும்,ஜீவஹிம்ஸைமுதலிய அகிர்த்தியங்களைச்செய்பவனும் மநம்போனபடி விஷயப்பற்றுள்ளவனாயிருப்பவனும் பிராயச்சித்தஞ்செய்துகொள்ளத்தக்கவனாவான்.

௪௫—தெரியாமையால்செய்தபாவத்திற்கு பிராயச்சித்தமுண்டென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். சிலர் காமகாரமாகச் செய்தபாவத்திற்கும் பிராயச்சித்தமுண்டென்று வேததிருஷ்டாந்தத்தினால் சொல்லுகிறார்கள். அதாவது வேதத்தில் இந்திரன்புத்திபூர்வகமாய்ப் பாபஞ்செய்து பிராயச்சித்தஞ்செய்துகொண்டதா இருக்கிறது.

சசு—இவ்வளவுபாபம் வருமென்று தெரியாமையாற் செய்த பாபம் வேதாத்தியயநத்தினுற் போய்விடும். தெரிந்து வேண்டுமென்று மூடத்தனத்தாற் செய்தபாவம் தாநம் தவம்முதலிய பலபல பிராயச்சித்தங்களாற் போகும்.

சஎ—பிராமணன் முதலியவர்கள் முன்ஜநநத்தில்செய்த வினையாலாவது இந்தஜநநத்தில் தெய்வகதியாலாவது பிராயச்சித்தஞ் செய்துகொள்ளும்படியான பாபம் நேரிட்டால் செய்துகொள்ளுகிறவரையில் பெரியோர்களுடன் யஜநயாஜநாதி காரியங்களில் சேராம லிருக்கவேண்டும்.

சஅ—சில துராத்துமாக்கள் இப்பிறவியின்வினையினாலும் சில துராத்துமாக்கள் முன்செய்தவினையாலும் விகாரரூபத்தை யடைகிறார்கள்.

## பாபசுவரூபம்.

சகூ—முன்பிறப்பில் சுவர்நந்திருடினவன் கோண நகத்தையும் சுராபாநஞ்செய்தவன் சொற்றைப்பல்லையும் பிரம்மஹத்தி செய்தவன் க்ஷயரோகத்தையும் குருபத்நியைப் புணர்ந்தவன் பீஜமில்லாமையையும்.

ரு0—ஒருவனிடத்திலிருக்கிற தோஷத்தைச்சொன்னவன் நாற்றமூக்கையும் இல்லாததோஷத்தைச் சொன்னவன் நாற்றவாயையும் தாநியந்திருடினவன் அங்கக்குறைவையும் நல்லதாநியத்தில் கெட்டதைக்கலந்து விற்றவன் அதிகவங்கத்தையும்.

ருக—சோறுதிருடினவன் அக்கினிபுஷ்டி யில்லாமையையும் குருவுக்குத் தெரியாமலோதினவன் ஊமைத்தன்மையையும் வஸ்திரந்திருடினவன் வெண்குஷ்டத்தையும் குதிரைதிருடினவன் நொண்டித்தன்மையையும் மறுபிறப்பில் அடைவான்.

௰௨—இவ்விதமான கருமபேதங்களால் ஜடனும்- ஊமையாயும்- குருடனும்- செவிடனும்- பிறந்து விகாரமுள்ள வர்களாயும்- பெரியோர்களால் நிந்திக்கப்பட்டவர்களாயும்- முன் அநுபவித்ததுபோக மிகுதி இருக்கிறதை யநுபவிக்கிறார்கள்.

௰௩—ஆகையால் எப்போதும் செய்தபாபங்களுக்குப் பிராயச்சித்தஞ் செய்துகொள்ளவேண்டும். இல்லாவிடில் மறுமையில் நரகத்தை யநுபவித்தும் பழிக்கத்தக்க அடையாளங்களோடும் பிறப்பார்கள்.

௰௪—பிரமஹத்தி-சுராபாநம்- சுவர்நம்-திருட்டு-குருபத்திநியைப் புணர்தல்-இவர்களோடு தனித்தனியே சேர்ந்திருத்தல்-ஆக இவ்வைந்தும் மஹாபாதகங்கள்.

௰௫—பெரியோரிடத்துப் பொய்சொல்லுதல்- அரசனிடத்தில் ஒருவனுக்கு பிராணஹாநிவரும்படி கோட்சொல்லுதல்-குருவுக்குப் பொய்யாக வொருதோஷத்தைக் கற்பித்தல்-இவைகள் பிரமஹத்திக்குச் சரியானவைகள்.

௰௬—ஓதினவேதத்தை மறப்பது-தர்க்கசாஸ்திரயுக்தியைக்கொண்டு வேதத்தை நிந்திப்பது-பொய்சாக்ஷிசொல்வது -மித்திரனைக் கொல்வது- நிந்திக்கப்பட்டவைகளான மலமுதலியவற்றைச் சாப்பிடுதல்-இந்த ஆறும் சுராபாநத்திற்குச் சரியானது.

௰எ—நிக்ஷேபம்- மானுடன்- வெள்ளி- குதிரை- பூமி- வச்சிரம் மணி- இவைகளைத் திருடுவது சுவர்நத்திருட்டுக்குச் சரியானவை.

௰அ—தன்சகோதரிகள் - கந்நியாஸ்திரீகள் - சண்டாளஸ்திரீ- தோழன்-பிள்ளை-இவர்களின் மனையாள் இவர்களைப்புணர்வது குருபத்திநியைப் புணர்ந்ததற்குச் சரியானது.

## உபபாதகம்.

௬௯—கோஹத்தி -ஈநனுக்கு யாகஞ்செய்வித்தல்-ஒருவன்மனை யாளைப் புணர்தல்-தன்னைவிற்றல்- குரு-தாய்-தந்தை-வேதம்-அக்கி நி- புத்திரன்-இவர்களை உபசரியாமல் நீக்குதல்-பிரமயக்கியம் செய்யாமை.

௭0—பரிவித்தியாயிருப்பது பரிவேத்தாவாயிருப்பது அவர்களுக்குப்பெண் கொடுப்பது கலியாணஞ் செய்விப்பது.

௭௧—கந்நிகையை அபாயஸ்தாநத்தில் விரலினால் துன்பப்படுத்துவது அதிகவட்டி வாங்கி ஜீவித்தல்-பிரமசாரியாயிருந்து மைதுநஞ்செய்தல்-குளம்- நந்தவநம்- மனையாள் - மைந்தன் - இவர்களைவிற்றல்.

௭௨—காலத்தில் உபநயந முதலியவற்றைச் செய்துகொள்ளாமை-சிற்றப்பன்முதலிய பந்துக்களை நீக்குதல்- சம்பளம் வாங்கிக்கொண்டு வேதமோதுவித்தல்-சம்பளங்கொடுத்தோதல் -எள்ளுமுதலியவற்றை விற்றல்.

௭௩—தங்கசாலைமுதலிய விடங்களி லதிகாரஞ்செய்தல்-வெள்ளத்தைத்தடுத்து அணைகட்டுதல்- பூஞ்செடிகளை யழித்தல்-மனைவியையேனும் வேசியையேனும் கூட்டிக்கொடுத்துப் பிழைத்தல் சியேனயாகஞ்செய்தல்-ஒருவனை மந்திரத்தாலாவது மருந்தாலாவதுவசப்படுத்தல்.

௭௪—சமையல் விறகுக்காக பச்சைமரத்தை வெட்டல்-தெய்வத்தைகுறிக்காமல் தனக்காகச்சமைத்தல்-பழிக்கப்பட்ட பதார்த்தம் அந்நம் இவற்றைப்புசித்தல்.

௭௫—சக்தியிருந்து அக்கிநிஹோத்திரஞ் செய்யாமை

பொன் நீங்கலாக மற்றதை திருடுகை-கடனைத்தீர்க்காமை- கெட்ட சாஸ்திரத்தை யோதுதல்-கூத்தாடுதல்- பாடுதல்.

௬௬—தாநியம்- லோகப்-பசு- இவைகளைத்திருடுதல்- குடிக்கிற மனையாளைப் புணர்தல், ஸ்திரீ-சூத்திரன்- வைசியன்- க்ஷத்திரியன் இவர்களைக்கொல்லுதல், இவையெல்லாம் தனித்தனியே உபபாதகமென்றறிக.

## ஜாதிப்பிரம்சகரம்.

௬எ—பிராமணனுக்கு நோயுண்டாக்குதல் கள்ளு-வெங்காயம் மலம்- இவைகளை முகருதல் புருஷன்வாயில் மைதுநஞ்செய்தல் இவையெல்லாம் தனித்தனியே ஜாதிப்பிரம்சகரங்களாம்.

## ஸங்கரிகரணம்.

௬அ—கழுதை-குதிரை-ஒட்டகம்- மிருகம்-யானை- வெள்ளாடு- செம்மறியாடு-மச்சம்-பாம்பு- எருமைக்கடா- இவைகளைக் கொல்லுதல் தனித்தனியே ஸங்கரீகரணமாகும்.

## அபாத்திரீகரணம்.

௬௯—நிந்திக்கப் பட்டவனிடத்துப் பொருள்வாங்குதல்-வர்த்தகஞ்செய்தல்· சூத்திரசேவைபண்ணுதல் - பொய்சொல்லுதல்- இவையெல்லாந் தனித்தனியே அபாத்திரீகரணம்.

## மலிநீகரணங்கள்.

எ0—புழு-பூச்சி-பக்ஷி- இவைகளைக்கொல்லுதல்,கள்ளுக்கூடையில் வைத்துக்கொண்டுவந்த காய்முதலியவற்றைச் சாப்பிடுதல்-பழம்-விறகு-புஷ்பம்- இவைகளைத்திருடுதல் சொற்பவிஷயத்திலகமாக வியசநப்படுதல் இவையெல்லாந் தனித்தனியே மலிநீகரணங்கள்.

எக—இப்போது சொல்லிவந்த பிரமஹத்திமுதலிய பாபங்களெல்லாம் எந்தெந்தப் பிராயச்சித்தத்தால் போக்கடிக்கப்படுமோ அதை நன்றாகவறியுங்கள்.

## பிரமஹத்திபிராயச்சித்தம்.

எஉ—குணமுள்ள பிராமணன் அஞ்ஞானத்தால் பிரம்மஹத்தி செய்துவிட்டால் அந்தப்பிராமணன் மண்டையோடு - அல்லது மற்றொரு மண்டையோட்டையாவது கையில் அடையாளமாக வைத்துக்கொண்டு நாடோறும் ஏழுவீட்டில் பிக்ஷையெடுத்துப் புசித்துத் தான் பரிசுத்தனாகும்பொருட்டுப் பன்னிரண்டுவருஷம் காட்டில்குடிசைபோட்டுக்கொண்டு வாசஞ்செய்யவேண்டும்.

எ௩—க்ஷத்திரியன் காமகாரத்தினாலே பிரம்மஹத்திசெய்தால் தன்னை பிரமஹத்திசெய்தவனென்றறிந்து ஒருவில்லாளி கொல்லும்படியாக அவன்பாணத்திற்குக்குறியாகக்கடவன். அந்தப்பாணத்தாலடிபட்டு இறந்தாலும் பிழைத்தாலும் பரிசுத்தனாவான். அல்லது எரிகின்றநெருப்பில் தலைகீழாகமூன்றுவிசைவிழக்கடவன்.

எச—மூன்றுவருணத்தாரும் அக்கியானத்தால் பிரம்மஹத்தி செய்தால் அசுவமேதம்-சுவர்ஜ்ஜித்து-கோமேதம்-அபிஜித்து - விசுவஜித்து-திரிவிருத்து-அக்நிஷ்டுத்து-இவைகளிலொருயாகத்தையாவது செய்யவேண்டும்.

எரு—வேதமோதினவர்களாயும் அக்கினிஹோத்திரிகளாயும் இருக்கிற மூன்றுவருணத்தாரும் ஒழுக்கமில்லாதபிராமணனை அக்கியானத்தாற் கொன்றுவிட்டால் அந்தத்தோஷநீங்குவதற்காக ஜிதேந்திரியாளாய்கொஞ்சமாகப்புசித்துக்கொண்டு ஏதாவதுஒருவேதத்தைமுழுதும்சொல்லிக்கொண்டு நூறுயோசனைதூரம் வனாயில்புண்ணியயாத்திரைசெய்யவேண்டும்.

எசு—ஜாதிமாத்திரபிராமணனை அக்கியானத்தால் தநிகனான பிராமணன்கொன்றால் வேதமோதினபிராமணனுக்கு தன்னுடைய சகலஆஸ்தியையும் தானஞ்செய்யவேணும் அல்லது அவன்ஜீவநத்துக்குப்போதுமானவிருத்தியை கற்பித்து பாத்திரமுதலியசாமக்கிரியைகளோடு வீட்டையாவதுகொடுக்கவேண்டும்.

எஎ—ஜாதிமாத்திரபிராமணனை குணமுள்ளபிராமணன் வேண்டுமென்றுகொன்றால் காட்டுநெல்லைப்பொறுக்கிச்சாப்பிட்டுக்கொண்டு சரஸ்வதிநதி கண்ணுக்குத் தெரிவதுதுவக்கி அதனுற்பத்திஸ்தானம்வரையில் பிரவாகத்திற்குஎதிராகப்போகவேண்டும். அல்லது நியமமாக மேற்சொன்னபடி புசித்துக்கொண்டு மூன்றுவேதத்தையும் மூன்றுதரம் ஓதவேண்டும்.

எஅ—மேற்சொன்ன பன்னிரண்டுவருஷிவரையில் விதிப்படி க்ஷவரஞ்செய்துகொண்டு - ஊர் ஓரத்திலிருக்கப்பட்ட மாட்டுத்தொழம் அல்லது ருஷிஆசிரமம்-மரத்தடி-இந்தவிடத்திலிருந்து கொண்டு பசு-பிராமணர்-இவர்களுக் குபகாரஞ் செய்யவேண்டியது.

எகூ—அந்தப் பன்னிரண்டுவருஷித்துக்குள் பிராமணனையாவது பசுவையாவது நீர்-நெருப்பு-இவற்றிலிருந்து காப்பாற்றுவதற்காக தன்பிராணனைவிட்டாலும் அல்லது அவர்களைத் தன்னுயிரைக்கொடுத்து வேறேவிதத்திற்காப்பாற்றினாலும் பிரமஹத்தித்தோஷத்தினின்று நீங்குவான்.

அ௦—அல்லது ஒருபிராமணனுடைய எல்லாப்பொருளையும் திருடிக்கொண்டுபோகிற திருடனுடன் மூன்றுதரம் சண்டைசெய்து அத்திருடனைப்பிடித்தாலும் பிடியாவிடினும் ஒரோதடவையி லப்பொருளைப் பிடுங்கிவந்துகொடுத்தாலும் பிரம்மஹத்தியி

னின்று நீங்குவான் அல்லது அந்தப்பிராமணன் அத்திருட்டுப்போ னதினால் உயிரைவிட யத்தநித்தால் அந்தப்பிராமணனை தன்பொருளைக்கொடுத்து காப்பாற்றினாலும் பிரம்மஹத்தியினின்று நீங்குவான்.

௮௧—இவ்விதமாக நாடோறும் உறுதியான விரதமுள்ளவனாய் மநதை யடக்கிக்கொண்டு பன்னிரண்டு வருஷம்வரையில் ஸ்திரீ போகமில்லாமல் பிக்ஷையெடுத்து ஜீவித்தால் பிரம்மஹத்திதோ ஷத்தினின்றுநீங்குவான்.

௮௨—நற்குணமுள்ள பிராமணன் வேதமோதாத ஒருபிராம ணனை அஞ்ஞாநத்தால்கொன்றுவிட்டால் அசுவமேதஞ்செய்கிற அரசன்முன்பாக அந்தயாகத்தில் ரித்துவிக்காகவிருக்கிற அநேகம் பிராமணாளுக்கெதிரில் தான்செய்த பிரமஹத்தியைச்சொல்லி அ வர்களிடத்தில் ஆஞ்ஞைபெற்றுக்கொண்டு அந்தயாகமுடிவில் அ வபிருதஸ்நாநஞ்செய்து தன்பாபத்தைப் போக்கடித்துக்கொள் ளலாம்.

௮௩—ஏனென்றால் பிராமணன் தருமத்தை உபதேசிப்பதால் அதற்கு அடியாயும், க்ஷத்திரியன் தருமம்கெடாமல் காப்பாற்று வதால் நுனியாயும் இருக்கிறான் ஆதலால். அவ்விருவர் சமுகத்தி ல் தன்பாபத்தைத்தெரிவித்து அசுவமேதத்திலும் அவபிருதஸ்நா நஞ்செய்தால் பரிசுத்தனாகிறானென்று சொல்லப்பட்டது.

௮௪—பிராமணன்பிறப்பினாலேயே தேவர்களுக்கும் பூசிக்கத் தக்கவனாகவிருக்கிறான். மனிதர்களுக்குள் மிகவும் உயர்ந்திருக்கிறா ன்.என்பதில் கேழ்க்கவேண்டியதில்லை பின்னும் உலகத்தாருக்கு ந ம்பத்தகுந்த பிரமாணமாகவிருக்கிறான் இவ்விஷயத்தில் அவனுப தேசிக்கிற வேதமந்திரமேகாரணம்.

அரு—ஆதலால் பிராமணர் எதிரில் தான்செய்த பாபத்தைச் சொல்லிக்கொண்டால் அதற்கு மூன்றுக்குக்குறையாத வேதமோதின பிராமணுள் எந்தப்பிராயச்சித்தத்தை விதிப்பார்களோ அதைச்செய்தால் அந்தப்பாபம்போய்விடும். ஏனென்றல் அவர்களின்வாக்கே பரிசுத்தமானதல்லவா.

அசு—பிரமஹத்திசெய்த பிராமணன் இப்போதுசொல்லிவந்த பிராயச்சித்தங்களுக்குள் யாதாவதொன்றைப் பரிசுத்தனுய் சாக்கிரலதையுடன்செய்தால் தோஷத்தினின்றுநீங்குவான்.

அஎ—பிராமணகருப்பத்தையழித்தாலும், யாகஞ்செய்ய யத்தநித்திருக்கிற க்ஷத்திரியன்- வைசியன்- ருதுஸ்நாநஞ்செய்திருக்கிறபிராமணப்பெண்-இவர்களைக்கொன்றாலும் இந்தப்பிரமஹத்திக்குவிதித்த பிராயச்சித்தத்தையேசெய்யவேண்டும்.

அஅ—பூமி - பொன்- இவைமுதலியவிஷயத்தில் பொய்சாக்ஷி சொன்னவனும்-குருவுக்கு-அபவாதங்கற்பித்தவனும், தோழனைக் கொன்றவனும்,ஆஹிதாக்கிநியான பிராமணனுடைய தருமபத்தியைக்கொன்றவனும், பிரமஹத்தி பிராயச்சித்தமேசெய்துகொள்ளவேண்டும்.

அகூ—இதுவரையில் அக்கியாநத்தால் பிராமணவலதைசெய்ததற்கு பிராயச்சித்தஞ்சொல்லப்பட்டது. அடத்தினுல் வேணுமென்றுசெய்த பிரமஹத்திக்குப் பிராயச்சித்தமே விதிக்கப்படவில்லை.(அதாவது அதற்கு இந்தப்பிராயச்சித்தப் போராது. இதற்கு ரெட்டிப்பாயாவது மூன்றுபங்காயாவது செய்யவேண்டுமென்று கருத்து.)

## சுராபாநப்பிராயச்சித்தம்.

கூ0—துவிஜர்கள் காமகாரத்தால் பைஷ்டியென்னும் சாராயத்தைக்குடித்தால் அதற்குப்பிராயச்சித்தமாக அந்தச்சாராயத்தை

யே நெருப்புநிறமாகக்காச்சி குடிக்கக்கடவர். அதனால் அவனுடல் வெந்துபோனால் பரிசுத்தனுவான்.

௯௧—அல்லது நெருப்புநிறமாகக்காச்சப்பட்ட கோமூத்திரம் தண்ணீர் பசுவின்நெய்-பால்-சாணச்சலம்-இவற்றிலொன்றை தானிறக்கும்படி ஒருதரமேனும் இரண்டுதரமேனும் சாப்பிடவேண்டும்.

௯௨—தெரியாமல் சுராபாநஞ்செய்தவன் அந்தப்பாபத்தைப் போக்குகிறதற்காக கந்தைவஸ்திரம்-சடை- இவைகளைத்தரித்துக்கொண்டு - சாராயச்சட்டியை கையில் அடையாளமாக வைத்துக்கொண்டு ஒருவருஷம்வரையில் நொய்யையாவது பிண்ணாக்கையாவது இரவிலொருவேளை சாப்பிட்டுக்கொண்டு இருக்கவேண்டும்.

௯௩—பைஷ்டியென்னும் சாராயமானது-அரிசியின் மாவினுல் செய்யப்படுகிறபடியால் அது அந்நங்களின்மலம் அந்தமலத்திற்கு பாபமென்றுபெயர். ஆதலால் மூன்றுவருணத்தாரிலொருவனும் அதைக்குடிக்கக்கூடாது.

௯௪—சாராயம் *கௌடி ❁பைஷ்டி ⳨ மாத்வி-என மூவகைப்படும். இவற்றில் பைஷ்டிக்கும் மற்றவிரண்டுக்கும் ஒன்றுக்கொன்றுபேதமில்லை ஆகையால் இவையெல்லாவற்றையும் துவிஜாதிகள் குடிக்கக்கூடாது.

௯௫—அநேகவிதமான கள்ளு- மாம்ஸம்-மூன்றுவிதசாராயம் † ஆசவம்இவைகள்-இராக்கதர்-யக்ஷர்-பைசாசர்- அசுரர் - இவர்க

---

* கௌடி-என்பது-வெல்லத்தால்செய்யப்பட்டது, ❁ பைஷ்டி-என்பது முன்சுலோகத்திற் சொல்லியாயிற்று, ⳨ மாத்வி- என்பது-இலுப்பப்பூவினுல்செய்யப்பட்டது.

† ஆசவம்-என்பது-புதிதாயிறக்கின கள்ளு.

ளின்உணவு ஆதலால் தேவார்ஹமான ஹவிசைப்புசிக்கிற அந்தண ர் புசிக்கக்கூடாது.(இது பிராமணஸ்திரீகளுக்குந்தான்விதித்தது)

௯௬—ஏனென்றால் அந்தணன்-சாராயங்குடித்து-மயக்கத்தை யடைந்தால் மலத்தில்விழுவான். அல்லது வேதமந்திரத்தையாவ து-தகாதவிடத்திற்சொல்லுவான். அல்லது பிரமஹத்திமுதலிய தகாதகாரியங்களையாவது செய்வான். (இது அனைவருக்கும்சரியா னதாகவிருந்தாலும் அந்தணனைக்குறித்தது பிரதானமாகையாலெ ன்று அறிக.)

௯௭—எவனிடதேகத்தில்வசிக்கிற அந்தரியாமியான பரப்பிர ம்மமானது ஒருவிசையாவது சாராயத்தால் நனைக்கப்படுமோ அவனுக்குப் பிராமணத்தன்மைபோய் சூத்திரத்தன்மை வரும் ஆதலாலொருபோதுங்குடிக்கக்கூடாது.

௯௮—இப்போது சுராபானத்திற்கு பலவிதமான பிராயச்சித் தஞ்சொல்லப்பட்டது. இனி பொன்திருட்டுக்குப் பிராயச்சித்தஞ் சொல்லப்போகிறேன்.

## பொன்திருட்டுக்குப்பிராயச்சித்தம்.

௯௯—பொன்னைத்திருடின பிராமணன் அந்தப் பொன்னையு டையவனிடத்தில் கொடுத்துவிட்டு தன்தோளில் உலக்கையைவை த்துக்கொண்டு அரசன் முன்பாகப்போய் தன்குற்றத்தைச்சொல் லி என்னை நீர் தண்டிக்கக்கடவீரென்று சொல்லவேண்டும்.

௧00—அரசன்-தானே அந்தவுலக்கையைவாங்கி அவனை ஒரேத ரமடிக்கவேண்டும். திருடன் அந்தவடிபட்டுச்செத்தாலும் பிழை த்தாலும் பரிசுத்தனாகிறான். அந்தத்திருடன் வேதமோதின பிரா

மணாயிருந்து அவனை அரசன் அடிக்கமாட்டோமென்றால் தவ த்திறாற் பாபத்தைப்போக்கடிக்கவேண்டும்.

௧0௧—பொன் திருடினதால் வந்தபாபத்தை தவத்தாற்போக்க மநதுள்ள அந்தணன் காட்டிற்போய் மாவுரி யுடுத்திக்கொண்டு பன்னிரண்டுவருஷம் பிரம்மஹத்திக்குவிதித்த விரதத்லதச்செய் யக்கடவன்.

௧0௨—பிராமணன்பொன்னைத்திருடினதால்வந்த பாபத்தை அந்தணனும் மற்றவர்களும் இப்போதுசொல்லிய பிராயச்சித்த ங்களாற் போக்கடிக்கவேண்டும். குருமனையாளைப் புணர்ந்தவன் மேற்சொல்லும்விதிப்படி தன்பாபத்தைப்போக்கக்கடவன்.

[குருமனையாளைப்புணர்ந்ததற்கு-பிராயச்சித்தம்.]

௧0௩—தாய்-அல்லது-குருபத்நியைப்புணர்ந்தவன் பிராமண சபையில் தான்செய்தகுற்றத்தைச்சொல்லி காய்ச்சப்பட்ட இரு ம்புப்பலகைமேல் படுக்கக்கடவன். அல்லது எரிகின்ற ஸ்திரீரூப முள்ள இருப்புத்தூணை தழுவிக்கொள்ளவேண்டும் இவ்விரண்டா லும் இறந்தால் பரிசுத்தனுவான்.

௧0௪—அல்லது தானாகவே-சிசிநம்-விருஷணம்-இவ்விரண்டை யுமறுத்து கையிலேந்திக்கொண்டு இறக்கிறவனாயில் திருதிமூலை யைப்பார்க்கநேராக ஓடவேண்டும்.

௧0௫—தன்மனைவியென்று பிரமித்து அக்கியாநத்தாற்குருப த்நியைப்புணர்ந்தவன் மண்டையோட்டை கையிலெடுத்துக் கொண்டு மரவுரிதரித்து சடாதாரியாகி மநதையடக்கிக்கொண்டு ஒருவருஷம் பிராஜாபத்தியகிரிச்சிரவிரதஞ்செய்யவேண்டும்.

௧0௬—கற்பில்லாதகுருபத்நியையாவது க்ஷத்திரியஜாதிமுத லிய குருபத்நியையாவது புணர்ந்ததால் வந்தபாபத்தைப்போ

க்குவதற்கு மநஸை யடக்கிக்கொண்டு காட்டு நெல்லரிசிக்கஞ்சியினு லாவது காய் கிழங்கினுலாவது மூன்றுமாதம்வரையில் சாந்திராய ணவிரதஞ்செய்யவேண்டும்.

௧0எ—இப்போது சொன்ன பிராயச்சித்தங்களால் மஹாபாபி கள் பாபத்தைப்போக்கவேண்டும் உபபாதகஞ்செய்தவர்கள் மே ற்சொல்லும்நாளுவிதமான விரதங்களால் பாபத்தைப்போக்கவே ண்டும்.

## உபபாதகத்திற்குப்பிராயச்சித்தம்.

௧0அ—கோஹத்திசெய்தவன் தலையை முண்டநஞ் செய்து கொண்டு அந்தப்பசுவின் தோலை வஸ்திரமாகப்போர்த்துக்கொண் டு நொய்யரிசியை புசித்துக்கொண்டு ஒருமாதம் பசுமாட்டின் கொட்டத்தில்வாசஞ்செய்யக்கடவன்.

௧0௯—பின்பு காரம் உப்பில்லாமல் இரண்டுமாதம் அந்நத்தை ஒன்றுவிட்டொருநாள் கொஞ்சமாகப்புசித்துக்கொண்டு அத்தோ ழுத்திலேயேவசிக்கவேண்டும் அந்தவிரண்டுமாதமும் இரண்டுகால த்திலும் ஜிதேந்திரியனுய் கோமூத்திரத்தால் ஸ்நாநஞ்செய்ய வேண்டும்.

௧௧0—பின்னும்பகலில் பசுக்கள் மேயப்போகும்போது பின் ருெடர்ந்து அதுகளின்காற்குளம்பில்நின்றும்உயரக்கிளம்புகிறது ளியை சாப்பிட்டுக்கொண்டு அந்தப்பசுக்களுக்குச் சொரிதல்முத லியவுபசாரத்தையும் வந்தநத்தையுஞ்செய்து இரவில் சுவற்றில் சார்ந்துகொண்டு வீராசநமாகவிருக்கவேண்டும்.

௧௧௧—பசுக்கள் நிற்கும்போது கோபமில்லாமல் தானின்று கொண்டும் நடக்கும்போது தானுநடந்துகொண்டும் படுக்கும் போது தான்நியமமாகவுஞ் சார்ந்துகொண்டும், இருக்கவேண்டும்

௧௧௨—பசுக்கள் நோயினுற்றுன்பப்பட்டாலும், திருடன்-புலி முதலியவற்றுற்றுரத்தப்பட்டாலும்,மேடுபள்ளமான பூமியில் விழுந்தாலும், சேற்றிலகப்பட்டுக்கொண்டாலுந் தன்சக்திக்குத்தக்கபடி எல்லாவிதத்தாலும் அதுகளைக்காப்பாற்றுக.

௧௧௩—உக்கிரமமாய் வெய்யிற்காய்ந்தாலும், மழைபெய்ந்தாலும், குளிர்ந்தாலும், காற்றடித்தாலும்,தன்சக்திக்குத்தக்கபடி பசுக்களைக்காப்பாற்றுமல் தன்தேகத்தைமாத்திரங் காப்பாற்றக்கூடாது.

௧௧௪—தன்னுடையவேனும் - அந்நியனுடையவேனும்-வீடு-களம்-கழனி-இந்தவிடங்களில் தாநியம்-பயிர்-இவற்றை பசுக்கள்பக்ஷித்தாலும்-கன்றுகளூட்டினாலும்-தானூட்டாமலும்- ஒருவனோடுசொல்லாமலும் இருக்கவேண்டும்.

௧௧௫—கோஹத்திசெய்தவன் இவ்விதமாக மூன்றுமாதம்வரையில் விரதத்தையநுஷ்டித்தால் அந்தப்பாபம்போய் பரிசுத்தனுவான்.

௧௧௬—பின்பு வேதமோதிநல்லொழுக்கமுள்ள அந்தணனுக்கு ஒரு இடபத்துடன் பத்துப்பசுவை தாநஞ்செய்யக்கடவன்.அவ்வளவுபொருள் தனக்கில்லாவிடில் தன்பொருண்முழுதையும் அந்தணர்களுக்குக்கொடுக்கக்கடவன்.

௧௧௭—மேற்சொல்லுமடையாளமுள்ள அவகீர்ணி நீங்கலாகமற்ற உபபாபிகளனைவரும் பரிசுத்தியின்பொருட்டு கோஹத்திக்குச்சொல்லியபிராயச்சித்தத்தையேனும்அல்லது அந்தந்தப்பாபத்திற்குத்தக்கபடி சாந்திராயணவிரதமேனும் செய்யவேண்டும்.

## அவகீர்ணிபிராயச்சித்தம்.

௧௧௮—அவகீர்ணியானவன் ஒற்றைக்கண்ணுள்ள கழுதையின்

வடையினால்பாகஎக்கியவிதிப்படி இரவில் நாற்சந்தியில் நிருதிதேவதையைக்குறித்து ஹோமஞ்செய்யவேண்டும்.

௧௧௯—அக்நியில் விதிப்படி நிருதிதேவதையைக்குறித்து கழுதையின்வடையினால் ஹோமஞ்செய்து பின்பு-வாயு-பிரஹற்பதி-இந்திரன்-அக்கிநி-இவர்களுக்கு வேதஇருக்கினால் ஆஜியஹோமம்செய்யவேண்டும்.

௧௨௦—விரதாநுஷ்டானமுள்ள பிரமசாரி ஸ்திரீயோநியில் இரேதஸைவிட்டால் அவன்விரதமழிந்துபோவதால் அவனை அவகீர்ணியென்றுபெரியோர்கள்சொல்லுகிறார்கள்.

௧௨௧—அந்த அவகீர்ணியின் பிரம்மதேஜசு வாயு-பிரகற்பதி-இந்திரன்-அக்கிநி-இவரைச்சாருகிறது ஆதலாலவர்களுக்கு ஹோமஞ்செய்க.

௧௨௨—இவ்விதமாககர்த்தபயாகத்தால் பிராயச்சித்தஞ்செய்துகொண்டபின்பு அக்கழுதையின்றோலைத் தரித்துக்கொண்டு தன்குற்றத்தையனைவருமறியும்படியாகக் கூவிச்சொல்லிக்கொண்டு எழுவீட்டில் அந்நபிலக்ஷையெடுக்க.

௧௨௩—அவ்வேழுவீட்டிலெடுத்த பிக்ஷையை ஒருவேளைபுசித்துக்கொண்டு திரிகாலங்களிலும் ஸ்நாநஞ்செய்க இவ்விதமாக ஒருவருஷஞ்செல்ல பரிசுத்தனாவான்.

(ஜாதிப்பிரம்சகரமுதலியபாபப்பிராயச்சித்தம்.)

௧௨௪—ஜாதிப்பிரம்சகர பாபங்களில் யாதாவதொன்றைவேண்டுமென்றுசெய்தால் சாந்தபநக்கிரச்சிரத்தையும், அக்கியாநத்தாற்செய்தால் பிராஜாபத்திய கிரிச்சிரத்தையும் அநுஷ்டிக்கவேண்டும்

௧௨௫—சங்கரீகரணம்-அபாத்திரீகரணம்-இவைகளில் எதையா

வதொன்றைச்செய்தவனுக்கு ஒருமாதம்சாந்திராயண விரதமிருப்பதும் மலிநீகரணஞ்செய்தவனுக்கு மூன்றுநாள் கொதிக்கிற அரிசிக்கஞ்சிநீரை சாப்பிட்டிருப்பதும் பிராயச்சித்தம்.

[க்ஷத்திரியன்முதலானவரைக்கொன்றதற்குப்பிராயச்சித்தம்]

க௨௬—ஒருவன் குணமுள்ளக்ஷத்திரியனை தெரிந்துகொன்றால் பிரமஹத்திக்குவிதித்த பனிரண்டுவருஷ பிராயச்சித்தத்தில் நாலிலொருபங்கும் குணமுள்ளவைசியனைக் கொன்றால் எட்டிலொன்றும் ஒழுக்கமுள்ள சூத்திரனைக்கொன்றால் பதினாறிலொன்றும் பிராயச்சித்தமாகும்.

க௨௭—அந்தணன் தெரியாமல் க்ஷத்திரியனைக்கொன்றால் அதற்குப்பிராயச்சித்தமாக ஒரு இடபத்தோடு ஆயிரம்பசுக்களைத்தானஞ்செய்க.

க௨௮—அல்லது சடைதரித்து ஊருக்குவெளியில் மரத்தடியில் வாசஞ்செய்துகொண்டுமூன்றுவருஷம் பிரமஹத்திக்குவிதித்த விரதத்தையநுசரிக்க. (மண்டையோடுதரிக்கவேண்டியதில்லை யென்பதற்காக மறுபடியும்சொல்லியது.)

க௨௯—அந்தணன் நல்லொழுக்கமுள்ளவைசியனைத் தெரியாமற்கொன்றால் மேற்சொல்லியபடி ஒருவருஷம் இருக்கவேண்டும் அல்லது ஒரு இடபத்தோடு நூறுபசுவைத்தானஞ்செய்க.

க௩0—அந்தணன்றெரியாமல் ஒழுக்கமில்லாத சூத்திரனைக்கொன்றால் மேற்சொல்லியபடி ஆறுமாதம்வரையில் விரதமிருக்க அல்லது ஒரு இடபத்துடன் பத்துவெள்ளைப்பசுக்களை வேதமறிந்த அந்தணனுக்குத் தானஞ்செய்க.

க௩க—பூனை-அணில்-காடை-தவளை-நாய்-உடும்பு-கோட்டான்-காக்கை-இவைகளிலொன்றைக்கொன்றால் காமகாரத்தினால்செய்த

சூத்திரவதைக்குவிதித்த பிராயச்சித்தஞ் செய்யவேண்டியது. (அதாவது முன்உபபாதகத்தில் சூத்திரவதைக்குவிதித்த பிராயச்சித்தமான மூன்றுமாசவிரதம் அல்லது. சாந்திராயணவிரதம் இதைச் செய்யவேண்டுமென்றகருத்து)

௧௩௨—மேற்சொல்லியவைகளைத்தெரியாமற்கொன்றால் மூன்றுநாள்பால்சாப்பிட்டு உபவாசமிருக்கவேண்டும். அதற்குச்சக்தியில்லாவிடில் மூன்றுநாள்வரையில் நாடோறும்ஒருயோசனைதூரநடக்கவேண்டும். அதற்குஞ்சக்தியில்லாவிடில்மூன்றுநாள்புண்ணியதீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்யவேண்டும். அதற்குஞ்சக்தியில்லாவிடில் மூன்றுநாள்வருண மந்திரத்தையாவது செபஞ்செய்யவேண்டும்.

௧௩௩—பிராமணன் நல்லபாம்பையடித்தால் கூரானவோரிருப்புத்தடியையும் மற்றபாம்பையடித்தால் வைக்கோல்சுமையையும்சொற்பவிலையுள்ள ஈயப்பாத்திரத்தையுந் தாநஞ்செய்யவேண்டும்.

௧௩௪—பன்றியைப்பிராமணன்கொன்றால் ஒருகுடம்நெய்யையும், ஊர்க்குருவியைக்கொன்றால் நாலு* ஆடகம் எள்ளையும், கிளியைக்கொன்றால் இரண்டுவருஷிப்பசுவின்கன்றையும், கிரௌஞ்சப்பக்ஷியைக்கொன்றால் மூன்றுவருஷிக்கன்றையும் பிராமணனுக்குத்தாநங்கொடுக்க.

௧௩௫—அன்னம்- கொக்கு-நாரை - மயில்-குரங்கு-பருந்து-பாசைப்பக்ஷி-இவைகளிலொன்றைக்கொன்றால் பிராமணனுக்கு ஒருகோதாநஞ்செய்யவேண்டும்.

௧௩௬—குதிரையைக்கொன்றால் வஸ்திரதாநமும், யானையைக்

* ஆடகக்கணக்கை-ஏழாவதத்தியாயத்தில் ௧௨௬-வது-சுலோகத்திற்காண்க.

கொன்றால் ஐந்துகறுப்புஇடபதாநமும், வெள்ளாடு-அல்லதுசெ ம்மறியாடு இவைகளைக்கொன்றால் ஒருஇடபதாநமும், கழுதை யைக்கொன்றால் இரண்டுவருஷ பசுவின்கன்றுதாநமும், செய்ய வேண்டும்.

௧௩௭—மாம்ஸஞ்சாப்பிடுகிற மிருகங்களையடித்தால் பாலுள்ள வொருபசுவையும், மாம்சந்தின்னாத மான்முதலிய மிருகங்களைய டித்தால் ௬ஆதஒருகிடாரியையும்,ஒட்டகத்தைக்கொன்றால் ஒருகு ன்றியிடைபொன்னையும் தாநங்கொடுக்க.

௧௩௮—கற்புநிலையில்லாத பிராமணஸ்த்திரீயைக்கொன்றால் ஒ ருசேணத்தையும், அவ்விதக்ஷத்திரியஸ்த்திரீயைக்கொன்றால் வில் லையும், அவ்விதவைசியஸ்த்திரீயைக்கொன்றால் வளையாட்டையும், அவ்வித சூத்திரஸ்திரீயைக்கொன்றால் ஒருசெம்மறியாட்டையும், தாநங்கொடுக்க.

௧௩௯—பாம்புமுதலிய ஜெந்துக்களைக்கொன்றதற்குப் பிராய ச்சித்தமாகபொருள்கொடுக்கச்சக்த்தியில்லாத பிராமணன் அந்தந் தப்பாபத்தைப்போக்குதற்கு ஒவ்வொருபிராஜாபத்தியகிரிச்சிரம் செய்யக்கடவன்.

௧௪௦—எலும்புள்ள ஓணான்முதலியபிராணிகளை ஆயிரம்வரை யில் கொன்றாலும் எலும்பில்லாத ௬-எறும்பு-கொசுமுதலிய பிரா ணிகளை ஒருபண்டிபாரம்வரையில் கொன்றாலும் சூத்திரவதைக்கு விதித்த பிராயச்சித்தஞ்செய்யக்கடவன்.

௧௪௧—எலும்புள்ள ஓணான்முதலியவற்றில் யாதாவதொன்றைக் கொன்றால் ஒருபணம் பிராமணனுக்குக்கொடுக்கவேண்டும். எலு ம்பில்லாதவற்றில் ஒன்றைக்கொன்றால் பிராணாயாமஞ்செய்தால்ப ரிசுத்தனாவான்.

௧௪௨—பழங்கொடுக்கிறமரம்-செடி-புதர்-மரங்களின்மேற்படர்ந்திருக்குங்கொடி-புஷ்ப்பித்திருக்கிற பூசணிமுதலியகொடி - இவைகளையொருக்கால் தெரியாமற் சேதித்தால் நூறுகாயத்திரி செபஞ்செய்யவேண்டும்.

௧௪௩—அந்நமுதலானவை வெல்லமுதலிய இரசம் இலுப்பைப்பூமுதலியபலபல புஷ்ப்பங்கள்-அத்திமுதலியபழங்கள்- இவைகளிலுண்டான ஜெந்துக்களை தெரியாமற்புசித்தவன் நெய்சாப்பிட்டாற்பரிசுத்தனுவான்.

௧௪௪—உழுதவிடத்திலும் காட்டிலும்- முளைத்திருக்கிறசெடிகளை வீணாகவெட்டினால் ஒருதிநம் பால்மாத்திரஞ்சாப்பிட்டுக்கொண்டு பசுவைப்பின்றொடர்ந்து செல்லவேண்டும்.

௧௪௫—தெரிந்துந்தெரியாமலும் செய்யப்பட்டகொலைக்கு இப்போதுசொல்லிய பிராயச்சித்தங்களைச்செய்தால் பரிசுத்தனுவான் இனி அபக்ஷியபக்ஷணத்துக்குப்பிராயச்சித்தஞ் சொல்லுகிறேன்கேளுங்கள்.

## அபக்ஷியபக்ஷணப்பிராயச்சித்தம்.

௧௪௬—அந்தணனறியாமற்கள்ளைக்குடித்தால் அப்த்தகிரிச்சிரத்தைச்செய்து புநருபநயநஞ்செய்துகொண்டால் பரிசுத்தனுவான். தெரிந்துகுடித்தால் பிராணனிருக்கும்படியான பிராயச்சித்தமில்லையென்பது சாஸ்திரமுறை.

௧௪௭—சாராயபாத்திரம்-கள்ளுபாத்திரம்-இவைகளி லிருக்கிற தண்ணீரைக்குடித்தால் சங்கமலரைப்போட்டுக் காச்சினபாலைமாத்திரம்-ஐந்துநாள்குடித்து உபவாசமிருக்கவேண்டும்.

௧௪௮—சாராயங்-கள்ளு-இவைகளைப்பரிசித்தாலும் தாநங்கொடுத்தாலும் - வாங்கினுலும் சூத்திரன்குடித்துமிகுந்த தண்ணீரைக்

குடித்தாலும் மூன்றுநாள் தருப்பைபோட்டு காச்சின கொதிக்கிற தண்ணீரை சாப்பிட்டிருக்கவேண்டும்.

கசகூ—ஸோமபாநஞ்செய்தபிராமணன்-சாராயங்குடித்தவன் முகநாற்றத்தைமோந்தால் ஜலத்துக்குள் மூழ்கிக்கொண்டு மூன்று பிராணாயாமஞ்செய்து நெய்யைச்சாப்பிட்டால் பரிசுத்தனுவான்.

கரு0—துவிஜாதிகளான-பிரம்ம-க்ஷத்திரிய-வைசியர்- மூவரும் அக்கியாநத்தால் மலம்-மூத்திரம-கள்ளில் சம்பந்தப்பட்ட வஸ்து இவைகளைச்சாப்பிட்டால் புநருபநயநஞ்செய்யவேண்டும்.

## புநருபநயநவிதி.

கருக—புநருபநயநஞ்செய்யும்போது- க்ஷவரம்-முஞ்சி-தண்டம்-பிக்ஷையெடுப்பது-இந்தவிரதங்கள்கிடையாது.

கருஉ—தெரியாமையால்-சாப்பிடத்தகாதவனந்நம் ஸ்திரீ சூத்திராள்சாப்பிட்டசேஷம்-தகாதமாம்ஸம் இவைகளைப்புசித்தால் ஏழுநாள்வரையில் நாடோறும் ஒருதரம் கோதுமைக்கஞ்சி குடித்திருக்கவேண்டும்.

கருங—சுத்தமாகவிருந்தபோதிலும் புளித்தபதார்த்தங்கள் விபீதக கஷாயங்கள் திரிந்துபோனபால்முதலியவைகள் இவைகளில்யாதாகிலுமொன்றைப் பிராமணன்சாப்பிட்டால் அதுஜீரணமாகிறவரையில் பரிசுத்தனுகமாட்டான்.

கருச—ஊர்ப்பன்றி-கழுதை-ஒட்டகம்-குள்ளநரி-குரங்கு-காக்கை-இவைகளின் மலமூத்திரங்களை பிராமணன்றெரியாமலொருகால் சாப்பிட்டால் சாந்திராயணவிரதஞ்செய்யவேண்டும்.

கருரு—உலர்ந்தமாம்ஸம்-காளான்- இன்னமாம்ஸமென்று தெரியாத மாம்ஸம் கசாப்புக்கடையில்விற்பது இவைகளைச்சாப்பிட்டாலும் சாந்திராயணவிரதமேசெய்க.

௧௫௬—அரிசி மாம்ஸஞ்சாப்பிடுகிற-ஊர்ப்பன்றி - ஒட்டகம் ஊர்க்கோழி-மனிதன்-காகம்-கழுதை-இவைகளின் மாம்ஸத்தைத் தெரிந்துபுசித்தால் தப்தகிரிச்சிரத்தை அநுஷ்டிப்பது பிராயச்சித்தம்.

௧௫௭—ஸமாவர்த்தநவிரதமாகாத பிரமசாரி சபிண்டீகரணத்துக்குமுன் மாசிகசிரார்த்தத்தில் பிராமணார்த்தமிருந்தால் மூன்றுநாளுபவாசமிருந்து அதற்குள் ஒருநாள் ஜலத்தில்வசிக்கவேண்டும்.

௧௫௮—மேற்சொன்னபிரமசாரி தெரியாமலாவது ஆபத்திலாவது மதுமாம்ஸத்தைப்பக்ஷித்தால் பிராஜாபத்தியகிரிச்சிரம்செய்து தன் ஸமாவர்த்தநவிரதத்தை முடிக்கவேண்டும்.

௧௫௯—பூனை-எலி-காக்கை-நாய்-அணில்-இவைகள்தின்ற மிகுதியையும்-மயிர்-புழு இவைகள்சம்பந்தப்பட்டவையும், துளி மண் போட்டுக்கொள்ளாமற்சாப்பிட்டால் தர்ப்பைபோட்டுக்கொதிக்கக்கொதிக்கக்காய்ச்சினஜலத்தை சாப்பிடவேண்டும்.

௧௬0—தன்னாத்மசுத்தியை விரும்புகிறவன் மேற்சொல்லப்பட்ட சாப்பிடக்கூடாத அந்நத்தை தெரிந்து சாப்பிடக்கூடாது. தெரியாமற்சாப்பிட்டால் உடனே வாந்திசெய்யவேண்டும். அல்லது விதிப்படியாக பிராயச்சித்தத்தினால் சுத்திசெய்துகொள்ளவேண்டும். வாந்திசெய்தபக்ஷத்தில் லகுவானபிராயச்சித்தஞ்செய்துகொள்ளலாம்.

௧௬௧—அபக்ஷியபக்ஷணத்திற்கு இதுவலாயில் பிராயச்சித்தஞ்சொல்லிமுடிந்தது இனி பலவிதத்திருட்டிற்கு பிராயச்சித்தஞ்சொல்லுகிறேன்.

[பலவிதத்திருட்டிற்குப்-பிராயச்சித்தம்.]

௧௯௨—பிராமணன் தன்ஜாதியான்வீட்டில் அதிகமானதாநிய ம்-அந்நம்-பொருள்-இவைகளை வேண்டுமென்றுதிருடினால் தனித் தனியே ஒருவருஷம்வரையில் அந்தத்திருட்டுக்குத்தக்கபடி பிரா ஜாபத்திய கிரிச்சிரவிரதமிருக்கவேண்டும்.

௧௯௩—புருஷன்-ஸ்திரீ-க்ஷேத்திரம்-வீடு-இவைகளையும்.கிணறு துரவு-இவைகளின் ஜலத்தையும் திருடினால் தனித்தனியே சாந்தி ராயணவிரதஞ்செய்யவேண்டும்.

௧௯௪—சொற்பவிலையுள்ளதகரம் - துராய்முதலிய பொருள்க ளை திருடினால் அதை உடையவனுக்குக்கொடுத்து பின்பு தனித்த னியே சாந்தபநவிரதம் இருக்கவேண்டும். எல்லாத்திருட்டுவிஷய த்திலும் பொருட்காரனுக்குப் பொருளைக்கொடுத்துத் தான்.பிரா யச்சித்தஞ்செய்துகொள்ளவேண்டியது.

௧௯௫—பலகாரம்-பாயசம்-வாகநம்-படுக்கை-ஆசநம்-புஷ்பம் பழம்-கிழங்கு இவைகளிலொன்றைத்திருடினால் பஞ்சகவியஞ்சா ப்பிடுவது பிராயச்சித்தம்.

௧௯௬—சுலபமான-புல்-வைக்கோல்-விறகு-மரம்-அரிசி- வெல் லம்-வஸ்திரம்-தோல்-மாம்ஸம்-இவற்றிலொன்றைத்திருடினால் மூ ன்றுநாளுபவாசமிருக்கவேண்டும்.

௧௯௭—மணி-முத்து பவளம்-செம்பு-வெள்ளி-இரும்பு-வெண் கலம்-கல்லு-இவற்றிலொன்றைத் திருடினால் நொய்யரிசியைப் ப ன்னிரண்டுநாள் புசித்திருக்கவேண்டும். இந்தப்பிராயச்சித்தமெல் லாம் ஒருக்கால்செய்தவிஷயம் அல்லது உடையவனைவிட திருடி னவன் குணமுள்ளவனாயிருக்கும்விஷயம்.

௧௯௮—பஞ்சு-பட்டு-நூல்-ஆட்டின்மயிர்- இரண்டுகுளம்புள்ள

மாடுமுதலியவை-ஒற்றைக்குளம்புள்ள குதிரைமுதலியவை-பக்ஷி-சந்தநமுதலிய ஔஷதி-கயறு-இவற்றிலொன்றைத்திருடினால் மூன்றுநாள் பால்சாப்பிட்டிருக்கவேண்டும்.(இதுவரையில் சொல்லியதில் சிலஉயர்ந்தசரக்காயும்,சில தாழ்ந்தசரக்காயுமிருக்கின்றமையால் விலையில் சரியானவையென்று அறியவும்.)

௧௬௯—துவிஜன்-திருடினபாபத்தை இந்தவிரதங்களால் போக்கவேண்டும். புணரத்தகாதவர்களை புணர்ந்தால் மேற்சொல்லிய விரதங்களால் பாபத்தைப்போக்கவேண்டும்.

(அகம்யாகமநப்பிராயச்சித்தம்.)

௧௭0—உடன்பிறந்தாள்- தோழன்மனையாள்-மருமகள் - கந்நியாஸ்திரீ-சண்டாளஸ்திரீ-இவர்களுக்குள்-ஒருவரிடத்தில் அடிக்கடி இரேதசைவிட்டால் குருமனையாளைப்புணர்ந்தவனுக்கு சொல்லிய பிராயச்சித்தத்தைச்செய்யவேண்டும்.

௧௭௧—அத்தைமகள்-பின்னோதர உடன்பிறந்தாள்-தாயுடன்பிறந்தாள்மகள் - அம்மான்மகள் இவர்களைப்புணர்ந்தால் தனித்தனியே சாந்திராயணவிரதமிருக்கவேண்டும்.

௧௭௨—மேற்சொல்லிய அத்தைப்பெண்-அம்மான்பெண்-சிறியதாயின்பெண்-அல்லது பெரியதாயின்பெண்- இந்தமூவர்களையும் புத்திசாலியாயிருப்பவன் விவாகஞ்செய்யக்கூடாது. செய்தால் இம்மையில்பதிதனுவான். மறுமையில் நரகத்தில்விழுவான். ஏனென்றால் அவர்கள்ஞாதிஸ்திரீகளுக்குச் சரியானவர்களல்லவா ஆகையால் விவாகத்திற்குத்தகாதவர்கள்.

௧௭௩—மனிதன். பசுஜாதிநீங்கலாக மற்ற மிருகஜாதியிலும் தூமையானவள் -தனக்குப்பந்துவில்லாதவள் இவர்கள்யோநியிலும் ஜலத்திலும் இரேதசைவிட்டால் சாந்தபநகிரிச்சிரம் செய்யவே

ண்டும். பசு யோநியில்விட்டால் அவகீர்ணிக்குவிதித்த பிராயச்சி த்தம் செய்யவேண்டியது.

௧௭௪—துவிஜன் மாடுகட்டிய பண்டிமுதலிய வாகநத்திலும் ஜலத்திலும்-பகலிலும்-மனைவியிடத்து மைதுநஞ்செய்தால் கட்டியிருக்கிறவஸ்திரத்தோடு ஸ்நாநஞ்செய்யவேண்டும். புருஷனுடன் ஆலிங்கநம்செய்து எவ்விதமாயாவது அவன்மீது ரேதஸை விட்டாலும் இந்தப்பிராயச்சித்தந்தான்.

௧௭௫—பிராமணன் அக்கியாநத்தால் சண்டாளஸ்திரீ முதலிய ஈநஜாதிஸ்திரீகளைப்புணர்ந்தாலும், அவர்களிடத்திற் புசித்தாலும் அவர்களிடத்தில் தாநம்வாங்கினாலும், பதிதனாவான். தெரிந்துசெய்தால் அந்தச்சாதியாயே ஆய்விடுவான்.

௧௭௬—மிகவும் வியபிசாரியான மனையாளை கணவன் ஒருகாரியஞ்செய்யவிடாமல் ஒருவீட்டிற்குள்ளடைத்து அவளுக்கு பிறன் மனையாளைப்புணர்ந்தவனுக்குவிதித்த பிராயச்சித்தத்தைச் செய்துவைக்கவேண்டியது. ஒருகால் வியபிசரித்தால் அவளுக்கு மேற்சொன்னதில் பாதிபிராயச்சித்தம் செய்துவைக்க.

௧௭௭—மறுபடியும் அவள்ஒருக்கால் தன்ஜாதிபுருஷனால்அழைக்கப்பட்டு அவனைப்புணர்ந்தால் அவளுக்கு பிராஜாபத்தியகிரிச்சிரமும், சாந்திராயணமும், பிராயச்சித்தமென்று மநுமுதலியவர்களால் சொல்லப்பட்டிருக்கிறது.

௧௭௮—துவிஜாதியானவன் சண்டாளஸ்திரீயோடு ஒருராத்திரி புணர்ந்தால் அந்தப்பாபத்தை மூன்றுவருஷப் பிக்ஷையெடுத்துச்சாப்பிட்டுக்கொண்டு எப்போதும்-காயத்திரி ஜெபஞ்செய்து போக்கவேண்டும். சிலர் இது விவாகஞ்செய்யப்படாத சூத்திரஸ்திரீயோடுபுணர்ந்த விஷயமென்றுசொல்லுகிறார்கள்.

கஎகூ—இராவணையில் பலவிதகொலை-அபக்ஷியபக்ஷணம் - பலவிததிருட்டு-அகம்மியாகமநம்- இவற்றைச்செய்கிற மஹாபாபிகளான நாலுவகுப்பாருக்கு பிராயச்சித்தஞ்சொல்லப்பட்டது. இனிப் பதிதர்களோடு கூடினவர்களுக்கு பிராயச்சித்தஞ் சொல்லுகிறேன்கேளுங்கள்.

## ஸம்ஸர்க்கிப்பிராயச்சித்தம்.

கஅ0—பதிதனோடுஒருவாஹநத்திலேறுவது-ஒருஆஸநத்திலிருப்பது-ஒருபடுக்கையிற்படுப்பது- இவைகளைச்செய்தால் ஒருவருஷத்திற்பதிதனுவான். அவனுக்கு யாகஞ்செய்வித்தாலும் ஓதுவித்தாலும் அவனோடு விவாஹசம்பந்தஞ்செய்தாலும் உடனேபதிதனுவான்.

கஅக—எவனெவன் எந்தெந்தப்பாபியோடுமேற்சொன்னபடி சேர்வானோ அவனவன் அந்தந்தப்பாபிக்குச் சொல்லியவிரதத்தை அவனுடன்சேர்ந்த தோஷநீங்குதற்காக தானுஞ்செய்யவேண்டும்.

## கடப்பிரஹாரவிதி.

கஅஉ—பதிதன் பிராயச்சித்தம் செய்யாவிடில் அவனுடைய சபிண்டன்-சோதகன்-இவர்கள்அவன்தோஷத்தைக்கேட்டவுடனே நவமிதிதியில்-சாயுங்காலத்தில் அவனுடைய எல்லாப்பங்காளிகளுக்கும், புரோகிதனுக்கும்,குருவுக்கும் முன்பாக ஊருக்குவெளியில்தருப்பணஞ்செய்யவேண்டும்.

கஅ௩—அப்போதுஅந்த ஞாதிகள் தங்கள்வேலைக்காரியைக்கொண்டு ஜலநிறைந்தவொரு பழையகடத்தை கொண்டுவரச்சொல்லி அதில் அந்தப்பதிதனை ஆவாஹநஞ்செய்து பின்பு அதைப்பிணத்தைப்போல் தென்முகமாகவுதைத்துத்தள்ளிவிட்டு பந்துக்களோடு ஒருநாள்திட்டிருக்கவேண்டியது.

௧அ௪—பின்பு அந்தப்பதிதனோடு உளுக்காரவும் பேசவுங்கூடாது.அவனுக்கு தகப்பன்பொருளிற் பங்குகொடுக்கக்கூடாது. அவனோடுசேர்ந்து ஹவ்வியகவ்வியங்களை செய்யக்கூடாது. கடன்கொடுக்கவும் அவன்செய்யும் சிரார்த்தத்தில் பிராமணார்த்தமிருக்கவுங்கூடாது.

௧அ௫—அவன் ஜியேஷ்டன்மரியாதைக்கு தக்கவனல்ல அவனுக்கெடுகூறுங்கிடையாது.அவனுக்கடுத்த சகோதரன் குணசாலியாயிருந்தால் அவனுக்கந்தவெடுகூறைக்கொடுக்கவேண்டும்.

௧அ௬—பதிதன் விதிப்படி பிராயச்சித்தஞ்செய்து கொண்டபின்பு புண்ணியதீர்த்தத்தில் அவன்ஞாதிகளனைவரும் அவனுடன் ஸ்நாநஞ்செய்து ஜலநிறைந்த புதுக்குடத்தை ஜலத்தில்போடவேண்டும்.

௧அ௭—அக்குடத்தைத்தண்ணீரிற்போட்டபின்பு அந்தப்பிராயச்சித்தஞ்செய்துகொண்டவன் தன்வீட்டிற்குவந்து தான்பிராயச்சித்தஞ்செய்துகொள்ளாததற்குமுன் இறந்துபோன பங்காளிகளுக்குத்தான்செய்யவேண்டிய தருப்பணாதிகாரியங்களைச் செய்யவேண்டியது.

௧அ௮—பதிதையானஸ்திரீகளுக்கும் இந்தவிதிப்படியாகவே செய்யவேண்டியது. ஆனால் அந்தஸ்திரீகள் பிராயச்சித்தஞ்செய்துகொள்ளாவிட்டாலும் அவர்களுக்கு வீட்டுக்குவெளியி லொருகுடிசைகட்டிக்கொடுத்து அந்நம்-வஸ்திரம்-தண்ணீர் - இவைகள் மாத்திரங்கொடுக்கவேண்டியது.

௧அ௯—பிராய்ச்சித்தஞ்செய்துகொள்ளாத பாபிகளோடு தாநப்பிரதிக்கிரகமுதலிய வொருகாரியமுஞ்செய்யக்கூடாது. பிராயச்சித்தஞ்செய்துகொண்டபின் அவர்களை முன்செய்தபாபத்தால் நிந்திக்கவுங்கூடாது.

கக௰—ஆனல் சிசுஹத்தி-ஸ்திரீஹத்தி-செய்தவன்- நன்றிகெட்டவன்-சரணமடைந்தவனைக்கொன்றவன்-இவர்கள்விதிப்படி பிராயச்சித்தஞ்செய்துகொண்டாலும் அவர்களோடு ஸகவாசஞ்செய்யக்கூடாது.

கக௯க—துவிஜாதிகளுக்கு சொல்லியகாலத்தில் உபநயநஞ்செய்து காயத்திரியுபதேசிக்கப்படாவிடில்மூன்றுபிராஜாபத்திய கிரிச்சிரஞ்செய்துவைத்து உபநயநஞ்செய்துவைக்கவேண்டியது.

கக௯உ—உபநயநமாயிருந்தும் வேதமோதாமலும் நித்தியகர்மங்களைச்செய்யாமலுமிருக்கிற துவிஜன் பிராயச்சித்தஞ்செய்துகொள்ள இச்சித்தால் அவனுக்கும் மேற்சொன்ன மூன்றுபிராஜாபத்தியகிரிச்சிரத்தையேவிதிக்க.

கக௯௩—பிராமணன் துர்தாநப்பிரதிக்கிரகத்தால் பொருள்சம்பாதித்தால் அதை தாநங்கொடுத்துவிட்டாலும் ஜெபதபாதிகளைச்செய்தாலும் சுத்தனவான் விற்கத்தகாத தடாகம்முதலியவற்றைவிற்றாலும் இந்தப்பிராயச்சித்தமேசெய்துகொள்க.

கக௯௪—துர்த்தாநப் பிரதிக்கிரகஞ்செய்தவன் அப்பொருளைத்தாநங்கொடாவிடில் ஒருமாதம்வரையில் பாலைச்சாப்பிட்டுக் கொண்டு பசுவின்றொழுத்தில் மநம்வேறிடத்திற்செல்லாமல் வசிக்கவேண்டும்அல்லது அந்நாள்வரையில்நாடோறும் மூவாயிரங்காயத்திரிசெபஞ்செய்யவேண்டும்.

கக௯௫—மேற்சொல்லியவிரதத்தினல் இளைத்திருக்கிற அந்தத்துர்த்தாநம்வாங்கினவனைப்பார்த்து பெரியோர்கள்நீ எங்களுக்குச்சரியாகவிருக்கவேண்டுமென்று நினைக்கிறையா அப்படியிச்சித்தால் இனியிவ்விதகாரியம் செய்யாமலிருப்பையாவென்றும் கேட்கவேண்டியது.

௧௯௬—அவனும் அந்தப்பெரியோர்களிடத்தில் இனி நான்சத்தியமாச்செய்யவில்லையென்றுசொல்லி பசுக்களுக்கு புல்போடவேண்டியது. அந்தப்புல்லை பசுக்கள் தின்னும்போது பரிசுத்தமானவிடத்தில் பெரியோர்கள் அவனை தங்கள்கோஷ்ட்டியில் சேர்த்துக்கொள்ளவேண்டியது.

௧௯௭—விராத்தியனுக்கு புரோகிதஞ்செய்துவித்தாலும் தாய்தந்தை குருநீங்கலாக மற்றவர்களுக்குக்கருமஞ்செய்தாலும்அஹீநமென்னும் அபிசாரயாகஞ்செய்தாலும் மூன்றுபிராஜாபத்தியகிரிச்சிரம் செய்யவேண்டும்.

௧௯௮—சரணமடைந்தவனை சக்த்தியிருந்துகாக்காவிட்டாலும்தகாதவனுக்குவேதமோதுவித்தாலும் ஒருவருஷகாலம் கோதுமைஅரிசியைப் புசித்து அந்தப்பாபத்தைப்போக்கவேண்டும்.

௧௯௯—துவிஜாதிகளை-நாய்-குள்ளநரி- பூனைமுதலியசெந்து-கழுதை-மனிதன்-குதிரை-ஒட்டகம்-பன்றி-இவைகள்கடித்தால் பிராணாயாமஞ்செய்தால் பரிசுத்தராவார்.

௨௦௦—பந்திதூஷிகரானதிருடன்முதலியபதிதர்கள் ஒருமாதமளவாயில் இவ்விரண்டுநாளுபவாசமிருந்து மூன்றுநாள் சாயுங்காலத்தில் புசித்து நாடோறும் வேதஸம்ஹிதாஜெபமும் பிராயச்சித்தஹோமமுஞ்செய்தால் பரிசுத்தராவார்கள்.

௨௦௧—துவிஜன் காமகாரத்தினால் ஒட்டகம்-கழுதை-இவைகள் கட்டப்பட்டிருக்கிற பண்டிமுதலியவாகநத்தில் ஏறினால் துணியில்லாமல் நிருவாணமாய் ஸ்நாநஞ்செய்து பிராணாயாமஞ் செய்தால்பரிசுத்தனாவான்.

௨௦௨—சௌசத்துக்குஜலமில்லாதவிடத்திலாவது ஜல மத்தியிலாவது தேஹோபாதிபொறுக்கக்கூடாததினால் ஜலத்தின்தயேனு

ம், மலத்தையேனும்,விஸர்ஜநம்செய்தால் ஊருக்குவெளியிலிருக்கிறநதீஜலத்தில் கட்டினவஸ்திரத்துடன் ஸ்நாநஞ்செய்துபசுவைத்தடவிக்கொடுத்தால் பரிசுத்தனுவான்.

௨௦௩—வேதத்தில் விதிக்கப்பட்டிருக்கிற நித்தியகர்மங்களான ஸந்தியாவந்தநம் முதலியவைகளை ஒருக்கால்செய்யாவிட்டாலும் நான்காவதத்தியாயத்தில்விதித்திருக்கும் ஸ்நாதகவிரதந்தப்பினுலும் ஒருதிநமுபவாசமிருப்பது பிராயச்சித்தம்.

௨௦௪—பிராமணனை ஹும் என்று மிரட்டினுலும், கல்விமுதலியவற்ருல் உயர்ந்திருப்பவனை ஏகவசநமாயழைத்தாலும் அவர்களை வந்தநஞ்செய்து கால்களைப்பிடித்துக்கொண்டு கோபத்தைத்தணித்து அதுதுவக்கி மறுநாள்உதயபரியந்தம் உபவாசமிருந்தால் பரிசுத்தனுவான்.

௨௦௫—பின்னும் அவனை திரணத்தினுலடித்தாலும், கழுத்தில் துணியைப்போட்டு இழுத்தாலும், பிரஸங்கத்தில் அவர்களைவாயினுல் ஜயித்தாலும், வந்தநம்செய்து ஸமாதாநப்படுத்தவேண்டியது.

௨௦௬—பிராமணனைக் கொல்லவேணுமென்றுநினைத்து தடிமுதலிய ஆயுதத்தை ஓங்கினுல்- நூறுவருஷிவரையிலும், அதனுலடித்தால்-ஆயிரவருஷிவரையிலும், நரகத்தில்வாஸஞ்செய்வான்.

௨௦௭—பிராமணன்சரீரத்திலுண்டுபண்ணின இரத்தம்பூமியில் விழுந்து எவ்வளவுபரமாணுக்களை நனைக்கிறதோ அவ்வளவாயிரம் வருஷம்வரையில் நரகத்தில்வாசஞ்செய்வான்.

௨௦௮—ஆதலால் பிராமணனை அடிக்கிறதற்காக தடிமுதலியவற்றை ஓங்கினவன் ஒரு பிராஜாபத்திய கிருச்சிரமும், அவற்ருலடித்தவன் அதிகிருச்சிரமும், இரத்தத்தை யுண்டுபண்ணினவன்

பிராஜாபத்தியகிருச்சிரம்,அதிகிருச்சிரம்,இவ்விரண்டையும் செய்யவேண்டியது.

உ0கூ—தனியாய் பிராயச்சித்தம் விதிக்கப்படாத அநுலோம ஜாதிவதைமுதலிய பாபங்களுக்கு அந்தப்பாபம் செய்தவனுடைய சக்தியையும், அதனால்வரும் பாபத்தையும் முதல்விசை இரண்டாம்விசையென்பதையும் யோசித்துப்பார்த்து அந்தப்பாபம் நீங்கும்படி பிராயச்சித்தம்விதிக்கவேண்டியது.

உக0—பாபஞ்செய்தமனிதன் எந்தவுபாயங்களால் செய்தபாபங்களைப்போக்குவானோ அவைகளைஉங்களுக்குச் சொல்லப்போகிறேன். அவைகள்-தேவர்-ருஷி-பிதுரு- இவர்களாலும் அநுஷ்டிக்கப்பட்டிருக்கின்றன.

[ பிராஜாபத்தியமுதலியகிருச்சிரசுவரூபங்கள். ]

உகக—பிராஜாபத்தியகிருச்சிரஞ்செய்கிற துவிஜனானவன் மூன்றுநாள் பகலில் ஒவ்வொருவேளை உப்பில்லாதஅந்நத்தில் இருபத்தாறுகவளமும், மறு மூன்றுநாள் அப்படியே இரவில் முப்பத்திரண்டுகவளமும், மறு மூன்றுநாள் தான் யாசிக்காமலிருக்கும்போது யாராவது வலுவில்கொடுத்தவந்நத்தில் இருபத்துநாலுகவளமும்புசித்து மறு மூன்றுநாள் சுத்தவுபவாசமு மிருக்கவேண்டியது.(கவளமென்பது-கோழிமுட்டைப்பிரமாணமுள்ளது. அல்லது அவனவன்வாயில்கொள்ளப்பட்டவந்நத்தின் அளவுள்ளது.)

உகஉ—பசுவின்மூத்திரம்-சாணம்-பால்-தயிர்-நெய்- தருப்பைஜலம்-இவ்வாறையும் விதிப்படி ஒன்றாகக்கூட்டுவது பஞ்சகவ்வியமாம். அந்தப்பஞ்சகவ்வியத்தைமாத்திரம் ஒருநாள்சாப்பிட்டு மறுநாள்சுத்தோபவாஸமிருப்பது ஸாந்தபநகிருச்சிரமென்று சொல்லப்படும்.மேற்சொன்ன ஆறையும்தனித்தனியே ஒவ்வொருநாள்

சாப்பிட்டு ஏழாநாள் சுத்தஉபவாஸமிருப்பது மஹாஸாந்தபநம்

உசரு—அதிகிருச்சிரம்செய்கிற துவிஜன் மூன்றுநாள் பகலில் ஒவ்வொருகவளமும்,மறு மூன்றுநாள் இரவில் ஒவ்வொருகவளமும்,மறு மூன்றுநாள் யாசிக்காமல்வந்ததில் ஒவ்வொருகவளமும், மறு மூன்றுநாள் சுத்தோபவாஸமு மிருக்கவேண்டியது.

உசச—தப்த்தகிருச்சிரஞ்செய்கிற துவிஜன் மூன்றுநாள் ஒவ்வொருவேளை ஆறுபலமுள்ள உஷ்ணோதகத்தையும், மறு மூன்றுநாள் மூன்றுபலமுள்ள சுடுகையானபாலையும், பின் மூன்றுநாள் ஒருபலமுள்ள உஷ்ணமான நெய்யையும், வேறுமூன்றுநாள்உஷ்ணமாகவீசுகிறகாற்றையும் சாப்பிட்டுக்கொண்டு நியமத்தோடு ஓரிடத்தில் வசிக்கவேண்டியது.இந்தப்பன்னிரண்டுநாளும் ஒரோகாலம் ஸ்நாநஞ்செய்யவேண்டியது.

உசடு—இந்திரியங்களை யடக்கிக்கொண்டு ஜாக்கிரதையுடன் பன்னிரண்டுநாள் சுத்தோபவாஸமிருப்பது சகலபாபத்தையும் போக்குகிறதான பராககிருச்சிரமென்று சொல்லப்படும்.

உசசு—பகலில் மூன்றுகாலத்திலும் ஸ்நாநஞ்செய்து பௌர்ணமாவாசியில் உப்பில்லாத பதினைந்துகவள அந்நம்புசித்து மறுநாளாகிய கிருஷ்ணபக்ஷப்பிரதமைமுதல் அந்தப்பதினைந்துகவளத்தில் ஒவ்வொருகவளமாகக்குறைத்துவந்து அமாவாசியில் சுத்தோபவாசமிருந்து மறுநாள்துவக்கி ஒவ்வொருகவளமாக வளர்த்திக்கொண்டுவந்து மறுபடிபௌர்ணமாவாசியில் பதினைந்துகவளம்புசிப்பது †பிபீலிகாசாந்திராயணமென்று சொல்லப்படும்.

உசஎ—மேற்சொன்ன நியமத்தோடு சுக்கிலபக்ஷப்பிரதமைமு

---

†பிபீலிகாசாந்திராயணமென்பது-எறும்புபோல் முன்னும்பின்னும்பெருத்து நடுவில் சிறுத்திருப்பது.

தல் ஒவ்வொருகவளமாக வளர்த்திவந்து பௌர்ணமாவாசியில் பதினைந்துகவளம் சாப்பிட்டு மறுபடி கிருஷ்ணப்பிரதமை முதல் ஒவ்வொன்றுகக்குறைத்துவந்து அமாவாசியில் உபவாசமிருப்பது*யவசாந்திராயணமென்றுசொல்லப்படும் (ஆனுல் இதில் ஒன்றுக்கொன்றுபேதமில்லை இரண்டுஞ்சரிதான்.)

உகஅ—யதிசாந்திராயண மநுஷ்டிப்பவன் சுக்கிலபக்ஷப்பிரதமைதுவக்கியாவது, கிருஷ்ணபக்ஷப்பிரதமைதுவக்கியாவது-முப்பதுநாள்வரையில் நாடோறும் உப்பில்லாதஅந்நத்தை எவ்வெட்டுகவளம் சாப்பிடவேண்டும்.

உகக—மேற்சொன்ன நியமத்தோடு முப்பதுநாள்வரையில் காலையில் நாலுகவளமும், சூரியன் அஸ்தமநமானவுடனே நாலுகவளமும், சாப்பிட்டிருப்பது சிசுசாந்திராயணமென்று சொல்லப்படும்.

உஉ0—எவ்விதமாயாவது உப்பில்லாத இருநூற்றுநாற்பது கவளஅந்நத்தைச்சாப்பிட்டு முப்பதுநாளைப்போக்குகிறவன் பாபத்தைப்போக்குவதுமன்றி சந்திரலோகத்தையுமடைகிறான்.

உஉக—சகலபாபமும் நீங்குவதற்காகஇந்த சாந்திராயணவிரதங்களை ஏகாதசருத்திராளும், துவாதசஆதித்தியாளும், வஷிடவசுக்களும் சப்தமருத்துக்களும், மற்றும்அநேகமஹருஷிகளும், அநுஷ்டித்தார்கள்.

உஉஉ—சாந்திராயணவிரதமிருப்பவன் முப்பதுநாள் வரையில் நாடோறும் மஹாவியாஹிருதிகளால் ஆச்சியஹோமம் செய்யவேண்டும். பின்னும் ஹிம்சைசெய்யாமை கோபங்கொள்ளாமை சூதில்லாமை பொய்சொல்லாமை இவைகளுள்ளவனுயிரு

---

* யவசாந்திராயணமென்பது- அரிசிபோல் முன்னும்பின்னுஞ்சிறுத்து நடுவில்பெருத்திருப்பது

க்கவேண்டும்(எப்படியும் இந்தநான்கும் எக்காலத்திற்கும்வேண்டியதாயிருந்தாலும் முக்கியமாய் விரதகாலத்திற்கு வேண்டியதென்பதற்காகச்சொல்லப்பட்டது.)

௨௨௩—பின்னும் விரதம் முகிவாகிறவனாயில் ஸ்திரீ- சூத்திரன் பதிதன்-இவர்களோடு ஒருபோதும் பேசக்கூடாது.பிபீலிகாசாந்திராயணம்,யவசாந்திராயணம் நீங்கலாக மற்ற சாந்திராயணவிரதத்தை யநுஷ்டிக்கிறவன் பகலிலும், இரவிலும், மூன்றுகாலத்திலும் ஸ்நாநஞ்செய்யவேண்டியது.

௨௨௪—பகலிலும் இரவிலும், நின்றுகொண்டாவது, அல்லது உட்கார்ந்துகொண்டாவது இருக்கவேண்டும், படுக்கக்கூடாது ஆனால் அதிக இளைப்பாயிருந்தால் தரையில் படுக்கலாம்,கட்டில்முதலியபடுக்கையில் படுக்கக்கூடாது, ஸ்திரீஸம்போகம் செய்யாமல் பலாசதண்டம்-முஞ்சி இவைகளைத்தரிக்கிறவனையும்,குரு-தெய்வம் பிராமணன்-இவர்களை பூசிக்கத்தக்கவனையுமிருக்கவேண்டியது.

௨௨௫—விரதஸமாப்திவனாயில் நாடோறும் காயத்திரிஜபம் செய்யவேண்டும்,பின்னும் பரிசுத்தகரங்களான வேத ருக்குகளையும் சக்திக்குத்தக்கபடி ஜபிக்கவேண்டும்,(இந்தச்சுலோகத்தில்சொல்லியநியமங்கள் சாந்திராயணவிரதத்துக்குமாத்திரமன்று.பிராஜாபத்தியகிருச்சிர முதலானவைகளை அநுஷ்டிப்பவர்களும் இந்தவிரதத்தை அன்போடுநடத்தவேண்டியது.)

௨௨௬—இந்த அத்தியாயத்தில் நாற்பத்தொன்பதாவது சுலோகமுதல் சொன்னபடி பிரகாசமான பாபம்செய்தவர்களை இப்போதுசொல்லிய பிராயச்சித்தங்களை செய்துகொள்ளும்படி பரிஷத்திலிருக்கிறபிராமணன் விதிக்கவேண்டியது. ரஹஸியமாய் பாபஞ்செய்தவர்கள் மந்திரஜபத்தினாலும் பிராயச்சித்த ஹோமங்களாலும் பிராயச்சித்தஞ்செய்யவேண்டியது.

உஉஎ—பிரகாசமான பாபஞ்செய்தவன் தான்செய்தபாபத்தை அனைவருக்குந் தெரியும்படிசொல்வதினாலும், அறியாமல்செய்தோமென்று பச்சாதாபப்படுகிறதினாலும், உக்கிரமான தவஞ்செய்வதினாலும் காயத்திரிஜபத்தினாலும், தபம்-ஜபம் செய்யக்கூடாத ஆபத்துக்காலத்தில் தானங்கொடுக்கிறதினாலும் சுத்தனாகிறான்.

உஉஅ—பாபஞ்செய்தவன் தான்செய்தபாபத்தை எப்படியெப்படி பலபேருடன் சொல்லுகிறானோ அப்படியப்படியே பாம்பானது தோலிலிருந்து நீங்குகிறாப்போல் அந்தப்பாபத்திலிருந்துநீங்குகிறான்.

உஉகூ—பாபஞ்செய்தவனுடையமநது எவ்விதமாக அந்தப்பாபத்தை நிந்தித்துக்கொண்டு பச்சாத்தாபப்படுமோ அவ்விதமாகவே அந்தப்பாபம் அவனாத்துமாவைவிட்டு நீங்கும்.

உ௩0—பாபஞ்செய்தபின்பு அறியாமல் செய்தோமென்று பச்சாத்தாபப்படும்போது இனி இவ்விதமாய் செய்யாமலிருக்கக்கடவோமென்று ஸங்கற்பஞ்செய்து மறுபடியும் அவ்விதபாபஞ்செய்யாமலிருந்தாற்றான் அவன் பரிசுத்தனாவான்.

உ௩க—இவ்விதமாக பரலோகத்தில் சுகதுக்கங்களைக் கொடுக்கிறதான சுபாசுபகர்மங்களை நன்றாக மநதினாலறிந்து நாடோறும் மநம்-வாக்கு-சரீரம்-இந்த திரிகரணத்தினாலும் சுபகருமத்தையே செய்யவேண்டும்.

உ௩உ—அறிந்தாவது, அறியாமலாவது, ஒரு கெட்டகருமத்தைச் செய்தவன் அந்தப்பாபத்தைப்போக்கடிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டால் மறுபடியும் அவ்வித கெட்டகருமத்தைச்செய்யாமலிருக்கவேண்டும்.

உ௩௩—ஒருபாபஞ்செய்தவனுக்கு அந்தப்பாபத்துக்கு விதித்த

பிராயச்சித்தஞ் செய்துகொண்டதினல் மநதிற்கு பாபம்போன தாக சந்தோஷமுண்டாகாவிட்டால் அவன் மறுபடியும் அந்தப் பிராயச்சித்தத்தையே மநக்களிப்புண்டாகிறவரையில் செய்யவே ண்டும்.

உஉச—தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் உண்டாகிற சுகத்து க்கு தவமேஆதியாயும்,மத்தியமாயும்,முடிவாயும்,இருக்கிறதென்று வேதப்பொருளையறிந்த வித்துவான்களான மஹருஷிகள்சொல் லுகிறுர்கள்.

உஉரு—ஆனல் அதில் பிராமணனுக்கு வேதவேதாந்தார்த்தத் தையறியும்படியான ஞாநமும்-க்ஷத்திரியனுக்கு பிரஜாஸம்ரக்ஷ ணையும், வைசியனுக்கு பயிர்வர்த்தகங்களும், சூத்திரனுக்கு பிரா மணசிசுருஷையும் தவமாகும்.

உஉசு—திரிகரணசுத்தியுள்ளவர்களாயும்,பழம்-கிழங்கு - காற்று இவைகளை ஆகாரமாகப் புசிக்கிறவர்களாயுமிருக்கிற ருஷீசுவரர்க ளீ தவத்தின்பெருமையினல் அடையப்பட்டிருக்கிறஞாநக்கண்ணு லே பிருதுவி-அந்தரிக்ஷம்-சுவர்க்கம்ஆகியமூன்றுலோகத்திலும் இ ருக்கப்பட்ட ஜங்கமஸ்தாவரங்களை ஓரிடத்திலிருந்து கொண்டே பிரத்தியக்ஷமாய்ப்பார்க்கிறுர்கள்.

உஉஎ—ஔஷதம்-நோயில்லாமை-பிரமவித்தை - கருமாநுஷ் டாநம் சுவர்க்கமுதலிய பலபலபுண்ணியலோகவாஸம் - இவைக ளெல்லாம் தவத்தினலேயேசித்தியையடைகின்றன · ஏனென்றுல் அவைகளுக்குத்தவமே காரணமல்லவா.

உஉஅ—பிரயாஸையைக்கொடுக்கிறதானகோஜாரபலனும்,க்ஷத்தி ரியாதிஜாதிகளுக்குஅந்தஜநநத்திலேயே அடையவரிதானபிராமண ஜநநமுதலானவையும், மற்றுமடையவரிதானதேசங்களும், தநம் தாநியமுதலானவையும், தவத்தினல்சுலபமாகச் சாதிக்கப்படும்

ஏனென்ருல் தபோபலமானது மற்ற ஒன்ருலும் அழிக்கப்படாதல்லவா.

உருகக—பிரமஹத்திசெய்தவன்முதலிய பஞ்சமஹாபாதகர்களும், உபபாதகர்கள்முதலிய அகிர்த்தியகரணம் செய்தவர்களும் நன்ருக அநுஷ்டிக்கப்பட்டிருக்கிற தவத்தினுலேயே அந்தப்பாபத்தைவிட்டு நீங்குகிருர்கள்.

உசO—உலண்டுப்பூச்சி-பாம்பு - விளக்கணைப்பூச்சி - பசுக்கள் பக்ஷிகள்-விருக்ஷமுதலியஸ்தாவரங்கள் இவைகளும் தபோபலத்தினுல் சுவர்க்கத்தையடைகின்றன. (இதுபுராணத்தில் பிரசித்தமாயிருக்கிறது.)

உசக—தவத்தைப்பொருளைப்போலச்சம்பாதித்துக் காப்பாற்றுகிறத்தினுல் தபோதனுளென்றுசொல்லப்பட்ட ருஷிகள் மநதினுலும், வாக்கினுலும்,காயத்தினுலும், எந்தபாபத்தைச்செய்தாலும் அதையெல்லாம் தவத்தினுலேயே கொளுத்திவிடுகிருர்கள்.

உசஉ—தவத்தினுல் பரிசுத்தனுயிருக்கிற பிராமணன்செய்கிற யாகாதிகிரியைகளில் தேவர்கள் அவன்கொடுக்கிறஹவிஸைப்பிரதிக்கிரஹித்துக்கொண்டு அவனபீஷ்டங்களை கொடுக்கிருர்கள்.

உசங—லோகங்களை சிருஷ்டிக்கவல்லமையுள்ள பிரம்மாவானவர் தவத்தினுலேயே பிரபஞ்சத்தை உண்டுபண்ணினுர். பின்னும் வசிஷ்டர்முதலியமகாருஷிகளும் தவத்தினுலேயே வேதத்தையும் வேதப்பொருளையும் அறிந்தார்கள்.

உசச—இந்தப்படி சகலபேர்களுக்கும் தவத்தின்மஹிமையால்வரும் புண்ணியமானபிறப்பை பார்த்திருக்கிறதேவர்கள் எல்லாத்துக்கும் தவமேகாரணமென்று தவத்தின்புண்ணிய பாக்கியங்களைக்கொண்டாடுகிருர்கள்.

உசரு—நாடோறும் சக்திக்குத்தக்கபடி வேதாத்தியயநம் செ

யீவது-பஞ்சமஹாயக்கியத்தை அநுஷ்டிப்பது.ஒருவன்தனக்குஅ பகாரஞ்செய்தாலும் அதைப்பொறுத்திருப்பது இவைகளெல்லாம் மஹாபாதகத்தாலுண்டான தோஷத்தையும் உடனேஅழித்துவிடும். மற்றதோஷவிஷயத்தில் கேட்கவேண்டியதில்லை.

உசசு—அக்கிநியானது தன் தேஜஸ்ஸினுல் தனக்குச்சமீபத்திலிருக்கிற காஷ்டங்களை க்ஷணகாலத்தில் எப்படி தஹித்துவிடுகிறதோ அப்படியேயெல்லாவேதத்தினுடைய தத்துவார்த்தத்தையறிந்தவன் பரமார்த்த ஞாநமாகிற நெருப்பினுல் தன்னையடைந்த எல்லாப்பாபங்களையும் தஹித்துவிடுகிறுன்.

உசஎ—பிரகாசமாயிருக்கிற பிரமஹத்திமுதலிய பாபங்களுக்கு இப்போதுபிராயச்சித்தம் சொல்லிமுடிந்தது.இனிரஹசியமானபாபங்களுக்கு பிராயச்சித்தத்தைக்கேளுங்கள்.

## ரகசியவிஷயபிராயச்சித்தம்.

உசஅ—வியாக்கிருதி-பிரணவம்-இத்துடன்விதிப்படி ஒருமாதவரையில் நாடோறும் பதினறுபிராணயாமங்களைச்செய்தால் பிரமஹத்திசெய்தவனையும் பிரமஹத்திசெய்தானென்று அபவாதத்தையடைந்தவனையும் பரிசுத்தனுக்கிவிடும்.

உசகூ—கௌச்சருக்கு-வாசிஷ்டருக்கு-மாஹித்திரருக்கு பரிசுத்தமான இந்தமூன்றுருக்குக்களையும் ஒருமாதவரையில் நாடோறும்பதினறுதரம் ஜபம்செய்தால் சுராபாநம்செய்தவனும்அவ்விதஅபவாதமுள்ளவனும் பரிசுத்தனுவான்.

உ௫0—ஆஸியவாமியம்- சிவஸங்கல்பம் - இவைகளை ஒருமாதவரையில் நாடோறும் ஒருவிசைஜபித்தால் பிராமணன்பொன்னைத்திருடினவன் உடனேபரிசுத்தனுவான்.

உ௫க—ஹவிஷியந்தீயம்-நதமம்ஹா என்பது புருஷஸூக்த்

தம் இவைகளை ஒருமாதம்வரையில் நாடோறும் பதினாறுவிசை ஜபித்தால் குருதாரத்தைப் புணர்ந்தவன் பரிசுத்தனாவான்.

கடுஉ—மஹாபாதகங்கள் உபபாதகங்கள் இவைகளைப்போக்க மநமுள்ளவன்- அவயென்னும்ருக்கு-யதிஞ்சவென்னும்-ருக்கு-இதிமே என்னும் ஸூக்தம்-இவைகளை ஒருவருஷிவரையில் நாடோறும் பரிசுத்தனாய் ஒருதரம்ஜபித்தால் பரிசுத்தனாவான்.

உடுரு—மஹாபாதகர்முதலான தகாதவர்களிடத்தில் தாநம்வாங்கினாலும்,சாப்பிடத்தகாத அந்நத்தை சாப்பிட்டாலும்-தரது-என்னும்-ருக்கை மூன்றுநாள் ஜபித்தால் சுத்தியடைவான்.

உடுச—வெகுபாபமுள்ளவனாயிருந்தாலும் ஒருமாதம்வரையில் ஓடுகிறநதியில் ஸோமாரௌத்திரம்-அரியம்ணம்- இந்த-ருக்குக்களைச்சொல்லி நாடோறும் ஸ்நாநஞ்செய்தால் சுத்தனாவான்.

உடுரு—மற்றுஞ்சிலபெரிதான பாபமுள்ளவன் இந்திரமென்னும்-துவக்கத்தையுடைய ஏழுருக்குக்களையும் - ஆறுமாதவரையில் நாடோறும் ஜபிக்கவேண்டும்.ஜலத்தில் மலமூத்திரத்தைவிட்டவன் ஒருமாதவரையில் பிக்ஷையெடுத்து சாப்பிட்டுக்கொண்டிருக்கவேண்டியது.

உடுசா—துவிஜன் பெரிதானபாபஞ்செய்திருந்தாலும் ஒருவருஷிவரையில் சாகலஹோம மந்திரங்களால் ஆஜ்யாஹுதிசெய்தாலும் அல்லது நம: என்னும் ருக்கை அந்தஒருவருஷிம் ஜபித்தாலும் அந்தப்பாபத்திலிருந்து நீங்குவான்.

உடுஎ—மஹாபாதகஞ் செய்ததுவிஜன் ஒருவருஷிவரையில் ஜிதேந்திரியனாய் பசுக்களைப்பின்தொடர்ந்து அநுசரித்து உபசரிக்கவேண்டியது. பின்னும் அப்போதுபவமானருக்குக்களை ஜபித்துக்கொண்டு பிக்ஷையெடுத்து புசிக்கவேண்டும் இந்தப்பிரகாரம் கோபூஜைசெய்தால் பரிசுத்தனாவான்.

உ௲அ—மூன்றுபராககிருச்சிரவிரதத்தைத அநுஷ்டித்து அதனு ல்பரிசுத்தனானபின்பு தபோவநத்தில் மூன்றுதரம் வேதஸம்ஹி தையை ஜபித்தால் எல்லாப்பாபத்தினின்றும் நீங்குவான்.

உ௲கூ—மூன்றுநாள்வரையில் சுத்தோபவாசமிருந்து பரிசுத்த னாய் அந்தநாள்தோறும் திரிகாலத்திலும் அகமருஷண-ருக்கை-மூ ன்றுதரம்ஜபித்து ஸ்நாநஞ்செய்தால் எல்லாப்பாபத்தினின்றும் நீ ங்குவான் இந்தப்பிராயச்சித்தங்களெல்லாம் பாபங்களின் உயர்வு தாழ்வு பாபம்செய்தவனுடையசக்தி இவைகளை யோசித்துப்பா ர்த்து விதிக்கத்தக்கவைகள்.

உ௲0—எப்படியானால் அசுவமேதயாகமானது எல்லாயாகங்க ளுக்கும் ராஜாவாயும் சகலபாபங்களைப்போக்குகிறதாயும் இருக்கி றதோ அப்படியே அகமருஷண-ருக்கும்-ஸர்வபாபத்தையும்போ க்குகிறதினால் ருக்குக்கெல்லாம் சிரேஷ்டமாகவிருக்கிறது.

உ௲க—பூலோகமுதலிய மூன்றுலோகத்தை அழித்தாலும் ம ஹாபாதகர்முதலான தகாதவனந்நத்தை சாப்பிட்டாலும் ருக்கு வேதத்தை பொருளுடன்ஜபித்துக்கொண்டிருக்கிறவனுக்கு ஒரு பாபமும்நேராது.

உ௲உ—பின்னும் ருக்சம்ஹிதையையாவது எஜுஸ்ஸம்ஹிதை யையாவது ஸாமவேதோபநிஷத்து ஸம்ஹிதையையாவது அதின் பொருளைக்கருதிக்கொண்டு மூன்றுதரம்ஜபித்தால் எல்லாப்பாப த்தில் நின்றும் நீங்குவான்.

உ௲ரு—எப்படியானால் ஒருபெரியமடுவில் ஒருமண்ணுங்கட்டி யைப்போட்டால் அது தானேகரைந்துபோகுமோ அப்படியே சகலமான கெட்ட நடத்தையும் மேற்சொல்லும் லக்ஷணத்தையு டைய வேதத்திருவிருத்தை அறிந்தவனை அடைந்தால் தானேநசி த்துப்போகும்.

உசுச—ருக்குவேதமந்திரம்-யஜுர்வேதமந்திரம்-ஸாமவேதமந்திரம் மற்றும்பலபல மந்திரப்பிராமணங்கள் இவைகள் எல்லாம் கூடியதற்கு வேதத்திருவிருத்தென்றுபெயர் இந்தவேதத்திருவிருத்தை எவன் அறிந்திருக்கிறனோ அவன் வேதத்தையே யறிந்தவனுகச்சொல்லப்படுகிறன்.

உசுரு—எல்லாவேதங்களுக்கும் ஆதியில் சொல்லத்தக்கதாயும் மூன்று எழுத்துள்ளதாயும் இருக்கிற பிரணவத்தையும் ஒருவேதத்திருவிருத்தென்று சொல்லுகிறர்கள் யாதொருபிரணவத்தில் மூன்றுவேதமும்அடங்கியிருக்கின்றனவோ யாதொருபிரணவமந்திரமானது ரகசியமாய்ஜபிக்கத்தக்கதோ அந்தப்பிரணவத்தைபொருளுடன் சுரத்தோடு அறிந்தவன் எல்லாம்வேதத்தையும் அறிந்தவனுகிறன்.

பதினேராவதத்தியாயம் முற்றிற்று.

ஆ. அத்தியாயம்-கக-க்கு-சுலோகம்-உருருஅ.

பன்னிரண்டாவது

# அத்தியாயம்.

## கருமவிபாகம்.

## மகருஷிகள்வினு.

க—பரிசுத்தரான ஒப்பிருகுமஹாருஷியே பிராமணன்முதலிய நாலுவருணத்தாருடையதருமமும் சங்கரஜாதிகளின் உற்பத்தியும் அவர்களின் தொழிலும், தேவரீரால் எங்களுக்குச்சொல்லப்பட்டன இனி புண்ணியபாபகருமங்களுக்கு ஜந்மாந்திரத்தில் வரும்பலனைத் தத்துவமாய் எங்களுக்குச்சொல்லவேண்டுமையா.

விடை.

உ—தருமத்தையேமுக்கியமாய் நடத்துகிறவரான அந்த பிருகுமஹருஷியும் இந்தருஷீசுவரானைப்பார்த்து இந்தச்சகலமானகருமங்களுடைய பலனையும் கேளுங்களென்று சொல்லத்தொடங்கினார்.

௩—கருமமானது மநம்-வாக்கு-காயம் - இம்மூன்றினாலும் உண்டாகிறது-அது நல்லகருமமென்றும் - கெட்டகருமமென்றும் இருவகைப்படும், அதில் நல்லகருமத்துக்கு சுபபலனும், கெட்டகருமத்துக்கு அசுபபலனும் உண்டாகும் அந்தக்கருமங்களாற்றான் மனிதர்களுக்கு தேவ-மநுஷிய-தீரியக்கு - ஸ்தாவரரூபமான உத்தம-மத்தியம-அதம-கதிகள் உண்டாகின்றன.

௪—உத்தம-மத்தியம- அதம - ரூபமாயும் - பிராணிகளின் திரிகரணங்களால் செய்யப்படுகிறதாயும் மேற்சொல்லப்போகிற பத்துவித அடையாளத்தை உடைத்தானதாயும் இருக்கிறசுபாசுபகருமத்துக்கு மநதையேமுக்கியகர்த்தாவாக அறியுங்கள்.

௫—பத்துவிதங்களாவன-ஒருவன்பொருளை எப்படியபகரிக்கலாமென்றுநினைத்தல்-பிரமஹத்திமுதலியதகாதகாரியத்தைச்செய்யவேண்டுமென்றுவிரும்புதல்-தேகமே ஆத்மாவென்று அதனிடத்தில் விருதாவாய் அபிமாநம்வைத்தல் -இந்தமூன்றும் மநதின் அசுபகருமம் இதற்குவேறுபட்டது அதனுடைய சுபகருமமாகும்

௬—ஒருவனைக்கடினமாகப்பேசுதல்-பொய்சொல்லுதல்-கோட்சொல்லுதல்-வீணான வம்பளர்த்தல் - இந்நான்கும் வாக்கின் அசுபகருமங்கள்-இதற்குவேறுபட்டது அதனுடையசுபகருமமாகும்.

எ—ஒருவன்பொருளை அநியாயமாய் அபகரித்தல்- யாகாதி

காரியமன்றி ஹிம்ஸைசெய்தல்-பிறன்மனையாளைப்புணர்தல்- இம்மூன்றும் சரீரத்தின்அசுபகருமம் இதற்குவேறானது அதன் சுபகருமமாகும் ஆக கருமங்கள் பத்துவிதமாம்.

அ—மநதினல்செய்யப்பட்ட புண்ணியபாபங்களுடைய பலனை இப்பிறப்பிலாவது- மறுபிறப்பிலாவது- மநதினலேயே அநுபவிக்கிறான்.இப்படியே வாக்கினல்செய்யப்பட்ட புண்ணியபாபங்களுடைய பலனைவாக்கினலும் காயத்தினல்செய்யப்பட்ட புண்ணியபாபங்களுடைய பலனை காயத்தினலும் அநுபவிக்கிறான்.

## கருமபலன்.

கூ—மனிதன்பெரும்பாலும் தேகத்தினல் அசுபகருமத்தைச்செய்தால் ஸ்தாவர ஜநநத்தை அடைகிறான் வாக்கினல்பெரும்பாலும் அசுபகருமத்தைச்செய்தால்-பக்ஷி-அல்லது மிருகமாப்பிறக்கிறான். மநதினல்பெரும்பாலும் அசுபகருமத்தைச்செய்தால் சண்டாளன்முதலிய ஹீநஜாதியில்பிறக்கிறான்.

க0—எவன்-மநம்-வாக்கு- காயம் - இந்தமூன்றையும் அசுபகருமங்களைச்செய்யவொட்டாமல் தண்டித்து தன்புத்தியில் அடக்குகிறானே அவன்தான் திரிதண்டியென்று சொல்லப்படுகிறானே அல்லது வெளியில் †திரிதண்டத்தை தரிக்கிறதினல்மாத்திரம் திரிதண்டியென்றுசொல்லப்படமாட்டான்.(ஆதலால்வெளியில் தரிப்பதுபோல உள்ளுந்திரிதண்டமிருக்கவேண்டுமென்றகருத்து.)

கக—மேற்சொல்லியபடி திரிகரணங்களையுந்தண்டித்து தானும் ஸர்வபிராணிகளிடத்திலும் காமக்குரோதங்களை வையாமலிருந்தால் மோக்ஷசித்தியையடைவான்

---

† திரிதண்டமென்பது ஸந்நியாசிகையில் தரிக்கிறமுக்கோல்.

## ஆத்துமசுவரூபம்.

கஉ—சரீரமானது பஞ்சமஹாபூதங்களுடைய தன்மாத்திரைகளால் ஏற்பட்டிருப்பதால் அதை பூதாத்துமாவென்றுசொல்லுகிறார்கள். அந்தப்பூதாத்துமாவைக்கொண்டு சுபாசுபகருமங்களை நடத்திவைக்கிறவனை ஜீவாத்துமாவென்று சொல்லுகிறார்கள்.

கரு—ஸர்வபிராணிகளுக்கும் ஜநநகாலத்தில்கூடவேபிறந்ததாயும் மஹத்தத்துவமென்றுபெயருள்ள தாயுமிருக்கிற வேறொரு அந்தராத்துமாவிருக்கிறான் அஹங்கார இந்திரியாதிரூபமாகவிருத்தியடைந்திருக்கிற யாதொருமஹத்தத்துவத்தினாலேயே ஜநநங்கள்தோறும் ஜீவாத்துமாவானவன் சுகதுக்கங்களையநுபவிக்கிறானே.

கச—அந்தராத்துமாஜீவாத்துமாவாகிய அவ்விருவரும் பாஞ்சபூதிகசரீரத்துடன் கூடினவர்களாய் உயர்ந்தும் தாழ்ந்துமிருக்கிற எல்லாப்பிராணிகளிடத்திலும் அந்தரியாமியாய் வசிக்கிற பரமாத்மாவை அநுசரித்து அவர் இச்சாநுகுணமாகநடக்கிறார்கள்.

கரு—அந்தப்பரமாத்மாவினுடைய சரீரத்தில்நின்றும் லிங்கசரீரமுள்ளதான ஜீவாத்மாக்கள் கணக்கற்றனவாய் அக்கினியிலிருந்து நெருப்புத்திவலைகள்போல்வெளிப்பட்டு தேவமநுஷியாதிரூபங்களைத்தரித்து எப்போதுந்திரிகரணங்களை சுபாசுபகருமங்களில் ஏவுகின்றன.

## பாபபுண்ணியபலன்கள்.

கசா—பாபஞ்செய்தபிராணிகளுக்கு இறந்தபின்னும்யமயாதநையை அநுபவிப்பதற்காக பஞ்சதன்மாத்திரைகளாலேயே வேறொரு யாதநாசரீரமுண்டாகிறது அந்தச்சரீரமானது துக்கத்தை ஸஹிக்கிறதற்காக மிகவும் உறுதியாயிருக்கிறது.

௧எ—அந்தயாதநாசரீரத்தினால் பாபிகள் அசுபகருமங்களுக்கு பலன்களான யமயாதனைகளை அநுபவித்தபின்பு அந்தசச்சரீரத்துக்கு ஆதாரமான பஞ்சதன்மாத்திரைகளும் அதனதன் உற்பத்திஸ்தானங்களைச் சார்ந்துஐக்கியமாகின்றன.

௧அ—தகாததான பஞ்சவிஷயப்பற்றினால் உண்டானதாயும்மிகவும் கஷ்டத்தைக்கொடுக்கிறதாயும் இருக்கிற யமயாதனைகளை அந்தஜீவன் அநுபவித்தபின்பு பாவமில்லாதவனாய் மேற்சொல்லிய மிகுந்தகாந்தியுள்ள அந்தராத்மா பரமாத்மா இவர்களையே அடைகிறான்.

௧௯—அந்தப்பரமாத்மாவும்-அந்தராத்மாவும்-இந்தஜீவன் அநுபவித்து மிகுந்தபுண்ணியபாபங்களை சோம்பலில்லாமல் இருவருங்கூடியிருந்துபார்க்கிறார்கள். யாதொருபுண்ணியபாபங்களாலேயே ஜீவாத்துமாவானவன்இம்மையிலும், மறுமையிலும், சுகதுக்கங்களை முறையே அநுபவிக்கிறானே.

உ௦—அந்த ஜீவன்மானுடனாகவிருந்தபோது தருமத்தையதிகமாகவும் அதர்மத்தைக்கொஞ்சமாகவும் செய்திருந்தால் மானுடசரீரத்துக்கு ஆதாரமாயிருந்த அந்தப்பஞ்சதன்மாத்திரைகளால் ஏற்பட்டிருக்கிற ஸ்தூலமானபோகசரீரமெடுத்து சுவர்க்கத்தில் சுகத்தையநுபவிக்கிறான்.

உ௧—ஒருக்கால் அதர்மத்தை அதிகமாயும் தருமத்தைசுலபமாயும் செய்திருந்தால் அப்போது அந்த ஸ்தூல சரீரமில்லாதவனாய் மேற்சொன்னபடிசூக்ஷமமானயாதநா சரீரமெடுத்துக்கொண்டு யமயாதனைகளையநுபவிக்கிறான்.

உஉ—அந்தயமயாதனையை அநுபவித்தபின்பு அந்தஜீவனானவன் பாபமில்லாதவனாய் பாஞ்சபௌதிகமானமானுட சரீரத்தையேயடைகிறான்.

உரு—இந்தஜீவனுக்கு இவ்விதமாக தருமத்தினுலும், அதர்மத்தினுலும் உண்டாகிற சுவர்க்கவாஸம்,நரகவாஸமாகிற சுகதுக்கங்களை தன்னுடைய அந்தக்கரணத்தினுலேயே நன்ருகயோசித்துப் பார்த்து எப்போதும் தருமாநுஷ்டானத்திலேயே மநதைவைக்க வேண்டியது.

## முக்குணலக்ஷணம்.

உசு—ஸத்துவம்-ரஜஸ்ஸு-தமஸ்ஸு-இந்தமூன்றையும்-ஆத்துமகுணங்களென்று அறியவேண்டும். அந்தமுக்குணங்களின் சம்பந்தத்தினுலேயே அந்தராத்துமா-ஸ்தாவரஜங்கமரூபங்களை அடைந்திருக்கிறது.

உ௭—இந்தக்குணங்களுக்குள் எந்தச்சரீரத்தில் எந்தக்குணமானது எப்போது பெரும்பாலும் அதிகமாயிருக்கிறதோ அப்போது அந்தச்சரீரமுள்ளபிராணியை அந்தக்குணமானது தனக்குச்சுவாதீநப்படுத்திக்கொள்ளுகிறது.

உஅ—ஒரு பதார்த்தத்தை யதார்த்தமாயறிதல்-சத்துவகுணத்தின்செய்கை-இதற்கு வேருனது தமோகுணச்செய்கை- இராகத்துவேஷங்கள் ரஜோகுணத்தின்செய்கை - இந்த மூன்றுகுணங்களுக்கும் விசுவாஸம்-அவிசுவாஸம்-வியஸநம் - இந்தமூன்றும் முறையே சுவரூபம்-இந்தச்செய்கையுடனும் இந்தச்சுவரூபத்துடனும் சகலபிராணிகளுடைய பாஞ்சபூதிக சரீரத்தை வியாபித்திருக்கின்றன.

உஎ—அந்த முக்குணங்களுக்குள் யாதினுல் ஆத்துமாவினிடத்தில் இதரமானஸம்ஸாரவிஷயத்தில் கிஞ்சித்துவ்வியஸநத்தை உண்டாக்காமல் கேவலப் பரிசுத்தமான தெளிவுண்டாகிறதோ அதைஸத்துவகுணச்சுவரூபமென்று அறியவேண்டியது.

௨௮—யாதினால் ஸம்ஸாரவிஷயத்தில் துக்கமும், ஆத்துமாவுக்கு அஸந்துஷ்டியும் விஷயங்களில் அதிகஆசையும் உண்டாகிறதோ அதை ரஜோகுணச்சுவரூபமென்று அறியவேண்டும்.

௨௯—எதானது - ஸத்தென்றும்-அஸத்தென்றும் பகுத்தறியும்படியான விவேகமில்லாததாயும் எப்போதும் தகாதவிஷயத்திலேயே முழுகினதாயும், இன்னவிதமாயிருக்கிறதென்று யோசிக்கக்கூடாததாயும், கேவலம் தெளிவில்லாயதாயுமிருக்கிறதோ அதை தமோகுணமென்று அறியவேண்டியது.

## முக்குணங்களின் செய்கை.

௩0—இந்த முக்குணங்களுக்கும் யாதொரு-உத்தம-மத்தியம-அதம-ரூபமான செய்கைகளுண்டாகிறதோ அதை முழுமைக்குப்நன்றாகச்சொல்லப்போகிறேன்.

௩௧—வேதாத்தியயநஞ்செய்தல்-பிராஜாபத்தியமுதலிய தவத்தை அநுஷ்டிப்பது-சாஸ்திரம்-ஞாநம்-பரிசுத்தம் இந்திரியநிக்கிரகம் தாநம்முதலிய தருமாநுஷ்டாநம்-ஆத்துமத்தியாநம்- இவைகள் சத்துவகுணத்தின் காரியங்கள்.

௩௨—பலனைவிரும்பி ஒரு யாகாதிகாரியத்தைச்செய்தல்-சொற்பவிஷயத்திலும் அதைரியப்படுதல் - தகாதகாரியத்தைச்செய்தல் எப்போதும் விஷயப்பற்றுள்ளவனாயிருத்தல் இவைகள் ரஜோகுணத்தின்காரியங்கள்.

௩௩—பேராசை-எப்போதும்தூங்குதல்-கார்ப்பண்யம்-கோட்சொல்லுதல் தெய்வத்தை ஒப்புக்கொள்ளாமை-அநாசாரம்-யாசகஞ்செய்தல்-அஜாக்கிரதை-இவைகள் தமோகுணத்தின்காரியங்கள்.

௩௪—இந்தமூன்றுகுணங்களுக்கு- இறந்தகாலம் - நிகழ்காலம்-

எதிர்காலம்-என்றுசொல்லப்பட்ட மூன்றுகாலங்களிலுமிருக்கப்பட்ட அடையாளத்தை சுருக்கமாக மேற்சொல்லப்போகிறேன்.

ருரு—எந்தக்காரியத்தைச்செய்யும்போதும் செய்தபின்னும் செய்யவேண்டுமென்று யத்தநித்தபோதும் வெட்கமே உண்டாகிறதோ அது தமோகுணத்தின்காரியமென்று தெரிந்தவன் அறியவேண்டும்.

ருசு—எந்தக்காரியத்தினால் இம்மையில் மேலானஐசுவரியத்தை விரும்புகிறானோ எந்தச்செய்கைக்கு பலனுண்டாகாவிட்டாலும் வியசநம்நேரிடவில்லையோ அதை ரஜோகுணத்தின்காரியமென்று அறியவேண்டியது.

ருஎ—எந்தக்காரியத்தைசர்வப்பிரயத்திநத்தினாலும் அறிய விரும்புகிறானோ பின்னும் எந்தச்செய்கையைக்குறித்து மூன்றுகாலத்திலும் வெட்கப்படவில்லையோ எந்தச்செய்கையினால் இவனுத்துமாவும் சந்தோஷித்தை யடைகிறதோ அதை ஸத்துவகுணத்தின்செய்கையாக அறியவேண்டும்.

ருஅ—பெரும்பாலும் காமத்துக்குச் சுவாதீநப்பட்டிருப்பது தமோகுணவியாபாரம்- பெரும்பாலும் பொருளாசைகொண்டிருப்பது ரஜோகுணவியாபாரம். பெரும்பாலும் தருமாநுஷ்டாநஞ்செய்வது ஸத்துவகுணவியாபாரம், இவைகளில் ஒன்றைவிட ஒன்று கிரமமாக சிரேஷ்டமானது.

ருகூ—இவைகளுக்குள் எந்தக்குணத்தின்காரியத்தினால் எந்தக் கதிகளை ஜீவன் அடைகிறானோ அதை கிரமமாகச் சுருக்கமாய்ச் சொல்லப்போகிறேன்.

## முக்குணத்தின்பயன்.

சம—சத்துவகுணமுள்ளவர்கள் தேவத்தன்மையையும் ரஜோ

குணமுள்ளவர்கள் மாநுஷத்தன்மையையும், தமோகுணமுள்ளவர்கள்-பசு-பக்ஷித்தன்மையையும் அடைகிறார்கள்.ஆகையால் கதிகள் மூன்றுவகைப்பட்டிருக்கின்றன.

சக—இப்போதுசொல்லிய மூன்றுகுணங்களையுடைய கதிகளும் தேசம்-காலம்-கர்மம்-இவைகளின்பேதத்தினால் ஒவ்வொன்று உத்தமம்-மத்தியமம்-அதமமென்று மூவகைப்படும்.

## தமோகுணத்தினால்வரும்ஜநநம்.

சஉ—ஸ்தாவரம்- புழு-உலண்டுப்பூச்சி -மத்ஸியம்-ஸர்ப்பம்-ஆமை-பசு-மிருகம்-இந்தஜாதியாகப்பிறத்தல் இது தமோகுணத்தின் அதமகதி.

சங—யானை-குதிரை-சூத்திரர்-பழிக்கத்தக்க மிலேச்சர்- சிங்கம் புலி-வராகம் - இவ்விதமாகப் பிறப்பது தமோகுணத்தின்மத்தியமகதி.

சச—சாரணர்-சுபர்ணர்-டாம்பிகபுருஷர்-இராக்ஷதர்-பைசாசுர் இவ்விதமாகப்பிறப்பது தமோகுணத்தின் உத்தமகதி.

## ரஜோகுணத்தினால்வரும்ஜநநம்.

சரு—*சுல்லர்❁மல்லர்-நட்டுவர்-கத்திஎடுத்துஜீவிப்பவர்- சூதர்-குடியர் - இவ்விதமாகப்பிறப்பது ரஜோகுணத்தின் அதமகதி சுல்லர் மல்லர்-இவர்களை பத்தாவதத்தியாயத்தில் இருபத்திரண்டாவதுசுலோகத்திற்காண்க.

சசா—அரசர்-க்ஷத்திரியர்-இராஜபுரோகிதர்-வாதஞ்செய்கிறதில் ஆசையுள்ளவர் இவ்விதமாகப்பிறப்பது ரஜோகுணத்தின் மத்தியமகதி.

* சுல்லரென்பது-தடிசண்டைக்காரர்.

❁ மல்லரென்பது - தோள்சண்டைக்காரர்.

சஎ—காந்தர்ப்பர்-குஹியகர்-யக்ஷர்-வித்தியாதரர் - நாநாவித மானஅப்ச்சரச்சுகள் இவ்விதமாகப்பிறப்பது ரஜோகுணத்தின் உத்தமகதி.

## ஸத்துவகுணத்தினால்வரும்ஜநநம்.

சஅ—வாநப்பிரஸ்தர்-ஸந்நியாஸிகள் -பிராமணர்-விமாநஸஞ்சாரிகள் நக்ஷத்திரங்கள் அசுரர் இவ்விதமாகப்பிறப்பது ஸத்துவகுணத்தின் அதமகதி.

சகூ—யாகத்திலேயே விருப்பமுள்ளவர் ருஷிகள் தேவர் வேதாபிமாநி தேவதை துருவாதி கிரஹங்கள் வருஷிதேவதை பிதுர்க்கள் ஸாத்தியர் இவ்விதமாகப்பிறப்பது சத்துவகுணத்தின்மத்தியமகதி

ரு0—சதுர்முகப்பிரமா மரீசிமுதலிய பிராஜாபதிகள் தருமதேவதை மஹத்தத்துவம் ஸாங்கியசாஸ்திரத்தில் பிரசித்தமான அவ்வியகத்தம் இவ்விதமாகப்பிறப்பது ஸத்துவகுணத்தின் உத்தமகதியென்று வித்துவான்கள்சொல்லுகிறார்கள்.

ருக—இதுவரையில் சகலபிராணிகளுடைய மநம்வாக்குகாயம் என்று சொல்லப்பட்ட திரிகரணங்களாலும் செய்யப்பட்டிருக்கிறகருமங்கள் ஸத்துவ ரஜஸ் தமோகுணத்தினால் மூன்றுவிதமானதையும் பிற்பாடு ஒவ்வொருகுணத்துக்குவருகிற மூன்றுவிதமான உத்தம மத்தியம அதமகதிகளையும் முழுமைக்கும் நன்றாகச்சொன்னேன்.

ருஉ—மேல் இந்திரியங்கள் தகாதவிஷயங்களில் ஸம்பந்தப்படுவதாலும் அகிர்த்தியத்தைச்செய்வதாலும் பிராயச்சித்தமுதலிய தருமத்தை அநுஷ்டிக்காமையாலும் மூடனானமனிதர்கள் மஹாகோரமான ஸம்ஸாரகதிகளையடைகிறதைக்கேளுங்கள்.

ருங

## அகிர்த்தியகாணபலன்.

௫௩—இந்தஜீவனானவன் எந்தெந்தப்பாபகருமத்தினால் எந்தெந்தப்பிறப்பை கிரமமாக அடைகிறானோ அதைமுழுதும் கேளுங்கள்.

௫௪—பிரமஹத்திசெய்தவன்முதலிய மஹாபாபிகள் அநேகமாயிரம்வருஷம்வரையில் கோரமான நரகங்களை அநுபவித்தபின்புமேற்சொல்லப்போகிற ஜநநங்களை முறைமேயடைகிறார்கள்

௫௫—நாய்-பன்றி-கழுதை-ஒட்டகம்-பசு-வெள்ளாடு-செம்மறியாடு-சிங்கமுதலிய மிருகம் - பக்ஷி-சண்டாளன்-புல்க்கஸன்-இந்த ஜநநங்களை பிரமஹத்திசெய்தவன் அடைகிறான்.

௫௬—புழு-உலண்டுபூச்சி- விளக்கணைப்பூச்சி - அமேதியபக்ஷணஞ்செய்கிற பக்ஷி புலிமுதலிய ஹிம்ஸைசெய்கிற ஜெந்துக்கள் இந்தஜநநங்களை சுராபாநஞ்செய்த பிராமணன் அடைகிறான்.

௫௭—நூல்நூற்கிறபூச்சி-பாம்பு-கரட்டோணான்-ஜலத்தில்-ஸஞ்சரிக்கிற திரியக்குஜெந்துக்கள் கொலையில்விருப்பமுள்ள பைசாசர்கள் இந்தஜநநங்களை ஆயிரம்விசை ஸ்வர்நத்தைத்திருடினவன் அடைகிறான்.

௫௮—புல்லு-புதர்-கொடி-மாமஸம்சாப்பிடுகிற கழுகுமுதலானவை கொடியகாரியஞ்செய்கிற புலிமுதலியவை இவைகளின் ஜெநநங்களை அநேகம்விசை குருதாரத்தைப்புணர்ந்தவன் அடைவான்

௫௯—பிராணஹிம்ஸைசெய்கிறவர்கள் பூனையாகப்பிறப்பார்கள் சாப்பிடத்தகாததைச் சாப்பிடுகிறவன் புழுவாகப்புழுக்கிறான் சுவர்நம் நீங்கலாக மற்றதைத்திருடினவன் ஒன்றையொன்றுகொன்று சாப்பிடுகிற ஜெந்துக்களாகப்பிறக்கிறான் சண்டாளஸ்திரீயைப்புணர்ந்தவர்கள் பிரேதகணமாய்ப்பிறக்கிறார்கள்.

சு0—பிரமஹத்திசெய்தவன்முதலிய பதிதர்களோடு சேர்ந்தாலும் பிறன்மனையாளைப்புணர்ந்தாலும் பிராமணன்சொத்தைத் திருடினாலும் தனித்தனியே பிரமராக்ஷஸனாகப்பிறக்கிறான்.

சுக—மாணிக்கம்-முத்து-பவளம்-வைடூரியம்முதலிய ரத்நம்-இவைகளிலொன்றை ஆசையினால் திருடினால் தட்டாரஜாதியில்பிறக்கிறான் சிலர் தட்டாரப்பூச்சியாகப்பிறக்கிறானென்று சொல்லுகிறார்கள்.

சுஉ—தானியத்தைத்திருடினவன்-பெருச்சாளியாயும்,வெண்கலத்தைத்திருடினவன்-ஹம்ஸமாயும்,ஜலத்தைத்திருடினவன்-நீர்க்காக்கையாயும்,தேனைத்திருடினவன்-வால்க்கொசுவாயும், பாலைத்திருடினவன்-காக்கையாயும்,இரசவகையைத்திருடினவன்-நாயாயும்,நெய்யைத்திருடினவன்-அணிலாயும்,பிறக்கிறான்.

சுரு—மாம்ஸத்தைத்திருடினவன்-கழுவாயும், வபையைத்திருடினவன்-விச்சுளியாயும்,எண்ணெயைத்திருடினவன்-வௌவாலாயும், உப்பைத்திருடினவன்-சுவர்க்கோழியாயும், தயிரைத்திருடினவன்-கொக்காயும் பிறக்கிறான்.

சுச—வெண்பட்டைத்திருடினவன் ஊர்க்குருவியாயும், பட்டுநூலால்நெய்யப்பட்டிருக்கிற சாலுவைமுதலியவற்றைத் திருடினால்தவளையாயும்,நூலால்நெய்த வஸ்திரத்தைத்திருடினால் கிரௌஞ்சபக்ஷியாயும்,பசுவைத்திருடினவன் உடும்பாயும்,வெல்லத்தைத் திருடினவன் வாக்குதமென்னும்பக்ஷியாயும் பிறக்கிறான்.

சுரு—கஸ்தூரிமுதலிய நல்லவாஸனையுள்ள வஸ்துவைத்திருடினால் மூஞ்சூறுயும், இலை-காய் - இவைகளைத்திருடினால் மயிலாயும், சோறு-மாவு-முதலானபலவித அந்நத்தைத்திருடினால் முள்ளம்பன்றியாயும், கோதுமையரிசிமுதலான அபக்குவாந்நத்தைத்

திருடினல் சல்லியமிருகமாயும்பிறக்கிருன்.

சுரு—நெருப்பைத்திருடினவன் நாரையாயும், வீட்டுக்கு உபயோகமான முறம் துடப்பம் முதலானவைகளைத் திருடினவன் குளவியாயும், செகப்புச்சாயமுள்ள வஸ்திரங்களைத்திருடினவன் சகோரபக்ஷியாயும் பிறக்கிருன்.

சுஎ—யானைமுதலிய மிருகஜாதியைத்திருடினவன் செந்நாயாயும் குதிரையைத்திருடினவன் புலியாயும் பழம்-கிழங்கு-இவைகளைத்திருடினவன் குரங்காயும் ஸ்திரீயைத்திருடினவன் கரடியாயும் தாஹத்துக்காகவைத்திருந்த தீர்த்தத்தைத்திருடினவன் சாதகபக்ஷியாயும்,பண்டிமுதலிய வாஹநத்தைத்திருடினவன் ஒட்டையாயும் மற்றபசுஜாதிகளைத்திருடினவன் வெள்ளாடாயும் பிறக்கிருன்.

சுஅ—அந்நியனுடையபொருளைக் கொஞ்சமாகத்திருடினுலும் அஸாரமானதைத்திருடினுலும் ஹோமத்திற்காகவைத்திருக்கிற ஹவிஸைச்சாப்பிட்டாலும் அவசியம் பக்ஷிஜாதியாகப் பிறப்பான் இதில் சந்தேகமில்லை.

சுகூ—இப்போதுசொல்லியபாபங்களை ஸ்திரீஜாதிகள்செய்தாலும் மேற்சொன்னமுறைப்படியே அந்தந்தஜாதியில் பெண்ணுகப்பிறந்து அதற்குப்பத்திநியாகிருர்கள்.

## கிர்த்தியாகரணபலன்.

எ0—பிராமணன்முதலிய நான்குவருணத்தாரும் ஆபத்தில்லாதகாலத்திலும் தன்தன் தருமாநுஷ்டாநத்தை செய்யாவிட்டால் மேற்சொல்லுகிறவிதமாக கோரமானஜநநங்களையெடுத்து மறுபிறப்பில் தங்கள் சத்துருவுக்கு வேலைசெய்துபிழைப்பார்கள்.

எக—தன்தருமத்தை அநுஷ்டிக்காத பிராமணன் கொள்ளிவாய்ப்பைசாசகப்பிறந்து வாந்திசெய்தயெச்சிலைச்சாப்பிடுகிருன் கர்

மப்பிரஷ்டனான க்ஷத்திரியன் மலம் பிணம் இவற்றைச்சாப்பிடுகி றீ கடபூதமென்னும் பிரேதகணமாகப்பிறக்கிறான்.

எஉ—கருமப்பிரஷ்டனான வைசியன் சவர்நீரைச்சாப்பிடுகிற *மைத்திராக்ஷஜ்யோதிகமென்னும் பிரேதவிசேஷமாகப் பிறக்கி றான் அவ்விதகருத்திரன்சிலைப்பேனத்தின்னுகிற பிரேதவிசேஷமா கப்பிறக்கிறான்.

எரு—விஷயபோகத்தில் விருப்பமுள்ளவர்கள் எப்படியெப்ப டி விஷயங்களிலே மநதைவைக்கிறார்களோ அப்படியப்படியே அவர்களுக்கு அந்தவிஷயங்களில் மோஹமுண்டாகி மயங்கிப் போகிறார்கள்.

எச—அந்த அற்பபுத்தியுள்ளவர்கள் விஷயவிச்சையினால் செ ய்யப்படுகிற பாபகருமங்களுடைய உயர்வுதாழ்வுக்குத்தக்கபடி பழிக்கத்தக்கதான பக்ஷிஜாதி மிருகஜாதி இவைமுதலியவற்றில் பிற ந்து மிகுந்ததுக்கங்களை அநுபவிக்கிறார்கள்.

எடு—பின்னுந் தாமிசிரமுதலிய கோரமான நரகங்களில் வாஸ த்தையும் அஸிபத்திரவனமென்கிற கத்திக்காட்டில் ஸஞ்சாரத் தையும் யமபாசங்களால் கட்டுதலையும் யமபடர்களால் வெட்டுத லையும்.

எசு—காக்கை கோட்டான்முதலான ஜெந்துக்களால் பக்ஷிக்கப் படுவது முதலியபலவிதமான துன்பங்களையும் கொதிக்கிறமணலி ல் புரளுவதையும் பாண்டத்தில் சமைக்கப்படுவதாலுண்டான கொடுமையான துக்கத்தையும் அநுபவித்து.

---

३ கடபூதமென்பது- பிணத்தின்தலைப்பக்கம் உடைக்கப்படுகிற குடத்துநீரைச்சாப்பிடுகிறது.

* மைத்திராக்ஷஜ்யோதிகமென்பது-ஆசநத்தில் ஒளிவுள்ளகண் ணுள்ளது.

௭௭—மறுபடியும் மிகுந்ததுக்கத்தையே எப்போதுங்கொடுக்கிறதான பசு பக்ஷி ஜாதிகளிலேயே பிறந்து குளிர் காற்று பசி இவ்வித உபத்திரவங்களையும் பலவிதமானபயங்களையும் அடைந்து.

௭௮—அடிக்கடி கர்ப்பவாஸத்தையும் யோநிவழியாக ஸங்கடப்படுகிற துக்கத்தையும் விலங்கிடுவது காவலில்வைப்பது முதலான ராஜதண்டனைகளையும் அயலானுக்கு அடிமைப்படுகிற கஷ்டத்தையும்.

௭௯—தன்பந்துக்கள் சிநேகிதாள் இவர்களோடுபிரிவையும் துர்ஜநாளுடன் ஓரிடத்தில் வாஸத்தையும் பொருளைத்தேடப் பிரயாசத்தையும் அந்தப்பொருள் நாசத்தால்வரும் துன்பத்தையும் ஒருவனுக்குநல்லவனாக இருப்பதையும் ஒருவனுக்குச் சத்துருவாக இருப்பதையும்.

௮௦—மாற்றம் செய்யக்கூடாதான கிழத்தநத்தையும் பிணியினால் துன்பத்தையும் பசி தாஹம் இவற்றினால் பிரயாஸத்தையும் தடைசெய்யக்கூடாததான மரணத்தையும் அடைகிறார்கள்.

௮௧—முக்குணங்களுக்குள் எந்தக்குணத்திற்குச் சுவாதீநப்பட்ட எண்ணத்தினால் எந்தெந்த ஸ்தாநதாளுதி கருமத்தைச்செய்கிறானோ அந்தக்குணத்துக்குத்தக்கதான சரீரமெடுத்து அந்தந்த ஸ்தாநதானபலனை யநுபவிக்கிறான்.

௮௨—இதுவரையில் உங்களுக்கு கிருத்தியாகிருத்திய கருமங்களுடையபலனை முழுதுஞ்சொன்னேன் இனி பிராமணனுக்கு மோக்ஷஹேதுவான கருமவிதியைச் சொல்லப்போகிறேன் கேளுங்கள்.

## பன்னிரண்டாவதத்தியாயம். சநக

## மோக்ஷோபாயம்.

அரு—உபநிஷித்துமுதலிய வேதாந்தங்களைக்கிரந்தமூலமாக அதன்பொருளுடன் அப்பியசிப்பதுபரிசுத்தியின்பொருட்டு பிராஜாபத்தியமுதலிய கிருச்சிரத்தையநுஷ்டிப்பது பிரமசுவரூபத்தையறிவது இந்திரியங்களைவிஷயத்தில் சம்பந்தப்படாதபடி அடக்குவது ஒருபிராணியையும் ஹிம்ஸைசெய்யாம லிருப்பது ஆசாரியனுக்கு சிசுருஷைசெய்வது இவைகளெல்லாம் மோக்ஷத்துக்குமேலான சாதநங்கள்.

அசு—புருஷனைக்குறித்து விதிக்கப்பட்ட மேற்சொல்லிய சுபகருமங்களுக்குள் எந்தக்கருமம் மிகவும் உயர்ந்ததாகவிருக்கிறதென்று ஆக்ஷேபம்வந்தால் மேற்சொல்லுகிறோம்.

அடு—ஸகலமான சுபகருமங்களுக்குள் வேதாந்தவாக்கியத்தினால்வருகிற ஆத்துமக்கியாநமே மேலானது ஏனென்றால் அது எல்லாவித்தைகளுக்கும் மேலானதல்லவா ஆகையால் அதனாலேயே மோக்ஷமுண்டாகிறது.

அசூ—ஆதலால் மேற்சொன்ன ஆறுவிதகருமங்களுக்குள் வேத தத்துவார்த்தத்தையறிந்து தேஹாத்துமஸ்வரூபத்தை யறிகிறதான யாதொருபரமார்த்த கியாநமுண்டோ அதே இம்மையிலும் மறுமையிலும் எப்போதும் சுகத்தைக்கொடுக்கிறதென்று அறியத்தக்கது.

அஎ—அந்த ஆத்துமக்கியாநத்தில் மேற்சொன்ன ஸகலமான கருமங்களும் பிரம்மோபாஸநவிதியில்கிரமமாகஅடங்கியிருக்கின்றன(அதாவது அதற்குஅங்கமாகிறதென்றுகருத்து.)

## கருமவிபாகம்.

அஅ—வேதத்திற்சொல்லிய கருமமானது பிரவிருத்தம்என்று

ம் நிவிருத்தமென்றும் இருவகைப்படும் அதில் கருமகாண்டங்களால் ஸ்வர்க்காதி சுகஹேதுவான ஜியோதிஷ்டோமம் முதலிய கருமத்தை யநுஷ்டிப்பது பிரவிருத்தமாகும் ஸம்ஸாரஸம்பந்தத்தைநீக்கி பிரமகாண்டத்தினால்மோக்ஷஹேதுவான ஆத்துமவிசாரம்பண்ணுவது நிவிருத்தமாகும்.

அகூ—அந்தப்பிரவிருத்த கருமமானது இம்மையில்வருஷிமுதலிய சுகமுண்டாவதற்காகவும் மறுமையில் தேவாதிசரீரம்வருகிறதாயாகவும் செய்யப்படும் நிவிருத்தமானது ஸம்ஸார ஆசையேயில்லாம லிருக்கிறது அது கேவலம்தத்துவஞாந முள்ளவனுக்கே உபதேசிக்கப்படும்.

கூ0—பிரவிருத்தகருமத்தை அநுஷ்டித்தால் தேவர்களுக்குச் சமானமான நிலையையும் மற்றும் எண்ணியகோரிக்கைகளையும் அடைகிறான் நிவிருத்தகருமத்தை யநுஷ்டித்தால் பாஞ்சபூதிகசரீரத்தைவிட்டு மோக்ஷத்தையடைகிறான்.

கூக—எவன் ஜங்கமஸ்தாவரரூபமான ஸகலபூதங்களிடத்திலும் பரமாத்துமவாஸத்தையும் அப்பரமாத்துமாவினிடத்தில் பரமாணுமுதலிய ஸகலசேதநாசேதநங்களுடையவாஸத்தையும் தத்துவஞாநத்தாலறிந்து தான்செய்கிற நித்தியநைமித்திகாதி கருமங்களை பிரமார்ப்பணம்செய்கிறானோ அவன் ஸ்வயம்பிரகாசமான மோக்ஷ ஸாம்பிராஜியத்தையடைகிறான்.

கூஉ—பிராமணோத்தமனானவன் வேதத்தினால்விதிக்கப்பட்ட அக்கினிஹோத்திரமுதலிய கருமங்களைவிட்டாவது பிரமத்தியாநத்திலும் இந்திரியநிக்கிரகத்திலும் வேதார்த்தவிசாரத்திலும் முயற்சிசெய்யவேண்டியது.

கூரு—மேற்சொல்லிய பிரமத்தியாந முதலானமூன்றுமே அனைவருக்கும் ஜநநமெடுத்ததற்குப் பலனைக்கொடுக்கும் அதிலும் பிராமணனுக்கு விசேஷமாய் ஸபலமாகவிதிக்கப்படுகிறது துவிஜாதிகள் இதை யநுஷ்டித்தால்மாத்திரம் கிருதகிருத்தியராவார்களேயல்லது வேறொரு கருமத்தாலுமாகார்.

## வேதப்பிரசம்ஸை.

கூச—பிதுர்க்கள் தேவர் மனிதர்கள் இவர்களை சிரார்த்தம்-யாகம்-தாநம்-இவைகளால் பூசிப்பதற்குவேதமே கண்ணாகவிருக்கிறது.அதாவது அந்தப்பூசைசெய்வதால் பலன்வருமென்பதை வேதவாக்கியத்தாலேயே நம்பவேண்டியதாக இருக்கிறதென்று கருத்து.பின்னும் அந்தவேதசாஸ்திரமானது ஸ்வயம்புவேயல்லதுஒருவரால்செய்யத்தக்கதன்று. மீமாம்ஸாசாஸ்திர ஞாநமில்லாதவனால் அதன்பொருளறியத்தக்கதன்று· இது அநாதியான ஏற்பாடு·

கூ௫—எந்த ஸ்மிருதிகள் வேதார்த்தத்துக்கு விரோதமாகவிருக்கின்றனவோ மற்றும்சார்வாக சித்தாந்தமுதலிய குச்சிதசித்தாந்தங்கள் யாதொன்றுண்டோ அவைகளெல்லாம் மறுமையில் நல்லபலனில்லாதனவாம் ஏனென்றால் அவைகளுக்கு நரகமேபலனென்று மநுப்பிரஜாபதிமுதலானவர்களால் சொல்லப்பட்டு இருக்கின்றனவல்லவா.

கூசா—வேதத்திற்குவேறான யாதொருசாஸ்திரங்கள் ஒருவரால் உண்டாக்கப்படுகின்றனவோ அவைகளெல்லாம் சீக்கிரத்தில் அழிந்துபோகும் பின்னும் அவைகள் புதிதாய் இப்போது ஒருவரால் ஏற்படுத்தப்பட்டபடியால் அவைகளை நடத்துகிறவர்களுக்கு பலனுமில்லை ஏனென்றால் அவைகளுக்கு வேதமூலமான பிரமாண

ஙுடு

மில்லாததால் அவைகள் சுத்தபொய்யானவைகளல்லவா.

கூஎ—பிராமணன்முதலிய வருணத்தார் நால்வர் பூமிமுதலிய லோகங்கள்-மூன்று. பிரமசரியமுதலிய ஆசிரமங்கள் நாலென்று சொல்லப்பட்ட இவைகளெல்லாம் வேதத்தினாலேயே ஏற்பட்டிருக்கின்றன. வெகுவாய் சொல்லுகிறதினாலென்ன,நடந்ததும் நடக்கப்போகிறதும் நடக்கிறதும் வேதத்தினாலேயே ஏற்பட்டிருக்கின்றன.

கூஅ—சப்தம்-ஸ்பரிசம்-ரூபம்-இரசம்-கந்தம்-ஆகிய இந்தஐந்துவிஷய சுகங்களும் வேதத்தில் விதித்திருக்கிற யாகாதிகாரியங்களைச்செய்கிறவர்களுக்கே இம்மையிலும் மறுமையிலும் அடையப்படும் அந்தவிஷயபோகத்தைக் கொடுக்கிறதுகளான முக்குணங்களும் வேதத்தினால் ஏற்பட்டிருக்கின்றன.

கூகூ—அநாதியான வேதசாஸ்திரமானது ஜங்கமஸ்தாவரரூபமான ஸகலபூதங்களையும் காப்பாற்றுகிறது. அதாவது வேதமந்திரத்தால் விதிப்படி அக்கினியில்செய்த ஹோமமானது சூரியனையடைகிறது அவனிடத்திலிருந்து வருஷமுண்டாகிறது அதனால் அந்நமுண்டாகிறது அதனால்பிரஜைகள்உண்டாகி சுகப்படுகிறார்கள்.ஆதலால்இந்த வேதசாஸ்திரத்தை அந்த வேதசாஸ்திரத்தில் விதித்த கருமத்தில் அதிகாரமுள்ளவனுக்கு நற்பலனை அடையவேண்டியவிஷயத்தில் மேலானஸாதநமென்று எண்ணுகிறோம்.

க00—ஸேநாதிபத்தியம்-தேசாதிபத்தியம்- நியாயாதிபத்தியம் அகண்ட மண்டலாதிபத்தியம் இவைகளுக்கெல்லாம் வேதசாஸ்திரமறிந்தவனே தக்கவனாவான்.

க0க—நன்றாக விருத்தியடைந்திருக்கிற அக்கினியானது எப்படி தன்னருகிலிருக்கிற பச்சைமரங்களையும் தஹிக்கிறதோ அப்

படியே வேதத்தை பொருளுடன் அறிந்தவன் அகிருத்தியங்களா ல்நேரிட்ட பாபத்தைக்கொளுத்திவிடுவன்.

கoஉ—எவன் வேதத்தை சுரத்தோடும், பொருளோடும் தத்து வமாயறிந்திருக்கிறனோ அவன் பிரமசரியமுதலிய நான்காசிரம த்துக்குள் எந்த ஆசிரமத்திலிருந்தாலும் இம்மையிலேயே பிர மாநந்தத்தை அநுபவிப்பதற்கு அதிகாரியாகிறன்.

கoரு—சொற்பவேதமோதினவனைவிட வேதத்தை கிரந்தம்பா ர்த்துப்படிக்கத்தக்க வல்லமையுள்ளவனும் அவனைவிட ஓதினவே தத்தை கிரந்தம்பாராமல் சொல்லத்தக்கவனும், அவனைவிட அந்த வேதத்தின் பொருளையறிந்தவனும் அவனைவிட அந்தவேதத்தில் வி தித்தபடி அநுஷ்டிப்பவனும் உயர்ந்தவன்.

கoச—பிராமணனுக்கு வருணசிரமத்துக்குத்தக்க கருமாநுஷ் டாநம், பிரம்மஞாநம் இந்தவிரண்டும் மோக்ஷப்பிராப்த்திக்கு மேலான சாதநமாகும் அதில் கருமாநுஷ்டாநத்தால் பாபத்தைப் போக்கடிக்கிறன் பிரமக்கியாநத்தால் மோக்ஷத்தையடைகிறன்.

கoரு—திரவியம்-குணம்-ஜாதி-இவைகளாலுண்டாகிறதருமத்தி ன்தத்துவத்தைஅறியவேண்டுமென்று மநமுள்ளவனல்பிரத்தியக்ஷ ம்அநுமாநம்- ஆகமம்-என்று சொல்லப்பட்ட மூன்றுபிரமாணத் தையும் நன்றாகப் பொருளுடன் அறியவேண்டியது.

கoசா—ருஷிகளால் காணப்பட்டிருக்கிற வேதசாலக- அவர்களா ல் சொல்லப்பட்டிருக்கிற ஸ்மிருதி - இந்தவிரண்டையும் வேதசா ஸ்த்திரத்திற்கு விரோதமில்லாத மீமாம்ஸைமுதலிய நியாயத்தின ல் எவன் விசாரிப்பானே அவன்மாத்திரம் தருமத்தை அறிவானே யல்லது மற்றவனறியமாட்டான்.

கo எ—இதுவரையில் மோக்ஷசாதநமான கருமமானதுவிதிப் படி முழுதும் சொல்லியாயிற்று இனி இந்த மநுதர்மசாஸ்த்திரத்தினுடைய ரஹஸியாம்சத்தைச் சொல்லப்போகிறேன்.

## சாஸ்திரரஹஸ்யம்.

கo அ—இந்தசாஸ்த்திரத்தில் எல்லாத்தருமத்தையும்சொல்லியிராததினுலும் சொல்லப்பட்ட தருமங்களுக்குள் தேசகாலபேதத்தால் யாதாவதொருசந்தேகம் நேரிடுமாதலாலும் அந்தவிஷயத்தில்மேற்சொல்லும் குணமுள்ளபிராமணுள் எந்தத்தருமத்தை ஏற்படுத்துவார்களோ அதே நிச்சயமானதருமமாகும்.

கo கூ—எவர்கள் இரண்டாவதத்தியாயத்தில் சொல்லிய தருமப்படி ஸ்மிருதி புராணமுதலானவையோடு குருவினிடத்தில் வேதத்தை ஓதியிருக்கிறுர்களோ அந்தப்பிராமணுள்பரிசுத்தாளாயுப்வேதப்பொருளே பிரத்தியக்ஷமாகப்பார்ப்பதற்கு காரணபூதாளாயும் இருக்கிறுர்கள்.

ககo—மேற்சொல்லும் பத்துவிதலக்ஷணமுள்ள பரிஷித்தாவது மூன்றுவிதலக்ஷணமுள்ள பரிஷித்தாவது எதைத்தருமமாக அங்கீகரிக்குமோ அதையே தருமமாகநினைத்து அநுஷ்டிக்கவேண்டுமேயல்லது அதன்மேலே ஆக்ஷேபிக்கக்கூடாது.

ககக—மூன்றுவேதத்திலும் சொல்லப்பட்டிருக்கிற சாகையை அத்தியயநஞ்செய்தவர் சுருதிஸ்மிருதிகளுக்கு விரோதமில்லாத நியாயசாஸ்திரமறிந்தவர் மீமாம்ஸாரூபமான தர்க்கசாஸ்திரமறிந்தவர் நிருக்தமென்னும் வேதாங்கமறிந்தவர் மநுஸ்மிருதிமுதலிய தருமசாஸ்திரப்வல்லவர் பிரமசாரி-கிரஹஸ்தன்-வாநப்பிரஸ்தன்இவர்கள் கூடியிருக்குமிடத்துக்குத்தான் பத்துவிதலக்ஷணமுள்ளபரிஷித்தென்றுபெயர்.

கக௨—ருக்குவேதத்தை அதன்பொருளுடனறிந்தவன் இவ்வித மாகவே யஜுர்வேதத்தையறிந்தவன் ஸாமவேதத்தையறிந்தவன் இவர்கள்கூடியிருக்குமிடத்துக்குத்தான் மூன்றுவிதலக்ஷணமுள்ள †பரிஷத்தென்றுபெயர். இந்தவிரண்டுபரிஷத்தும் தருமவிஷயத் தில் ஸந்தேகநேரிட்டால் அதைப்போக்குகிறவிஷயத்தில் அதிகா ரமுள்ளனவாகவிருக்கின்றன.

ககஙு—மேற்சொன்ன பரிஷத்தகப்படாதகாலத்தில் வேதார்த் ததருமத்தை குருமூலமாக அறிந்திருக்கிற ஒருபிராமணனேனும் எதைதருமமாகநிர்ணயஞ்செய்வானே அதேமேலானதருமமென் று அறியத்தக்கதேயல்லது வேதார்த்தமறியாத பதினுயிரம்பேர் கூடிச்சொன்னாலும் அதுதருமமாகமாட்டாது.

ககச—பிரமசரியமுதலிய விரதமில்லாதவர்களாயும் காயத்திரி முதலிய ஜப சூந்நியாளாயும் வேதமோதாதவர்களாயும் பிராமண ஜாதியில்மாத்திரம் பிறந்தவர்களாயும் இருக்கிறவர்கள் வெகுபேர்க ள் கூடியிருந்தாலும் அந்தவிடத்திற்கு பரிஷத்தென்றுபெயர் வர மாட்டாது.

ககரு—கேவலம் தமோகுணமுள்ளவர்களாயும் தருமத்திற்குபி ரமாணமாகிய வேதப்பொருளை யறியாதவர்களாயும் இன்னபாப த்திற்கு இன்னபிராயச்சித்தமென்று அறியத்தக்கஞானமில்லாதவர் களாயும்,இருக்கிறவர்கள், எந்தப்பாபத்தைக்குறித்து ஒருபிராயச் சித்தத்தை விதிக்கிறார்களோ அந்தப்பாபமானது நூறுபங்கு அதி கமாக விருத்தியடைந்து அந்தப்பிராயச்சித்தம் விதித்தவர்களை அ டையும்.

ககசு—இதுவரையில் உங்களுக்கு மோக்ஷசாதகமான தருமங்க

---

† பரிஷத்தென்பது-ஸபை.

ள் சொல்லப்பட்டன இதைப்பிசகாமல் அநுஷ்டிக்கிறபிராமண ன்முதலானவர்கள் சுவர்க்கமோக்ஷரூபமான நற்கதியையடைகின்றார்கள்.

கக௭—ஷாட்குண்ணியபரிபூரணராயும் தேஜோரூபமாயுமிருக்கிற மநுப்பிரஜாபதியானவர் தருமத்தைக்கேட்கமநமுள்ள எல்லாச்சிஷியர்களுக்கும் இஷ்டமுண்டாகவேண்டுமென்னும் திருவுள்ளத்தினல் மிகவும்ரஹஸியமான தருமசூக்ஷ்மத்தை எனக்குபதேசித்தார்.

## பிருகுவாக்கியம்.

### தத்துவோபதேசம்.

கக௮—கண்ணுக்குத்தெரிகிறதாயும் தெரியாததாயுமிருக்கிற எல்லாப்பதார்த்தமும் பரமாத்துமாவினிடத்தில் வாசஞ்செய்கிறதாய் யோக தியாநத்தால்பார்த்து வேறிடத்தில்மநம்வைக்காமல் பிரமஸாக்ஷாத்காரம்செய்கிறவன் அதர்மத்தில் மநதை வைக்கமாட்டான்.ஏனென்றால் எல்லாம் பிரமசுவரூபமென்று அறிந்திருக்கையால் அவனுக்குச் சத்துருமித்திராளில்லாததால் இராகத்துவேஷங்களே நேரிடாதல்லவா.

ககக—இந்திராதிதேவர்களனைவரும் பரமாத்துமசுவரூபாள்தான் ஸகலஜகத்தும் பரமாத்துமாவிடத்திற்றான் நிலைபெற்றிருக்கின்றன பின்னும் அந்தப்பரமாத்துமாவே இந்தப்பிராணிகளுக்கு கருமசம்பந்தத்தை யுண்டுபண்ணுகிறார்.

## அத்தியாத்துமதியாநயோகம்.

க௨௦—தன்னுடைய தேஹத்திலிருக்கிற ஆகாசதன்மாத்திரையை மஹாகாசத்திலும் சேஷ்டாஸ்பரிச ரூபமாயிருக்கிற தேஹவாயுவை மஹாவாயுவிடத்திலும் மேலானதேஜஸை அக்கினி-சூரிய

ரிடத்திலும் இரத்தரூபமான ஜலதன்மாத்திரையை மஹாஜலத்தி லும் பிருதுவிதன்மாத்திரையை மஹாபிருதிவியிடத்திலும்.

கஉக—மநதை-சந்திரனிடத்திலும்-சுரோத்திரத்தைதிஸைகளிலும் பாதேந்திரியத்தை விஷ்ணுவிடத்திலும் பலத்தை சிவனிடத்திலும் வாக்கை அக்கிநியிடத்திலும் ஆசநேந்திரியத்தை சூரியனிடத்திலும் உபஸ்தேந்திரியத்தை பிரமாவிடத்திலும் லயித்து ஐக்கியத்தை அடைந்ததாகத்தியாநித்து.

கஉஉ—பின்பு பிர்ம்மாதி ஸ்தம்பபரியந்தமான சேதநாசேதநங்களை ஆஞ்ஞைசெய்து ஆளுகிறவராயும் அணுவுக்கு அணுவாயும் சுத்தமான தங்கம்போன்ற நிறமுள்ளவராயும் சொப்பநநிலையிற்போல கண்முதலிய பிறவிந்திரியவியாபாரமொழிந்து தெளிந்திருக்கிறமநதினுல் கிரஹிக்கத்தக்கவராயும் புருஷோத்தமனுமிருக்கிற பரமாத்மாவை தியாநிக்கவேண்டியது.

கஉஈ—இந்தப்பரமாத்துமாவை யெக்ஞாநுஷ்டாநம்செய்கிற சிலபெரியோர்கள் அக்கிநிஸ்வரூபமாயும் மற்றுஞ்சிலபெரியோர்கள் பிரஜாபதி ஸ்வரூபமாயும் பின்னும்சிலபெரியோர்கள் இந்திரஸ்வரூபமாயும் வேறு சிலபெரியோர்கள் பிராணஸ்வரூபமாயும் மற்றுஞ்சிலபெரியோர்கள் பிறப்பிறப்பற்றதான ஆநந்தஸ்வரூபமுள்ள பரப்பிரம்மமாயும் அறிந்து உபாஸிக்கிறுர்கள் (இந்த உபாஸநாபேதங்களை சுருதிகளில் விரிவாகக்காணலாம்)

கஉச—இந்தப்பரமாத்துமாவானவர் ஸகலபிராணிகளையும்பஞ்சபூதங்களால் வியாபரிக்கச்செய்து பூர்வஜநநத்தில் செய்திருக்கிற

கர்மாநுகுணமாகப்பிறப்பது வளர்வது இறப்பது இவைகளால் மோக்ஷத்தையடைகிறபரியந்தம் பண்டிசக்கரம்போல சுழலும்படி செய்கிறார்.

கஉரு—இந்தப்பிரகாரம் எவன் தன்மநதினால் ஸர்வாந்தரியாமியான பரமாத்துமாவைத் தியானிக்கிறானோ அவன் ஸர்வபூதங்களுடைய சாமியத்தையடைந்து பரமபதமான மோக்ஷத்தை யடைகிறான்.

கஉசு—இதுவரையில் பிருகுமஹாருஷியினால் நன்றாகச்சொல்லி முடிக்கப்பட்டிருக்கிற மநுசாஸ்திரத்தை சிரத்தையுடன் படிக்கிற துவிஜன் எப்போதும் நல்லொழுக்கமுள்ளவனாயிருந்து மறுமையில் தான் கோரிய சுவர்க்கமோக்ஷாதி சித்தியையும் அடைகிறான்.

ஸர்வம் ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

ஆக அத்தியாயம்-கஉ-க்கு-சுலோகம்-உசுஅச.

மநுதர்ம்மசாத்திர கிரந்தம்
முற்றுப்பெற்றது.

இதில் அக்ஞானத்தால்நேரிட்ட ஸகல அபராதத்தையும் கருணைக்கடலான பகவான் க்ஷமிக்கவேண்டும்.

குருவேதுணை.

# கடவுள்வாழ்த்து.

அநகனைந்தொழிலுமோவாதாடல்செய்தருள்வோன்றன்கோ
கநகமென்மலர்த்தாளுள்ளங்கருதிநால்வருணத்தோர்க்கு
மநமுறுசுகம்பெற்றோங்கமன்னவர்மகிழ்ச்சிதுங்க
மநுமிருதியைவிரித்துவசநமாச்செய்துநன்றே.

# சிறப்புப்பாயிரம்.

சொல்லுலகுதருமநன்குணரமநுநவன்மிருதி
துரிசில்வடமொழிநிகழ்தலாற்
றன்னுமப்பொருளெவர்க்கும்புலப்படுதலில்லை
துய்யதிராவிடமதிலதை
நல்லவுரைநடையினுற்றருகவென்றியாவர்க்கு
நண்பினன்பொய்ம்மொழியிலான்
நவையில்கலையறிவினன்மிகுகொடையினன்புதுவை
நகர்வணிககுலசிரோட்டன்
வல்லநாகப்பவிறைவன்றவத்தினில்வந்த
வளர்முத்துரங்கபூபன்
வகுத்திடப்பெருமைபெறுவடமொழிச்சலநிதி
மதித்தமுதருந்திதேக்கும்
மல்லல்வயல்கோமாண்டூரிளையவில்லியிரா
மாநுசாசாரியென்போன்
வண்டமிழின்மொழிபெயர்த்திடவதுதிருத்தினன்
வளர்சுப்பராயகவியே.

சுபமஸ்து.

# சாற்றுக்கவி.

యోసౌ కౌశిక బాలధన్వికులభూ రామానుజార్యస్సుధీ స్తేన ద్రావిడభాషయార్థ వివృతిః స్మృత్యామహోర్యారచి । యోవాసౌవకుళప్రసాధనకృత శ్రీసోమ యాజ్ఞ్యన్వయో వేదాంతార్యసుధీరముష్యమమసాభాతి ప్రశస్తార్థగా॥

இதன்பொருள் இளையவில்லி கௌசிக இராமாநுஜாசாரியனென்னும் பண்டிதரால் தமிழில் வசநரூபமாக மொழிபெயர்க்கப்பட்ட மநுதருமநூலை வகுளாபரணம், ஸோமயாஜி வேதாந்தாசாரியனென்னும் பண்டிதனாகிய யான் பார்வையிட்டதில் மிகவும் சிறந்ததாயும் மூலஸ்மிருதிக்குச் சரியான பொருளுள்ளதாயும் இருக்கின்றது.

இப்படிக்கு புதுவை சமாதாநநீதியில் தருமசாஸ்திராலோசனை சங்கத்தில் மாம்பராகிய.

☞ வே-வேதாந்தாசாரியர்.

சுபமஸ்து.

# பீ டி கை.

இந்தக்கிரந்தமானது வேதங்களால் கொண்டாடப்பட்டிருப்பதுமன்றி ஸ்மிருதி புராணங்களாலும், ఏకతోమునయ స్సర్వే ఏకతో మనురబ్రవీత్ - என்றும்- మనుస్మృతివిరుద్ధాయా సా స్మృతిర్న ప్రశస్యతే என்றும்.

இதன்பொருள் பதினெட்டு ஸ்மிருதிகளுக்குள் மநுஸ்மிருதிக்கு விரோதமாய் மற்றபதினேழுஸ்மிருதிகளும் ஒரேவாக்காய்சொல்லியிருந்தாலும் அது ஒப்புக்கொள்ளத்தக்கதன்று. மநுஸ்மிருதிக்கு விரோதமான ஸ்மிருதி புகழையடையாது. என்று இவ்விதமாகக்கொண்டாடப்பட்டு எல்லாப்பிரமாணத்துக்கும் சிரேஷ்டமாயிருப்பதால் இதை ஓதுகிறவர்களுக்கு அந்தந்தவிஷயத்தில் நேரிட்டசந்தேகம் தெளிவாகிறதுமன்றி தருமார்த்தகாமமோக்ஷரூபமான நான்குவித புருஷார்த்தமும் உண்டாகிறதென்று அநேகம் மஹருஷிகளால்இதன்பெருமை வெளியிடப்பட்டிருக்கிறது.இதற்கு வியாக்கியாநமாகிய குல்லூகபட்டீயம் - கோவிந்தராஜீயம் மேதாதிதியம்-இவைகளை வைத்துக்கொண்டு அடிக்கடி நன்றாக யோசித்து அந்தவியாக்கியாநங்களுக்குச்சரியாகவே மொழிபெயர்க்கப்பட்டது.இதைப்பொறுமையாலேனும், விசுவாசத்தாலேனும், பரிசோதிக்க மநமுள்ளவர்களுக்கு சுலபமாய் அச்சந்தேகம் தெளியும்பொருட்டு அத்தியாயங்களுடையவும் சுலோகங்களுடையவும் இலக்கங்கள் போடப்பட்டிருக்கின்றன.ஆகையால் பெரும்பாலும் சுலோகந்தோறும் வினை முடிந்திராதாதலால் முன்னும் பின்னும் பார்த்தால் விளங்கும்.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | சுலோ | வரி. | பிழை. | திருத்தம் |
|---|---|---|---|---|
| ௧ | ௨ | ௨ | தேஸ்சு | தேஜசு |
| ௬ | ௩0 | ௩ | தானே யடைகிறார் | தாமே யடைகிறார் |
| ௧௪ | ௮௪ | ௩ | தருமத்துச்கு | தருமத்துக்கு |
| ௧௫ | ௯௧ | ௧ | வானத்தாருச்கும் | வருணத்தாருக்கும் |
| ௧௭ | ௧0௭ | ௩ | இருக்கின்றது | இருக்கின்றன |
| ௧௯ | ௧௧௮ | ௨ | ஒழுகத்லதையும் | ஒழுக்கத்தையும் |
| ௨0 | ௨ | ௪ | யிருக்கின்றது | யிருக்கின்றன |
| ௨௧ | ௧௪ | ௨ | படுகின்றது | படுகின்றன |
| ௨௨ | ௧௫ | ௬ | இருக்கினறதல்லவா | இருக்கின்றன வலல (வா |
| ,, | ௧௬ | ௨ | இருக்கின்றனவோ | இருச்கின்றதோ |
| ௨௩ | ௨௪ | ௧ | துஜர்கள் | துவிஜர்கள் |
| ,, | ௨௬ | ௧ | துஜாதிகளுக்கு | துவிஜாதிகளுக்கு |
| ,, | ௨௭ | ௩ | துஜர்களுக்கு | துவிஜர்களுக்கு |
| ,, | ,, | ௫ | நீக்கப்படுகின்றது | நீக்கப்படுகின்றன |
| ௨௪ | ௨௮ | ௨ | படுகின்றது | படுகின்றன |
| ,, | ௩௩ | ௨ | பிறிவான | பிரிவான |
| ,, | ௩௫ | ௧ | துஜாதிகளுக்கு | துவிஜாதிகளுக்கு |
| ௨௫ | ௩௭ | ௧ | பிரம்மதேஸ்சை | பிரம்மதேஜசை |
| ௨௭ | ௫௩ | ௧ | துஜன் | துவிஜன் |
| ௨௯ | ௬௩ | ௧ | துஜர்கள் | துவிஜர்கள் |
| ௩0 | ௬௮ | ௧ | துஜர்களுக்கு | துவிஜர்களுக்கு |
| ௩௫ | ௧0௬ | ௩ | இருக்கின்றது | இருக்கின்றன |
| ௩௮ | ௩௨௧ | ௩ | அடைகின்றது | அடைகின்றன |
| ௪0 | ௧௩௬ | ௩ | யிருக்கின்றது | யிருக்கின்றன |
| ௪௫ | ௧௭௩ | ௩ | யிருக்கின்றது | யிருக்கின்றன |
| ,, | ௧௭௪ | ௩ | இருக்கிறதோ | இருக்கின்றனவோ |
| ௫0 | ௨0௨ | ௪ | ஆசநத்தினிலும் | ஆசநத்திலும் |
| ௬௯ | ௩0 | ௩ | பிரஜாபத்தியம் | பிராஜாபத்தியம் |
| ௬௪ | ௪௮ | ௪ | பிறக்கின்றது | பிறக்கின்றன |
| ௮௧ | ௧௫௮ | ௬ | யாகற்றிற்கு | யாகத்திற்கு |
| ௯௨ | ௨௨௫ | ௩ | படுகிறதோ | படுகின்றனவோ |
| ௯௪ | ௨௩௭ | ௨ | யிருக்கிறதோ | யிருக்கின்றனவோ |
| ௧௧௩ | ௬௯ | ௧ | இளவெய்யல் | இளவெய்யில் |
| ௧௨௨ | ௬௩௧ | ௪ | சந்தியில் | சந்தியிலும் |
| ௧௨௬ | ௧௫௮ | ௩ | ஞகயிருப்பண | ஞகவிருப்பன் |
| ௧௨௭ | ௧௬௮ | ௪ | சாப்பிடுகிறது | சாப்பிடுகின்றன |

| பக்கம் | சுலோக | வரி | பிழை. | திருத்தம் |
|---|---|---|---|---|
| ௧௨௮ | ௧௭௫ | ௨ | புறதுயை | ப்ரீதியை |
| ௧௪௪ | ௫௬ | ௩ | இருக்கின்றது | இருக்கின்றன |
| ” | ” | ௫ | இருக்கின்றது | இருக்கின்றன |
| ௧௫௬ | ௯௧ | ௨ | ஒதுவித்த | ஓதுவித்த |
| ” | ௯௭ | ௩ | உண்டாகின்றது | உண்டாகின்றன |
| ௧௫௯ | ௧௧௨ | ௪ | உண்டாகிறது | உண்டாகின்றன |
| ” | ௧௧௩ | ௩ | உண்டாகிறது | உண்டாகின்றன |
| ௧௬௪ | ௧௪௮ | ௧ | ஆஞ்ஞைஊலுயிம் | ஆஞ்ஞையிலும் |
| ௧௭௬ | ௫௨ | ௪ | த்ரிடத்திலும் | ஓரிடத்திலும் |
| ” | ௫௪ | ௨ | மூங்கற்படி | மூங்கிற்படி |
| ௧௭௮ | ௬௫ | ௨ | சூக்ஷமவுருவமாக் | சூக்ஷமவுருவமாக |
| ௧௮௧ | ௮௮ | ௨ | ஆஸ்ரமங்களும் | ஆஸிரமங்களும் |
| ௧௮௭ | ௨௫ | ௨ | போக்கிற | போக்குகிற |
| ௧௮௯ | ௪0 | ௨ | சேனைப்புடன் | சேனையுடன் |
| ௨0௭ | ௧௪௭ | ௧ | இவைகளில் | இவைகளிலிருந்து |
| ௨0௮ | ௧௫௪ | ௬ | தன்னந்தப்புறக் | தன்னந்தப்புரக் |
| ௨௪௮ | ௧௭௬ | ௪ | நீதிகாரனுக்கு | நீதிக்காரனுக்கு |
| ௨௫௮ | ௨௩௧ | ௨ | ஒருகரவனுள்ள | ஒருகறவனுள்ள |
| ” | ” | ௨ | கரந்துகொள்ளலாம் | கறந்துகொள்ளலா |
| ” | ௨௩௩ | ௩ | உடைவனுக்கு | உடையவனுக்கு |
| ௩௧௬ | ௧௬௩ | ௨ | எல்வ்லாம் | எல்லாம் |
| ௩௩௨ | ௨௯௩ | ௧ | இவைகளைசெய்து | இவைகளைச்செய்து |
| ௩௩௩ | ௨௫௮ | ௨ | இந்ததாநம் | இந்தத்தாநம் |
| ௩௫0 | ௨௧ | ௩ | அந்தந்த தேசங்க | அந்தந்தத்தேசங்க |
| ” | ௨௨ | ௨ | கறணன் | கரணன் |
| ” | ” | ௩ | அந்தந்ததேசத்தில் | அந்தந்தத்தேசத்தில் |
| ” | ௨௩ | ௩ | அந்தந்ததேசத்தில் | அந்தந்தத்தேசத்தில் |
| ” | ௨௪ | ௪ | உண்டாகிறதற்கு | உண்டாகிறது |
| ௩௫௩ | ௪0 | ௩ | இரகசிமாய் | இரகசியமாய் |
| ௪௧௨ | ௨௪௧ | ௩ | எந்தபாபத்தை | எந்தப்பாபத்தை |
| ௪௧௬ | ௩ | ௪ | சொல்லப்பட்டது | சொல்லப்பட்டன |
| ௪௩௫ | ௧0௫ | ௩ | பிரமாணத்தையும் | பிரமாணங்களையும் |